ஸ்ரீகலா SRIKALA

# உயிரோடு சதிராடும் உயிரே



UYIRODU SATHIRADUM UYIRE

ஸ்ரீகலா SRIKALA



# உயிரோடு சதிராடும் உயிரே

UYIRODU SATHIRADUM UYIRE


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS


Download

Contents


உயிர் - 1

உயிர் - 2

உயிர் : 3

உயிர் - 4

உயிர் - 5

உயிர் - 6

உயிர் : 7

உயிர் : 8

உயிர் : 9

உயிர் : 10

உயிர் : 11

உயிர் : 12

உயிர் : 13

உயிர் : 14

உயிர் : 15

உயிர் : 16

உயிர் : 17

உயிர் : 18

உயிர் : 19

உயிர் : 20

உயிர் : 21

உயிர் : 22

உயிர் : 23

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

## உயிர் - 1

"காடு வெட்டிக் கல் பொறுக்கிக்
கம்பு, சோளம், தினை விதைத்துக்
காலை மாலை காட்டைக் காக்கத் - தங்கரத்தினமே
கண் விழித்திருந்தாளாம் - பொன்னுரத்தினமே
அள்ள அள்ள விதைத்த அழமுத்தினைச் சாகாதடி
மொள்ளமொள்ள விதைத்த – தங்கரத்தினமே
மொந்தத்தினைச் சாகாதடி - பொன்னுரத்தினமே"

பகலவன் உச்சியில் ஏறி நின்று உக்கிரமாய் முறைத்துக் கொண்டிருந்த மதிய பொழுது அது... வெயில் மற்றும் உழைப்பின் களைப்புத் தெரியாமல் இருக்க அங்கிருந்த பெண்கள் நாட்டுப்புற பாடல்களைப் பாடியபடி நாற்று நட்டு கொண்டிருந்தனர்...

சத்யமூர்த்தி மண்வெட்டி கொண்டு வயல் வரப்பை செதுக்கி கொண்டிருந்தான்... அவனது நெற்றியில் துளிர்த்த வியர்வை நிலத்தில் விழுந்து காணாமல் போனது, அவனது உழைப்பை போன்று...

"ஏலேய் சத்தியா, ஐயா உன்னைத் தென்னந்தோப்புக்கு வர சொன்னாக..." அங்கு வந்த வெள்ளையன் குரல் கொடுத்துவிட்டு தனது நடையைக் கட்டினான்... அவனது வேலை அவனுக்கு...

சத்யமூர்த்தி மண்வெட்டியை அங்கிருந்த நீரில் கழுவிட்டு அதைத் தோளில் சுமந்தபடி களத்து மேட்டுக்கு வந்தான்... அங்கு அவனது அன்னை வடிவழகி அவனுக்காக உணவு எடுத்துக் கொண்டு வந்து காத்திருந்தார்...

"சத்தி, வந்து சாப்பிட்டு போய்யா..." என்க...

"ஆத்தா, இந்த வேகாத வெயிலுல எதுக்குச் சோத்தை எடுத்துட்டு வந்தீக..." என்று அன்னையைக் கடிந்தவன்,

"நாளைக்குச் சரவணாவுக்குக் காலேசு பீஸ் கட்டணும்... ஐயா கிட்ட கடன் கேட்டு இருக்கேன்... இப்போ தோப்புல இருக்காராம்... இப்போ போய்க் கேட்டா தான் தோதுப்படும்...

PDF தமிழ் .com

இந்தப் புல்லு கட்டை எடுத்துட்டு போங்காத்தா... ஆடு, மாடுக்கு தீவனமாச்சு... சரி, நேரமாச்சு... நான் வர்றேன்த்தா..." அவசர அவசரமாய் மூச்சு விடாது கூறி முடித்தவன் அன்னையின் பதிலை எதிர்பாராது விரைவாகத் தனது நடையை எட்டி போட்டான்...

உணவு உண்ண கூட நேரமில்லாது ஓடி ஓடி உழைக்கும் மூத்த மகனை கண்டு அவரது நெஞ்சில் உதிரம் வடிந்தது... அதே சமயம் பொறுப்பில்லாது ஊர் சுற்றிக் கொண்டிருக்கும் கணவர் இராமசாமி மீது கோபம் வந்தது...

"இன்னைக்கு வூட்டுக்கு வாய்யா... கீரையை ஆயிற மாதிரி உன்னை ஆய்ஞ்சுப்புடறேன்... என்ற பையன் எம்புட்டுக் கஷ்டப்படுறான்... உமக்குச் சொகுசு வாழ்க்க கேட்குதோ... நோகாம நொங்கு திங்க ஆசை உமக்கு..." ஆத்திரத்துடன் முணுமுணுத்தபடி வீட்டை நோக்கி நடையைக் கட்டினார்...

தலையில் இருந்த புல் சுமையை விட மனதில் இருந்த சுமை அவருக்கு மிகவும் பாரமாகக் கனத்தது... அவர் வீட்டுக்கு போகவும் சின்ன மகன் சரவணன் வீட்டிற்கு வரவும் சரியாக இருந்தது... அவனைக் கண்டதும் வீட்டு கதவை அவசரமாகத் திறந்து விட்டபடி,

"ஏம்மப்பு... வெள்ளன வந்துட்ட... காலேசு அவ்வளவு சீக்கிரம் விட்டுட்டாவுலா என்ன...?"

அன்னை கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாது அவன் முகத்தைத் தொங்க போட்டுக் கொண்டு அங்கிருந்த மண் திண்ணையில் அமர்ந்தான்... மகனின் முகம் சரியில்லாததைக் கண்டு வடிவழகியின் விழிகள் சுருங்கியது...

"சரவணா, என்னாச்சு...?" என்றபடி அவன் அருகில் வந்து அவனது முகத்தை வாஞ்சையுடன் தடவி கொடுத்தார் அவர்...

"நான் வேலைக்குப் போகலாம்ன்னு இருக்கேன்த்தா..." அவன் கூறியதை கேட்டு அவர் திகைத்துப் போனார்...

"நாங்க யாரும் படிக்காத கை நாட்டா போனதால தானே உன்னையும், சின்னவளையும் படிக்க வச்சோம்... நீ பெரிய என்சினீயரு ஆவேன்னு உன் அண்ணே கனா கண்டுக்கிட்டு இருக்கான்... இப்ப வந்து இப்படிச் சொல்லுதியே..."

அவர் கூறுவது அத்தனையும் உண்மை... இராமசாமி, வடிவழகி இருவரும் மழைக்குக் கூடப் பள்ளிக்கூடம் பக்கம் ஒதுங்கவில்லை... பெரியவன் சத்யமூர்த்தி, பெரியவள் அபிராமி இருவரும் பள்ளிக்குச் சென்றவர்கள் வீட்டின் வறிய நிலையை உணர்ந்து படிப்பை விட்டு விட்டு தங்களது வயலில் வேலைக்கு வந்து விட்டனர்... மூன்றாவது மகள் அகல்யா மட்டும் நன்கு படித்து ஆசிரியராகப் பக்கத்து நகரத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தாள்... அவள் ஒருத்தி தான் இப்போதைக்கு இந்த வீட்டில் பட்டதாரி... இப்போது அவள் திருமணமாகி சென்னையில் இருக்கிறாள்... அதனால் தான் கடைக்குட்டி சரவணன் மீது அவர்களுக்கு அதிக எதிர்பார்ப்பு இருந்தது... அவன் இப்படிச் சொன்னதைக் கேட்டு அவருக்குச் சற்று அதிர்ச்சியாக இருந்தது...

"காலேஜ் பீஸ் கட்டலைன்னு வீட்டுக்கு அனுப்பிட்டாங்க... இப்போ பணம் கேட்டு அண்ணனை தொந்திரவு பண்ண எனக்கு மனசு வரலை... அதான் வேலைக்குப் போகலாம்ன்னு இருக்கேன்..." என்ற மகனை கண்டு,

"அப்படி மட்டும் சொல்லாதப்பு... நீ தான் படிச்சு இந்தக் குடும்பத்தைக் கரை சேர்க்கணும்... மூத்தவன் பாவம்ய்யா... எம்புட்டு நாளு தான் இப்படிக் கஷ்டப்படுவான்... இப்பவே அவனுக்கு முப்பத்திரண்டு வயசாகுது... இவன் ஜோட்டு புள்ளைங்க எல்லாம் கல்யாணமாகி குழந்தை, குட்டின்னு சந்தோசமா இருக்குதுங்க... ஆனா இவன் மட்டும் இன்னமும் நமக்காக உழைச்சுக்கிட்டு இருக்கான்..." என்று அவர் வருத்தம் கொண்டார்...

"அதுக்காகத் தான்த்தா சொல்லுறேன்... அண்ணாவோட கஷ்டத்தைக் குறைக்கலாம்ன்னு பார்க்கிறேன்..."

PDF தமிழ் .com

சின்ன மகனின் பக்குவமான, புரிதலான பேச்சு அவருக்குப் புரிந்தது... அந்தக் கணம் கணவன் மீது கனன்ற கோபம் இன்னமும் அதிகரித்தது...

புல்லட் வண்டியில் ராஜா போல் கம்பீரமாக வலம் வந்து கொண்டிருந்த மூத்த மகன் இப்போது இருக்கும் நிலையை நினைத்து அவருக்கு அத்தனை வருத்தமாக இருந்தது... அவர்களுக்கு என்று சொந்தமாக ஒரு ஏக்கர் பூமி இருந்தது... அது சத்யமூர்த்தியின் உழைப்பில் செல்வத்தை வாரி வழங்கியது... பத்து வயதில் படிப்பை விட்டு விட்டு தனது அன்னையுடன் ஏர் கலப்பையைப் பிடித்தவன் அவன்... இன்று வரை அவனது உழைப்பு நிற்கவில்லை...

வந்த வருமானத்தில் ஓட்டு வீட்டை காரை வீடாக மாற்றினான்... மூத்த தங்கை அபிராமிக்கு நல்ல இடத்தில் மாப்பிள்ளை பார்த்துத் திருமணம் செய்து கொடுத்தான்... வரும் வருமானத்தில் திருமணத்திற்கு வாங்கிய கடனை அடைத்துக் கொண்டு, சிறியவர்கள் இருவரையும் படிக்க வைத்துக் கொண்டு கட்டும் செட்டுமாய் அவன் வாழ்ந்து வந்த வாழ்க்கை மீது யார் கண்பட்டதோ தெரியவில்லை... அனைத்தையும் ஒரு நொடியில் இழந்து இன்று அவர்கள் ஓட்டு வீட்டுக்கு மாறி வறிய நிலைக்குச் சென்றுவிட்டனர்...

எல்லாவற்றிற்கும் காரணம் அவரது கணவர் இராமசாமி தான்... அவர் பண்ணிய வேலையால் தான் இன்று இந்தக் குடும்பமே கஷ்டப்படுகிறது...

'எடுப்பட்ட பய பண்ணிய வேலைக்கு...' வடிவழகி ஆத்திரம் தாங்காது பல்லை கடித்தார்...

சத்யமூர்த்தித் தென்னந்தோப்பிற்கு வந்து அங்கு மலை போல் குவிந்திருந்த தேங்காயை எடுத்து அதன் மட்டையை உறிக்க ஆரம்பித்தான்... மாலை மயங்கும் வரை அவனது வேலை தொடர்ந்தது...

"மாமோய், என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?" என்று கேட்டபடி அங்கே வந்தாள் ஐயா என்றழைக்கப்படும் அவ்வூர் பண்ணையார் ராஜலிங்கத்தின் மகள் சந்திரமதி...

சந்திரமதி இப்போது தான் பொறியியல் படிப்பு முடித்து விட்டு வந்திருக்கும் இளம்பெண்... பண்ணையாரின் ஒரே மகள்... இருபத்தியொரு வயது அழகு தேவதை பெண்... அந்தக் கிராமத்தில் அழகு, படிப்பு, பண்பு என்று அனைத்து குணநலன்களும் ஒருங்கே பெற்றவள்...

"பார்த்தா எப்படித் தெரியுது...?" என்று நக்கலாய் கேட்டபடி அவன் தனது நெற்றியில் பூத்திருந்த வியர்வை துளிகளை வழித்தெடுத்து உதறினான்... அது அவள் மேல் பட்டதில் அவள் மோட்சம் அடைந்தது போல் பரவசப்பட்டுப் போனாள்...

"மாமா, உன்னோட வியர்வை கூடப் பன்னீர் மாதிரி மணக்குது..." என்று அவள் மயக்கத்துடன் கூறியபடி அவன் அருகில் நெருங்கி வந்து நின்றாள்...

"இனிமே இப்படி எல்லாம் பேசாதே புள்ள..." அவன் அவளை நிமிர்ந்து பார்த்து கண்டிக்கும் குரலில் கூறினான்...

"அப்போ முதலில் நான் பேசினப்போ மட்டும் உனக்குப் பிடிச்சிருந்ததோ...?" அவள் கூறியதை கேட்டு உதட்டை கடித்தவன் பதில் பேசாது தேங்காயை உறிக்க ஆரம்பித்தான்...

சந்திரமதிக்கும் அவனுக்கும் கிட்டத்தட்ட பதினோரு வயது வித்தியாசம்... அது தெரிந்தும் அவனது மனம் அவளிடம் மயங்க தான் செய்தது... கிராமத்தில் இந்த வயது வித்தியாசம் எல்லாம் பெரிதாகப் பார்க்க மாட்டார்கள்... அதனால் அவனுக்கும் அது தவறாகத் தோன்றவில்லை... அதை அவளும் உணர்ந்து இருந்ததால் அவனைச் சுற்றி சுற்றி வந்தாள்... இது ராஜலிங்கத்திற்குத் தெரிந்த போதும் அவர் ஒன்றும் தடை கூறவில்லை... சத்யமூர்த்தியை பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும்... அதை விட அவன் அவருக்குத் தூரத்து சொந்தமும் கூட... அதனால் அவருக்கும் இதில் மறைமுக விருப்பம் இருந்தது...

"இங்கே பாரு புள்ள... உனக்கும் எனக்கும் பதினோரு வயசு வித்தியாசம்... இது சரிப்படாது..."

PDF தமிழ் .com

அவன் தனது மனதில் இருந்த ஆசையை மறைத்துக் கொண்டு பேசினான்... அவனுக்கும் ஆசைக்கும் வெகுதூரம் போலும்... இத்தனை வருட வாழ்க்கையில் அவன் ஆசைப்பட்டது சந்திரமதி மீது மட்டுமே... ஆனால் அதற்கும் காலம் முட்டுக்கட்டு போடும் என்று அவன் நினைத்து கூடப் பார்க்கவில்லை... காலம் போட்ட தடையா...? இல்லை இது அவனே போட்டுக் கொண்ட தடையா...? அது அவனுக்கே விளங்கவில்லை...

அன்று ஏன் அவனது மனம் தடுமாறி போனது...? அவனது புத்தி ஏன் புல் மேய போனது...? அன்று அந்தச் சம்பவம் மட்டும் நடந்திருக்காவிட்டால் இன்று அவன் நிம்மதியாக இருந்திருக்கலாமே... பணக்கஷ்டம் மட்டுமே மிஞ்சியிருக்கும்... இது போல் மனக்கஷ்டம் இருந்திருக்காது... ஏன், ஏன், ஏன் என்று பல கேள்விகள் மனதில் எழுந்த போதும் அந்தக் கேள்விகள் ஒன்றுக்கு கூட அவனிடத்தில் பதில் இல்லை...

"இது இப்போ தான் உனக்குத் தெரியுதா மாமா...?" என்று கேட்டவளின் சுருதி இறங்கி போய் ஒலித்தது...

"இனிமே இப்படித்தான் புள்ள... நீ என்னை விட்டு விலகி இருக்கிறது உனக்கு நல்லது..." என்றவனால் அவளது முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை...

"நீ கொஞ்ச நாளாவே சரியில்லை மாமா... அது ஏன்னு எனக்குத் தெரியும்...?" என்றவளை அவன் சிறு திடுக்கிடலுடன் ஏறிட்டான்...

"அந்தப் பட்டணத்துக்காரி கிட்ட நீ வசமா மாட்டிக்கிட்ட... அப்படித் தானே மாமா..."

"அப்படின்னு யார் சொன்னது...? அப்படி எல்லாம் எதுவும் இல்லை..." என்று திணறலோடு கூறியவன் அவளைப் பார்க்க இயலாது தேங்காய் மட்டைகளை அள்ளி தனியே குவிக்கத் துவங்கினான்...

"நீ பொய் சொல்லுற மாமா... அவ வந்து போனதுல இருந்து நீ இப்படித் தான் இருக்க... அவள் உன் வாழ்க்கையையே நாசம் பண்ணிட்டு போயிட்டாள்... நீ மட்டும் உம்முன்னு ஒரு வார்த்தை சொல்லு... நான் உன்னைப் பழையபடி ஆக்கி காட்டுறேன்..." அவனது இன்றைய நிலை கண்டு அவளுக்குப் பெருத்த வருத்தமாக இருந்தது...

"உழைச்சு தான் முன்னேறணும் மதி... இப்படிக் குறுக்கு வழியில் இல்லை..." என்று பட்டுக்கத்தரித்தார் போன்று கூறியவன் தேங்காய்களைச் சாக்குப் பையில் அள்ளி கொண்டு போய் அங்கிருந்த தோட்டத்து வீட்டில் வைக்கப் போனான்... அவன் பின்னேயே வால் பிடித்துக் கொண்டு சென்றாள் சந்திரமதி...

சத்யமூர்த்தி வீட்டிற்குள் சென்று தேங்காயை வைத்து விட்டு திரும்பும் போது அவள் அவன் மேல் இடித்துவிடும் அளவிற்கு அருகே நெருங்கி நின்றிருந்தாள்...

"இங்கே எதுக்கு வந்த மதி...? யாராவது பார்த்தால் கதை கட்டிவிடப் போறாங்க... உன்னால உன்ற அப்பாரு தலைகுனியணுமா...? முதல்ல போ இங்கிருந்து..." என்று அவன் அவளை அங்கிருந்து அப்புறப்படுத்துவதில் குறியாக இருந்தான்...

"கதை கட்டினால் கட்டிவிடட்டும்..." என்றவள் அவன் உயரத்திற்கு எம்பி அவன் முகம் நோக்கி முன்னேற...

பொன்னில் வார்த்த தங்க சிலை போலிருந்த பெண்ணவளின் அழகு அவனது இளமையைத் தடுமாறச் செய்தது... ஏற்கெனவே அவன் மனதில் இருந்த ஈர்ப்பு அவனைத் தப்பு பண்ண சொல்லி தூண்டியது... அந்த உணர்வில் மயக்கத்துடன் கண்களை மூடி கொண்டவனின் நினைவில் திகைப்புடன் தன்னைப் பார்த்த பெண்ணவளின் கோப விழிகள் எழுந்து அவனிடத்தில் நிகழ்காலத்தைப் பயங்கரமாய் எடுத்துரைத்தது... அதில் அவன் தனது கண்களைப் பட்டென்று திறந்தான்...

PDF தமிழ் .com

தனக்கும் அவளுக்கும் இடையில் இருந்த குறுகிய இடைவெளியில் அவன் புகுந்து விலகி வெளியில் வந்துவிட்டான்... அவள் ஏமாற்றத்துடன் அவனைப் பின்தொடர்ந்து வந்தாள்... ஆனாலும் அவள் விடாது அங்கிருந்த திண்ணையில் அமர்ந்து கொண்டு அவன் வேலை செய்யும் அழகினை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்... அவனோ அவளது பார்வையை அறியாதவன் போல் தனது பணியைச் செவ்வனே செய்து முடித்தான்...

அவன் வேலையை முடிக்கவும் ராஜலிங்கம் அங்கே வரவும் சரியாக இருந்தது... வந்தவர் அங்கு மகளைக் கண்டதும் நேரே அவளை நோக்கி சென்றார்...

"மதி கண்ணு... இங்கே என்ன பண்ணுற...?"

"மாமா கூடப் பேசிக்கிட்டு இருந்தேன்ப்பா..."

கால்வாயில் கை கால்களைக் கழுவி கொண்டிருந்த சத்யமூர்த்தியின் காதுகளில் அவள் பதில் கூறுவது விழுந்தது... 'இவளுக்கு ரொம்பத்தேன் தைரியம்' அவன் மனதிற்குள் வியந்தான்...

"ஐயா வணக்கமுங்க..."

அவன் ராஜலிங்கம் முன் வந்து நின்று பவ்யத்துடன் வணக்கம் வைத்தான்... சிறு வயதில் இருந்து ஊர் பண்ணையாராய் அவரைப் பார்த்து பிரமித்த உணர்வு அவனுள் என்றும் உண்டு...

அவன் கேட்காமல் அவனது கூலியோடு அவன் முன்பணமாய்க் கேட்ட பணத்தையும் சேர்த்து கொடுத்தார் அவர்... அவனது தேவைக்குப் போக அதில் கூடுதல் பணம் வைத்திருந்தார் அவர்...

"கூடுதலா இருக்கே..." அவன் அவரது அதிகப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க முன் வந்த போது,

"கடனா தான் கொடுக்கிறேன் சத்யா... பிறகு கூலியில் கழிச்சுக்கலாம்..." என்க...

"நன்றி ஐயா..." நன்றி பெருக்கோடு கையெடுத்து கும்பிட்டவன் தனது வீடு நோக்கி நடந்தான்...

"என்னம்மா சொல்றான் உன் மாமங்காரன்...?" என்று சன்ன சிரிப்போடு மகளைப் பார்த்து அவர் கேட்டார்...

"ஒண்ணும் சொல்லாதது தான் இங்குப் பிரச்சினையே..." என்று பெருமூச்சுவிட்ட மகளைப் பார்த்து சிரித்தவர்,

"சத்யா தன்மானக்காரன்... அவனை விட்டுப் பிடிச்சா தான் உனக்கு நல்லது... இறுக்கி பிடிச்சா திமிறிட்டு போயிருவான்..."

தந்தையின் வார்த்தையில் இருந்த உண்மை அவளுக்குப் புரிந்தது... அதனால் அவள் அமைதி காத்தாள்...

வீட்டிற்கு வந்த சத்யமூர்த்திப் பணத்தைத் தம்பியிடம் கொடுத்து கல்லூரி கட்டணம் செலுத்தச் சொன்னான்... அவனோ அதை மறுத்து,

"வேண்டாம்ண்ணா... நானும் வேலைக்குப் போகலாம்ன்னு இருக்கேன்..." என்க... அதைக் கேட்டு சத்யமூர்த்திக்கு ஆத்திரம் வந்தது...

"வேலைக்குப் போயி...?" என்று தம்பியை பார்த்து அடக்கப்பட்ட கோபத்துடன் அவன் கேட்டான்...

"குடும்பக் கஷ்டத்தைச் சேர்ந்து சுமக்கலாம்ன்னு..." என்று சின்னவன் பயத்தில் மென்று விழுங்க...

"நீ சம்பாதிச்சா மட்டும் கஷ்டம் தீர்ந்துர போகுதா...? இப்போதைக்கு இந்தக் கஷ்டம் தீராது... நீ உன் படிப்பை கவனி... நான் குடும்பத்தைப் பார்த்துக்கிறேன்..."

"இந்தப் பணத்தை ஐயா கிட்ட கடனா கேட்டு தானே வாங்கிட்டு வந்திருக்க... இப்போ இது ஓகே... அடுத்த டெர்ம் பீஸ் கட்ட...? ஒவ்வொரு தடவையும் நீ இப்படி கடன்

PDF தமிழ் .com

வாங்கிட்டு இருப்பியா அண்ணா...? அப்போ இருக்கிற கடனை நீ எப்படி அடைக்கப் போகிற...?"

தம்பி கேட்டதும் சத்யாவின் மனம் சோர்ந்து போனது... ஆனாலும் தைரியத்தைக் கைவிடாது,

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்..." என்றவன் ஒரு முடிவு எடுத்தவனாய் தம்பியிடம்,

"உன் செல்லை கொடு..." என்று தம்பியின் அலைப்பேசியை வாங்கிக் கொண்டு வெளியில் வந்தான்...

அது சாதாரண அலைப்பேசி தான்... அது கூட அவனிடம் கிடையாது... தம்பிக்கு மட்டும் வாங்கிக் கொடுத்திருந்தான்...

தன்னிடம் இருந்த முகவரி அட்டையைப் பார்க்காது அந்த எண்ணிற்கு அழைத்தான்... மனப்பாடம் செய்தது போல் அட்சரம் பிசகாது எல்லா எண்களும் அவனது நினைவில் இருந்தது... மறுமுனையில் எடுக்கப்பட்டது தெரிந்ததும் இவன்,

"ஹலோ..." என்க... மறுமுனையோ பதில் பேசாது அமைதி காத்தது...

"ஹலோ, ஹலோ..." என்று அவன் படபடக்க...

"பேசுறது நீ தான்னு தெரியுது... சொல்லு சத்யா..." அமர்த்தலாகப் பதிலளித்தாள் அந்தக் குரலுக்குச் சொந்தக்காரியான பத்மவர்ஷினி...

அவள் தன்னை அடையாளம் கண்டு கொண்டதில் அவனது புருவங்கள் இரண்டும் வியப்பாய் உயர்ந்தது...

"என்ன பேச வார்த்தைகள் வரலையோ...?" சீண்டலாய் ஒலித்த அவளது குரலில் அவன் தன்னினைவு அடைந்தவன்,

"நான் வேலைக்கு வரலாம்ன்னு இருக்கேன்..." என்றான் மொட்டையாக...

"ரொம்பச் சந்தோசம்..." என்றாள் அவள் அவனது முடிவினை எதிர்பார்த்தது போல்...

அதைக் கேட்டு அவன் பல்லை கடித்தான்... கடைசியில் அவள் அல்லவா வெற்றி பெற்று விட்டாள்...

"சொன்னது எல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கும்ன்னு நினைக்கிறேன்..." என்றான் அவன் விடாப்பிடியாய் அவளுக்குச் சிறிதும் விட்டு கொடுக்க விருப்பம் இல்லாதவனாய்...

"அதே தான் உனக்கும்..." என்று மிடுக்காய் கூறியவள்,

"நாளைக்குக் காலையில் நீ வேலைக்குச் சேர்ந்திருக்கணும்..." என்று கட்டளையிடும் தொனியில் கூறியவள் அவனது பதிலை எதிர்பாராது அழைப்பை துண்டிக்க...

"நாளைக்கா...?" என்று திகைத்தவன்,

"ஹலோ, ஹலோ..." என்க... மறுபுறம் சத்தம் இல்லாது போகவும் அலைப்பேசியைக் காதில் இருந்து எடுத்துப் பார்த்தான்... அதில் அழைப்புத் துண்டிக்கப்பட்டிருந்தது...

"உலகத்துல உள்ள எல்லாக் கொழுப்பும் இந்த அம்மிணிக்கு தான் இருக்கும் போலிருக்கு..." என்று எரிச்சலுடன் முணுமுணுத்தவன் வீட்டினுள் நுழைந்தான்...

அன்னையிடம் விசயத்தைக் கூறிய போது, "இப்பவா கிளம்பணும்..." என்று அவர் கவலை குரலில் கேட்க...

"ஆமாம்மா..."

"இந்நேரம் பஸ் எதுவும் கிடையாதேண்ணா..."

"லாரி பிடிச்சு கூட நான் போயிக்கிறேன்... நீ கவலைப்படாதே..." என்று தம்பியை தேற்றியவன் தனக்கான உடமைகளை எடுத்து வைக்க ஆரம்பித்தான்...

PDF தமிழ் .com

"அம்மா, நீங்க கவலைப்படாதீங்க... சரவணா உங்க கூட இருக்கான்... அவன் பார்த்துக்குவான்..." கவலை கொண்ட அன்னையை ஆறுதல்படுத்தினான்...

"அகல் வீட்டுக்குப் போவியா சத்தி..."

'நான் வேலை பார்க்க போவதே அவளோட புகுந்த வீட்டுக் கம்பெனியில் தானேம்மா' என்று மனதில் நினைத்தவன் வெளியில்,

"நான் என் தங்கச்சியைப் பார்க்க போகாம இருப்பேனா...? கட்டாயம் போவேன்..." என்று அவன் கூற...

"அப்போ இதை வச்சு அவளுக்கு ஏதாவது வாங்கிட்டு போப்பா... உன்ற அப்பாரை வச்சு எந்தப் பிரயோசனமும் இல்லை... நாம தான் அவளைப் பார்த்துக்கோணும்..." என்றவர் தான் சேர்த்து வைத்திருந்த ஐநூறு ரூபாயை எடுத்து வந்து கொடுத்தார்...

"இது நீங்க செலவுக்கு வச்சுக்கோங்க... நான் வாங்கிக் கொடுத்துக்கிறேன்..." என்று அவன் மறுத்தான்...

"வேலைக்குப் போற இடத்தில் கொஞ்சம் பொறுமையா, நிதானமா இரு சத்தி... நம்ம ஊர் மாதிரி பட்டணம் கிடையாது..." என்று தாய் அறிவுரை கூற...

எல்லாவற்றிற்கும் சரி சரியென்று தலையாட்டியவன் ஒருவழியாய் வீட்டை விட்டுக் கிளம்பினான்... அவன் கிளம்பும் வரை அவனது தந்தை வீடு வந்து சேரவில்லை... அவரை நினைத்து அவனுக்கு அத்தனை வெறுப்பாக இருந்தது... அவனது இந்த இழிநிலைக்குக் காரணமே அவர் தானே... அவனுக்குத் தந்தை மீது கோபம் கோபமாக வந்தது...

கடைசிப் பேருந்தை பிடித்துக் கோயம்புத்தூர் வந்து சேர்ந்தவனின் நல்ல நேரமோ என்னவோ... ஒரே ஒரு சென்னை பேருந்து காத்திருந்தது... அதில் அவன் ஏறியமர்ந்து அமைதியாய் விழிகளை மூடி கொண்டான்... கடந்து போன கசப்பான நினைவுகள் அவனுள்...

மறுநாள் காலையில் சென்னை வந்தடைந்தது அந்தப் பேருந்து... சென்னையின் ஆர்ப்பாட்டமான, பகட்டான தோற்றத்திற்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாத தோற்றத்துடன் இருந்த சத்யமூர்த்திப் பேருந்தை விட்டுக் கீழிறங்கினான்... அய்யனார் போன்று ஆஜானுபாகுவான தோற்றத்துடன் முறுக்கு மீசையுடன் கருமை நிறத்தில் கம்பீரமாக இருந்தவனின் உரமேறிய புஜங்கள் கூறாமல் கூறியது அவனது உழைப்பின் நேசிப்பை...

சிவப்பும், கருப்பும் கலந்து கட்டம் போட்ட முழுக்கை சட்டையை முழங்கை வரை சுருட்டி விட்டு, வெள்ளை நிற பருத்தி வேட்டி அணிந்திருந்த போதும் அதுவும் அவனுக்குத் தனி அழகை கொடுத்தது... வலதுகையில் அணிந்திருந்த செப்பு வளையத்தை மேலேற்றி விட்டு கொண்டவன் இடது கையில் இருந்த கருப்பு பட்டியணிந்த கைக்கடிகாரத்தில் மணியைப் பார்த்தான்...

அவன் செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்ல இன்னமும் நேரமிருந்தது... கையிலிருந்த பையைத் தோளில் மாட்டியவாறு அவன் பேருந்து நிலையத்தை விட்டு வெளியில் வந்தான்... அவன் வெளியில் வரவும் அவனது நண்பன் நடராஜன் தனது இருசக்கர வாகனத்தை அவன் முன் நிறுத்தவும் சரியாக இருந்தது...

"மச்சான்..." என்று இவனும்...

"மாப்ளே..." என்று நடராஜனும் ஒருவரை ஒருவர் நட்புடன் கட்டிப்பிடித்துக் கொண்டனர்...

"எப்படி இருக்கச் சத்யா...?"

"என்னைப் பார்த்தா எப்படி இருக்கு...? நீயே பார்த்து சொல்லு...?" என்றபடி அவன் நண்பனின் வாகனத்தில் ஏறியமர்ந்தான்...

"விவசாயத்தை விட்டுட்டு நீ இங்கே வந்திருக்கும் போதே தெரியுது ஏதோ சரியில்லைன்னு..."

PDF தமிழ் .com

நண்பனின் பேச்சுக்கு அவனால் பதில் கூற இயலவில்லை... இதில் அவனது தவறு அதிகம் இருக்கிறதே... சத்யமூர்த்தியின் அமைதி கண்டு நடராஜனும் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை...

நண்பனின் அறைக்கு வந்து குளித்து உடை மாற்றி விட்டு அவன் வேலைக்குக் கிளம்பினான்... போகும் முன் அவனுக்கு உணவு விடுதியில் உணவு வாங்கிக் கொடுத்த நடராஜன் அவனது சட்டை பையில் இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுக்களைத் திணித்து விட்டு,

"செலவுக்கு வச்சுக்கோடா... ஈவினிங்க பார்க்கலாம்..." என்றபடி கிளம்பி சென்றுவிட்டான்...

ஷேர் ஆட்டோ ஒன்றை பிடித்துத் தான் வேலை செய்யும் நிறுவனத்திற்குப் பயணம் செய்து கொண்டிருந்த சத்யமூர்த்தியின் நினைவில் நின்றது எல்லாம் ஒரே கேள்வியே...

'அவளிடம் வேலை பார்ப்பது சரி வருமா...?'

*********************

ஊரை விட்டு தள்ளி புறநகர் பகுதியில் இருந்த அந்த நிறுவனத்திற்குச் சத்யமூர்த்தி வரும் போது மாலையாகி போனது... அவன் காலையில் இருந்து புயலில் சிக்கிய சருகு போல் இந்த வேகாத வெயிலில் அங்குமிங்கும் அலைகின்றான்... இல்லை இல்லை அவன் அலைக்கழிக்கப்பட்டான், பழிவாங்கப்பட்டான் என்பதே உண்மை... அவன் மனதிற்குள் அப்படியொரு கோபம் எழுந்தது... ஆனால் தாயின் வார்த்தைகள் காதில் ஒலித்து அவனது கோபத்தினைச் சிறிது மட்டுப்படுத்தியது...

"யாரை பார்க்கணும்...?" காவலாளி அவனை உள்ளே செல்ல விடாது பிடித்துத் தடுத்தான்...

அவனுக்கு வந்த ஆத்திரத்தில் காவலாளியை அடித்துத் துவம்சம் செய்யும் அளவுக்கு ஆவேசம் வந்தது... ஆனால் அவன் அதைச் செய்யாது அடக்கப்பட்ட கோபத்துடன்

கண்களில் நெருப்பு பறக்க காவலாளியை முறைத்துப் பார்த்தான்... அதில் அந்தக் காவலாளி சற்று பயந்து போய்ப் பின்வாங்கினான்...இருந்தாலும் அசராது,

"பெர்மிசன் இல்லாமல் உன்னை உள்ளே அனுமதிக்க முடியாது..." என்று சிறிது பந்தா காட்டினான்...

"உங்க முதலாளியம்மா கிட்ட சத்யமூர்த்தி வந்திருக்கிறேன்னு சொல்லு..." என்றான் அவன் அலட்சியமாய்...

'இவன் பெரிய ப்ரைம் மினிஸ்டரு... பெயரை சொன்னதும் அந்தம்மா இவனைப் பார்க்க அனுமதி கொடுக்கப் போகுதாக்கும்...' காவலாளி மனதில் கேலியாய் நினைத்தபடி தனது முதலாளியம்மாவின் செயலாளருக்கு இன்டர்காமில் அழைத்தான்... 'சத்யமூர்த்தி' என்ற பெயரை கேட்டதும் என்ன ஏதென்று விசாரிக்காது அந்தச் செயலாளர் உடனே அவனை உள்ளே விடச் சொன்னாள்...

"நீங்க போங்க சார்..." இப்போது காவலாளியின் வார்த்தையில், செயலில் அத்தனை பவ்யம், மரியாதை வந்திருந்தது...

சத்யமூர்த்தி மிதப்பாய் அவனைப் பார்த்தபடி வாயிலை கடந்து உள்ளே சென்றான்... அவன் உள்ளே சென்றதும் உடனே மகாராணியைப் பார்க்க அனுமதி கிடைக்கவில்லை... அவளது அறையின் முன்பு ஓரமாக அவன் நிற்க வைக்கப்பட்டான்... ஏனெனில் அங்கு இருந்த சோபாக்களில் டை கட்டி, பேண்ட், சட்டை போட்டிருந்த படித்த ஆசாமிகள் நிறையப் பேர் அமர்ந்திருந்தனர்... அவனையும் அறியாது ஒருவித தாழ்வு மனப்பான்மை அவனுள் எழுந்தது...

இவன் படிக்காது அவளிடம் வேலை கேட்டு வந்திருக்கிறான்... அவர்கள் படித்துவிட்டு வேலை கேட்டு வந்திருக்கின்றனர்... அவ்வளவே வித்தியாசம்... அது அவனுக்குத் தெரியவில்லை...

PDF தமிழ் .com

மதியம் வெளிநாட்டினருடன் முக்கியச் சந்திப்பு இருந்ததால் இந்த நேர்முகத் தேர்வை தள்ளி போட்டிருந்தாள் பத்மவர்ஷினி...

அவள் ஒவ்வொருவரையும் நிதானமாய்க் கேள்விகள் கேட்டு நேர்முகத் தேர்வு முடிக்கும் போது மாலை மயங்கியிருந்தது... அவள் மனதிற்கு மிகவும் சோர்வாக உணர்ந்தாள்... அப்போது தான் சத்யமூர்த்தியை தான் காக்க வைத்தது அவளுக்கு ஞாபகம் வந்தது... கண்களை மூடி ஐந்து நிமிடம் மிகத் தீவிரமாய் யோசித்தவள் பின்பு தனது செயலாளரை அழைத்து அவனை உள்ளே வர சொன்னாள்...

கதவை தட்டாது உள்ளே வந்த அவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வந்தது...

"கதவை தட்டிட்டு உள்ளே வரணும்ங்கிற பேசிக் மேனர்ஸ் கூட உனக்குத் தெரியாதா...?"

அவள் கோபமாய் இரைந்ததில் அவனது முகம் கறுத்துப் போனது... அதைக் கண்டு அவளுக்கு வெகுதிருப்தியாய் இருந்தது... அவளது சோர்வு எல்லாம் நொடியில் காணாமல் போய் ஒருவித புத்துணர்வு வந்து அவளிடம் தொற்றிக் கொண்டது... அவனை வம்பிழுக்க வேண்டும் என்று அவளது உள்ளம் பரபரத்தது...

"என்ன சத்யா, சென்னை மாநகர வெயில் உன் கலரை இன்னும் ப்ரைட்டாக்கின மாதிரியிருக்கு..." பத்மவர்ஷினி வேண்டுமென்றே அவனது கருப்பு நிறத்தை குத்திக்காட்டி கிண்டலடித்தாள்...

அவளது பேச்சை கேட்டு பல்லை கடித்தான் சத்யமூர்த்தி... ஆனால் ஒன்றும் பேசவில்லை... வீரியத்தை விடக் காரியம் பெரிது என்பதால் அமைதி காத்தான்...

"சோ த கேம் ஸ்டார்ட்ஸ் பிட்வீன் அஸ்..." என்று அவனது முகத்தைக் கூர்ந்து பார்த்தவள்,

"ஃப்ரம் நௌ..."

அவள் பேசிய ஆங்கிலம் அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை என்றாலும் வெளியில் அதைச் சிறிதும் காட்டி கொள்ளாது அவன் கெத்தாக அவளைப் பார்த்து வைத்தான்...

"ஓ... உனக்கு இங்கிலீஷ் புரியாது இல்லையா...?" என்று கேலி குரலில் கூறியவளின் முகம் எதையோ நினைத்து இறுகி போனது... அந்த இறுக்கத்துடன் அவனைப் பார்த்தவள்,

"உனக்கும், எனக்குமான ஆட்டம் இன்னையில் இருந்து தொடங்குகிறதுன்னு சொன்னேன்..."

"ரொம்பச் சந்தோசம் அம்மிணி..." என்றான் அவன் போலி பணிவுடன்...

அவனது போலி பணிவை கண்டு அவளது விழிகள் கூர்மையுடன் இடுங்கியது... பின் இகழ்ச்சியுடன்,

"உன்னை நான் அறிவேன் சத்யா..."

அவளது பேச்சை கேட்டு அவனது இதழ்கள் இளக்காரமாய் வளைந்தது...

"உன்னையும் நான் அறிவேனுங்க அம்மிணி..."

"ஏய், இங்கே பார்... மரியாதை கொடுத்து பேசி பழகு... நீ என் கிட்ட கை நீட்டி சம்பளம் வாங்க போகும் ஒரு வேலைக்காரன் என்பதை மறந்துவிடாதே..."

கோபத்தில் முகம் சிவக்க படபடத்தவளை கண்டு அவன் கொஞ்சமும் அலட்டி கொள்ளவில்லை... மாறாக மேசை மீது தனது உரமேறிய இரு கைகளையும் அழுத்தமாய் ஊன்றியவன் பின் அவள் புறமாய் லேசாக முன்னுக்குச் சாய்ந்து,

"நாளை நம்மைப் பத்தி இந்த ஊர், உலகம் அறியும் அம்மிணி... அப்போ எல்லோருக்கும் தெரியும் இந்தப் பத்மவர்ஷினி யார், சத்யமூர்த்தி யார்ன்னு..."

PDF தமிழ் .com

கொஞ்சமும் அலட்டி கொள்ளாது தெனாவெட்டாய் பேசியவனை அவள் வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்...!!!

சதிராடும்...!!!

## உயிர் - 2

"கோசலை தேவியின் குணமிகு மைந்தா!
வீசலைக் கடலில் வெய்யவன் உதிக்கத்
தேசுறு சந்தியை தோன்றினள் ஆங்கே;
தாசர தீ! எழு, கண்விழி வீரா!
பூசைகள் செய்திடக் காலமி தையா!"

பூஜையறையில் அமர்ந்து சுபிக்ஷா தனது இனிமையான குரலில் சுப்ரபாதம் பாடி கொண்டிருக்க, அவளது மருமகள் அகல்யா பூஜையறை வாசலில் நின்று கொண்டு மாமியாரை வியப்பாய் பார்த்து கொண்டிருந்தாள்... அவள் திருமணமாகி இங்கு வந்ததில் இருந்து மாமியாரின் தெய்வீக குரலில் அவளுக்கு ஒருவித மயக்கம், பிரமிப்பு எல்லாம் இருக்கிறது... அதே போல் தான் மாமியாரின் குணமும்... மாமியாரின் மென்மையான குணத்திற்கும், மாமனாரின் அதிரடி குணத்திற்கும் எப்படிப் பொருந்தும்? என்று அவள் தனக்குள் கேள்வி கேட்டு கொள்வாள்...

ஆனால் அதே அமைதியான மாமியார் ஒரு பார்வை பார்த்தால் புலியாய் சீறும் மாமனார் பூனையாய் பம்மி விடுவதையும் அவள் கண்டு வியந்திருக்கிறாள்... எல்லாம் காதல் செய்யும் மாயம் போலும் என்று எண்ணி கொண்டிருந்தவளுக்கு அந்தக் கணம் அவளது கணவன் யுகேன் நினைவுக்கு வந்தான்... 'கட்டினால் இவளை தான் கட்டுவேன்' என்று அவன் ஒற்றைக் காலில் நின்று அடம்பிடித்து அவளது கழுத்தில் தாலி கட்டினான்... ஆனால் அவனது மனதிலோ, வார்த்தையிலோ துளி காதல் இருந்ததா? என்று கேட்டால், இல்லை என்பது தான் அவளது பதில்...

அண்ணனும், தங்கையும் தங்களது காரியம் கை கூடத் தன்னைப் பகடைக்காயாக உபயோகப்படுத்திக் கொண்டனர்... அது தான் உண்மை... அதை நினைத்து அவளுக்கு மனம் வலித்தது... இந்தப் பொருந்தா திருமணம் அவளை எங்கே கொண்டு போய் விடப் போகிறதோ...? அவளிடத்தில் இருந்து நீண்ட பெருமூச்சு வெளிவந்தது...

PDF தமிழ் .com

"அகல்..." மாமியாரின் குரலில் தன்னுணர்வு பெற்றவள்,

"என்னஙக்த்தை...?"

கண்கள் கலங்க நின்றிருந்த மருமகளைக் காணும் போது சுபிக்ஷாவிற்கு வருத்தமாக இருந்தது... சாதாரண நிலையில் இருந்தாலும் நிம்மதியாக, சந்தோசமாக இருந்த பெண்ணவளை தங்க கூண்டுக்குள் அடைத்து வைத்து சித்ரவதை செய்கிறானோ மகன் என்று அவள் மருமகளுக்காகக் கவலை கொண்டாள்... அந்தக் கணம் அவளுக்குக் கணவன், மகன், சின்ன மகள் மூவர் மீதும் கோபம் வந்தது...

"கண்ணுல ஒத்திக்கோம்மா..." என்று தீபாராதனை தட்டை அகல்யா முன் நீட்டினாள் சுபிக்ஷா... அவள் கண்களில் ஒற்றிக் கொண்டதும்,

"ரெண்டு தாத்தா, பாட்டி கிட்ட கொண்டு போய்க் காட்டிட்டு வா..." என்க...

"நான் எப்படி அத்தை...?" ஆச்சாரமாய் இருக்கும் இந்த வீட்டில் அவள் மட்டும் அபஸ்வரம் மாதிரி தனித்திருப்பது போல் ஒரு தோற்றம் அவளுள்...

"நீ தானே இந்த வீட்டு மருமகள்... இந்த வீட்டுக்கு வாரிசு பெற்று கொடுக்கும் உரிமை உனக்குத் தானே இருக்கிறது... அப்புறம் என்ன இன்னும் தயக்கம்...? போ..." என்று சுபிக்ஷா அன்போடு கட்டளையிடும் குரலில் கூற...

வேறுவழியில்லாது அகல்யா தீபாராதனை தட்டை எடுத்துக் கொண்டு ஜெகன், ருத்ரஸ்ரீ, செல்வா, ரம்யாவிடம் சென்றாள்... வரவேற்பறையில் இருந்த அவர்கள் நால்வரும் புன்னகையுடன் தீபாராதனையைத் தொட்டு கும்பிட்டனர்... யாரும் அவளை வேண்டாத பொருளாய் நினைக்கவில்லை... அவளை விரும்பியே ஏற்றுக் கொண்டனர்... ஆனால் அவளுக்குத் தான் அவர்கள் யாரிடமும் ஒட்ட முடியவில்லை...

மாமியார் தனது கையில் கொடுத்துவிட்ட காபி கோப்பையுடன் அவள் தனது அறைக்குச் சென்றாள்... அங்குக் கட்டிலில் கையைக் காலை பரப்பிக் கொண்டு நிம்மதியாக உறங்கி கொண்டிருந்த கணவனைக் கண்டு அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது... கையிலிருந்த காபியை எடுத்து அவனது முகத்தில் ஊற்றினால் தான் என்ன என்று எண்ணும் அளவிற்கு அவளுக்குப் பெரும் கோபம் வந்தது...

'ச்சே, என்ன மனிதன் இவன்...?' என்று வெறுப்புடன் அவனைப் பார்த்தபடி 'நங்'கென்று காபி கோப்பையை அங்கிருந்த மேசை மீது வைத்தாள்... அந்தச் சத்தத்திற்கும் அவன் எழவில்லை...

திருமணமான இத்தனை நாட்களில் அவனது அன்றாட நடைமுறை வாழ்க்கை அனைத்தும் அவளுக்கு அத்துப்படி...

யுகேன் காலையில் எட்டு மணிக்குச் சாவகாசமாக எழுவான்... அதன் பிறகு நிதானமாகப் பத்து மணிக்கு கிளம்பி அலுவலகம் செல்வான்... அங்கே என்ன செய்வானோ?... அது கடவுளுக்கே வெளிச்சம்... அது போல் மாலை டான் என்று ஐந்து மணிக்கு வீட்டிற்கு வந்துவிடுவான்... வந்து அன்னை, பாட்டி, தாத்தா என்று எல்லோரிடமும் கொஞ்சி குலாவி விட்டு ஆறு, ஆறரை மணிக்கு வெளியில் கிளம்பி சென்றான் என்றால் அதன் பிறகு அவன் வீடு திரும்புவதற்கு நள்ளிரவை தாண்டி விடும்... அதை விடக் கொடுமை என்னவென்றால் வரும் போதே அவன் முழுப் போதையுடன் தான் வீட்டிற்கு வருவான்... அதற்காக அவன் தள்ளாடி கொண்டோ, தேவையில்லாது பேசி கொண்டோ அநாகரீகமாக எல்லாம் நடந்து கொள்ள மாட்டான்... போதையின் அடையாளமாக அவனது விழிகள் மட்டும் செக்கச்செவேலென்று சிவந்திருக்கும்...

'அந்தப் பட்டணத்துக்காரன் சரியான ஜொள்ளு பார்ட்டிடி... மரத்துக்குச் சேலை கட்டினாலும் விட மாட்டான் போலிருக்கு' அவளது கணவனைப் பற்றி அவளது ஊர்

PDF தமிழ் .com

பெண்களின் கருத்துக் கணிப்பு இது தான்... ஒருவேளை கணவனுக்குப் பெண்கள் பழக்கமும் இருக்கக் கூடுமோ...? இதை நினைக்கும் போதே அவளுக்கு நெஞ்சுக்குள் திக்கென்றது... அடுத்த நொடி அந்த எண்ணத்தைத் தூக்கி எறிந்தாள்...

'அப்படி மட்டும் இவன் எவ கூடயாவது சுத்துறதை நான் பார்த்தேன்... அன்னைக்கு இருக்கு இவனுக்கு... வெட்டி போட மாட்டேன் வெட்டி... யார் கிட்ட...?' என்று கோபமாய்த் தலையைச் சிலுப்பிக் கொண்டாள்...

"பார்த்து... ரொம்பச் சிலிர்த்துக்காதே... தலை தனியா கழண்டு கீழே விழுந்திர போகுது..." இரு கைகளையும் தூக்கி சோம்பல் முறித்தபடி அவளைப் பார்த்து கிண்டலடித்தான் யுகேன்...

அகல்யா அவனை முறைத்து பார்த்தபடி ஒன்றும் பேசாது கண்ணாடி முன் நின்று தலைவார ஆரம்பித்தாள்... அவளது இயல்பான செயலை எப்போதும் போல் யோசனையாய் பார்த்தபடி எழுந்த யுகேன் குளியலறைக்குள் புகுந்து கொண்டான்...

குளிக்கும் போது வலது உள்ளங்கையில் நீளமாய்க் கோடு போலிருந்த காயத்தைக் கண்டவன் அதை வருடி கொடுத்தான்... அவனது மனைவி முதலிரவு அன்று அவனுக்குக் கொடுத்த அன்பு பரிசு... அவனால் அதை உயிர் இருக்கும் வரை மறக்க முடியாது... அவன் மனதில் மனைவி மீது கோபம் இருக்கிறது... அதே சமயம் வெளிப்படையாய் கோபத்தைக் காட்ட முடியாதபடி சூழ்நிலை தடுத்தது... ஏனெனில் அந்தச் சூழ்நிலையை ஏறபடுத்தியவன் அவனல்லவா... அதனால் அவன் போடுகின்ற வேசத்தை ஒழுங்காகப் போட முடிவு செய்தான்...

வெளியில் எல்லோரும் பார்க்க அவர்கள் இருவரும் காதல் கொண்டு மணந்த கணவன், மனைவி... ஆனால் அறைக்குள் இருவரும் பகை கொண்ட எதிரிகள்...

அவன் குளித்து விட்டு வரும் போது அவள் அவனுக்காகக் காத்திருந்தாள்... அவன் மனதிற்குள் ஆச்சிரியமாய் நினைத்தாலும் முகத்தில் ஒன்றும் காட்டாது அவளைத் தாண்டி உடை மாற்ற சென்றான்... குளியலறையில் இருந்து இடுப்பில் துண்டுடன் வந்த கணவனைக் கண்டு லஜ்ஜையுற்றவளாய் அவள் அவனுக்கு முதுகு காட்டி நின்று கொண்டாள்...

"நான் உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்..."

அவன் வியப்பாய் எண்ணியபடி அவளைத் திரும்பி பார்த்தான்... அவள் தனக்கு முதுகு காட்டி நின்றிருந்ததைக் கண்டு அவனது உதட்டில் புன்னகை தோன்றியது... அவன் அமைதியாகக் கைகளைக் கட்டி கொண்டு அவளது முதுகினை பார்த்திருந்தான்...

"நான் பேசிக்கிட்டு இருக்கேன்... நீங்க பதில் சொல்லாம இருந்தால் என்ன அர்த்தம்...?" அவள் கோபத்துடன் அவனைத் திரும்பி பார்த்தாள்...

"நீ கூப்பிட்டதுமே நான் திரும்பி நின்னுட்டேன்... நீ தான் என்னைக் கவனிக்கலை..." என்றான் அவன், அவளைக் குற்றம் சாட்டும் குரலில்...

"அப்படிக் கவனிச்சு பார்க்கும் அளவுக்கு நீங்க ஒண்ணும் எனக்கு நல்லது பண்ணலையே..." அவளது கோபம் இன்னமும் குறையவில்லை...

"என்ன நல்லது பண்ணலை...? உங்கம்மா வீட்டில் இருந்ததை விட இங்கே உனக்கு என்ன குறை...? அங்கே இருந்ததை விட உன்னை எல்லா விதத்திலும் நல்லா தான் வச்சியிருக்கேன்..." என்று அவன் பதிலுக்குக் கத்தினான்...

"என்னத்தை நல்லா வச்சியிருக்கீங்க... இது வீடில்லை... என்னைப் பொறுத்தவரை இது ஜெயில்... என் வீட்டில் நிம்மதியா, சந்தோசமா இருந்தேன்... என்னைப் பிடிச்சு இப்படி அடைச்சு வச்சியிருக்கீங்க... இதுக்குத் தான் பொய் சொல்லி கல்யாணம் பண்ணினீங்களா...? உங்க கிட்ட

PDF தமிழ் .com

பணம் மட்டும் தான் இருக்கு... வேறு ஒண்ணுமில்லை... இதுக்கு நான் என் கூட வேலை பார்த்த, என்னைக் காதலிச்ச மணிபாரதியை கல்யாணம் பண்ணி இருந்தா இந்நேரம் நிம்மதியா, சந்தோசமா இருந்திருப்பேன்... எல்லாம் என் தலையெழுத்து..."

அகல்யா சொல்லி முடிக்கும் முன் யுகேன் அவளது கழுத்தை ஆத்திரத்துடன் பற்றியிருந்தான்...

"உன் அண்ணன் மாதிரி உனக்கும் திமிர் அதிகம்டி... எவ்வளவு தைரியம் இருந்தா என் கிட்டேயே வந்து உன் காதலனை பத்தி சொல்லுவ...?"

கணவன் சொன்னதைக் கேட்டு முதலில் திகைத்தவள் பின்பு அவனை அசால்ட்டாகப் பார்த்து வைத்து அவனது இரத்த அழுத்தத்தை ஏகத்துக்கும் எகிற வைத்தாள்...

'லூசு, கேட்கிறதை ஒழுங்கா கேட்கிறானா...?' என்று மனதிற்குள் அவனைத் திட்ட வேறு செய்தாள்...

"உண்மை எப்போதும் கசக்க தான் செய்யும்... நீங்க என்ன என் மேல் ஆசைப்பட்டா கட்டிக்கிட்டீங்க... உங்க தொங்கச்சிக்காகத் தானே கட்டிக்கிட்டீங்க... அப்புறம் எதுக்கு இப்படிக் கோபப்படணும்...?"

"ஏதோ ஒண்ணு... அதுக்காக இந்தக் கல்யாணம் விளையாட்டு இல்லை... உண்மையானது... அதுக்கு மதிப்பு கொடுத்து வாழ பழகி கொள்..."

"என்னால் முடியாது... இங்கே இருக்க எனக்குப் பிடிக்கலை... மூச்சு திணறுது..."

தனது பிடியில் உண்மையில் மூச்சு திணறியபடி விட்டு விட்டு பேசியவளை கண்டு அவன் சட்டென்று கையை எடுத்தான்...

'இவளை எப்படிச் சமாளிப்பதுன்னு எனக்குத் தெரியலையே... ஆண்டவா, ஏதாவது ஒரு வழி இருந்தால் சொல்லேன்...' என்று அவன் தான் செய்த தவறுக்கு

கடவுளை துணைக்கு அழைத்தான்... பாவம் அவர் என்ன பண்ணுவார்...

"நீ எதுக்கு என்னைக் கூப்பிட்ட...? முதல்ல அதைச் சொல்லு..."

அவன் கேட்டதும் அவள் தன் கைப்பையில் இருந்து கொஞ்சம் பணம் எடுத்து அங்கிருந்த மேசை மீது வைத்தவள்,

"இது என்னோட சாப்பாடு செலவுக்கு மற்றும் இதர செலவுக்கு..." என்றவளை அவன் வெட்டவா, குத்தவா என்பது போல் பார்த்து வைத்தான்...

"இங்கே பார், என் கோபத்தைக் கிளப்பாதே... நான் உன் புருசன்... இப்படிப் பணம் கொடுத்து நம்ம உறவை அசிங்கப்படுத்தாதே..." என்று அவன் ஏறக்குறைய கத்தினான்...

"என் மனசு இந்த வாழ்க்கையில் ஒட்டலை... அப்படி ஒட்டும் போது இது பத்தி யோசிக்கிறேன்..." என்றவள்,

"அப்புறம் ஒரு முக்கியமான விசயம்... நாளைக்கு எங்கண்ணா இங்கே வர்றான்... அவன் முன்னாடி எதையும் காட்டிக்க வேண்டாம்..."

"காட்டிக்கிட்டா என்ன பண்ணுவ...?" ஏனோ அவளைக் குத்தி குதற வேண்டும் போலிருந்தது அவனுக்கு...

"அவங்களோட இந்த நிம்மதியும் கெடுக்க நினைச்சா..." என்றவள் நிறுத்தி நிதானமாய் அவனை ஏறிட்டு பார்த்து,

"இந்த வீட்டு நிம்மதியை கெடுக்க எனக்கு ஒரு நொடி போதும்..." என்றாள் தெனாவெட்டாய்...

"டீச்சரம்மால்ல... அதான் இந்தத் தெனாவெட்டு..." என்று கோபமாய்ப் பல்லை கடித்தவன் அதே கோபத்துடன் அவள் அருகில் நெருங்கி வந்தான்...

PDF தமிழ் .com

"அந்த நிம்மதியை எப்படித் திரும்பப் பெறுவதுன்னு எனக்குத் தெரியும்... ஆஃப்டர் ஆல் பட்டிக்காடு நீ எனக்குப் பாடம் சொல்லி தர்றியா...? எனக்கு எதிரா நீ உன் சுண்டு விரலை கூட அசைக்க முடியாதபடி நான் செஞ்சு காட்டவா...?" என்று கூறியபடி மனைவியைத் தன் இரு கைகள் கொண்டு தன்னுடைய ஆளுகையின் கீழ் கொண்டு வந்தவன்,

"இப்போ உன்னால் என்னடி பண்ண முடியும்...?" என்று கேட்டுக் கொண்டே அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அவனது செயலில் அச்சத்தில் விரிந்த விழிகளுடன் அவள் அப்படியே நின்றிருந்தாள்... இதழ்களும், இதழ்களும் தீப்பற்றிக் கொள்வதற்கு நூலிழை அளவு தான் இடைவெளி இருந்தது... உடல் உரசி கொள்ளும் தூரம் தான்... ஆனால் மனம் உரசாத காரணத்தால் அவன் சட்டென்று அவளை விட்டு விலகி நின்றான்...

"இப்ப புரியுதா...? நான் யாருன்னு...?"

"உங்களை மாதிரியான ஆம்பிளைங்களுக்கு வேறு என்ன தெரியும்...?" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு கூறியவள் அறையை விட்டு வெளியில் சென்றுவிட்டாள்...

'இவளை எப்படித் தான் சமாளிப்பதுன்னு எனக்குத் தெரியலையே...' அவன் எப்போதும் போல் மனதிற்குள் புலம்பியபடி உடை மாற்ற ஆரம்பித்தான்... ஆனால் மனைவி பேசிய வார்த்தைகள் அவனது நெஞ்சில் எரிமலையாய் கனன்று கொண்டிருந்தது...

******************

'என்ன எழவு ட்ரெசுடா இது...? இந்த வேகாத வெயிலுல இதைப் போட்டுக்கோணுமாக்கும்... முடியலை எஞ்சாமி... சத்யாவுக்கே சத்யசோதனையாடா...?' சத்யமூர்த்தி மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டே வெளிர் நீலநிற சட்டையையும், அடர் ஊதா நிற பேண்ட்டையும் அணிந்து கொண்டான்...

அவன் பேண்ட் அணிந்து கொண்டு நடந்து வந்த அழகை கண்டு அவனது நண்பன் நடராஜன் வாய்விட்டுச் சிரித்தான்...

"என்ற பொழைப்பு உனக்குச் சிரிப்பா இருக்குதாக்கும்... உன்ன கொன்னு போடுவேன்டா..." என்று சத்யா அவனது கழுத்தை நெறிக்க வர...

"ஹா ஹா... உன்ற பருப்பு எல்லாம் என் கிட்ட தான்டி வேகும்... அந்த அல்லிராணி கிட்ட வேகாதுடி..." என்றவன் எதையோ நினைத்து விழுந்து விழுந்து சிரித்தான்...

"சொல்லிட்டு சிரிச்சு தொலைடா..." என்று சிடுசிடுத்தான் சத்யமூர்த்தி...

"ஊரு, உலகத்துல எத்தனையோ கம்பெனிங்க இருக்கு... ஆனா உனக்குப் போயும் போயும் இந்தக் கம்பெனியில் வேலை கிடைச்சிருக்கே... அதை நினைச்சேன் சிரிச்சேன்..."

"போடா புண்ணாக்கு..." என்ற சத்யமூர்த்தி மேலே கெட்ட வார்த்தைகளால் நண்பனை அர்ச்சிக்கத் துவங்கினான்... அதைப் புன்னகை மாறாமல் சாந்தம் தழுவும் முகத்துடன் கேட்டுக் கொண்டிருந்த நடராஜனை சந்தேகமாய்ப் பார்த்தபடி திட்டுவதை நிறுத்தியவன்,

"எருமை மாட்டுல மழை பெஞ்ச மாதிரி எதுக்குடா இப்படி இளிக்கிற...?" அதற்கும் அவன் நண்பனிடம் காய்ந்தான்...

"இனி இது தான் எனக்கு நிரந்தரம்... இடுக்கண் வருங்கால் நகுக..."

"உனக்கு வேற ஜோலி கழுதை இல்லை... போடா..." என்றவன் தான் வேலை செய்யும் நிறுவனத்திற்குக் கிளம்பி சென்றான்...

இரவு பணி முடிந்து காலையில் வந்து பொறுப்பேற்கும் சக காவலாளிக்காகக் காத்திருந்தார் பெரியசாமி... அந்நேரம் சத்யமூர்த்திக் காவலாளி உடை அணிந்து வருவதைக் கண்டு அவனை மேலும், கீழும் ஒருமாதிரியாய் பார்த்தார்...

நேற்று அவன் உள்ளே சென்ற பந்தாவை கண்டு அவர் வேறு மாதிரியாக நினைத்துக் கொண்டார்... ஆனால் இப்போது அவனது நிலையைக் கண்டு அவருக்குச் சிரிப்பு பீறிட்டது...

"இந்த வேலை பார்க்கிறதுக்குத் தானா நேத்து நீ அவ்வளவு தெனாவெட்டா வந்தியா...?"

"எந்த வேலையா இருந்தா என்னங்கண்ணா... செய்யும் தொழிலே தெய்வம்... இப்போதைக்கு எனக்குச் சோறு போட போகிற இந்தத் தொழில் எனக்குத் தெய்வத்துக்குச் சமானம்..." என்றவன் அவரை அனுப்பி வைத்து விட்டு தனது பணியைச் செவ்வனே தொடங்கினான்...

சரியாக எட்டு மணிக்கு பத்மவர்ஷினியின் கார் அங்கு வந்து நின்றது... அதைக் கண்டதும் சத்யமூர்த்தி ஓடி வந்து பிரமாண்டமான அந்த வாயிற் கதவை திறந்து விட்டான்... காரின் உள்ளிருந்து அவளால் அவனைப் பார்க்க முடியும்... ஆனால் அவனால் அவளைப் பார்க்க முடியாது... அது அவளது கார் என்றும் அவனுக்குத் தெரியாது... அதனால் அவன் கதவை பிடித்துக் கொண்டு காரை உற்று நோக்கி கொண்டிருந்தான்...

கார் வாயிலை தாண்டி செல்லாது அப்படியே தேங்கி நின்றது... அவன் குழப்பத்துடன் காரை பார்த்தான்... அப்போது பின்புறம் இருந்த கார் கண்ணாடி கீழே இறக்கி விடப்பட்டு அவனுக்குத் திவ்ய தரிசனம் தந்தாள் அவனது முதலாளியம்மா... கண்ணில் இருந்த கூலர்சை மேலேற்றி விட்டுக் கொண்டு திமிராய் திரும்பியவள் சொடக்கிட்டு அவனை அருகில் வரும்படி அழைத்தாள்...

'வர்றது காருல... இதுல இந்த அம்மிணி எதுக்குக் கருப்பு கண்ணாடி போட்டுக்கிட்டு வருது...?' அந்தக் கணம் அவனது மனதில் இந்த அதிமுக்கியமான கேள்வி எழுந்தது... அதை அவளிடம் கேட்கவா முடியும்...? அதனால்,

"என்னையவா கூப்பிட்டிங்கம்மிணி...?" என்று அவன் நின்ற இடத்தில் இருந்து அசையாது சத்தம் போட்டு கேட்க...

"ம்ப்ச்..." என்று சலிப்பாய் சத்தம் கொடுத்தவள் மீண்டும் சொடக்கிட்டு அவனை அழைத்தாள்...

இப்போது அவனுக்கு நன்கு புரிந்தது அந்த அழைப்பு தனக்கானது என்று... வேண்டுமென்றே அவன் அவளை நோக்கி நிதான நடையுடன் வந்தான்... அதைக் கண்டு அவளது இரத்த அழுத்தம் ஏகத்திற்கும் எகிறியது... அருகில் வந்தவனிடம் கோபமாய் அவள்,

"கதவை திறந்து விடறது மட்டும் செக்யூரிட்டி வேலையில்லை... முதலாளியை பார்த்தா சல்யூட் அடிக்கிறதும் உன்னோட வேலை தான்... என்ன புரிஞ்சதா...?"

"ம்... நல்லாவே புரிஞ்சதுங்க அம்மிணி..." என்றவன் ஒருவிதமான சிரிப்புடன் தலையை எல்லாப் பக்கமும் உருட்டினான்...

"ஃகால் மீ மேடம் ஆர் மேம்... காட் இட்...?" என்று எரிச்சலுடன் அவள் உரைக்க...

"காட்ன்னா கடவுளுதானுங்க அம்மிணி.... எனக்குத் தெரிஞ்ச இங்கிலீசில் அப்படித் தான் படிச்சதா ஞாபகம்..."

'உன் இங்கிலீசில் தீயை வச்சு கொளுத்த...' அவள் மனதில் எரிச்சலுடன் முணுமுணுத்து கொண்டாள்...

"சல்யூட் அடிக்கிறது என் வேலை தான்... ஆனா காருக்குள்ள யாருன்னு தெரியாம நான் எப்படிங்க அம்மிணி சல்யூட் அடிக்கிறது...?"

அவனது வார்த்தைகளில் அவள் அவனைக் கூர்ந்து நோக்கினாள்... அப்போது அவனும் அவளை உற்று நோக்கி கொண்டே தணிந்த குரலில்,

"இந்தச் சத்யா யாருக்கும் தலைவணங்க மாட்டான்... ஆனா அம்மிணி உன் கிட்ட மட்டும் அவன் தலைவணங்குவான்... ஏன்னா நீ..."

"ஸ்டாப் இட் சத்யா..."

அவனது முகத்துக்கு நேரே கை நீட்டி அவன் பேசுவதைத் தடை செய்தவள், "நீ வேலைக்காரன்ங்கிறதை அப்பப்போ மறந்துட்டு பேசுற சத்யா..."

"நான் வேலைக்காரன்னு எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... ஆனா நீ தான் உன் உயரத்தில் இருந்து கீழே இறங்கி வந்து என் கிட்ட பேசிக்கிட்டு இருக்க அம்மிணி..."

அவன் கூறியதும் நிஜம் அவளைச் சுட ஓட்டுநரிடம் கம்பீரமாக, "காரை எடு..." என்று கட்டளையிட... அடுத்த நொடி அந்த வெளிநாட்டுக் கார் விருட்டென்று கிளம்பி உள்ளே சென்றது...

அவள் தன்னைப் பழிவாங்க தான் இந்த வேலையைக் கொடுத்து இருக்கிறாள் என்பது அவனுக்கு நன்கு தெரியும்... அவளிடம் திமிர் காட்டும் அவனைப் பணிய வைக்கும் முயற்சி இது... ஆனால் இதற்காக எல்லாம் அவன் அஞ்ச மாட்டான்... அவனுக்கு அவனது காரியம் பெரிது... அது கை கூடுவதற்காக வேண்டி அவன் தலைகுனிந்து தான் போக வேண்டும்... அதே நேரம் அவன் தன் தன்மானத்தை இழக்கவும் தயாராக இல்லை...

'பார்க்கலாம் அம்மிணி நீயா...? நானான்னு...' அவன் மனதிற்குள் அவளிடம் சவால் விட்டுக் கொண்டான்...

ஆனால் அந்தக் கணம் சத்யமூர்த்திக்கு தெரியவில்லை... அவனது அம்மிணி பத்மவர்ஷினி அவனது தன்மானத்தைச் சீண்ட முடிவு செய்து விட்டதை...!

தனது அறைக்கு வந்த பத்மவர்ஷினி சிசிடிவி மூலம் சத்யமூர்த்தியை கவனித்துக் கொண்டிருந்தாள்... கஞ்சியைக் குடித்தது போல் விறைப்பாக நின்று கொண்டு காவல் பணியைச் செய்து கொண்டிருந்தவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது... வெகுநாட்களுக்குப் பின் அவளது இதழ்களில் புன்னகை நெளிந்தது...

அப்போது சத்யமூர்த்தியை நோக்கி ஒரு இளம்பெண் வருவது கண்டு அவளது கண்கள் கூர்மையடைந்தது...

கூடவே பெரியவர் ஒருவரும்... கணினி திரையைப் பெரிதாக்கி அவர்கள் யாரென்று உற்று நோக்கிய போது அவளுக்கு அவர்களை நன்கு அடையாளம் தெரிந்தது... அவர்கள் இருவரும் ராஜலிங்கம், சந்திரமதி என்று... இவர்களுக்கு இங்கே என்ன வேலை...? என்று அவள் யோசித்தபடி கணினி திரையை வெறித்துப் பார்த்திருந்தாள்...

அப்போது சந்திரமதி மட்டும் சத்யமூர்த்தியிடம் தனித்துப் பேசுவதைக் கண்டதும் அவள் பட்டென்று கணினியை அணைத்து விட்டுக் கண்களை மூடி கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள்...

"மதி நீ எங்கே இங்கே...?" எதிர்பாராது அவளை இங்கே கண்டதும் சத்யமூர்த்திக்கு ஆச்சிரியமாய் இருந்தது... அதே சமயம் சந்தோசமாகவும் இருந்தது...

"இந்த வேலைக்குத் தான் ஊரில் இருந்து வந்தியா மாமா...?" அவனது நிலை கண்டு அவளுக்குக் கண்ணீர் வரும் போலிருந்தது...

"அதை விடு புள்ள... நீ எப்படி இங்கே வந்த...?"

"நான் இங்கே இருக்கிற காலேஜில் தான் எம்ஈ சேர்ந்திருக்கேன்..."

"ரொம்பப் படிச்சிட்டு போகாதே மதி... அப்புறம் மாப்பிள்ளை கிடைக்கிறது ரொம்பக் கஷ்டம்..."

"அதான் நீ இருக்கியே..."

அவன் மறுத்து ஏதோ சொல்ல முயன்ற போது ராஜலிங்கம் அங்கு வந்தார்...

"சத்யா நான் ஊருக்கு அவசரமா கிளம்பணும்ப்பா... நீ அப்பப்போ காலேஜுக்கு போய் நம்ம மதியை பார்த்துக்கோ..."

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன் ஐயா... நீங்க கவலைப்படாம ஊருக்கு கிளம்புங்க..." அவன் பவ்யத்துடன்

கூற... இருவரும் அவனிடம் இருந்து விடைப்பெற்று சென்றனர்...

அந்தக் காட்சியைத் தனது அறையில் இருந்து பார்த்து கொண்டிருந்தாள் பத்மவர்ஷினி... இதே சத்யமூர்த்தித் தன்னிடமும், தனது தந்தையிடமும் வெளிப்படையாய் காட்டும் உதாசீனத்தை நினைத்து பார்த்தவளுக்கு ஆத்திரம் வந்தது... அந்தக் கணம் சத்யமூர்த்தி மட்டும் அவள் எதிரில் இருந்திருந்தான் செத்திருப்பான்...

*********************

ஜீவா வீட்டிற்குள் நுழையும் போதே வெறுமையாக உணர்ந்தான்... எப்போதும் வாசலில் வந்து நின்று கொண்டு 'மாமா' என்று வரவேற்கும் மனைவி சுபிக்ஷாவை இன்று அங்குக் காணவில்லை... அந்த வெறுமையான மனநிலையுடன் உள்ளே வந்தவன் வரவேற்பறை சோபாவில் அமர்ந்த போது தான் கவனித்தான், அங்கிருந்த டீப்பாய் மீதிருந்த காபி கோப்பையை... அவன் வரவை உணர்ந்து அவனது மனையாள் காபி கொண்டு வந்து வைத்து விட்டு போயிருக்கிறாள்... அவனுக்குப் பிடித்த விதத்தில் தான் காபி கலந்து இருப்பாள் என்று அவனுக்கு நன்கு தெரியும்... ஆனால் பிடித்தமான விதத்தில் அவளது கைகளால் அவனிடம் கொடுக்காது முகம் திருப்புகிறவளை என்ன செய்வது என்று தெரியாது அவன் அந்தக் காபியை எடுத்துப் பருகினான்...

மனைவி மீது எந்தத் தவறும் இல்லை... தவறு எல்லாம் அவன் மீது தான்... அதற்கு என்று அந்தத் தவறை செய்ததற்காக எல்லாம் அவன் வருந்தவில்லை... 'நான் இப்படித்தான்' என்று அவனும் இறுமாப்புடன் அமைதியாக இருந்தான்... எல்லாம் அவனது செல்ல மகள் பத்மவர்ஷினிக்காக... அவளுக்காக இந்த உலகத்தையே அவளது காலடியில் வைக்கத் துடிக்கும் பாசமான தகப்பன் அவன்... அப்படிப்பட்டவன் அவளுக்காக இதைச் செய்ய

மாட்டானா...? மகள் விசயத்தில் மனைவி என்ன, அந்தக் கடவுள் வந்து சொன்னால் கூட அவன் கேட்க மாட்டான்...

உருவத்தில் மட்டுமல்லாது குணத்திலும் தனது தாயை கொண்டிருக்கும் மகள் தொழிலிலும் அவர்கள் இருவரையும் விடத் திறமை மிக்கவளாக இருந்தாள்... தொழிலில் அவனது தாய் ருத்ரஸ்ரீ எட்டடி பாய்ந்தாள் என்றால், அவன் பதினாறு அடி பாய்ந்தான்... ஆனால் அவனது மகள் இவர்கள் இருவரையும் விடப் பல மடங்கு அடிகள் ஆவேசம் கொண்டு பாய்ந்தாள்... எதிரிகளை உக்கிரம் கொண்டு அழித்தாள்... இந்த இருபத்தைந்து வயதில் அவளது சாதனை கணக்கிட முடியாதது...

மூத்தவள் சுஜீதா, இரண்டாவது மகன் யுகேன் இவர்கள் இருவரையும் விடத் திறமை வாய்ந்தவள் பத்மவர்ஷினி...

கடந்த காலத்தை நினைத்து பார்த்தவன் பின் மெல்ல எழுந்து தங்களது அறைக்குச் சென்றான்... அங்குக் கட்டிலில் அமர்ந்து துணிகளை மடித்துக் கொண்டிருந்த மனைவி அருகில் வந்தமர்ந்தான்... அவளோ அவனை அமைதியாக ஏறிட்டு பார்த்துவிட்டுப் பின் தனது வேலையைச் செவ்வனே செய்தாள்... அதில் அவனது மனம் சுணங்கியது...

"நான் என்ன தப்பு பண்ணினேன் பேபி...? எதுக்கு இப்படி முகத்தை உம்முன்னு தூக்கி வச்சிக்கிட்டு இருக்க..." பாவம் போல் கேட்ட கணவனது முகத்தில் டன் கணக்கில் பால் வடிந்ததைக் கண்டு பாவம் பார்க்காது முறைத்தாள் சுபிக்ஷா...

"அப்பாவும், மகளும் தொழிலில் பண்ணாத தப்புகள் எதுவும் இருக்கா என்ன...? உங்க ரெண்டு பேரையும் என்ன செஞ்சால் தகும்...?" என்று அடக்கப்பட்ட கோபத்தில் அவள் பல்லை கடித்தாள்...

"நான் தான் இரண்டு குழந்தைகள் போதும்ன்னு சொன்னேன்ல... நீ தான் மூணாவது வேணும்ன்னு பெத்துக்கிட்ட... இப்போ என்னைக் கிடந்து குத்தம்

சொல்றியா...?" என்று கணவன் அதற்கும் அவளை நொடித்துக் கொண்டான்...

"விவஸ்தை கெட்ட மனுசன்... நான் என்ன கேள்வி கேட்டா என்ன பதில் சொல்லுறீங்க...?" என்று அவள் வெட்கப்பட்டுக் கொண்டே முணுமுணுக்க... அதில் தைரியம் வர பெற்றவனாய் அவன் அவள் அருகில் நெருங்கி அமர்ந்து கொண்டு,

"சாரிடி பேபி... நான் பண்ணியது தப்பு தான்..."

"சின்னத் தப்பு இல்லை, ரொம்பப் பெரிய தப்பு..." என்று கண்டிப்புடன் கூறியவள்,

"சத்யா நம்ம கம்பெனியில், அதுவும் செக்யூரிட்டி வேலை பார்ப்பது உங்களுக்குத் தெரியுமா...?"

மனைவி கூறியதை கேட்டு அவன் மனதிற்குள் திடுக்கிட்டுப் போனான்... அவன் ஒரு வாரம் மும்பையில் இருந்து விட்டு இன்று தான் சென்னை திரும்பியிருக்கிறான்...

"என்ன சொல்ற பேபி...?"

"ஆமாம், சோத்துக்கு உப்பில்லை... சுரைக்காய்க்கு பருப்பில்லைன்னு சொல்றேன்... உங்க சின்ன மகள் ராங்கிக்காரி பண்ற அட்டகாசத்தை என்னால் தாங்க முடியலை... முதல்ல அந்தப் பையனை ஊருக்கு அனுப்புற வழியைப் பாருங்க..."

முதல்முறையாக ஜீவாவின் மனதில் பெரும் சஞ்சலம் தோன்றியது... மகளின் இந்த முடிவு எங்கே போய் முடிய போகிறதோ என்று...

"பேபி..."

கணவனது மனதின் தவிப்பை அவனின் கண்களில் கண்டாளோ அந்த நல்ல மனையாள்...! அடுத்தக் கணம் சுபிக்ஷா கணவனை ஆறுதலாய் தனது மடி சாய்த்து

அவனது தலையைக் கோதி கொடுத்தபடி அந்தப் பாடலை பாடினாள்...

"பொன்னை, உயர்வை, புகழை விரும்பிடும்
பொன்னை, உயர்வை, புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்ன தகாதென்று
நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா,
நின்னைச் சரணடைந்தேன்"

அதில் அவனது மனம் கொஞ்சம் கொஞ்சமாய் அமைதியுற்றது... ஆனால் முற்றிலுமாக இல்லை...!!!

*****************

அன்று சத்யமூர்த்திக்கு விடுமுறை... அதனால் தங்கையைப் பார்க்க அவளது வீட்டிற்கு வந்திருந்தான்... அவன் அந்தப் பெரிய பங்களாவை அண்ணாந்து பார்த்தபடி உள்ளே நுழைந்தான்... தங்கையைத் திருமணம் முடித்துக் கொடுத்த போது அவன் இங்கு வந்தது... அதன் பின் இன்று தான் அவன் இங்கு வருகிறான்... வழக்கம் போல் ஒட்டாத தன்மையுடன் அவன் அந்த வீட்டினுள் நுழைந்தான்... வரவேற்பறையில் அமர்ந்திருந்த ஜீவா இவனை முறைத்துப் பார்த்தான்...

'இந்தா ஆரம்பிச்சிட்டாருல்ல... முதல்ல அப்பா, அடுத்து அவரோட மகள்... இந்த ரெண்டு கொடுமைக்குத் தான் நான் இங்கு வர்றது கிடையாது...' என்று அவன் தனது விதியை நொந்து கொண்டே உள்ளே நுழைந்தான்...

"அடடே, சத்யாவா...? வாப்பா வா..." புன்னகை முகமாய் வரவேற்றான் ஜெகன்...

"ஆமாம் தாத்தா... நல்லாயிருக்கீங்களா...?" என்று கேட்டபடி அவன் அவரது காலில் விழுந்து வணங்கி விட்டு பணிவுடன் எழுந்து நின்றான்...

"இங்கே உட்காருப்பா..." ருத்ரஸ்ரீ தங்களது பக்கத்தில் அவனை அமர சொல்ல...

அந்நேரம் மாடிப்படியில் இருந்து 'ஹை ஹீல்ஸ்' சப்தமிட திமிராய் நடந்து வந்து கொண்டிருந்தாள் பத்மவர்ஷினி... 'டேய் அவளைத் திரும்பி பார்க்காதே, வம்பை விலை கொடுத்து வாங்காதே' என்று கூவிய அவனது மனசாட்சியின் கதறலை மீறி அவன் அவளைத் திரும்பி பார்த்தான்... அவளும் அவனைக் கூர்ந்து நோக்கியபடி தான் வந்து கொண்டிருந்தாள்...

"குட்மார்னிங் தாத்தா, பாட்டி, டாட்..." என்றபடி அங்கு வந்தவள் அவனை அலட்சியமாய்ப் பார்த்தபடி கால் மேல் கால் போட்டு அமர்ந்து கொண்டு,

"நம்ம கிட்ட வேலை பார்க்கும் வேலைக்காரங்களை நமக்குச் சரிசமமா உட்கார வைக்கக் கூடாது பாட்டி... செருப்பை வீட்டுக்கு வெளியில் தான் வைக்கணும்..." என்று அகந்தையுடன் கூறியவளை கண்டு அவனது விழிகள் இடுங்கியது...

அடுத்தக் கணம் சிறிதும் தாமதியாது அவன் அவள் அருகிலிருந்த இருக்கையில் அமர்ந்து அவளை மாதிரியே கால் மேல் கால் போட்டுக் கொண்டு அவளைப் பார்த்து நக்கல் சிரிப்புடன்,

"நான் இந்த வீட்டு மாப்பிள்ளை... வேலைக்காரன் இல்லை..." என்றான் அவளுக்குக் குறையாத திமிரில்...

அவனது பேச்சு கேட்டு அவளது விழிகள் ஒரு நொடி சுருங்கி மீண்டும் இயல்பானது... ஆனால் அதில் இருந்த ரௌத்திரம் அவனுக்கு மட்டுமே தெரியும்...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 3

"வாட், நீ என்னுடைய மாப்பிள்ளையா...?"

சத்யமூர்த்தியின் பேச்சை கேட்ட ஜீவா அதிர்ந்து போய் இருக்கையில் இருந்து எழுந்துவிட்டான்... ஆனால் சத்யமூர்த்தியோ ஜீவாவை பார்க்காது பத்மவர்ஷினியை பார்த்துக் கொண்டிருந்தான்... நெருப்பு போன்று தகித்த அவளது விழிகளின் ஆத்திரத்தை அவனது விழிகள் குளுமையுடன் எதிர் கொண்டது...

"இதுக்கான விளக்கத்தை உன் அப்பாரு கிட்ட நீயே சொல்லிரு அம்மிணி..." என்று மேலும் அவளது இரத்த அழுத்தத்தை அதிகரித்தவன்,

"ஏன்னா நீ என்னை விடப் புத்திசாலி பாரு... அதுக்காகத் தான் சொன்னேன் அம்மிணி..." என்று கூசாமல் பொய் கூறி தன்னைக் குளிர்வித்தவனைக் கண்டு அவளால் முறைக்க மட்டுமே முடிந்தது...

"வர்ஷூ, இப்படி எல்லாம் நீ பேசினே தோளுக்கு மேல் வளர்ந்த மகள்ன்னு கூடப் பார்க்க மாட்டேன்... அடிச்சிருவேன் அடிச்சு... சத்யா நம்ம அகலோட அண்ணா... அதுக்கான மரியாதையை நீ கொடுத்தாகணும்..." சுபிக்ஷா மகளைக் கண்டிக்கும் போதே,

"ஜீவா, இப்போ எதுக்கு இப்படிக் கோபப்படுற...?" என்றபடி அங்கே வந்தான் செல்வகுமார்... உடன் அவனது மனைவி ரம்யாவும் வந்தாள்...

அவர்களது மகன் கிருஷ்ணா மற்றும் மருமகள் பூஜா இருவரும் தங்களது குழந்தைகளுக்காக வெளிநாட்டில் குடியேறி விட்டனர்... இவர்கள் இருவர் மட்டுமே இங்கு இருந்தனர்... செல்வா மனைவியை விட்டு விட்டு கூட இருந்து விடுவான்... ஆனால் அவனது நண்பன் ஜெகனை விட்டிருக்க அவனால் முடியாது...

"நம்ம அகல்யா இந்த வீட்டு மருமகள்... அப்போ சத்யா இந்த வீட்டு மருமகன் தானே... அதைத் தான் சத்யா

மாப்பிள்ளைன்னு சொல்லியிருக்கிறான்... அப்படித் தானே சத்யா...?" என்று செல்வா சத்யமூர்த்தியை பார்த்து கேட்க... அதைக் கேட்டு நிம்மதி பெருமூச்சு விட்டவன்,

"சரியா சொன்னீங்க தாத்தா... இதுக்குப் போய் அப்பாவும், மகளும் என்னை அடிக்க வர்ற மாதிரி கோபமாய்ப் பார்க்கிறாங்க..." என்று செல்வாவிடம் புகார் வாசித்தவன் எழுந்து வந்து அவர்கள் இருவரது கால்களில் விழுந்து வணங்கினான்...

"நல்லாயிருப்பா..." என்று வாழ்த்தியபடி செல்வா, ரம்யா அங்கு வந்தமர்ந்தனர்...

மீண்டும் சத்யமூர்த்திச் சோபாவில் வந்தமர்ந்த போது அவனது உடல் அருகிலிருந்த பத்மவர்ஷினியின் மேனியோடு சிறிது உரசிவிட்டது... அவ்வளவு தான் அவள் சட்டென்று எழுந்து நின்றுவிட்டாள்... அவனுக்குமே அப்போது தான் தனது தவறு புரிந்தது... உடனே அவனும் எழுந்து விட்டான்... அவளது முகத்தைப் பார்க்க முடியாத சங்கடம் அவனுள்... அதனால் அவன் வேறு எங்கோ பார்த்தபடி நின்றிருந்தான்...

"அண்ணா..." அகல்யாவின் குரலில் அவன் முகம் மலர்ந்தவனாய் தங்கையைத் திரும்பி பார்த்தான்...

கணவன் யுகேனுடன் தங்கை நடந்து வந்த காட்சி அவனின் மனதிற்கு இதமாக இருந்தது... தங்கையைப் போல் அண்ணன் இல்லை போலும்... அந்த மட்டில் அகல்யா தப்பித்தாள் என்றே அவனுக்குத் தோன்றியது...

இரண்டே எட்டில் தங்கை புறம் சென்றவன், "எப்படிம்மா இருக்க...?" விழிகள் கலங்க பாசத்துடன் கேட்டான்...

"அண்ணா..." என்றபடி அகல்யா அவனை அணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்... வெகுநாட்களுக்குப் பின் பிறந்த வீட்டுச் சொந்தத்தை நேரில் பார்த்த நெகிழ்ச்சி அவளுள்...

"கல்யாணம் கட்டி கொடுத்தா போதும்ன்னு என்னைத் துரத்தி விட்டுட்டீங்கல்ல..."

"த்ச்சு அகல், என்னம்மா இது...? அப்படி நாங்க நினைப்போமா...? அப்படி எல்லாம் இல்லைடா..." அவன் தனது தங்கையின் விழிகளைத் துடைத்துத் தேற்றினான்...

"அப்போ ஏன் இவ்வளவு நாளா நீங்க யாரும் என்னைப் பார்க்க வரலை...?"

"கொஞ்சம் வேலை இருந்ததும்மா அகல்..." மூச்சு விடக் கூட முடியாதபடி அதிக வேலை இருந்ததும் ஒரு காரணம் தான்...

அதைக் கேட்டதும் அகல்யா கணவனைத் திரும்பி பார்த்து முறைத்தாள்... 'எல்லாம் உன்னால் தான்' என்கிற குற்றச்சாட்டு அவளது விழிகளில் பகிரங்கமாய்த் தெரிந்தது... அதைக் கண்டு யுகேன் 'போச்சுடா' என்று அலறியபடி மானசீகமாகத் தலையில் கை வைத்தான்...

"மச்சான், உங்க கண்ணுக்கு உங்க தங்கச்சி மட்டும் தான் தெரிவாளா...? நான் எல்லாம் தெரிய மாட்டேனா...? நான் தான் பாவப்பட்ட உங்க வீட்டு மாப்பிள்ளை... உங்களுக்கு என்னை அடையாளம் தெரிகிறதா...?"

யுகேன் மனைவியின் கோபத்தில் இருந்து தப்பிக்க அவளின் அண்ணனிடம் சரண் புகுந்தான்...

"என்ன மாப்பிள்ளை, இப்படிக் கேட்டுட்டீங்க...? அகலை விட நீங்க தான் எங்களுக்கு முக்கியம்..." என்ற சத்யா தங்கையைத் தள்ளி நிறுத்தி விட்டு யுகேனை கட்டிப்பிடித்துக் கொண்டான்...

மச்சானின் தோள்வளைவில் இருந்து எட்டிப்பார்த்த யுகேன் மனைவியைக் கண்டு கண்சிமிட்ட, எல்லோர் முன்பும் கணவனைக் கடிய முடியாது அவள் தலை குனிந்தாள்... வெட்கத்தில் அல்ல கோபத்தில்...

'இப்போ உன்னைப் பார்க்க எவ்வளவு நல்லாயிருக்கு...' மனைவியை நினைத்து மனதிற்குள் பெருமூச்சு விட்டபடி

யுகேன் சத்யாவின் அணைப்பில் இருந்து விலகினான்...

பத்மவர்ஷினி இவர்களை வெறுமையான விழிகளுடன் பார்த்து கொண்டிருந்தாள்... மற்றவர்கள் சந்தோசமாகப் பார்த்து கொண்டிருந்தனர்... ஜீவா மனம் ஒப்பாது அமர்ந்திருந்தான்... அவனுக்கு அகல்யா தனது வீட்டிற்கு மருமகளாக வந்ததே பிடிக்கவில்லை... அவன் மனதிற்குள் மகனின் அவசர புத்தியை கடிந்தபடி அமர்ந்திருந்தான்...

"பாட்டி, சாப்பிட போகலாமா...?" என்று பத்மவர்ஷினி தனது பாட்டி ருத்ரஸ்ரீயை அழைத்தாள்...

அவளுக்குத் தனது அன்னை, அன்னை வழி பாட்டியை விடத் தனது தந்தையின் அன்னையை மிகவும் பிடிக்கும்... ராணியின் கம்பீரத்துடன் இன்றும் தொழில்களுக்குத் தகுந்த ஆலோசனை கூறும் பாட்டி என்றுமே அவளுடைய பேவரைட்...

"வா வர்ஷூ..." ருத்ரஸ்ரீ பேத்தியிடம் சொன்னவள் மற்றவர்களிடம்,

"எல்லோரும் சாப்பிட வாங்க... சத்யா நீயும் தான்ப்பா..." என்க...

"இல்லை பாட்டி... நான் சாப்பிட்டுட்டு தான் வந்தேன்..." என்று அவன் மறுத்தான்... அவர்களது வீட்டில் கை நனைப்பதற்குக் கூட அவனுக்கு விருப்பமில்லை... அவனை மேலும் கீழுமாய் ஒரு பார்வை பார்த்தபடி பத்மவர்ஷினி நடந்து செல்ல...

'நான் தான் சாப்பிட வரலைன்னு சொல்லிட்டேனே... பின்னே எதுக்கு இந்த அம்மிணி இந்த முறை முறைக்குது...?' என்று அவன் மனதிற்குள் நினைத்தபடி அவளைப் புரியாது பார்த்திருந்தான்...

"அதெல்லாம் பேச கூடாது... சாப்பிட வா சத்யா..." என்று அவனை வற்புறுத்தி அழைத்தாள் ருத்ரஸ்ரீ...

"அண்ணா, எனக்காக வாண்ணா..." தங்கையும் வற்புறுத்தி அழைக்கவும் அவன் மறுக்க இயலாது உணவு மேசையை நோக்கி நடந்தான்...

யுகேனின் அருகில் அமர்ந்த சத்யமூர்த்தி அப்போது தான் கவனித்தான், தனக்கு மறுபக்கம் அமர்ந்திருந்த பத்மவர்ஷினியை... தெரியாமல் உடல் உரசியதற்கே கோபம் கொண்டு எழுந்தவள் அவள்... அப்படிப்பட்ட அவளின் அருகில் அமர அவனுக்குமே விருப்பமில்லை... அதனால் வேறு நாற்காலியில் அமர எண்ணியவனாய் அவன் அங்கிருந்து எழ முயன்ற போது,

"வீணே சீன் க்ரியேட் பண்ணாம உட்காரு..." பத்மவர்ஷினி அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினாள்...

"நீ பண்ணுற லொள்ளை பார்க்க சகிக்காம தான் எழுந்தேன்..." பதிலுக்குக் கவுண்டர் கொடுத்து அவளது வாயை அடைத்தவன் ஒன்றும் அறியாதவன் போல் மீண்டும் அமர்ந்து கொண்டான்...

'இவனை...' அவள் மனதில் அவனைத் தாளித்தபடி தனது காலை உணவை உண்டாள்...

இரு முட்டை ஆம்லெட், ஆரஞ்சு பழச்சாறு மட்டும் உண்டவளை அவன் மேலும் கீழும் பார்த்து வைத்தான்... 'இப்படிக் கொஞ்சமா சாப்பிடறதால தான் அநியாயத்துக்கு இந்த அம்மிணி ஒல்லியா இருக்கோ...' மனதில் வியப்பாய் நினைத்தபடி அவளைப் பார்த்தான்...

"அண்ணா, சாப்பிடு..." தங்கையின் குரலில் அவன் தன் முன்னால் இருந்த உணவில் கவனத்தைச் செலுத்தினான்...

அழகாய் புசுபுசுவென்று உப்பியிருந்த பூரியும், தொட்டுக்க வைக்கப்பட்டிருந்த மஞ்சள் நிற கிழங்கு மசாலாவும் அவனது பசியைக் கண்டபடி தூண்டிவிட்டது... அவன் அவசர அவசரமாக உண்ண ஆரம்பித்தான்... பசி காதை அடைத்தது அவனுக்கு மட்டும் தான் தெரியும்... காலை

உணவிற்காக அவன் அம்பது ரூபாயை தனியே எடுத்து வைத்திருந்தான்... அந்த நேரம் அவனது கண்களில் மல்லிகை பூ தென்பட, அதைத் தங்கைக்காக ஆசையுடன் வாங்கி வந்துவிட்டான்... அதை இங்கே சொல்ல முடியாது என்பதால் மரியாதை நிமித்தமாக நாசுக்காக அவன் உணவை மறுத்தான்...

"என்னம்மோ சாப்பிட்டு வந்த மாதிரி பெருசா பில்டப் எல்லாம் கொடுத்த... ஆனா நீ சாப்பிடும் வேகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியலையே..." கையிலிருந்த பழச்சாறு கோப்பையைக் கொண்டு வாயை மறைத்தபடி மெல்லிய குரலில் அவனிடம் முணுமுணுத்தாள் பத்மவர்ஷினி... அவளது வார்த்தையில் அத்தனை கிண்டல் இருந்தது...

"திடும்ன்னு வேலைக்குக் கிளம்பி வான்னு சொன்னால் நான் பணத்துக்கு எங்கே போக அம்மிணி...? கையில் காசு இருந்தால் தானே வாயில் சோறு வைக்க முடியும்..."

அவன் கிராமத்தான்... அதனால் இயல்பாய் தனது நிலையைச் சொல்லியபடி அவன் உணவு உண்டு கொண்டிருந்தான்... தனது ஏழ்மையைச் சொல்ல அவன் சிறிதும் தயங்கவில்லை... அதற்கு அவளும் ஒரு காரணமல்லவா... அதனால் தான் அவன் அப்படிச் சொன்னது... ஆனால் அவள் தான் திகைத்து போய் அவனைத் திரும்பி பார்த்தாள்... அவனோ இவள் புறம் திரும்பாது உணவை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தான்... பத்மவர்ஷினி சுதாரித்துக் கொண்டு தனது உணவில் கவனத்தைச் செலுத்தினாள்...

உண்டு முடிந்ததும் பெரியவர்கள் நால்வரும் தங்களது அறைக்குச் சென்றுவிட, சிறியவர்கள் நால்வருடன் ஜீவா, சுபிக்ஷா இருவர் மட்டும் இருந்தனர்... இது தான் பேசுவதற்குச் சரியான சந்தர்ப்பம் என்று நினைத்த சுபிக்ஷா மகளிடம் பேச துவங்கினாள்...

"வர்ஷூ, நீ சத்யாவை வேலையில் இருந்து விடுவிச்சிரு... அவனை அவனோட ஊருக்கு திரும்ப அனுப்பி வை..."

"அண்ணா..."

மாமியாரின் பேச்சின் அர்த்தத்தை உணர்ந்த அகல்யா அதிர்ந்து போய்ச் சகோதரனை பார்த்தாள்... சத்யமூர்த்திச் சென்னையில் வேலைக்குச் சேர்ந்தது அவளுக்குத் தெரியும்... ஆனால் இங்கு வேலைக்குச் சேர்ந்தது பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது...

'பேசாமலிரு...' என்று தங்கையிடம் கண் ஜாடை செய்து அவளை அமைதி படுத்தினான் சத்யமூர்த்தி...

அலைப்பேசியில் எதையோ பார்த்துக் கொண்டிருந்த பத்மவர்ஷினி அன்னையின் வார்த்தையில் அவரை நிமிர்ந்து பார்த்தாள்... பின்பு தனது தந்தையைப் பார்த்தாள்... ஜீவாவோ தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று சோகமாய்த் தனது கைகளை அகல விரித்தான்... தந்தை தனக்குச் சாதகமாகப் பேச மாட்டார் என்பதை உணர்ந்து கொண்ட பத்மவர்ஷினி ஒரு முடிவுடன் நிமிர்ந்து அமர்ந்தாள்...

"நான் யாரையும் வேலைக்கு வர சொல்லலை... சம்பந்தப்பட்டவங்க இங்கே தானே இருக்காங்க... அவங்க கிட்டேயே கேட்டு தெரிஞ்சுக்கோங்க மாம்..." என்று கூறியவளின் பார்வை சத்யமூர்த்தியை துளைத்து எடுத்தது...

"சத்யா, வர்ஷூ சொல்றது உண்மையா...?"

அவன் பத்மவர்ஷினியை அழுத்தமாய்ப் பார்த்தபடி, "ஆமா அத்தை... நானா தான் வேலைக்கு வந்தேன்... ஊரில் ரொம்பக் கஷ்டமான நிலைமை... அதனால் தான்..." கடைசி வரியை கூறும் போது அவனையும் அறியாது அவனது குரல் கமறியது...

அவனை வேதனை பொங்க பார்த்திருந்தனர் அகல்யா மற்றும் சுபிக்ஷா... யுகேன் குற்றவுணர்வோடு அமர்ந்திருந்தான்... பத்மவர்ஷினி, ஜீவா இருவர் மட்டும் சிறிதும் உறுத்தல் இல்லாது அமர்ந்திருந்தனர்...

"சரிப்பா... அப்படி ஒரு கஷ்டம்ன்னா நீ எங்க கிட்ட சொல்லியிருக்கலாமே... எதுக்கு இந்த வேலைக்குச் சேரணும்...?"

"அது வந்து அத்தை..." அவன் மேலே பேசும் முன்...

"அடேங்கப்பா, என்ன ஒரு சப்போர்ட்...? உங்க மருமகன் படிச்ச படிப்புக்கு கலெக்டர் உத்தியோகமா கொடுக்க முடியும்... இந்த வேலையைத் தான் கொடுக்க முடியும்... இது கூடச் சொந்தக்காரன் என்பதால் போனால் போகுதுன்னு போட்டுக் கொடுத்திருக்கிறேன்... ஏன்னா இப்போ செக்யூரிட்டி வேலைக்குக் கூட இங்கிலீஷ் நல்லா பேச தெரிஞ்சிருக்கணும்... அப்படிப் பார்த்தால் இவனோட குவாலிபிகேசனுக்கு நம்ம கொடவுனில் மூட்டை தூக்கிற கூலி வேலை தான் போட்டு கொடுக்கணும்... போட்டு கொடுக்கவா...?"

அவளது ஒவ்வொரு வார்த்தையிலும் அத்தனை நக்கல் தெறித்தது... அதைக் கேட்டு சத்தியமூர்த்தியின் முகம் அவமானத்தில் கறுத்துப் போனது... சுபிக்ஷா மகளை முறைத்து பார்த்தாள்...

"வர்ஷூ..." என்று அவள் மகளைக் கண்டிக்க...

"என் கையில் எதுவும் கிடையாது மாம்... எல்லாமே சத்யா கைகளில் தான் இருக்கு... சாய்ஸ் இஸ் யுவர்ஸ் சத்யா..." என்று அவனைப் பார்த்தவளின் பார்வை லேசர் போல் அவனை ஊடுருவி சென்றது...

இதே போல் அன்று அவள் கூறிய வார்த்தைகள் அட்சரம் பிசகாது இப்போது மீண்டும் அவனது காதுகளில் ஒலித்தது...

"இருக்கட்டும் அத்தை... வேலை எதுவாயிருந்தா என்ன...? எனக்குச் சம்பளம் தான் முக்கியம்..." என்று அவன் உறுதியாய் கூறிவிட... சுபிக்ஷாவால் ஒன்றும் கூற முடியாத நிலை...

பத்மவர்ஷினி இறுமாப்புடன் அவனையும், தாயையும் பார்த்தவள் எழுந்து உள்ளே சென்று விட்டாள்... எல்லோரும் சென்றுவிட அண்ணனும், தங்கையும் தனித்து இருந்தனர்...

"அகல், இங்கே வா..." என்று தங்கையின் கையைப் பிடித்துத் தன்னருகில் அமர்த்திக் கொண்ட சத்யமூர்த்திச் சோபாவின் கீழே வைத்திருந்த தனது பையில் இருந்து அவளுக்காக வாங்கி வந்திருந்த பொருள்களை அவளிடம் கொடுத்தான்...

நடராஜனிடம் கடன் வாங்கிய பணத்தில் தங்கைக்கு ஒரு புடவையும், அவளது கணவனுக்கு ஒரு சட்டையும் வாங்கி வந்திருந்தான்... கூடவே இனிப்பும், பூவும்...

"எதுக்குண்ணா இதெல்லாம்..." இதை வாங்குவதற்குக் கூட அண்ணனிடம் பணம் இருந்திருக்காது என்று அவளுக்கு நன்கு தெரியும்... அதனால் அவளது கண்கள் கலங்கியது...

"இந்த அண்ணன் உயிரோடு இருக்கும் வரை உனக்கான சீர் வந்துக்கிட்டே இருக்கும்... மொத மாதிரி நல்லா இருந்திருந்தா இன்னும் சிறப்பா செஞ்சிருப்பேன்..." என்று அவன் பழைய வாழ்க்கையை நினைத்து பெருமூச்சு விட்டான்...

"பூ எடுத்து வச்சுக்கோம்மா..." என்று அவன் பாசத்துடன் தங்கையிடம் கூறிக் கொண்டிருந்த அந்நேரம் பத்மவர்ஷினி அவர்களைக் கடந்து சென்றாள்...

"அண்ணி நில்லுங்க..." அகல்யாவின் வார்த்தையில் சடன்பிரேக் போட்டது போல் நின்றவள் நிதானமாய் அவளைத் திரும்பி பார்த்தாள்...

'என்ன?' என்பது போல் அவளது பார்வை மிரட்டலாய் அகல்யாவை துளைத்தெடுத்தது...

"பூ வச்சிட்டு போங்கண்ணி..." என்ற அகல்யா தனது கைகளில் இருந்த பூவில் பத்மவர்ஷினிக்காகக் கொஞ்சம் தாராளமாய், அதிகமாய்ப் பூவை துண்டித்துக் கொண்டு வந்து அவள் முன் நீட்டினாள்...

அந்தப் பூவையும், சத்யமூர்த்தியையும் மாறி மாறி பார்த்தவள் பின்பு அவனை அழுத்தத்துடன் பார்த்தபடி அதைத் தனது கையில் வாங்கினாள்... அவனும் தனது முகத்தில் எந்தவித உணர்வும் காட்டி கொள்ளாது அவளை இமைக்காது பார்த்தபடி அமர்ந்திருந்தான்...

"நான் என்ன பட்டிக்காடா...? தலையில் பூ வைப்பதற்கு... இதை உன் அண்ணனை வைத்துக் கொள்ளச் சொல்லு..." என்று ஆங்காரத்துடன் கூறியபடி அவள் ஆவேசத்துடன் அந்தப் பூவை தரையில் விட்டெறிந்தாள்...

அந்தப் பூ நேரே சத்யமூர்த்தியின் காலடியில் வந்து விழுந்தது... அதைக் கையில் எடுத்தவன் நிதானமாய் அவளை நோக்கி வந்தான்... நாத்தானரின் செயலில் மனமுடைந்து இருந்த அகல்யா இப்போது அண்ணன் வேறு எழுந்து வரவும் பயத்துடன் அவனைப் பார்த்தாள்...

"பூவோட அருமை தெரியாதவங்க கிட்ட எல்லாம் எதுக்கும்மா கொடுக்கிற...? நான் உனக்கு மட்டும் தான் வாங்கிட்டு வந்தேன்... கண்டவங்களுக்கு இல்லை..." என்றவன் அந்தப் பூவை தங்கையின் கையில் கொடுத்து,

"இந்த அண்ணனுக்காக நீ போய்ப் பூவை வச்சிட்டு வாம்மா..." என்று தங்கையை உள்ளே அனுப்பிவிட்டு நிதானமாய்ப் பத்மவர்ஷினியின் புறம் திரும்பினான்...

"உனக்கு என்ன தான்டி பிரச்சினை...?" நேரிடையாக அவன் அப்படிக் கேட்டதும் அவள் உள்ளுக்குள் திடுக்கிட்டு போனாள்... பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"நீ தான் பிரச்சினை..." என்றாள் அழுத்தம் திருத்தமாய்...

"பிரச்சினையின் ஒட்டுமொத்த உருவம் நீ... உனக்கு நான் பிரச்சினையா...?" என்று அவன் நக்கலாய் கேட்டு வைக்க...

"உன் மனசாட்சியைத் தொட்டு சொல்லு... யாருக்கு யார் பிரச்சினைன்னு...?" அவள் பதிலுக்கு எகிற...

"அதுக்குப் பிள்ளையார்சுழி போட்டது யாரு, நீ தானே..." என்றான் அவனும் சிறிதும் அலட்டி கொள்ளாது...

"யூ, யூ..." என்றபடி அவள் கோபத்தில் வார்த்தைகள் கிடைக்காது தடுமாற...

"சர்தான் போடி..." என்றான் அவன் அலட்சியமாய்...

"வேலைக்காரன் நீ, என்னைப் பார்த்து டி போட்டு பேசுறியா...? உன்னை என்ன செய்கிறேன்னு பார்...?"

"வேலைக்காரன் வீட்டுக்காரனாகி ரொம்ப நாளாச்சு... இன்னமும் அதையே பிடிச்சு தொங்காம, புதுசா எதையாவது கண்டுபிடி அம்மிணி..." என்று நக்கலாய் கூறியவனை உறுத்து விழித்தவள்,

"எதுக்குப் புதுசா ஒண்ணைத் தேடணும்...? பழசையே தூசி தட்டி எடுக்கிறேன்..." என்று நிறுத்தி நிதானமாய் அவனைப் பார்த்து கூறியவள்,

"இந்தப் பத்மவர்ஷினிக்கு தோத்து பழக்கமில்லை... அதுவும் உன் கிட்ட நிச்சயம் நான் தோற்க மாட்டேன்..." என்றாள் தீர்க்கமான குரலில்...

"எனக்குமே உன்னைத் தோற்கடிக்கணும்ங்கிற எண்ணம் எல்லாம் கிடையாது... நீ உன் வழியில் போ... நான் என் வழியில் போகிறேன்... இடையில் மறித்துக் கொண்டிருப்பது நீ தான்..." என்றான் அவனும் சளைக்காது...

"அதுக்குக் காரணம் நீ தான்... அதை நல்லா ஞாபகம் வச்சுக்கோ..." என்றவள்,

"கூடிய விரைவில் உன் தெனாவெட்டு, இந்தத் திமிர் எல்லாத்தையும் குறைச்சு காட்டுறேனா இல்லையான்னு பார்..."

"அது என் கூடப் பொறந்தது அம்மிணி... அவ்வளவு சீக்கிரம் என்னை விட்டு போகாது..." என்றான் அவன் சிறிதும் திமிர் குறையாதவனாய்...

"போக வைக்கிறேன்..." என்றாள் அவளும் நிமிர்வாய்...

"பார்க்கலாம்..." என்றான் அவனும் சவாலாய்...

அவனது சவாலுக்கு அவள் வாய் திறந்து பதில் கூறவில்லை... அவனை உறுத்து ஒரு பார்வை பார்த்தவள் அடுத்த நொடி வேகமாய் அங்கிருந்து வெளியேறி விட்டாள்...

'இந்தம்மிணி பேசினாலே ஒரு மண்ணும் புரியாது... இதில் பார்வை வேறு... சுத்தம்...' எப்போதும் போல் அவளது பேச்சிற்கு, செயலுக்கு அர்த்தம் புரியாது அவன் விழித்தான்...

காரில் சென்று கொண்டிருந்த பத்மவர்ஷினியும் அவனைத் தான் நினைத்து கொண்டிருந்தாள்...

'எவ்வளவு திமிர் இருந்தால் என் கிட்டேயே சவால் விடுவான்...' என்று அவள் மனதிற்குள் பொருமி கொண்டிருந்தாள்...

அவனது திமிரை அடக்க வேண்டும் என்று அவள் நினைக்கும் போதே அவன் சந்திரமதியுடன் சிரித்துப் பேசியது அவளது நினைவுக்கு வந்தது... அவனது திமிரோடு அவனது சந்தோசத்தையும் சேர்த்து நசுக்க வேண்டும் என்கிற வெறி அவளுள் எரிமலையாய்க் கனன்றது...

"அண்ணா..."

அவ்வளவு நேரம் பத்மவர்ஷினி சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்த சத்யமூர்த்தித் தங்கையின் அழைப்பில் திரும்பி பார்த்தான்... மல்லிகை பூவை தலையில் சூடி புன்னகை முகமாய் இருந்த தங்கையின் முகம் அவனைச் சாந்தப்படுத்தியது...

"அண்ணா, இந்தா இந்தப் பணத்தை வச்சுக்கோ..." அகல்யா அவனது கைகளில் பணத்தைத் திணிக்க... அவன் புரியாது அவளைப் பார்த்தான்...

"உனக்கு ஏது இவ்வளவு பணம்...?"

"என்னோட பணம் தான்... நான் வேலைக்குப் போகிறேன்ண்ணா..."

"என்னது, நீ வேலைக்குப் போறியா...?" என்று திகைத்த குரலில் கேட்டவன்,

"மாப்பிள்ளைக்கும் உனக்கும் ஏதாவது பிரச்சினையா...?" பெரிய பணக்கார வீட்டு மருமகள் வேலைக்குச் செல்வது என்றால்...? அவனுக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தது...

"ஐயோ, அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லைண்ணா... நான் தான் பொழுது போகாம வேலைக்குப் போகிறேன்... உன் மாப்பிள்ளை என்னை ஒண்ணும் சொல்றது கிடையாது... போதுமா...?"

"அவ்வளவு தானா...? நான் கூடப் பயந்து போயிட்டேன்..."

"கல்யாணத்துக்குப் பிறகு வேலைக்குப் போகிறதில் என்ன தப்பிருக்கு...?"

"ஒரு தப்பும் இல்லை அகல்... அது நம்மை மாதிரி ஏழைங்களுக்குச் சரியே... ஆனா பணக்காரங்க இதை அனுமதிக்க மாட்டாங்க... இது அவங்களுக்குக் கௌரவக் குறைச்சல்ன்னு நினைப்பாங்க... அதான் கேட்டேன்..."

"நீ சொல்றது சரி தான் அண்ணா... ஆனா இங்கே எல்லாமே தலைகீழ்..."

"அது என்னவோ வாஸ்தவம் தான்..." அவன் பத்மவர்ஷினியின் நினைவில் மெல்லமாய் முனங்கினான்...

"என்ன அண்ணா...?"

"ஒண்ணும் இல்லை..." என்று கூறி அவன் சமாளித்தான்...

"இங்கே என் மாமியார் கூட முதலில் ஒரு ஸ்கூலில் வேலைக்குச் சேர்ந்து அதுக்குப் பிறகு தான் தனியா

மியூசிக் ஸ்கூல் ஆரம்பிச்சாங்கலாம்... அது மாதிரி வருங்காலத்தில் நானும் கூடத் தனியே ஒரு ஸ்கூல் ஆரம்பிக்கலாம்... யார் கண்டது...?" என்று புருவம் உயர்த்தியபடி புன்னகைத்த தங்கையைக் கண்டு சத்யமூர்த்திக்கு மனம் நிறைந்தது...

வெளியில் செல்வதற்காக அங்கு வந்த யுகேன் மனைவி பேசியதை கேட்டு விட்டான்... அவளது வார்த்தையில் அவனது உதடுகளிலும் புன்னகை தோன்றியது... சிரித்தபடி அங்கு வந்தவன்,

"பை மச்சான்..." என்று மச்சினனிடம் விடைப்பெற்றவன்,

"போயிட்டு வர்றேன்டி என் கில்மா..." என்று மனைவியிடம் கண்சிமிட்டியபடி அவன் விடைப்பெற... அவளோ அண்ணன் முன் கணவனை முறைக்க இயலாது அவனைப் பார்த்து ஈயென இளித்து வைத்தாள்...

'ஊரை சுத்திட்டு வீட்டுக்கு தானே வந்தாகணும்' என்கிற மிரட்டல் செய்தி அவளது விழிகளில் தெரிந்ததைக் கண்டு யுகேன் பயத்தில் நாலு கால் பாய்ச்சலில் அங்கிருந்து ஓடிவிட்டான்... அதைக் கண்டு அவளது இதழ்களில் புன்னகை நெளிந்தது...

தங்கை மற்றும் தங்கை கணவனின் பார்வை பரிமாற்றத்தை கண்டு சத்யமூர்த்திக்கு நிறைவாக இருந்தது... இந்தத் திருமணத்தால் ஆரம்பத்தில் இருந்த மனசஞ்சலம் இப்போது சுத்தமாய் அவனிடத்தில் இல்லை...

"அகல், இந்தப் பணத்தைப் பத்திரமா சேர்த்து வை... பின்னாடி உனக்கு உபயோகமாகும்... நம்ம வீட்டு பிரச்சினையை நான் பார்த்துக்கிறேன்..."

"அது இல்லைண்ணா..."

"எதுவும் பேச கூடாது... அண்ணன் இருக்கும் போது நீ தேவையில்லாம யோசிக்காதே..." என்று அவன் தங்கையைச் சமாதானப்படுத்தினான்...

பின்பு தங்கையிடம் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு அவன் கிளம்பினான்... வரும் போது இருந்த சிறு கலக்கமும் இப்போது அவனிடம் இல்லை... இனி அவனது கவலை முழுவதும் அவனது காரியத்தில் வெற்றி பெறுவது குறித்தே...

********************

அன்று ஞாயிற்றுக் கிழமை அதுவுமாய்ச் சத்யமூர்த்திக்கு வேலை இருந்தது... காவல் பணியில் இருப்பவர்களுக்குச் சனி, ஞாயிறு என்று எல்லாம் தனியே விடுமுறை கிடையாது... அவ்வப்போது கொடுக்கும் விடுமுறை தான்... இப்போது மதிய பொழுது நெருங்கி கொண்டிருந்ததால் இனி யார் வர போகிறார்கள் என்று அசால்ட்டாக நினைத்தவன் தனக்கு என்றிருந்த சிறு கூண்டுக்குள் வந்து விச்ராந்தியாக உட்கார்ந்தான்... அங்கிருந்த சிறிய மேசை மின்விசிறியை போட்டவன் தனது சட்டையின் மேல் பொத்தானை கழட்டி விட்டுச் சட்டை காலரை பின்னுக்குத் தள்ளி விட்டபடி கண்களை மூடி கொண்டு காத்தாட ரிலாக்சாக அமர்ந்திருந்தான்...

"மாமா..." என்றழைத்தபடி அவன் முன் திடுமென வந்து குதித்தாள் சந்திரமதி...

"ஏய் மதி, வா வா..." என்று அவன் உற்சாகப் புன்னகையுடன் அவளை வரவேற்று அங்கிருந்த பிளாஷ்டிக் நாற்காலியில் அவளை அமர சொன்னான்...

"எப்படியிருக்க மாமா...?" அந்தச் சிறு கூண்டை சுற்றி பார்த்தபடி அவள் கேட்டாள்... சென்னை மாநாகர வெயிலுக்கு இந்தச் சிறு கூண்டு அனலாய்க் கொதித்தது...

"எனக்கென்ன நல்லாயிருக்கேன்... அப்புறம் உனக்குக் காலேசு எல்லாம் பிடிச்சிருக்கா...?"

"ம், பிடிச்சியிருக்கு..." என்றவள் தனது கையிலிருந்த கவரை அவனிடம் நீட்டி,

"உனக்காகச் சிக்கன் பிரியாணி வாங்கிட்டு வந்தேன்... சாப்பிடு மாமா..." என்று அவள் கூற...

"எதுக்குப் புள்ள இதெல்லாம்...?"

"மூச்..." என்று வாய் மீது விரல் வைத்து அவனை அதட்டியவள் உணவு பொட்டலத்தைப் பிரித்து அவனிடத்தில் நீட்டினாள்...

உணவு நேரம் என்பதால் உணவின் நறுமணம் அவனது நாசியைத் துளைத்து பசியைத் தூண்டிவிட்டது... அதனால் அவன் மறுக்காது அதை வாங்கிக் கொண்டான்... ஒரு வாய் எடுத்து உண்ண போனவன் பின்பு அவளைப் பார்த்து,

"நீ சாப்பிட்டியா மதி...?" என்று கேட்க... அவனது அக்கறையான கேள்வியில் அவளது விழிகள் கலங்கியது...

"இல்லை, ரெண்டு பேருக்கும் சேர்த்து தான் வாங்கிட்டு வந்தேன்..."

"அப்போ அதை எடுத்து சாப்பிடு..."

"ஏன், நீ ஊட்டி விட மாட்டியா மாமா...?" என்று ஏக்கத்துடன் கேட்டவளை காண இயலாது உணவினை எடுப்பது போல் அவன் தலைகுனிந்து கொண்டான்...

அவளோ சிரித்தபடி உணவை எடுத்த அவனது கையைத் தனது வாய் அருகே கொண்டு வந்து தானே அந்தக் கவளத்தைத் தனது வாயில் ஊட்டி விட்டு கொண்டாள்...

"இப்படித் தான் ஊட்டி விடணும் மாமோய்..." என்று சிரித்தபடி அவள் கூறும் போதே அலறலாய் காரின் ஹார்ன் சத்தம் கேட்டது...

யாரது என்று எட்டிப்பார்த்தவன் அங்குப் பத்மவர்ஷினியின் கார் நின்றிருப்பதைக் கண்டு பதறியவனாய் எழுந்தான்...

"மாமா, நீ சாப்பிடு... நான் கதவை திறந்து விடுறேன்..."

"இல்லை, வேண்டாம் மதி... அதுக்கும் அந்தம்மிணி ஏதாவது சொல்லி சாமியாடும்..." என்றபடி அவன் வேகமாய் எழுந்து சென்று வாயிற் கதவை அகல திறந்து விட்டான்...

காரின் பின்பக்க கண்ணாடி இறங்கியதும் அவன் பத்மவர்ஷினியை கண்டு விறைப்பாய் வணக்கம் வைத்தான்... அவளோ அவனது வணக்கத்தைக் கவனிக்காது அவனுக்குப் பின்னே நின்று கொண்டு தன்னை முறைத்துப் பார்த்திருந்த சந்திரமதியை உற்று நோக்கி கொண்டிருந்தாள்...

ஆத்திரத்தில் முகம் சிவக்க நின்றிருந்த சந்திரமதியை கண்டு பத்மவர்ஷினியின் விழிகள் இடுங்கியது... அடுத்த நொடி அவள் தனது வலக்கை ஆள்காட்டி விரலசைத்து சத்யமூர்த்தியை தன்னருகே வரும்படி சைகை செய்தாள்... அவனும் அவள் கூப்பிட்டதும் நாய்க்குட்டி போல் அவளை நோக்கி ஓடி வந்தான்... ஏனெனில் அவனது வேலை அந்த மாதிரி...

அதைக் கண்ட சந்திரமதியின் முகம் கறுத்துப் போனது... அவளது முகம் கறுத்தது கண்டு பத்மவர்ஷினியின் முகத்தில் திருப்தியான புன்னகை வந்தமர்ந்தது... அவளுக்கு அது தானே வேண்டும்...!!!

சதிராடும்...!!!

## உயிர் - 4

"மேடம்..."

அவ்வளவு நேரம் சந்திரமதியின் மீது தனது கவனத்தைப் பதித்திருந்த பத்மவர்ஷினி சத்யமூர்த்தியின் குரலில் தனது பார்வையை அவன் புறம் திருப்பினாள்... தன் முன் வந்து பணிவாய் குனிந்து நின்ற அவனைக் கண்டு கோபம் கொண்டு அவள் முறைத்து பார்த்தாள்... சட்டையின் மேல் பொத்தானை அவன் கழட்டி விட்டிருந்ததில் அதன் வழியே ரோமம் அடர்ந்த அவனது திண்ணிய நெஞ்சு அவளுக்கு இலவசமாகக் காட்சியளித்தது... அதைக் கண்டு ஏனோ அவள் மனதிற்குள் படபடப்பாக உணர்ந்தாள்...

"என்ன மேன் இது...?" என்று அவனது சட்டையைச் சுட்டிக்காட்டியவள்,

"இது தான் நீ ட்யூட்டி பார்க்கும் லட்சணமா...?" என்று கோபம் கொண்டு கத்தினாள்...

அவனோ புரியாது குனிந்து தன்னைப் பார்த்தான்... தான் சட்டை பொத்தானை கழட்டி விட்டதை அவன் கொஞ்சமும் உணரவே இல்லை...

"முதல்ல ஷர்ட் பட்டனை போடு..." என்று அவள் எரிச்சலுடன் மொழியவும் தான் அவனுக்குத் தனது தவறு புரிந்தது... அவசரமாய்ச் சட்டை பொத்தானை போட போனவன் அப்போது தான் கவனித்தான், உணவை கையில் எடுத்தவன் அந்தக் கையைக் கழுவ மறந்து போனதை...

"எதிலும் ஒரு ஒழுங்கு இல்லை..." அவனிடம் எரிந்து விழுந்தவளின் பார்வை அவனைத் தாண்டி பின்னால் சென்று சந்திரமதியின் மீது நிலைக்குத்தி நின்றது...

"உடனே என்னோட ரூமுக்கு வா..." என்று அவனிடம் கட்டளையிட்டவள் ஓட்டுநரிடம் காரை எடுக்கச் சொன்னாள்...

சோர்ந்து போன முகத்துடன் வந்த சத்யமூர்த்தியை கண்டு சந்திரமதிக்கு இரக்கமாக இருந்தது... அவனின் கையைப் பிடித்திழுத்து,

"நீ சாப்பிட வா மாமா..." என்றழைக்க...

"ப்ச், வேண்டாம் புள்ள... நீ சாப்பிடு... அம்மிணி என்னைக் கூப்பிட்டிருக்கு... என்னன்னு போய்ப் பார்த்துட்டு வர்றேன்..."

அவ்வளவு தான் சந்திரமதி கோபத்தில் படபடத்து விட்டாள்...

"இவள் என்ன உன் பொண்டாட்டியா...? புருசனை கூப்பிற மாதிரி உடனே ரூமுக்கு வான்னு சொல்லிட்டு போறா...?"

இதை அவள் சொல்லும் போது அவளைப் பொருள் விளங்கா ஒரு பார்வை பார்த்த சத்யமூர்த்தி ஒன்றும் பேசாது அங்கிருந்த பாட்டிலில் இருந்து தண்ணீரை எடுத்து கையையும், முகத்தையும் கழுவினான்... பிறகு முகத்தைத் துடைத்துக் கொண்டு மறக்காது சட்டையின் மேல் பொத்தானை போட்டுக் கொண்டு அவன் பத்மவர்ஷினியை பார்க்க கிளம்பினான்...

"மாமா, நான் பேசிக்கிட்டு இருக்கேன்... நீ பேசாம போனா என்ன அர்த்தம்...?"

"முதலாளி கூப்பிட்டால் தொழிலாளி போகணும்ன்னு அர்த்தம்..." என்றான் அவன் அமைதியாக... அதைக் கேட்டு அவள் அப்படியே அமைதியாகி விட...

"ரொம்ப யோசிக்காதே மதி... நீ சாப்பிடு... நான் இப்ப வந்திர்றேன்..." என்றவன் அவளது பதிலை எதிர்பாராது செல்ல...

அவளோ அவனைக் கலங்கிய விழிகளுடன் பார்த்திருந்தாள்... ஏனோ சத்யமூர்த்தித் தன்னை விட்டு விலகி செல்வது போல் ஒரு தோற்றம் அவளுள் எழுந்தது...

பத்மவர்ஷினியின் அறை முன் வந்து நின்ற சத்யமூர்த்தி இன்று ஞாபகமாய் அறை கதவை தட்டி விட்டு அவளது

அனுமதி வேண்டி நின்றான்...

"எஸ், கம்மின்..." என்று அவள் கம்பீரமாகக் குரல் கொடுத்ததும் அவன் உள்ளே நுழைந்தான்...

"வணக்கம் மேடம்..." என்றான் அவன் பவ்யத்துடன்... இல்லை என்றால் கேள்வி கணைகளைத் தொடுத்து அவனை உண்டு இல்லை என்று படுத்தி எடுத்து விடுவாளே இந்த அழகான ராட்சசி...

தன் முன்னிருந்த கோப்பில் கவனத்தை வைத்திருந்தவள் அவனது வணக்கத்தில் பார்வையை மட்டும் சற்று உயர்த்தி அவனைப் பார்த்தாள்... அவளது இந்தப் பாவனையில் அவன் சற்று அசந்து தான் போனான்... இதுவரை அவன் கடந்து வந்த பெண்கள் எல்லோருமே வேறு வகை... ஆனால் இவளோ வேறு மாதிரியான வகையைச் சேர்ந்தவளாய் இருந்தாள்...

பத்மவர்ஷினியே எலுமிச்சை நிறத்தழகி... அதில் வேறு இன்று அவள் எலுமிச்சை நிற ஷிபான் புடவை ஒன்றை கட்டி கொண்டு வந்திருந்தாள்... அந்தப் புடவையின் நிறம் அவளது நிறத்தோடு ஒத்திருந்து அவளது பொன்மேனியை இன்னமும் எடுப்பாய்க் காட்டியது... அந்த ஷிபான் புடவையின் வழுவழுப்பு போல் இருந்தது அவளது தளிர்மேனி... அதிலும் அவள் தலையை உயர்த்தாது பார்வையை மட்டும் உயர்த்தி அவனைப் பார்த்தது அத்தனை கம்பீரமாக, அழகாக இருந்த அதே சமயம் அலட்சியமாகவும் இருந்தது...

அவளது இந்த அதீத அழகு அவனுள் பயத்தை விதைத்தது... பயத்தில் வறண்ட தொண்டையை அவன் எச்சிலை விழுங்கி சரி செய்து கொண்டான்...

"லவ்வர்ஸால பிரிஞ்சிருக்க முடியலையோ...? சென்னை வரை பின்தொடர்ந்து வந்திருக்கிறாள்..."

அவளது பேச்சில் அவனுள் சுறுசுறுவெனக் கோபம் பொங்கி கொண்டு எழுந்தது... ஆனாலும் அடக்கி

கொண்டு,

"தேவையில்லாம பேச வேண்டாம் மேடம்... என்னை எதுக்கு வர சொன்னீங்க...? அதைப் பத்தி மட்டும் பேசினால் நல்லது..." என்று கூறியபடி விறைப்பாக நின்றவனைக் கூர்ந்து பார்த்தவள் கையிலிருந்த பேனாவை மூடி மேசை மீது விட்டெறிந்து விட்டு நாற்காலியில் சொகுசாய் சாய்ந்தமர்ந்து கொண்டாள்...

கைகள் இரண்டையும் கோர்த்துக் கொண்டு அதில் நாடியை பதித்தபடி தன்னைக் குறுகுறுவெனப் பார்த்தவளை கண்டு அவனது மனம் எச்சரிக்கை விடுத்தது... அடுத்து அவள் பாய்வதற்குத் தயாராகுகிறாள் என்று...

"ஓ, இதுக்கு எல்லாம் உனக்கு அர்த்தம் தெரிஞ்சிருக்கு... சினிமாவோட எஃபெக்ட்..." என்று சொல்லியபடி அவள் அழகாய் உதட்டை சுளித்தாள்...

"எதுவாயிருந்தா என்ன...? அது என்னுடைய தனிப்பட்ட விசயம்... அதைக் கேள்வி கேட்க கூடிய உரிமை உனக்கு இல்லை..." அவளது பேச்சு போகும் விதம் கண்டு அவனும் மரியாதையைக் கைவிட்டு விட்டு நிமிர்ந்து நின்று பதில் கூறினான்...

"ஓஹோ, நான் உன்னைக் கேள்வி எதுவும் கேட்க கூடாதுன்னு சொல்ற... அம் ஐ ரைட்...?" என்று அவனைப் பார்த்தவளின் பார்வை அழுத்தமாய் அவன் மீது படிந்தது...

"அதுக்கான ரைட்ஸ் எனக்கு இல்லைன்னு சொல்ற... அப்படித் தானே...?" அவளது இந்தக் கேள்வியில் அவன் தான் அதிகம் திணறிப் போனான்...

"அப்படி இல்லைங்கம்மிணி..."

"எப்படி இல்லைங்க சார்...?" என்று அவனை அலட்சியமாய்ப் பார்த்தவள்,

"இந்தக் கம்பெனியோட எம்டியா உன்னைத் தட்டி கேட்கும் அதிகாரம் எனக்கு இருக்குன்னு நான் நினைக்கிறேன்... நீ

என்ன நினைக்கிற...?" அவளது பேச்சில் அவன் நிம்மதி பெருமூச்சு விட்டான்...

"ஏய், இங்கே பார்... வொர்க்கிங் அவர்ஸ்ல இந்த மாதிரி கூத்தடிச்சிட்டு இருக்கிறது எனக்குப் பிடிக்காது... அதை அவள் கிட்டேயும் சொல்லி வை... உனக்கும் சேர்த்து தான்... இங்கே இருக்கும் வரை நீ ஒழுங்கா இருக்கணும்..." என்று அவள் திட்டவட்டமாக அவனை எச்சரித்தாள்...

இப்போது அவளது பேச்சில் அவனுக்குக் கோபம் வந்தது... 'என்னம்மோ நாங்க ரெண்டு பேரும் கொஞ்சி குழாவிட்டு இருந்த மாதிரி இவள் என்ன இப்படி எல்லாம் பேசுகிறாள்?' என்று அவனது மனம் முணுமுணுவென்றது...

"இப்போ மதிய சாப்பாடு நேரம்... இந்த நேரத்தில் நான் என்ன வேணா செய்யலாம் அம்மிணி..." என்றான் அவன் நிமிர்வாய்...

"அதுக்குன்னு உன் லவ்வரை இங்கே கூட்டி வச்சு கூத்தடிப்பியா...?" திரும்பத் திரும்ப அவள் இதையே பேசி கொண்டிருக்கவும் அவனுக்கு ஆத்திரம் அதிகரித்தது...

"ஆமாம்ன்னு சொன்னா என்ன செய்யறதா இருக்கீங்க அம்மிணி... என்னை மாதிரி ஒருத்தனை ஒருத்தி காதலிக்கிறது தப்பா...? இல்லை எனக்குக் காதலி இருக்கிறாள்ங்கிறதை உன்னால் ஏத்துக்க முடியலையா...? இல்லை நம்ப முடியலையா...?"

"உண்மையில் நம்பத் தான் முடியலை..." என்று போலி ஆச்சிரியத்துடன் புருவங்களை உயர்த்தியவளை கண்டு அவன் உறுத்து விழித்தான்...

"ஏனோ...?"

அவன் கேட்டதற்கு அவள் குபீரென்று சிரித்து விட்டாள்... அதில் அவமானம் அடைந்தவனாய் அவன் பொங்கி எழுந்து விட்டான்...

"இப்போ சொல்றேன் கேட்டுக்கோ அம்மிணி... அவள் என்னோட லவ்வர் தான்... நாளை என் மனைவியாகப் போகிறவள்... உன்னால் என்ன பண்ண முடியும்...?" என்றான் அவன் தெனாவெட்டாய்...

"ம்ஹூம், அப்படியா...? என் கிட்டேயே சவாலா...? இந்தப் பத்மவர்ஷினி நினைச்சா என்ன வேணும்ன்னாலும் பண்ண முடியும்... டூ யூ அன்டர்ஸ்டாண்ட்...?"

"அப்படிங்களாம்மிணி...? அதே மாதிரி இந்தச் சத்யா நினைச்சா எத்தனை பொண்ணுங்களை வேணும்ன்னாலும் கட்டிக்கிட முடியும்... அதையும் பார்க்கிறீங்களா அம்மிணி...?"

அதைக் கேட்டு அவளது முகம் கோபத்தில் சிவந்து போனது...

"என்னைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் யாருக்கும் கிடையாது அம்மிணி... உனக்கும் சேர்த்து தான்..."

"ம், ரைட்..." என்றபடி பேனா மூடியை திறந்து கோப்பில் கையெழுத்து போட்டபடி,

"ட்யூட்டி நேரத்தில் ட்யூட்டியை பார்க்காம ப்யூட்டியை பார்த்துக்கிட்டு இருந்ததால் உன்னோட இந்த மாச சம்பளத்தில் ஒரு நாள் சம்பளம் கட்..." என்று பட்டென்று கூறியவளை கண்டு அவன் அசையாது அப்படியே நின்றுவிட்டான்...

இந்தச் சம்பளத்தை நம்பி தான் அவனது குடும்பம் இருக்கின்றது... அவனுடைய அத்தியாவசிய செலவுகள் அனைத்தும் இருக்கின்றது...

"என்ன நிற்கிற...? போ மேன்..." என்று நிமிர்ந்து பார்த்து கூறியவள் அவனை வெளியில் செல்லுமாறு அறை கதவு நோக்கி கையைக் காட்டினாள்...

அவளிடம் மேலும் மேலும் கெஞ்சி கொண்டிருக்க மனமில்லாது அவன் அங்கிருந்து நகர்ந்தான்... அறை கதவு

அருகில் அவன் செல்லும் போது,

"ஒன் மினிட் சத்யா..."

அவளது இரும்பு குரல் கேட்டும் அவன் திரும்பாது அப்படியே நின்றான்... பெண்ணவள் எப்போதும் அவனது ஏழ்மை நிலையை எள்ளி நகையாடுவது கண்டு அவனுக்கு அத்தனை அவமானமாக இருந்தது...

"கேஷியர் கிட்ட உனக்கு அட்வான்ஸ் பணம் கொடுக்கச் சொல்லியிருக்கேன்... நாளைக்கு வந்து வாங்கிக்கோ..." என்றவளை அவன் திரும்பி பார்க்காது,

"நன்றி மேடம்..." என்று கூறிவிட்டு அறை கதவை திறக்க...

"என்ன சத்யா, உன்னோட நன்றியில் கொஞ்சமும் உப்பு சப்பில்லையே...? கொஞ்சம் காரத்தைத் தூக்கலாய் எதிர்பார்த்தேனே..."

அவளது வார்த்தையிலோ அல்லது அவளது குரல் ஒலித்த தொனியிலோ ஏதோ ஒன்றில் அவன் அவளைத் திரும்பி பார்த்தான்... அவளோ அவனைப் பார்க்காது கோப்பில் கவனமாய் இருந்தாள்... அதைக் கண்டு பெருமூச்சு விட்டவன் அடுத்த நொடி அறையை விட்டு வெளியேறி இருந்தான்...

அவன் சென்றதும் நிமிர்ந்து பார்த்த பத்மவர்ஷினி அவன் நின்றிருந்த இடத்தை விடாது வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... அந்நேரம் மீண்டும் அறை கதவை திறந்து தலையை மட்டும் உள்ளே நீட்டிய சத்யமூர்த்தி,

"நீ இப்படி ஸ்வீட் கொடுக்கும் போது நான் எப்படிக் காரம் கொடுக்க முடியும் அம்மிணி...?" என்று இரு புருவங்கள் உயர்த்தி வசீகரமாகச் சிரித்தவன் அவளைப் பார்த்து அழகாய்க் கண்சிமிட்டினான்...

அவனது செய்கையைக் கண்டு முதலில் திகைத்தவள் பின்பு உணர்வில்லாது அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்...

"அப்புறம் ஒரு முக்கியமான விசயம் உன் கிட்ட கேட்கணும்ன்னு இருந்தேன் அம்மிணி... இங்கே சென்னையில் காதலர்கள் சந்திக்கக் கூடிய இடம் என்னவெல்லாம் இருக்கு...? நானும் மதி புள்ளையும் சாயங்காலம் வெளியில் போகலாம்ன்னு இருக்கோம்..."

அவனது வார்த்தையில் அவளது முகம் மிளகாயை உண்டது போல் கோபத்தில் சிவந்து விட்டது... அதைக் கண்டு வெகுதிருப்தி அடைந்தவனாய் அவன் உள்ளே நுழைந்து அவள் முன் நின்றபடி திமிராய்,

"நான் கொடுத்த காரம் எப்படி இருந்தது...? ரொம்பக் காரமாயிருக்கிறதோ...?" என்றவன் அங்கிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து அவளிடம் கொடுத்து,

"தண்ணி குடி, சரியா போயிரும்..." என்க...

அவளோ கோபத்துடன் அந்தப் பாட்டிலை தட்டி விட்டாள்... அது அறையின் ஒரு மூலையில் சென்று விழுந்தது... அந்தப் பாட்டிலை ஒரு பார்வை பார்த்த சத்யமூர்த்திப் பின்பு அவள் புறம் திரும்பி,

"எதுக்கு இந்தக் கோபம் அம்மிணி...? உன்னோட இந்தக் கோபத்துக்கு அவசியமே இல்லை... நீ உன் உயரத்தை விட்டு இறங்கி வர வேண்டாம்... வரணும்ன்னும் நானும் சொல்லலை... எனக்குத் தேவையானதை நீ கொடுத்துட்டா, நான் உன் வழிக்கு வர போறதில்லை... நீயும், நானும் இப்படித் தினமும் சந்திக்கும் அவஸ்தையும் இருக்காது... எனக்கான வாழ்கையை நிம்மதியா வாழ விடு பத்மா..."

அவனையும் அறியாது அவளது பெயரை அவன் அழகாக, மென்மையாக உச்சரித்தான்... அய்யனார் சிலை போன்றிருக்கும் அவனுள் இத்தகைய மென்மையைப் பெண்ணவள் சற்றும் எதிர்பார்க்கவில்லையோ... அவள் விழி விரித்து அவனை இமைக்காது பார்த்தாள்...

கடல் போன்று அகன்ற அவளது விழிகளின் ஆழமான பார்வை வீச்சில் சத்யமூர்த்திக் கொஞ்சம் கொஞ்சமாய்த்

தொலைந்து கொண்டிருந்தான்... மீள வேண்டும் என்று தான் அவன் நினைக்கின்றான்... ஆனால் மீள முடியவில்லை... பெரும் சுழல் ஒன்று அவனை உள்ளே இழுத்துக் கொண்டு போவது போல் ஒரு தோற்றம் அவனுள்...

"உன்னோட வாழ்க்கை அவள் தான்னு சொல்லாமல் சொல்ற... அப்படித் தானே...?"

"ம்ப்ச், தேவையில்லாமல் நமக்கு இடையில் அவளை ஏன் இழுக்கிற...?" சலிப்பாய் வந்தது அவனது வார்த்தைகள்... அத்தனை நேர அவனது இதம் நொடியில் மறைந்து போனது...

"இடையில் வந்தால் இழுக்காமல் எல்லாம் என்னால் இருக்க முடியாது..." என்றாள் அவள் விறைப்பாக... அவளது சிறுபிள்ளைத்தனமான பேச்சு கண்டு அவனுக்குச் சிரிப்பு தான் வந்தது...

"இப்பவும் அதையே தான் சொல்றேன்... உனக்கும் மதிக்கும் ஏணி வச்சாலும் எட்டாது... உன்னோட உயரம் வேறு... அவள் வேறு... அவள் கூட எல்லாம் நீ போட்டி போடாதே..." இன்று ஏனோ அவன் அவளிடம் தன்மையாகப் பேசினான்...

"யார் கூட, எதுக்குப் போட்டி போடணும்ன்னு எனக்குத் தெரியும்... அதை நீ சொல்லாதே... நீயெல்லாம் அட்வைஸ் பண்ணும் அளவுக்கு என் நிலைமை மோசமாகப் போகவில்லை... முதலில் நீ இடத்தைக் காலி பண்ணு..." என்றவளை உணர்வில்லாது பார்த்தவன்,

"செத்த பாம்பை இன்னும் எத்தனை நாளைக்குத் தான் நீ அடிக்கப் போகிறன்னு எனக்குத் தெரியலை..." என்று கூறியவன் அவளின் பதிலை எதிர்பார்க்காது கதவை திறந்து கொண்டு சென்றுவிட்டான்...

அவன் சென்றதும் அவள் வேலை செய்யப் பிடிக்காது நாற்காலியில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடி கொண்டாள்...

வெகுநேரம் கழித்து வந்த சத்யமூர்த்தியை கண்டு சந்திரமதி கவலையாகப் பார்த்தாள்... அவளது கவலையை உணர்ந்தவனாய் அவன் அவளைப் பார்த்து பளிச்சென்று புன்னகைத்தான்...

"சாப்பிட்டியா மதி...?"

"இல்லை மாமா..."

"அப்போ வந்து சாப்பிடு..." என்றவன் அவளை அந்தச் சிறு அறைக்குள் அழைத்துச் சென்று உணவு பொட்டலத்தைப் பிரித்து அவளிடம் கொடுத்தான்...

"நீ...?"

"நானும் தான்..." என்றவன் தன்னுடைய உணவு பொட்டலத்தைப் பிரித்து உண்ண ஆரம்பித்தான்...

"அவள் எதுக்கு உன்னைக் கூப்பிட்டாளாம்...?"

"அட்வான்ஸ் பணம் கேட்டிருந்தேன்... அதுக்குத் தான்..."

"அதுக்கா இவ்வளவு நேரம்...?" அவளது குரலிலும், முகத்திலும் நம்பாத பாவனைத் தெரிந்தது...

"ஆமாம்..." என்று கூறியவனின் முகத்தில் புன்னகையே நிறைந்திருந்தது... ஏனோ தெரியவில்லை அவனது மனம் உற்சாகமாய் இருந்தது...

மாலை ஐந்து மணி வரை சந்திரமதி அங்கேயே இருந்து அவனுடன் உரையாடி கொண்டிருந்தாள்... அவனும் தனது வேலையைப் பார்த்தபடி அவ்வப்போது அவளிடம் பேசி கொண்டிருந்தான்... ஒருவாறு அவன் தனது வேலை முடிந்ததும் சந்திரமதியை அழைத்துக் கொண்டு நிறுவனத்தை விட்டு வெளியேறினான்...

இருவரும் ஜோடி போட்டுக் கொண்டு போவதை தனது அறையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த பத்மவர்ஷினியின் முகம் உணர்வினை தொலைத்திருந்தது... இவ்வளவு நேரம் சிசிடிவி கேமிரா

மூலம் அங்கு நடந்ததை எல்லாம் அவள் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள்...

அவளது மனதில் பெரும் போராட்டம் எழுந்தது... தனக்கு இந்தப் போராட்டம் தேவை தானா என்று அவள் ஒரு கணம் இதைப் பற்றி யோசிக்கக் கூடச் செய்துவிட்டாள்... அவளின் பிறப்பு என்ன...? வளர்ப்பு என்ன...? படிப்பு, அந்தஸ்து தான் என்ன...? என்ன இல்லை அவளிடம்...? எதற்காக இப்படி அடக்கி, கட்டுப்படுத்தி ஒன்றை அடைய வேண்டும்...? எதுவுமே வேண்டாம் என்று அவளுக்கு வெறுப்பாய் தோன்றியது...

எல்லாம் ஒரு கணம் தான்... பின்பு ஏதோ நினைத்தவளாய் தொழிலதிபராய் நிமிர்ந்து நின்றவள் தான் எடுத்த முடிவிலும் உறுதியாய் இருந்தாள்...

'டேய் கருப்பட்டி, எவ்வளவு தூரம் தான் நீ போறேன்னு நானும் பார்க்கிறேன்...' என்று மனதிற்குள் அவனிடம் சவால் விட்டு கொண்டாள்...

********************

தொடர்ந்து ஐந்து நாட்களாக யுகேனை வீட்டில் பார்க்க முடியவில்லை... ஒரு சிறு காகிதத்தில் 'நண்பனின் திருமணத்திற்குச் செல்கிறேன்' என்று எழுதி வைத்து விட்டு அவன் கம்பி நீட்டிவிட்டான்... இங்கே இருந்தால் தன்னிடம் பதில் சொல்ல வேண்டும் என்று அவன் தப்பித்து விட்டதாய் அகல்யா அவளாய் எண்ணி கொண்டாள்...

'எப்படியும் இங்கு வந்து தானே ஆகணும்... அப்போ இருக்குதுடா உனக்கு, வெள்ள பன்னி' அவள் மனதில் கறுவி கொண்டு கணவனுக்காகக் காத்திருந்தாள்...

ஐந்தாம் நாள் அதிகாலையில் இரண்டு மணிக்கு யுகேன் வீடு வந்து சேர்ந்தான்... அவன் அறைக்குள் நுழைந்த போது அகல்யா நன்கு உறங்கி கொண்டிருந்தாள்... 'ஹப்பாடா' என்று நிம்மதி பெருமூச்சு விட்டவன் உடையை மாற்றி விட்டுப் படுக்கப் போகும் போது அவனுக்கு ஓங்கரித்துக்

கொண்டு வந்தது... வாயை பொத்தியபடி அவன் குளியலறையை நோக்கி ஓடினான்...

அவன் சத்தம் போட்டு வாந்தி எடுத்ததில் அகல்யா உறக்கம் கலைந்து எழுந்து விட்டாள்... நேரே குளியலறையை நோக்கி வந்தவள் கணவன் வாந்தி எடுப்பதைக் கண்டு பயந்து போனவளாய் அவன் அருகில் வந்து அவனது தலையின் இருபக்கம் பிடித்துக் கொண்டு,

"என்ன செய்யுது மாமா...?" என்று கவலையுடன் கேட்க... அவனோ கண்கள் மின்ன அவளைத் திரும்பி பார்த்தான்...

"அடிச்ச சரக்கு சரியில்லை போலிருக்கு..." என்றான் அவன் பரிதாபமாய்...

அதைக் கேட்டு அவள் அவனைக் கோபமாய்ப் பார்க்க... அப்போது மீண்டும் அவனுக்கு ஓங்கரித்துக் கொண்டு வந்தது...

"யோவ் வெள்ள பன்னி, என் மூஞ்சியில் வாந்தி எடுத்து தொலைக்காதே... திரும்பி வாந்தி எடு..." என்று சிடுசிடுத்தபடி அவள் மூக்கை பிடித்துக் கொண்டு குளியலறையை விட்டு வெளியேறி விட்டாள்...

'உன் மரியாதையை நீயே கெடுத்துக்கிட்டியே யுகேன்' என்று மனதிற்குள் புலம்பியபடி அவன் வாந்தி எடுத்தான்...

வாந்தி எடுத்து முடித்ததும் அவன் ஒரு குளியல் போட்டு விட்டு புத்துணர்ச்சியோடு அறைக்குள் வந்த போது அவள் அவனிடம் உப்பு போட்ட எலுமிச்சை சாறை நீட்டினாள்...

"ஏய் கில்மா, உனக்கு எப்படிடி இது எல்லாம் தெரியும்...? நீயும் சரக்கு அடிப்பியா...? ஹப்பாடி, இனி கவலையில்லை... நீயும், நானும் சேர்ந்து தண்ணி அடிக்கலாம்..." என்று உற்சாகமாய்க் குதூகலித்தவனை அவள் கொலைவெறியுடன் பார்த்தாள்...

"என்ன கர்மத்தைய்யா குடிச்ச...?" மரியாதை பன்மை அவளிடம் இருந்து விடைப்பெற்று இருந்தது...

"அதுவா நேத்து கல்யாண வீட்டில் நாட்டு சரக்குன்னு கொண்டு வந்து கொடுத்தாங்க... குடிக்கும் போது நல்லா தான் இருந்தது... அதுக்கு அப்புறம் தான் அது வேலையைக் காட்டிருச்சு கில்மா..." என்றான் அவன் பரிதாபமாக ஒரு பெரிய ஏப்பம் விட்டபடி...

அதில் முகத்தைச் சுளித்துக் கொண்டு தள்ளி நின்றவள், "அது என்ன கில்மா...? ஐட்டம் பேரு மாதிரி..." என்று அருவருப்புடன் முகத்தைச் சுளித்தவளை கண்டு அவன் முகமெல்லாம் பிரகாசமாக,

"ஓய், ஐட்டம் எல்லாம் உனக்குத் தெரியுமா...? எங்க சினி ஃபீல்டில் கூடப் படத்தில் ஒரு ஐட்டம் டான்ஸ் வைப்போம் தெரியுமா...?"

அவன் திரைத்துறையில் இருப்பது அப்போது தான் அவளுக்குத் தெரியும்... அதிர்ச்சியில் அவளது விழிகள் விரிந்தது...

"நீ... நீங்க சினி ஃபீல்டிலா இருக்கீங்க...?" அவளது திணறல் அவனுக்குச் சிரிப்பை வரவழைத்ததோ என்னமோ... வாய்விட்டு சிரித்தவன்,

"ஆமாம் கில்மா..." என்றபடி அவளைக் கைப்பிடித்துத் தன் அருகில் உட்கார வைக்க முயல...

"என்னைத் தொடாதீங்க..." என்றவள் அவனிடம் இருந்து விலகி தள்ளி நின்றாள்...

"தொடாம இருப்பதற்கா உனக்குத் தாலி கட்டியிருக்கிறேன்..." என்றபடி அவன் அவளை எட்டிப்பிடித்து இழுக்க... அதில் அவள் நிலைத்தடுமாறி அவன் மீதே சாய்ந்தாள்...

மனைவியைத் தன் மீது போட்டுக் கொண்டு யுகேன் அப்படியே படுக்கையில் சாய்ந்தான்...

"என்னை விடுங்க..." என்று அவள் அவனிடம் இருந்து திமிறி விடுபட முயல...

"விடுங்க மாமான்னு சொல்லு... விடறேன்..."

"அதெல்லாம் சொல்ல முடியாது..." என்று அவள் முறுக்கி கொள்ள...

"அப்படின்னா நானும் விட முடியாது..." என்று கூறியவன் அவளது கழுத்தில் முகம் புதைத்து வாசனை பிடித்துக் கொண்டே,

"எந்தப் பெண்ணிடமும் இல்லாத ஒன்று... அது ஏதோ உன்னிடம் இருக்கிறது கில்மா..." என்று அவன் பாட்டாகவே படிக்க...

"யோவ், கில்மான்னு சொன்ன அப்புறம் நான் கொலைக்காரி ஆகிருவேன்..." என்று அவள் அவனது கழுத்தை நெறிக்க வர...

"ஐயோ கொல்றாளே... யாராவது காப்பாத்துங்க..." என்று அலறியவனின் வாயை கை கொண்டு மூடியவள்,

"வாயை மூடிட்டு சும்மாயிருய்யா..." என்க...

அவளது உள்ளங்கையில் ஆசையுடன் முத்தமிட்டவன், "உன் பெயரை எப்படிச் சுருக்கி கூப்பிடலாம்ன்னு யோசிச்சேன்... அகில், கில்யா, ஆயா..." இப்படி அடுக்கி கொண்டே போனவனைக் கண்டு அவள் முறைக்க...

"அப்படி எல்லாம் உன்னைக் கூப்பிடுவேனா கில்மா... அப்புறம் அகில்ம்மான்னு கூப்பிடலாம்ன்னு யோசிச்சேன்... அகில்ம்மா, அகில்ம்மான்னு சொல்லி பார்த்துக்கிட்டு இருக்கும் போது தான் இந்தக் கில்மா க்ளிக்காச்சு... அப்படியே கிக்காவும் இருந்துச்சு... அதான் கில்மான்னு கூப்பிட்டேன்..." முகம் மலர கூறியவனைக் கண்டு அவள்,

'ஸ்சப்பா, அடங்க மாட்டேங்கிறானே...' என்று அலுப்பும், கோபமுமாய் அவள் கணவனை முறைத்தாள்...

"கில்மா தான்டி கிக்கா இருக்கு... இம்புட்டு அழகான பொண்டாட்டியை இப்படித் தான் கவர்ச்சியா கூப்பிட்டு கொஞ்சணும்..." என்று சிறிதும் லஜ்ஜை இல்லாதவனாய்

கூறியவனை என்ன செய்தால் தகும்? என்று ஆத்திரத்துடன் பார்த்தவளின் இதழ்கள் துடித்தது கண்டு 'இது தான் சரியான சந்தர்ப்பம்' என்றெண்ணிய அந்தக் கள்வன் தனது இதழ்களால் முற்றுகையிட்டு காதல் யுத்தம் செய்யத் தயாராகினான்...

முதல் இராத்திரியில் கூடக் கணவனைத் தைரியமாக எதிர் கொண்ட பெண்ணவளால் இன்று ஏனோ அப்படி எதிர் கொள்ள முடியாது அவனது கைகளில் உணர்வு பெருக்கில் துணியாய் துவண்டாள்... அவளது நெகிழ்வு கண்டு அவன் மனம் மகிழ்ந்தவனாய் தன் மீதிருந்தவளை படுக்கையில் கிடத்தி கணவனாய் புயல் போல் அவளை ஆக்கிரமித்தான்...

அந்தக் கணம் பெண்ணவள் மனம் விழித்துக் கொண்டது... வெறிக் கொண்டது போல் அவனைத் தன்னிடம் இருந்து பிய்த்து எடுத்து தள்ளியவள் வேகமாய்ப் படுக்கையில் இருந்து எழுந்து நின்றாள்...

"என் பொறுமையை ரொம்பச் சோதிக்கிற அகல்யா..."

அடக்கப்பட்ட சினத்துடன் யுகேன் சீறினான்... முதலிரவில் காயப்பட்ட அவமானம் இப்போதும் அவனுள் பூதாகரமாய் எழுந்து நின்று அவனை உயிரோடு கொன்றது...

"அதைத் தான் நானும் சொல்கிறேன்... என் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு..."

"நீ தான்டி என் உயிரை வாங்கிற... நானா உன் உயிரை வாங்கிறேன்...?"

"ஆமாம், நீங்க தான் என் உயிரை வாங்கிறீங்க... காதல் இல்லாமல் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இதோ இப்போ இப்படி என் கூட இழைஞ்சிக்கிட்டு இருக்கிறதுக்குப் பெயர் என்ன...? நீங்க பழகிற ஆயிரம் பெண்களோட ஆயிரத்து ஒண்ணா என்னை நினைச்சிட்டீங்களா...? அதுக்கான ஆள் நானில்லை..." என்று ஆத்திரத்துடன் அவள் கத்தினாள்...

"ரோட்டில் போகிற ஒரு பொண்ணை விடறது கிடையாது... அப்படிப்பட்ட கடைஞ்செடுத்த பொறுக்கி நீங்க... நீங்க உங்க மனசில் என்னைப் பத்தி என்ன நினைச்சிக்கிட்டு இருக்கீங்க...? நீங்க கூப்பிட்ட மாதிரி கில்மான்னா...? சத்தியமா நான் அப்படிப்பட்ட பெண் இல்லை..." என்று இரு கரம் கூப்பி அழுதவளை காண சகிக்காது அவன் பால்கனியில் வந்து அமர்ந்து கொண்டான்...

அங்கிருந்த சிறு மேசையின் இழுப்பறையில் இருந்த சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டு நிதானமாய் இழுத்தவன் மனைவியின் வார்த்தைகளை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்தான்... தன்னை ஒரு பொம்பளை பொறுக்கி என்று சொல்லாமல் சொன்ன மனைவியைக் கண்டு அவனது ஆத்திரம் அதிகரித்தது...

'நீயில்லைன்னா ஊர், உலகத்தில் பொண்ணா இல்லை... போடி...' என்று அவன் அலட்சியமாய்க் கூறிக் கொண்டான்... ஆனாலும் அவனது மனம் அடங்காது அந்தப் பட்டிக்காட்டு பெண்ணவளை சுற்றி சுற்றி வந்தது...

"ச்சே, சரியான இம்சை... என் உயிரை வாங்குது... எந்த ராகு காலத்தில் இவள் கழுத்தில் தாலி கட்டினேனோ..." என்று கோபமாய்க் கையிலிருந்த சிகரெட்டை சுண்டி விட்டபடி எழுந்தவன் மீண்டும் அறைக்குள் நுழைந்தான்...

அங்குத் தரையில் அமர்ந்து கொண்டு முழங்காலில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்த அகல்யாவை கண்டும் காணாதவனாய் உடை மாற்றியவன் கார் சாவியை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறி விட்டான்...

முதன்முறையாகக் கணவனது உதாசீனத்தில் அகல்யா பேயறைந்தது போல் அமர்ந்திருந்தாள்... கணவன் தன்னை விட்டு விலகி செல்வது போல் தோன்ற, அவளது மனம் ஊமையாக அழுதது...

**********************

அன்று தங்கையின் பிறந்தநாள் என்பதால் அதிகாலையில் கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட்டு விட்டு அவளுக்காகப் பிரசாதத்துடன் அவளது வீடு தேடி வந்துவிட்டான் சத்யமூர்த்தி... நேரே வரவேற்பறைக்கு வந்தவன் அங்கு அமர்ந்திருந்து செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்த ஒரு குட்டி பெண்ணிடம்,

"பாப்பா, அகல் அத்தையைப் போய்க் கூட்டிட்டு வாம்மா..." என்க...

"வாட்...? நான் உனக்குப் பாப்பாவா...?" என்று பத்மவர்ஷினி கோபத்துடன் செய்தித்தாளை இறக்கியபடி அவனிடம் சண்டைக்கு வந்தாள்...

இளஞ்சிவப்பு நிறத்திலான முக்கால் கால்சட்டையும், கையில்லாத மேல் சட்டையுமான இரவு உடையில், முதுகு வரை அடர்ந்திருந்த முடியை தூக்கி கொண்டை போட்டுக் கொண்டு அமர்ந்திருந்த பத்மவர்ஷினி உண்மையில் இடுப்பில் தூக்கி வைத்துக் கொள்ளும் அளவிற்கு அநியாயத்திற்குச் சிறு பெண்ணாகக் காட்சியளித்தாள்...

மரப்பாச்சி பொம்மை போலிருந்த பெண்ணவளின் அழகு அந்த ஆறடி அய்யனார் சிலை போலிருந்த ஆண்மகனை முற்றிலும் வெட்டி சாய்த்தது, சுகமாய்...!!!

தொடரும்...!!!

## உயிர் - 5

"ஹௌ டேர் யூ ஆர் சேயிங் லைக் திஸ் மேன்...? என்னைப் பார்த்தா உனக்கு என்ன சின்னப் பாப்பா மாதிரியா தெரியுது...?" என்று கோபமாய்க் கத்தியபடி சோபாவில் இருந்து துள்ளி குதித்து எழுந்த பத்மவர்ஷினியின் அழகில் சத்யமூர்த்தி இமைக்க மறந்து போனான்...

மிக அருகாமையில் நின்றிருந்த பெண்ணவளிடம் இருந்து வந்த புதுமையான நறுமணம் இதுவரை அவன் உணர்ந்தறியாத நறுமணம்...

'எல்லோரும் குளிச்சா தான் வாசனையா இருப்பாங்க... ஆனா இந்தம்மிணி மட்டும் எப்படிக் குளிக்காம இருந்தா கூட இப்படி வாசனையா கும்முன்னு இருக்குது...?'

அவன் மனதிற்குள் அதிமுக்கியமான ஆராய்ச்சி கேள்வி ஓடி கொண்டிருந்தது... விட்டால் பாண்டிய மன்னன் போல் ஊரை கூட்டி பஞ்சாயத்து வைத்து தனது சந்தேகத்தை முன் வைத்திருப்பான் போலும்...

"ஹலோ..." தனது முகத்திற்கு நேரே சொடக்கு போட்டு அழைத்தவளை கண்டு சுயவுணர்வு பெற்றவன் அவளைப் பார்த்தான்...

"என்ன கொழுப்பா உனக்கு...? நான் பாப்பாவா...?" என்று கோபத்தில் வேக வேகமாய் மூச்சு விட்டபடி நின்றிருந்தவளின் இளமை அழகுகள் சுவாசத்தின் வேகத்திற்கேற்ப அழகாய் மேலும் கீழும் ஏறியிறங்கியது...

"கண்ணு இருக்கிறவன் யாரும் அப்படிச் சொல்ல மாட்டான்..." என்றவனின் பார்வை அவளைத் தலை முதல் கால் வரை அழுத்தமாய்ப் பார்த்து வைத்தது...

அவனது லேசர் பார்வையில் பாவையவள் வெட்கம் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை... அவளது விழிகள் நிலம் பார்க்கவில்லை... மாறாக அவளும் தனது கைகளைக் கட்டி கொண்டு பதிலுக்கு அவனை அழுத்தமாய்ப் பார்த்து வைத்தாள்... அதில் அவன் தான்

தனது பார்வையைத் திருப்பிக் கொள்ள வேண்டியதாய் போயிற்று...

"அம்மிணியோட அக்கா பொண்ணுன்னு நினைச்சேன்..." என்றான் அவன் சங்கடமாய்...

அவளது அக்கா சுஜீதாவின் மகள் என்று அவளை நினைத்துக் கொண்டான் போலும்... அதைக் கேட்டு அவளது இதழ்களில் புன்னகை நெளிந்தது...

"இனி என்னைப் பார்த்து பாப்பான்னு சொன்ன நடக்கிறதே வேறு..." என்று அவள் அவனை மிரட்ட...

"இனி சத்தியமா சத்யா உன்னைப் பார்த்து பாப்பான்னு சொல்ல மாட்டான்... ஆனா..." என்று இழுத்து நிறுத்தியவனைக் கண்டு அவள் புருவம் உயர்த்தி,

"ஆனா...?" என்று கேள்வியாய் பார்க்க...

"பூனைக்குட்டின்னு சொல்வேன்..." என்றவனைக் கண்டு,

"சத்யா, வார்த்தை மாறுது... ஜாக்கிரதை..." என்று அவள் கோபமாய் இரைய...

அவனோ அவளது கோபம் கண்டு வாய்விட்டுச் சிரித்தான்...

"போடா கருவாயா..." அவன் மீது கோபம் கொண்டு நகரப் போனவளின் கைப்பிடித்து நிறுத்தினான் அவன்...

"எதுக்கு இத்தனை கோபம் அம்மிணி...?" என்று கேட்டபடி அவள் முன் வந்தவன் தனது கையிலிருந்த பிரசாதத்தை எடுத்து அவளிடம் நீட்டியபடி,

"வச்சுக்கோ அம்மிணி..." என்க...

அவனது கையிலிருந்த குங்குமத்தை பார்த்தவள் ஓரடி பின்னால் நகர்ந்தாள்... அவன் கேள்வியாய் அவளைப் பார்த்தான்...

"எனக்கு வேண்டாம்..." கைகள் இரண்டையும் கட்டி கொண்டு அவள் மறுத்தாள்...

"உன் கிட்ட தான் முதன்முதலா கொடுக்கிறேன்... இன்னும் அகல்க்கு கூடக் கொடுக்கலை..." என்றவனை உற்று நோக்கினாள் அவள்...

"அன்னைக்குப் பூவுக்கு ஏற்பட்ட கதி இதுக்கு வேண்டாமேன்னு தான்..."

அவனது வார்த்தையில் அவளது விழிகள் ஒரு நொடி சுருங்கி விரிந்தது... அவ்வளவே... அவளது மனதில் என்ன இருக்கிறது என்று அவனுக்குச் சுத்தமாய் விளங்கவில்லை...

அவனை அவளுக்குச் சுத்தமாய்ப் பிடிக்காது... அது அவனுக்கே தெரியும்... அதற்கு ஏற்றார் போன்று அவளும் அவனைப் போட்டு பாடாய் படுத்தி எடுக்கிறாள்... அதே சமயம் அவன் சந்திரமதியோடு பழகுவதும் அவளுக்குப் பிடிக்கவில்லை... பெரும் கோபம் கொண்டு அவனை முறைக்கிறாள்... தன்னைப் பற்றி அவள் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் அவன் தான் வேதனையில் கிடந்து தவிக்கின்றான்...

"இப்போ நீ எடுத்து வைக்கலைன்னா நானே வச்சு விடுவேன்... ஏற்கெனவே நான் ஒரு முறை தப்பு பண்ணியவன்... அதனால் இரண்டாம் முறை தப்பு பண்ண கொஞ்சமும் யோசிக்க மாட்டேன்..." என்றவனைப் பார்த்தவளின் விழிகளில் சினம் ஏறியது...

"அதுக்கான தண்டனையை நான் உனக்குக் கொடுக்க வேண்டாமா...?" கோபத்துடன் வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவளை கண்டு அவன் கொஞ்சமும் அசரவில்லை...

"அதைத் தண்டனைன்னு நினைச்சா தான் தண்டனை... இல்லைன்னா...?" என்று புன்சிரிப்புடன் அவளைப் பார்த்தவன் தனது கையிலிருந்த குங்குமத்தை எடுத்து உரிமையோடு அவளது நெற்றியில் வைத்து விட்டபடி,

"கோவில் பிரசாதமா நினைச்சு சந்தோசமா ஏத்துக்குவேன்... அதுவும் உனக்காக மட்டுமே அம்மிணி..."

என்றவனின் கையைப் பட்டென்று தட்டி விட்டவள் கோபமாய் அங்கிருந்து சென்றுவிட்டாள்...

அதுவரை சத்யமூர்த்தியின் முகத்தில் இருந்த புன்னகை மறைந்து அதில் வேதனை தோன்றியது... 'அவளது உதாசீனமும், புறக்கணிப்பும் உனக்கு என்ன புதிதா?' என்று அவனது மனம் அவனை ஆறுதல்படுத்தியது...

இன்னமும் தங்கை எழுந்து வரவில்லை... அதனால் அவன் வெளியில் இருந்த தோட்டத்திற்கு வந்தான்...

அறைக்குள் வந்த பத்மவர்ஷினி அங்கிருந்த கண்ணாடி முன் வந்து நின்று தன்னைப் பார்த்தவள் தனது முகத்தைக் கண்டு அடுத்த நொடி வாய்விட்டு சிரித்து விட்டாள்... ஒரு ரூபாய் நாணய அளவிற்குப் பெரிதாகச் சத்யமூர்த்தி வைத்து விட்ட குங்குமம் அவளைப் பார்த்துச் சிரித்தது...

'என் செல்ல கருப்பட்டி, என்னைப் பட்டிக்காட்டு மாரியாத்தாவா மாத்தாம விட மாட்ட போலிருக்கே...' என்று அவனை நினைத்து அவளுக்குச் சிரிப்பு பீறிட்டது... மீண்டும் மீண்டும் அந்தக் குங்குமத்தை பார்த்து கொண்டிருந்தவளின் மனம் சிறிது சிறிதாகக் கலங்க துவங்கியது... மனம் அத்தனை கலங்கிய போதும் அவளது விழிகள் சிறிதும் கலங்காது தைரியமாய் அந்தக் குங்குமத்தை பார்த்தது...

சிறு வயதில் இருந்து அவளுக்கு அழுவது பிடிக்காது... அடுத்தவர்களின் பார்வையை உறுத்தி தன் பக்கம் கழிவிரக்கத்துடன் ஈர்க்கும் கண்ணீரை ஏனோ அவளுக்குப் பிடிப்பதில்லை... இப்போதும் அவளது மனம் திக்குத் தெரியாது கலங்கி தவிக்கத் தான் செய்கிறது... ஆனால் அதற்காக எல்லாம் கலங்காது, அதற்கான தீர்வை நோக்கி அவளது மனம் பயணிக்கின்றது... இது தான் அவள்...

கண்ணாடியை விட்டு அகன்றவள் பால்கனியில் வந்து நின்று தோட்டத்தை வேடிக்கை பார்த்தாள்... அங்குச் சத்யமூர்த்தி வேட்டியை மடித்துக் கட்டி கொண்டு தோட்ட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்... அத்தோடு

தோட்டக்காரரிடம் ஏதோ சொல்லி கொண்டிருந்தான்... அந்தக் கணம் அவனது முகத்தில் அத்தனை மலர்ச்சி தெரிந்தது... அவனது பிடித்தம் இது தான் என்பது அப்பட்டமாய் அவனது முகத்தில் தெரிந்தது...

அவள் அவனையே இமைக்க மறந்து பார்த்திருந்தாள்... அவனை அவளுக்கு மிகவும் பிடித்திருக்கிறது... அதே சமயம் அவன் மீது கோபமும் இருக்கிறது... கோபத்தை வெளிப்படையாய் காட்டி கொள்ளும் அவளால் தனது பிடித்தத்தை அப்படி வெளிப்படையாய் காட்டி கொள்ள முடியவில்லை... அதற்குக் காரணம் அவளது அந்தஸ்து... அதைத் தாண்டி செல்ல அவளுக்கு விருப்பம் இல்லை... அதை விட அவளால் இன்னமும் ஒரு தெளிவான முடிவு எடுக்க முடியவில்லை... அதனால் தான் அவள் சத்யமூர்த்தியை போட்டு பாடாய் படுத்துகிறாள்... அதையும் அவன் பொறுமையுடன் சகித்துக் கொண்டு திமிராய் நிமிர்ந்து நிற்கிறான்... அவனை நினைத்து அவளது இதழ்களில் மந்தகாச புன்னகை ஒன்று தோன்றியது...

'டேய் கருப்பட்டி, ஆணழகன்டா நீ' என்று அவள் மனதிற்குள் அவனைக் கொஞ்சி கொண்டாள்...

அவளது கொஞ்சல் மொழி அவனது காதுகளைச் சென்றடைந்ததோ என்னமோ... அவன் சட்டென்று அவள் நின்றிருந்த பால்கனியை திரும்பி பார்த்தான்... அவன் திடுமென இப்படிப் பார்ப்பான் என்று தெரியாததால் அவளும் திகைத்தபடி அவனைப் பார்த்திருந்தாள்... அவளைக் கண்டதும் அவன் எழுந்து நின்றான்...

'இப்போ என்ன செய்ய...? உள்ளே ஓடி போகணுமா...? வேண்டாம், வேண்டாம்... நீ வெட்கப்பட்டு உள்ளே ஓடிட்டேன்னு இந்தக் கருப்பட்டி எசகுபிசகா நினைச்சுக்குவான்... இது தான் சாக்குன்னு அவனை நின்னு நிதானமா லுக்கு விடு...' அவளது மனம் அவளுக்கு அறிவுரை கூற... அதை அப்படியே அவள் செயலாற்றினாள்...

கரும்பச்சை நிற முழுக்கை சட்டையை முழங்கை வரை சுருட்டி விட்டபடி, வேட்டியை மடித்துக் கட்டி கொண்டு கம்பீரமாக அவன் நின்றிருந்த அழகை இமைக்காது பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் அவள்...

'ஆளும், மூஞ்சியும் தான் பார்க்க சகிக்கலை... ட்ரெசாவது கொஞ்சம் பார்க்கிற மாதிரி போடுறானா...? பட்டிக்காடு, பட்டிக்காடு...' மனதில் அவனைச் செல்லமாய் வைது கொண்டாள்...

"ஏனுங்கம்மிணி, ரோசாப்பூ வேணுமா...?" என்று அவன் கத்தி அவளிடத்தில் கேட்க...

அவனது சத்தமான குரல் பக்கத்து தெரு வரை கேட்டிருக்கும்... அவள் அவனை முறைத்து பார்த்துவிட்டுத் தலையில் அடித்தபடி அங்கிருந்து சென்றுவிட்டாள்...

அவனோ புரியாதவனாய் தோளை குலுக்கி கொண்டு அங்கிருந்த கல்மேடையில் அமர்ந்தான்... அவனது மனம் அவளைத் தான் நினைத்துக் கொண்டிருந்தது... அவளிடம் உரிமை கொண்டு நெருங்கவும் முடியவில்லை... உறவு கொண்டு விலகவும் முடியவில்லை... என்ன செய்வது என்று தெரியாது வானத்தை அண்ணாந்து பார்த்தான்... செய்த தவறுக்கு பிராயசித்தமாய் அவளிடம் தன்னையே ஒப்பு கொடுக்க அவன் தயாராக இருந்தான்... அவள் கொடுக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்ளவும் அவன் தயாராக இருந்தான்...

அவன் இங்கு வேலைக்கு வந்தது பணத் தேவைக்காக என்பது எல்லாம் ஒரு சாக்கு தான்... அவன் இங்கே வந்ததற்குக் காரணம் அவளின் மனநிம்மதிக்காக, அவளுக்காக மட்டுமே... கோயம்புத்தூரில் இதே சம்பளத்தில் ஒரு வேலையை அவனால் தேடி கொள்ள முடியாதா என்ன...? அதற்காக அவன் ஏன் சென்னை வரை, அதுவும் அவளது நிறுவனத்தில் வந்து வேலைக்குச் சேர வேண்டும்... எல்லாமே அவளுக்காகத் தான்... அவனது ஒவ்வொரு அசைவும் அவளுக்காகத் தான்... ஆனால் அவள்

அதை எல்லாம் புரிந்து கொள்வாளா...? அதுவும் அவனுக்குத் தெரியவில்லை...

'ஒரு வருசம் என் கம்பெனியில் வந்து வேலையைப் பாரு... உனக்கு வேண்டியதை உனக்கே உனக்குன்னு நான் கொடுத்து விடுகிறேன்...' என்று கூறிய அவளது வார்த்தைகள் இன்னமும் அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது...

அவனுக்கு வேண்டியது கிடைத்தாலும் அவனால் சந்தோசமாக இருக்க முடியுமா...? முடியவே முடியாது என்றே அவனுக்குத் தோன்றியது... பத்மவர்ஷினி சந்தோசமாய் அவளுக்கான வாழ்க்கையை வாழ வேண்டும்... அதை அவன் கண்ணார பார்த்து சந்தோசப்பட வேண்டும்... அதில் அவனுக்கு எந்தவித வருத்தமும் இல்லை... அவனது மனதில் இருந்தது எல்லாம் அவளது சந்தோசம் மட்டுமே...

"அண்ணா..."

அகல்யாவின் அழைப்பில் திரும்பி பார்த்தவன் அவளைக் கண்டு புன்னகைத்தான்...

"வந்து ரொம்ப நேரமாச்சாண்ணா...? எழுப்பி விட்டிருக்கலாமே..."

"இப்ப தான்ம்மா... உனக்காக நான் காத்துக்கிட்டு இருக்க மாட்டேனா..." என்றவன் அவளை வீட்டினுள் அழைத்துச் சென்று கோவில் பிரசாதத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான்... அவள் அதை எடுத்து நெற்றியில் வைத்து கொண்டாள்...

"இந்தப் பிறந்தநாள் போல் இனிவரும் பிறந்தநாளும் இதே சந்தோசத்தோடு நீ கொண்டாடணும் அகல்..."

போலி பூச்சின்றி இதமான வார்த்தையில் அவன் தங்கையை வாழ்த்தினான்... பின்பு அவளுக்காக வாங்கி வந்திருந்த சுடிதாரை எடுத்து அவளிடம் கொடுத்தான்...

"எதுக்குண்ணா..." என்று கேட்டாலும் அவள் அதைச் சந்தோசத்துடன் வாங்கிக் கொண்டாள்...

"என்னோட முதலாளியம்மா அட்வான்ஸ் பணம் கொடுத்தாங்க... அதில் வாங்கினேன்..." என்றவனின் பார்வை அங்கு வந்து கொண்டிருந்த பத்மவர்ஷினியை பார்த்தது...

சற்று முன் இரவு உடையில் சிக்கென்று இருந்த சின்னப் பெண் பத்மவர்ஷினி இவள் இல்லை... பெண்புலி போன்று தொழிலில் உறுமும் தொழிலதிபர் பத்மவர்ஷினி இவள்... அடர் பச்சை நிறத்தில் மெல்லிய சரிகையிட்ட மென்பட்டு புடவையில் அவள் தங்கமாய் ஜொலித்தாள்... ஆளை அசரடிக்கும் அவளது அழகு கண்டு அவன் மனதிற்குள் உருகினாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது கல்லென இளகாது நின்றிருந்தான்...

அவனது உணர்வற்ற தன்மையைப் பார்த்தபடி அவள் ஒவ்வொரு படியாய் இறங்கி வந்து கொண்டிருந்தாள்... அதே போல் 'தான் அழகு' என்கிற அவளது கர்வமும், திமிரும் கூடவே சேர்ந்து கீழிறங்குவது போல் ஒரு தோற்றம் அவளுள்...

'உன்னோட ஷர்ட் கலருக்கு மேட்சா க்ரீன் கலர் சேரி கட்டிட்டு வந்தால் பெரிய இவன் மாதிரி முறைச்சுக்கிட்டு நிற்கிற... இந்த மூஞ்சிக்கு என்னைப் பிடிக்கலையாக்கும்... உனக்கு எல்லாம் நான் ரொம்பவே அதிகம்டா கருவாயா...' அவள் மனதிற்குள் அவனை வறுத்தெடுத்தபடி அங்கு வந்தமர்ந்தாள்...

அதற்குள் வீட்டினர் எல்லோரும் அங்குக் கூடிவிட்டனர்... அகல்யாவிற்குப் பிறந்தநாள் என்று தெரிந்ததும் எல்லோரும் அவளை மனதார வாழ்த்தினர்... அகல்யா கோவில் பிரசாதத்தை எல்லோருக்கும் கொடுத்தது போல் இயல்பாய் பத்மவர்ஷனியிடம் நீட்டி விட்டு பின்பு திருதிருவென முழித்தாள்... அதற்கு அவசியமே இல்லை என்பது போல் அவள் அதைக் கை நீட்டி எடுத்து

கொண்டாள்... அப்போது சத்யமூர்த்தி அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்...

அவன் பார்ப்பது தெரிந்து அவள் வேண்டுமென்றே அந்தக் குங்குமத்தை எடுத்து தனது உச்சி வகிட்டினை நோக்கி கொண்டு செல்ல... அதைக் கண்டு அவன் பயத்தில் இமைக்க மறந்து அவளைப் பார்த்திருந்தான்... பயத்தில் அவனது காதோரமாய் வழிந்த வியர்வை துளியில் அவளது எரிந்து கொண்டிருந்த மனம் சிறிது சமன்பட்டது... நொடியில் அவனது இரத்த அழுத்தத்தை எகிற செய்தவள் பின்பு நிதானமாய்க் குங்குமத்தை தனது நெற்றியில் சிறு தீற்றலாய் தீட்டி கொண்டாள்... அதன் பின்பே அவனுக்கு நிம்மதியாய் இருந்தது...

'ராட்சசி, உயிரோடு கொல்றதுக்குன்னே என்னை இங்கே வரவழைச்சிருக்கா போலிருக்கே...' மனதில் அவன் நொந்து நூடில்சாகி போனான்...

********************

அகல்யா கோவில் பிரசாதத்தை எடுத்துக் கொண்டு தனது அறைக்கு வந்தாள்... அப்போது குளித்து முடித்து உடை மாற்றிக் கொண்டிருந்த யுகேனை கண்டு அவளது விழிகள் வியப்பில் விரிந்தது...

'எப்போதும் இந்நேரம் இவங்களுக்கு அர்த்த ராத்திரியால்ல இருக்கும்... இன்னைக்கு என்ன புதுசா...?' என்று நினைத்தபடி அவள் அவனை அதிசயமாய்ப் பார்த்திருந்தாள்... அவன் உடை மாற்றியதும் அவன் அருகில் சென்று பிரசாதத்தை அவனிடம் நீட்டினாள்...

"என்ன...?"

"கோவில் பிரசாதம்... அண்ணன் கொடுத்துச்சு..." ஏனோ தனக்குப் பிறந்தநாள் என்று தானே வலிய சென்று அவனிடம் சொல்ல அவளுக்கு மனம் வரவில்லை...

அவன் ஒன்றும் கூறாது அதை எடுத்து நெற்றியில் வைத்து கொண்டவன் பின்பு அலமாரியை திறந்து ஒரு பையை

எடுத்து வந்து அவளிடம் நீட்டினான்... அவள் வியப்பில் விழி விரிக்க...

"ஹேப்பிப் பேர்த்டே..." என்றவன்,

"நான் எதையும் மறக்க மாட்டேன்... என் கடமையையும் சேர்த்து..." என்க...

'அப்போ நான் மறந்து போனேனா...?' அவள் விழிகளால் அவனிடம் வினவினாள்...

அதை அவன் உணர்ந்தாலும் ஒன்றும் பேசாது தோளை குலுக்கி கொண்டு சென்றுவிட்டான்... அவளோ திக்பிரம்மை பிடித்தபடி அவனைப் பார்த்திருந்தாள்... யுகேனோ மனதில் சந்தோசத்துடன் சென்று கொண்டிருந்தான்... அவனது விலகல் மனைவியவளை பாதிக்கிறது என்பதே அவனது உற்சாகத்திற்குக் காரணம்... விரைவில் அவளைச் சரிப்படுத்தி விடலாம் என்கிற நம்பிக்கை அவனுள் வானளவு இருந்தது... பொறுமையில்லாத அவனும் பொறுமை கொண்டான் தனது மனைவியிடத்தில்... ஏனெனில் அவனுக்கு அவளை மிகவும் பிடித்திருந்தது...

பட்டிக்காட்டு பஞ்சு மிட்டாயிடம் விரும்பியே காதல் கொண்டது பட்டணத்துச் சாக்லேட்...

காலை உணவு முடித்து விட்டுக் கை கழுவ வந்த பத்மவர்ஷினி அப்போது தான் கை கழுவி விட்டு திரும்பிய சத்யமூர்த்தியின் மேல் ஏதோ யோசனையில் சென்று இடித்துக் கொண்டாள்...

"மன்னிச்சுக்கோ அம்மிணி..." என்று பதறி போய் அவன் விலக...

அவளோ நிதானமாய் அவனை விட்டு விலகினாள்... அப்படி விலகும் போது அவனது நெஞ்சில் துளிர்த்த வியர்வை துளிகள் அவளது உதடுகளில் உரசி சென்றது...

"அம்மிணி தெரியாம..." என்று அவன் மேலே பேச முடியாது திணறினான்...

அவள் கையை உயர்த்தி அவன் பேசுவதைத் தடை செய்தவள் 'போ' என்பது போல் சைகை செய்ய... அவன் தவறு செய்தவன் போல் தலையைக் குனிந்து கொண்டு சென்றுவிட்டான்...

தண்ணீர் குழாயை திறந்துவிட்டுக் கை கழுவி கொண்டிருந்த பத்மவர்ஷினி அங்கிருந்த கண்ணாடியில் தெரிந்த தனது முகத்தினைப் பார்த்தாள்... தனது உதட்டில் இன்னமும் அவனது வியர்வை துளி ஒட்டி கொண்டிருப்பது போல் ஒரு பிரம்மை அவளுள்... அந்த வியர்வை துளி அவளது மனதில் குளுமையையும், வெம்மையையும் ஒருங்கே தோற்றுவித்தது... இரண்டையும் தாங்க முடியாதவளாய் அவள் தனது இதழ்களைத் தண்ணீர் விட்டு அழுத்தமாய்த் தேய்த்து கழுவினாள்...

உதட்டில் உள்ளதை கழுவ முடிந்தவளால் ஏனோ மனதில் உள்ளதை கழுவ முடியவில்லை...

வாசலுக்கு வந்த சத்யமூர்த்திக் குனிந்து தனது நெஞ்சினை பார்த்தான்... கருமை நிற அவனது நெஞ்சில் பத்மவர்ஷினியின் இளஞ்சிவப்பு நிற உதட்டுச் சாயம் அழுத்தமாய்ப் பதிந்திருந்தது... அதை மெல்ல வருடி விட்டு கொண்டவனின் விரல்கள் அவனது நெஞ்சின் திண்மையை உணராது பெண்ணவளின் மென்மையை உணர்வது ஏனோ... அவன் திடுக்கிட்டவனாய் பெரும் அதிர்வுடன் தனது விரலை எடுத்து விட்டான்...

அந்நேரம் அவன் அருகில் கேட்ட செருப்பின் சத்தத்தில் இருந்து அவள் தான் வருகிறாள் என்பது அவனுக்கு நன்கு தெரிந்தது...

"ஏய் ரௌடி..." என்று அவள் சொடக்கிட்டு அவனை அழைக்க... அவனது மயக்கம் மறைந்து அவனுள் கோபம் எழுந்தது...

"என்னைப் பார்த்தா உனக்கு என்ன ரௌடி மாதிரியா தெரியுது...? ரௌடி என்ன பண்ணுவான்னு தெரியுமா...?" என்று கோபமாய்த் திரும்பியவனின் விழிகள் அவளது இதழ்கள் மீது அழுத்தமாய்ப் பதிந்தது...

சற்று முன் அவன் உணர்ந்த இதழின் மென்மையைச் சுவைத்து பார்த்திட அவனது மனம் பேராசை கொண்டது கண்டு அவன் பெரிதாய் அதிர்ந்து போனான்...

"முதலில் உன் ஷர்ட் பட்டனை போடு... எப்போ பார்த்தாலும் திறந்து போட்டு காண்பிக்க அது என்ன எக்ஸ்சிபிசனா...?" என்று அவள் சிடுசிடுத்ததும் தான் அவனுக்கும் தான் செய்த தவறு புரிந்தது...

"என்னுடைய சட்டை, என்னுடைய இஷ்டம்... உனக்கு என்ன வந்தது அம்மிணி...?" என்று அலட்சியமாய்க் கூறியபடி சட்டையின் இன்னொரு பொத்தானையும் கழட்டி விட்டு விட்டுச் சட்டை காலரை சற்று மேலேற்றி விட்டுக் கொண்டு அவன் அவளை மிதப்பாய் பார்த்து வைத்தான்...

"உன் கிட்ட மனுசன் பேசுவானா...?" என்று கோபமாய் முணுமுணுத்தபடி அவள் அங்கிருந்து செல்ல...

செல்லும் அவளைப் பார்த்தபடி அவன் சிரித்துக் கொண்டே தனது சட்டையை ஒழுங்காக இழுத்து விட்டு சமத்தாய் எல்லாப் பொத்தான்களையும் போட்டுக் கொண்டான்...

இருவரையும் ஜீவாவின் லேசர் விழிகள் கண்டு கொண்டது... இதற்கு என்ன முடிவு கட்டுவது? என்று தெரியாது யோசித்தபடி அவன் அப்படியே அமர்ந்து விட்டான்...

அதன் விளைவு மறுநாளே பத்மவர்ஷினிக்கு மாப்பிள்ளை பார்த்து விட்டான்... மணமகன் வீட்டிற்கு ஒரே பையன்... இவர்களுக்கு இணையான அந்தஸ்தோடு உள்ளவர்கள்... மணமகன் தொழிலில் திறமையானவன்... வெளிநாடு சென்று படித்திருக்கிறான்... எல்லாமே திருப்தியாக இருந்தது... வீட்டில் அனைவருக்கும் பிடித்திருந்தது...

"நீ என்ன சொல்ற வர்ஷூ...?" என்று கேட்டுக் கொண்டே ஜீவா மகளின் முகத்தை உன்னிப்பாய் கவனித்தான்...

"ம், நல்லாயிருக்கான் டாட்... மோசமில்லை..."

"அப்போ பெண் பார்க்க வர சொல்லவா...?"

"இந்தக் காலத்தில் இந்தச் சம்பிரதாயம் எல்லாம் தேவை தானா...?" என்று மகள் சலித்துக் கொள்ள...

"பையனோட தாத்தா, பாட்டி அந்தக் காலத்து ஆளுங்க... அதனால் பொண்ணு பார்க்கணும்ன்னு சொல்றாங்க..." அன்றே நிச்சயமும் செய்துவிட ஜீவா முடிவெடுத்து விட்டான்...

"எனக்கு ஒண்ணும் பிரச்சினையில்லை..." என்று சாதாரணமாகக் கூறிவிட்டு சென்ற மகளை அவன் யோசனையுடன் பார்த்தான்...

அவள் மனதில் என்ன இருக்கிறது என்று அவனுக்குத் தெரியவில்லை... ஒருவேளை தான் தான் தேவையில்லாது குழம்புகிறோமோ என்று நினைத்தவன் மகளைப் பற்றிய கவலையைக் கைவிட்டான்...

பெண் பார்க்கும் அன்று மாலை நான்கு மணி வரை நிறுவனத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தாள் பத்மவர்ஷினி... கோப்பில் போட வேண்டிய கடைசிக் கையெழுத்தையும் போட்டு விட்டு நிமிர்ந்தவள் 'இண்டர்காம்' எடுத்து சத்யமூர்த்தியை வரவழைத்தாள்...

அடுத்த ஐந்தாவது நிமிடம் கதவை தட்டி விட்டு உள்ளே நுழைந்து, "சொல்லுங்க மேடம்..." என்று பணிவுடன் வந்து நின்றவனைக் கண்டு அவள் என்ன மாதிரியாக உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை...

எத்தனையோ பெரிய பெரிய தொழில் கூட்டங்களில் அசால்ட்டாகப் பேசியவளுக்கு இன்று பேச முடியாது தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது... பின் முயன்று தொண்டையைச் செருமி கொண்டு,

"இன்னைக்கு என்னைப் பெண் பார்க்க வர்றாங்க...?" என்றவள் அவனது முகத்தை உற்று நோக்கினாள்...

"அப்படியா மேடம்... ரொம்பச் சந்தோசம்... வாழ்த்துக்கள்..." என்று வெகுசாதாரணமாகக் கூறியவனைக் கண்டு அவளுள் எரிமலை வெடித்தது...

"நீ என் அண்ணியோட அண்ணா இல்லையா...? சொல்வது என் கடமை..." முயன்று வரவழைத்த பொறுமையுடன் கூறியவளை கண்டு அவனது புன்னகை மாறவில்லை...

"கட்டாயம் வந்திர்றேன் மேடம்..."

இன்னமும் அவன் தன் பணிவை கைவிடாதது கண்டு அவளது கோபம் கண்டபடி எகிறிக் குதித்தது...

"வந்து...?" என்று கேள்வி கேட்டவளை அயராது பார்த்தவன்,

"ஏதாவது எடுபிடி வேலை இருந்தால் பார்ப்பேன்..." அவன் தன் நிலையை அவளுக்குத் தெளிவாக உணர்த்தினான்...

"உன் நிலையை நல்லா, தெளிவா தெரிஞ்சு வச்சியிருக்க..." என்றாள் அவள் நக்கலாய்...

"இல்லையா பின்னே..." என்றான் அவனும் சிறிதும் விட்டு கொடுக்காது...

"குட், கீப் இட் அப்..." என்றவளிடம்,

"அப்போ நான் லீவு எடுத்துக்குவா அம்மிணி..."

"ம், தாராளமா..."

அவள் கூறியதும் அவன் சந்தோசத்துடன் போய்விட்டான்... அவள் தான் யோசனையுடன் அமர்ந்திருந்தாள்... அதற்குள் அவளது அன்னை ஐந்து முறை அழைத்து விட்டார்... இதற்கு மேல் அமர்ந்திருந்தால் சரிவராது என்றெண்ணி அவள் வீட்டிற்குக் கிளம்பி சென்றாள்... அவளது கார் செல்லும் வழியில் இருந்த பேருந்து நிலையத்தில் சத்யமூர்த்தி நின்று கொண்டிருந்தான்... அவனை இமைக்காது

பார்த்தபடி அவள் சென்றாள்... ஏனோ அவளது மனதிற்குள் பெரும் சஞ்சலம் எழுந்தது...

பத்மவர்ஷினி வீட்டிற்குச் சென்ற போது அவளது அக்கா சுஜீதா பெற்றோரிடம் ஸ்கைப்பில் பேசி கொண்டிருந்தாள்...

"நான் என்ன மாம் பண்றது...? யுகேன் அகலை கல்யாணம் பண்ணிக்கிட்டது அவருக்குச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை... நானும் எவ்வளவோ சொல்லி பார்த்துட்டேன்... கேட்க மாட்டேங்கிறார்... இன்னமும் அந்தஸ்து, கௌரவம்ன்னு பேசிக்கிட்டு இருக்கார்... இடையில் கிடந்து நான் தான் அவஸ்தைப்படுறேன்... இப்போ என் தங்கை நிச்சயத்துக்குக் கூட என்னால் வர முடியலை..."

உண்மையில் வேதனையோடு கூறியவளை கண்டு பெற்றோரின் மனமும் வேதனையுற்றது... சுஜீதாவின் கணவன் விஷ்ணு தெலுங்கில் முன்னணி கதாநாயகன்... ஜேவிபி தயாரிப்பில் அவன் நடித்த திரைப்படம் ஒன்றில் சுஜீதா கர்னாடக சங்கீத பாடல் ஒன்று பாடியிருந்தாள்... சுபிக்ஷாவை போல் அவளும் ஒரு கர்னாடக சங்கீத பாடகி... அவளது குரல் கேட்டு மயங்கிய விஷ்ணு நேரில் அவளைப் பார்த்த போது இன்னமும் மயங்கி போனான்...

அவனது வீட்டில் எல்லோரும் அவனது காதலுக்குச் சம்மதம் தெரிவித்து விட்டனர்... ஆனால் ஜீவாவிற்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லை... திரைப்படத் துறையினரை பற்றி அவனுக்கு அவ்வளவாக நல்ல அபிப்ராயம் கிடையாது... ஜெகனும், ருத்ரஸ்ரீயும் தான் அவனை நம்பிக்கையுடன் சம்மதிக்க வைத்தனர்... அந்த நம்பிக்கையை விஷ்ணுவும் இத்தனை வருடங்களாக நல்லவிதமாகக் காப்பாற்றி வருகின்றான்... இத்தனை வருடங்களில் சுஜீதா மீதான அவனது காதல் மயக்கம் இன்னமும் தீரவில்லை... அவர்களது காதலுக்குப் பரிசாக ஒரு பெண் குழந்தை இருக்கிறது... பெயர் அஜீதா... பதிமூன்று வயதாகிறது...

"யாருமே பரம்பரை பணக்காரங்க இல்லை சுஜீ..."

ஜீவாவிற்கு மருமகள் மீது சிறு சுணக்கம் இருந்த போதும் மகளிடம் கூட மருமகளை விட்டு கொடுக்காது பேசினான்... அதைக் கண்டு சுபிக்ஷா பெருமையுடன் கணவனைப் பார்த்தாள்... மனைவியின் பார்வை கண்டு அந்தக் காதல் கணவனது கண்கள் காதலில் மின்னியது...

"எங்கே கல்யாண பொண்ணு...?" என்று சுஜீதா கேட்கவும் பத்மவர்ஷினி அங்கு வரவும் சரியாக இருந்தது... அவளிடம் அலைப்பேசியைக் கொடுத்தாள் சுபிக்ஷா...

"ஹாய் வர்ஷூ, ஹௌ ஆர் யூ...?" உற்சாகமாய்ப் பேசிய அக்காவிடம்,

"யா, ஃபைன்..." என்று ரத்தின சுருக்கமாய்ப் பேச்சை முடித்துக் கொண்டு அவள் உள்ளே சென்றுவிட்டாள்...

பத்மவர்ஷினி சிறு வயதில் இருந்து இப்படித் தான்... தேவைக்கு மட்டுமே வார்த்தைகள் வெளிவரும்... அதில் அவள் பாட்டியையும், அப்பாவையும் கொண்டிருந்தாள்...

மாலை ஆறு மணிக்கு பத்மவர்ஷினி தன்னை அழகாய் அலங்கரித்துக் கொண்டு வரவேற்பறைக்கு வந்தாள்... அங்கிருந்த சோபாவை ஜெகன் சொன்னதற்கு ஏற்ப பிரித்துப் போட்டுக் கொண்டிருந்தான் சத்யமூர்த்தி...

"தாத்தா..." என்றழைத்தபடி வந்தவளின் குரலில் அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்...

தங்க நிற பட்டுப்புடவையில் தகதகவெனத் தேவதையாய் ஜொலித்தவளை கண்டு அவன் இமைக்க மறந்தான்... எப்போதும் விரிந்திருக்கும் கூந்தலை இன்று அதிசயமாய்ச் சடை பின்னி பூ வைத்து, நெற்றியில் அரக்கு நிற பொட்டு வைத்து, நெற்றிச்சுட்டி அணிந்து, கழுத்திலும், காதிலும் வைர நகைகள் அணிந்திருந்தவளின் வித்தியாசமான அழகு அவனைப் பித்தம் கொள்ளச் செய்து கிறக்கத்தில் தலை சுற்ற செய்தது...

அதைக் கண்டு கொண்டவளின் பார்வை அவனைப் பார்த்து 'என்ன' என்று கேட்க... 'ஒன்றுமில்லை' என்பது

போல் தலையசைத்தவன் தலையைக் குலுக்கி கொண்டு தனது வேலைகளைத் தொடர்ந்தான்... இந்தக் காட்சியை மாடியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தான் ஜீவா... மகளையும் அவனால் கணிக்க முடியவில்லை... அதே சமயம் சத்யமூர்த்தியையும் அவனால் கணிக்க முடியவில்லை... அப்படி என்ன உறவு இருவருக்கும் இடையில்...? என்று அவன் தனது தலையை உடைத்துக் கொண்டது தான் மிச்சம்...

மாலை ஏழு மணியான போதும் மாப்பிள்ளை வீட்டில் இருந்து யாரும் வரவில்லை... ஜீவா பதட்டத்துடன் அவர்களுக்கு அழைத்து விபரம் கேட்க, அவர்களோ இடி போல் அந்தச் செய்தியை கூறினர்...

"என்ன விசயம் ஜீவா...?"

"மாப்பிள்ளை பையனுக்கு ஆக்சிடென்ட்டாம்... ஹாஸ்பிட்டலில் சேர்த்திருக்காங்களாம்... சகுனம் சரியில்லைன்னு நம்ம வர்ஷூவை வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்க..."

ஜீவா சொன்னதைக் கேட்டு எல்லோரும் அதிர்ந்து போய்ச் செய்வதறியாது அமர்ந்துவிட்டனர்...

பத்மவர்ஷினி மட்டும் அமைதியாக அங்கிருந்து வெளியேறி தோட்டத்தில் வந்தமர்ந்தாள்... அடர்ந்திருந்த செண்பக மரத்தின் அடியில் மறைவாய் இருந்த கல்மேடையில் வந்தமர்ந்தவளின் விழிகள் கீழே சிதறி கிடந்த பூக்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது...

தன் பின்னே அழுத்தமான காலடி ஓசை கேட்டும் அவள் திரும்பி பார்க்கவில்லை... அது சத்யமூர்த்தி என்பது அவளுக்கு நன்கு தெரியும்... ஆனாலும் அவள் அசையாது அப்படியே அமர்ந்திருந்தாள்...

"அம்மிணி...." அவள் முன் வந்து நின்றவன் அவளை அழைக்க... அதில் அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"இந்த மாப்பிள்ளை போனா என்ன...? உலகத்தில் மாப்பிள்ளைக்கா பஞ்சம்..."

அவன் சொன்னது கேட்டு அவளது உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

"நாளைக்கே உங்கப்பாரு வேறு மாப்பிள்ளையைக் கொண்டு வந்து உன் கண் முன்ன நிறுத்துவாரு பாரு... நீ கவலைப்படாதே அம்மிணி..." என்று அவன் அவளைத் தேற்ற...

"ஏன் அவன் நல்லாயிருப்பது உனக்குப் பிடிக்கலையா...?" அழுத்தத்துடனும், கோபத்துடனும் கேட்டவளை கண்டு அவன் திகைத்து போனவனாய்,

"அம்மிணி..." என்க...

"எத்தனை பேர் என்னைப் பெண் பார்க்க வந்தாலும் சரி... அவங்க எல்லோருக்கும் இதே கதி தான்..."

ஆக்ரோசத்துடன் பெண்புலியாய் சீறியவளை கண்டு அவன் அதிர்ந்து போய் விழித்தான்...!!!

தொடரும்...!!!

## உயிர் - 6

'ஏன்டா இப்படி அதிர்ந்து போய் நிற்கிற...? இந்தம்மிணி இப்படி எல்லாம் பண்ணலைன்னா தான் நீ ஆச்சிரியப்படணும்...? பாரு, முகமெல்லாம் வியர்த்து போச்சு... பொட்ட புள்ள முன்னாடி இப்படியா பயந்து மானத்தை வாங்குவ...?'

சத்யமூர்த்தியின் மனம் அவனை எள்ளி நகையாடியது... அதைக் கேட்டு ரோசம் அடைந்தவனாய் அவன் தனது கை கொண்டு வியர்வையைத் துடைத்துக் கொண்டான்...

"ஏனுங்கம்மிணி இப்படி எல்லாம் பண்றீங்க...?" மனதின் பேச்சை கேட்காது அவனது வார்த்தைகள் மிகவும் மென்மையாக வந்தது... பெண்ணவளை நோகடிக்க வேண்டாம் என்று அவன் நினைத்தானோ...

'ஏன்னு உனக்குத் தெரியாதா...?' என்கிற செய்தியை விழிகளில் தாங்கி சினத்துடன் தன்னைப் பார்த்த பத்மவர்ஷினியை கண்டு அவன் தான் அரண்டு போனான்...

"இங்கே பாரு அம்மிணி... உனக்கேத்த மாதிரி ராஜகுமாரனை தான் நீ கல்யாணம் பண்ணிக்கணும்..."

"ம், அப்புறம்..."

அவனது பேச்சு ஆத்திரத்தை வரவழைத்த போதும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது அவள் இராணியின் தோரணையுடன் கால் மேல் கால் போட்டபடி இரு கைகளையும் கட்டி கொண்டு அவனை அமர்த்தலாய் பார்த்து வைத்தாள்...

"கல்யாணம் பண்ணி நீ குடும்பம், குழந்தை, குட்டிங்கன்னு சந்தோசமா வாழணும்..."

அவன் என்னமோ சாதாரணமாகத் தான் இதைச் சொன்னான்... அவளுக்குத் தான் மிளகாயை அரைத்து உடலில் பூசியது போல் அப்படி ஒரு எரிச்சல் எழுந்தது...

"ஓஹோ, நீ அவள் கூட இதே மாதிரி சந்தோசமா பிள்ளை, குட்டின்னு வாழ்றதுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றியா...?" என்று அழுத்தமாய்க் கேட்டபடி கல்மேடையில் இருந்து எழுந்தவள் அவனை நோக்கி அழுத்தமான அடிகள் வைத்து முன்னேறினாள்...

"நீங்க பண்ணிய தப்புக்கான தண்டனையை அனுபவிக்க வேண்டாமா மிஸ்டர். சத்யமூர்த்தி...?"

"தண்டனை தானே தாராளமா கொடு... அது எனக்குத் தானே நீ கொடுக்கணும்... உன்னை ஏன் இப்படித் தண்டிச்சிக்கிற அம்மிணி...?" அவனது குரலில் அத்தனை வருத்தம் இருந்தது...

"ஹ, அப்படின்னு யார் சொன்னது...? இது தான்டா நான் உனக்குத் தரும் தண்டனை... இனி உனக்குன்னு ஒரு வாழ்க்கையை நீ கனவிலும் நினைச்சு பார்க்க கூடாது..." அவளது வார்த்தைகளில் அப்படியொரு திமிர், எள்ளல் எல்லாம் கலந்திருந்தது...

அவளது வார்த்தையில் அவன் உறைந்து போய் நின்றான்... என்னவொரு கொடூரமான எண்ணம்... 'இதனால் என்னை விட நீ தான் அதிகமா பாதிக்கப்படப் போகிற அம்மிணி' அப்போதும் அவன் மனதிற்குள் அவளுக்காகத் தான் இரங்கினான்...

"இந்த லட்சணத்தில் உனக்கு எல்லாம் ஒரு காதல்... உன் மூஞ்சிக்கு ஒரு காதலி வேறு... ச்சீ, இப்படி நடந்து கொள்ள உனக்கு அசிங்கமாயில்லை..."

அவனது முகத்தில் காறி உமிழாத குறையாக எகிறியவளை கண்டு அவனது மனதிலும் கோபம் அதிகரித்தது... அவளுக்காக அவன் என்ன தான் தழைந்து போக விரும்பினாலும் அவன் தனது தன்மானத்தை விட்டுக் கொடுக்கச் சிறிதும் விரும்பவில்லை... அவன் கிராமத்து இளைஞன்... பெண் என்பவள் ஆணிடம் அடங்கி இருக்க வேண்டும் என்கிற கருத்து ஆழமாக வேரூன்றி இருக்கும் ஆணாதிக்க மனமுடையவன்... அதனால் என்னமோ

அவளிடம் பணிந்து போக அவனுக்குச் சிறிதும் விருப்பம் இல்லை... அவள் மீது அக்கறை இருக்கிறது... அதற்காக அவளுக்கு அடிமை சாசனம் எழுதி கொடுக்க அவன் தயாராக இல்லை...

"பொட்டச்சி நீயே இப்படி ஒரு காரியம் பண்றதுக்கு அசிங்கப்படாதப்போ நான் ஏன்டி அசிங்கப்படணும்...?" தன் முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்றவன் அவளைப் பார்த்து கனலை கக்கினான்...

"நாம ரெண்டு பேரும் பண்ணிய காரியம் ஒன்றில்லை சத்யா..." அவளின் குரல் இரும்பு போல் இறுகி போய் ஒலித்தது... அதை அவன் உணர்ந்தான் இல்லை...

"அது என்னவோ வாஸ்தவம் தான் அம்மிணி... நீயெல்லாம் மனுச பிறவியில் சேர்த்திக் கிடையாது... மனுசனா இருந்தால் தானே மான, அவமானத்துக்கு அஞ்சணும்..."

"இதுக்கு எல்லாம் காரணம் நீ தான் சத்யா..."

"அதை நான் பண்ணியதுக்கு முழுக் காரணம் நீ தான் அம்மிணி..." என்றான் அவனும் சளைக்காது...

அவள் பதில் பேச முடியாது அவனை ஆத்திரத்துடன் உறுத்து விழித்தாள்...

"நான் உண்டு, என் வேலை உண்டுன்னு அமைதியா இருந்தேன்..."

"காதலியும் உண்டு... அதை ஏன் விட்டுட்ட சத்யா...?" என்று கேட்டவளின் குரலில் அத்தனை கேலி இருந்தது...

"ஆமாம், அப்போது மதியும் என் வாழ்க்கையில் முக்கியமான ஒருத்தி தான்..." எதையோ நினைத்து அவன் பெருமூச்சு விட்டான்...

அதைக் கண்டு அவளுள் புசுபுசுவென்று கோபம் எழுந்தது...

"எல்லாத்தையும் நீ வந்து கெடுத்த... என் வாழ்க்கையை நாசமாக்கினவ நீ தான்... என் வாழ்க்கையை அழிச்ச நீ

இப்போ இன்னொருத்தன் வாழ்க்கையும் அழிக்கத் துணிஞ்சிட்ட... நீ மனுசி இல்லைடி, ராட்சசி..." அவன் மனம் பொறுக்காது குமுறி விட்டான்...

"ஆமாம்டா, நான் ராட்சசி தான்... என் எண்ணங்களுக்குக் குறுக்கே யார் தேவையில்லாது வந்தாலும் இது தான் நடக்கும்... இவ்வளவு ஏன், நாளை உனக்குக் கூட இது நடக்கலாம்... யார் கண்டது...?" என்றவளை கண்டு அவன் அதிர்ந்து போய் விழிக்க...

"நீ பாதை மாறிப் போனால் மட்டுமே..."

அவள் கூறியதை கேட்டு அவனுக்குச் சலிப்பாக இருந்தது... தான் கூறுவது இவளுக்குப் புரியவில்லையா...? இல்லை புரியாதது போல் நடிக்கிறாளா என்று... அதே சமயம் அவளது எண்ணத்தை உடைக்க வேண்டும் என்கிற வெறியும் சேர்ந்து அவனுள் எழுந்தது...

"போனா என்னடி பண்ணுவ...?" அவனது வார்த்தையில் ஆண் என்கிற திமிர் அதிகம் இருந்தது...

"சொல்ல மாட்டேன்... செய்வேன்..." என்றாள் அவள் பதிலுக்குக் கோபமாய்... 'நீ ஆண்புலியாகப் பாய்ந்தால், நான் பெண்புலியாய் சீறுவேன்டா, முட்டாள் சத்யா' மனதிற்குள் ஆத்திரத்துடன் சொல்லி கொண்டாள்...

"நீயெல்லாம் பெண் இனத்திலேயே சேர்த்தி இல்லைடி..." கருணை இல்லாத அவளைக் கண்டு அவனது கோபம் கண்டபடி எகிறிக் குதித்தது...

அவ்வளவு தான் பத்மவர்ஷினி ஆத்திரம் அதிகரிக்க அவன் அருகில் வந்தவள், "என்னை நல்லா பார்த்து சொல்லுடா...? நான் பொண்ணா...? இல்லையான்னு...?"

ஏற்கெனவே அவள் அருகாமையில் தன்வசம் இழந்து தவிப்பவன் அவன்... இப்போது அவளது அருகாமையில் அவளது மேனியில் இருந்து வந்த நறுமணத்தோடு அவள் தலையில் வைத்திருந்த பூவின் மணமும் சேர்ந்து கொள்ள அவன் முற்றிலும் தடுமாறி போய் நின்றிருந்தான்... அவன்

மனதிற்குள் வெலவெலத்து போனவனாய் அவளைப் பார்த்திருந்தான்…

அவளோ அவனை உணரவில்லை… அவனது பார்வை மாற்றத்தை உணரவில்லை… இப்படி எதையும் உணராது ஆத்திரத்தை மட்டும் விடாது பற்றிக் கொண்டிருந்தாள்…

"பதில் சொல்லுடா ராஸ்கல்…" என்று அவள் இன்னும் நெருங்கி வந்து அவனது சட்டையைப் பிடித்தாள்… அவளது இறுகிய பிடியில் தெரிந்தது அவளது கோபம்…

பரந்து விரிந்த தேக்கு மர கட்டில் போலிருந்த அவனது நெஞ்சில் அவளது மலர் மஞ்சம் நச்சென்று அம்சமாய்ப் பொருந்தி கொண்டது… பெண்ணவளின் மென்மையை உணர்ந்தவனிடத்தில் பேச்சு மட்டுமல்லாது மூச்சும் சொல்லாது கொள்ளாது விடைப்பெற்றுச் சென்றிருந்தது… முயன்று தன்னைச் சுதாரித்துக் கொண்டவன்,

"தள்ளி போடி…" என்று அவளது பிடியில் இருந்து தனது சட்டையை விடுவிக்க எண்ணியவனாய் அவளிடம் போராடினான்… அவளது பிடியோ உடும்பு பிடியாய் இருந்தது…

"பதில் சொல்லுடா…" அவனது முயற்சியைக் கண்டு கொள்ளாது அவள் ஆவேசத்துடன் சீறினாள்…

அவனது பேச்சு அந்தளவிற்கு அவளது மனதினை பாதித்திருந்தது… என்றுமே அவன் தன்னை ஒரு பெண்ணாய்க் கொண்டாடியது இல்லை என்பது அவளுக்கு அத்தனை தலையிறக்கமாக இருந்தது… அவளது பேரழகு அவனைப் பாதிக்கவில்லையா…? இந்தப் பட்டிக்காட்டுக் கருவா பயல் தன்னை என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்? என்று அவளுக்கு அப்படியொரு கோபம் வந்தது… அதே சமயம் மிகவும் அவமானமாக உணர்ந்தாள்…

'இம்சை, புரிஞ்சிக்காம படுத்தி எடுக்கிறாளே…' மனதிற்குள் அவஸ்தையாக முணுமுணுத்து கொண்டவன் அவளிடம்,

"ம்ப்ச், இப்போ எதுக்கு இந்தத் தேவையில்லாத ஆராய்ச்சி..." என்று ஒருவித சலிப்புடன் அவன் அவளிடம் இருந்து விலக முயன்றான்... இதற்கு மேல் அவள் அருகில் இருந்தால் ஏற்படும் சேதாரத்திற்கு அவன் பொறுப்பில்லை...

"எனக்கு இது தேவையான ஆராய்ச்சி தான்..." என்று கூறியவளின் விழிகள், 'நீ பதில் சொல்லியே ஆகவேண்டும்' என்று பிடிவாதத்துடன் அவனையே இமைக்காது பார்த்திருந்தது...

பத்மவர்ஷினியின் முடிவு கண்டு அவனும் ஒரு முடிவு எடுத்தவனாய் அவளது இடையில் இரு கரம் பதித்து ஒரு பூனைக்குட்டியை தூக்குவது போல் அசால்ட்டாய் தூக்கி தனது தோளில் போட்டுக் கொண்டான்...

"டேய் என்னடா பண்ற...?" அவள் குரலை உயர்த்தாது அலறினாள்... இத்தனை நேரம் அவளிடம் இருந்த தைரியம் சொல்லாமல் கொள்ளாமல் விடைப்பெற்றுச் சென்றிருந்தது...

"ம், நீ கேட்ட ஆராய்ச்சிய ஆரம்பிக்கப் போறேன் அம்மிணி..." என்று நக்கலாய் கூறியபடி செண்பக மரத்தின் பின்னே தன்னைத் தூக்கி சென்றவனைக் கண்டு அவள் அச்சத்தில் விழி விரித்தாள்...

ஓங்கி வளர்ந்திருந்த மரத்தின் மீது அவளைச் சாய்த்தவன் அவளது இரு புறமும் கையை ஊன்றிக் கொண்டு அவளது விழிகளுக்குள் உற்று நோக்கினான்... அவனை அருகில் கண்டதும் அவள் அச்சத்தைத் துடைத்தவளாய்த் தைரியமாக அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவளது தைரியம் அவனுள் கனலை மூட்டியதோ என்னமோ... ஆத்திரத்துடன் அவளது முகம் நோக்கி குனிந்தான்... இப்போது அவளது விழிகளில் தைரியத்துடன் அலட்சிய பாவமும் சேர்ந்து கொண்டது...

'ஆனாலும் உனக்கு இம்புட்டு ஆணவம் ஆகாது அம்மிணி' என்று மனதில் கூறிக் கொண்டே அவனும் அவளது

முகத்தை நோக்கி முன்னேறினான்... இருவரது இதழ்களும் உரசி கொண்டது... ஆனால் பற்றியெரியவில்லை...

அவனது இந்த அருகாமையில் அவளது விழிகள் அகன்றதே ஒழிய, உணர்ச்சி பெருக்கில் சுகமாய் மூடவில்லை... அதைக் கண்டவன் சற்று நிதானித்தான்... மெல்ல அவளை விட்டு விலகி நின்றான்...

"இப்போ ஒத்துக்கிறியா...? நீ பெண் இல்லைன்னு...?" அதைக் கேட்டு அவளது விழிகள் கூர்மையுடன் அவனைப் பார்த்தது...

"பொண்ணுன்னா வெட்கப்படணும்... இப்படித் திமிரா இருக்கக் கூடாது... இருந்தா அவ பொண்ணுல்ல சேர்த்தி இல்லை... நீ அந்த ரகம் அம்மிணி... இதே இது மதியா இருந்தா நான் கிட்டே போனாலே கிறங்கி போய் நின்னிருப்பாள்... அந்த முத்தத்தோட சுகத்தை நான் சொல்லவும் வேணுமா...?" அவன் இதைக் கூறும் போதே அவனது விழிகளில் ஒருவித கிறக்கம் வந்து குடி கொண்டது... அவனது முகம் மென்மையாய் மாறிப் போனது...

அதைக் கண்டு அவளது முகம் அவமானத்தில் மிளகாய் பழம் போல் சிவந்து போனது... அவனுக்குப் பதிலடி கொடுக்காவிட்டால் அவள் பத்மவர்ஷினி இல்லையே..

"ஓ, கண்மூடி கிறங்கி நின்னு முத்தத்தை வாங்கினால் தான் அவள் பெண் இல்லையா...? உன் பாசையில் சொல்லணும்ன்னா அவங்க எல்லாம் தான் குடும்பக் குத்துவிளக்கு இல்லையா...?"

'ஆமாம்' என்பது போல் அவன் அடங்காது திமிராய் நின்றிருந்தான்...

"பொண்ணுன்னா வெட்கப்படணும்... அம் ஐ ரைட்...?"

'இது என்ன கேள்வி?' என்பது போல் அவன் அவளைக் கேள்வியோடு பார்த்திருக்க... அவள் அவனை நெருங்கி வந்தாள்...

'அடப்பாவி, திரும்பவும் முதல்ல இருந்தா...? நான் தாங்க மாட்டேன் அம்மிணி' என்று மனதிற்குள் புலம்பியபடி அவளிடம் இருந்து தப்பிக்கும் பொருட்டு அவசரமாய் விலகியவன் தடுமாறி அருகிலிருந்த மரத்தின் மீது சாய்ந்தான்... அவன் சுதாரித்துக் கொண்டு எழும் முன் அவள் அவனைச் சிறை செய்திருந்தாள்...

ஓங்கி வளர்ந்திருந்த தேக்கு மரத்தை சிறு பூங்கொடி ஒன்று வீழ்த்தி அதன் மீது படர்ந்திருந்தது... பெரும் புயலின் வன்மையான தீண்டலுக்குக் கூட அசராது கம்பீரமாக நிற்கும் தேக்கு மரம் பூங்கொடியின் மென்மையான தீண்டலில் அயர்ந்து போய் மதிமயங்கி நின்றது...

"ஏய் என்னடி பண்ற...?" கோபத்தோடு கேட்க வேண்டியவனின் குரல் ஏனோ குழைந்து வந்தது...

"பார்த்தா தெரியலை கிஸ் பண்றது எப்படின்னு உனக்குச் சொல்லி தர போறேன்..." என்றவள் அவன் உயரத்திற்கு எம்பினாள்...

"பூனைக்குட்டி கொல்லாதேடி..." அவளது சூடான மூச்சுக்காற்று முகத்தில் மோதியதில் அவன் கிறங்கி போய்க் கண்களை மூடி கொண்டான்...

சிறிது நேரம் அவளிடம் இருந்து பேச்சு, மூச்சு இல்லை... அவளின் அமைதி கண்டு மனதில் கிலி பரவ அவன் விழிகளை மெல்ல திறந்தான்... அவள் அவனை விட்டு விலகவில்லை... ஆனால் ஒருவித புன்சிரிப்புடன் அவனைப் பார்த்திருந்தாள்... அதைக் கண்டு நிம்மதி அடைந்தவன்,

"தள்ளி போ அம்மிணி..." என்று கத்தி சொல்ல எண்ணியவனின் குரல் அவனையும் அறியாது முனங்கலாய் வெளிப்பட்டது...

"பரவாயில்லை சத்யா, நல்லாவே வெட்கப்படுற..." என்று சிரித்தவளை கண்டு அவன் புரியாது பார்த்தான்...

"இல்ல, வெட்கப்பட்டா தான் பொண்ணுன்னு சொன்னியே... நீ ரொம்ப நல்லா வெட்கப்படுற... அப்போ நீ யார் சத்யா...? ஆம்பிளையா...? இல்லை பொம்பளையா...?"

எந்த ஆண்மகனையும் சீண்டி பார்க்கும் வார்த்தைகள் இது... அதுவும் சத்யமூர்த்திப் போன்ற ஒருவனை அந்த வார்த்தைகள் மிகவும் பதம் பார்த்துவிட்டது...

"என்னடி சொன்ன...?" என்று கர்ஜித்தபடி அவன் ஒரு கையால் அவளது தாடையை அழுத்தமாய்ப் பற்றி அவளது முகத்தைத் தன்னருகில் இழுத்தான்...

இப்போதும் அவள் வெட்கம் கொள்ளாது அவனை இமைக்க மறந்து பார்த்திருந்தாள்... அதைக் கண்டு அவனது கோபம் எகிற துவங்கியது...

"உன்னை எல்லாம் வச்சு செய்யணும்டி... விட்டு வச்சது தான் தப்பா போச்சு..." என்று கூறியபடி அவன் அவளது இதழ்கள் மீது தனது இதழ்களை முரட்டுத்தனமாய்ப் பதித்தான்...

அந்தக் கணம் பத்மவர்ஷினியின் விழிகள் தானாய் கிறங்கி போய் மதிமயங்கி இமை மூடி கொண்டது... அவளது இதழின் மென்மையில் முற்றிலும் கரைந்து காணாமல் போனது அந்த முரட்டு காளை... அவள் அவனது செயலை எதிர்க்காது தன்னை முழுமையாய் அவனிடத்தில் ஒப்பு கொடுத்திருந்தாள்...

எவ்வளவு நேரம் சென்றதோ... அவர்களது மோனநிலை சிறிதும் கலையவில்லை... மாறாக அது ஆழ்ந்த தவநிலைக்குச் சென்று கொண்டிருந்தது... மாலை நேரத்தில் தனது கூட்டிற்குள் வந்து தஞ்சம் புகுந்த பறவையின் ஒலியில் அவனுக்கு நிகழ்காலம் உறைக்க அடுத்த நொடி அவளைப் பிடித்து உதறித் தள்ளினான்... வேறொரு பெண்ணாக இருந்திருந்தால் நிச்சயம் கீழே விழுந்திருப்பாள்... ஆனால் பத்மவர்ஷினி சிறிது தடுமாறினாலும் அருகிலிருந்த சுவரின் மீது சாய்ந்து நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்...

"இப்போ புரிஞ்சதா அம்மிணி, இந்தச் சத்யா ஆம்பளையா...? இல்லையான்னு...?" நக்கலாய் கேட்டவனின் குரலில் அவளது இதழ்களில் மந்தகாச புன்னகை தோன்றியது... சூழ்ந்திருந்த இருள் அதை அவனுக்குக் காட்டாது மறைத்து சதி செய்தது...

ஆனாலும் வரவழைத்துக் கொண்ட கோபத்துடன், "இதுக்கு எல்லாம் என் கிட்ட நல்லா வாங்கிக் கட்டிக்கப் போகிற சத்யா...?" பெண்புலி வேண்டுமென்றே உறுமியது, தனது வெட்கத்தினை மறைக்க...

"இதுக்கு மேல வாங்கிக் கட்டிக்க ஒண்ணும் இல்லை... போடி இவளே..." என்றவன்,

"நான் மதியை தான் கல்யாணம் பண்ணிக்குவேன்... இதில் எந்தவித மாற்றமும் இல்லை... இனியாவது உன் வாழ்க்கையைப் பத்தி யோசிக்கப் பாரு..." என்று சீற்றத்துடன் அவளைப் பார்த்து கூறியவன் அங்கிருந்து விறுவிறுவெனச் சென்றுவிட்டான்...

'ம்க்கும், மதியை கல்யாணம் பண்ணும் மூஞ்சியைப் பாரு... எல்லா மேட்டருக்கும் நான் வேணும்... ஆனா கல்யாணத்துக்கு மட்டும் அவளா...? கருவாயா, பொய்யாடா சொல்லுற...? உனக்குக் கோயம்புத்தூர் குசும்பு கொஞ்சமல்ல அதிகமாகவே தான் இருக்கு...' என்று அவள் அவனை மனதிற்குள் கொஞ்சி கொண்டாள்...

'டேய் கருப்பட்டி, உனக்கு எப்படி இப்படி ஃப்ரெஞ்சு கிஸ் அடிக்கத் தெரியும்...? செமையா ஃபெர்பார்ம் பண்றடா... அந்த மாதிரி படம் எதுவும் பார்த்தியா...? ச்சீ, ச்சீ... இவனுக்கு இங்கிலீசே தகினத்தோம்... இதில் ஃப்ரெஞ்சு வேறையா...? ஆங், இதுக்கு மொழி முக்கியமில்லையே...' என்று கண்டபடி யோசித்தவளுக்கு வெட்கம் பிடுங்கி தின்றது...

வெட்கத்தில் சிவந்த முகத்துடன் அவள் வீட்டிற்குள் நுழைந்த போது அங்கு வரவேற்பையில் அகல்யாவை தவிர எல்லோரும் கவலையுடன் கூடியிருந்தனர்...

"இப்போ என்ன இழவா நடந்து போச்சு... போங்க, எல்லோரும் போய் அவங்கவங்க வேலையைப் பாருங்க..." என்று அவள் கத்தினாள்... இத்தனை நேரம் மறைந்திருந்த கோபம் அவளுள் மெல்ல எட்டிப்பார்த்தது...

"வர்ஷூம்மா..." ருத்ரஸ்ரீ பேத்தியை அழைக்க...

"இப்போ நான் எதுவும் பேசும் மூடில் இல்லை பாட்டி... ப்ளீஸ், லீவ் மீ அலோன்..." என்று கோபமாய்க் கூறியவள் நேரே தனது அறைக்குச் சென்றுவிட்டாள்...

"விடுங்க பாட்டி, அவளே தானா சரியாகிருவாள்..." என்று கூறிய யுகேன் தனது அறைக்குச் சென்றான்...

அங்குக் கட்டிலில் அமர்ந்திருந்த அகல்யா கணவனைக் கண்டதும் எழுந்து நின்றாள்... அவனோ அவள் அருகில் வந்து அவளை அணைத்துக் கொள்ள... அவள் பதறி போய் அவனை விலக்க முயன்றாள்...

"விடுங்க..." என்று அவள் தன்னை விடுவிக்க முயல...

"கொஞ்சம் நேரம் சும்மாயிரு அகல்ம்மா..." அவனது குரலில் இருந்த பரிதவிப்பில் அவள் அமைதியை கடைப்பிடித்தாள்...

"நான் உனக்குச் செஞ்ச துரோகம் இப்போ என் தங்கையைப் பாதிக்குதோ அகல்ம்மா..." அவனது வார்த்தையில் அவள் திகைத்து போய் நின்றிருந்தாள்...

"ஆமாம், அப்படித்தான் இருக்கணும்... கடவுள் இப்பயெல்லாம் தண்டனை கொடுப்பதற்குக் காத்திருப்பது இல்லை போலும்... உடனே தண்டனை கொடுத்து விடுகிறார்... இல்லையா...?"

அவனது வார்த்தைகள் அவளது மனதை வருத்தியதில் அவளது கரங்கள் ஆறுதலாய் அவனை அணைப்பதற்காகத் தானாக எழுந்தது... அதற்குள் அவனே சுதாரித்துக் கொண்டு விலகி விட்டான்...

"சாரிம்மா..." என்று தடுமாறியபடி மன்னிப்பு கேட்டவன் கார் சாவியை எடுத்துக் கொண்டு வெளியில் கிளம்ப... அவள்

அவனது கையைப் பிடித்துத் தடுத்தாள்...

"எங்கே போறீங்க...? சோகத்தில் தண்ணியடிக்கவா...?" என்று கோபத்தில் தன்னை உறுத்து விழித்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"ஆமாம்டி என் கில்மா...” என்று அவன் கண்சிமிட்ட...

"எனக்கும் சோகமா இருக்கு... நீங்க சரக்கு வாங்கிட்டு வாங்க நாம ரெண்டு பேரும் சேர்ந்து தண்ணியடிப்போம்..." அவனை அழுத்தமாய்ப் பார்த்தபடி அவள் கூற...

"ஐயோ..." என்று அவன் அலற... அவளோ தனது பார்வையைக் கொஞ்சமும் மாற்றிக் கொள்ளவில்லை...

"அகல்ம்மா, நான் தண்ணியடிக்கப் போகலை... ஸ்டோரி டிஸ்கஸனுக்குப் போகிறேன்..."

"எது...? உங்களுக்குத் தோன்றிய உருப்படாத ஐடியாக்களை வச்சு டிஸ்கஸ் பண்றதுக்காகவா...?"

'ஐயோ, உண்மையில் என்னை வச்சு செய்றாளே...' என்று அவன் மனதிற்குள் புலம்பியபடி அவளைப் பரிதாபமாகப் பார்த்து வைத்தான்...

"உங்களை மாதிரி மக்களையும் உருப்படாம ஆக்கிறதுக்குப் பதிலா நல்ல கதைகளைப் படமாக்குங்க..." என்றவளை கண்டு வலக்கையை மடக்கி குனிந்து வணக்கம் வைத்தவன்,

"உத்தரவு மகாராணி... அப்படியே ஆகட்டும்..." என்க...

"போடா வெள்ளப்பன்னி..." என்றவள் சிரித்தபடி அவனைத் தாண்டி அறை கதவை திறந்து கொண்டு வெளியில் ஓட...

யுகேனோ சிரித்தபடி மனைவியைப் பின்தொடர்ந்தான்...

***************

"என்னடா மாப்ளே, இந்த நேரத்தில் சரக்கும் கையுமா உட்கார்ந்திருக்க..." நடராஜன் அப்போது தான் வேலை

முடிந்து வந்து உடையை மாற்றி விட்டு தனது நண்பனின் அருகில் வந்தமர்ந்தான்...

அவர்கள் தங்கியிருந்த அறை மொட்டை மாடியில் இருந்தது... அதன் முன்னே பரந்து விரிந்திருந்த மாடி பகுதி காற்றோட்டமாய் அழகாய் இருந்தது... அதன் நடுவில் தான் சத்யமூர்த்தி மது பாட்டில்களைத் தரையில் பரத்தி வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்...

சிவந்திருந்த அவனது கண்கள் சொல்லாமல் சொல்லியது அவனுக்குப் போதை தலைக்கேறி விட்டது என்று...

"என்னடா பிரச்சினை மாப்ளே...?" நண்பனின் முகத்தை வைத்து பிரச்சினையைத் தானாய் ஊகித்தவனாய் நடராஜன் கேட்டான்...

"அம்மிணி என்னை ரொம்பப் படுத்துறாள்டா...?"

"யாருடா மதியா...?"

"ச்சீ, ச்சீ அவள் இல்லைடா... இது என் பூனைக்குட்டிடா..." கடைசி வரியை அவன் ரசனையுடன் கூறினான்...

அங்கு மொட்டை மாடி ஓரத்தில் படுத்திருந்த பூனையை ஒரு பார்வை பார்த்த நடராஜன்,

"அது ஆம்பளை பூனைடா..." என்க...

"டேய், நான் அதைச் சொல்லலைடா..."

"அப்புறம் எதைச் சொல்ற...? புரியும்படி சொல்லி தொலைடா..." என்றவன் நண்பனின் ரவுசு தாங்காது தானும் மதுவை எடுத்துத் தொண்டையில் சரித்துக் கொண்டான்...

"பத்மா... பத்மவர்ஷினி..." என்ற நண்பனை விழிகள் தெறித்து விடுவது போல் பார்த்த நடராஜன்,

"மாப்ளே, அவங்களையா பூனைக்குட்டின்னு சொல்ற...? அவங்க பெண்புலிடா..." அவளை நினைத்து

பார்த்தவனுக்குப் பயத்தில் மேனி சிலிர்த்தது... ஆளை சுட்டெரிக்கும் தீர்க்கமான பார்வை பார்க்கும் அவளைக் கண்டு இவன் பயப்படாது இருந்தால் தான் அதிசயம்...

"அது மத்தவங்களுக்கு... எனக்கு இல்லை..." என்றவனின் இதழ்களில் மந்தகாச புன்னகை தோன்றியது...

"டேய், சொல்ல வந்ததைத் தெளிவா சொல்லு..." என்ற நண்பனிடம் அவன் அந்த உண்மையைச் சொன்னான்...

"மாப்ளே, நீ ஒரு அப்பாவின்னு நினைச்சேன்... ஆனா நீ அடப்பாவிடா... என்னென்ன தில்லாலங்கடி வேலை எல்லாம் பண்ணி வச்சியிருக்க...?" என்று வாயில் அடித்துக் கொண்டு அவன் அலற...

"ச்சு, கத்தாதேடா... இந்த விசயம் யாருக்கும் தெரியாது... அவளுக்கும், எனக்கும் மட்டும் தான் தெரியும்... இப்போ உனக்கு..."

"அவங்களுக்கு உன்னைப் பிடிக்குமா சத்யா...?" நண்பன் கேட்ட கேள்விக்கு அவனிடம் இருந்து புன்னகையே பதிலாக வந்தது...

"இதுக்கு நான் என்னன்னு அர்த்தம் எடுத்துக்க...?"

"முதல்ல அவளுக்கு என்னைப் பிடிக்காதுன்னு தான் நினைக்கிறேன்... ஆனா இப்போ பிடிக்குது போல..." என்றவனது மனதில் அவளுக்கு முத்தம் கொடுத்த நினைவு இனிமையாய் நின்று இனித்தது... அது போல் அதற்கு அவள் கொடுத்த அபார ஒத்துழைப்பும் நினைவில் நின்று அவனைச் சுகமாய் வதைத்துக் கொன்றது...

"எனக்கும் அவளை முதல்ல பிடிக்காது மச்சான்... வேப்பங்காயா வெறுத்தேன்... ஆனா இங்கே வந்த பிறகு அவளைப் பார்க்க, பார்க்க என் மனசுக்குள்ள ஏதோ ஒரு மாற்றம்டா... அதை எப்படிச் சொல்றதுன்னு தெரியலை...? நான் மதி கூடப் பேசியதுக்காக அவள் என் கிட்ட சண்டை போட்டப்போ தான் லேசா அவளோட மனசு எனக்குப் புரிய ஆரம்பிச்சது..."

'அது இன்னைக்கு முழுசும் புரிஞ்சிருச்சு... அம்மிணிக்கு சத்யாவை பிடிச்சியிருக்குன்னு...' என்று அவன் மனசுக்குள் கூறிக் கொண்டான்... பின்னே அவனுக்காக அவளைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளைக்கு விபத்து ஏற்படச் செய்து மருத்துவமனையில் படுக்க வைத்திருப்பாளா...?

'சரியான ரௌடிடி நீ...' அவன் மனதிற்குள் அவளைச் செல்லமாய்க் கொஞ்சி கொண்டான்...

"அப்புறம் ஏன் மச்சான் இப்படிப் பிரிஞ்சிருக்கீங்க...?"

"அவள் யாருடா...?" என்று நண்பனிடம் கேட்டவன் வானத்தை அண்ணாந்து பார்த்தான்... பூரண நிலவு வானில் அழகாய் வலம் வந்து கொண்டிருந்தது...

"அவள் அந்த நிலாடா... நான் இந்தப் பூமி... அந்தளவுக்கு ரெண்டு பேருக்கும் இடையில் அந்தஸ்து வித்தியாசம் இருக்கு..."

"இருக்கட்டுமேடா... இது எல்லாம் காதலால மாத்த முடியாதா...?" நடராஜன் புரியாது நண்பனை பார்த்தான்...

"நீ சினிமா பார்த்து ரொம்பக் கெட்டு போயிட்ட..." என்று கோணல் சிரிப்புடன் ஒரு விரல் நீட்டி நண்பனை எச்சரித்தான் சத்யா...

"நீ மட்டும் என்னாவாம்...?" பதிலுக்கு முறைத்தான் நடராஜன்...

"சரி விடு, விடு... அரசியலில் இது சாதாரணம்ப்பா..." என்றவன்,

"எங்க ரெண்டு பேருக்கு இடையில் இருக்கும் காதல் அந்த மேகம் மாதிரி... மேகம் காதலில் உருகி மழையா கரைஞ்சா பூமிக்கு நல்லது தான்... ஆனா நிலாவுக்கு...?" என்று கேள்வியாய் நண்பனை பார்த்தவன்,

"எந்தப் பிரயோசனமும் இல்லை..." என்று பாவம் போல் கைகளை விரித்தவனைக் கண்டு நடராஜனுக்குப் பரிதாபமாக இருந்தது...

"மாப்ளே..." என்று ஆறுதலாய் அவன் தோளில் இவன் கை வைத்தான்...

"இந்தப் பாழா போன காதல் எனக்கு ஏன் வந்தது மச்சான்...? அப்படியே வந்தாலும் எனக்கு ஏத்த மாதிரியான பொண்ணு கிட்ட வந்திருக்க வேண்டியது தானே... இப்படி எட்டாத உயரத்தில் இருக்கும் இவள் கிட்ட ஏன் வந்துச்சு மச்சான்...?"

"நீ இவ்வளவு வருத்தப்படத் தேவையில்லை சத்யா... அவங்களும் தான் உன்னைக் காதலிக்கிறாங்களேடா..."

"ஆனா அதை ஊரறிய அவளைச் சொல்ல சொல்லு பார்ப்போம்... இந்தப் படிக்காத, கைநாட்டு வாசலில் காவல் வேலை பார்ப்பவன் உலகம் முழுவதும் தொழில் பண்ணும் தொழிலதிபர் பத்மவர்ஷினியோட..." என்று நிறுத்தியவன்,

"அவளைச் சொல்ல சொல்லுடா பார்ப்போம்... அவள் சொல்ல மாட்டாள்டா... சொல்லாம என் உயிரை எடுக்கணும்ன்னு திட்டம் போட்டு என்னை வரவழைச்சிருக்கா... அவள் பக்கத்திலேயே என்னை வச்சு அணு அணுவா சித்ரவதை செஞ்சு கொல்லணும்... அது தான் அவளுக்கு வேணும்... அவள் கொஞ்சம் கொஞ்சமா என் உசிரை எடுத்துருவாள்டா மச்சான்..."

"மாப்ளே..."

"ஆனா அடுத்த நொடி அவளும் உசிரை விட்டுருவாடா..." என்ற நண்பனை கண்டு திகைத்து போனவனாய் அமர்ந்திருந்தான் நடராஜன்...

"ஏன்னா அவளோட காதல் உண்மையானதுடா..." என்று கூறிய சத்யமூர்த்தியின் விழிகளில் இருந்து இரு சொட்டுக் கண்ணீர் கோடாய் இறங்கி கன்னத்தில் வழிந்தது...

"மாப்ளே, வேண்டாம்டா..." என்று நண்பனை அணைத்துக் கொண்ட நடராஜனின் மனதில் பெரும் துயர் வந்து ஒட்டி கொண்டது...

"ப்ச், விடுடா..." என்று அவனை விலக்கியச் சத்யமூர்த்தி அங்கேயே மல்லாக்க படுத்துக் கொண்டான்...

வானத்தில் தெரிந்த மதி மறைந்து தன்னவளின் மதிமுகம் அவனுக்குத் தெரிந்தது... அன்று சந்திரமதி தன்னை நெருங்கிய போது பத்மவர்ஷினியின் முகம் நினைவில் எழுந்து தன்னைக் கட்டுப்படுத்தியது போல் இப்போது பத்மவர்ஷினியை முத்தமிடும் போது சந்திரமதியின் முகம் ஏன் அவனது மனதில் தோன்றி அவனைக் கட்டுப்படுத்தவில்லை...? அந்தக் கணம் அவனுக்குப் புரிந்தது, தனது மனதில் ஒய்யாரமாய்ச் சிம்மாசனமிட்டு அமர்ந்திருப்பது யாரென்று...

காதலை உணராதவன் முதன்முதலாய் காதலை உணர்ந்த போது அவன் தனது தைரியத்தை முற்றிலும் இழந்து முழுவதுமாய்க் கோழையாய் மாறி மனதிற்குள் தவித்துப் போனான்...

அதே நேரம் பத்மவர்ஷினி தனது பால்கனியில் அமர்ந்து கொண்டு சத்யமூர்த்தியை தான் நினைத்து கொண்டிருந்தாள்... கூடவே அவனது இதழ் யுத்தத்தையும்... அந்தக் கணம் அனைத்தையும் மறந்து அவனது அணைப்பில் நாய்க்குட்டியாய் சுருண்டு கொள்ள அவளது காதல் மனம் ஏங்கியது... ஆனால் அவன் மீதிருந்த கோபம் அவளை இறங்கி போகச் செய்யவில்லை... அதற்கு அவள் அந்தஸ்து பேதம் என்கிற கவசத்தை அரணாய் அணிந்து கொண்டு காதலை தள்ளி நிறுத்தி இருந்தாள்...

இருவருமே காதலை உணர்ந்திருந்தனர்... ஆனால் இருவருக்கும் இடையில் இருக்கும் அந்தஸ்து பேதம் சீனப்பெருஞ்சுவர் போல் பெரிதாய் இடையில் நின்று அவர்களைப் பிரித்தது...

காதல் வந்தால் எந்தத் தடையையும் தாண்ட தோன்றும்... யாரையும் எதிர்க்க தோன்றும்... இதை யார் முதலில் உணர போகிறார்களோ...???

சதிராடும்...!!!

## உயிர் : 7

சத்யமூர்த்தி வழக்கம் போல் தனது பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்... அவன் பத்மவர்ஷினியை பார்த்து முழுதாக இரண்டு நாட்களாகி விட்டது... அவன் வேலைக்குச் சேர்ந்ததில் இருந்து தினமும் இங்கு வருகை தருபவள் கடந்த இரண்டு நாட்களாக இங்கு வரவில்லை... இந்த இரண்டு நாட்களில் அவளைப் பார்க்காது அவன் தான் அதிகம் தவித்து விட்டான்...

'பூனைக்குட்டி ஒரு ஐஞ்சு நிமிசம் இங்க வந்து உன் முகத்தைக் காட்டிட்டுப் போகக் கூடாதா...?' என்று மனதிற்குள் ஏங்கும் நிலைக்கு அவன் தள்ளப்பட்டான்...

அவன் ஏங்கியது அவளது காதுகளில் ஏறியதோ என்னவோ... அன்று அதிசயமாய் அவள் இங்கு வருகை தந்திருந்தாள்... அவளது காரை கண்டதும் மகிழ்ச்சியில் முகம் மலர கதவை திறந்து விட்டவனுக்கு ஏனோ அவளது முகத்தை ஏறெடுத்து பார்க்கும் தைரியம் தான் இல்லாது போனது... அன்று நிகழ்ந்த சம்பவம் அவனது மனதினை வதைக்க அவள் பக்கம் திரும்பினாலும் அவளைப் பார்க்காது விறைப்பாய் வணக்கம் வைத்தான்... அவளும் அவனைப் பார்த்தும் பார்க்காததுமாய்ச் சென்றுவிட்டாள்...

அவளது கார் சென்ற பிறகே அவன் அவளைப் பார்க்காது விட்டதை எண்ணி மனம் வருந்தினான்... ஆனால் எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவன் அவளைப் பார்க்க... அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... அவனது தம்பி சரவணன் தான் அழைத்திருந்தான்... நடராஜன் தான் இந்தச் சென்னை மாநகரத்தில் அலைப்பேசி அத்தியாவசிய ஒன்று என்று வற்புறுத்தி கூறி அவனுக்கு இந்த அலைப்பேசியை வாங்கிக் கொடுத்திருந்தான்...

மகிழ்ச்சியோடு அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவன், "என்ன சரவணா, எப்படியிருக்க...? பணம் எதுவும் வேணுமா...?"

"இல்லைண்ணா... ஒரு கம்பெனியில் இருந்து எங்க காலேஜில் நல்லா படிக்கிற பசங்களைத் தேர்ந்தெடுத்து அவங்களோட படிப்புச் செலவு முழுவதையும் பார்த்துக்கிறாங்களாம்... அதில் நானும் ஒருத்தன்... இனி படிச்சு முடிக்கும் வரை நான் உன்னைத் தொந்திரவு பண்ண மாட்டேன் அண்ணா..." உற்சாகமாய்ப் பேசி கொண்டு போன தம்பியை கண்டு சத்யமூர்த்தியின் விழிகள் கலங்கியது... தம்பியின் சந்தோசம் அவனையும் தொற்றிக் கொண்டது...

"ரொம்பச் சந்தோசம் சரவணா..."

"அண்ணா, அம்மா பேசணும்ன்னு சொல்றாங்க..." அலைப்பேசி அவனது அன்னையின் கைக்கு மாறியது...

"சத்தி நல்லாயிருக்கியாப்பா...?"

அன்னையின் அன்பான வார்த்தையில் அப்படியே எல்லாவற்றையும் விட்டு விட்டு அவரது மடி தேடி ஆறுதல் வேண்டி ஓடி போக எண்ணியது அவனது மனம்...

"நல்லாயிருக்கேன்... நீங்க எப்படி இருக்கீங்காத்தா...? அந்தாளு எதுவும் தொந்திரவு கொடுக்கிறானா...?" தந்தையின் நினைவில் அவன் பல்லை கடித்தான்...

"தொந்திரவு கொடுக்கிறதுக்கு அந்தாளு சுயபுத்தியோட இருக்கணுமே சத்தி... இங்கே மனுசன் வாழ்றதுக்கே காசு இல்லாம இருக்கு... ஆனா இந்தாளுக்கு மட்டும் குடிக்கிறதுக்கு எங்கே இருந்து தான் காசு வருமோ... குடிச்சிட்டு எங்கேயாவது விழுந்து கிடக்கும்... குடிக்காரப்பய..." கணவனை வசைப்பாடிய வடிவழகி,

"அந்தாளை விடு சத்தி... நான் ஒரு சந்தோசமான விசயம் சொல்ல தான் கூப்பிட்டேன்... நம்ம நடராசு முதலாளி பாங்குல சொல்லி மாடு வாங்க கடன் கொடுத்திருக்காக... எத்தனை நாளு நம்மளை இழுத்தடிச்சாக... இப்ப ஒரே நாளுல கடன் கொடுத்துட்டாகச் சத்தி... இரண்டு சீமை பசு வாங்கலாம்ன்னு இருக்கேன்... அதோட பாலை வித்து நா

வீட்டை பார்த்துக்குவேன்... இனி வருமானத்துக்கு எந்தக் குறையும் இல்லை..." என்று சந்தோசமாகச் சொன்னவர்,

"நீ எதுக்குச் சத்தி வெளியூர் போய் வேலை பார்க்கணும்...? நீயும் இங்கே வந்திருய்யா..." அவர் அப்படிச் சொன்னதும் தான் அவன் திகைப்பில் இருந்து வெளியில் வந்தான்...

"இல்லைத்தா... அப்படித் திடுமென்னு வேலையை விட்டு வர முடியாது... ஒரு வருசம் இங்கே வேலை பார்க்கிறேன்னு எழுதி கொடுத்திருக்கிறேன்..."

"அப்ப சரிய்யா... உடம்பை பார்த்துக்கோ சத்தி..." என்றவர் அலைப்பேசியை அணைத்துவிட...

சத்யமூர்த்தியோ யோசனையுடன் தனது நண்பனுக்கு அழைத்தான்...

"உங்க முதலாளி கிட்ட சொல்லி பாங்க்ல கடன் கிடைக்க ஏற்பாடு செஞ்சியாடா...?" எடுத்தவுடன் அவன் நேரே விசயத்திற்கு வர... மறுபக்கம் நடராஜன் விழி பிதுங்கினான்...

"ஆமாம்டா மாப்ளே... இங்கே வந்த நாளில் இருந்து நீ புலம்பிட்டு இருந்தேல்ல... அதான் நான் எங்க முதலாளி கிட்ட சொல்லி அந்தப் பேங்க் மேனேஜர் கிட்ட பேச சொன்னேன்..." என்று அவன் சமாளிக்க...

"மச்சான், நீயும் வீடு கட்டுறதுக்காக லோன் கேட்டு இருந்தியே... அது என்னடா ஆச்சு...?"

"அது வந்து மாப்ளே..."

"நீயும் பொய் சொல்ல ஆரம்பிச்சிட்ட இல்ல..." என்று கோபமாய் உறுமியவன் அலைப்பேசியை அணைத்தான்...

அடுத்து கழிந்த மணித்துளிகள் அவனுக்கு நரகமாய்க் கழிந்தது... எப்போதடா வேலை முடியும் என்றிருந்தது... அன்று அவனுக்கு வேலை முடியும் வரை பத்மவர்ஷினி அதிசயமாய் அங்குத் தான் இருந்தாள்... அவளைப் பார்க்க வேண்டி அவன் அனுமதி கேட்டு நின்றான்...

ஒரு நொடி நெற்றி ரேகை சுருங்க யோசித்தவள் உடனே அவனை உள்ளே அனுப்பும்படி சொன்னாள்... அவனும் உள்ளே வந்தான், பெரும் கோபத்துடன்...

"உன் மனசில் என்னடி நினைச்சிக்கிட்டு இருக்க...?" இரண்டு நாளாய் அவனது மனதில் இருந்த மயக்கம் இப்போது சுத்தமாய் அவனிடத்தில் இல்லை...

"என்ன நினைச்சிக்கிட்டு இருக்கேன்னு நான் சொல்லி தான் உனக்குத் தெரியணுமா சத்யா...?" அவள் தன் கையிலிருந்த பேனாவை உருட்டியபடி நாற்காலியில் சாய்ந்தமர்ந்து கொண்டு அவனைக் கேள்வியாய் பார்த்தாள்...

"அதான் நல்லா தெரியுமே... என்னை உயிரோடு கொன்னு புதைக்கணும்ன்னு நீ நினைக்கிறது..." என்றான் அவன் ஆவேசமாய்...

"பீ கூல் சத்யா... இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படிக் கத்துற...?" எதுவுமே நடவாதது போல் பேசியவளை கண்டு அவனது ஆத்திரம் அதிகரித்தது...

"நான் உன் கிட்ட வந்து பிச்சை கேட்டேனாடி...?"

அவனது வெடுக்கென்ற வார்த்தைகள் கேட்டு அவளது மனதில் சுருக்கென்று ஒரு வலி எழுந்தது... ஆனால் அவள் வெகு சுலபமாய் உடனே அதை மறைத்து கொண்டாள்...

"இப்போ எதுக்கு இப்படிப் பெரிய வார்த்தை எல்லாம் பேசுற...?" அவளது குரல் தழைந்து ஒலித்ததைக் கோபத்தில் இருந்த அவன் கவனிக்கவில்லை...

"நீ பண்ணியிருக்கிற வேலைக்கு எப்படிப் பேச...? என் தம்பிக்கு காலேசு படிப்புச் செலவு பார்த்துக்கிறது, பாங்க்குல கடன் கொடுத்தது, இதுக்கு எல்லாம் நீ தானே காரணம்..."

இப்போது அவள் விசயம் புரிந்தவளாய் சற்று ஆசுவாசம் அடைந்தாள்...

"நானா...? நான் எதுக்குடா உனக்காக இதை எல்லாம் செய்யணும்...? உன்னை ஓட ஓட விரட்டுறது தானே என்னோட ஒரே நோக்கம்... அப்படிப்பட்ட நான் உனக்கு உதவி செய்வேனா...?" என்று மிரட்டலாய் கேட்டவள்,

"தண்ணி அடிச்சிருக்கியா சத்யா...?" என்று சந்தேகத்துடன் அவனைப் பார்க்க... அவளது தெளிவில் அவன் தான் குழம்பி போனான்...

'அம்மிணி நல்லா தெளிவா தான் இருக்கு... நாம தான் தேவையில்லாம குழம்புறோமோ... அதானே இந்தம்மிணியாவது எனக்கு நல்லது செய்றதாவது...' மனதிற்குள் நினைத்து கொண்டவன்,

"நான் வேலை நேரத்தில் தண்ணியடிக்க மாட்டேன்..." என்றான் விறைப்பாக...

"ஓஹோ, அப்போ வேலை இல்லைன்னா தண்ணி அடிப்பியா...? துரைக்கு இந்த நல்ல பழக்கம் வேற இருக்கா...?" கிண்டலாய் தன்னைப் பார்த்தவளை கண்டு,

"எல்லாக் கெட்ட பழக்கமும் இருக்கு அம்மிணி... சத்யா ரொம்ப ரொம்பக் கெட்ட பையன்..." என்றான் அவனும் பதிலுக்குக் கேலியாய்...

"அப்படியா...?" என்று அவனை உற்று பார்த்தவள்,

"கெட்டவன் யாரும் தன்னைக் கெட்டவன்னு சொல்லிக்க மாட்டான் சத்யா... அவன் எல்லாம் தன்னைத் தானே நல்லவன்னு சொல்லிக்குவான்... எவன் ஒருவன் தன்னை நல்லவன்னு சொல்றானோ அவன் தான் ரொம்ப ரொம்பக் கெட்டவன்... இப்போ இதில் நீ யாரு சத்யா...? நல்லவனா...? கெட்டவனா...?"

அவள் வார்த்தைகளைச் சுழற்றி அடித்ததில் அவன் தான் தலை கிறுகிறுத்துப் போனான்...

"அன்னைக்கு மாதிரி ஒரு சின்ன டெஸ்ட் வச்சு பார்த்துடலாமா...?"

என்று கூறியபடி எழுந்து அவன் அருகில் வந்தவளை கண்டு அவனுக்குக் குளிர் சுரம் வருவது போலிருந்தது... அன்றைய நாள் நினைவில் அவன் வெலவெலத்து போய் நின்றிருந்தான்...

"அது எல்லாம் ஒண்ணும் தேவையில்லை... நீ உதவி செய்யலைன்னு சொல்லிட்டல்ல... அப்புறம் என்ன...? ஆளை விடு தாயி..." என்று கிளம்ப எத்தனித்தவன் முன்னே வந்து கிளம்ப விடாது கை நீட்டி அவனைத் தடுத்தவள்,

"அப்படி எல்லாம் உன்னை விட முடியும்ன்னு எனக்குத் தோணலை சத்யா...?"

முதலில் எல்லாம் அவள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் கோபம் போல் அவனுக்குத் தோன்றும்... இப்போதோ எல்லாமே கொஞ்சும் காதல் மொழியாய் தோன்றி அவனைப் பயப்பட வைத்தது... ஆனாலும் பயத்தை வெளியில் காட்டாது நிமிர்ந்து நின்றவன்,

"நீ விடணும்ன்னு தான் நான் காத்துக்கிட்டு இருக்கேன் பாரு... போடி, என்னை யாரும் கட்டி போட முடியாது..." என்றான் அவன் அகந்தையுடன்...

"அப்படியா...? எங்கே என் கண்ணைப் பார்த்துச் சொல்லுடா கருவாயா...?"

அருகில் நின்றவளின் விழிகளைப் பார்த்தவனால் தனது விழிகளை வேறு எங்கும் திருப்ப முடியாது போனது தான் அந்தோ பரிதாபம்... ஆனாலும் வெளியில் வீம்பாக,

"எப்படிப் பார்த்தாலும் என் கிட்ட உன் பப்பு வேகாது அம்மிணி... இந்தச் சத்யமூர்த்தியை அசைக்க எந்தக் கொம்பனாலும் முடியாது..." என்று மீசையை முறுக்கி கொண்டு திமிராய் கூறியவன் அதற்கு மேல் அங்கு நிற்க முடியாது வெளியில் ஓடி வந்துவிட்டான்...

'அத்தாடி, கண்ணுல கரெண்ட் வச்சிருக்கிறதை இப்ப தான்டா நேரில் பார்க்கிறேன்... கண்ணு ரெண்டும் என்னமா காந்தமா இழுக்குது...' புலம்பியபடி அவன் சென்றான்...

சத்யமூர்த்திக் கூறி சென்ற வார்த்தையில் பத்மவர்ஷினி சிறிது கலங்கி தான் போனாள்... ஆனாலும் தைரியத்தைக் கைவிடாது அவனைப் பரிசோதித்துப் பார்ப்பதில் உறுதியாக இருந்தாள்... ஆனால் அந்தக் கிராமத்து மச்சான் ஏற்கெனவே அவளிடம் தலைக்குப்புற விழுந்து கிடப்பது அவளுக்குத் தெரியாது போலும்...

இரவு நண்பனிடம் சத்யமூர்த்தி வங்கி கடன் பத்தி கேட்க... நடராஜனோ,

"டேய், சத்தியமா என் முதலாளி தான்டா உதவி பண்ணுனாரு..." அழாத குறையாகக் கூற... வேறுவழியின்றிச் சத்யமூர்த்தி அவனது கூற்றை ஏற்றுக் கொள்ள வேண்டியதாய் போயிற்று...

சத்யமூர்த்தி அந்தப் பக்கம் போனதும் நடராஜன் புலம்ப ஆரம்பித்து விட்டான்... ஏனெனில் பத்மவர்ஷினி அவனை மிரட்டியவிதம் அப்படி...

"இந்த விசயம் எதுவும் அவனுக்குத் தெரிஞ்சது, நான் உன்னைத் தான் தூக்குவேன்... நான் யார்ன்னு உனக்குத் தெரியும்ல... சத்யா என்ன கேட்டாலும் 'ஆமா சாமி' மட்டும் தான் நீ போடணும்... என்ன புரிஞ்சதா...?" என்று உறுமியவளை கண்டு அவனது தலை தானாகச் சம்மதமாய் ஆடியது...

அவள் சென்று பத்து நிமிடங்கள் கழித்தும் அவனது தலை ஆடுவது மட்டும் நிற்கவில்லை... அந்தளவிற்கு அவளிடத்தில் அவனுக்குப் பயம்... அந்தப் பயத்தில் தான் அவன் நண்பனிடம் பொய் கூறிவிட்டான்...

'என்ன பெத்த ஆத்தா, இந்த ரெண்டு பேருக்கும் இடையில் அல்லாடுறதுக்குத் தானா என்னைப் பெத்து விட்ட...' என்றோ இறந்து போன அன்னையிடம் சோகமாய் முறையிட்டான் அவன்...

**********************

சத்யமூர்த்திச் சந்திரமதியை மெரினா கடற்கரைக்கு அழைத்து வந்திருந்தான்... தனது மனதில் இருப்பதை அவளிடம் சொல்லிவிட வேண்டும் என்று... இதற்கு மேலும் அவளது மனதில் ஆசையை வளர்க்க கூடாது என்றே அவன் நினைத்தான்... காதல் ஒரு உயிர்க்கொல்லி நோய் என்பது அவனுக்கும் தெரியுமே...

"மாமா, சந்தோசமாயிருக்கு... எனக்காகப் பீச்சுக்கு வந்திருக்க... தேங்க்ஸ் மாமா..." என்று சிறுபிள்ளை போல் அவனது கையைப் பற்றிக் கொண்டு அவள் குதூகலிக்க... அவனோ அவளைப் பார்த்து முறுவலித்தான்...

"அலையில் போய்க் கால் நனைக்கலாமா மாமா...?"

"நீ போ மதி..."

"நீயும் வா மாமா..."

"இல்லைடா... நீ போ..." என்று அவளை அனுப்பி வைத்து விட்டு அவன் மட்டும் கரையில் நின்றிருந்த படகின் ஓரமாய் வந்தமர்ந்தான்...

சிறுபிள்ளை போன்று தண்ணீரில் துள்ளி குதித்து விளையாடி கொண்டிருந்தவளை கண்டு அவனுக்கு வருத்தமாக இருந்தது... தேவையில்லாது அவளது மனதில் ஆசையை வளர்த்து விட்டோமோ என்று... மனதில் குற்றவுணர்வு குறுகுறுவெனக் குடைய அவன் தலையைக் குனிந்து கொண்டு தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தான்...

"மாமா, செம பசி... சாப்பிட ஏதாவது வாங்கிக் கொடு..." என்று உரிமையோடு கேட்டவளை கண்டு புன்னகையுடன் எழுந்தவன்,

"வா..." என்றழைத்துப் போனான்...

சூடாய் பஜ்ஜியும், குளிர்ச்சியாய் ஐஸ்க்ரீமும் அவன் அவளுக்காக வாங்கிக் கொடுக்க...

"உனக்கு மாமா...?"

"எனக்கு வேண்டாம்... நீ சாப்பிடு மதி..."

அவன் சொல்லவும் அவள் சரியென்று தலையாட்டி விட்டு அதை எல்லாம் ரசித்து ருசித்து மெல்ல உண்டு கொண்டிருந்தாள்... அவள் உண்டு முடிக்கும் வரை அவனும் பொறுமையாகக் காத்திருந்தான்...

"மதி, உன் கிட்ட கொஞ்சம் பேசணும்..."

"பேசு மாமா..." ஆவலாகத் தன் முகத்தைப் பார்த்த அவளின் முகத்தைப் பார்க்க இயலாது அவன் தொடுவானத்தை வெறித்தான்...

"மதி, முதல்ல என்னை மன்னிச்சிரு..."

"மாமா, நீ போய்... என் கிட்ட எதுக்கு..." அவள் முடிக்கும் முன்,

"உன் வாயால என்னை மன்னிச்சிட்டேன்னு சொன்னா தான் எனக்கு நிம்மதியா இருக்கும் மதி..." என்றவனின் கூற்று அவளுக்குப் புரியாத போதும் அவனுக்காக அவள் அந்த வார்த்தைகளைக் கூறினாள்...

"மன்னிச்சிட்டேன் மாமா..." என்றவளை நிதானமாய்ப் பார்த்தவன்,

"அப்படியே என்னை மறந்திரு மதி..."

"மாமா..." அவள் அதிர்ச்சியில் கூவி விட்டாள்...

நினைவு தெரிந்த நாள் முதலாய் அவனை நெஞ்சில் சுமப்பவள் அவள்... அதனால் தான் அவள் இத்தனை பெரிய படிப்புப் படித்திருந்த போதும் படிக்காத அவனிடத்தில் தோன்றிய காதல் சிறிதும் குறையவில்லை... வளர வளர இந்த நேசம் அதிகரித்ததே ஒழிய குறைந்தபாடில்லை...

"நீ என்னைச் சுத்தி சுத்தி வந்ததால எனக்கு உன் மேல ஒரு ஈர்ப்பு இருந்தது என்னமோ உண்மை தான்... ஆனா அது காதல் இல்லை மதி..."

"ஆமாம், ஆமாம்... ரொம்பப் பெரிய கண்டுபிடிப்பு... கண்டுபிடிச்ச காலம் தான் காலாவதியாகி போச்சு..." என்று அவள் வெடுக்கென்று கூறினாள்...

"உண்மை தான் மதி... நான் என் மனசை கண்டுபிடிக்கும் போது காலம் காலாவதியாகி போச்சு தான்..." வேதனையுடன் கூறியவனைக் கண்டு அவள் துணுக்குற்றவளாய்,

"என்ன மாமா பிரச்சினை...? என் கிட்ட சொல்ல கூடாதா...?"

"உன் கிட்ட சொல்றதுக்கு என்ன மதி...? சொல்ல தானே உன்னை இங்கே கூட்டிட்டு வந்திருக்கேன்..." என்றவன் தனது மனதில் இருப்பது அனைத்தையும் அவளிடம் கொட்டி கவிழ்த்தான்...

"மாமா, இது எதையும் நீ என் கிட்ட சொல்லவே இல்லையே..."

"என்னத்தைச் சொல்ல சொல்ற மதி...?" என்றவனின் தலை குற்றவுணர்வில் குனிந்தது...

அவனது முகத்தை நிமிர்த்தியவள், "நீ ஒரு தப்பும் செய்யலை மாமா... நீ தலை நிமிர்ந்து இரு... தப்பு செஞ்சது எல்லாம் அந்த ராங்கிக்காரி தான்... அவள் தான் தலைகுனியணும்..."

அதைக் கற்பனை பண்ணி பார்த்தவனுக்குச் சிரிப்பு பீறிட்டது...

"ஹா ஹா, நடக்காததை எல்லாம் ஏன் சொல்ற மதி...?"

"அதையே தான் நானும் சொல்றேன் மாமா... நடக்காத ஒண்ணைப் பிடிச்சிட்டு நீ ஏன் தொங்குற...? காலுக்கு உதவாத செருப்பைக் கழட்டி தூக்கி எறி..." என்று சற்று சினத்துடன் கூறியவளை கண்டு,

"மதி..." என்று அவன் அவளை அதட்டினான்...

"ஓ, என்னை விட அவள் தான் உனக்கு முக்கியமா போயிட்டாள்ல..." என்று கண்கள் கலங்க கூறியவளை கண்டு அவன் செய்வதறியாது தலையில் கை வைத்துக் கொண்டான்...

"ஆமான்னு நான் சொன்னா நீ வருத்தப்படுவ மதி... ஆனா அது தான் உண்மை... உனக்கும் என்னை விட முக்கியமானவரா ஒருத்தர் வருவார்... அப்போ நான் சொல்றது உனக்குப் புரியும்..."

"உன்னை விட எனக்கு யாரும் முக்கியமில்லை மாமா..." என்று சிறுபிள்ளை போன்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்...

"மதி, தயவுசெஞ்சு புரிஞ்சுக்கோம்மா... உடைஞ்ச கண்ணாடியை ஒட்ட வைக்க முடியாது... அது போல் தான் நம்ம உறவும்... நீயும், நானும் இப்படி எல்லாம் நடக்கும்ன்னு எதிர்பார்த்தோமோ என்ன...?" என்றவனை வேதனை பொங்க பார்த்தவள்,

"மாமா, நான் கேட்கிறதுக்கு மட்டும் உண்மையா பதில் சொல்லு... அப்போ அந்த நொடி உனக்கு என்னோட முகம் நினைவுக்கு வரலையா...?"

"இல்லை மதி..." அவள் கேட்டதற்கு நொடி நேரம் கூடத் தாமதியாது அவன் உடனே பதில் கூறினான்... ஏனெனில் அது தான் உண்மை...

"நான் நம்ப மாட்டேன் மாமா... நீ பொய் சொல்ற..."

"உன் மேல சத்தியமா உண்மை மதி... கடவுள் எனக்கும், பத்மா புள்ளைக்கும் தான் முடிச்சு போட்டு வச்சிருக்கான் போலிருக்கு... இதில் நீயும், நானும் ஒண்ணும் பண்ண முடியாது..."

"அவள் கூட உன்னோட வாழ்க்கை சந்தோசமா இருக்கும்ன்னு நினைக்கிறியா மாமா...?"

"தெரியலை... ஆனா இப்படி இருக்கிறதும் எனக்குப் பிடிச்சு தான் இருக்கு..." என்றவனைக் கூர்ந்து பார்த்தவள்,

"நீ அவளைக் காதலிக்கிறியா மாமா...?" அதைக் கேட்டு வாய்விட்டு சிரித்தவன்,

"அதைத் தானே இத்தனை நேரம் உன் கிட்ட சொல்லிக்கிட்டு இருக்கேன்... நான் போகும் பாதை ஒருவழி பாதை மதி... இதில் நீயும் நானும் சேர்ந்து போக முடியாது... என் கூட வழித்துணையா வர வேண்டியது பத்மா மட்டும் தான்... அவள் வருவாளான்னு எனக்குத் தெரியலை... அதுக்காக நான் வருத்தப்படவும் இல்லை..." என்று கூறி பெருமூச்சு விட்டவன்,

"நீ உன் மனசை மாத்திக்கிட்டு புதுசா வாழ பாரு மதி..." என்று அவளுக்கு அறிவுரை கூறினான்...

"ம், ம்..." விழிகளில் விழிநீர் திரள தலையசைத்தவள்,

"எனக்காக இல்லைன்னாலும் உனக்காக என்னை நான் மாத்திக்கிறேன் மாமா... ஏன்னா என்னால் உன் வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் வந்துவிடக் கூடாது பாரு... அதுக்காகத் தான்... எல்லாம் உன் நல்லதுக்காகத் தான் மாமா..." என்றவளின் அன்பு அவனுக்குப் புரிவதாய்...

"இது போதும் மதி... நம்ம உறவு மாறினாலும் சொந்தம் மாறாது... நான் எப்போதும் உனக்கு அதே மாமா தான்..." என்றவனைக் கண்டு கண்ணீரை துடைத்துக் கொண்டு பளிச்சென்று சிரித்தவள்,

"இருட்டிருச்சு மாமா... கிளம்பலாம்..." என்றபடி எழ... அவனும் உடன் எழுந்தான்...

சந்திரமதியை அவளது கல்லூரி விடுதியில் கொண்டு சென்றுவிட்டவன் தனக்கான பேருந்துக்காகப் பேருந்து நிலையத்தில் காத்திருந்தான்... சந்திரமதியின் கலக்கம் சுமந்த முகம் அவனுக்கு வேதனையை அளித்தது... காலம் எல்லாவற்றையும் சரி செய்யும் என்று அவன் நம்பிக்கை கொண்டு மனதினை தேற்றிக் கொண்டான்...

அந்நேரம் அவன் அருகில் கார் ஒன்று வந்து நின்றது... திடுக்கிட்டு விலகியவன் அது பத்மவர்ஷினியின் கார் என்றதும் அதை முறைத்துப் பார்த்தான்...

'டேய், இது உன் ஆள் இல்லைடா... இது அவளோட கார்... அதைப் போய் ஏன் இப்படிச் சைட்டடிக்கிற...?' என்று அவனது மனசாட்சி அவனைக் கிண்டலடித்தது...

'அவளைச் சைட் அடிச்சிட்டாலும்...' என்று அவன் அலுப்பாய் முணுமுணுத்துக் கொண்டான்...

அதற்குள் கார் ஓட்டுநர் இறங்கி வந்து அவனுக்காகக் கார் கதவை திறந்து விட்டுக் காத்திருந்தான்... முடுக்கி விட்ட இயந்திர பொம்மை போலிருந்தது அவனது செய்கை...

'யோவ், எப்படிய்யா இந்த அம்மிணி கிட்ட வந்து மாட்டின...? பாவம்ய்யா நீயி...' என்று பரிதாபப்பட்டபடி காரோட்டியை பார்த்தவன் பின்பு குனிந்து பின்னிருக்கையைப் பார்த்தான்...

"கெட் இன் சத்யா..." பத்மவர்ஷினி மடியில் இருந்த கணினியை பார்த்தபடி இடது கையை மட்டும் அசைத்து அவனை உள்ளே ஏறும்படி சொன்னாள்...

'ஆத்தாடி, இந்தம்மிணி கிட்ட மாட்டினா நான் முழுசா வீடு போய்ச் சேர முடியாதே...' என்று மனதிற்குள் அலறியவன்,

"நான் பஸ்சில் போய்க்கிறேன் அம்மிணி... நீங்க போங்க..." ஓட்டுநர் இருப்பதால் வரவழைத்துக் கொண்ட மரியாதையுடன் கூறினான்...

அவனது வார்த்தையில் அவனைத் திரும்பி பார்த்தவள், "உன்னை ஏற மட்டும் தான் சொன்னேன்..." என்றவளின் அழுத்தமான குரலில் அவளைக் கூர்ந்து நோக்கியவன்,

'முடியாது போடி...' என்று சத்தமில்லாது வாயசைத்தான்...

'வரலைன்னா கொன்றுவேன்டா...' என்று கோபமாய் முறைத்தவளை அவன் அலட்சியமாய்ப் பார்த்து வைத்தான்...

"அப்புறம் மதி சுகமா இருக்காளா...?" என்று கேட்டவளை கண்டு அவன் திகைத்து போய் விழிக்க...

"இனிமேலும் அவள் சுகமா இருக்கணும்ன்னா ஒழுங்கா வந்து காரிலேறு..." என்று கண்களில் மட்டுமல்லாது வார்த்தையிலும் நெருப்பை அள்ளி கக்கியவளை எதிர்த்து பேச வழியில்லாது அவன் காரிலேறி அமர்ந்தான்...

அவன் அமர்ந்ததும் கார் கதவை மூடிய ஓட்டுநர் மறுபக்கம் வந்து காரிலேறி அதைக் கிளப்பினான்...

"பீச் மீட்டிங் முடிஞ்சதா...?"

கேள்வி அவனிடம் இருந்தாலும் அவளது கவனம் முழுவதும் மடிகணினியில் இருந்தது... அதில் அழகாக நர்த்தனமாடிய அவளது வெண்டை பிஞ்சு மென்விரல்களை அவன் அதிசயமாய்ப் பார்த்தான்... பின்பு கணினி திரையைப் பார்த்தவனுக்கு அதிலிருந்த எழுத்துக்கள் எல்லாமே ஆதிகால மனிதனின் சித்திர எழுத்துக்களாகத் தான் தோன்றியது... ஏனெனில் அவனுக்கு அது ஒன்றுமே புரியவில்லை... அதிலேயே அவளுக்கும் தனக்குமான வேறுபாடு உணர்ந்து அவனது மனம் சுணங்கி போனது...

"ஓ, துரைக்கு இங்கிலீஷ் புரியாது இல்லையா...? கடற்கரை கூட்டம் முடிஞ்சதான்னு கேட்டேன்..." என்று கேலியாய் கூறியபடி அவனைத் திரும்பி பார்த்தாள் பத்மவர்ஷினி...

தன் மீது கோபம் கொண்டு மறுகியவன் இப்போது அவள் மீது கோபம் கொண்டான்... அவளது முழங்கையைப் பிடித்திழுத்தவன்,

"அது தெரிஞ்ச விசயம் தானே... திரும்பத் திரும்ப அதையே ஏன் சொல்லி காட்டுற...? இப்படிச் சொல்லி காட்டுறதுக்குத் தான் என்னைக் காரிலேற சொன்னியா..." மெதுவான குரலில் என்றாலும் அவனது குரலில் அடக்கப்பட்ட கோபம் அப்பட்டமாய்த் தெரிந்தது...

அவள் புரியாது அவனைப் பார்த்தாள்... அவனோ கணினி திரையை வெறித்தான்... ஏனோ எதிரியை பார்த்து

வைப்பது போல் அவன் அதைக் கொலைவெறியோடு பார்த்து வைத்தான்... அவனது ஒரு பார்வையில் அவனது மனதினை உணர்ந்தவளாய் அவள் மடிகணினியை அணைத்து அருகில் வைத்து கொண்டாள்... அதன் பிறகே அவன் அவளது முகத்தைப் பார்த்தான்...

"கையை விடு சத்யா..."

அவளது குரலில் இருந்த ஏதோ ஒன்றில் அவன் அவளது கையை விடுவித்தான்... அவளிடம் எதுவும் பேச பிடிக்காதவனாய் வெளிப்புறம் பார்த்தவன்,

"என்னைய இங்கேயே இறக்கி விடு..." என்றான் விறைப்பாய்...

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு... இறக்கி விடறேன்..."

"நான் யார் கூடப் பேசினா உனக்கு என்ன...?" சிறுபிள்ளை கோபம் கொண்டது போல் அவன் செல்லமாய் முறுக்கி கொண்டான்...

அதைக் கண்டு அவளது இதழ்களில் புன்னகை நெளிந்தது... அந்தக் கணம் அவனது முகத்தைத் தனது கைகளில் தாங்கி 'என்ன கோபம்டா என் செல்ல கண்ணாவுக்கு?' என்று அவனைச் செல்லம் கொஞ்சிட தோன்றியது...

அப்படி மனதில் நினைத்ததை எல்லாம் நினைத்த மாத்திரத்தில் செய்துவிட அவளால் முடியுமா என்ன...? அதை நினைத்து அவளிடம் இருந்து ஒரு பெருமூச்சு எழுந்தது...

"எனக்கென்னவா...? இது எனக்குத் தேவையான கேள்வி..." என்றாள் அவள் சட்டமாய்...

அவளது குரலில் அவளைத் திரும்பி பார்த்தவன், "மதி கிட்ட என்ன பேசினேன்னு உனக்குத் தெரியணும் அவ்வளவு தானே...?"

"அவ்வளவே தான்..." என்று அமர்த்தலாகக் கூறியவளை காயப்படுத்திடும் வெறி அவனுள் எழுந்தது...

"எனக்கு அவள் தான் முக்கியம்ன்னு சொல்லிட்டு வந்தேன்... போதுமா...?" கோபமாய்க் கூறியவனை உற்று நோக்கி கொண்டிருந்தவளின் முகம் மெல்ல மெல்ல பூவாய் மலர்ந்தது...

"அவள் தான் முக்கியம்ன்னு சொல்லிட்டியா சத்யா...?" அவளது சந்தோசம் எதனால் என்று அறியாது அவனும் ஆமென்பது போல் சந்தோசமாய்த் தலையாட்டி வைத்தான்...

"ரொம்ப நல்லது... ஒரு பிரச்சினை ஓய்ந்தது..." என்றவள் நிம்மதியுடன் இருக்கையில் சாய்ந்து கண்களை மூடி கொண்டாள்...

'அம்மிணிக்குப் பைத்தியம் எதுவும் பிடிச்சு போச்சோ...' அவன் தான் அவளை நினைத்து குழம்பி போனான்...

'நீ இதைத் தானே எதிர்பார்த்த... இப்போ எதுக்குக் கூவுற...?' அவனது மனசாட்சி அவனிடம் சண்டைக்கு வந்தது...

"உனக்குக் கார் ஓட்ட தெரியுமா சத்யா...?"

"இப்போ எதுக்கு இந்த வேண்டாத கேள்வி...?" என்று தனது மனதில் இருந்த எரிச்சலை மறைத்தபடி அவன் அவளிடம் சுள்ளென்று எரிந்து விழுந்தான்...

"உன்னை என்னோட கார் டிரைவரா ப்ரமோட் பண்ணலாம்ன்னு இருக்கேன்..." என்றாள் அவள் விழிகளைத் திறவாது...

'இனிமே அந்தப் பாவப்பட்ட ஜீவன் நான் தானா...' என்று அவன் மனதிற்குள் பயந்து அலறினான்...

"கார் ஓட்ட தெரியுமா...? தெரியாதா...?" அவள் விழி திறந்து அவனை மிரட்டலாய் பார்த்தாள்...

"தெரியும்..." அவன் மெல்லமாய் முனங்கினான்...

"ரொம்ப நல்லது... நாளைக்கு மார்னிங்... ச்சு, சாரி சாரி... காலையில் பத்து மணிக்கு ஈசிஆர் ரோட்டில் இருக்கும் காபி ஷாப், சாரி... காபி கடைக்கு வந்திரு..."

அவளது நக்கல் கண்டு அவன் அவளை முறைக்க... அதைக் கண்டு அவள் நமட்டுச் சிரிப்பு சிரித்தாள்...

"எதுக்கு...?" என்று அவன் அதற்கும் முறைக்க...

"ஏன் மதியை மட்டும் தான் லவ்ஸ் பண்ணுவியா...? என்னை எல்லாம் லவ்ஸ் பண்ண மாட்டியா சத்யா...?" என்று குறும்பாய் சிரித்தவளை கண்டு அவன் திகைத்ததோடு மட்டுமல்லாது அவனது இதயம் கண்டபடி எகிறித் துடித்தது...

அவனது நிலை கண்டு சிரித்தவள், "உன்னோட ஏரியா வந்திருச்சு சத்யா... நாளைக்குக் காலையில் நாம் மீட் பண்ணலாம்..." என்று கூறியபடி வேண்டுமென்றே அவன் புறமாய் நன்கு சரிந்து கார் கதவை திறந்து விட்டாள்...

'பூனைக்குட்டி இப்படி உரசி உரசி என்னைக் கொல்லாதேடி...'

எக்குத்தப்பாய் அவனது முழங்கால்களில் உரசிய அவளது உடல் பாகத்தின் மென்மையான ஸ்பரிசத்தில் அவன் மெய்மறந்தவனாய் முடுக்கிவிட்ட பொம்மை போல் அவளிடம் சம்மதமாய்த் தலையசைத்து விட்டு காரை விட்டு இறங்கினான்...

"பை சத்யா..." என்று புன்னகையுடன் கையாட்டியவளை அவன் இமைக்க மறந்து பார்த்திருந்தான்...

அவளது கார் கண்ணில் இருந்து மறையும் வரை அவன் அப்படியே சிலையாய் அசையாது நின்றிருந்தான்...!!!

"ஏடி கள்ளச்சி என்ன தெரியலையா
போடி வெள்ளச்சி என்ன புரியலையா
நெஞ்சு நோங்குது நோங்குது உன்ன
உன் கால் ரெண்டு போகுது பின்ன

நான் முத்தம் போட துடிக்கிறேன் உன்ன
நீ முள்ளைக் கட்டி அடிக்கிற கண்ண
நீ காய்தானா? பழந்தானா? சொன்னால் என்ன
ஏடி கள்ளச்சி என்ன தெரியலையா
போடி வெள்ளச்சி"

தொடரும்...!!!

## உயிர் : 8

பத்மவர்ஷினி கூறியது போல் அந்தக் 'காபி ஷாப்' முன் வந்து நின்றான் சத்யமூர்த்தி... அதன் ஆடம்பரம் கண்டு உள்ளே செல்ல தயங்கியவனாய் அவன் வெளியில் நின்றுவிட்டான்... தான் அணிந்திருந்த வேட்டி, சட்டையைக் குனிந்து பார்த்துக் கொண்டான்... அந்த இடத்திற்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாதது போலிருந்தது அவனது உடையும், தோற்றமும்... அதனால் தயக்கத்துடன் அவளின் வருகைக்காக அவன் சுற்றும் முற்றும் பார்த்திருந்தான்...

"ஹேய் சத்யா, அப்பவே வந்திட்டியா...? உள்ளே வர்றதுக்கு என்ன மேன்...?"

கடையினுள் இருந்து வெளியில் வந்த பத்மவர்ஷினி அவனை ஆர்ப்பாட்டமாய் வரவேற்றாள்... அவனுக்கு முன்பே வந்துவிட்டாள் போலும்... அவளது முகத்தில் அப்படியொரு மகிழ்ச்சி... தனது வரவினாலோ...? என்று யோசித்தபடி அவன் அவளை உற்று நோக்கினான்...

கருப்பு நிற ஜீன்சும், கருப்பு நிற டீசர்ட்டும் அணிந்து, வலதுகையில் கருப்புபட்டி அணிந்த கைக்கடிகாரம், காதில் ஒற்றைக் கல் பருமனான வைர தோடு, கழுத்தில் மெல்லிய தங்க சங்கிலி அணிந்திருந்தாள்... தலைமுடியை குதிரைவால் போல் தூக்கி போட்டு, குளிர் கண்ணாடியை மேலே ஏற்றி விட்டிருந்தாள்... நெற்றியில் சிறு புள்ளியாய் கருப்பு பொட்டு மட்டும்... துளி ஒப்பனை இல்லாத இந்த நிலையிலும் அவளது அழகு சிறிதும் குறையவில்லை... அன்று பட்டுப்புடவையில் அழகு தேவதையாய் காட்சியளித்த போதும், இன்று நாகரீக உடையில் நாகரீக நங்கையாய் அமர்க்களமாய் இருந்த போதும் அவளின் அழகு கொஞ்சமும் குறையாது மேலும் அதிகரித்துக் காணப்பட்டது...

"உள்ளே வா சத்யா..." என்று அவள் அவனை அழைக்கவும், அவன் மீண்டும் தனது உடையை ஒரு முறை குனிந்து பார்த்தான்...

"வேட்டி, சட்டையில் கம்பீரமா தான் இருக்க... நீ வா..." என்று தன்னைப் பாராட்டியவளின் வார்த்தையில் அவன் மகிழ்ந்தான் என்றால், அவள் தனது கையைப் பிடித்திழுத்ததும் அவன் வானத்தில் பறந்தான்... அவன் தன்னை மறந்து, இமைக்க மறந்து அவளைப் பார்த்திருந்தான்...

"மதிக்கு மட்டும் தான் எல்லாம் வாங்கிக் கொடுப்பியா...? எனக்கு எல்லாம் வாங்கிக் கொடுக்க மாட்டியா...?"

ஒருவித ஏக்கத்துடன் கேட்டவளை கண்டு அவன் தான் அதிகம் தவித்துப் போனான்... இவள் தெரிந்து கேட்கிறாளா...? இல்லை தெரியாது கேட்கிறாளா...? என்று...

"ஏன் இப்படி எல்லாம் பேசுற...?" அவனது குரல் ஆற்றாமையுடன் ஒலித்தது...

"நீ என்னைப் பேச வைக்கிற சத்யா..." அவளது குரலும், முகமும் இறங்கி போயிற்று... அதைக் காண சகிக்காதவனாய்,

"ஆமா, நான் மதியை பீச்சுக்கு கூட்டிட்டுப் போனது உனக்கு எப்படித் தெரியும்...?" என்றவனைக் கூர்ந்து நோக்கியவள் பட்டென்று சிரித்துவிட்டாள்... அவன் அவளைப் புரியாது பார்க்க...

"துரை இங்கிலீபிசு எல்லாம் பேசுது..." என்றாள் கேலியாய் ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி...

அவளது கேலியில் அவனுக்கும் சிரிப்பு வந்தது... ஆனாலும் அடக்கி கொண்டவன் அவளைப் பார்த்து கடுமையுடன்,

"பதில் சொல்லு..." அவனது கடுமையில் விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டவள்,

"மீட்டிங் முடிஞ்சு அந்த வழியா போயிட்டிருந்தேன்... ஏதேச்சையா வெளியில் பார்த்தப்போ நீயும், உன் லவ்வரும் பஸ்க்காக வெய்ட் பண்ணிக்கிட்டு இருந்தீங்க... எனக்கும்

பொழுது போகலை... அதான் உன்னை ஃபாலோ பண்ணினேன்..."

"ஓ..." என்று அவன் இழுக்க...

"ஒரு கப் காபி வாங்கிக் கொடுக்க நீ ரொம்பப் படுத்துற சத்யா... எவ்வளவு நேரம் தான் இங்கேயே நிற்கிறது...? உள்ளே போகலாம் வா..." அவள் கடுப்புடன் ஆரம்பித்துக் கெஞ்சலில் கொஞ்சி கொண்டே முடித்தாள்...

"இங்கேயா...?" அவனது கை அவனையும் அறியாது தனது சட்டைப்பையைத் தொட்டு பார்த்துக் கொண்டது...

"இங்கே தான் விதம் விதமாய்க் காபி கிடைக்கும்..." என்றாள் அவள் புரியாதவளாய்...

அவளின் பிடிவாதம் தெரிந்து அவன் சட்டைப்பையில் இருந்த பணத்தைக் குனிந்து பார்த்தான்... பேருந்துக்குத் தேவைக்கான பணத்துடன் கூடுதலாக ஒரு நூறு ரூபாய் இருந்தது...

"அம்மிணி, இது எல்லாம் என்னுடைய வருமானத்துக்கு ஒத்து வராது... இங்கே ஒரு காபி இருநூறு, ஐநூறு ரூபா இருக்கும்... நான் அந்தப் பணத்தை வச்சு ஒரு மாசத்தை ஓட்டிருவேன்..."

வெகுளியாய் கூறியவனை ஏறிட்டு பார்த்தவளின் மனம் கலங்கி போனது... அவனது கையைப் பிடித்திருந்த அவளது பிடி இறுகியது...

"என்னங்கம்மிணி...?" அவளது இறுகிய பிடியை உணர்ந்தவனாய் அவன் கேட்க...

அவன் வாங்கிக் கொடுக்க முடியாது என்று மறுக்கவில்லையே... அவனது நிலையைத் தானே சொன்னான்... அதில் சற்று மனம் தெளிந்தவள்,

"அப்போ அந்தக் கடைக்குப் போகலாமா...?" சற்று தள்ளி ஓலை வேய்ந்திருந்த டீக்கடை சுட்டிக்காட்டி அவள் கேட்க...

அதைக் கண்டு அவனது மனம் உற்சாகத்தில் குதியாட்டம் போடவில்லை... மாறாக அவளுக்காக வருந்தியது... தனக்காக அவளின் உயரத்தை விட்டு அவளை இறக்குகிறோமோ என்று அவனுக்கு உள்ளுக்குள் தவிப்பாக இருந்தது...

"இல்லை அம்மிணி... அங்கே எல்லாம் வேண்டாம்... நீ என்னைய எதுக்கு வர சொன்ன... அதை மட்டும் சொல்லு..."

"ஓடி போகத் தான்..." என்று கண்சிமிட்டி சிரித்தவளை கண்டு அவனது இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது...

"ஆனா அதுக்கு எல்லாம் வொர்த்தான ஆள் நீ இல்லை..." அவனது அமைதி கண்டு அவள் உள்ளுக்குள் பொருமியபடி அப்படிக் கூற... அவனோ தனது அந்தஸ்தை எண்ணி மனம் மறுகி நின்றான்...

"உன் கூடச் சேர்ந்து சாப்பிடணும்ன்னு தான் காலையில் ஒண்ணும் சாப்பிடாம வந்திட்டேன்... இப்போ ரொம்பப் பசிக்குது சத்யா..."

தனது தட்டையான, குட்டி வயிறை தடவி கொண்டு அவள் கூற... அவள் கூறிய பாவனையில் அவனுக்குக் கவலை மறந்து சிரிப்பு வந்தது... அவனைச் சந்தோசப்படுத்தவும், துக்கப்படுத்தவும் அவள் ஒருத்தியால் மட்டுமே முடியும்...

'பூனைக்குட்டி உனக்கு வயிறுன்னு ஒண்ணு இருக்கா...?' அவனது பார்வை அவளது வயிற்றில் படிந்தது... அடுத்து அவனையும் அறியாது அவனது விழிகள் மேலே ஏறியது...

'பார்க்காதேடா... அப்புறம் மூச்சு பேச்சு இல்லாம செத்து போயிர போற...' மனம் அவனுக்குக் கட்டுப்பாடு விதித்தது... அதில் அவன் தனது விழிகளைக் கஷ்டப்பட்டு வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்...

"சத்யா..." இறைஞ்சும் குரலில் கூப்பிட்டவளை திரும்பி பார்க்காது,

"வா..." என்று அவன் அவளை அழைக்க...

"பெரிய மனசு பண்ணி இறங்கி வந்திட்ட போலிருக்கு..." என்றவள் அவனுடன் உற்சாகமாய் நடந்தாள்...

அவனது கையோடு கோர்த்திருந்த தனது கரத்தை அவள் விடவே இல்லை... வேண்டுமென்றே பிடித்திருக்கிறாளா? இல்லை மறந்து விட்டாளா? விடை தெரியாது அவன் தவித்தபடி அவளுடன் நடந்தான்...

புறவழிச்சாலை என்பதால் அங்கு ஆட்கள் நடமாட்டம் அவ்வளவாக இல்லை... வாகனங்கள் மட்டும் விரைந்து சென்று கொண்டிருந்தது...

சிறு டீக்கடையின் பிளாஸ்டிக் நாற்காலியில் அவள் சட்டமாய் அமர்ந்து கொண்டாள்...

"உனக்கு என்ன வேணும் அம்மிணி...?"

"என்னயிருக்கோ வாங்கிட்டு வா... எதுன்னாலும் எனக்கு ஓகே தான்..."

அவன் வடையும், டீயும் வாங்கிக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தான்... அதை ஆசையுடன் கைகளில் வாங்கிக் கொண்டவள்,

"உனக்கு...?" என்று அவனைக் கேள்வியாகப் பார்த்தாள்...

"எனக்கு வேண்டாம்..." என்று கூறியபடி அவன் அவளருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான்...

அப்போது அவனது உடல் அவளது தளிர்மேனியுடன் லேசாக உரசியது... அதை உணர்ந்தவனாய் அவன், அவள் அன்று மாதிரி கோபப்படப் போகிறாள் என்றெண்ணி சற்று தள்ளியமர போனான்...

"வேண்டாம்ன்னு சொன்னாலும் உன்னை யார் விடப் போறது..." என்று கூறிக் கொண்டே அவன் புறம் சரிந்தவள் வடையை எடுத்து அவனது வாயில் வைத்தாள்...

அவளது அருகாமையிலும், அவளது உரிமையான செயலிலும் அவன் முற்றிலும் செயலிழந்து போனான்... அவன் திகைத்து போய் அவளைப் பார்த்தான்...

"இப்ப வாயை திறக்க போறியா இல்லையா...?" அவள் செல்லமாய் மிரட்டியபடி அவனைப் பார்க்க...

அவன் மெல்ல வாய் திறந்து வடையைக் கடித்தான்... அந்த வடையை எடுத்து அவள் தனது வாயில் வைத்து கடிக்க அவன் இன்னமும் அதிர்ந்து போனான்...

'இந்தம்மிணி ஏன் இப்படி எல்லாம் பண்ணுது...? என்னைப் பைத்தியமாக்காம விடாது போலிருக்கே...' என்று அவன் மனதிற்குள் புலம்பியபடி அமர்ந்திருந்தான்... மனதின் புலம்பலையும் மீறி அவனுள் ஒருவித இதம் பரவுவதை அவனால் உணர முடிந்தது...

"இந்தா சத்யா...?" வடையைத் தான் ஒரு கடி கடித்து விட்டு மீண்டும் அவனிடம் நீட்ட...

"இல்லை, இல்லை வேண்டாம்..." என்று அவன் வேகமாய் மறுத்தான்...

"அது சரி, நாங்க கொடுத்தா உனக்கு இனிக்குமா...? கொடுக்க வேண்டியவங்க கொடுத்தா தானே இனிக்கும்..." என்று நொடித்துக் கொண்டே அவள் வடையை உண்டாள்...

அந்தக் கணம் அவளைப் பார்க்கும் போது அவனுக்குச் 'சிறுத்தை தனது புள்ளிகளை மாற்றிக் கொள்ளாது' என்கிற பழமொழி தான் நினைவுக்கு வந்தது... அவளும் அப்படித்தான்... எத்தனை அன்பை அவன் காட்டினாலும் அதையெல்லாம் மறந்து அவனை வார்த்தையால் குத்தி குதறுவது ஒன்று தான் அவளது ஒரே குறிக்கோள்... அவனது அத்தனை நேர இதம் மறைந்தது... ஒன்றும் பேசாது எழுந்தவன் சற்று தள்ளி போய் நின்று கொண்டான்...

பத்மவர்ஷினி அவன் வாங்கிக் கொடுத்த வடை, டீயை நன்றாக மொக்கி கொண்டே விழிகளால் அவனைப்

பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்... சாலையை வெறித்தபடி கைகளைக் கட்டி கொண்டு இறுக்கமாய் நின்று கொண்டிருந்தவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்பாக வந்தது...

'கருப்பட்டி மாதிரி இனிக்காம எப்போ பாரு மிளகாய் மாதிரி காரமா இருக்கியேடா...' என்று மனதிற்குள் செல்லமாய்க் கொஞ்சியபடி அவனைப் பார்த்திருந்தாள்...

அய்யனார் சிலை போன்று ஆறடி உயரத்தில் கருமை நிறத்தில் இருப்பவனிடம் தனது மனம் எப்படிச் சென்றது? என்று அவளுக்கு இன்னமும் புரியாத புதிராக இருந்தது... அந்தப் புதிரை விடுவிக்க அவளும் விரும்பவில்லை... அவனும் முயலவில்லை...

செப்பு சிலை போன்றிருக்கும் தனக்கும், கருங்கல் சிலை போன்றிருக்கும் அவனுக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது என்பது அவளுக்கு நன்கு தெரியும்... அப்படியிருந்தும் இந்தக் காதல் தேவை தானா? என்று அவள் மனதிற்குள் கேள்வி கேட்டு கொண்டாள்... என்ன யோசித்தும் தலைவலி வந்தது தான் மிச்சம்... ஆனாலும் சத்யமூர்த்தியை அப்படியே விட்டு விட அவளுக்குமே விருப்பம் இல்லை...

'நான் படுற அவஸ்தையில் கொஞ்சமாவது நீ பட வேண்டாமா கருவாயா...?' மனதில் கனன்று கொண்டிருக்கும் கோபத்திற்கு அவள் வடிகால் தேட முயன்றாள்...

காதல் மற்றும் கோபத்தில் இருந்து தப்பிப்பதற்கு அவனை வதைப்பது ஒன்றே சரியான வழியென்று அவளுக்குத் தோன்றியது...

உண்டு முடித்து விட்டு நிதானமாய் அவனை நோக்கி வந்தவள் அவன் அருகில் வந்ததும், "போகலாமா சத்யா...?" என்று கேட்க...

அவன் ஒன்றும் பேசாது நடந்தான்... அவள் வலிய சென்று அவனது கையைப் பிடிக்க முயல... அவனோ அதை

உதறிவிட்டு நடக்கத் துவங்கினான்...

'போயேன், எனக்கென்ன...? வீம்பா இருந்தா இருந்துக்கோ...' என்று பழிப்பு காட்டியவள் தானும் அமைதியாக வந்தாள்...

அவளது கார் அருகில் வந்ததும் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து கார் சாவியை எடுத்து அதிலிருந்த ரிமோட் மூலம் கார் தாழை விடுவித்தவள் கதவை திறந்து விட்டபடி,

"ஏறு சத்யா..." என்று ஓட்டுநர் இருக்கையைக் காண்பித்தாள்...

அவன் ஓட்டியது எல்லாமே உள்நாட்டு வண்டிகள் தான்... இந்த வெளிநாட்டு காரை பார்த்ததும் அவன் சற்று மிரண்டு தான் போனான்...

"பயப்படாதே சத்யா... எப்படி ஓட்டுறதுன்னு நான் சொல்லி தாரேன்... கமான், கெட் இன்..." என்று அவள் அவனை உற்சாகப்படுத்த...

அதில் கொஞ்சம் தைரியம் வர பெற்றவனாய் அவன் காரிலேறி அமர்ந்தான்... கார் கதவை மூடியவள் மறுபக்கம் வந்து ஏறினாள்...

"நீ புதுசு என்பதால் தான் நான் கார் கதவை திறந்து விட்டேன்... இனி தினமும் நீ தான் எனக்குக் கார் கதவை திறந்து விடணும்..." என்று அவள் அவனிடம் அதிகாரமாகச் சொல்ல...

"டிரைவரோட வேலை அது தானே... தாராளமா செய்றேன்..." என்றான் அவன் பணிவுடன்...

'அடேங்கப்பா' என்பது போல் அவனை ஒரு பார்வை பார்த்தவள் கார் சாவியை அவனிடம் கொடுத்தபடி, "காரை ஸ்டார்ட் பண்ணு..." என்றாள்...

அவன் அதை வாங்கிக் கொண்டு எப்படிக் கிளப்புவது என்று தெரியாது விழித்தான்... அவனது நிலை கண்டு சிரித்தவள்,

"இந்தப் பட்டனை ப்ரெஸ் பண்ணு..." என்று கார் சாவியில் இருந்த பொத்தானை காட்டியவள்,

"இல்லை இந்தப் பட்டனை ப்ரெஸ் பண்ணு..." என்று காரிலிருந்த ஒரு பொத்தானையும் காட்டினாள்...

"அப்புறம் இதில் ஹாண்ட் ப்ரேக் தான் இருக்கு... பழக்க தோசத்தில் காலால் தடவிட்டு இருக்காதே... அதே போல் நீ ஓட்டும் போது அடிக்கடி கியர் மாத்த தேவையில்லை... எல்லாமே ஆட்டோமேடிக் தான்..." என்று அவள் ஒவ்வொன்றாக அவனுக்குச் சொல்லி கொடுத்தாள்...

அப்போது அவளது கை அவனது உடலில் உரசி உரசி சென்றது... அவனோ இருக்கையோடு ஒட்டி கொண்டு அமர்ந்திருந்தான்...

'உசிரோட சாகடிக்கிறாளே...' மனதிற்குள் அவஸ்தையாய் முனங்கினான்... அவளது அருகாமையில் அவனுக்குக் குப்பென்று வியர்த்தது...

அவனது நிலையை உணர்ந்தவளாய் அவள் காரின் மேற்கூரையை அகற்றியவள், "இது சன் ரூஃப்... இதுக்கான பட்டன் இது..." என்று விளக்கி கூற... திறந்திருந்த மேல் பக்கம் வழியாய் உள்ளே வந்த தென்றல் காற்றில் அவனது வியர்வை மொத்தமாய் அடங்கியது...

மீண்டும் மேற்கூரையை மூடியவள் ஏசியைப் போட்டு விட்டு, "எல்லாம் ஓகேவா...? இப்ப காரை ஓட்டு பார்க்கலாம்..." என்று கூறியபடி அவள் தனது இருக்கையில் சமத்தாய் அமர்ந்து கொள்ள...

அவன் நிம்மதியுடன் காரை கிளப்பினான்... அவளின் அறிவுரையின்றி அவனே காரை செலுத்தவும் அவள் நிம்மதியுடன் கண்களை மூடி கொண்டு இருக்கையில் சாய்ந்து கொண்டாள்... புறவழிச்சாலையில் கார் தடையின்றிச் சீராகச் சென்றது...

"இப்படியே போய்க்கிட்டே இருக்கணும் போலிருக்கு சத்யா... ரொம்பச் சந்தோசமாயிருக்கு..." என்றவளின்

வார்த்தையில் அவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

அவளது வார்த்தைக்கு மாறாக அவளது முகத்தில் அத்தனை வேதனை நிறைந்திருந்தது... அந்தக் கணம் அவளை ஆறுதலாய் அணைத்து அவளது வேதனையைப் போக்கிவிட அவனது கரங்கள் துடித்தது... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவன் சாலையில் கவனத்தைப் பதித்தான்...

அவளது ஆசைப்படி சிறிது தூரம் காரை ஓட்டி கொண்டு வந்தவன் பின் மெல்ல, "அம்மிணி, திரும்பப் போவோங்களா...?" என்று கேட்க... அதில் விழி திறந்து அவனை அமைதியாகப் பார்த்தவள்,

"ம், நீ இறங்கு... நான் காரை ஓட்டுறேன்..." என்க...

அவன் மறுக்காது காரை ஓரமாய் நிறுத்தி விட்டு கீழே இறங்கியவன் மறுபக்கம் வந்து அவளுக்காகக் கார் கதவை திறந்துவிட்டான்... அவனது செயலில் உதடுகளில் புன்னகை நெளிய காரை விட்டு இறங்கியவள் வேண்டுமென்றே அவனை இடித்துக் கொண்டு சென்றாள்...

'என்னை ஒருவழியாக்காம இவள் வீடு போய்ச் சேர மாட்டா போலிருக்கே...' என்று முனங்கி கொண்டே அவன் காரிலேறி அமர்ந்தான்...

பத்மவர்ஷினி எடுத்தவுடன் அதிவேகத்தில் காரை கிளப்பினாள்...

"அம்மிணி, எதுக்கு இந்த வேகம்...? கொஞ்சம் வேகத்தைக் குறை..." அவன் அவளைக் கட்டுப்படுத்த...

"இது வேகமா...? நம்ம ஊர் ரோடு சரியில்லை... இல்லைன்னா இதை விட வேகமா நான் கார் ஓட்டுவேன்..." என்று கலகலவெனச் சிரித்தவளின் கைகளில் கார் பந்தயக் குதிரை போல் வேகமாய் ஓடியது...

'இன்னைக்கு இந்தம்மிணிக்கு என்னாச்சு...? எந்தச் சண்டையும் போடாம பதவிசா நடந்துக்குது...' என்று அவன் ஆச்சிரியத்துடன் அவளைப் பார்த்தபடி வந்தான்...

அதே நேரம் பத்மவர்ஷினியின் வீட்டிற்கு அவளது அக்கா சுஜீதா வருகை தந்திருந்தாள்... தங்கையின் நிச்சயத்திற்குக் கூட வர முடியாது தவித்த மகள் இப்போது வந்திருப்பது கண்டு பெற்றோர் இருவரும் சந்தோசப்பட்டனர்...

"டாட், விஷ்ணுவோட சித்தப்பா பையன் வினய் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க...?"

வினயும் விஷ்ணு போல் தெலுங்கில் முன்னணி நாயகன் தான்...

"அவனுக்கு என்னம்மா...?"

"நம்ம வர்ஷூக்கு மாப்பிள்ளை பார்க்கிறது தெரிஞ்சு அவன் ஃபாரின் ஷூட்டிங்கை கேன்சல் பண்ணிட்டு உடனே இங்கே வந்துட்டான்..." என்ற மகளைக் கண்டு ஜீவாவின் விழிகள் கூர்மையானது...

"வந்ததும் என் கிட்ட ஒரே சண்டை... 'என்னைப் பார்த்தா உங்களுக்கு மாப்பிள்ளையா தெரியலையா அண்ணி'ன்னு... இவருக்கும் இதில் விருப்பம் இருக்கு டாட்... யுகேன் மேரேஜ்னால வந்த மனஸ்தாபம் இந்த மேரேஜால் ஒரு முடிவுக்கு வரும்... ம்மா, நீங்களாவது டாட் கிட்ட சொல்லுங்களேன்... வினயும் விஷ்ணு மாதிரி ரொம்ப நல்ல குணம்... அவனை நம்பி நம்ப வர்ஷூவை கொடுக்கலாம்..." என்று அவள் கூறினாள்...

"ஏற்கெனவே வர்ஷூ மனமுடைஞ்சு போயிருக்கிறாள்... இப்போ போய்..." சுபிக்ஷா சற்று தயங்கினாள்...

"சுஜீ, வினய் வீட்டில் நீ பேசும்மா... நான் நம்ம வர்ஷூ கிட்ட பேசறேன்..." என்றான் ஜீவா ஒரு முடிவெடுத்தவனாய்...

"தேங்க் யூ டாட்..." சுஜீதா தகப்பனை வந்து கட்டி கொண்டாள்...

அவன் புன்னகையுடன், "இப்ப உனக்குச் சந்தோசமா...?" என்று கேட்க... அவளும் மகிழ்ச்சியுடன் தலையாட்டினாள்...

பத்மவர்ஷினியின் அலைப்பேசி அலறியது... ஒரு கையால் காரை ஓட்டியபடி மறுகையால் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவள்,

"சொல்லுங்க டாட்..." என்க...

"அம்மிணி, கார் ஓட்டும் போது ஃபோன் பேச கூடாது..." என்றபடி சத்யமூர்த்தி அவளது அலைப்பேசியைப் பறிக்க...

அவனது குரலை மறுபுறம் கேட்ட ஜீவா திகைத்துப் போனான்... 'இவன் எப்படி வர்ஷூ கூட...?' அவனது மூளை வேகமாய்ச் சிந்திக்க ஆரம்பித்தது...

"ஓகே, ஓகே..." மகள் சிரித்தபடி பதில் கூறுவது அவனது காதில் கேட்டது... மகளின் சிரிப்பு சரியில்லையே என்று அவன் யோசிக்க ஆரம்பித்தான்...

அலைப்பேசியை 'ஸ்பீக்கர் மோட்'டிற்கு மாற்றியவள் அதை அருகில் வைத்து விட்டு, "என்ன விசயம் டாட்...?" என்க...

"நம்ம விஷ்ணுவோட சித்தப்பா மகன் வினய்க்கு உன்னைப் பெண் கேட்கிறாங்க வர்ஷூ..." தகப்பன் மகளை ஆழம் பார்த்தான்...

ஜீவாவின் பேச்சில் சத்யமூர்த்தித் தான் அதிகம் அதிர்ந்து போய் அமர்ந்திருந்தான்... அவளை விட்டு கொடுக்கவும் முடியாது, அவளை விலக்கவும் முடியாது அவன் தனக்குள் தவித்திருந்தான்... ஓரக்கண்ணால் அவனைப் பார்த்த பத்மவர்ஷினி,

"டாட், நான் ஒரு ப்ராஜெக்ட் விசயமா மும்பை போக வேண்டியிருக்கு..."

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் வர்ஷூ...? என்கேஜ்மென்ட் முடிச்சிட்டு மும்பை போ..." என்று ஜீவா உறுதியாய் கூற...

"டேய் வினய், நீ மட்டும் என் கையில் கிடைச்ச..."

அவள் கோபமாய் முணுமுணுத்தது நல்லவேளையாக ஜீவாவின் காதுகளில் விழவில்லை... ஆனால் சத்யமூர்த்தியின் காதுகளில் நன்கு விழுந்தது... அதைக் கேட்டதும் அவனது தவிப்பு மொத்தமாய் அடங்கிப் போனது... அந்தக் கணம் அவளை விட்டு விலகி செல்லும் முடிவினை அவன் உறுதியாய் எடுத்திருந்தான்...

"இந்த ப்ராஜெக்ட் முடிய ஒரு வருசமாகும் டாட்..." என்று அவள் பொறுமையின்றிக் கோபத்தில் பல்லை கடித்தாள்...

அவளது ஒரு வருட திட்டம் என்னவென்று சத்யமூர்த்திக்கு தெரியாதா என்ன...? அந்நேரம் அவன் மனதிலும் மிகப் பெரிய திட்டம் ஒன்று உருவாகியிருந்தது...

"சரிம்மா... உன் இஷ்டம்..." என்ற ஜீவா மேலே பேசாது அலைப்பேசியை அணைத்து விட்டான்...

"சுஜீ, நீ உன் சின்ன மாமனார் வீட்டில் பேசி மேற்கொண்டு ஆக வேண்டிய காரியத்தைப் பாரு... அதுவரை நம்ம வீட்டில் யாருக்கும் இந்த விசயம் தெரிய வேண்டாம்... அப்படித் தெரிஞ்சா வர்ஷூக்கு தெரிஞ்சிரும்... அவள் வேண்டாம்ன்னு சொல்லுவாள்..."

"அதுக்காக வர்ஷூ கிட்ட ஒரு வார்த்தை கேட்காம..." சுபிக்ஷா தயக்கத்துடன் கணவன் முகம் பார்த்தாள்...

"எனக்குப் பயமாயிருக்கு சுபி... இதிலும் ஏதாவது பிரச்சினை வந்தால் வர்ஷூவால் தாக்கிக்க முடியாது..."

கணவனது பயம் புரிந்தவளாய் சுபிக்ஷா அமைதி காத்தாள்...

பத்மவர்ஷினியோ தந்தையின் பேச்சில் தனக்குள் யோசித்தபடி காரை ஓட்டி கொண்டிருந்தாள்... பின்பு

அசால்ட்டாய் அதைப் புறம் தள்ளியவள்,

'என்னை மீறி என்ன நடந்துவிட முடியும்...?' என்று அலட்சியமாய் நினைத்து கொண்டாள்...

"அம்மிணி இங்கே இறக்கி விடு... நான் பஸ்சை பிடிச்சு போயிக்கிறேன்..." சத்யமூர்த்தி அவளது எண்ணவோட்டத்தைத் தடை செய்தான்...

"போய்...?" என்று கேள்வியாய் அவனைப் பார்த்தவள்,

"தண்ணியடிச்சிட்டுப் படுக்கப் போறியா...?" என்று கேட்க...

"அம்மிணி..." என்று அவன் கோபமாய் அவளைப் பார்க்க...

"உனக்கு இரண்டு வேலையிருக்கு... அதை முடிச்சிட்டுப் போய்த் தண்ணியடி..." என்றவள் மேலே பேசவில்லை...

நகரத்தின் மையத்திலிருந்த வணிக வளாகம் முன் காரை நிறுத்தியவள் தனது கைப்பையைத் திறந்து இரண்டு அறிமுக அட்டையை எடுத்து அவனிடம் கொடுத்தவள்,

"ஒண்ணு ப்யூட்டி பார்லர், இன்னொண்ணு பொட்டிக் அட்ரஸ்... அங்கே போய் என் பெயரை சொல்லு அவங்களே எல்லாம் பார்த்துக்குவாங்க..."

"எதுக்கு அம்மிணி...?" அவன் திகைப்பாய் அவளைப் பார்க்க...

"எனக்கு டிரைவரா இருக்கணும்ன்னா கூடச் சில தகுதிகள் வேணும்... அதுக்கேத்த மாதிரி நீ ரெடியாக வேண்டாமா...? அதுக்குத் தான்... இப்படிப் பட்டிக்காட்டான் மாதிரியா என் கூட வர போற...?"

"எனக்குத் தான் அந்தத் தகுதி இல்லைல்ல... அப்புறம் எதுக்கு உன் டிரைவரா என்னை நியமிக்கிற... அதுக்கு வேற ஆளை பாரு..." என்று அவன் கோபம் கொண்டு காரிலிருந்து இறங்க போனான்...

நொடியில் சுதாரித்துக் கொண்ட பத்மவர்ஷினி கார் சாவியில் இருந்த ரிமோட் மூலம் கதவை திறக்க விடாது செய்தவள்,

"உன்னோட முழுக் கண்ட்ரோலும் என் கையில் சத்யா..." என்றாள் திமிராய்...

அவன் அடங்கவில்லை என்றதும் அவளும் அடங்காது சீறினாள்... அவன் அடங்கிப் போனால் அவளும் அடங்கிப் போனாள்... இருவருமே ஒரே நேரத்தில் கோபத்தில் பொங்கி, ஒரே நேரத்தில் சாந்தமாய் குளிர்ந்தனர்... அது தான் இங்குப் பிரச்சினையின் ஆரம்பம்...

"உன் தங்கையின் வாழ்க்கை என் கையில் தான் இருக்கு..." என்று அவள் அவனுக்குச் சவால் விட்டாள்...

தங்கையைப் பற்றிச் சொன்னதும் சத்யமூர்த்தி அப்படியே அடங்கிப் போய்விட்டான்... அவன் செய்த தவறு தங்கையைப் பாதித்து விடக் கூடாது என்றே அவன் நினைத்தான்... அவன் அவளிடம் பணிந்து போவதற்கு இதுவும் ஒரு காரணம்...

"நமக்கு இடையில் தேவையில்லாம அகலை இழுக்காதே..." என்று அவனும் பதிலுக்குச் சீறினான்...

"நமக்கு இடையில் யாரையும் இழுக்காம இருக்கணும்ன்னு தான் நானும் சொல்கிறேன்... சோ, நான் சொல்றதை மட்டும் நீ கேளு... எதிர் கேள்வி கேட்க கூடாது... மைண்ட் இட்..."

"சரி, சரி... சொல்லி தொலை..."

"ஹலோ... நான் உன்னோட முதலாளி... அந்த மரியாதையை மெயின்டையின் பண்ணு..." என்று அவனின் முகத்தின் முன் சொடக்கு போட்டு அவள் கூற...

'பூனைக்குட்டி, இப்படியே பேசிக்கிட்டு இருந்தன்னு வைய்யி... ஒருநாள் இல்லை ஒருநாள் உன்னைக் கடிச்சு குதறிடுவேன் பார்த்துக்கோ... என்னோட பொறுமையும்

ஒரு அளவு தான்... என்னை உரசும் போது தெரியலையா, நீ என் முதலாளின்னு...?' என்று அவன் மனதில் அவளைத் திட்டி கொண்டான்...

ஆனால் வெளியில் பதவிசாக, "சரிங்க மேடம்..." என்று கூற...

அவள் கார் கதவின் தாழை நீக்கினாள்... உடனே கீழே இறங்கியவன் கதவை மூடிவிட்டு அவளைப் பார்த்துக் கொண்டு நின்றிருக்க... அதற்கும் முறைத்தவள்,

"போ மேன்..." என்று கத்த...

"எதுக்குடி இப்படிக் கத்துற...?" பொறுக்க மாட்டாது அவனும் பதிலுக்குக் கத்தினான்...

"அப்போ நான் சொல்றதை கேளு..."

"நீ முதல்ல கிளம்பு..."

"நீ முதல்ல கிளம்பு...." என்று அவள் பிடிவாதம் பிடிக்க...

இறுதியில் அவன் தான் விட்டு கொடுக்க வேண்டியதாய் போயிற்று...

"போய்த் தொலைக்கிறேன்..." என்று கடுகடுத்தபடி அவன் வணிக வளாகத்திற்குள் நுழைந்தான்...

அவன் செல்வதைப் புன்சிரிப்புடன் பார்த்தவள் காரை கிளப்பிக் கொண்டு சென்றாள்...

அவள் கூறிய கடைகளைத் தேடி அலைய வேண்டிய அவசியம் இல்லாது அவளது செயலாளர் அவனை அழைத்துச் சென்றாள்...

******************

"யாருடா இது, என் வீட்டுக்குள் என் அனுமதி கேட்காம நுழையறது...?" வீட்டிற்குள் நுழைந்த சத்யமூர்த்தியை கண்டு நடராஜன் கோபமாய்த் தடுத்தான்...

"டேய் லூசு, நான் தான்டா..." என்று அவன் எரிச்சலுடன் நண்பனிடம் கத்தினான்... பத்மவர்ஷினியிடம் காட்ட முடியாத கோபத்தை அவனிடம் காட்டினான்...

"மாப்ளே, நீயாடா இது...? நம்பவே முடியலை..." ஆச்சிரியத்துடன் நண்பனை பார்த்தபடி அவனைச் சுற்றி சுற்றி வந்தான் நடராஜன்...

'இப்படிச் சோளக்காட்டுப் பொம்மை மாதிரி என்னை ஆக்கிப்புட்டாளே... இந்தப் பய வேற இப்படிச் சுத்தி சுத்தி பார்க்கிறானே...' மனதில் நினைத்தபடி நண்பனை முறைத்தான் சத்யமூர்த்தி...

"எதுக்குடா இப்படிச் செக்கு மாடு மாதிரி என்னைய சுத்தி சுத்தி வர்ற...?"

"ஆளு சோக்கா மாறிட்டடா... என்னா ஸ்டைலா இருக்க..." என்று நடராஜன் வியக்க...

"உண்மையாவாடா சொல்ற...?" என்று சந்தேகத்துடன் அவன் நண்பனை பார்க்க...

"சத்தியமாடா... இப்போ தான் நீ அம்புட்டு அழகாயிருக்க..."

அப்போது சத்யமூர்த்தியின் மனதில் அழகு நிலையத்தில் நடந்தது நினைவுக்கு வந்தது... அவனை அழகுப்படுத்துவதற்குள் அவன் அங்கு இருந்தவர்களை ஒருவழியாக்கி விட்டான்... எதை மாற்றிய போதும் அவன் தனது முறுக்கு மீசையை மாற்றிக் கொள்ளச் சம்மதிக்கவில்லை...

"மாப்ளே, எதுக்குடா இந்த அலங்காரம் எல்லாம்...?"

"நாளையில் இருந்து அம்மிணிக்குக் கார் டிரைவர் நான் தானாம்... அதுக்குத் தான்..."

"இது கார் டிரைவருக்குப் போட்டு விட்ட மேக்கப் மாதிரி தெரியலையே மாப்ளே... வேற ஏதாவது மேட்டர் இருக்குமோ...?"

"ஆமா, அவ எங்கூட வந்து குடும்பம் நடத்த போறா பாரு... போடா, போய்ப் பொழப்ப பாரு..."

"என்னமோ நடக்குது, மர்மமா இருக்குது..." என்று பாடியபடி நடராஜன் வெளியில் கிளம்பி சென்றுவிட்டான்...

சத்யமூர்த்தி அங்கிருந்த கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்தான்... அவனது அடர்ந்திருந்த கேசம் சீராக வெட்டப்பட்டு, முகச்சவரம் செய்து மீசை அழகாக, நறுவிசாக வெட்டப்பட்டுப் பார்ப்பதற்கு அத்தனை அழகாக இருந்தான்...

"கருப்பா இருந்தாலும் அழகா தான்டா இருக்க..." என்று அவன் தன்னைத் தானே கொஞ்சி கொண்டான்... அந்த நொடி அவனது மனம் தன்னவளுக்கு நன்றி சொன்னது...

மறுநாள் காலையில் சத்யமூர்த்திச் சந்தோசத்துடன் பத்மவர்ஷினி தேர்ந்தெடுத்து கொடுத்த உடையை அணிந்து கொண்டு, அவள் வாங்கிக் கொடுத்த வாசனை திரவியத்தைப் பூசி கொண்டு உற்சாகமாக அவளைக் காண சென்றான்...

அங்குச் சென்ற சத்யமூர்த்தியை ஜீவா தான் முதலில் கண்டது... சத்யமூர்த்தியின் உடை, தோரணை எல்லாம் மாறியிருப்பதைக் கண்டு அவனது விழிகள் இடுங்கியது...

"நீ என்ன இங்கே...?" ஜீவாவின் கர்ஜனை குரலில் சத்யமூர்த்தியின் உற்சாகம் குறைந்தது...

"அம்மிணி தான் அவங்க காருக்கு டிரைவரா..." என்று அவன் தயங்கி கொண்டே கூற...

"ஓ..." என்றவன்,

"வர்ஷூக்கு உடம்பு சரியில்லை... இரண்டு நாள் கழிச்சு வேலைக்கு வா..." என்று இவனிடம் கூறிவிட்டு அவன் தனது காரிலேறி சென்றுவிட்டான்...

'அம்மிணி நேத்து நல்லா தானே இருந்தது...' என்று அவன் மனதிற்குள் குழம்பி போய்த் தவித்தான்... உடனே

அவளைக் காண வேண்டும் என்று அவனது மனம் துடித்தது...

வீட்டில் இத்தனை பேர் இருக்கும் போது அவன் எப்படி உள்ளே செல்வது...? அங்கிருந்த மற்ற ஓட்டுநர்களுடன் அவன் வெளியில் அமர்ந்து கொண்டான்... தங்கை கண்ணில் படக் கூட அவன் விரும்பவில்லை... எல்லோரும் வெளியில் கிளம்பி செல்வதற்காக அவன் காத்திருந்தான்...

அவனது நல்ல நேரம் பெரியவர்கள் நால்வரும் கூட வெளியில் கிளம்பி சென்று விட்டிருந்தனர்... வீட்டில் யாரும் இல்லாததை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு அவன் உள்ளே சென்றான்... பத்மவர்ஷினியின் அறை அவனுக்கு ஏற்கெனவே தெரியும்... அவள் அறை முன் வந்து நின்றவன் ஞாபகமாய்க் கதவை தட்டினான்...

"உள்ளே வாங்க..." அவள் மெல்லிய குரலில் உள்ளே வர சொல்ல...

அவளது குரலில் இருந்த சோர்வில் அவன் மனம் பதைபதைக்கக் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றான்... அங்குக் கட்டிலில் வாடிய கொடி போல் படுத்திருந்தவளை கண்டு மனம் பதறியவனாய் அவன் வேகமாய் அவளை நோக்கி சென்றான்...

"அடடே, சத்யாவா...? வா வா..." அவனைக் கண்டதும் முகம் மலர வரவேற்றவள் எழுந்தமர்ந்தாள்...

"நீ படு அம்மிணி..." என்றபடி அவள் அருகில் வந்து நின்றவன்,

"உனக்கு என்ன பண்ணுது அம்மிணி...?" என்று தவிப்புடன் கேட்க...

அவனது தவிப்பை உணர்ந்தவளாய் அவள் அவனைப் பார்த்து ஆறுதலாய் புன்னகைத்தபடி, "ஒண்ணும் இல்லை... புட் பாய்சன் ஆகிருச்சு..."

"என்னது...?" என்று அவன் புரியாது விழித்தான்...

"நேத்து சாப்பிட்ட ஏதோ ஒண்ணு உடம்புக்கு ஒத்துக்கலை..." அவனது கையைப் பிடித்து அவனைக் கட்டிலில் அமர்த்தியவள் தானும் அவன் அருகே நெருங்கியமர்ந்து கொண்டு அவனது சட்டை காலரை பிடித்திழுத்து வாசம் பிடித்தவள்,

"ஃபெர்ப்யூம் ஸ்மெல் ரொம்ப நல்லாயிருக்கு... உனக்குப் பிடிச்சியிருக்கா சத்யா...?" என்று கிசுகிசுப்பான குரலில் கேட்க...

அவனோ அவளது அருகாமையை அனுபவிக்க முடியாது அவள் கூறிய வார்த்தைகளில் உழன்று கொண்டிருந்தான்... உண்ணும் உணவில் இருந்து உடுத்தும் ஆடை வரை அவனுக்கும் அவளுக்கும் இடையே இருக்கும் வித்தியாசம் மலைக்கும், மடுவுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம்... அந்த உணவை போன்று தான் அவனது காதல் அவளுக்கு விசத்தைப் போன்றது...

இங்கு வரும் போது இருந்த உற்சாகம் இப்போது அவனுள் சுத்தமாய் இல்லை... தான் ஏற்கெனவே எடுத்திருந்த முடிவினை செயல்படுத்திட எண்ணியவனாய் அவன் அவளது கைகளை விலக்கி விட்டுத் தள்ளியமர்ந்தான்...

"அம்மிணி, நான் உங்கிட்ட ஒரு விசயம் சொல்லணும்..."

"சொல்லு சத்யா..." என்றவளின் விழிகள் அவனது கம்பீரமான அழகினை ரசித்துப் பார்த்திருந்தது... அவள் விரும்பிய தோற்றத்தில் அவளது மனதிற்கு விரும்பியவன் இருந்ததைக் கண்டு அவளுள் கிறக்கம் தோன்றியது...

கருப்பு நிற பேண்ட்டும், வெள்ளை முழுக்கை சட்டையும், அவனது சிகையலங்காரமும், முறுக்கிவிடப்பட்ட மீசையும் அவளை அப்படியே மதி மயக்கியது... அவள் மயக்கத்துடன் தனது விழிகளால் அவனது முகத்தினைக் காதலுடன் பருகி கொண்டிருந்தாள்...

"நான் கல்யாணம் பண்ணலாம்ன்னு முடிவு பண்ணி இருக்கேன் அம்மிணி..."

எதற்கும் கலங்காத பத்மவர்ஷினியின் விழிகள் அவனது வார்த்தைகளில் மெல்ல கலங்க ஆரம்பித்தது...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 9

பத்மவர்ஷினி கலங்கிய தனது மனதினை முயன்று சமன்படுத்திக் கொண்டு சத்யமூர்த்தியை பார்த்தாள்... அவனோ கட்டிலில் இருந்து எழுந்து நின்று கொண்டு அவளை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது முகத்தில் இருந்து அவனது உணர்வுகளை அவளால் கணிக்க முடியவில்லை...

'இந்தக் கருவா பயலுக்குக் கொஞ்சமாவது குற்றவுணர்ச்சி இருக்கா...? எவ்வளவு தைரியமிருந்தா என் கிட்டேயே வந்து அவன் கல்யாணம் பண்ணிக்கப் போறதை பத்தி சொல்லுவான்... அடேய் சத்யா, உன்னை ஓட ஓட விரட்டுறேன் பார்...' என்று மனதில் கோபமாய் நினைத்தவள் மனதில் எழுந்த தைரியத்துடன் அவனைப் பார்த்து,

"அப்படியா சத்யா, ரொம்பச் சந்தோசம்... பொண்ணு யாரு...? கல்யாணம் எப்போ...?" என்று நிதானமாகக் கேட்டவளை கண்டு அவன் தான் திகைத்துப் போனான்...

"மதி தான்... இன்னும் ரெண்டு வாரத்தில் கல்யாணம்..." அவளிடம் கூறியவன் மனதிற்குள்,

'நான் கல்யாணம் பண்ணிக்காம நீ கல்யாணம் பண்ணிக்க மாட்ட பத்மா... அதனால் தான் இந்த முடிவு... என்னை மன்னிச்சிரு...' என்று அவளிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டான்...

அவன் அடுத்தவள் கணவனானால் அவள் விலகி போய்விடுவாள் என்று அவன் தப்பு கணக்கு போட்டுவிட்டான்...

"ஓ..." என்றவள் அவனை அமைதியாகப் பார்த்தாள்... அவளது அந்தப் பார்வையில் அவன் தான் அரண்டு போனான்...

"வேண்டாம் பத்மா... நமக்கு இடையில் இனி எந்த உறவும் இல்லை... தேவையில்லாம நீ பிரச்சினை பண்ற... இப்பவும்

சொல்றேன்... நீ உன் வழியில் போ... நான் என் வழியில் போறேன்... உங்கப்பா உனக்கேத்த மாதிரி ஒரு ராஜகுமாரனை தான் மாப்பிள்ளையா பார்த்திருப்பார்... பேசாம நீ அவனையே கட்டிக்கோ..."

அவன் அத்தனை கூறிய போதும் அவள் தனது பார்வையை மாற்றிக் கொள்ளாது அவனை இமைக்காது பார்த்திருந்தாள்... அதைக் கண்டு அவனுக்குக் கிலி பிடித்துக் கொண்டது...

"மதி புள்ளைக்கு மட்டும் ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா நான் உன்னைச் சும்மா விட மாட்டேன்..." என்று அவன் சற்று கோபத்துடன் கூற...

அவ்வளவு தான் அதைக் கேட்டு அவளுக்கும் ஆத்திரம் அதிகரித்தது... சீற்றத்துடன் அவனைப் பார்த்தவள்,

"அவளை எதுக்குடா நான் கொல்லணும்...? அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்...? ஆனா நான் உன்னைக் கொல்வேன்டா... கொஞ்சம் கூடக் குற்றவுணர்ச்சி இல்லாம கல்யாணம் பண்ண நினைக்கிறியே, நீயெல்லாம் ஒரு ஆம்பிளையா..." என்று கோபத்தில் கண்டபடி எகிறினாள்...

இதுவரை அவனது மனதில் இருந்த சிறு குறுகுறுப்பு கூட அவளது கடைசி வார்த்தையில் மறைந்து போனது... அவனது குற்றவுணர்ச்சியைக் கோபம் வந்து ஆக்கிரமித்துக் கொண்டது...

"நான் ஆம்பிளைன்னு ஏற்கெனவே நிரூபிச்சதா எனக்கு ஞாபகம்... திரும்பவும் அதைச் செய்ய வைக்காதே..."

"ஒரு முத்தத்தில் நீ ஆம்பிளைன்னு தெரிஞ்சிருச்சாக்கும்... என்னைப் பேச வைக்காதே கருவாயா... பேசாம ஓடி போயிரு..." என்று படபடத்தவளின் முகம் சிவந்து போனது... அது கோபத்திலா? இல்லை வெட்கத்திலா? என்பது அவளுக்கே வெளிச்சம்...

'அடப்பாவி பூனைக்குட்டி, அப்போ நீ என்னடி எதிர்பார்க்கிற...?' அவன் பெரும் அதிர்வுடன் அவளைப்

பார்த்து வைத்தான்... அவனது பூனைக்குட்டி வேறு எதற்கோ அடி போடுவதைக் கண்டு அவன் பயந்து போனான்...

"முதலில் இங்கிருந்து வெளியில் போடா..." என்று கத்தியவளை கண்டு சுயவுணர்வு அடைந்தவன்,

"வெளியில் போகாம இங்கே இருந்து விருந்தாடவா வந்தேன்..." என்று கடுப்புடன் அவளைப் பார்த்து மொழிந்தவன்,

"இத்தோட என் வாழ்க்கையில் இருந்து விலகிக்கோ அம்மிணி... அது தான் உனக்கும் நல்லது, எனக்கும் நல்லது..." என்றவன் விறுவிறுவென்று அறையை விட்டு வெளியில் சென்றுவிட்டான்...

அவளும் அவளது நிலையை விட்டு இறங்க மறுக்கிறாள்... அவனும் அப்படியே... யாராவது ஒருத்தர் இறங்கி வந்தால் கூட அடுத்தவர் தானாக இறங்கி வந்து விடுவர்... ஆனால் முதலில் யார் இறங்கி வருவது என்பது தான் இங்குப் பிரச்சினை...

"போடா போ... கல்யாணத்துக்கு இன்னும் இரண்டு வாரம் இருக்குல்ல... அது போதும் எனக்கு... இந்தப் பத்மவர்ஷினிக்கு ஐஞ்சு நிமிசம் கிடைச்சாலே எல்லாவற்றையும் மாத்தி எழுதிருவாள்... நீ இரண்டு வாரம் கொடுத்திருக்க... உன் தலையெழுத்தையே நான் மாத்தி எழுதுறேன்..." என்று அவள் கர்வம் அடங்காது தனக்குள் சொல்லி கொண்டாள்...

அவளது மனதில் அடுத்தடுத்து தான் செய்ய வேண்டிய திட்டங்கள் மளமளவென்று உரு பெற ஆரம்பித்தது...

********************

அகல்யா கைகளில் செய்தித்தாளை வைத்துக் கொண்டு கடுப்புடன் கணவனுக்காகக் காத்திருந்தாள்... அவள் மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்ததில் அந்தச் செய்தித்தாள் மிகவும் கசங்கி போயிருந்தது... அந்தப்

பத்திரிக்கையில் யுகேனும், பெரிய நடிகர் ஒருவரின் மகளும் இணைந்திருந்த புகைப்படங்களை வெளியிட்டு இருவருக்கும் தொடர்பு இருப்பதாய் கிசுகிசுத்து இருந்தனர்...

சும்மாவே அவளுக்குக் கணவன் மீது அதீத நம்பிக்கை உண்டு... இப்போது இது வேறு சேர்ந்து கொள்ள அவள் கோபத்தின் உச்சியில் இருந்தாள்...

'வெள்ளப்பன்னி இன்னைக்கு வரட்டும் இருக்கு அவனுக்கு...' என்ன தான் ஆத்திரம் பொங்கிய போதும் அவளது மனதின் ஓரத்தில் சுருக்கென்று ஒரு வலி எழுந்தது...

அந்தக் கணம் அவள் கணவன் மீதான தனது காதலை உணர்ந்தாள்... முன்பு மாதிரியே அவன் மீது வெறுப்பைப் பிடித்துக் கொண்டு தொங்கியிருக்கலாம்... இந்தப் பாழாய் போன நேசம் அவன் மீது ஏன் தான் வந்து தொலைத்ததோ என்று அவளுக்கு மூச்சடைத்தது... கண்களில் துளிர்த்த விழிநீரை சுண்டி எறிந்தவள்,

"நீ எதுக்குடி அழற...? உன்னை அழ வைத்தவனை நீ அழ வைக்கணும்..." என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டாள்...

இரவு பதினோரு மணி வாக்கில் யுகேன் அறைக்குள் நுழைந்தான்... இப்போது எல்லாம் அவன் குடிப்பது இல்லை... அது போல் இரவும் சற்று நேரத்தோடு வந்து விடுகிறான்...

உள்ளே நுழைந்தவன் மனைவியின் முகத்தைப் பார்த்ததும் அவள் ஏதோ கோபத்தில் இருக்கிறாள் என்றெண்ணி அவள் புறம் திரும்பாது உடையை மாற்ற துவங்கினான்...

'எங்கேயோ போற மாரியாத்தா, என் மேல வந்து ஏறாத்தாங்கிற மாதிரி இவள் கிட்ட வாய் கொடுத்து நீ வாங்கிக் கட்டிக்கணுமா...? யுகேன் உசாரா இரு தம்பி...' அவனது மனசாட்சி அவனுக்கு அறிவுறுத்தியது...

அவன் வலிய சென்று வம்பிழுக்கும் அவசியமே இல்லாது அவனது மனைவியே அவன் முன் வந்து நின்றாள்...

'போச்சுடா, இன்னைக்கு என்ன பஞ்சாயத்தோ...? யுகேன் உனக்குக் கட்டம் சரியில்லைடா... இல்லைன்னா கல்யாணமாகி இத்தனை நாள் ஆகியும் இப்படிப் பிரம்மச்சாரியா இருப்பியா...?' மனதிற்குள் புலம்பினாலும் வெளியில் மனைவியைக் கெத்தாகப் பார்த்து வைத்தான்...

அவள் தனது கையிலிருந்த செய்தித்தாளை அவன் முகத்திற்கு நேரே நீட்டினாள்...

"என்னது கில்மா...?" என்று கேட்டபடி அதை வாங்கிப் பார்த்தவன் மனதிற்குள் திடுக்கிட்டுப் போனான்...

'அச்சோ, இதைப் பார்த்துட்டு தான் கில்மா இப்படி மாரியாத்தாவா மாறி நிக்குதோ...? ஆனாலும் யுகேன் உனக்குக் கொஞ்சமும் பொறுப்பில்லை... கல்யாணத்துக்குப் பிறகும் நீ அந்தப் பொண்ணு கிட்ட போய் எதுக்கு ஜொள்ளு விட்ட...? பாரு, இந்தப் பத்திரிக்கைக்காரன் எப்படி எட்டப்பன் வேலை பார்த்திருக்கான்னு...? இனி இவள் காலத்துக்கும் என்னை வச்சு வச்சு செய்வாளே...' மனதிற்குள் அலறினாலும் வெளியில் கெத்து குறையாது,

"இதுக்கு என்ன...?" என்றான் அசால்ட்டாய்,

"இதுக்கு என்னவா...? எவ்வளவு கொழுப்பு...? கட்டின பொண்டாட்டி கிட்டேயே இப்படிச் சொல்ல உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்...?"

விட்டால் அவள் ஆத்திரத்தில் அவனை அடித்து விடுவாள் போலும்... அப்படி ஒரு ஆக்ரோசம் அவளிடம் காணப்பட்டது...

"நீ என்னுடைய கட்டின பொண்டாட்டியா...? அப்படியா...?" என்று மோவாயை தடவியபடி அவளை மேலும் கீழுமாய்ப் பார்த்தவனின் நடுமண்டையில் நச்சென்று ஒரு கொட்டு வைக்க அவளது கை கோபமாய்ப் பரபரத்தது...

"ஓ, அப்போ கட்டின பொண்டாட்டி லிஸ்ட் ரொம்பப் பெருசோ... அதான் என்னை அடையாளம் தெரியலையோ..." என்றாள் அகல்யா எகத்தாள குரலில்...

'நான் என்ன அர்த்தத்தில் சொன்னேன்... இந்தப் பக்கி என்ன அர்த்தத்தில் எடுத்துக்கிட்டு என் கூட மல்லுக்கட்டுது...' அவன் கோபமாய் மனைவியை முறைத்தான்...

"நீ கட்டிய மனைவியா நடந்துக்கிட்டா நான் ஏன் இப்படி வெளியில் போகப் போகிறேன்...?" இப்போது அவன் அவளைப் பார்த்து நேரிடையாகக் கேள்வி கேட்டான்...

அகல்யா அவனை நோக்கி நெருங்கி வர... அதைக் கண்டு யுகேன் பரவசத்துடன் அவளைப் பார்த்தான்...

'கில்மாவுக்குப் பல்ப் எரிஞ்சிருச்சோ...' என்று அவன் ஆசையுடன் அவளைப் பார்க்க...

"நீ கட்டின புருசன் மாதிரி ஒழுங்கா நடந்துக்கிட்டா நானும் ஏன் இப்படி இருக்கப் போகிறேன்...?"

மனைவியிடம் இருந்து இந்த வார்த்தைகளை அவன் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை... அவன் திகைத்து போய் அவளைப் பார்க்கும் போதே அவள் அவனது கையிலிருந்த செய்தித்தாளை பிடுங்கி சுக்கு நூறாய் கிழித்து அவனது முகத்தில் விட்டெறிந்தாள்...

"நீ பொறுக்கியா மாறின மாதிரி நானும் பொறுக்கியா மாறி காட்டவா...? பொம்பளைங்க அப்படிச் செய்ய மாட்டோம்ங்கிற நம்பிக்கை... உன் நம்பிக்கையை நான் உடைச்சு காட்டினால்...?" கேலியும், கோபமும் கலந்து அவள் அவனை உறுத்து விழிக்க...

"ஏய்..." என்று உறுமியபடி அவன் அவளது முழங்கையைப் பற்றி அருகில் இழுத்தான்...

"அப்படி ஒரு நினைப்பிருக்கா உனக்கு...? அந்த நினைப்பை இப்பவே அழிக்கணுமே..." என்றபடி அவன் அவளது முகம்

நோக்கி குனிந்தான்...

நொடிகள் நிமிடங்களாய் கரைந்த போதும் அவன் அவளை விட்டு விலகவில்லை... அதே போல் திமிறி தன் எதிர்ப்பை வெளிப்படுத்திய மனைவியை அவன் தன் கரங்களால் அணைத்து ஆறுதல்படுத்தித் தன்னுள் பாந்தமாய் அடக்கி கொண்டான்...

மெல்ல மெல்ல அவளது எதிர்ப்புக் குறைந்தது... அவளது மனதில் எழுந்த காதல் அவனிடத்தில் மொத்தமாய் அவளைச் சரணடைய செய்தது... அவளது சரணாகதி நிலையறிந்து அவன் தான் சுதாரித்துக் கொண்டு விலகினான்... வெட்கத்தில் முகம் சிவக்க விழிகளை மூடி கிறங்கி போய் நின்றிருந்த மனைவியைக் கண்டு அவனுக்குச் சந்தோசமாக இருந்தது... அவளது முகத்தின் வடிவினை ஒற்றை விரல் கொண்டு அளவெடுத்தபடி,

"என் மனைவி நீ தான்னு உனக்கு ஞாபகம் வந்திருச்சா கில்மா...?"

கணவனின் குரலில் அகல்யா மெல்ல விழி திறந்தாள்... வெற்றிக் கண்டது போல் மகிழ்ச்சியில் முகம் மலர தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டு அவளது கண்களில் வலி தோன்றியது... அவளது விழியில் தெரிந்த வலியில் அவன் வேதனையுற்றான்...

"அகல்ம்மா..." அவன் ஏதோ பேச வரவும்...

வேண்டாம் என்பது போல் சைகை செய்தவள் அவனிடம் இருந்து விலகி பால்கனிக்கு சென்றுவிட்டாள்... மனைவியின் வலி நிறைந்த விழிகள் யுகேனை பெரிதும் இம்சித்தது... வேண்டுமென்றே அவளைக் காதலிப்பதாய் பொய் கூறி வலுக்கட்டாயமாக மணந்தவன் தான் அவன்... திருமணத்திற்குப் பிறகு மனைவி என்கிற ரீதியில் அவனுக்கு அவளை மிகவும் பிடிக்கும் தான்... ஆனால் அது காதலா? என்று கேட்டால் அதற்கு அவனின் பதில் இல்லை என்பது மட்டுமே...

ஆனால் இப்போது மனைவியின் விலகலில் மனதில் எழும் வேதனையில் அவன் தன் காதலை உணர்ந்தான்... அந்தக் கணம் அவள் இல்லாது அவன் இல்லை என்பதனையும் அவன் உணர்ந்தான்... இவ்வளவு நாள் விளையாட்டுத்தனமாய் இருந்தவன் இப்போது தனது காதலை அவளுக்கு எப்படிப் புரிய வைப்பது? என்று தெரியாது திகைத்திருந்தான்...

*******************

மறுநாள் காலையில் சத்யமூர்த்தி எப்போதும் போல் வேலைக்கு வந்துவிட்டான்... அது போல் பத்மவர்ஷினியும் தனது உடல்நிலையைக் கூடப் பொருட்படுத்தாது அலுவலகத்திற்குக் கிளம்பி விட்டாள்... கார் கதவை திறந்து விட்ட அவனைச் சிறிதும் கண்டு கொள்ளாது அவள் காரிலேறினாள்... அவளது அலட்சியம் அவனுக்கு வலித்த போதும் அதற்குத் தானே அவனும் ஆசைப்பட்டது... அதனால் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டான்...

மறுபக்கம் வந்து காரிலேறி அமர்ந்தவன் காரை கிளப்பினான்... எத்தனை கம்பீரமாக அவள் காட்சியளித்த போதும் அவளது முகத்தில் சிறு சோர்வு தென்பட்டதை அவனது விழிகள் குறித்துக் கொண்டது... ஆனால் அதை அவன் வாய்விட்டு கேட்க பயந்து அமைதியாகி போனான்...

பத்மவர்ஷினிக்கு உடல்நிலையை விட அவனது வார்த்தைகள் தான் அதிகம் வதைத்தது... 'என்னை விட்டு அவன் போய்விடுவானா...?' என்கிற தவிப்பு தான் அவளை ஒவ்வொரு கணமும் வதைத்துக் கொன்றது... அவன் தன்னை விட்டு விலகச் செய்யாதிருக்க வேண்டிய எல்லாத் திட்டமும் அவள் பக்காவாகப் போட்டுவிட்டாள்...

"பொக்கே ஷாப்புக்கு போ..." என்று அவனிடம் உத்தரவிட்டவள் அதன் முகவரியை கூறிவிட்டு தனது அலைப்பேசியில் கவனத்தைச் செலுத்தினாள்...

அவனும் ஒன்றும் பேசாது காரை ஓட்டினான்... பூங்கொத்து விற்கும் கடை வந்ததும் அவன் காரை நிறுத்தினான்...

அதில் நிமிர்ந்தவள் தனது கைப்பையிலிருந்து பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்து,

"ஒரு பொக்கே வாங்கிட்டு வா... கூடவே கெட் வெல் சூன்னு அதில் எழுதி வாங்கிட்டு வா..." என்க...

"என்ன அம்மிணி சொன்ன...?" அவள் சொன்னது புரியாது அவன் தலையைச் சொறிந்து கொண்டு முழிக்க... அதைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது...

"என் கூட வா..." என்றபடி அவள் காரை விட்டு இறங்கினாள்...

கடைக்குள் நுழைந்து அங்கிருந்த மலர்களில் ஒவ்வொன்றாய் தேர்ந்தெடுத்து கொடுத்து ஒரு பூங்கொத்துத் தயாரிக்கச் சொன்னவள் அதற்காகக் காத்திருந்த நேரத்தில் கடையைச் சுற்றி பார்க்கலானாள்... அங்கிருந்த சிவப்பு ரோஜாக்களாலான அழகிய பூங்கொத்து ஒன்று அவளது மனதினை மிகவும் கவர்ந்தது... அவள் அதைப் பார்த்துக் கொண்டு வெகுநேரம் நின்றிருந்தாள்... சத்யமூர்த்திக்கு அவள் ஏன் அதைப் பார்க்கிறாள்? என்று புரியாது போனாலும் அவனும் அந்தப் பூங்கொத்தை பார்த்திருந்தான்... அவனுக்குமே அது மிகவும் பிடித்துத் தான் இருந்தது...

அதற்குள் பத்மவர்ஷினி கேட்ட பூங்கொத்து தயாராகி வந்துவிட்டது... அவள் பணத்தைச் செலுத்திவிட்டு சத்யமூர்த்தியை பார்த்து,

"அதை வாங்கிட்டு வா..." என்று கூறியவள் பவித்ராவிடம் விடைப்பெற்று கடையை விட்டு வெளியில் வந்தாள்...

காரிலேறி அதைக் கிளப்பியவன் பத்மவர்ஷினியை கேள்வியாய் பார்த்தான்...

"நான் சொல்ற அட்ரசுக்கு போ..." என்று கூறியவள் முகவரியை கூற...

அவளது குரல் வேறுபட்டு ஒலித்ததில் அவன் அவளை உற்றுக் கவனித்தான்... முகமெல்லாம் சிவந்து விழிகள் சிவந்து அமர்ந்திருந்தவளை கண்டு அவன் மனம் துணுக்குற்றான்...

"அம்மிணி, உடம்பு சரியில்லையா...? வீட்டுக்கு போவோமா...?" என்று அக்கறையுடன் கேட்டவனை அவள் உறுத்து விழித்தாள்...

'இவன் எல்லாம் கேள்வி கேட்கும் அளவுக்கா நான் என் உணர்வுகளை வெளிப்படுத்தி இருக்கிறேன்...? அந்தளவுக்கு நான் இவனைத் தேடுகிறேனா...? வேண்டாம், வேண்டாம் இவன் எனக்கு வேண்டாம்... என்னைப் பலவீனப்படுத்தும் இவன் எனக்கு வேண்டாம்...' கோபத்தில் கண்டபடி யோசித்தாள் அவள்...

"சொன்னதை மட்டும் செய்..." என்று மிடுக்காய் உத்தரவை பிறப்பித்து விட்டு அவள் வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்...

'இவளுக்கு இருக்கிற கொழுப்புக்கு...?' என்று அவன் முணுமுணுத்துக் கொண்டே காரை செலுத்தினான்...

பத்மவர்ஷினி சொன்ன வீட்டின் முகவரி முன் காரை நிறுத்தினான் சத்யமூர்த்தி... அவன் கதவை திறந்து விட்டதும் இறங்கியவள்,

"ஐஞ்சு நிமிசம் கழிச்சு இந்தப் பொக்கேவை எடுத்துட்டு உள்ளே வா..." என்று கம்பீரமாக அவனிடம் ஆணையிட்டு விட்டு செல்ல...

'ஏன், இந்தப் பூங்கொத்தை கையில் எடுத்துக்கிட்டு போக முடியாதாக்கும்...? இது என்ன அத்தனை சுமையாவா இருக்கு...?' அவன் மனதில் நினைத்தபடி பூங்கொத்தை வெறித்தான்...

"ஹலோ..."

அவனது எண்ணம் அறிந்து அவள் அவனை நோக்கி சொடக்கிட்டு அழைத்தாள்.... அவன் என்னவென்று அவளைக் கேள்வியாய் பார்க்க...

"இதை எல்லாம் தூக்கி சுமைக்கத் தான் உன்னை மாதிரியான ஆளை வேலைக்கு வச்சியிருக்கு... மைண்ட் இட்..."

சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அவள் அவனை மட்டம் தட்டிட துடித்தாள்... அவனோ ஆத்திரம் தலைக்கேறினாலும் அவளை ஒன்றும் செய்ய முடியாதபடி அவனது கைகள் கட்டப்பட்டு இருப்பதை உணர்ந்து அமைதி காத்தான்... ஆனாலும் அவன் அவளை முறைக்கத் தவறவில்லை... அவளோ அவனது முறைப்பை அலட்சியத்துடன் புறம்தள்ளிவிட்டு சென்றுவிட்டாள்...

பத்மவர்ஷினி வந்திருந்த வீடு அவளைப் பெண் பார்க்க வருவதாகக் கூறியிருந்த நரேந்திரனின் வீடு... அவள் தான் அவனுக்கு விபத்தை ஏற்படுத்தினாள்... அவள் தான் இப்போது அவனைக் கண்டு நலம் விசாரிக்கவும் வந்திருக்கிறாள்... விந்தையான மனம் கொண்டவள் தான் இந்தப் பத்மவர்ஷினி போலும்...

அவள் வீட்டிற்குள் நுழைந்ததும் வரவேற்பறையில் அமர்ந்திருந்த நரேந்திரன் அவளை வரவேற்பதா? வேண்டாமா? என்று குழம்பி போய் அமர்ந்திருந்தான்... அவனது தந்தை தான் நாகரீகம் கருதி,

"வர்ஷூ உள்ளே வாம்மா..." என்று வரவேற்றார்...

"வணக்கம் அங்கிள்... எப்படியிருக்கீங்க...?" என்று அவரிடம் நலம் விசாரித்தவள் நரேந்திரனிடம்,

"இப்போ எப்படியிருக்கு நரேன்...?" என்று கேட்க...

"நௌ ஐயம் ஓகே வர்ஷூ..." என்றான் அவன் சிறு சிரிப்புடன்...

'பெண் பார்க்க வந்ததால் லேசான அடியுடன் தப்பிச்ச... இதே இது நீ என்னைக் கல்யாணம் பண்ண வந்திருந்தால் குடலை உருவி மாலை போட்டிருப்பேன்டா...' என்று மனதிற்குள் கோபமாய்ச் சொல்லி கொண்டவள் வெளியில் அப்பாவியாய் புன்னகைத்து வைத்தாள்...

அந்நேரம் சத்யமூர்த்திப் பூங்கொத்தை எடுத்துக் கொண்டு அங்கு வர...

"உள்ளே வா மேன்..." என்று அவனைப் பார்த்து கையசைத்து அவள் உள்ளே கூப்பிட...

'அடுத்த வீட்டில் சட்டமா உட்கார்ந்துட்டு இந்தம்மிணியோட லொள்ளை பாரு...' அவன் முனங்கி கொண்டே வந்து அந்தப் பூங்கொத்தை அவளிடம் நீட்டினான்...

அதை வாங்கியவள் அவனை ஆழ்ந்து ஒரு பார்வை பார்த்தாள்... அவளது பார்வைக்கான அர்த்தம் அவனுக்குச் சுத்தமாய் விளங்கவில்லை... எல்லாம் நொடி நேரம் தான் தன்னைச் சுதாரித்துக் கொண்டு,

"நீ காரில் போயிரு... நான் இப்போ வந்திர்றேன்..." என்க...

அவன் தலையாட்டிவிட்டுச் சென்றான்... ஆனால் அவளது பார்வை அவனது உயிரினை உருக்கியது என்னவோ உண்மை...

"யாரும்மா அது...?" நரேந்திரனின் தந்தை கேட்க...

"என்னோட டிரைவர் அங்கிள்..."

அவளது பதிலில் அவனுள் கடுமை குடியேறியது... இப்படி வதைக்கத் தான் அவனுக்கு ஓட்டுநர் வேலையைப் போட்டு கொடுத்திருக்கிறாளோ என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது...

'சந்தேகமே இல்லை, அது தான் உண்மை...' என்று அவனது மனசாட்சி அவனை எள்ளி நகையாடியது...

பூங்கொத்தை நரேந்திரனிடம் கொடுத்து நலம் பெற வாழ்த்திய பத்மவர்ஷினி அவனது தந்தையிடம் தொழில் விசயம் பேச ஆரம்பித்து விட்டாள்...

"அங்கிள், உங்களுக்குப் போட்டியா நான் எடுத்த பெங்களூர் ப்ராஜெக்ட்டை உங்களுக்கே திரும்பக் கொடுக்கலாம்ன்னு இருக்கேன்..."

"ஈசிட்...?" நம்ப முடியாது கேட்டவர் பின்பு,

"எதுக்கும்மா...? நீ எடுத்தது எடுத்ததாகவே இருக்கட்டும்..."

"உங்க மகனுக்கு ஆக்சிடென்ட் ஆனதுக்கு என்னோட ராசி தான் காரணம்ன்னு சொன்னீங்களாமே..."

அதைக் கேட்டு அப்பா, மகன் இருவரின் முகத்திலும் சங்கடமான புன்னகை நிலவியது...

"அதுக்குப் பிராயசித்தமா தான் இதை..." என்று இழுத்தவளுக்கு மட்டுமே தெரியும், இது எதுக்கான பிராயசித்தம் என்று...

"உனக்கு ரொம்பப் பெருந்தன்மையான மனசும்மா... உன்னைப் போல் ஒருத்தியை இந்தத் தொழில் வட்டாரத்தில் நான் பார்த்ததில்லை..."

பெரியவர் அவளைப் புகழ்ந்து பேச ஆரம்பிக்க... அவளோ புன்னகையுடன் அவரைப் பார்த்திருந்தாள்...

'எல்லோருக்கும் ஒரு விலை உண்டு... உங்களுக்கான விலை பெங்களூர் ப்ராஜெக்ட்... ஆனா எனக்கான விலை...?' அவளது முகத்தில் மர்மமான புன்னகை ஒன்று வந்தமர்ந்தது...

சிறிது நேரத்தில் அவர்களிடம் இன்முகமாய் விடைப்பெற்று காரிலேறியவளுக்குச் சத்யமூர்த்தியின் முகத்தில் இருந்த கடுமை கண்டு சிரிப்பு வந்தது...

"உண்மை கசக்க தான் செய்யும்... இதுக்குத் தானே ஆசைப்பட்ட சத்யா...?" என்று கேலி குரலில் அவள் கேட்க...

"அதையே தான் நானும் சொல்றேன் அம்மிணி... உண்மை கசக்க தான் செய்யும்... புரிஞ்சிக்கிட்டு ஒதுங்கி போறது புத்திசாலித்தனம்..." என்றான் அவனும் கேலி குரலில்...

"சத்யா..." என்று அவளது குரல் அதட்டலாய் ஒலித்தது...

"நான் கார் டிரைவர்ங்கிற உண்மையைச் சொன்னேன்..." என்றவன் தன் முன்னிருந்த கண்ணாடி வழியே அவளைப் பார்த்தபடி,

"அது தானே உண்மை அம்மிணி..." என்றவனது பார்வை அழுத்தமாய் அவள் மீது படிந்தது... அவளும் அதே அழுத்தத்துடன்,

"ஆமாடா, அது தான் உண்மை... நீ என்னோட டிரைவர் தான்..."

அவள் கூறியதற்கான முழுமையான அர்த்தம் புரியாது அவனும், "ரொம்பச் சந்தோசம் அம்மிணி..." என்றபடி அவன் தனது கவனத்தைச் சாலையில் பதிக்க...

அவளோ தனது பார்வையை விலக்கி கொள்ளாது அவனைப் பார்த்திருந்தாள்... அந்தக் கணம் அவன் அவளைப் பார்த்திருந்தால் அவளது உதடுகளில் நெளிந்த விசம புன்னகையைக் கண்டிருப்பான்...

அன்றிரவு பத்மவர்ஷினி வீடு வந்த சேர்ந்த போது ஜீவா அவளைக் கோபமாய் எதிர்கொண்டான்...

"வர்ஷூ, நீ எதுக்கு நரேன் வீட்டுக்கு போன...?"

"இது என்ன கேள்வி டாட்...? அடிப்பட்ட மனுசனை போய்ப் பார்க்கிறது தப்பா...?" என்று புரியாத பார்வை பார்த்தாள் அவள்...

"ஒரு வாரம் கழிச்சுப் போய்ப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன...?" ஜீவாவின் வார்த்தையில் கோபம் ஏறியது...

"எனக்கு இப்போ தான் பார்க்க போகணும்ன்னு தோணுச்சு... போனேன்..." என்று அசால்ட்டாகத் தோளை

குலுக்கி கொண்டு அவள் சென்றுவிட்டாள்...

எல்லோருக்கும் புரியாத புதிராக இருக்கும் ஜீவாவிற்கே அவனது மகள் புரியாத புதிராக விளங்கி அவனைத் தலை சுற்ற வைத்தாள்...

******************

"மதி, உன்னை ப்ரின்சிபால் கூப்பிடுறாங்க...?" என்று ஆசரியர் ஒருவர் சொன்னதும் சந்திரமதி யோசனையுடன் கல்லூரி முதல்வரை சந்திக்கச் சென்றாள்...

அவள் அவரது அறை கதவை தட்டி அனுமதி கேட்க...

"எஸ், கம்மின்..." என்று கம்பீரமாக அனுமதி குரல் ஒலித்தது...

அவள் சற்று பயத்துடன் கதவை திறந்து கொண்டு அறையினுள் பிரவேசித்தாள்... ஆனால் அங்குக் கல்லூரி முதல்வர் நாற்காலியில் அமர்ந்திருந்தது பத்மவர்ஷினி... அவளை இங்குச் சற்றும் எதிர்பார்க்கவில்லை என்பதினை சந்திரமதியின் அதிர்ந்த விழிகள் காட்டி கொடுத்தது...

பத்மவர்ஷினியோ அவளது அதிர்ச்சியை உன்னிப்பாய் கவனித்துக் கொண்டிருந்தாள்...

"எம்ஃஈ படிக்கும் பெண்ணுக்கு மரியாதை தெரியலையே..." பத்மவர்ஷினி பனிப்போரை தொடங்கி வைத்தாள் இனிதாக...

அதைக் கேட்டு சந்திரமதி என்ன செய்ய வேண்டும்? என்று தெரியாது விழித்தாள்...

"உன்னோட காலேஜ் ப்ரின்சிபால் சேரில் உட்கார்ந்திருக்கும் எனக்கு வணக்கம் சொல்லணும்ன்னு கூட உனக்குத் தெரியாதா...?"

அவளது கம்பீரமான, அமர்த்தலான குரலில் சந்திரமதி முற்றிலும் தடுமாறி போனாள்... பத்மவர்ஷினியை கண்டால் வார்த்தைகளால் குத்தி குதறிவிட வேண்டும்

என்று கொலைவெறியுடன் காத்திருந்தவளுக்கு அவளது கம்பீரம் கண்டு வார்த்தைகள் தொண்டைக்குழிக்குள் சதிராடியது...

"குட்... மார்னிங்... மேம்..." என்றாள் திணறலாய்...

"ம், ம்..." தலையசைத்து அதை ஏற்றுக் கொண்ட பத்மவர்ஷினி,

"எப்படியிருக்க மதி...?"

"நல்லா... இருக்கேன்..." இன்னமும் சந்திரமதியின் தடுமாற்றம் குறையவில்லை...

"ம்... நல்லாயிருக்க..." என்று ஒவ்வொரு வார்த்தையாய் அழுத்தி கூறிய பத்மவர்ஷினி அவளை ஆழ்ந்து நோக்கியபடி,

"ஆனா நான் நல்லாயில்லையே..." என்றாள் நேரிடையாக, அதிரடியாக...

தொழிலதிபர் பத்மவர்ஷினி தனது ஆட்டத்தினைச் சந்திரமதியிடம் இருந்து ஆட தொடங்கி விட்டாள், வெற்றிகரமாக...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 10

பத்மவர்ஷினியின் வார்த்தையில் சந்திரமதி திகைத்து விழித்தாள்... என்ன பதில் கூறுவது என்று தெரியாது அவள் பத்மவர்ஷினியின் முகத்தைப் பார்த்தாள்...

"சத்யா உன் கிட்ட எல்லாம் சொல்லியிருப்பான்னு நினைக்கிறேன்..."

நிச்சயம் இது சந்திரமதியை ஆழம் பார்க்கும் கேள்வி தான்... ஏனெனில் அவளுக்குச் சத்யமூர்த்திச் சந்திரமதியிடம் என்ன பேசினான் என்று தெரியாது...

"ம், மாமா சொல்லுச்சு..."

சந்திரமதியின் மாமா என்றழைப்பில் பத்மவர்ஷினிக்குக் கோபம் வந்தது... முயன்று தன்னை அடக்கி கொண்டாள்...

"ரொம்பச் சந்தோசம்..." என்று அமர்த்தலாகக் கூறியவள்,

"நாங்க நல்லாயிருக்கணும்ன்னா நீ உனக்கான வாழ்க்கையை வாழணும்..."

"அதை ஏன் நீங்க சொல்றீங்க...? உங்களுக்குத் தான் மாமாவை பிடிக்காதே..." சந்திரமதி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டுவிட்டாள்...

"பின்னே நான் அவனுக்காக இருக்கும் போது அவன் உன் பின்னாடி சுத்துறதும், நீ அவன் பின்னாடி சுத்துறதுமா இருந்தால் எனக்கு எப்படி அவனைப் பிடிக்கும்...?"

அதைக் கேட்டு சந்திரமதியின் விழிகள் ஆச்சிரியத்தில் அகன்றது...

"நிஜமாவே உங்களுக்கு மாமாவை பிடிக்குமா...?" அதற்குப் பதில் கூறாது தவிர்த்தவள்,

"நீ எங்க வழியை மறைக்காமல் விலகியிருந்தால் போதும்... மத்ததை நான் பார்த்துக்குவேன்..."

"நான் தான் விலகிட்டேனே..." என்றவளை கூர்ந்து பார்த்தவள்,

"அப்படியா, ரொம்பச் சந்தோசம்... அதைச் செயலில் காட்டினால் தானே நம்ப முடியும்..."

"நான் என்ன செய்யணும்...?"

பத்மவர்ஷினி விரித்த வலையில் அழகாய் வலிய வந்து சிக்கினாள் சந்திரமதி...

"நீ கல்யாணம் பண்ணிக்கணும்..." என்ற பத்மவர்ஷினியின் பார்வை அவளைத் துளைத்தெடுத்தது...

"நான்... கல்யாணம்..."

இதுவரை சத்யமூர்த்தியை தனது மனதில் வைத்து கொண்டாடிய அந்தப் பேதை பெண்ணால் அவனுடன் இல்லாத திருமணத்தை நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை... அவளது விழிகளில் கண்ணீர் நிரம்பியது... அதைப் பார்த்துக் கொண்டிருந்த பத்மவர்ஷினியின் முகம் எந்தவொரு உணர்வையும் பிரதிபலிக்கவில்லை...

"அப்போ கடைசிவரை இப்படியே இருக்கப் போறியா...?"

"இருந்தால் தான் என்ன...?" என்றாள் சந்திரமதி விட்டேற்றியாய்...

"அப்போ நானும், உன் மாமாவும் இப்படித் தனித்தனியா பிரிஞ்சிருக்க வேண்டியது தான்..."

"இல்லை... வேண்டாம்..." என்று பதறி போய் மறுத்தாள் சந்திரமதி...

"உன் முடிவு இது தான்னா எங்க முடிவும் இது தான்..."

"வேண்டாம், வேண்டாம்... நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்..." வேதனையில் முகம் கசங்க கூறியவளை கண்டு பத்மவர்ஷினியின் முகம் மலர்ந்தது... எழுந்து அவள் அருகில் வந்தவள்,

"நல்ல முடிவு..." என்று அவளைப் பாராட்டியவள்,

"இதைச் சத்யா கிட்ட சொல்லாதே... நீயும், நானும் சேர்ந்து அவனுக்கு ஸ்வீட் சர்ப்ரைஸ் கொடுப்போம்..."

சந்திரமதி அவளைச் சந்தேகத்துடன் பார்த்தாள்...

"ஹலோ, நானும் கொஞ்சம் நல்லவள் தான்... சத்யா மேல் அக்கறை உள்ளவள் தான்... ஏதோ எதிரியை பார்க்கிறது மாதிரி என்னைப் பார்த்து வைக்கிற..."

"நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா நீங்களும், மாமாவும் சந்தோசமா இருப்பீங்களா...?" சந்திரமதிக்கு இன்னமும்

நம்பிக்கை வரலை...

"சத்யாவை எதுக்கு என் கிட்ட வேலைக்கு வர சொன்னேன்னு உனக்குத் தெரியுமா...?"

"ம்ஹூம், தெரியாது..."

"என்னால் அவனைப் பிரிஞ்சு இருக்க முடியாம தான்..." பத்மவர்ஷினி இந்த விசயத்தில் உண்மையைத் தான் சொன்னாள்...

அதைக் கேட்டு சந்திரமதியின் முகம் மலர்ந்து போனது...

"நான் கூட உங்களைத் தப்பா நினைச்சிட்டேன்... சாரி..."

தவறே செய்யாது சந்திரமதி மன்னிப்பு கேட்டது கண்டு பத்மவர்ஷினியின் இதழ்கள் இகழ்ச்சியாய் வளைந்தது... முகத்தில் அகந்தை அழையா விருந்தாளியாய் வந்து ஒட்டி கொண்டது...

"மாமா சந்தோசத்துக்காக நான் கண்டிப்பா கல்யாணம் பண்ணிக்கிறேன்..."

"அது தான் எனக்கும் வேண்டும்..."

பத்மவர்ஷினி பேசி முடிக்கவும் கல்லூரி முதல்வர் அறைக்குள் நுழையவும் சரியாக இருந்தது...

"பேசி முடிச்சிட்டீங்களா மேம்..."

எல்லோரும் மரியாதையாக விளிக்கும் கல்லூரி முதல்வர் பத்மவர்ஷினியை மரியாதையாக அழைத்தார்... அந்தக் கணம் சந்திரமதிக்கு அவளது உயரம் புரிந்தது... தான் தனது ஊருக்கு மட்டுமே பெரிய ஆள்... ஆனால் பத்மவர்ஷினி அப்படியில்லை என்று...

"எஸ்... முடிச்சாச்சு..." என்றவள் தனது காசோலையை எடுத்து ஒரு பெரிய தொகையை நன்கொடையாக அந்தக் கல்லூரிக்கு கொடுத்தாள்...

அவ்வளவு தான் அந்தக் கல்லூரி முதல்வர் வாயெல்லாம் பல்லாக மாறிப் போனார்...

"இன்னுமா நீ போகலை..." சந்திரமதியை பார்த்து பத்மவர்ஷினி கேட்க... அதில் அவளது முகம் சுருங்கி போனது...

"சந்திரமதி, க்ளாஸ் நேரத்தில் இங்கே என்ன பராக்கு பார்க்கிற...? போய்ப் படிக்கிற வழியைப் பார்..." என்று கல்லூரி முதல்வர் அவளிடம் கடுகடுக்க... அதைக் கண்டு பத்மவர்ஷினியின் இதழ்களில் நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது...

"சாரி மேம்..." என்று மன்னிப்பு கேட்ட சந்திரமதி வெளியில் செல்ல... அவளையே பார்த்துக் கொண்டிருந்த பத்மவர்ஷினி கல்லூரி முதல்வரின் அழைப்பில் அவரிடம் தனது கவனத்தைச் செலுத்தினாள்...

******************

"வடிவு... ஆத்தா வடிவு, வூட்ல இருக்கியா...?"

ராஜலிங்கத்தின் மனைவி விசாலம் வாசலில் இருந்து அழைத்தார்... வீட்டினுள் சமையல் செய்து கொண்டிருந்த வடிவழகி எழுந்து வெளியில் வந்தார்... அங்கு ராஜலிங்கமும், விசாலமும் நின்றிருப்பதைக் கண்டு,

"ஐயா, அம்மா வாங்க..." என்று மகிழ்ச்சியோடு வரவேற்றவர் மகனிடம்,

"சரவணா, பொட்டி கடையில போயி கலரு வாங்கிட்டு வாய்யா..." என்று கூற...

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் சரவணா..." கடைக்குக் கிளம்பிய சரவணனை தடுத்த ராஜலிங்கம் வடிவழகியிடம்,

"மதிக்கு நல்ல இடத்தில் இருந்து வரன் வந்திருக்கு..."

அதைக் கேட்டு வடிவழகியின் முகம் சுருங்கிவிட்டது...

"சத்யா எந்த முடிவும் சொல்ல மாட்டேங்கிறான்... மதிக்கும் வயசு கூடிட்டே போகுது..." விசாலம் கவலையாகக் கூற... தாயாய் அவரது கவலை வடிவழகிக்குப் புரியத்தான் செய்தது...

"எதுக்கும் சத்தி கிட்ட ஒரு வார்த்தை..."

"எத்தனை தடவை கேட்டாலும் அவன் மழுப்பலா தான் பதில் சொல்லுறான்... அவனுக்காக வருகிற வரனை எல்லாம் தட்டி கழிக்க முடியாதுல்ல..." விசாலம் பக்குவமாக எடுத்து கூற...

"எனக்கும் அது தான் யோசனையா இருக்கு வடிவு..." என்றார் ராஜலிங்கமும்...

"இன்னார்க்கு இன்னார்ன்னு கடவுள் முடிச்சு போட்டு வச்சிருப்பான்... நாம நெனச்சு என்ன பண்ண...? மதி தான் எங்க வூட்டு மருமகளா வரணும்ன்னு விதி இருந்தா இந்நேரம் அது நடந்திருக்குமே..." என்று வருத்தப்பட மட்டுமே வடிவழகியால் முடிந்தது...

வடிவழகி புரிதலுடன் ஏற்றுக் கொண்டதே ராஜலிங்கம், விசாலத்திற்குப் போதுமானதாக இருந்தது... அவரிடம் சந்தோசமாய் விடைப்பெற்று இருவரும் கிளம்பினர்...

"விசாலம், வடிவை பார்த்தா பாவமாயிருக்கு..." ராஜலிங்கம் புலம்பியபடி வந்தார்...

"பேசாம வாங்க... விட்டா நீங்களே மதியை சத்யாவுக்குக் கல்யாணம் பண்ணி வச்சிருவீங்க போலிருக்கு... இப்போ வந்திருக்கிற வரனை நாம கனவுல கூட நினைச்சு பார்க்க முடியாது... எவ்வளவு உசந்த இடத்துல இருக்கிறவங்க அவங்க... அவங்க நம்மளை மதிச்சு பொண்ணு கேட்டு வந்திருக்காங்கன்னா...? நாம அதை நினைச்சு சந்தோசப்படுறதை விட்டுட்டு நீங்க இப்படிப் பேசுறது கொஞ்சமும் சரியில்லை..."

"எதுக்கும் மதி கிட்ட ஒரு வார்த்தை..."

"அவளை நேரில் பார்த்து விசயத்தைச் சொல்லிக்கலாம்... அதுவரை நீங்க அமைதியா இருந்தா போதும்..." என்று கணவரை கண்டித்தார் விசாலம்... அதற்கு மேல் ராஜலிங்கம் ஒன்றும் பேசவில்லை...

"ஆத்தா, அண்ணாவுக்கு இப்பவே விசயத்தைச் சொல்ல போறேன்..." சரவணன் கோபத்துடன் துடித்தான்...

"சொல்லி... அவனை மேலும் மேலும் கஷ்டப்படுத்த போறியா... விடு சரவணா... சத்திக்கு தெரியாத வரைக்கும் நல்லது... அவனாவது நிம்மதியா இருந்துட்டு போகட்டும்..." என்று சின்ன மகனை அடக்கி விட்டார் வடிவழகி...

**********************

"பத்மா..."

"கால் மீ மேடம்..."

அலுவலகத்தில் சத்யமூர்த்தியிடம் கெத்து காட்டினாள் பத்மவர்ஷினி...

"ஓகேங்க மேடம்... எனக்கு அட்வான்ஸ் பணம் கொஞ்ச வேண்டும்... அதே சமயம் ஊருக்கு போக லீவும் வேணும்..."

"எதுக்கு...?" அவளது விழிகள் கூர்மை அடைந்தது...

"அதை எல்லாம் உன் கிட்ட விளக்கி சொல்லிட்டு இருக்க முடியாது..." அவனுக்குமே எரிச்சல் வந்தது...

"சரி சொல்லாட்டி போ... லீவு எல்லாம் கொடுக்க முடியாது..." என்று அவள் முறுக்கி கொள்ள...

"நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன், போதுமா...?" என்று அவன் கத்த...

"ஷ்... இது ஆபிஸ்... இங்க கத்தவெல்லாம் கூடாது... இப்போ நீ கல்யாணம் பண்ண முடியாது..."

"என்னது...? என் கல்யாணத்தை முடிவு பண்ண நீ யார்...?"

"நான் யாருமில்லை தான்..." என்று அவனது விழிகளை உற்று நோக்கியபடி கூறியவள்,

"இரண்டு நாள் பொறுத்துக்கோ... நானே உனக்கு லீவு கொடுத்து அனுப்பறேன்..." என்க...

அவளையே வெறித்துப் பார்த்தபடி அவன் நின்றிருக்க...

" வேறென்ன...?"

"ஒண்ணுமில்லை..." என்றபடி அவன் அறையை விட்டு வெளியில் செல்ல...

அவளோ செல்லும் அவனைப் புன்சிரிப்புடன் பார்த்திருந்தாள்...

மறுநாள் அதிகாலையில் நல்ல உறக்கத்தில் இருந்த சத்யமூர்த்தியின் அலைப்பேசி அலறியது... தூக்க கலக்கத்தில் அவன் அதை எடுத்துக் காதில் வைத்தான்...

"ஹ...லோ..." கொட்டாவியை வெளியேற்றியபடி அவன் கூற...

"ஏய் கருப்பட்டி, இன்னுமா தூங்கிட்டு இருக்க..."

பத்மவர்ஷினியின் குரல் அவனது காதில் தேனாக வந்து பாய்ந்தது... அவளது அழைப்பை அவனால் நம்ப முடியவில்லை... 'நேத்து சரக்கு எதுவும் அடிச்சிட்டு படுத்தோமோ...?' என்று அவன் தனக்குள் யோசிக்க ஆரம்பித்தான்... என்ன யோசித்தும் அப்படி ஒரு காட்சி கனவில் கூட வந்ததாய் அவனுக்கு நினைவில்லை...

"அம்மிணி, விடிய கருக்கல்ல எழுப்பி விட்டுட்டு இப்படிக் கேள்வி கேட்கிறது அநியாயம்...?" சற்று சிணுங்கலுடன் ஒலித்த அவனது குரலில் அவளது முகம் மலர்ந்தது...

"ஒரு முக்கியமான விசயத்துக்குத் தான் கூப்பிட்டேன்... வாசல் கதவை திறந்து பாரு... என் டிரைவர் இருப்பான்..."

"நான் தானே உன்னோட டிரைவர்... இவன் யாருடி புதுசா...?" அவன் கோபமாய்க் கேட்டான்... நாள் முழுவதும் அவளுடன் இருக்கும் பாக்கியம் இனி தனக்கு இல்லாது போய்விடுமோ என்று அவன் பயந்து போனானோ...?

"நீ தான்டா என்னோட லைஃப் லாங் டிரைவர்... இது வீட்டில் இருக்கும் டிரைவர்... இப்போ நான் சொல்வதைக் கேட்க போறியா இல்லையா...?" கொஞ்சலாய் ஆரம்பித்து அதட்டலாய் முடித்தாள்...

அதற்கு மேல் அவள் கூறியதை அவன் கேட்காமல் இருப்பானா...? எழுந்து சென்று வாயிற் கதவை திறந்தான்... அவனது வருகைக்காகக் காத்திருந்த காரோட்டி அவனிடம் ஒரு கவரை கொடுத்து,

"மேடம் இதை உங்க கிட்ட கொடுக்கச் சொன்னாங்க..." என்று பணிவுடன் கூறியவன்,

"நான் காரில் காத்திருக்கிறேன்... நீங்க வாங்க..." என்று கூறிவிட்டு அவன் சென்றுவிட்டான்...

அவனும் இவனும் ஒன்றாய் சாப்பிட்டு, தோளில் கைப்போட்டு பேசி கொள்வார்கள்... அந்தளவிற்குப் பழக்கம் கொண்டவர்கள்... இப்போது இத்தனை மரியாதையுடன் அவன் பேசுவது கண்டு முதலில் திகைத்தவன் பின் பத்மவர்ஷினி நினைவில் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

'இந்தம்மிணி என்னை மட்டுமல்ல எல்லாரையும் படுத்தி எடுக்குது போல...' தனக்குள் அலுப்பாய் நினைத்துக் கொண்டான்...

"சத்யா லைனில் இருக்கியா...?"

"இருக்கேன்... சொல்லு அம்மிணி..."

"குளிச்சு சுத்தபத்தமா அந்தக் கவரில் இருக்கும் டிரசை போட்டுட்டு கிளம்பி வா..."

"எதுக்கு...?" என்றபடி அவன் அந்தக் கவரில் இருந்ததை எடுத்துப் பார்த்தான்... அதனுள் அழகான தேன் நிறத்தில் பட்டுச்சட்டையும், பட்டு வேட்டியும் இருந்தது...

"இது எதுக்கு அம்மிணி...?"

"கல்யாணத்துக்குத் தான்..."

"விளையாடாத அம்மிணி..." அவனுள் பயம் கிளம்பியது...

இக்கட்டான கணத்தில் கூட அவனது வார்த்தைகளை எண்ணி அவளது முகம் பூவாக மலர்ந்தது... திருமணம் என்றதும் அவனுக்குத் தன்னுடைய ஞாபகம் வருவதை எண்ணி அவள் பூரித்துப் போனாள்...

"தேங்க்ஸ்டா கருப்பட்டி..."

"நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லு அம்மிணி..."

"முதல்ல கிளம்பி வா... அப்புறம் பதில் சொல்றேன்..."

'இந்தம்மிணி என்ன கூத்தடிச்சு வச்சிருக்கோ தெரியலையே... கருப்பசாமி என்னைய நீ தான் காப்பாத்தணும்...' என்று புலம்பியபடி அவன் வேகமாய்க் கிளம்பி சென்றான்...

நகரத்தில் இருந்த பெரிய மண்டபத்தின் முன் சென்று கார் நின்றது... அதன் ஆடம்பரத்தை பார்த்தபடி இறங்கிய சத்யமூர்த்தியின் முகம் வெளிறிப் போனது...

'இப்போ என்ன பைத்தியக்காரத்தனம் பண்ணி வச்சிருக்காளோ...' என்று புலம்பியபடி அவன் உள்ளே செல்ல...

அவளே அவனை எதிர்கொண்டு அழைக்க வந்துவிட்டாள்... அவனது சட்டை நிறத்திற்குப் பொருத்தமாக அவளும் தேன் நிறத்தில் பட்டுப்புடவை கட்டியிருந்தாள்... அதை அவனது விழிகள் விழுங்கி விடுவது போல் பார்த்து வைத்தது...

'சத்யா, நீ எதுக்கு வந்திருக்க...? என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?' அவனது மனசாட்சி நடுமண்டையில் நச்சென்று கொட்டு வைத்ததில் அவன் அமைதியாகி போனான்...

"அடடே, வா சத்யா..." என்று புன்னகையுடன் பலமாக வரவேற்றவள் அவனை மேலும் கீழுமாய்ப் பார்த்து,

"கல்யாண மாப்பிள்ளை மாதிரி சூப்பரா இருக்கடா..." என்று கண்சிமிட்டி சிரிக்க... அவனுள் அழையா விருந்தாளியாய் வெட்கம் வந்து ஒட்டி கொண்டது...

"ஆம்பிளை வெட்கப்படுறதும் அழகா தான் இருக்கு சத்யா..." என்றபடி அவள் அவனது வெட்கத்தை அலைப்பேசியில் படம் பிடித்துக் கொண்டாள்...

"ம்ப்ச், என்ன பண்ற அம்மிணி...?" அவன் தனது அதிருப்தியை காட்டினான்...

"சரி, சரி... முகூர்த்தத்துக்கு நேரமாச்சு... வா..." என்று அவனது கையைப் பிடித்திழுத்துக் கொண்டு அவள் செல்ல...

"வேண்டாம் அம்மிணி... கையை விடு... பார்க்கிறவங்க தப்பா நினைப்பாங்க..." என்று அவன் மறுக்க... அவளோ அவனைக் கண்டு கொள்ளாது அழைத்துச் செல்ல...

"பத்மா, கையை விடுன்னு சொல்றேன்ல..." கண்டிப்புடன் கூறியவன் உறுதியாய் அசையாது ஒரு இடத்தில் நின்றான்...

அவளால் அவனை அசைக்கக் கூட முடியவில்லை...

"என்னடா இப்படிப் படுத்துற...?" என்று அவள் சிணுங்கி கொண்டே சொல்ல...

"உன் விளையாட்டுத்தனத்துக்கு ஒரு அளவே கிடையாதா...?" அவன் எரிச்சலுடன் வினவினான்... அவனை முறைத்து பார்த்தவள்,

"இதுக்குத் தான் கொஞ்சமாவது ஸ்கூல் பக்கம் எட்டிப்பார்த்து இருக்கணும்ன்னு சொல்றது... வாசலில் இருந்த போர்டை நீ கவனிக்கலையா...?" என்று தலையில் அடித்துக் கொண்டவள்,

"கல்யாணம் நமக்கில்லை..." என்றதும் தான் அவன் நிம்மதியுற்றான்...

"அப்போ நமக்கில்லையா...?" என்று கேட்டவனின் வார்த்தைகளில் ஏக்கம் இழையோடியதோ... அவனை ஏறிட்டு பார்த்தவள்,

"இல்லை... நீ வா..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறியவள் அவனை மேடை நோக்கி அழைத்துச் செல்ல...

அங்கே சந்திரமதிக்கும், நரேந்திரனுக்கும் நிச்சயதார்த்தம் நடந்து கொண்டிருந்தது... சத்யமூர்த்தி அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை... திகைத்து போய் அப்படியே நின்றுவிட்டான்... அதைக் கண்டு அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது...

"என்ன சத்யா ரொம்பச் சந்தோசமாயிருக்கப் போலிருக்கு...?" அவள் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினாள்...

அவளது வார்த்தைகளில் நிகழ்காலம் உறைத்ததில் சத்யமூர்த்தியின் முகத்தில் சந்தோசம் நிறைந்து வழிந்தது...

"ரொம்பச் சந்தோசம் அம்மிணி... ரொம்ப ரொம்ப நன்றி..."

அவனது மகிழ்ச்சி கண்டு அவள் குழப்பம் கொண்டாள்... அவனைப் புரியாது பார்த்தவள்,

"உன் லவ்வருக்கு நிச்சயதார்த்தம்... உனக்குக் கோபம், அழுகை எதுவும் வரலையா...?" அவளது குழப்பமான வார்த்தைகளில் சிரித்தவன்,

"உலகத்துல மதி மட்டும் தான் பொண்ணில்லை அம்மிணி..." என்றான் அசராது...

உண்மையில் அவனது மனதில் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது... இத்தனை நாள் அவனிடம் இருந்த சிறு குற்றவுணர்வும் காணாமல் போய் அங்கு நிம்மதி வந்து குடிகொண்டு விட்டது...

அவளோ அவனது வார்த்தையில் ஆத்திரத்தில் மனம் குமுறியவளாய், "எத்தனை பேர் வந்தாலும் இது தான்டா கதி..." என்க...

அவளது கோபம் கண்டு அவன் திகைத்து விழித்தான்...

"ஹா ஹா... பயந்துட்டியா சத்யா... ஆனா இதுவும் நல்லா தான் இருக்கு... இதுவரை நான் எந்தப் புண்ணியக் காரியமும் பண்ணியது இல்லை... இப்போ பண்றதை நினைச்சு சந்தோசமா இருக்கு... உன் தயவில் என் அக்கவுண்ட்டில் புண்ணியம் சேர்கிறது... அதுக்கு நான் தான் உனக்குத் தேங்க்ஸ் சொல்லணும்..." என்று அசராது பதிலளித்தவளை கண்டு அவன் தான் அயர்ந்து போனான்...

'சத்யா, பூனைக்குட்டி கிட்ட வசமா மாட்டிக்கிட்ட போலிருக்கே...' அவனது உதடுகள் மயக்கத்துடன் முணுமுணுத்தது...

"மாட்டிகிச்சு மாட்டிகிச்சு
மாட்டிகிச்சு மாட்டிகிச்சு
சூப்பர்மேன போல நானும்
பறந்து வருவேன் டி
உன்ன தூக்கி போயி
தாலிகட்டி வாழ்க்க தருவேன்டி
ஸ்பைடர்மேன போல நானும்
வலைய வீசித்தான்
உன்ன என்னில் பின்னிக்கிட்டு
முத்தம் தருவேன்டி
பேட்மேன் நானடி
ஜோக்கரு நீயடி
என்னைக்குமே நீதான்
எனக்கு மொத எதிரி, இருந்தும்

ஹீமேன் நானடி
புலிக்குட்டி நீயடி
உன் முதுகில்
போவேன் நானும்
குதிர சவாரி
மாட்டிகிச்சு மாட்டிகிச்சு
மாட்டிகிச்சு மாட்டிகிச்சு"

புலிக்குட்டி என்பதற்குப் பதிலாக அவனது உதடுகள் 'பூனைக்குட்டி' என்று முணுமுணுத்துக் கொண்டது...

"இங்கே என்ன பார்வை...? ஒழுங்கா ஃபங்க்சனை கவனி..." என்று அவள் மிரட்டலாய் சொன்னதில் அவனது விழியில் இருந்த நேசம் மாறிப் போனது... முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு விழாவினை கவனிக்க ஆரம்பித்தான்...

நிச்சயம் முடிந்து அவன் சந்திரமதி மற்றும் அவளது பெற்றோருடன் சந்தோசமாக உரையாடி கொண்டிருந்தான்...

"இனியாவது நீ சந்தோசமா இருக்கணும் மாமா..." என்ற சந்திரமதியிடம்,

"நிச்சயமா மதி..." என்று கூறி சிரித்தவனின் சிரிப்பில் மகிழ்ச்சியே நிறைந்திருந்தது...

**********************

"சத்யா, கொஞ்சம் வெய்ட் பண்ணு... இப்போ கிளம்பி வந்திர்றேன்..."

"சரிங்கம்மிணி..." என்றவன் காரிலேயே காத்திருந்தான்...

அரைமணி நேரம் கழித்துக் கிளம்பி வந்த பத்மவர்ஷினியை கண்டு அவன் மதிமயங்கி தான் போனான்... அத்தனை அழகாய் இருந்தாள்... அவள் மேல் வைத்த விழியை எடுக்க முடியாது அவளைப் பார்த்தபடி அவன் காரின் பின்பக்க கதவை திறந்து விட்டான்... அவள்

சிரித்தபடி அதை மூடியவள் முன்பக்க கதவை திறந்து கொண்டு ஏறினாள்... அவன் ஆச்சிரியத்துடன் அவளைப் பார்த்தபடி மறுபக்கம் வந்தமர்ந்து காரை கிளப்பினான்...

"சத்யா, நான் அழகா இருக்கேனா...?" என்றவளை திரும்பி ஒரு பார்வை பார்த்தவன்,

"உனக்கு என்ன அம்மிணி... கோவிலில் இருக்கிற உற்சவ சிலை மாதிரி அழகாயிருக்க..."

"உண்மையாவா...?" என்று முகம் மலர கேட்டவளை ஏமாற்றாது,

" உண்மையா தான்..." என்க...

" தேங்க்யூ சத்யா..." என்று நன்றியுரைத்தவள்,

"சுஜீயோட சின்ன மாமனார் பையனுக்கு நிச்சயதார்த்தம்... அதுக்குத் தான் போறோம்..."

"ஓ..." என்றவன் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை...

நட்சத்திர விடுதியின் முன் சென்று கார் நின்றதும் அவள் இறங்கி போகும் முன், "சத்யா, நீயும் என் கூட வர்றியா...?" என்று ஆசையுடன் கேட்க...

"நான் எதுக்கு அம்மிணி...?" என்று அவன் மறுக்க...

"நீ என் சொந்தக்காரன் தானே..."

"பணம் இருந்தால் தான் சொந்தம் எல்லாம்... நீ போய்ச் சந்தோசமா கலந்துக்கிட்டு வா அம்மிணி... நான் காத்திருக்கிறேன்..." என்றவனை முறைத்துக் கொண்டு அவள் இறங்கி சென்றாள்...

அவளது முறைப்பை விரும்பி ரசித்தவனாய் அவன் சிரித்தபடி காரை எடுத்தான்... கார் தரிப்பிடத்தில் காரை நிறுத்தியவன் இருக்கையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு அதில் சாய்ந்து கொண்டான்... அவனது மனதில் மகிழ்ச்சியே நிறைந்திருந்தது...

நட்சத்திர விடுதியின் பெரிய ஹாலிற்கு வந்த பத்மவர்ஷினியை அவளது தந்தை ஜீவா உற்சாகமாய் வந்து அழைத்துச் சென்றான்... அவன் மகளை நேரே அங்கிருந்த மேடைக்கு அழைத்துச் செல்ல... பத்மவர்ஷினியின் விழிகள் யோசனையாய்ச் சுருங்கியது...

மேடையில் நடுநாயகமாக நின்றிருந்த வினயை கண்டு நாகரீகம் காரணமாகப் புன்னகைத்து வைத்தாள்...

"ஹாய் வர்ஷூ பேபி... ஹௌ ஆர் யூ...?" என்று விரிந்த புன்னகையுடன் இரு கைகளை விரித்தபடி அவன் அவளை அணைக்க வர...

"ஃபைன்..." என்றவள் ஒற்றை விரல் கொண்டு நாசுக்காக அவனை விலக்கி விட்டு தவிர்த்தாள்... அதில் அவனது முகம் சுண்டி போய்விட்டது...

அதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஜீவா தனது கம்பீரமான குரலில் அங்குக் கூடியிருந்தவர்களை நோக்கி பேச ஆரம்பித்தான்...

"இன்று எனது சின்ன மகள் பத்மவர்ஷினிக்கும், வினய்க்கும் நிச்சயதார்த்தம் நடக்கவிருக்கிறது... அதற்கு நீங்க எல்லாம் வருகை தந்தது குறித்து மிக்க மகிழ்ச்சி..." என்று அவன் கூற...

பத்மவர்ஷினி அதிர்ந்து போய்த் தந்தையைப் பார்த்தாள்... பின்பு தனது வீட்டினரை பார்த்தாள்... எல்லோருமே தன்னிடம் விசயத்தைக் கூறாது மறைத்து அழகாய் காய் நகர்த்தித் தன்னை இக்கட்டான நிலையில் நிறுத்திவிட்டார்கள் என்று அவளுக்குத் தெள்ளத்தெளிவாகப் புரிந்தது...

தான் மட்டும் தனிமை படுத்தப்பட்டது போல் ஒரு தோற்றம் அவளுள்... அந்தக் கணம் அவள் மிகவும் தளர்ந்து போனாள்... அவளது மனம் தன்னவனின் அருகாமைக்காக மிகவும் ஏங்க துவங்கியது... தன்னவனை நினைத்துக்

கொண்டு மனமும், விழிகளும் கலங்க அவள் தனியே நின்றிருந்தாள்...

ஜீவா மகளையே பார்த்துக் கொண்டிருந்தான்... 'உன்னை நானறிவேன்' என்பது போல்...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 11

அடுத்து என்ன செய்வது என்று தெரியாது மூளை மரத்துப் போனது போல் திக்பிரம்மை பிடித்தார் போன்று நின்றிருந்தாள் பத்மவர்ஷினி... அவளுடைய வாழ்க்கையில் இப்படியொரு திருப்பத்தை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை... சுற்றிலும் கூடியிருக்கும் சொந்த பந்தங்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவர் முன்னிலையிலும் எதுவும் செய்ய முடியாதபடி அவளது கைகள் கட்டப்பட்டு இருப்பதை அவளால் நன்கு உணர முடிந்தது...

சும்மாவே அந்தஸ்து, கௌரவம் பார்ப்பவள் அவள்... இப்போது அவள் எதையாவது செய்யப் போய் அனைவர் முன்னிலையில் அவளது தரம் இறங்கிவிட்டால்...? பல்லை கடித்துக் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் நின்றிருந்தாள்...

அப்போது வினய் அவள் அருகே வந்து அவளது கையைப் பற்றினான்... அவள் என்ன ஏதென்று யோசிக்கும் முன் அவளது வலக்கையைப் பிடித்து அதன் மோதிர விரலில் மோதிரம் மாட்டிவிட முனைந்த போது அவளுக்கு எங்கிருந்து தான் அவ்வளவு ஆத்திரம் வந்ததோ... அவள் தனது கையை வேகமாய் உதறி தள்ளியதில் வினயின் கையிலிருந்த மோதிரம் கீழே விழுந்து எங்கோ ஓடி சென்று ஒளிந்து கொண்டது...

வினய் மற்றும் அவனது குடும்பத்தினர் அனைவரும் இந்தக் காட்சியை அதிர்ச்சியுடன் பார்த்தனர்... பத்மவர்ஷினியின் குடும்பமும் அப்படி ஒரு அதிர்ந்த நிலையில் இருந்தனர்...

"வர்ஷூ, என்ன பண்றேன்னு தெரிஞ்சு தான் பண்றியா...?" ஜீவா மகளைக் கோபத்தில் முறைத்துப் பார்த்தான்...

மகளோ அதற்குப் பதில் சொல்லாது தந்தையை ஒரு பார்வை பார்த்தவள் யாரிடமும் ஒன்றும் பேசாது அங்கிருந்து செல்ல முற்பட்டாள்...

"வர்ஷூ நில்லு..." என்று அதட்டலாய் ஒலித்த தகப்பனது குரலும் சரி,

"வர்ஷூம்மா..." என்று கெஞ்சலுடன் ஒலித்த குடும்பத்தினரின் குரலும் சரி எதுவுமே அவளது காதுகளில் விழவில்லை...

அவளது மனம் ஆத்திரத்தில் குமுறியது... அது அவளது வேகநடையில் வெளிப்பட்டது...

'யாருக்கு யார் மாப்பிள்ளை...? என்னோட கணவன் யாரென்பதை நான் தான் முடிவு பண்ணணும்... என்னோட வாழ்க்கை யாரோடு என்பதையும் நான் தான் முடிவு பண்ணணும்... பெற்றெடுத்ததால் மட்டும் இவர்களுக்கு இந்த உரிமையை யார் கொடுத்தது...?'

இருபத்தைந்து வயது வரை தானே சுயமாய் முடிவெடுத்து வளர்ந்தவளுக்கு இந்த நிகழ்வு பெருத்த அவமானமாக இருந்தது... அதை விடக் காதல் கொண்ட மனம் தன்னவனிடம் சிக்கி தவித்தது...

"வர்ஷூ..." கண்டிப்புடன் அழைத்தபடி அவள் முன் வந்து நின்று வழிமறித்தான் ஜீவா...

என்ன? என்று கூடத் தகப்பனை நிமிர்ந்து பார்க்காது உதாசீனப்படுத்தியவளாய் அவள் வேறு எங்கோ பார்த்து வைத்து அவனை அலட்சியப்படுத்தினாள்... ஏற்கெனவே மகள் அளித்த அவமானத்தில் கோபத்தின் உச்சியில் இருந்தவன் இப்போது அவளது அலட்சியத்தில் பெரும் ஆத்திரம் அடைந்தான்...

"உள்ளே போ வர்ஷூ..." என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பிய தந்தையைக் கண்டு சிறிதும் பயப்படாது பார்த்தவள்,

"போக முடியாது... அதே போல் நீங்க சொல்லும் மாப்பிள்ளைக்குத் தலையாட்டவும் என்னால் முடியாது..."

"அப்போ வேறு யாருக்கு தலையாட்ட போகிற...? நம்ம வீட்டுக் கார் டிரைவர் சத்யமூர்த்திக்கா...?"

தந்தையின் வார்த்தையில் பத்மவர்ஷினி தனக்குள் திடுக்கிட்டு போனாள்... அங்கு விரைந்து வந்த அவளது குடும்பத்தினரும் அதைக் கேட்டு திகைத்து போயினர்... அகல்யாவிற்குப் பயத்தில் தலைச்சுற்றிக் கொண்டு மயக்கம் வருவது போலிருந்தது... அவளது நிலை அறிந்து யுகேன் அவளை ஆதரவாய் அணைத்து தன் மீது சாய்த்துக் கொண்டான்... அவள் நன்றியுடன் அவனைப் பார்த்தாள்...

'கவலைப்படாதே எல்லாம் சரியாகும்...' என்று அவன் ஆறுதலாய் மனைவியைப் பார்த்தான்...

"வர்ஷூ, அப்பா சொல்றது உண்மையா...?"

தாய் கேட்டதும் தன்னைச் சுதாரித்துக் கொண்டவள் எதற்கும் வாய் திறக்கவில்லை... கல் போல் அசையாது நின்றிருந்தாள்...

"எனக்கு எல்லாம் தெரியும் வர்ஷூ... அந்த மதி பொண்ணை நரேந்திரனுக்கு நீ பேசி முடித்த போதே நான் உன்னை இனம் கண்டு கொண்டேன்... அது போல் அவர்களது நிச்சயத்திற்கு நீயும், சத்யாவும் இணைந்து போனது அந்த விசயத்தை உறுதிப்படுத்தி விட்டது... என் மகள் இளவரசி... அவளை ஒரு இளவரசனுக்குத் தான் கல்யாணம் பண்ணி கொடுப்பேன்... பஞ்ச பரதேசிக்கு இல்லை..." என்று ஆணித்தரமாய்க் கூறிய ஜீவா,

"உள்ளே போ வர்ஷூ... நிச்சயத்தை முடிச்சிட்டு நீ எங்கே வேணும்ன்னாலும் போ..." என்று அழுத்தமான குரலில் அவன் கூறிக் கொண்டிருக்கும் போதே, அவள் தனது அலைப்பேசியை எடுத்து சத்யமூர்த்திக்கு அழைத்து,

"காரை எடுத்துட்டு வா..." என்றாள் சிறிதும் கம்பீரம் குறையாது...

"வர்ஷூ, நான் என்ன சொல்லிக்கிட்டு இருக்கேன்... நீ என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?" ஜீவா கத்த ஆரம்பிக்க...

"எனக்கு இந்த மாப்பிள்ளையைப் பிடிக்கலை... அதுவும் சினி ஃபீல்டு நான் வெறுக்கும் ஒன்று... அந்த ஃபீல்டில் உள்ள ஒருத்தன் எனக்குக் கணவனா...? நோ நெவர்... மாப்பிள்ளையா எந்தக் கொம்பன் வந்தாலும் சரி எனக்குப் பிடிச்சா தான் நான் அவனைக் கல்யாணம் பண்ணிக்க முடியும்... உங்க இஷ்டத்துக்கு எல்லாம் என்னை வளைக்கப் பார்க்காதீங்க..." என்று நிமிர்வுடன் கூறியவளை கண்டு எல்லோரும் குழம்பி போயினர்...

ஜீவா சொன்னது போல் இவள் மனதில் காதல் எதுவும் இல்லையோ என்று... ஜீவா கூடச் சற்று குழம்பி போனான்... மகள் தெளிவாகத் தான் இருக்கிறாள்... நாம் தான் குழம்பி போய்விட்டோமோ என்று...

"இப்ப முடிவா என்ன சொல்ல வர்ற வர்ஷூ...?" அவன் மகளைப் பார்த்து கேட்டான்...

"எனக்குப் பிடிச்ச மாதிரி மாப்பிள்ளையைக் கொண்டு வந்து காட்டுங்க... நான் ஓகே சொல்றேன்... அதை விட்டுட்டு என் வாழ்க்கையை நீங்க முடிவு பண்ணாதீங்க..."

"அப்போ நான் சொல்ற மாப்பிள்ளையைத் தான் நீ கட்டிக்குவ... அப்படித்தானே..." தந்தை மகளை வார்த்தையால் ஆழம் பார்த்தான்...

"நிச்சயமாய்..." தகப்பனது கண்களை நேருக்கு நேர் சந்தித்தபடி உறுதியாய் கூறினாள் மகள்...

'என்னோட சாய்ஸ் சத்யா கிடையாது... நீ ஏமாறப் போகிறாய் வர்ஷூ...' என்று ஜீவா மனதிற்குள் உறுதியாய் சொல்லி கொண்டான்...

'என்னோட சாய்ஸ் சத்யா தான்... ஏமாறப் போறது நீங்க தான் டாட்... யாரை எப்படி வளைக்கணும்ன்னு எனக்குத் தெரியும்...' தனக்குள் சிரித்தபடி அவள் கூறி கொண்டாள்...

எத்தனுக்கு எத்தனாக இருந்தாள் இரும்பு பெண்ணான பத்மவர்ஷினி...

"இப்போ நான் போகலாமா...?" என்று அவள் தகப்பனிடம் கேட்க...

"ம்..." என்று அவன் தலையசைத்தான்...

"டாட்..." என்று சுஜீதா கலவரமாய்த் தந்தையைப் பார்த்தாள்... அவளது புகுந்த வீட்டினரிடம் அவள் என்ன பதில் கூறுவாள்...

"சாரி சுஜீ..." என்ற ஜீவா உள்ளே சென்றுவிட்டான்... எல்லோரையும் சமாளிக்க வேண்டுமே... அவன் பின்னேயே குடும்பத்தினரும் சென்றனர்...

பத்மவர்ஷினி வெளியில் வரும் போது கார் கதவை பிடித்துக் கொண்டு அவளுக்காகக் காத்திருந்தான் சத்யமூர்த்தி... அவன் திறந்து வைத்திருந்த முன்பக்கமாய் ஏறாது அவனை முறைத்தபடி அவள் பின்பக்கமாய் ஏறினாள்...

'என்னாச்சு இந்தம்மிணிக்கு...?' அவன் குழம்பியவனாய் காரை கிளப்பினான்...

பத்மவர்ஷினி தந்தையிடம் என்ன தான் சாந்தமாகப் பேசிவிட்டு வந்த போதும் அவளால் நிம்மதியாய் இருக்க முடியவில்லை... அடுத்து என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை... என்ன செய்து தனது வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ளப் போகிறோம் என்றும் அவளுக்குத் தெரியவில்லை... அவ்வளவு டென்சனாக இருந்தது...

"மேடம், எங்கே போகணும்...?"

ஏற்கெனவே கோபத்தில் இருந்தவள் அவனது அழைப்பில் இன்னமும் கோபம் தலைக்கேறியது...

"செத்து போகணும்..." என்று ஆத்திரமாய் வெடித்தாள்...

"பத்மா..." அதிர்ந்து போனவனாய் அவன் காரை நடுசாலையில் நிறுத்திவிட்டான்...

பின்னால் வந்த வாகனங்களின் ஹார்ன் ஒலி, அருகில் சென்ற வாகன ஓட்டிகளின் திட்டுக்கள் எதுவும் காதில் விழாதபடி கண்ணாடி ஏற்றிவிடப்பட்டிருந்தது... அதை எல்லாம் கவனிக்கும் மனநிலையில் அவன் இல்லை... ஆனால் இதைக் கவனித்த பத்மவர்ஷினி கோபத்தில் பல்லை கடித்தபடி,

"முதல்ல காரை எடு மேன்..." என்று கத்த...

அவன் சுதாரித்துக் கொண்டு காரை கிளப்பினான்... ஆனாலும் அவனது மனம் ஒரு நிலையில் கட்டுக்குள் அடங்க மறுத்தது... அந்நேரம் அவள் வேறொரு பிரபல நட்சத்திர விடுதியின் பெயரை சொல்லி அங்கே போகச் சொன்னாள்...

"இந்த நேரத்தில் அங்கே எதுக்கு அம்மிணி...?"

அவளது மனநிலை அறிந்து அவன் அப்படிக் கேட்டான்...

"ம்... சரக்கடிக்கப் போறேன்.... கம்பெனி கொடுக்க நீ வர்றியா...?" என்று நக்கலாய் அவள் கேட்க...

அவன் திகைத்து போய் அவளைப் பார்த்தவன் அதன் பின் அவளிடம் வாய் திறக்கவில்லை...

அரைமணி நேரத்தில் நட்சத்திர விடுதியின் வாசலில் அவன் காரை நிறுத்தினான்... அவன் இறங்கி வந்து கார் கதவை திறக்கும் வரை காத்திருக்கப் பொறுமையில்லாது கீழிறங்கிய பத்மவர்ஷினி கோபத்துடன் கார் கதவை அறைந்து சாத்திவிட்டு அவனைக் கண்டு கொள்ளாது சென்றுவிட்டாள்... அவளது கோபம் ஏனென்று தெரியாது குழம்பியபடி அவன் காரை எடுத்து சென்று ஓரமாய் நிறுத்தினான்...

வெகுநேரம் கழித்தும் அவள் வராததால் அவனுக்கு மனதிற்குள் சிறு பயம் எழுந்தது...

'சொன்ன மாதிரி சரக்கடிக்கப் போயிட்டாளோ...' என்று நினைத்தவனுக்கு உள்ளுக்குள் பகீரென்றது...

அவளது அலைப்பேசிக்கு அழைத்துப் பார்த்தான்... நீண்ட நேரம் அழைத்தும் அவள் அழைப்பை எடுக்கவில்லை... பயம் மனதினை கவ்வியது... வேகமாய்க் காரை விட்டு இறங்கியவன் நட்சத்திர விடுதியை நோக்கி ஓடினான்... அங்கு எங்குப் 'பார்' இருக்கிறது என்று விசாரித்துத் தெரிந்து கொண்டவன் அதை நோக்கி தலை தெறிக்க ஓடினான்...

அங்குச் சென்று அவன் பார்த்த போது பத்மவர்ஷினி கையிலிருந்த மது கோப்பையை வாயில் சரித்துக் கொண்டிருந்தாள்... 'அடியேய், குடிகாரி' மனதிற்குள் அலறியபடி அவளை நோக்கி விரைந்து வந்தான் அவன்...

"அம்மிணி, ஏன் இப்படிப் பண்ற...? வீட்டுக்குப் போகலாம்... எழுந்திரு..."

அவளது கையிலிருந்த மது கோப்பையை வாங்கி மேசை மீது வைத்தவன் அவளது கையைப் பிடித்து எழுப்பினான்...

"முடியாது... போடா..." என்று குழறலாய் ஒலித்தது அவளது குரல்...

"சொன்ன பேச்சு கேட்கணும் பத்மா..."

'பத்மா' என்கிற அவனது அழைப்பில் அவனை நிமிர்ந்து பார்த்தவள், "அப்படிக் கூப்பிடாதேடா... எல்லோரையும் மாதிரி வர்ஷூன்னு கூப்பிடு..." என்றாள் அதிகாரமாய்...

"எனக்கு அந்தப் பெயர் பிடிக்கலை... இது தான் பிடிச்சிருக்கு... இப்படித்தான் கூப்பிடுவேன்..." என்றவனை முறைத்து பார்த்தவள்,

"எல்லாமே உன் விருப்பம் தான் இல்லையா...? அப்போ என் விருப்பம்ன்னு ஒண்ணும் கிடையாதா...?"

"ம்ப்ச், இங்கே பாரு அம்மிணி... முதல்ல நீ இங்கிருந்து கிளம்பு... அப்புறமா நீயும் நானும் பேசிக்கலாம்..."

"இல்லை, எனக்கு இப்பவே பேசணும்..."

"ஏய் குடிகாரி, சொன்ன பேச்சு கேளுடி..."

அவள் எதற்காகக் குடித்தாள் என்று அவன் அறிந்திருந்தால் அவளை விட அவன் பெரும் குடிகாரன் ஆகிருப்பான்... அது தெரியாது அவன் பேசி கொண்டிருந்தான்...

"அப்போ நீ என் கூடப் பேசணும்..." எழுந்து நின்றவள் இடையை வளைத்து, தலையை ஒருபக்கமாய்ச் சாய்த்து ஒயிலாக நின்றபடி அவன் முன் தனது கரத்தினை நீட்ட...

"பேசி தொலைக்கிறேன்..." என்றபடி அவளது கை மீது தன் கை வைத்துச் சத்தியம் செய்தவன்,

"இப்போ போகலாமா...?" என்று கேட்டபடி அவளை அழைத்தான்...

"இரு மேன்..." என்றவள் தனது கைப்பையைத் திறந்து பணத்தை எடுத்து மேசை மீது வைத்து விட்டு அங்கிருந்த பேரரை அழைத்து,

"பில் போக மீதி உனக்கு டிப்ஸ்..." என்று கூறியவள் சத்யமூர்த்தியுடன் இணைந்து நடந்தாள்...

அவளது தடுமாற்றம் கண்டு அவன் அவளது தோளை அணைத்தார் போன்று பிடித்துக் கொண்டு அழைத்துச் சென்றான்... அவளது அருகாமையில் அவனது மனம் தடுமாறத் தான் செய்தது... ஆனால் அவள் போதையில் இருப்பதை உணர்ந்து பொறுப்புடன் அவன் அவளை நடத்தி சென்றான்...

கார் அருகில் வந்ததும் அவன் பின்பக்க கதவை திறக்க... அதைக் கோபமாய் மூடியவள்,

"நான் முன்னாடி தான் உட்காருவேன்... அதுவும் உன் பக்கத்தில்..." என்று அவள் சிலிர்த்துக் கொண்டு முன்னால் ஏறியமர்ந்தாள்...

அவளது அட்டகாசம் கண்டு அவன் சிரித்தபடி காரை கிளப்பினான்... அவனது தோளில் சுகமாய்ச் சாய்ந்தபடி,

"உன் கூடப் பேசணும் சத்யா..." என்று அவள் அவனது சட்டையைப் பிடித்துத் திருக...

"எதுவா இருந்தாலும் காலையில் பேசலாம் பத்மா..."

"இல்ல இப்பவே..." என்று அவள் அடம்பிடிக்க... அவன் சாலையோரமாய்க் காரை நிறுத்தினான்...

"சொல்லு, என்ன பேசணும்...?" என்றபடி அவள் முகம் பார்க்க...

"நான் யாருடா...?"

'நீ யார்...?' என்பது போல் அவன் அவளை அர்த்தம் பொதிந்த ஒரு பார்வை பார்த்து வைத்தவன் பின்பு வேண்டுமென்றே,

"குடிகாரி..." என்றான் கேலியாய்...

அதைக் கேட்டு அவள் அவனது கையில் நறுக்கென்று கடித்து வைத்தாள்...

"அடியேய் ராட்சசி... வலி உசிரு போகுதடி..." என்று அவன் அலறியபடி அவளை விலக்கினான்...

"நான் தி கிரேட் பத்மவர்ஷினிடா... என் கூடப் பேசுறது என்ன அவ்வளவு சாதாரணம்ன்னு நினைச்சியா...? மாசக்கணக்கில் அப்பாயிண்ட்மென்ட் வாங்கிட்டு க்யூவில் காத்திருக்கணும்... உனக்கு நான் லேசா கிடைச்சதால உனக்கு என்னோட மதிப்பு தெரியலை... அதான் இப்படி நடுரோட்டில் காரை நிறுத்தி வச்சிட்டு பேசுன்னு சொல்ற..."

அவளது வார்த்தையில் அவனது தலை தானாகக் குனிந்தது... குற்றம் செய்த மனமல்லவா...!

"ப்ச்சு... இப்போ எதுக்கு மூஞ்சை தொங்க போட்டுக்கிட்டு இருக்க... நிமிர்ந்திரு..." என்று கூறியவள் ஒற்றை விரல் கொண்டு அவனது முகத்தை நிமிர்த்தினாள்... அவன் நிமிர்ந்ததும்,

"நம்ம வீட்டுக்கு போகலாம்..." என்க...

"சரி..." என்றபடி அவன் காரை கிளப்பினான்...

"எங்கேன்னு உனக்குத் தெரியுமா...?"

"உங்க வீட்டுக்கு தானே அம்மிணி... தெரியும்..." அவன் புரியாது அவளைப் பார்த்தான்...

"ம்ஹூம், நாம வாழ்றதுக்காக நான் வாங்கின வீடு... நம்ம வீடு..."

அவள் கூறியதை கேட்டு அதிர்ந்து போனவனின் கைகள் நடுங்கியது...

"பத்மா என்ன சொல்ற...?"

"சும்மா சும்மா ஜெர்க் ஆகாதே சத்யா... நாம என்ன வாழாம இப்படியேவா இருக்கப் போறோம்... என்னைக்காவது ஒரு நாள் சேர்ந்து வாழ தானே போறோம்... அட்ரஸ் சொல்றேன், நோட் பண்ணிக்கோ..." என்றவள் முகவரியை கூற... அவன் காரை செலுத்தத் துவங்கினான்...

அவனது மனதிற்குள் பெரும் போராட்டம் ஏற்படத் துவங்கியது... அவள் கூறிய முகவரிக்கு அவளை அழைத்து வந்தான்... அது ஒரு அடுக்குமாடி குடியிருப்பு... அவளது காரை கண்டதும் அங்கிருந்த காவலாளி வீட்டு சாவியைக் கொண்டு வந்து கொடுத்தான்...

"வா சத்யா..." என்றவள் அவனது கையைப் பிடித்திழுக்கும் போதே சரிய துவங்கினாள்...

"ஏய், பார்த்து..." என்று பதறி போய் அவளைத் தனது கைகளில் தாங்கி பிடித்தவன் அப்படியே அணைத்தபடி அவளை அழைத்துச் சென்றான்...

அங்கிருந்த மின்தூக்கியினுள் சென்றதும் அவன் அவளைக் கேள்வியாய் பார்த்தான்...

"ஆறாவது பட்டனை பிரெஸ் பண்ணு..." என்று கூறியபடி அவள் அவனை உரசி கொண்டு நின்றாள்...

'இந்தம்மிணி உரசி உரசியே உசிப்பேத்துதே... இன்னைக்குச் செத்தேடா சத்யா...' என்று மனதிற்குள் புலம்பியபடி அவன் நின்றிருந்தான்...

ஆறாவது தளம் வந்ததும் கதவு திறந்தது... அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தவன்,

"எந்த வீடு...?" என்று கேட்க...

அங்கிருந்த இரு வீடுகளில் வலப்புறம் இருந்த வீட்டினை அவள் சுட்டிக்காட்டினாள்... வீட்டின் கதவை அவன் திறந்ததும் உள்ளே நுழைந்தவள் தடுமாறியபடி மின்விளக்குகளைப் போட்டு விட்டாள்... அவன் கதவை மூடி கொண்டு வருவதற்குள் அவள் சோபாவில் சென்று பொத்தென்று விழுந்தாள்... அவள் விழுந்த வேகத்தில் அவளது புடவையில் குத்தியிருந்த ஊக்குத் தெறித்துக் கழன்று கீழே விழுந்தது...

அவள் முன் வந்து நின்றவன், "என்ன பேசணும் பத்மா...?" என்று கேட்டான் அமைதியாக...

"நிறையப் பேசணும்... நீ முதல்ல உட்காரு..." என்று கையசைத்து அவனை அருகில் அழைத்தாள்...

ஒற்றைச் சோபாவில் அமர்ந்திருந்தவளின் அருகில் அவன் எப்படி அமர முடியும்...? அதனால் அவன் அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தான்...

"என்னடி சொல்லு...?"

அவனது வார்த்தைகள் குழைந்து வந்தது... அவள் தனது சொந்தம் என்கிற உரிமை உணர்விலா...?

அவள் அவனை நோக்கி குனிந்து அவனது கன்னத்தில் இரு கரங்களையும் பதித்து,

"சத்யா, மை லவ்..." என்றாள் காதலோடு...

முதன்முறையாய் அவள் தனது மனதில் இருக்கும் காதலை வெளிப்படுத்தியதை கண்டு அவன் இனிய அதிர்வோடு மனதில் எழுந்த சந்தோசத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அந்நேரம் அவள் குனிந்ததில் அவளது புடவை மாராப்பு சற்று நழுவி விலகியது... அதைக் கண்டு அவன் தடுமாறிய போதும் மெல்ல அதை எடுத்து அவள் மீது சரியாகப் போட்டுவிட்டான்...

"எதுக்குடா சரி பண்ற...?" கோபமாய்க் கூறியபடி அவள் புடவையை இழுத்ததில் லேசாக விலகியிருந்த புடவை இப்போது முற்றிலும் விலகி அவளது மடியில் அநாதரவாய் விழுந்தது...

"பத்மா..." அதட்டுவதற்காக வாய் திறந்தவனின் வார்த்தைகள் கடுமைக்குப் பதிலாக மென்மையைச் சுமந்து கொண்டு வெளிவந்தது...

"உன் கண்ணுக்கு மட்டும் நான் ஏன் எப்போதுமே ஒரு பொண்ணாய்த் தெரியறது இல்லை...? உண்மையைச் சொல்லு சத்யா... என்னைப் பார்த்தா உனக்கு அந்த மாதிரி ஃபீலிங்ஸ் எதுவும் வர மாட்டேங்குதா...?"

"ஏன்டி இம்சை பண்ற...?"

அவளது இளமை அழகின் முழுப்பரிமாணம் கண்டு அவனே அவஸ்தையுடன் பார்த்திருக்க... அவள் வேறு வார்த்தையால் அவனுள் அனலை மூட்டி விட்டு கொண்டிருந்தாள்...

"சொல்லுடா... என்னைப் பார்த்தா ஒரு பொண்ணு மாதிரி இருக்கா...? இல்லையா...?"

"நீ மாராப்பை சரி பண்ணு... நான் பதில் சொல்றேன்..."

"இல்லை... முதலில் நீ பதில் சொல்லு..."

"பொண்ணுன்னு தெரியாம தான் நீ சொன்னதுக்கு எல்லாம் தலையாட்டிட்டு உன் பின்னாடி சுத்தி சுத்தி வர்றேனாக்கும்..." என்றவன் அவளது புடவையை எடுத்து

ஒழுங்காகப் போட்டு விட்டான்... இந்த முறை அவள் எந்தக் கோணங்கித்தனமும் செய்யாது அவனை இமைக்காது பார்த்தாள்...

"உண்மையாவா சத்யா...?" அவளது விழிகள் கலங்கி போனது...

"உண்மையா தான்டி சொல்றேன்..."

"அப்போ உனக்கு என்னைப் பிடிக்குமா சத்யா...?" விழிகளில் அலைப்புறுதலுடன் கேட்டவளின் முகத்தினை இரு கரங்கள் கொண்டு தாங்கியவன்,

"ரொம்ப ரொம்பப் பிடிக்கும்..." என்றான் அவளது விழிகளுக்குள் ஊடுருவியபடி...

"என்னைப் பார்த்ததில் இருந்தா...?"

அவள் அப்படிக் கேட்டதும் அவன் சற்றுத் தடுமாறிப் போனான்... அதற்கு அவனது பதில் 'இல்லை' என்பது தான் காரணம்... பதில் சொல்ல முடியாது உதடுகள் துடிக்க அவளைப் பார்த்தவனின் விழிகளில் குற்றவுணர்வு தோன்றியது...

"உன்னால் பதில் சொல்ல முடியலை பார்த்தியா...? ஆனா நான் அப்படி இல்லை சத்யா... உன்னைப் பார்த்த நொடியில் இருந்து நீ யார்? என்ன படிச்சியிருக்க? என்ன பண்ற? வசதியானவனா? இப்படி எதுவுமே தெரியாம லவ் பண்ண ஆரம்பிச்சேன்..."

பத்மவர்ஷினி கூறியதை கேட்டு அவன் விழிகள் தெறித்து விடுவது போல் அவளை வியப்பாய் பார்த்து வைத்தான்...

"என்ன ஆச்சிரியமா இருக்கா...? ஆனா அது தான் உண்மை... அதான் நீ என்ன செஞ்சாலும் உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்தாம விட்டுட்டேன்... உன் இடத்தில் வேறொருத்தன் இருந்திருந்து இந்தக் காரியத்தைப் பண்ணியிருந்தான்னா அன்னைக்கே அவனோட சங்கை அறுத்திருப்பேன்... ஆனா உன் கிட்ட என்னால் கோபத்தைக்

கூடக் காட்ட முடியலை... ஏன்னா நீ அந்தளவுக்கு இங்கே ஆழமா புதைஞ்சிருக்க..." என்று அவள் தனது இதயப் பகுதியை சுட்டிக்காட்டினாள்...

"நீ மல்யுத்தம் பண்ணினப்போ, சிலம்பம் சுத்தினப்போ 'வாவ், வாட் அ ஹீரோ'ன்னு உன்னைப் பார்த்துப் பிரமிச்சேன்... அப்போ யுகேன் கூடச் சொன்னான், உன்னை ஹீரோவா போட்டு ஒரு படம் பண்ணலாம்ன்னு... ஆனா நான் தான் வேண்டாம்ன்னுட்டேன்..." என்றவளை அவன் பிரமிப்புடன் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்...

"ஏன்னா நீ என்னுடைய ரியல் ஹீரோ... எனக்கு மட்டுமேயான மை ஹீரோ... நீ ரீல் ஹீரோ ஆகிறது எனக்குச் சுத்தமா பிடிக்கலை... அதனால் தான் நான் அப்படிச் சொன்னேன்... ஆனா நீ என்னை விட்டுட்டு அவள் பின்னாடி சுத்திட்டு இருந்த... சரி போனால் போகுதுன்னு விட்டுப் பிடிச்சேன்.... ஆனா விதி வலியது மக்கு பையா... நீயே என்கிட்ட வந்து வலிய சிக்கிக்கிட்ட..."

அவள் கூறியதை கேட்டுச் சத்யமூர்த்திப் பலமிழந்தவனாய் அப்படியே தரையில் அமர்ந்து விட்டான்... அவளது காதலும் அவனைப் போன்றே கடமையில் வந்தது என்று அவன் எண்ணி கொண்டிருக்க, அவளோ இல்லை இல்லை இது மனதினை நேசிக்கும் உயிர்க்காதல் என்று கூறிவிட்டாளே... பார்த்த கணம் ஒருத்தியால் ஒருவனை இந்தளவிற்கு நேசிக்க முடியுமோ...? அதுவும் அவனைப் போன்ற சாமானியன் ஒருவனைத் தேவதை பெண் ஒருத்தி உயிருக்கு உயிராய் நேசிக்க முடியுமா...? கற்பனை கதை போலிருந்தது அவளது காதல்...

"என்ன சத்யா, இன்னும் நீ என்னை நம்பலையா...?" அவள் சோபாவில் இருந்து இறங்கி வந்து அவன் முன் தரையில் சட்டமாகச் சம்மணமிட்டு அமர்ந்தாள்...

"உன்னை நம்பாமலாடி..." என்றவனது வார்த்தைகள் தழுதழுத்தது...

"நீ என்னைக் காதலிக்கிறியா சத்யா...?"

"ஆமாம்டி..." என்று அவன் கண்ணீர் மல்க தலையசைத்தான்...

"அப்போ நிரூபி..." என்று அவள் அவனை விழிகள் சொருக பார்த்தாள்...

"எப்படி...?"

"இப்படி...?" என்று கூறிவிட்டு அவள் அவனை இறுக அணைத்தாள்...

அவளது அணைப்பில் அவன் தடுமாறி மல்லாக்க தரையில் சாய்ந்தான்... பூப்பந்து போல் தன் மீது படுத்திருந்தவளை அள்ளி எடுப்பதில் அவனுக்கு எந்தவித தயக்கமும் ஏற்படவில்லை... மனமும் மனமும் ஒன்று சேர்ந்த பின்பு மற்ற ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் பின்னுக்குப் போய்விட்டது...

"பூனைக்குட்டி உசிரோட கொல்லுறடி..." என்று அவஸ்தையோடு அவளது காதுக்கு அருகில் கிசுகிசுப்பாய் முணுமுணுத்தவன் அடுத்த நொடி அவளைக் கீழே சரித்துத் தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்திருந்தான்...

உடல் எலும்புகள் அனைத்தும் நொறுங்கி விடுவது போல் அவனது அணைப்பு அவஸ்தையான சுகமாய் வலித்த போதும் அவள் அவனை விட்டு விலகவில்லை... விலகத் தோன்றவில்லை... அவளது காயமடைந்த மனதிற்கு அந்த அணைப்புத் தேவையாக இருந்தது போலும்... அதனால் அவள் அந்த வலியை தாங்கி கொண்டாள்... போதையை மீறிய இன்பமான வலி இது...

"பூனைக்குட்டி, உனக்கு என்னைய அவ்வளவு பிடிக்குமாடி...?" என்று கேட்டுக் கொண்டே அவன் அவள் முகம் முழுவதும் விடாது முத்தமிட்டுக் கொண்டிருந்தான்...

அதற்கு அவள் பதில் சொல்ல வரும் போது அவன் தனது இதழ்களால் அவளது இதழ்களை வேகமாய் முற்றுகையிட்டு இருந்தான்... அன்று போல் வன்மம் இல்லாது, அவசரம் இல்லாது இன்று மெதுவே அவளது

இதழ் தேனை அவன் உறிஞ்சி எடுத்தான்... இதழ்கள் மூலம் ஒருவரது உயிரை உறிஞ்சி எடுக்க முடியுமா...?

சத்யமூர்த்திப் பத்மவர்ஷியின் உயிரை அவளது இதழ்கள் மூலம் அசுரத்தனமாய் உறிஞ்சி கொண்டிருந்தான்... அவள் மூச்சுக்காற்றுக்குத் திணறிய போதும் அவன் அவளை விலக அனுமதிக்கவில்லை... அவனது வன்மையான காதலில் அவளது மென்மையான காதல் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பலமிழந்து கொண்டிருந்தது...

காதல் கடந்து காமம் கரையுடைக்க முயற்சி செய்த போது அவன் அவளை விட்டு விலகினான்... ஆனாலும் முழுவதுமாய் அவளை விட்டு விலகவில்லை... ஆழ்ந்த முத்தத்தின் விளைவால் மூச்சிரைத்தபடி அவளது முகத்தோடு தனது முகத்தினைப் பதித்து,

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு பூனைக்குட்டி... வாழ்க்கையில் எதையோ பெருசா சாதிச்ச மாதிரியிருக்கு..." என்று கூறியவனின் முகத்தில், வார்த்தையில் சந்தோசத்தைத் தவிர வேறில்லை...

"என்னைய பிடிக்குமா பத்மா...?"

அவனுக்காகத் தன்னையே அர்ப்பணிக்கத் தயாராக அவனது ஆளுகையின் கீழ் அடிபணிந்து இருக்கும் பெண்ணவளிடத்தில் அவன் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டான்...

"அவ்வளவு பிடிக்கும்டா... உனக்காக என்னோட நிச்சயத்தையே முறிச்சிட்டு வந்திருக்கேன்... அத்தனை பேர் கூடியிருந்த சபையில் இந்த நிச்சயம் நடக்காதுன்னு சொல்லிட்டு வெளியில் வந்துட்டேன்..." என்றவளை கண்டு அவனது விழிகள் கூர்மையடைந்தது...

"ஏன்...? என்னாச்சு...?"

இன்று நடந்ததை அவள் அப்படியே கூற... அவன் மெல்ல அவளை விட்டு விலகினான்...

"சத்யா..." என்று கிறக்கத்துடன் அழைத்தபடி அவள் அவனது கரத்தை பிடித்திழுக்க...

"கையை விடு அம்மிணி..." என்று கோபமாய்க் கூறியவனின் முகமும், குரலும் இறுகி போயிருந்தது...

"சத்யா..." அவனது கோபத்தில் அவளது போதை சற்று தெளிய ஆரம்பித்தது...

"வீட்டுக்கு போகலாம்..." என்றபடி அவன் எழுந்து நின்றான்... அவளோ எழாது அவனைப் பார்த்தபடி படுத்திருந்தாள்...

"இன்னும் என்ன...?" என்று சிடுசிடுத்தவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

அங்குத் தரையில் கலைந்த ஓவியமாகக் கிடந்தவளை கண்டு அவனுள் குற்றவுணர்வு எழுந்தது...

"என்னை மேலும் மேலும் வதைக்காதே அம்மிணி..."

"நீ தான்டா என்னை உயிரோட கொல்லுற..." என்று கூறியபடி எழுந்தவள் கலைந்த தனது புடவையைச் சரி செய்து கொண்டாள்...

போதையில் லேசாகத் தடுமாறியவளை அவன் ஆதரவாய் கைப்பற்றி நிற்க வைக்கவில்லை... மாறாக அவன் இரு கரங்களையும் கட்டி கொண்டு கிரேக்க சிற்பம் போல் அசையாது நின்றிருந்தான்... அவள் தான் அவனது தோளை பற்றினாள்... அவன் கோபத்துடன் அவளது கையைத் தட்டி விட்டான்...

"சத்யா..." அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்...

"பேசாதடி..." அவன் ஆக்ரோசமாய்க் கத்தினான்...

"ஏன் சத்யா...?" அழுகையே தெரியாதவளுக்கு அழுகை வரும் போலிருந்தது... பற்களால் உதடுகளைக் கடித்துத் தனது உணர்வுகளை அடக்கி கொண்டாள்...

"ஏன்னா நீ பண்ணியிருக்கும் காரியம் அப்படி...?" கோபமாய் உரைத்தவனைக் கண்டு அவள் அதிர்ந்து போய் விழித்தாள்...

"நிச்சயத்தை நிறுத்த தெரிஞ்ச உனக்கு என்னை ஏன் எல்லார் முன்னாடியும் அடையாளம் காட்ட முடியலை...?"

இதை அவள் யோசித்துக் கூடப் பார்க்கவில்லையே...

"இவ்வளவு நடந்ததுக்குப் பிறகும் உன் அந்தஸ்து என்னை அடையாளம் காட்டுறதுக்குத் தடையா இருக்கு அப்படித் தானே...? ஆமாடி, நான் ஏழை தான்... அடுத்த வேளை கஞ்சிக்கு வக்கு இல்லாதவன்... படிக்காத கைநாட்டு தான்... இப்படிப்பட்ட என்னை அடையாளம் காட்ட உனக்கு அவமானமா தான் இருக்கும்... நீ காதல்ன்னு சொன்னதும் நானும் மதிமயங்கி போனேன் பாரு... என் முட்டாள்த்தனத்தைச் செருப்பால் அடிச்சுக்கணும்..."

"இல்லை சத்யா..." அவள் விளக்கம் கொடுக்க முன் வரும் முன்,

"ச்சீ நிறுத்துடி... நீ பண்ணியதுக்குப் பேரு காதல் இல்லை... வேற..."

"சத்யா வார்த்தையை அளந்து பேசு..." என்ன வார்த்தை கூறிவிட்டான் என்று அவளது மனம் குமுறியது...

"உண்மைய சொன்னா கசக்குதோ... ஆனா அது தான் நெசம்... உடம்பு சுகத்துக்கு அலையறதுக்குப் பேரு எல்லாம் காதல் இல்லை... அதுவும் உன்னை மாதிரியான பணக்கார பொண்ணுங்களுக்கு இது எல்லாம் ரொம்பச் சகஜமான விசயமாச்சே..."

அன்று அவனைப் பார்த்து அவள் இளக்காரமாய்க் கூறிய வார்த்தைகள் தான் இது... ஆனால் இன்று அது அவளை உயிருடன் கொல்கிறதே... அவன் அவளுக்கு உயிருக்கு உயிரானவன் தான்... அதுக்காகத் தனது தன்மானத்தை விட்டு கொடுக்க அவள் தயாராக இல்லை...

காதல் முழுவதுமாய் மனதினை ஆக்கிரமிக்கும் போது மனம் தன்மானத்தை விட்டு விட்டு அவனிடம் முழுதாய் சரணடையும் என்பது அந்தப் பேதை பெண்ணுக்கு தெரியவில்லை போலும்...

"போதும் சத்யா போதும்... கெட்அவுட்..." என்று சீறலுடன் உறுமியபடி கதவை நோக்கி கை காண்பித்தவளை கண்டு நக்கலாய் பார்த்தவன்,

"இதுக்கு மேல் இங்கிருக்க நான் என்ன பைத்தியக்காரனா...?" என்றவன்,

"இத்தோடு நமக்கு இடையில் எல்லாம் முடிஞ்சது... இனி என்னைய தொந்திரவு பண்ணாதே..." என்று முடிவாய் கூறிவிட்டு அவன் வாயில் கதவை திறந்து கொண்டு வெளியேறி விட்டான்...

அவன் வீட்டை விட்டுச் சென்றதும் அவனது பிரிவு மனதினை பாதிக்க அவளது போதை முற்றிலும் தெளிந்தது...

"போடா போ... எனக்கென்ன வந்தது...? நீயில்லைன்னா நான் என்ன செத்தா போயிருவேன்...?" என்று கத்தியவளுக்கு அப்படி உயிரை விட்டால் தான் என்ன? என்று விரக்தியான எண்ணம் அந்தக் கணம் தோன்றத்தான் செய்தது...

தொழிலில் எதையும் தைரியத்துடன் அணுகி வெற்றி பெறும் பத்மவர்ஷினி காதலில் பெருந்தோல்வி அடைந்து கோழையாய் உயிரை விட எண்ணினாள்...

காதல் வந்தால் சுயமிழந்து போகக் கூடுமோ...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 12

மனதில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் அதிகரிக்கவும் பத்மவர்ஷினி அரண்டு போனவளாய் அங்கிருந்து கிளம்பிவிட்டாள்... அங்கிருந்த தனிமை அவளுக்கு மிகவும் பயத்தைக் கொடுத்தது... கழிவிரக்கத்தில் கரையும் நெஞ்சம் காதலுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தது... மின்தூக்கியின் மூலம் கீழ் தளத்திற்கு வந்தவள் தனது காரை நோக்கி சென்றாள்... அப்போது எங்கிருந்தோ ஓடி வந்த காவலாளி,

"அந்தத் தம்பி உங்க கிட்ட கொடுக்கச் சொல்லுச்சும்மா..." என்றபடி கார் சாவியை நீட்டினார்...

சாவியை வாங்கிக் கொண்டு காரிலேறி அமர்ந்து காரை கிளப்பியவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது... சத்யமூர்த்தித் தன்னை விட்டு மொத்தமாய்ச் சென்றுவிட்டான் என்பதை அவளால் இன்னமும் நம்ப முடியவில்லை... எப்போதுமே அவன் அவளை விட்டு ஓடுவதில் தான் குறியாக இருக்கின்றான்... இவள் தான் அவனைத் தன்னுடன் தக்க வைக்கப் போராடி கொண்டிருக்கிறாள்...

அவள் மட்டும் அவனை இங்கு வரவழைக்காவிட்டால் அவன் அவளைக் காதலித்து இருப்பானா...? இல்லை அவளை நினைத்து தான் பார்த்திருப்பானா...? அவர்களது விசயத்தில் முதல் படி எடுத்து வைப்பது எல்லாம் அவள் தான்... அவனில்லை... அவளது அந்தஸ்து கண்டு அவன் எதுவும் செய்யாது அப்படியே பின்தங்கி விட்டான்...

"பின்னே எதுக்குடா அன்னைக்கு அப்படிப் பண்ணின...?" ஆங்கிலத்தில் உள்ள அனைத்து கெட்ட வார்த்தைகளைக் கொண்டு அவனை அர்ச்சித்தாள்...

அவள் வீடு வந்து சேர்ந்த போது அவளது வீட்டினர் எல்லோரும் அவளுக்காக வரவேற்பறையில் காத்திருந்தனர்... அவளால் யாரையும் நிமிர்ந்து பார்க்க

முடியவில்லை... அமைதியாக அவர்களைக் கடந்து செல்ல முயன்றாள்...

"வர்ஷூ, நில்லு..." தாயின் வார்த்தையில் அப்படியே தேங்கி நின்றாள்... ஆனால் திரும்பி பார்க்கவில்லை...

"இது என்னடி கோலம்...?" என்று கேட்டபடி சுபிக்ஷா மகள் அருகில் வர... மகளோ பயந்து போய்ச் சற்று பின்னடைந்தாள்... அவள் குடித்ததை அன்னை கண்டுபிடித்து விட்டால்...?

"ஏன்...? என்னாச்சு...?" புரியாது மகள் கேட்க...

உடுத்தியிருந்த புடவை கசங்கி, தலையில் வைத்திருந்த பூக்கள் உதிர்ந்து அவளைப் பார்ப்பதற்கு முதலிரவு முடிந்து வந்த புதுபெண் போலிருந்தாள்... யாராக இருந்தாலும் அவளை இந்தக் கோலத்தில் பார்த்தால் தவறாகத் தான் நினைப்பார்கள்... அதே போல் தான் சுபிக்ஷாவிற்கு மகளது கோலம் கண்டு உள்ளுக்குள் பகீரென்றது...

"கண்ணாடியில் உன் உருவத்தைப் பாரு... அப்புறம் பதில் சொல்லு..."

அன்னை கூறியதும் பத்மவர்ஷினி அங்கு அழகுக்காகப் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடியின் முன் சென்று தன்னைப் பார்த்தாள்... கலைந்தும் கலையாத தனது தோற்றம் கண்டு அவளது இதழ்களில் மந்தகாச புன்னகை தோன்றியது... தன்னவன் தன்னைக் கலைக்காமல் கலைத்த நினைவு தோன்றி அவளது முகத்தில் வெட்க சிவப்பினை தோற்றுவித்தது...

"பதில் சொல்லு வர்ஷூ..."

"ஒரு சின்ன ஆக்சிடெண்ட் மாம்..." என்றவள் மனதிற்கு மட்டுமே தெரியும்... அது ஒரு இனிய விபத்து என்று...

"உனக்கு ஒண்ணும் ஆகலையே..." என்று பதட்டத்துடன் கேட்டபடி எல்லோரும் அவள் அருகில் வர முயல...

'வேண்டாம்' என்பது போல் ஒரு கையை மட்டும் உயர்த்தி எல்லோரையும் தடுத்து நிறுத்தியவள்,

"என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்..." என்று கம்பீரமாக உரைத்தவள் தனது அறையை நோக்கி சென்றாள்...

அவளது வார்த்தைகளில் எல்லோரும் ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டனர்...

"போய்ப் படுங்க..." என்று ஜெகன் உத்தரவிடவும் தான் எல்லோரும் அங்கிருந்து அகன்றனர்...

அறைக்குள் வந்தவள் கைப்பையைத் தூக்கி எறிந்துவிட்டு அப்படியே கட்டிலில் கவிழ்ந்தாள்... உடையை மாற்ற கூட அவளுக்கு மனம் வரவில்லை... ஏனெனில் அவளது உடையில் சத்யமூர்த்தியின் வாசம் ஒட்டியிருப்பது போல் ஒரு தோற்றம்... ஏனோ அவனே அவளுடன் இருப்பது போல் ஒரு பிரம்மை...

அவனது வேகமான இதழொற்றல்கள், முரட்டுத்தனமான அணைப்பு எல்லாம் மீண்டும் மீண்டும் அவளது நினைவில் எழுந்தது... இப்போது இந்தக் கணம் அவன் வேண்டும் என்கிற தாபமான எண்ணத்தை அவளால் தடுத்து நிறுத்த முடியவில்லை...

சின்ன வயதில் இருந்து அவள் எதற்காகவும் ஏங்கியதில்லை... கேட்டது அனைத்தும் அவளுக்கு உடனே கிடைத்துவிடும்... அது போல் தான் அவள் கேட்காததும்... அவளது விழியசைவு உணர்ந்து அதை அப்படியே நிறைவேற்றி வைப்பார் அவளது தந்தை... அப்படிப்பட்டவள் இப்போது சத்யமூர்த்திக்காக ஏங்குகிறாள்... ஆனால் அதை வாய்விட்டு சொல்ல முடியாது அவள் தனக்குள் தவிக்கிறாள்... அதை ஏன் அவன் உணர்ந்து கொள்ளவில்லை...? அந்தக் கணம் அவளுக்கு அவன் மீது அப்படியொரு கோபம் வந்தது...

"நான் அந்தஸ்து பார்க்கிறவளா...? அப்படி நான் அந்தஸ்து பார்க்கிறவளா இருந்திருந்தா நீ என் கால் விரல் நுனியை கூடத் தொட்டிருக்க முடியாதுடா... உன்னை மனசுக்குள் வச்சியிருக்கிறதால் தான் உன்னை இந்தளவுக்கு நெருங்க விட்டிருக்கிறேன்... அதை நீ நல்லா ஞாபகம் வச்சுக்கோ..."

"நான் உடல் சுகம் தேடி அலையறவளா...? ஆமாடா, அப்படித்தான்னா என்னடா பண்ணுவ...? நான் என்ன வேறொருத்தன் கிட்டேயா அலைஞ்சேன்...? எனக்குச் சொந்தமான உன் கிட்ட தானே வந்தேன்... இதில் என்னடா தப்பிருக்கு...? தப்பு எல்லாம் உன் பேரில் தான்டா இருக்கு... என் கிட்ட இல்லை... பெருசா பேச வந்துட்டான்... நீ எப்போடா உன் தப்பை சரி பண்ண போற... நீ மட்டும் அதை முதல்ல சரி பண்ணு... அதுக்கு அப்புறம் பாரு, இந்த வர்ஷூவோட ஆக்சனை... ஆம்பிளை நீ சுண்டு விரல் கூட அசைக்க மாட்ட... ஆனா நான் மட்டும் எல்லாம் செய்யணுமா... நோ, நெவர்... நீ தான் என்னைத் தேடி வரணும்... நீ தான் வரணும்..."

சத்யமூர்த்தியை நினைத்து அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது... அவளையும் அறியாது மனதின் வலி தாங்காது அவளது கண்கள் கண்ணீரை பொழிந்தது...

"வருவியா சத்யா...?" என்னமோ அவன் எதிரில் இருப்பது போல் அவள் ஏக்கத்துடன் கேட்டாள்...

"வந்து, என்னை உன் கூடக் கூட்டிட்டு போவியா...? அந்த நொடி இந்த அந்தஸ்து, ஏற்றத்தாழ்வு எல்லாத்தையும் விட்டுட்டு வெறும் பத்மவர்ஷினியா, உன்னுடையவளா உன் கூட வர நான் தயாரா இருக்கேன்..." என்று வாய்விட்டு கூறியவளின் மனம் அந்தக் கணத்திற்காக இப்போது இருந்தே காத்திருக்கத் துவங்கியது...

அதே நேரம் சத்யமூர்த்தி மொட்டை மாடியில் மல்லாக்க படுத்துக் கொண்டு வானத்தில் வலம் வந்த மதியை முறைத்து பார்த்துக் கொண்டிருந்தான்... ஏனெனில் அதில் தெரிந்தது அவனவள் முகமே... அன்று போல் அவனால்

அந்த மதி முகத்தை ரசிக்க முடியவில்லை... மாறாகக் கோபம் வந்தது...

'அப்படி என்னடி பெரிய அந்தஸ்து வேண்டி கிடக்கு...? உனக்கு என்னைய பிடிச்சிருக்கு தானே... அப்போ அதை வாய் திறந்து எல்லார் கிட்டேயும் சொல்ல வேண்டியது தானே... இன்னைக்கு நீ பண்ணிய காரியத்துக்கு உன்னைக் கொலை பண்ணணும்ன்னு வெறி வருது... என்னைக் காதலிக்கிறன்னு சொல்ற... நான் தான் வேணும்ன்னு சொல்ற... பொறவு எதுக்குடி எல்லார் கிட்டேயும் வாய் திறக்க மாட்டேங்கிற...? நீயா வாய் திறக்காத வரைக்கும் நானும் வாய் திறக்க மாட்டேன்... நீயா தான் என்னைத் தேடி வரணும்... எல்லாத்தையும் விட்டுட்டு நான் தான் முக்கியம்ன்னு நீ என்னைத் தேடி வரணும்... நான் வர மாட்டேன்... வரவும் முடியாது...'

'அப்படி வந்தா நான் வச்ச காதலுக்கு அர்த்தம் இல்லாம போயிரும்... உன் பணத்துக்கு ஆசைப்பட்டு வந்தேன்னு எல்லாரும் சொல்வாங்க... இது எனக்குத் தேவையா...? காலம் முழுசும் உன்னை உட்கார வச்சு சோறு போடுமளவுக்கு என் உடல்ல வலு இருக்கு... இனி முடிவு பண்ண வேண்டியது நீ தான்... நானில்லை...' மனதிற்குள் வேதனையுடன் அரற்றியபடி படுத்திருந்தான் அவன்...

நாளை காலையில் ஊருக்கு செல்ல வேண்டும்... இன்று அவன் சென்றிருப்பான் தான்... நடராஜன் வேலை விசயமாக வெளியூர் சென்றிருக்கிறான்... நாளை காலையில் தான் அவன் வருவான்... அதுவரை அவன் இங்கிருக்க வேண்டிய கட்டாயம்...

********************

"மாமா..."

மனைவியின் அழைப்பில் கண்கள் மின்ன திரும்பி பார்த்தான் யுகேன்... இன்றைய நிகழ்வின் தாக்கத்தால் இருவருமே உறங்காது முதுகு காட்டி கொண்டு படுத்திருந்தனர்...

"சொல்லும்மா..." அவனையும் அறியாது அவனது குரல் குழைந்தது...

"எனக்கு இது எதுவும் தெரியாது... எங்கண்ணா அப்படி எல்லாம் செஞ்சிருக்காது..." என்று திக்கி திணறிய அகல்யாவை அவன் ஆதூரத்துடன் பார்த்தான்...

"நான் உன்னை நம்பலைன்னு சொன்னேனா...?" என்ற கணவனை வியப்பாய் பார்த்தாள் அவள்...

"கணவன், மனைவிக்குள் நம்பிக்கை முக்கியம்... அதுவும் இத்தனை நாளா உன்னை நான் பார்த்துட்டு இருக்கேன்... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா...?" என்றவன் அவளது கூர்நாசியை எட்டி பிடித்து ஆட்டியபடி,

"என் படபடப் பட்டாசுக்கு நேர்மையா முகத்துக்கு நேரே படபடன்னு பொரிய தான் தெரியும்... இப்படிச் சுற்றி வளைத்து பேசவும் தெரியாது, செய்யவும் தெரியாது... எல்லாமே நேரடி அதிரடி சரவெடி தான்..." என்று கூறி அவன் சிரித்தான்...

அவனது நம்பிக்கை கண்டு அவள் நிம்மதியுற்றாள்...

"அண்ணா ரொம்ப நல்லவன்... தகுதிக்கு மீறி எல்லாம் ஆசைப்பட மாட்டான்... நீங்க பெண் கேட்டு வந்தப்போ கூட ரொம்ப யோசிச்சான்..."

'எதுக்கு யோசிச்சிருப்பான்னு எனக்குத் தானே தெரியும்... இதில் என்ன உள்குத்து இருக்கோன்னு அவன் யோசிச்சிருப்பான்...'

"அத்தை ரொம்பவும் கேட்கவும் தான் சரின்னு சொன்னான்... அப்படிப்பட்டவன் இது மாதிரி எல்லாம் பண்ண மாட்டான்..."

"த்ச்சு, இப்போ எதுக்கு இந்த விளக்கம் எல்லாம்... உங்கண்ணனை பத்தி எனக்குத் தெரியாதா...?" என்றவன் அவளது கையை ஆறுதலாகப் பற்ற...

அவள் தனது மற்றொரு கையால் அவன் கை மீது ஓங்கி ஒரு அடி போட்டாள்...

"என்னடி...?" பரிதாபமாகக் கேட்டவனைக் கண்டு,

"நீங்க தான் என்னை நம்புறீங்க... நானில்லை... உங்க மேலுள்ள சந்தேகம் அப்படியே தான் இருக்கு..."

'எப்படி நெருங்கினாலும் சிக்க மாட்டேங்கிறாளே...? என்ன செஞ்சு இவளை கவுக்கலாம்...?' என்று அவன் அதிதீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான்...

அகல்யா மறுபக்கம் திரும்பி படுத்து கொண்டாள்... அவளையே சிறிது நேரம் பார்த்து கொண்டிருந்தவன் மெல்ல அவள் பக்கமாய் நெருங்கி வந்தான்... அவனின் அசைவு உணர்ந்து அவள் திரும்பி பார்த்தாள்...

"தள்ளி படுங்க..." என்று அவள் கோபமாய் உரைக்க...

"முடியாது போடி... என் கூட வாழ்ந்து பார்க்காம என்னைச் சந்தேகப்பட்டால் எப்படிக் கில்மா...? என்னுடனான வாழ்க்கையைச் சந்தோசமா வாழ்ந்து பார்... அப்புறம் இந்தச் சந்தேகம் எல்லாம் சூரியனை கண்ட பனித்துளி மாதிரி காணாமல் ஓடி போயிரும்..." என்றவன் அவளைப் பின்னால் இருந்து அணைத்துக் கொண்டு அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டான்...

"இந்த டயலாக்கை எத்தனை பேர் கிட்ட சொன்னீங்க...?" அவள் மனத்தாங்கலுடன் கேட்க...

"இதுவரை ஒரே ஒரு ஆள் கிட்ட மட்டும் தான் சொல்லியிருக்கேன்..."

"யாரது...?" அவள் கோபமாய்க் கேட்க...

"அடியேய் என் மக்கு கில்மா, அது நீதான்டி..." என்றபடி அவன் அவளது கழுத்தில் வளைவில் லேசாகக் கடித்தான்...

அது வலிப்பதற்குப் பதில் சுகமானதொரு அவஸ்தையைக் கொடுத்தது அவளுக்கு...

"ப்ச்சு, நீ பொய் சொல்ற... தள்ளி போ மாமா..." என்ன முயன்றும் அவளது குரலில் கோபம் வெளிப்படாது சிணுங்கலே வெளிப்பட்டது...

"உனக்குப் பொண்ணுங்க சைக்காலஜி தெரியுமா...? அவங்க போன்னு சொன்னா வான்னு அர்த்தமாம்..."

பெரிய கண்டுபிடிப்பு போல் கூறியவன் மேலும் மேலும் அவளுள் புதைந்தான்... அவளால் அவனை விலக்கவும் முடியவில்லை... அவனை அணைக்கவும் முடியவில்லை... அவன் தான் அவளது கணவன்... அவன் தான் அவளது வாழ்க்கை என்பது முடிவான ஒன்று... அதை மாற்றியமைக்க அவளுக்குமே விருப்பமில்லை... அதே சமயம் அவனது இந்தக் குணத்தை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை...

"ப்ளீஸ் மாமா..."

விழிகளில் விழிநீர் மிதக்க கெஞ்சியவளை கண்டவன் அமைதியாக அவளை விட்டு விலகினான்... அவனது விலகலும் அவளது உயிர் வரை சென்று வதைத்தது...

"எனக்குக் கொஞ்சம் டைம் வேணும்...?" என்றவளை கூர்ந்து பார்த்தவன்,

"எதுக்கு...? என் தப்புகளை ஜீரணித்துக் கொள்வதற்கா...?" சற்று கடுமையுடன் ஒலித்ததோ அவனது குரல்...

அதற்குப் பதில் சொல்ல தெரியாது அவள் பேந்த பேந்த விழித்தாள்... முதலில் இருந்த அகல்யாவாக இருந்தால் அவனுக்குச் சரிக்கு சரியாய் வாயடித்து இருப்பாள்... ஆனால் இப்போது கணவன் மீது நேசம் கொண்ட அகல்யாவால் பதில் பேச முடியவில்லை... மௌனமாய் மனதிற்குள் மறுகினாள்...

"முதலில் என்னை நம்பு அகல்ம்மா... அப்புறமா என்னைக் கணவனா நினைச்சு பாரு... அதுக்குப் பிறகு தன்னால நடக்க வேண்டியது நடக்கும்..."

சரியென்பது போல் அவள் தலையாட்டினாள்...

"குட், இப்போ தான்டி நீ என் சமத்து கில்மா..." என்று அவளது கன்னம் கிள்ளி கொஞ்சியவன்,

"உன் செலவுக்குன்னு தனியே பணம் தர்றியே... முதல்ல அதை நிறுத்து... உன் கணவனும் சம்பாதிக்கிறான்... அவனுக்குப் பொண்டாட்டியை நல்லா வச்சு காப்பாத்த தெரியும்..."

"அது வந்து..." என்று தயங்கியவளை கண்டு,

"இன்னமும் என்னை உன் புருசனா ஏத்துக்கலை... அப்படித்தானே..." சற்றுக் கோபம் போல் அவன் கேட்க...

"அய்யோ, அப்படி எல்லாம் இல்லை..."

"அப்போ அதை நிரூபிச்சு காட்டு..."

"சரி, இனி செலவுக்குப் பணம் கொடுக்கலை..." என்று அவள் சமாதான கொடியை பறக்க விட...

அதைக் கேட்டதும் தான் அவனது முகத்தில் மலர்ச்சி தோன்றியது... அதே மகிழ்ச்சியுடன் அவள் புறம் திரும்பி அவளை அணைத்து கொண்டவன்,

"ப்ளீஸ், முடியாதுன்னு மட்டும் சொல்லிடாதே... நான் ஒண்ணும் பண்ண மாட்டேன்... ஜஸ்ட், இப்படிக் கட்டிப்பிடிச்சிட்டு தூங்க மட்டும் தான் செய்வேன்..." என்று கெஞ்சியவனின் கைகளை விலக்க அவளுக்குமே மனம் வரவில்லை...

சிறிது நேரம் சென்ற பின் அகல்யா மெதுவே, " மாமா..." என்று அவனை அழைக்க...

"சொல்லுடி..."

"உங்க தங்கச்சி பிரச்சினையில் எனக்கு எதுவும் தண்டனை கொடுத்துர மாட்டீங்களே...?" கேட்கும் போதே அவளது கண்களில் கண்ணீர் துருத்தி கொண்டு நின்றது...

"எனக்கு வர்ஷூ முக்கியம் தான்... அது போல் தான் நீயும்... அப்படியொரு பிரச்சினை வராது... அப்படியே வந்தாலும் அவளோட பிரச்சினையில் உன்னை இழுக்க மாட்டேன்... என் தங்கச்சி புத்திசாலி... உன் அண்ணன் தான் வேணும்ன்னு நினைச்சான்னா அதை மாத்த யாராலும் முடியாது... அதே சமயம் அவளோட வாழ்க்கையை அவள் நல்லவிதமா பார்த்துக்குவாள்ன்னும் எனக்கு நம்பிக்கை இருக்கு..."

"உங்களுக்கு எங்கண்ணா மேல கோபம் வரலையா...?"

"எதுக்குக் கோபப்படணும்...? வர்ஷூவுக்கான வாழ்க்கையை அவள் தேர்ந்து எடுத்துக்கிறதுல அவளுக்குத் தான் அதிக உரிமை இருக்கு... கஷ்டமோ, நஷ்டமோ அதை அவள் தான் அனுபவிக்கப் போகிறாள்... நம்மை விட வர்ஷூ இதை எல்லாம் நல்லா யோசிச்சு வைச்சிருப்பாள்... அதனால் அவங்களைப் பத்தி நீ கவலைப்படாதே..."

"என்னைக் கைவிட்டுர மாட்டீங்க தானே...?" அவள் தவிப்புடன் கேட்டதில் இருந்து தெரிந்தது அவன் மீதான அவளது நேசம்...

"இப்படிக் கைக்குள் வச்சுப் பார்த்துக்கிறேன் போதுமா...?" என்றவனின் அணைப்பு மேலும் இறுகியது...

அவள் சந்தோசத்துடன் அவனது கைகளில் அடங்கிக் கொண்டாள்... தங்களது இணையின் அருகாமையில் நிம்மதி எழ இருவருக்குமே ஆழ்ந்த உறக்கம் வந்து தழுவி கொண்டது...

**************************

"என்னங்க நடக்குது...? என்னென்னமோ சொல்றீங்க...? எனக்கு ஒண்ணுமே புரிய மாட்டேங்குது..." கணவனிடம் கவலையுடன் கேட்டாள் சுபிக்ஷா...

"எனக்குமே ஒண்ணும் புரிய மாட்டேங்குது சுபி...?" ஜீவா ஆழ்ந்த யோசனையில் மூழ்கினான்...

"வர்ஷூ சத்யாவை லவ் பண்றாளா...?"

"அப்படித்தான் எனக்குத் தோணுது..."

அதைக் கேட்டுச் சுபிக்ஷா சற்று அதிர்ந்து தான் போனாள்... மகளுக்குச் சத்யமூர்த்தி எந்த விதத்திலும் பொருத்தமில்லை என்பதை எண்ணி அந்தத் தாயுள்ளம் பரிதவித்தது...

"இது எப்படி ஒத்து வரும்...? எனக்குப் பயமாயிருக்கு மாமா..."

"அது தான் எனக்கும் புரியலை... வர்ஷூக்கு ஏன் இப்படிப் புத்தி கெட்டு போச்சு...?" என்று ஜீவா மனைவியிடம் புலம்பினான்...

அவர்களது திருமணமும் எந்தவித பொருத்தமும் இல்லாது நடந்த ஒரு திருமணம் தான்... ஆனால் அதற்கு அத்தை மகள் என்கிற சொந்தம் இருந்தது... சுபிக்ஷா ஒன்றும் ஒதுக்கி தள்ளும் அளவிற்குத் தகுதியில்லாத பெண்ணும் இல்லை... ஓரளவு வசதியானவள், படித்தவள், கர்னாகச் சங்கீத பாடகி... இத்தனை தகுதி இருந்தது அவளிடத்தில்...

ஆனால் சத்யாவிடம்...? ஒன்றுமே இல்லையே... வசதி வேண்டாம், அழகு வேண்டாம், அந்தஸ்து வேண்டாம்... இப்படி எதுவும் வேண்டாம்... இதற்கு எல்லாம் இணையாகப் படிப்பு இருந்தால் போதுமே... அது கூட அவனிடத்தில் இல்லையே... அப்படிப்பட்ட ஒருவனை எப்படித் தனது மருமகனாக ஜீவாவால் அனைவரிடமும் அடையாளம் காட்ட முடியும்...? இது அவனுக்கு மட்டுமா தலைகுனிவு... மகளுக்கும் சேர்த்து தானே... இதை ஏன் மகள் புரிந்து கொள்ள மறுக்கிறாள்...? ஜீவா செயலிழந்து போனவனாய் அமர்ந்திருந்தான்...

மனதின் துக்கத்தினை மனைவியிடம் காட்டாது, "யோசிப்பதால் எதுவும் மாறப் போவதில்லை சுபி... நீ படு..." என்று மனைவியைத் தூங்க சொன்னவன் தான் மட்டும் வெகுநேரம் யோசித்தபடி அமர்ந்திருந்தான்...

*************************

மாலை மயங்கும் பொழுதில் திண்ணையில் அமர்ந்து கொண்டு வடிவழகி சிறு கத்தி மூலம் தென்னங்கீற்றில் இருந்து ஈர்க்கங்குச்சிகளைத் தனியே பிரித்தெடுத்துக் கொண்டிருந்தார்... அவர் அருகில் அமர்ந்து சரவணன் படித்துக் கொண்டிருந்தான்... அவரது கணவர் இராமசாமி இன்னமும் வீடு வந்து சேரவில்லை...

அப்போது தளர்ந்த நடையுடன் தனது மூத்த மகன் சத்யமூர்த்தி வருவதைக் கண்ட வடிவழகியால் தனது கண்களை நம்ப முடியவில்லை... கண்களை அழுந்த தேய்த்து விட்டுக் கொண்டு மீண்டும் உற்று பார்த்தார்... அது அவரது மகனே தான்...

"சரவணா, அது நம்ம சத்தியான்னு பாரு..." அன்னையின் குரலில் நிமிர்ந்து பார்த்த சரவணன்,

"அண்ணாவே தான் ஆத்தா..." என்று உற்சாகக் குரல் எழுப்பியபடி புத்தகத்தைத் தள்ளி வைத்து விட்டு அண்ணனை நோக்கி ஓடினான்...

"அண்ணா..." என்று சந்தோசத்துடன் தன்னை வந்து கட்டி கொண்ட தம்பியை கண்டு சத்யமூர்த்தியின் முகத்தில் புன்னகை தோன்றியது...

"எப்படியிருக்கச் சரவணா...? படிப்பு எல்லாம் எப்படிப் போகுது...?"

"நல்லா போகுதுண்ணா..."

இருவரும் பேசியபடி வீட்டை நெருங்கி இருந்தனர்... வடிவழகி கைவேலையை விட்டு விட்டு மகனை நோக்கி வந்தார்...

" சத்தி, எப்படிய்யா இருக்க...?"

அவருக்குக் கண்கள் கலங்கியது... இந்தச் சிறிது காலப் பிரிவை கூட அவரால் தாங்கி கொள்ள முடியவில்லை...

"நல்லாயிருக்கேன் ஆத்தா... நீ ஏன்த்தா இம்புட்டு மெலிஞ்சு போயிட்ட...?" என்று அவன் கவலையுடன் கேட்டபடி அன்னையைப் பார்த்தான்...

"நீ வந்துட்டல்ல... இனி எல்லாச் சரியாகும்..." என்றவர் உள்ளே சென்று மகனுக்கு அருந்த தண்ணீர் எடுத்து வந்தார்...

"நீ வேலை தேடி எங்கேயும் போக வேணாம் சத்தி... இங்கேயே எங்கூடவே இரு..."

"எங்கேயும் போகப் போறதில்லை ஆத்தா... இனி இங்கே தான்..." என்றான் அவனும் தீர்மானமாக...

"ரொம்ப நல்லது கண்ணு..." என்றவர் சந்தோசமாக இரவு சமையலை கவனிக்கச் சென்றுவிட்டார்...

தம்பியிடம் தான் வாங்கி வந்த தின்பண்டங்களை எடுத்து கொடுத்த சத்யமூர்த்தி, "சாப்பிட்டுட்டு படி..." என்று கூறிவிட்டுத் திண்ணையில் கால் நீட்டி அமர்ந்தான்...

அவனது மனதிற்குள் மனங்கவர்ந்தவள் தோன்றி அவனிடம் கோபமாய்ச் சண்டையிட்டாள்... வேதனையுடன் விழிகளை மூடி கொண்டவனின் காதில் தகப்பனின் உளறல் சத்தம் கேட்டது... அதைக் கேட்டு அவன் கோபத்துடன் விழிகளைத் திறந்தான்...

"நீ எப்ப வந்த சத்தி...?" குழறலாய் கேட்டபடி திண்ணையில் வந்தமர்ந்த இராமசாமியை பெரும்கோபம் கொண்டு அவன் கால்களால் எட்டி உதைத்தான்...

"எல்லாப் பிரச்சினையும் உம்மால் தான் வந்தது... இனிமே கொண்டு வீட்டுக்கு வாரும் கொள்ளிக்கட்டையை எடுத்து வாயில் சொருகுறேன்..." என்று ஐய்யனார் போன்று உறுமியபடி அவன் ஆவேசமாய் நின்றான்...

"நான் என்ன சத்தி பண்ணினேன்...?" மூன்று வேளை சோற்றிற்காக நரி தந்திரமாய்ப் பதுங்கியது...

"எல்லா எழவுக்கும் அச்சாரமே நீரு தானே... இதுக்கு மேல என்னைய பேச வைக்காதீரும்... ஓடி போயிரும் ஓடி..." மகனது சிங்க கர்ஜனையில் தந்தை நரி தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி போனது...

அதைக் கண்டு நிம்மதி அடைந்தார் வடிவழகி...

"இதைத் தானே நான் மொத இருந்து உங்கிட்ட சொல்லுறேன்... இந்தாளை அடிச்சு விரட்டுன்னு... நீ தான் பாவம் பார்த்த... பாவம் பார்த்ததுக்கு நல்லா பதிலுக்குச் செஞ்சிட்டு போயிட்டான் பரதேசி... இன்னைக்குத் தான் உன் ஆத்தாக்கு நீ நல்லது பண்ணியிருக்கச் சத்தி..." உண்மையான மனதுடன் சந்தோசத்துடன் அவர் கூறினார்...

அதன் பின் சத்யமூர்த்தி உண்டதாய் பேர் பண்ணியவன் அப்படியே திண்ணையில் முடங்கி விட்டான்... எதிர்காலம் இருண்டு போனது போல் ஒரு தோற்றம் அவனுள்... எல்லாவற்றையும் அவன் இழந்த போது கூட இந்தளவிற்கு வருத்தப்பட்டது இல்லை... உயிருக்கு உயிராய் நேசிப்பவளின் நேசம் பொய்த்து போனதை நினைத்து அவனுக்கு அத்தனை வேதனையாக இருந்தது...

மறுநாளில் இருந்து பத்மவர்ஷினியின் நினைவை மறக்க அவன் அதிகம் நேரம் உழைக்க ஆரம்பித்தான்... பகலில் எல்லாம் உழைத்து களைத்து வந்து இரவில் படுத்தும் உறக்கம் அவனுக்கு வேண்டாத நண்பனாகி போயிற்று... அது அவன் அருகில் வந்து நலம் விசாரிக்கவே இல்லை... அவனது ராட்சசி தான் அவனுள் இருந்து அவனை உயிரோடு வதைத்தாள்...

**********************

"எல்லோரும் என்ன வேலை பார்க்கிறீங்க...? எல்லாம் நான் தான் பார்க்கணும்ன்னா நீங்க எல்லாம் எதுக்கு இருக்கீங்க...?" என்று பத்மவர்ஷினி அறையில் கூடியிருந்த செயலாளர், மேலாளர் என்று அனைவரையும் பிடித்துக் காய்ச்சி எடுத்து கொண்டிருந்தாள்...

ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடைகளில் ஐந்து கண்ட்டையினர் மட்டும் அப்படியே திரும்பி வந்துவிட்டது... ஆடையில் சிறு குறைப்பாடு இருந்தது என்று... மெல்லிய நூல் ஒன்று நீட்டி கொண்டிருந்தது தான் அதற்குக் காரணம்...

கடந்த மூன்று நாட்களாக அவள் அவளாக இல்லை... அதனால் அவளால் எந்த வேலையையும் சரிவரப் பார்க்க முடியவில்லை... அதன் விளைவு இன்றைய கோடிக்கணக்கான நஷ்டம்...

"என் மூஞ்சியில் முழிக்காதீங்க... எல்லோரும் இங்கிருந்து போங்க..." உச்சஸ்தானியில் கத்தி கொண்டிருந்தவள் திடுமென அப்படியே மயங்கி சரிந்தாள்...

மூன்று நாட்களாகத் துளி தண்ணீர் கூட வாயில் படாது உண்ணாவிரதம் இருந்தவளின் உடல் அதற்கு மேல் வேலை செய்ய மறுத்து தனது ஒத்துழையாமை இயக்கத்தினைத் தொடங்கிற்று... அவளால் தைரியமாக வாழவும் முடியவில்லை... கோழை போல் சாகவும் முடியவில்லை... அதனால் தான் உண்ணாது இருந்து தன்னை வருத்தி வதைத்து கொண்டாள்... அது நன்கு வேலை செய்தது...

அவளது செயலாளர் பெண் ஓடி வந்து அவளை மடி தாங்கி கொண்டாள்... மற்றவர்கள் நிறுவனத்தில் இருந்த ஆம்புலன்ஸ் மூலம் அவளை மருத்துவமனைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்... விசயம் கேள்விப்பட்டுக் குடும்பத்தினர் அனைவரும் அங்கு ஓடி வந்தனர்...

"சாப்பிடாம இருந்ததால் அனிமீக்கா இருக்கிறாள்... வேற பயப்படுற மாதிரி ஒண்ணுமில்லை..." குடும்ப மருத்துவர் ஜீவாவை தேற்றிவிட்டு சென்றார்...

"வர்ஷூ சாப்பிடலையா...?" ஜீவாவின் குரல் பலகீனமாய் ஒலித்தது... மகளது பட்டினி கண்டு அவனது மனம் மிகவும் வலித்தது...

"இப்ப கொஞ்ச நாளா அவள் கிட்ட யாராலையும் பேச முடியலை..."

சுபிக்ஷா கூறவும் ஜீவா பலமிழந்தவன் போல் அப்படியே அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்துவிட்டான்... சுபிக்ஷா ஆறுதலாக அவனருகில் அமர்ந்தாள்... அகல்யா பயத்துடன் கணவனது கையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள்...

பத்மவர்ஷினி கண்விழித்து விட்டாள் என்றதும் தான் அனைவருக்கும் போன உயிர் திரும்ப வந்தது... சந்தோசத்துடன் அவளைக் காண சென்றனர்...

"வர்ஷூ, எப்படிம்மா இருக்க...?" பாசத்துடன் கேட்ட அனைவரையும் வெற்று பார்வை பார்த்தவள் ஆயாசத்துடன் தனது விழிகளை மூடி கொண்டாள்...

அவன் அவளைக் காண வர மாட்டான் என்று அவளுக்கு நன்கு தெரியும்... ஆனாலும் ஆசை கொண்ட மனது அவனது வரவுக்காக ஏங்கி தவித்தது...

"வர்ஷூ, வெறும் வயத்தோடு இருக்கக் கூடாதும்மா இதைக் குடி..." மகளின் பட்டினி போராட்டம் எதனால் என்று தெரியாது சுபிக்ஷா பழச்சாறு அடங்கிய கண்ணாடி குவளையை மகளது வாய் அருகே கொண்டு செல்ல...

எங்கிருந்து தான் பத்மவர்ஷினிக்கு ஆங்காரம் வந்ததோ... அந்தக் கண்ணாடி குவளையை அப்படி ஒரு வேகத்துடன் தட்டி விட்டாள்... அது தரையில் விழுந்து சுக்கு நூறாய் உடைந்தது...

"வர்ஷூ..." என்று எல்லோரும் அவளைத் திகைப்பாகப் பார்த்தனர்...

"எனக்கு எதுவுமே வேண்டாம்... நீங்க வேண்டாம்... உங்க அந்தஸ்து வேண்டாம்... உங்க வறட்டுக் கௌரவம் வேண்டாம்... உங்க பணம் வேண்டாம்... இது எதுவும் வேண்டாம்... எனக்கு அவன் தான் வேண்டும்... அவன் மட்டும் தான் வேண்டும்..." என்று ஆவேசத்துடன்

கத்தியவள் கையில் ஏறிக் கொண்டிருந்த ட்ரிப்சை கழற்றி எறிந்தாள்...

அதில் காயம் ஏற்பட்டு அவளது கையில் இருந்து இரத்தம் வழிந்தது... அதைத் துடைக்கக் கூட அவள் யாரையும் தன்னருகில் விடவில்லை... கிட்டத்தட்ட ஒரு பைத்தியம் போல் புத்தி பேதலித்தவளாய் அவள் மாறியிருந்தாள்... வேறுவழியின்றி அவர்கள் மருத்துவரை நாடினர்...

இரு செவிலிப்பெண்கள் அவளை இரு பக்கமும் பிடித்துக் கொள்ள மருத்துவர் வேகமாய் அவளது உடலில் மயக்க மருந்தினை செலுத்தினார்... நரம்பிற்குள் ஊடுருவிய மருந்து அவளது மூளையையும், மனதினையும் மெல்ல செயலிழக்க செய்து அவளை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்த துவங்கியது...

அந்த நிலையிலும் அவளது இதழ்கள் மெல்ல முணுமுணுத்தது...

"எனக்கு அவன் தான் வேண்டும்..." என்று...

"அவன் யார் வர்ஷூ...?" மருத்துவர் அவளது தலையைப் பரிவுடன் வருடியபடி கேட்டார்...

அவரது கேள்வியில் அவளது மனக்கண்ணில் மயக்கும் புன்னகையுடன் சத்யமூர்த்தித் தோன்றினான்...

"சத்யா... மை லவ்... மை லைஃப்... மை மாமா..."

தன்னவனும், தானுமான தனிக் கனவுலகில் இனிமையாய் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள் பத்மவர்ஷினி... ஆழ்மனதின் எண்ணங்களுக்கு ஏது உறக்கம்...???

தன்னவனும், தானுமான தனி கனவுலகில் இனிமையாய் சஞ்சரித்து கொண்டிருந்தாள் பத்மவர்ஷினி... ஆழ்மனதின் எண்ணங்களுக்கு ஏது உறக்கம்...???

சத்யமூர்த்தித் தனது காதலால் அவளது உயிரோடு சதிராடி கொண்டிருந்தான்...!!!

அவள் ஆர்ப்பரித்ததின் விளைவால் அவளது கழுத்தில் இருந்த மெல்லிய தங்க சங்கிலி வெளியில் வந்து விழுந்திருந்தது... அதில் கோர்த்திருந்த தங்க தாலி அனைவரையும் கண்டு பரிகாசமாய் சிரித்தது... அதை கண்டு அனைவரும் அதிர்ந்து போயினர்...

அந்த தாலிக்கும் சத்யமூர்த்திக்கும் தொடர்பு இருக்க கூடுமோ? என்று எண்ணியவர்களின் மனமோ பேரதிர்ச்சியில் உறைந்திருந்தது...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 13

ஆர்ப்பாட்டம் அடங்கி அமைதியாய் உறங்கும் மகளின் கையைப் பிடித்தபடி அவள் அருகில் அமர்ந்திருந்த ஜீவா கலங்கி தவிக்கும் தனது மனதினை அடக்க வழி வகைத் தெரியாதவனாய் விழிகள் கலங்கி சிவக்க அவளையே பார்த்திருந்தான்... உலகையே மகளது காலடியில் வைக்கத் தயாராக இருக்கும் தகப்பனை பெற்ற பெண்ணவள் மனதில் இத்தகைய துயரம் இருக்கும் என்று அவன் சிறிதும் அறிந்திருக்கவில்லையே... அந்தக் கணம் மகளை விட அவனுக்கு வேறு எதுவும் பெரிதாகத் தெரியவில்லை...

சின்ன வயசில் பத்மவர்ஷினிக்குத் தடுப்பு ஊசி போட்டால் அவளை விட அதிகம் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுபவன் அவன்... ஆனால் இன்று அவளது இரு கைகளில் ஏறிக் கொண்டிருந்த ட்ரிப்ஸ், மயக்க மருந்து செலுத்துவதற்காக ஊசி குத்தியது எல்லாம் சேர்த்து அவளது உடலை புண்ணாக்கி வைத்திருப்பதைக் கண்டு அந்தத் தகப்பனது நெஞ்சம் இரத்த கண்ணீர் வடித்தது...

அதிலும் மகள் தனது கால் தூசிக்குச் சமம் இல்லாத ஒருவனுக்காக இப்படி உயிர் போராட்டம் நடத்துவது கண்டு அவனுக்கு மனம் தாங்கவில்லை... அவள் விரும்பியதை வாங்கிக் கொடுக்காவிட்டால் அவன் நல்ல தகப்பன் இல்லையே...

"யுகேன்..." அவனது குரல் ஓங்கி ஒலித்து மகனை அழைத்தது...

"டாட்..."

"உன் மச்சினன் எங்கே இருந்தாலும் இன்னும் மூணு மணி நேரத்தில் அவன் இங்கே இருக்கணும்... என் பொண்ணு கண் முழிக்கும் போது அவன் அவள் கண் முன்னாடி இருக்கணும்..." என்று அவன் ஆத்திரத்துடன் கட்டளையிட்டான்...

"நான் ஏற்பாடு பண்றேன் டாட்... டோன்ட் வொர்ரி..."

"அப்படியே உன் மனைவி கிட்ட சொல்லு, அவன் அண்ணன் கிட்ட பேச சொல்லி... அவனைக் கிளம்பி தயாரா இருக்கச் சொல்லு... ஒரு நொடி கூட வேஸ்ட் பண்ண கூடாது... க்விக்..."

ஜீவா மடைதிறந்த வெள்ளம் போல் அடுத்தடுத்துக் கட்டளைகள் பிறப்பித்துத் தானும் ஒரு நாயகன் தான் என்று நிரூபித்தான்... அவனது மனைவி அவனைக் கலக்கத்துடன் பார்த்து கொண்டிருந்தாள்... மகளுக்காகக் கணவன் இறங்கி வந்தது குறித்துச் சுபிக்ஷாவிற்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... ஆனால் மகளையும், சத்யமூர்த்தியையும் நினைத்து அவளுக்குப் பயமாக இருந்தது... இது எங்கே போய் முடிய போகிறதோ என்று...?

யுகேன் சத்யமூர்த்தியை சென்னைக்கு அழைத்து வர வேண்டியதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அலைப்பேசி மூலம் செய்யத் தொடங்கினான்... அகல்யா தனது தம்பிக்கு அழைத்தாள்... அவளது மனம் அடுத்து என்ன நடக்கப் போகிறதோ? என்று திக்திகென்று திகிலில் திகைத்திருந்தது...

"அகல்க்கா எப்படியிருக்க...?" மறுபக்கம் சரவணனின் குதூகல குரல் கேட்டது...

அதற்குப் பதில் சொல்லாது அவள், "அண்ணா எங்கே...?"

"நான் காலேஜ் முடிஞ்சு வீட்டுக்கு போயிட்டு இருக்கேன்க்கா... பக்கத்தில் தான் இருக்கேன்... பத்து நிமிசத்தில் திரும்பக் கூப்பிடறேன்..." என்றபடி அவன் அழைப்பை துண்டித்தான்...

அகல்யா ஓய்ந்து போய் வெளியில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்... அவள் அருகில் யுகேன் வந்தமர்ந்தான்... அவனைக் கண்டதும் அவளுக்கு அழுகை பீறிட்டது...

"மாமா..."

அவனது சட்டை காலரை பிடித்துக் கொண்டு அவனது தோளில் முகம் புதைத்து அவள் அழ ஆரம்பித்தாள்...

தானாக அவனிடம் நெருங்கி வரும் மனைவியின் அருகாமையை அனுபவிக்க விடாது அவளது அழுகை தடுத்தது...

"ஷ், அகல்ம்மா, அழாதே..." அவன் அவளை அணைத்து ஆறுதல் படுத்த...

"எனக்குப் பயமாயிருக்கு... மாமா அண்ணாவை ஏதும் சொல்லிருவாரோன்னு பயமாயிருக்கு..."

"ப்ச், டாட் அப்படி எல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டார் அகல்ம்மா... அப்படியே அவர் ஏதாவது சொன்னாலும் உன் அண்ணா சும்மா விட்டுருவானா...? பதிலுக்கு நல்லா கொடுத்துருவான்... ஒண்ணு நல்லா புரிஞ்சுக்கோ... இதில் நாம தலையிட முடியாது... சத்யா, வர்ஷூ ரெண்டு பேருமே ரொம்ப மெச்சூர்ட்... அதனால் அவங்க வாழ்க்கையை அவங்க முடிவு பண்ணிக்குவாங்க..."

"அண்ணா மறுத்துட்டா...?" அவள் தவிப்புடன் கணவனைப் பார்த்தாள்...

"உன் அண்ணா மறுக்கும் அளவுக்கு என் தங்கச்சி ஒண்ணும் குறைஞ்சு போகலை..." என்றவனது குரலும், முகமும் இறுகி போனது...

"பார்த்தீங்களா, இப்ப நீங்க என் மேல் கோபப்படுறீங்க மாமா..." என்று பயந்தபடி அவள் அவனிடம் இருந்து விலக...

"சாரி... ஏதோ தெரியாம..." என்று அவன் சமாதானப்படுத்திய போதும் அகல்யாவின் பயம் முற்றிலும் நீங்கவில்லை...

அதற்குள் சரவணன் அவளை அழைத்திருந்தான்... இந்த முறை பேசியது சத்யமூர்த்தி... அண்ணனிடம் அவள் விசயத்தைக் கூறியதும் அவன் அதிர்ந்து போய்விட்டான் என்பது அவனது பேச்சற்ற மௌனத்தில் இருந்து தெரிந்தது...

"என்ன சொல்ற அகல்...?" தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவன் கேட்டான்...

"அண்ணா, முதல்ல நீ கிளம்பி வாண்ணா..."

"ம், நான் கிளம்பி வர்றேன்..." என்றவனுக்குத் தன்னவளை நினைத்து மனம் வேதனையில் துடித்தது...

'ஏன்டி இப்படிப் பண்ற...?' அவனது மனம் ஊமையாய் அழுதது...

"அண்ணா, அவங்களே எல்லா ஏற்பாடும் பண்ணிட்டாங்க... நீ உடனே கிளம்பி வா..."

தங்கை கூறியதும் அதற்கு மேல் அவன் சிறிதும் தாமதிக்கவில்லை... ஏனென்று கேட்ட அன்னையைச் சமாளித்து விட்டுச் சென்னை கிளம்புவதற்காக அவன் தயாராகி வெளியில் வந்த போது அவனுக்காக வாசலில் கார் காத்திருந்தது... அங்கிருந்து கோயம்புத்தூர் விமானநிலையம் சென்று தனி விமானத்தில் ஏறியமர்ந்த பிறகும் அவனுக்குச் சுற்றுப்புறம் உறைக்கவில்லை...

தனி விமானப் பயணத்தை அவன் அனுபவிக்கவும் இல்லை... அங்கிருந்த விமானப் பணிப்பெண் அவனது நலுங்கிய உடையை ஒரு மாதிரியாகப் பார்த்து சென்றதை கூட அவன் உணரவில்லை... அவனது மனதில் இருந்தது எல்லாம் பத்மவர்ஷினி மட்டுமே... அவளது நலம் மட்டுமே...

சென்னை வந்திறங்கியவனுக்கு அங்கும் அவனுக்காகக் கார் காத்திருந்தது... நேரே மருத்துவமனைக்குச் சென்றவனைக் கார் ஓட்டுநரே பத்மவர்ஷினி இருந்த அறைக்கு அழைத்துச் சென்றான்... அறையின் வெளியில் அமர்ந்திருந்த ஜீவா சத்யமூர்த்தியை கண்டதும் ஆவேசமாய் அவனது சட்டையைப் பிடித்து விட்டான்...

"ஏன்டா என் மகள் வாழ்க்கையை நாசமாக்கின...?" ஆத்திரத்துடன் கேட்ட ஜீவாவை கண்டு சத்யமூர்த்தி ஸ்தம்பித்தான்...

தன்னவளுக்கு ஆபத்து என்றதும் கிளம்பி வந்தவன் எதற்காகத் தன்னை வரவழைத்தார்கள் என்பதைப் பற்றி யோசிக்க மறந்திருந்தான்... இப்போது அவனுக்கு அது புரிவது போலிருந்தது... ஆனாலும் தைரியமாக ஜீவாவை பார்த்தவன் அவனது கைகளில் இருந்து தனது சட்டையை விடுவித்துக் கொண்டு,

"யார்...? நானா...?" என்று கூறியவனின் வார்த்தைகள் கூர்மையாய் வந்து விழுந்தது... அதை விட அவனது பார்வை ஜீவாவை கூர்மையாய்த் துளைத்தெடுத்தது...

"நீயில்லாமல் வேறு யார்...? என் மகள் அழகு என்ன, படிப்பு என்ன, அந்தஸ்து என்ன...? அப்படிப்பட்டவள் உனக்குக் கேட்குதா...? எதுக்காகடா என் மகள் கழுத்தில் தாலி கட்டின...? எதைச் சொல்லிடா அவள் மனசை கெடுத்த...? அதுவும் யாருக்கும் தெரியாம தாலி கட்டியிருக்கிற... கோழை மாதிரி..."

இப்போது சத்யமூர்த்திக்கு எல்லாம் புரிந்து போனது... ஜீவாவின் கோபம் ஏனென்று அவனுக்குப் புரியவும் அவனது முகத்தில் அப்படி ஒரு இகழ்ச்சி எழுந்தது...

"ஏன், எதுக்குச் சொல்லணும்...? என்னுடைய நிலத்தை நீங்க எழுதி வாங்கினப்போ எல்லோருக்கும் சொல்லிட்டா செஞ்சீங்க... அப்படிச் செஞ்சியிருந்தீங்கன்னா நானும் அதே போல் சொல்லிட்டுச் செஞ்சிருப்பேன்... நீங்களும் திருட்டுத்தனம் பண்ணினீங்க... நானும் பதிலுக்குத் திருட்டுத்தனம் பண்ணினேன்... ரெண்டுக்கும் சரியா போச்சு... இதில் கோழைத்தனம் எங்கிருந்து வந்தது...?" என்று அவன் அசால்ட்டாகக் கூறினான்...

"என் மகளும் உயிரற்ற அந்த நிலமும் உனக்கு ஒண்ணாடா...? துள்ளலும், துடிப்புமாய் இருந்தவளை இப்படி ஒரேடியா படுக்க வச்சிட்டியேடா பாவி..." கோபமும், வெறுப்பும் கலந்து கொதித்தான் ஜீவா...

"ஆமாய்யா... என்னோட பூமி என்னோட தாய்க்குச் சமானம்... என்னோட உயிர் அது... உன் பொண்ணை விட

எனக்கு அது உசத்தி தான்... துள்ளலும், துடிப்புமா...? அதுக்குப் பெயர் திமிர்ய்யா... அப்பனும், மகளும் கொஞ்ச நஞ்ச ஆட்டமா போட்டீங்க... அதைத் தான் மஞ்ச கயிறு கட்டி ஒரேடியா அடக்கிட்டேன்..." என்றவனது வார்த்தையில் அத்தனை அகந்தை இருந்தது...

"அப்போ என் பொண்ணும், அந்த நிலமும் ஒண்ணுன்னு சொல்ற...?" ஜீவாவின் விழிகள் கூர்மையுடன் அவனைத் துளைத்தெடுத்தது...

ஏற்கெனவே பத்மவர்ஷினி மீது கோபத்திலிருந்த சத்யமூர்த்தி இந்த இடத்தில் நிதானம் தவறிப் போனான்... அவள் தனது அந்தஸ்தை மறந்து தன்னிடம் வர மாட்டாள் என்று அவனே ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்...

"ஆமாம்..." என்றான் அழுத்தம் திருத்தமாய்...

"அப்போ நிலப்பத்திரத்தை கொடுத்துட்டா என் பொண்ணை விட்டுருவ... அப்படித்தானே...?"

ஒரு நொடி தயங்கினாலும், "நிச்சயமா..." என்று உறுதியாய்க் கூறினான் சத்யமூர்த்தியும்...

"நீ இவ்வளவு சொன்ன பிறகு நான் இதைச் செய்யாமல் இருந்தால் சரியா இருக்காது... நீ சொன்னதை நான் செய்கிறேன்... அதே போல் நான் சொல்வதையும் நீ கேட்க வேண்டும்..."

'என்ன...?' என்பது போல் சத்யமூர்த்தி ஜீவாவை பார்த்தான்...

"என் மகளிடமும் இதே வார்த்தைகளை நீ சொல்ல வேண்டும்..."

ஜீவாவின் வார்த்தையில் சத்யமூர்த்தியின் மனம் அதிர்ந்து போனது... முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"நிலத்துக்காக நடந்த கல்யாணம் இது... நிலம் கையில் வந்த பிறகு இந்தக் கல்யாணத்துக்கு எந்த ஒரு அர்த்தமும்

இல்லை..." மனதை கடினப்படுத்திக் கொண்டு அவன் இந்த வார்த்தைகளைக் கூறினான்...

அந்தஸ்து தாண்டி தனது காதல் வெற்றி பெறும் சாத்தியம் இல்லை என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

"யுகேன்..." ஜீவா தனது மகனை அழைத்தவன்,

"வீட்டில் இருக்கும் இவனுடைய நிலப்பத்திரத்தை எடுத்து வந்து இவனிடம் கொடுத்து விடு... இனி இவன் மறந்தும் உன் தங்கை வாழ்க்கையில் வர கூடாது..."

"டாட், வர்ஷூ எழுந்ததும்..." தங்கையைப் பற்றித் தெரிந்த நல்ல அண்ணனாய் யுகேன் சற்றுத் தயங்கினான்...

"நிச்சயம் வர்ஷூ எழுந்ததும் சாரே அவளிடம் சொல்லிவிட்டு தான் போவார்... அப்படித் தானே மிஸ்டர். சத்யமூர்த்தி...?" ஜீவா அழுத்தம் திருத்தமாய்க் கேட்க...

"உங்க மகள் கிட்ட எனக்கு என்ன பயம்...? அவள் முகத்துக்கு நேரே சொல்லிட்டு போகும் தைரியம் எனக்கு இருக்கு..." அடங்காது பதில் கூறினான் சத்யமூர்த்தி...

யுகேன் வீட்டிற்குக் கிளம்பி சென்றான்... பெண்கள் இருவரும் ஆண்களுக்கு இடையில் நடக்கும் யுத்தத்தினைப் பயத்துடன் வேடிக்கை பார்த்தனர்... வறட்டுக் கௌரவம் பார்க்கும் ஆண்கள் இருவரும் பெண்ணவளின் பூ மனதினை பற்றிக் கொஞ்சமும் அக்கறை கொள்ளவில்லை...

பத்மவர்ஷினி விழிப்பதற்காக இருவரும் காத்திருந்தனர்... சத்யமூர்த்தியோ விலகி போவதில் கூறியாய் இருந்தான்... ஜீவாவோ அவனை விலக்கி வைப்பதில் குறியாக இருந்தான்...

அடுத்த ஒரு மணி நேரத்தில் பத்மவர்ஷினி கண்விழித்தாள்... சுற்றிலும் பார்த்தவள் அங்குச் சத்யமூர்த்தியை காணாது மனம் சோர்ந்து போய்க் கண் மூடிய போது அவன் அறையினுள் நுழைந்தான்... கதவு

திறக்கும் சத்தத்தில் கண் திறந்து பார்த்தவள் அங்கு அவனைக் கண்டதும் முகம் மலர்ந்தாள்... அவளது மலர்ச்சியை அவன் கண்டு கொண்டாலும் அன்று அவளுடைய செயல் மற்றும் இப்போது அவளது தந்தை பேசிய வார்த்தைகள் எல்லாம் சேர்ந்து அவனை எதுவும் செய்ய விடாது கல்லென இறுகி நிற்க வைத்தது...

அவன் அங்கிருந்த சுவரோரமாய்க் கைகளைக் கட்டியபடி நின்று கொண்டு அவளையே பார்த்திருந்தான்... அவள் அருகில் செல்ல கூட முயற்சி செய்யவில்லை... ஆனால் அவன் மனதிற்குள் உணர்வுகளுக்கு இடையில் சிக்கி போராடி கொண்டிருந்தான்...

கட்டிலில் வெயிலில் வாடிய கொடி போல் களையிழந்து படுத்திருந்த பத்மவர்ஷினியை கண்டு அவனது சர்வாங்கமும் ஒடுங்கி போனது... எப்போதும் கம்பீரமும், அலட்சியமுமாய் அவளைப் பார்த்து பழகியவனுக்கு அவளது இந்த ஓய்ந்த தோற்றம் கண்டு இரத்த கண்ணீர் வந்தது...

தான் செய்த செயலை நினைத்து அவனுக்கு எப்போதும் ஒரு குற்றவுணர்வு உண்டு... ஆனால் இப்போது தனது செயலை மன்னிக்க முடியாத தவறாக எண்ணி அவன் மனம் வருந்தினான்... அவன் மட்டும் அவளது வாழ்க்கையில் வராது போயிருந்தால் இந்நேரம் அவளது வாழ்க்கை சந்தோசமாக அவளது வீட்டினருக்கு பிடித்த விதத்தில் அமைந்திருக்கும்...

'உனக்கும் எனக்கும் இடையில் இருக்கும் அந்தஸ்து கோட்டை என்னால் தாண்ட முடியாதுடி... நீயா தான் தாண்டி வரணும்... வருவியா பூனைக்குட்டி...? அப்படி வந்தா உன்னை என் கண்ணுக்குள்ள வச்சுச் சந்தோசமா பார்த்துக்கிறேன்... உன்னைக் கஷ்டப்பட விட மாட்டேன்டி... நீ என்னோட தேவதைடி...'

அவள் மீது கோபமிருந்த போதும் அவனது காதல் மனம் வேதனை தாங்காது புலம்பியது...

"வர்ஷூ, இப்பவாவது ஜூஸ் குடிம்மா..."

சுபிக்ஷா மகளை வற்புறுத்த... அவளோ தன்னவனை இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்... அவளது அழுத்தத்தில் அவனுக்குக் கோபம் வந்தது... தன்னை அவளது கணவன் என்று அவள் வாய்விட்டு சொல்லவும் மாட்டாள்... தன்னுடன் வரவும் மாட்டாள்... இப்படித் தன்னை உயிருடன் வதைப்பதை மட்டும் அவள் சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை என்று எண்ணியவனுக்கு ஆத்திரமே மிஞ்சியது...

"ஏய், இங்கே பாரு... இப்படிச் சாப்பிடாம இருக்கிறதால எதுவும் மாறப் போறதில்லை... மாறும்ன்னா சொல்லு நானும் சாப்பிடாம உண்ணாவிரதம் இருக்கேன்... ரெண்டு பேரும் சாப்பிடாம இருந்து செத்து போவோம்... அது தானே உனக்கு வேணும்..."

அவனது அத்தனை பேச்சிற்கும் அவளது ஒரே பதில் அழுத்தமான, இமைக்காத பார்வை ஒன்றே... அதைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது... நேரே அவள் அருகில் வந்தவன் சுபிக்ஷா கையிலிருந்த பழச்சாறை வாங்கி அவளது உதடுகள் அருகில் கொண்டு சென்று,

"குடிக்கல... நானே உன்னைக் கொன்னுருவேன்..." என்று மிரட்ட...

அவனது மிரட்டலுக்கு எல்லாம் பயப்படும் ஆளா அவள்...? அவன் கொடுத்த ஒரே காரணத்திற்காக அவள் அந்தப் பழச்சாறை மெல்ல அருந்தினாள்...

"நீயே பிடிக்கிறதுக்கு என்ன...? இதை வேற ஒரு ஆளு வந்து பிடிக்கணுமா...?" என்று அவன் அவளிடம் எரிந்து விழுந்தபடி அந்தக் கண்ணாடி குவளையை அவளது கையில் திணித்தான்...

எங்கே கோபத்தில் பத்மவர்ஷினி அதை வீசி எறிந்து விடுவாளோ என்று எல்லோரும் பயத்துடன் அவளைப் பார்த்தனர்... அவளோ புன்னகை மாறாது அவனது கையை

அழுத்தமாய்ப் பற்றியபடி குவளையை வாங்கினாள்... கை தொடுகை வழியே தனது காதலை அவனுக்குக் கடத்தினாளோ...! மின்சாரம் பாய்ந்தது போல் ஒரு நொடி திகைத்து விழித்தவன் சுதாரித்துக் கொண்டு தள்ளி சென்று நின்று கொண்டான்...

அவனது திகைப்பினை அவள் இனம் கண்டு கொண்டாள்... நிச்சயம் இந்த முறை அவன் தன்னைக் கைவிட்டு விட மாட்டான் என்று அவள் முழுவதுமாய் அவனை நம்பினாள்... அவனது மனதினை அறியாமல்...

அவள் பழச்சாறு அருந்தி முடிக்கும் வரை எல்லோரும் அமைதி காத்தனர்... அவள் அருந்தி முடிந்ததும் ஜீவா ஆரம்பித்தான்...

"வர்ஷூ, சத்யா உன் கிட்ட என்னமோ பேசணும்ன்னு சொல்றான்..."

'அப்படியா?' என்பது போல் அவள் சத்யமூர்த்தியை பார்த்தாள்...

அவளது ஒற்றைப் பார்வையில் அவனது உயிர் உருகி கரைந்தது... அவன் மட்டும் உருகி கரைந்து என்ன பயன்...? அவளும் அல்லவா முயற்சி செய்ய வேண்டும்... இனியும் அவன் அவளது வாழ்வில் நந்தி போன்று தடையாய் இருக்க விரும்பாது விலகிட நினைத்தான்... அதனால் ஆழ மூச்செடுத்துத் தன்னைச் சமன்படுத்திக் கொண்டவன் அவள் முன் வந்து நின்றான்... அவளோ அவனை இமைக்காது பார்வையால் பருகி கொண்டிருந்தாள்...

'பத்மா, வாயை திறந்து ஒரு வார்த்தை சொல்லுடி... இப்படியே எங்கூட உன்னை நான் கூட்டிட்டு போயிர்றேன்... இவங்க யாரும் வேண்டாம்... நீயும், நானும் சந்தோசமா இருப்போம்... வா பத்மா...' அவன் மனம் மறுக அவளை எதிர்பார்ப்புடன் பார்த்திருந்தான்...

'சத்யா, வாயை திறந்து ஒரு வார்த்தை சொல்லுடா... இப்படியே நான் உன் கூட வந்திர்றேன்... இவங்க யாரும்

எனக்கு வேண்டாம்... நீயும், நானும் சந்தோசமா இருப்போம்... என்னை இங்கிருந்து கூட்டிட்டு போ சத்யா...' அவளும் மனம் மறுக அவனைப் பார்த்திருந்தாள்...

இருவரின் மனவோலங்களையும் மற்றவர் அறியவில்லை... அவரவர் கருத்தில் அவரவர் பிடிவாதமாய் இருந்தனர்... பத்மவர்ஷினியிடம் இருந்து எந்தவித பதிலும் இல்லாததால் அவன் பெருமூச்சு விட்டபடி நிமிர்ந்தான்...

"பத்மா, நான் கட்டிய தாலியை கழட்டி கொடு..." என்று அவள் முன் தன் வலது உள்ளங்கையை விரித்தான்...

அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்... அவன் தன்னை அவனுடைய மனைவி என்று எல்லோர் முன்னும் சொல்ல வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள் தான்... ஆனால் இப்படி இல்லையே...

"நிலப்பத்திரத்தை அகலோட கல்யாண சீரா நீங்க எழுதி வாங்கிட்ட கோபத்தில் தான் நான் உன் கழுத்தில் தாலி கட்டியது... அதன் நோக்கமே அதே சீரா என்னோட நிலம் எனக்குத் திரும்ப வரணும்னு தான்... அந்த நோக்கம் இப்போ நிறைவேறிருச்சு..." என்றவன் ஜீவாவை பார்க்க...

ஜீவா மகனை பார்த்துத் தலையசைத்தான்... யுகேன் நிலப்பத்திரத்தை கொண்டு வந்து சத்யமூர்த்திக் கைகளில் வைத்தான்...

"என்னோடதை நான் வாங்கிட்டேன்... அதுக்குப் பிறகு இது உன் கழுத்தில் இருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை..." என்று கூறியவன் அவள் எதிர்பாராத நேரத்தில் அவளது கழுத்தில் கிடந்த தாலி சங்கிலியை கழற்றி விட்டான்...

அவள் அதிர்ச்சியில் பேச்சற்று விழி விரிய அவனைப் பார்த்திருந்தாள்... செயலிழந்தது போல் மூளை மரத்து போய் அவள் அமர்ந்திருந்தாள்...

சத்யமூர்த்திக்குமே அப்படியொரு வேதனையாக இருந்தது... ஏழை பாமரன் அவன் கட்டிய தாலிக்கு கோடீஸ்வர சீமாட்டி பத்மவர்ஷினி இந்தளவிற்கு

முக்கியத்துவம் கொடுப்பாள் என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லையே... அன்று அடுக்குமாடி குடியிருப்பில் அவளுள் மூழ்கிய போது தான் அவன் அந்தத் தாலியை பார்த்தது... தாலியை மதிப்பவள் அதைக் கட்டிய தன்னைக் கணவனாய் மதிக்கவில்லையே என்கிற கோபத்தில் தான் அன்று அவன் அப்படிப் பேசியது... இதோ இப்போதும் அந்தக் கோபம் அவனுக்குக் கனன்று கொண்டு தான் இருக்கிறது...

அதே போல் இப்போதும் அவர்களுக்கு மணமானதை பற்றி இருவரும் யாரிடமும் கூறவில்லை... அவன் கட்டிய தாலி தான் எல்லோருக்கும் கூறியிருக்கிறது...

"ச்சீ, நீயா இப்படிப் பண்ண...? உன்னைப் பத்தி நான் எவ்வளவு உயர்வா நினைச்சிருந்தேன்... கடைசியில் நிலத்துக்காக அண்ணியோட வாழ்க்கையில் விளையாடிட்டியே..." என்று அகல்யா அடக்க மாட்டாது அழுகையில் பொங்கினாள்...

"ஷ் அகல், டாட் பார்த்துக்குவாங்க... நீ பேசாம இரு..." யுகேன் மனைவியை அடக்கினான்... அவளும் மாமனாருக்கு பயந்து வாயை மூடி கொண்டாள்...

"மாமா, என்ன நடக்குது இங்கே...?" சுபிக்ஷா பதற்றத்துடன் ஜீவாவை பார்க்க...

"நீ இதில் தலையிடாதே சுபி... எனக்கு என் மகள் வாழ்க்கை முக்கியம்..." என்று உறுமிய கணவனைக் கண்டு சுபிக்ஷா பின்னடைந்தாள்...

இன்னமும் அதிர்ச்சி நீங்காது பத்மவர்ஷினி சத்யமூர்த்தியை பார்த்து கொண்டிருந்தாள்... அவளால் தனது விழிகளை நம்ப முடியவில்லை... அவனா இப்படிச் செய்தது என்று...?

சத்யமூர்த்தியோ அவளது பார்வையைச் சந்திக்காது தாலியுடன் கோர்த்திருந்த தங்க சங்கிலியை வெகுசிரத்தையுடன் கழற்றிக் கொண்டிருந்தான்...

மகளது உறைந்த நிலை கண்டு ஜீவா அவள் அருகில் வந்தான்... அவளது தலையை வாஞ்சையுடன் வருடி விட்டபடி, "இவன் இல்லைன்னா ஊரு உலகத்தில் மாப்பிள்ளைகளா இல்லை வர்ஷூ... நான் உனக்கு நல்ல ராஜா மாதிரி மாப்பிள்ளை பார்க்கிறேன்... அதுவும் நம்முடைய அந்தஸ்துக்கு ஏற்றார் போன்று..." என்று அவளைத் தேற்ற... அப்போதும் அவள் தனது பார்வையைத் தன்னவன் மீதிருந்து விலக்கி கொள்ளவில்லை...

சத்யமூர்த்தித் தங்க சங்கிலியை தனியே எடுத்து அவளது கையில் வைத்தவன், "உன் அப்பன் சொல்ற மாதிரி கல்யாணம் பண்ணிட்டு இனியாவது புத்தியோட பிழைக்கும் வழியைப் பாரு..." என்று அவளுக்கு அறிவுறுத்தி விட்டு அவன் அங்கிருந்து அகன்றான்...

அவனது விலகல் அளித்த தாங்கொண்ணா மனவழுத்தத்தில் அவள் மீண்டும் தனது கைகளில் ஏறிக் கொண்டிருந்த ட்ரிப்சை கழற்றி வீசியெறிந்தாள்...

"வர்ஷூ..." என்று ஜீவா அலற... மற்றவர்கள் அவளிடம் ஓடி சென்றனர்...

சத்தம் கேட்டு சத்யமூர்த்தி அறை வாயிலில் இருந்து திரும்பி பார்த்தவன் அவளது கைகளில் இருந்து வழிந்து இரத்தத்தைக் கண்டு மனம் பதறினாலும் அதை வெளியில் காட்டி கொள்ளாது, "இனிமே அம்மிணி இப்படிப் பண்ணினா தயவுசெஞ்சு என்னைக் கூப்பிடாதீங்க... டாக்டருக்கு ஃபோன் போட்டு கூப்பிடுங்க... அப்படியே நீங்க கூப்பிட்டாலும் நான் வர மாட்டேன்... எனக்கு ஆயிரத்தெட்டு சோலி இருக்கு..." என்க...

"டேய், இனியும் உன்னைக் கூப்பிடுவோம்ன்னு உனக்கு ஒரு எண்ணம் இருக்கா...?" என்றபடி ஜீவா கோபத்துடன் அவன் அருகில் வந்து அவனது சட்டையைப் பிடித்தான்...

தனது சட்டையைப் பிடித்திருந்த ஜீவாவின் கைகளை நிதானமாய் விலக்கியவன்,

"சட்டையைப் பிடிச்சீங்க மரியாதை கெட்டு போயிரும்..." என்றான் சீறலாய்...

"உன் தங்கச்சி என் வீட்டு மருமகள் என்பதை ஞாபகத்தில் வச்சிட்டு பேசு..." என்றான் ஜீவா எச்சரிக்கும் குரலில்...

"என் தங்கச்சி வாழ்க்கையை முடிவு பண்ண வேண்டியது எங்க வீட்டு மாப்பிள்ளை... நீங்களோ, நானோ இல்லை..." என்றான் சத்யமூர்த்திச் சற்றும் அகந்தை குறையாத குரலில்...

"யுகேன் உன் தங்கையை உதாசீனப்படுத்தும் இவனோட தங்கை உனக்கு வேண்டுமா...?" ஜீவா மகனிடம் கோபத்தில் எகிறினான்...

"டாட், இது சத்யாவுக்கும், வர்ஷூக்கும் இடையில் இருக்கும் பிரச்சினை... இதில் அகல் என்ன பண்ண முடியும்...? நான் அகலை தான் கல்யாணம் பண்ணி இருக்கேன்... சத்யாவை இல்லை... என் மனைவியை என்னால் விட்டு கொடுக்க முடியாது..." என்று யுகேன் தீர்மானமாய்ச் சொல்லிவிட்டான்...

அகல்யா கணவனைக் காதலோடு பார்த்தாள்... மனிதநேயமிக்க மனிதனாக அவன் பேசியது கண்டு அவளது காதல் கரையுடைத்துக் கொண்டு பொங்கியது...

அந்தக் கணம் பத்மவர்ஷினி வேதனை பொங்க சத்யமூர்த்தியை பார்த்து கொண்டிருந்தாள்... அண்ணியை விட்டு கொடுக்காது இருக்கும் அண்ணனை போன்று தன்னை ஏன் சத்யமூர்த்தி விட்டு கொடுக்காது போனான்? என்று அவளுக்கு வேதனையாக இருந்தது... அதே சமயம் தானாக அவனிடத்தில் இறங்கி செல்ல அவளது மனம் இடம் கொடுக்கவில்லை...

'இவன் இப்படி வெறுத்து மறுக்கும் அளவுக்கு என்னிடம் என்ன குறையிருக்கிறது...?' என்று அவளும் வீம்பு பிடித்தாள்...

சத்யமூர்த்தி இறுதியாய் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு அறையை விட்டு சென்றுவிட்டான்...

'முடிந்தது... எல்லாம் முடிந்தது...' அவளது மனம் மரணவோலமிட்டுச் சத்தமாய்க் கதறி அழுதது... ஆயாசத்துடன் விழிகளை மூடி கொண்டவளின் விழியோரம் இரு துளி விழிநீர் எட்டிப்பார்த்தது...

*****************

பாரமேறிய மனதுடன் ஊருக்கு வந்த சத்யமூர்த்தி அன்னையிடம் நிலப்பத்திரத்தை கொடுத்தான்... வடிவழகிக்கு ஏற்கெனவே அகல்யா அலைப்பேசியில் அழைத்து எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள்...

"அண்ணே பண்ணிய வேலைக்கு நீங்க உங்க மகளை மறந்துருங்க ஆத்தா..." என்று அவள் அலைப்பேசியில் கதறியழுதாள்...

மகள் கூறியதற்காக மகனிடம் கோபப்பட அந்தத் தாயுள்ளத்தால் முடியவில்லை... ஏனெனில் எதையும் நிதானத்துடன் அணுகும் மூத்த மகனிடம் அவருக்கு எப்போதுமே மதிப்பு, மரியாதை உண்டு...

"சத்தி, என்னய்யா இது...? அகல் புள்ள எல்லாத்தையும் சொல்லிச்சு..." என்றவரை வெறுமையாய் பார்த்தவன்,

"என்ன செய்ய ஆத்தா...? எல்லாம் விதிப்படி தான் நடக்கும்..." என்று அவன் முடித்துக் கொள்ள...

"சத்தி, உனக்கு அவளை ரொம்பப் பிடிக்குமாய்யா...?"

"எவளை...?" தனக்குள் யோசனையில் மூழ்கியிருந்தவன் கவனிக்காது கேட்டான்...

"அதான் அந்த ராங்கி அகலோட நாத்தனார்..." அன்னையின் வார்த்தையில் அவனையும் அறியாது அவனது உதடுகளில் புன்னகை நெளிந்தது... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அப்படி எல்லாம் இல்லை ஆத்தா... அவங்க பண்ணியதை அவங்களுக்குத் திருப்பிப் பண்ணினேன்... அவ்வளவு தான்... அப்போ தானே நம்ம வலி என்னன்னு அவங்களுக்குப் புரியும்..."

"அப்போ சரி விடுய்யா... உனக்கு என்ன ராஜா மாதிரியிருக்க... உனக்கேத்த ராணியைத் தேடி கண்டுபிடிக்க வேண்டியது இந்த ஆத்தாவோட பொறுப்பு..."

உண்மையான ராணி கிடைத்தும் கொண்டாட முடியாத தூரதிர்ஷ்டம் கொண்ட தன்னை நினைத்து அவன் விரக்தியாய் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

அன்றே அவன் தனது நிலத்தைக் காண சென்றான்... அந்த நிலம் கை மாறி போன பின்பு அவன் அந்தப் பக்கம் மறந்தும் வந்ததில்லை... இத்தனை நாட்களுக்குப் பிறகு இன்று தான் அவன் இங்கு வந்திருக்கிறான்... அவன் கவனித்துப் பார்த்ததை விட நன்றாகக் கவனித்துப் பார்த்திருந்தார்கள்...

பயிர்கள் எல்லாம் நன்கு செழித்து வளர்ந்து அறுவடைக்குத் தயாராக இருந்தது... அதைக் கண்டு அவனுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது... அவன் மண்ணில் மண்டியிட்டு அமர்ந்து அந்தப் பயிர்களைக் குழந்தையை அணைப்பது போல் பாசத்துடன் அணைத்துக் கொண்டான்... அவனது விழிகளில் இருந்து கண்ணீர் சொட்டியது... அவனது உயிரல்லவா இந்த நிலம்...!

அடுத்த வந்த நாட்களில் சத்யமூர்த்தி முழுவீச்சில் விவசாயத்தில் இறங்கிவிட்டான்... நிலத்தை மீட்டது அவனுக்குச் சந்தோசம் தான் என்ற போதும் அதற்காக அவன் கொடுத்த விலை சற்று அதிகம் தான்... அது அவனது உயிர் வரை சென்று வலித்தது... அந்தஸ்து பார்த்து விலகியிருக்கும் மனைவியை நினைத்து மனம் வேதனையில் துடித்தது... அந்த வேதனையை மறைக்க அவன் உழைப்பின் பின்னே சென்று ஒளிந்து கொண்டான்...

*******************

"வர்ஷூ..."

ஜீவா மகளை அழைத்தான்... பத்மவர்ஷினியோ அவனது அழைப்பை கேட்காது எங்கோ வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... அவள் மருத்துவமனையில் இருந்து வந்து இரு மாதங்கள் ஓடி போய்விட்டது... அன்றிலிருந்து அவள் உயிர் வாழ்வதற்காக மட்டுமே ஏதோ பெயருக்கு உணவு உண்கிறாள்... மத்தபடி பேச்சு, சிரிப்பு எதுவும் அவளிடத்தில் கிடையாது... அலுவலகம் கூடப் போவது கிடையாது... எந்நேரமும் அறையில் அடைந்து கிடந்து சாதாசர்வகாலமும் ஏதோ ஒரு யோசனையில் மூழ்கியிருப்பாள்... யார் அவளிடம் பேசினாலும் அவளிடம் இருந்து பதில் வரவே வராது... இன்றும் அப்படியே அமர்ந்திருந்தாள்...

"வர்ஷூ, அப்பா கூப்பிடுறாங்க பார்..." சுபிக்ஷா மகளை அதட்டினாள்... அவளைக் கையமர்த்தித் தடுத்த ஜீவா,

"வர்ஷூ இந்தக் கவரில் மாப்பிள்ளைங்க ஃபோட்டோஸ் இருக்கு... உனக்குப் பிடிச்சவனைச் சொல்லு... பேசி முடிக்கலாம்..." என்ற தந்தையை அவள் வெற்று பார்வை பார்த்தாள்...

"இனியும் நீ இப்படி இருப்பதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன் வர்ஷூ... கையை, காலை கட்டியாவது உன்னை மணமேடை ஏற்றாமல் நான் ஓய போவதில்லை..." என்று உறுதியாய் கூறிய தந்தையின் வார்த்தையில் அவளுள் நடுக்கம் வந்தது...

தந்தையைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்... அவர் தான் நினைத்ததைச் சாதிக்காது விட மாட்டார் என்று... அவளும் அப்படித் தான் இருந்தாள்... ஆனால் இப்போது பழைய நிமிர்வு குறைந்து தனக்குள் மறுகி அவள் ஒரு கோழை போல் மாறி போனாள்... இதற்கு எல்லாம் காரணம் சத்யமூர்த்தி என்றால் அது மிகையில்லை...

"வர்ஷூ..." அழுத்தத்துடன் ஒலித்த தந்தையின் வார்த்தையில் அவளது மேனி தூக்கிவாரி போட்டது...

"உன்னால் உன் அக்கா வீட்டில் கூடப் பிரச்சினை... நானும் உனக்குச் சப்போர்ட் பண்ணிட்டு அவங்களை எடுத்தெறிந்து பேசிட்டேன்... எல்லாம் எதற்கு...? நீ இப்படி ஒரு பரதேசி பயல் பின்னாடி போறதுக்கா...? நோ நெவர்... நீ நான் சொல்லும் பையனை தான் கல்யாணம் பண்ணிக்கணும்..."

தந்தையின் இந்த வார்த்தையில் அவளது மனம் தன்னவனுக்காகச் சிலிர்த்தெழுந்தது...

"டாட், தேவையில்லாம சத்யாவை பேசாதீங்க..."

"அவனைச் சொன்னதும் உனக்குக் கோபம் பொத்துக்கிட்டு வருதா...? அவன் தான் நீ வேண்டாம்ன்னு தாலியை வாங்கிட்டு போயிட்டானே... இன்னமும் நீ ஏன் அவனைப் பிடித்துத் தொங்கிட்டு இருக்க...?"

அந்தக் கணம் அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை... தன்னவனைத் தக்க வைத்துக் கொள்ள நினைத்தாளா? இல்லை அவனுடனான பந்தத்தைத் தக்க வைத்துக் கொள்ள நினைத்தாளா? ஏதோ ஒன்று தோன்ற அவள் அந்த வார்த்தைகளை உதிர்த்தாள்...

"அவன் கட்டிய தாலியை அவன் வாங்கிட்டுப் போயிருக்கலாம்... ஆனா அவன் என் வயித்தில் கொடுத்த குழந்தையை...?"

சதிராடும்...!!!

## உயிர் : 14

"உன்னை அருமை, பெருமையா வளர்த்தது எல்லாம் நீ இப்படிக் கெட்டு சீரழியறதுக்கா...?" என்று கேட்டுக் கொண்டே சுபிக்ஷா மகளது கன்னத்தில் மாறி மாறி அறைந்தாள்...

அத்தனை அறைகளையும் தாங்கி கொண்டு பத்மவர்ஷினி கல் போன்று அசையாது அமர்ந்திருந்தாள்... வலி தாங்காது அவளது விழிகள் இரண்டும் கலங்கவில்லை... மாறாக அவளது கன்னங்கள் இரண்டும் அடி வாங்கிக் கன்றி சிவந்து போயிற்று...

"சுபி அவளை விடு... விடுன்னு சொல்றேன்ல..." ஜீவா தான் இருவருக்கும் இடையில் புகுந்து மனைவி அடிப்பதை தடுத்தான்...

"அன்னைக்கு இவள் வந்த கோலத்தைப் பார்த்து அப்பவே எனக்குச் சந்தேகம் வந்துச்சு... கேட்டதுக்கு ஆக்சிடெண்ட்ன்னு பதில் சொன்னாள்... நானும் இவளோட வார்த்தையை உண்மைன்னு நம்பினேனே... ஆனா அந்த ஆக்சிடெண்ட்க்கு அர்த்தம் இப்போ தானே புரியுது..." என்று சுபிக்ஷா தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்...

"வர்ஷூ அம்மா சொல்றது உண்மையா...?" ஜீவாவின் குரலிலேயே அவன் ஓய்ந்து போனது தெரிந்தது...

தாய், தந்தையின் இருவரின் நிலை அவளது மனதினை வருத்திய போதும் தன்னவனைத் தன்னிடம் வரவழைக்க அவளுக்கு வேறுவழி தெரியவில்லை...

"எஸ் டாட்..." என்றாள் அழுத்தமான குரலில்...

"உன்னோட ஸ்டேட்டஸ் என்ன...? அவனோட ஸ்டேட்டஸ் என்ன...? போயும் போயும் உன் புத்தி ஏன் இப்படிப் போச்சு வர்ஷூ...?" அருவருப்புடன் தலையில் கை வைத்தான் ஜீவா...

"சத்யா கோபத்தில் என் கழுத்தில் தாலி கட்டியிருக்கலாம்... ஆனா நான் அவனை மனசார நேசிக்கிறேன் டாட்... அதனால் தான் அவன் கட்டிய தாலியை நான் தூக்கி எறியலை... இல்லைன்னா அதை எப்போவோ கழட்டி குப்பை தொட்டியில் போட்டுட்டு என் வேலையை நான் பார்த்து இருந்திருப்பேன்... இல்லை இந்நேரம் இன்னொரு கல்யாணம் பண்ணி செட்டிலாகி இருந்திருப்பேன்... ஆனா இது எதையும் என்னைச் செய்ய விடலை அவன் மீது நான் வச்ச காதல்..."

"அவனைப் பார்த்த கணத்தில் இருந்து வந்த காதல் என்னோடது... நீங்க சொன்ன மாதிரி அவன் எனக்குக் கொஞ்சமும் பொருத்தம் இல்லாதவனாய் இருக்கலாம்... ஆனா என் மனசுக்கு அவன் பொருத்தமானவனா போயிட்டானே... நான் என்ன பண்றது டாட்...? நீங்க எதைப் பார்த்து மாம்மை லவ் பண்ணினீங்க...? ஏதோ ஒண்ணு அவங்க கிட்ட பிடிச்சியிருந்தது இல்லையா...? அது போல் எனக்கும் சத்யா கிட்ட ஏதோ ஒண்ணு பிடிச்சியிருக்கு... அது என்னன்னு இப்போ வரைக்கும் எனக்குத் தெரியலை... ஆனா அவனைப் பிடிச்சியிருக்கு... உங்க எல்லோரையும் விட அதிகமாய் அவனை எனக்குப் பிடிச்சியிருக்கு..."

"நீங்க சொன்ன ஸ்டேட்டஸ் முதல்ல நம்ம கிட்ட இருக்கா டாட்...?" மகள் கேட்ட கேள்வியில் தகப்பன் அதிர்ந்து விழித்தான்...

"நாம மீனவ பரம்பரையைச் சேர்ந்தவங்க... என் கொள்ளு தாத்தா தான் கஷ்டப்பட்டு இந்தச் சொத்துக்களைச் சம்பாதிச்சவர்... அதுக்கு முன்னாடி நம்மளோட ஸ்டேட்டஸ் என்ன டாட்...? ஸ்ரீ பாட்டி அப்படி நினைச்சிருந்தா ஜெகன் தாத்தாவை கல்யாணம் பண்ணியிருக்க முடியுமா...? அவங்களைப் போல ஒரு காதல் வாழ்க்கையை யாராவது வாழ கூடுமா...? அப்படிப் பார்த்தால் சத்யா எந்த விதத்திலும் நம்ம ஸ்டேட்டசை விடக் குறைஞ்சவன் கிடையாது... இப்போ சொல்லுங்க டாட், நீங்க ஸ்டேட்டஸ்ன்னு எதைச் சொல்றீங்கன்னு...?"

மகளது கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது ஜீவாவின் தலை தாழ்ந்தது என்றால், சுபிக்ஷா பேச்சற்று வாயடைத்து போனாள்...

"உங்க பாசையில் ஸ்டேட்டஸ்ன்னா பணம் தான் அர்த்தம் இல்லையா டாட்...?" என்றவளது வார்த்தைகள் ஜீவாவின் மனதினை குத்தி கிழித்தது...

"டாட், நீங்க என்னைச் சத்யாவுக்குக் கல்யாணம் பண்ணி கொடுங்க... நிச்சயம் அவன் பணம் சம்பாதிப்பான்... அவனுக்காக இல்லைன்னாலும் எனக்காக அவன் சம்பாதிப்பான்... என்னை நல்லா வச்சுக்கணும் என்பதற்காகவாவது அவன் சம்பாதிப்பான்..."

"இது ஒண்ணும் சினிமா இல்லை வர்ஷூ... வாழ்க்கை..." மகளது வார்த்தைகளில் ஜீவா எரிந்து விழுந்தான்...

"நானும் சினிமான்னு சொல்லலையே... என்னுடைய வாழ்க்கைன்னு தான் சொல்றேன்... என்னோட வாழ்க்கை சத்யா... அதை நீங்க நல்லா புரிஞ்சுக்கோங்க..."

"இந்தக் கல்யாணத்தால் நீ ரொம்பக் கஷ்டப்பட வேண்டி வரும் வர்ஷூ..."

தந்தையின் வார்த்தையில் அத்தனை நேர கவலை மறந்து துள்ளி எழுந்த பத்மவர்ஷினி தந்தையை அணைத்துக் கொண்டு,

"தேங்க்ஸ் டாட்... நீங்க இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சதுக்கு..." என்று மனம் நெகிழ்ந்து கூறியவளின் விழிகளில் கண்ணீர் நிரம்பியது...

தனது வார்த்தைகளைக் கொண்டு தன்னை மடக்கிய மகளைக் கண்டு திகைத்து போயிருந்தவன் அவளது விழிகளில் அரும்பிய விழிநீர் கண்டு அதிர்ச்சி அடைந்தான்... அவன் அறிந்த மகள் இதுவரை அழுது பார்த்தது இல்லை... அப்படிப்பட்ட மகள் காதலனுக்காக அழுகிறாள் என்றால்...? உண்மையில் அந்தச் சத்யமூர்த்திக் கொடுத்து வைத்தவன் என்றே அவனுக்குத் தோன்றியது...

"கடைசியில் உன்னோட சாய்சை என்னையும் ஏற்க சொல்லிட்ட...? ம், வேறுவழி... உனக்காக அவனை ஏத்துக்கிறேன்... ஆனா அதுக்கான மரியாதையைக் காப்பாத்திக்கிறது அவன் கைகளில் தான் இருக்கு..."

"சத்யா ரொம்ப ரோசக்காரன்... அவன் மாறுவானான்னு எனக்குத் தெரியலை... ஆனா நீங்க மாறுவீங்கன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு...?" என்று மகள் கண்சிமிட்டி சிரிக்க...

"நானா...? நெவர்...?" என்று தகப்பன் முறுக்கி கொள்ள...

"அதையும் பார்க்கலாம்..." என்று புன்னகையுடன் கூறிய பத்மவர்ஷினி,

"நீங்க எனக்குப் பண்ண வேண்டியது ஒண்ணே ஒண்ணு தான் டாட்... ஊரறிய எனக்கும், சத்யாவுக்கும் கல்யாணம் பண்ணி வைக்கணும்..."

மகளின் புன்னகை முகத்திற்காக எதையும் செய்யத் தோன்றியது ஜீவாவிற்கு...

"கட்டாயம்..." என்றவன் அங்கிருந்து அகன்றான்...

"மாம்..." அவள் தாயை அழைக்க...

"பேசாதடி... நான் வளர்த்த வளர்ப்பு இப்படிக் கெட்டு போய் நிற்பதை நினைச்சால் பெத்த வயிறு பத்திக்கிட்டு எரியுது... என்னை மாதிரி ஒரு பெண்ணை வளர்த்து ஆளாக்கி பாரு... அதுவும் உன்னை மாதிரி பேசவிட்டு பாரு... அப்போ புரியும் என் மனசு படும்பாடு..." என்று கோபமும், அழுகையுமாய்க் கூறிவிட்டு அவள் சென்றுவிட்டாள்...

அன்னை கூறியதை கேட்டு பத்மவர்ஷினியின் முகம் வாடி போயிற்று... எல்லாம் ஒரு கணம் தான் பின் முகம் தெளிந்து போனாள்... அவளது மனதில் வைராக்கியம் பிறந்தது... எந்த நிலையிலும் தான் எடுத்த முடிவில் இருந்து பின்வாங்கிவிடக் கூடாது என்று...

அகல்யா மூலம் விசயம் தெரிந்து வடிவழகி மகனிடம் இது பற்றிக் கூற... அவனோ முடியவே முடியாது என்று மறுத்தான்...

"ஆத்தா, அதான் உறவு வேண்டாம்ன்னு வெட்டிட்டு வந்தாச்சே... பொறவு எதுக்குக் கல்யாணம் வேண்டி கெடக்கு..." அவன் எரிச்சலுடன் கேட்க...

"சத்தி, உனக்காகவும் வேண்டாம்... அந்தப் புள்ளைக்காகவும் வேண்டாம்... ஆனா நம்ம கொலவாரிசுக்காக ஒத்துக்கோய்யா..."

"வாரிசா...?" அவனது முகம் வேப்பங்காயை உண்டது போல் அஷ்டகோணலாய் மாறிப் போனது...

"ஆமாய்யா, அந்தப் புள்ளை வாயும் வயிறுமா இருக்காம்..."

அன்னை கூறிய அந்தக் கணம் பத்மவர்ஷினியின் மெலிந்த, தட்டையான வயிறு அவனது மனக்கண்ணில் நிழலாடியது... முயன்று அந்த நினைவை ஓரங்கட்டியவன்,

"ஆத்தா, அந்தம்மிணி பொய் சொல்லுது..."

"எந்தப் பொம்பளையும் இந்த விசயத்தில் பொய் சொல்லுவாளா...?"

'இந்தப் பூனைக்குட்டி பொய் சொல்லும் ஆத்தா... அவளைப் பத்தி உனக்குத் தெரியாது... ஜகஜ்ஜால கில்லாடி...' மனதிற்குள் அவன் கூறிக் கொண்டான்...

"சத்தி, ஆத்தா நா முடிவு பண்ணிட்டேன்... அந்தப் பத்மா புள்ளை தான் இந்த வீட்டு மருமகள்..." என்ற தாயை கையாலாகாதவனாய் பார்த்தவன்,

"கொஞ்சமாவது யோசிச்சு பாரு ஆத்தா... அந்தப் புள்ளை எல்லாம் நம்ம வீட்டில் வந்து குடித்தனம் பண்ணுமா...?"

"பண்ணாது தான்..." என்று உடனே ஒத்து கொண்டவர்,

"ஆனா நீ அவுக வீட்டுக்கு போகலாம்ல..." என்று முடித்துக் கொள்ள... அதற்கு மேல் ஒன்றும் பேசாது அவன் வாயை மூடி கொண்டான்...

"சத்தி, புருசன், பொண்டாட்டி சண்டை எல்லாம் சின்னப் புள்ளைங்க சண்டை மாதிரி... சும்மா பழசையே நினைச்சிட்டு இருக்காம ஆகவேண்டிய காரியத்தைப் பாருய்யா... அறுவடை பண்ணி வந்த பணத்தை வச்சு கல்யாண வேலைகளைக் கவனிய்யா..." என்ற அன்னையிடம் ஒன்றும் பேசாது அமைதி காத்தவன் அன்றிரவே பத்மவர்ஷினிக்கு அலைப்பேசியில் அழைத்தான்...

மறுபக்கம் அவள் எடுத்ததுமே அவன் எகிறினான்...

"உன் மனசுல என்னடி நினைச்சிட்டு இருக்க...? உன் வயித்தில் என் குழந்தை வளருதா...? இது பொய்யின்னு நான் நிரூபிச்சு காட்டட்டுமா...?" என்று அவன் சவால் விட...

"எப்படிப் பொய்ன்னு நிரூபிப்ப சத்யா...? நீ எத்தனை டாக்டர் கிட்ட போனாலும் அத்தனை பேரையும் நான் விலை கொடுத்து வாங்கிருவேன்... அப்புறம் உன்னால் என்ன பண்ண முடியும்...? அதே சமயம் என் வயித்தில் ஒரு குழந்தை இல்லை மூணு குழந்தை வளருதுன்னு பொய் ரிப்போர்ட் வாங்க கூட என்னால் முடியும்... தேவையில்லாம என் கிட்ட மோதாதே சத்யா..." தொழிலதிபராய் காதலனிடம் நிமிர்ந்து நின்றாள் பத்மவர்ஷினி...

"இது தான்டி நீ... இந்தத் திமிர் தான் உன்னை அழிக்குது..." என்று அவன் கோபமாய்ச் சீறினான்...

"இந்தத் திமிர் கூட இல்லைன்னா உன்னை மாதிரியான ஆம்பிளைங்க என்னை மாதிரி பொம்பளைங்களைக் காலில் போட்டு நசுக்கிட மாட்டீங்க... அதனால் ஒவ்வொரு பெண்ணுக்கும் இந்தத் திமிர் அவசியம் தேவை..." என்றாள் நிமிர்வாக...

அதற்கு ஒன்றும் பேசாது அமைதி காத்தவனைக் கண்டு அவள் கோபம் கொண்டு பாம்பாய் சீறினாள்...

"உன் இஷ்டத்துக்கு என் கழுத்தில் தாலி கட்டுவ... உன் இஷ்டத்துக்கு அதைக் கழட்டிட்டு போவ... நான் என்ன மனுசியா...? இல்லை பொம்மையா...? நீ உன் இஷ்டத்துக்கு ஆட்டுவிக்கிறதுக்கு... தாலியை கழட்டிட்டு போன நீயே என் கழுத்தில் தாலி கட்டணும் சத்யா... அதுவும் ஊரறிய... அது தான் நான் உனக்குக் கொடுக்கப் போகும் தண்டனை..."

"அதுக்காக நீ என்னை இந்தளவுக்குக் கேவலப்படுத்துவியா...? இதுக்கு நீ என்னை உன் புருசன்னு வாய் திறந்து சொல்றதுக்கு என்ன...?"

"வாய் திறந்து பெருமையா சொல்ற மாதிரி நீ என்ன ஊரறியவா என் கழுத்தில் தாலி கட்டின...? நீ கட்டிய திருட்டு தாலியை மதிச்சு இத்தனை நாளா நான் அதைத் திருட்டுத்தனமா என் கழுத்தில் போட்டிருந்ததே அதிசயம்... இதில் உன்னைப் புருசன்னு வேற சொல்லணுமாக்கும்... இதையே நான் திருப்பிக் கேட்டால்...? நீ என்னை உன் பொண்டாட்டின்னு சொல்ல வேண்டியது தானே... தாலி கட்டிய கையோடு உன் வீட்டுக்கு கூட்டிட்டு போய் என்னோட வாழ்ந்திருக்க வேண்டியது தானே..."

"அது வந்து... நீ..."

"நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்... கல்யாணத்துக்குச் சம்மதம் சொன்னால் போதும்..."

அதற்கு அவன் மௌனம் சாதிக்க...

"புதுசா கல்யாணம் பண்ணிக்கிற மாதிரி ஏன் வெட்கப்படுற சத்யா...? நான் உனக்குப் பழைய பொண்டாட்டி தான்... நீ எனக்குப் பழைய புருசன் தான்..." என்று கூறி அவள் லேசாகச் சிரிக்க...

அது அவனுக்குக் கேலி சிரிப்பாகத் தோன்றியது போலும்...

"கல்யாணத்துக்குப் பிறகு உனக்கு இருக்குடி... இந்தச் சத்யா யாருன்னு காட்டுறேன்..." என்று அவன் கறுவ...

அவனது வார்த்தையில் அவளது இதழ்களில் புன்னகை விரிந்தது...

"கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டதுக்குத் தேங்க்ஸ் சத்யா..."

"ஏய் நான் ஒத்துக்கலை..." என்று அவன் கத்தி கொண்டு இருக்கும் போதே அவள் அலைப்பேசியை வைத்து விட்டாள்...

அதன் பின்னர்ச் சத்யமூர்த்திக் கூறிய எந்த வார்த்தையும் திருமணத்தை நிறுத்த போதுமானதாய் இல்லை... அதனால் அவன் இந்தத் திருமணத்திற்கு ஒரே ஒரு கட்டளை மட்டும் விதித்திருந்தான்... அது அவர்களது திருமணம் அவனது கிராமத்தில் அவர்களது குலதெய்வ கோவிலில் வைத்து நடைபெற வேண்டும் என்று...

ஜீவா அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க... பத்மவர்ஷினியோ அதற்குச் சம்மதித்து விட்டாள்... வாழ்க்கை தொலைந்த இடத்தில் அவன் அதைத் தேடுவதை அவள் இனம் கண்டு கொண்டாள்...

இருவருக்கும் மனம் நிறையக் காதல் இருந்தும் அவரவர் நிலையில் பிடிவாதமாய் நின்று சண்டை கோழியாய் சிலிர்த்து கொண்டனர்... அவளாக வந்திருக்க வேண்டும் என்று அவனும், அவனாக வந்திருக்க வேண்டும் என்று அவளும் தங்களுக்கு இடையில் மௌனமாய்ப் பனிப்போர் புரிந்தனர்...

சத்யமூர்த்தி நினைத்த மாதிரி அவனது குலதெய்வ கோவிலில் வைத்து அவர்களது திருமணம் நடந்தது... பத்மவர்ஷினி தரப்பில் இருந்து அவளது குடும்பத்தினரை தவிர வேறு யாரும் வரவில்லை... ஆனால் சத்யமூர்த்தித் தரப்பில் இருந்து அந்த ஊரே திரண்டு வந்திருந்தது... முக்கியமாக ராஜலிங்கம், விசாலம், சந்திரமதி மூவரும் வந்திருந்தனர்... அவனது தந்தை இராமசாமி பெயரளவில்

தந்தையாக நின்றிருந்தார்... அன்றும் அவரது போதை தெளியவில்லை... அவனது மூத்த தங்கை கணவன், மகனுடன் வந்திருந்தாள்... அவனது தோழன் நடராஜனும் வந்திருந்தான்... பத்மவர்ஷினியை கண்டு பயந்து போய் நடராஜன் தன் நண்பன் அருகில் கூட செல்லவில்லை...

மணமக்கள் இருவரும் ஒருவரது முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளக் கூட விரும்பவில்லை... திருமணத்திற்கு வருகை தந்தவர்களைப் புன்னகைத்து வரவேற்று உபசரிப்பது போல் பாசாங்கு செய்தவர்கள் கவனமாய்த் தங்களது இணையைத் தவிர்த்தனர்...

எத்தனை நேரம் தவிர்க்க முடியும்...? தாலி கட்டும் போது ஒருவரை ஒருவர் பார்த்து தானே ஆகவேண்டும்... கையில் அதே தாலி கோர்த்திருந்த மஞ்சள் கயிறை பிடித்தபடி சத்யமூர்த்திப் பத்மவர்ஷினியை பார்த்தான்... அவள் தான் அந்தத் தாலியை மாற்ற கூடாது என்று பிடிவாதம் பிடித்திருந்தாள்... அன்றைய ஏழ்மை நிலையில் அவன் அணிவித்தது கால் பவுன் தாலி... இன்று அறுவடை செய்து வந்த பணத்தில் ஒரு பவுனுக்குத் தாலி எடுக்க அவன் முன்வந்த போது அவள் மறுத்துவிட்டாள்...

'எப்பவும் என்னை எதிர்த்து நிக்கிறதே இந்தம்மிணிக்குப் பொழைப்பா போச்சு...' மனதில் முணுமுணுத்துக் கொள்ளத்தான் அவனால் முடிந்தது...

பட்டுவேட்டி, சட்டையில் அழகாய் கம்பீரமாய் இருந்தவனை அவளது விழிகள் காதலோடு உள்வாங்கிக் கொண்டது... அவள் மாற்றியமைத்த சிகையலங்காரத்தை அவன் மாற்றவில்லை... அதுவே அவனுக்குத் தனியழகினை கொடுத்தது...

'என் சத்யாவை விடவா அற்புதமான மாப்பிள்ளையைத் தேடி கண்டுபிடித்துக் கொடுக்கப் போறீங்க டாட்...?' அவள் மனதிற்குள் தகப்பனிடம் தன்னவனுக்காகச் செல்லமாய்ச் சண்டையிட்டு கொண்டாள்...

'கருவாயன் கொஞ்சம் கறுப்பு தான்... ஆனாலும் இந்தக் கருப்பட்டி தானே எனக்கு அதிகம் ருசிக்கிறது...' என்றவளின் பார்வையில் மையல் நிரம்பி வழிந்தது...

இத்தனை நேரம் முறுக்கி கொண்டிருந்த சத்யமூர்த்தி அவளது பார்வையில் சற்று தடுமாறி தான் போனான்... அப்போது தான் அவளது அழகு அவனது கவனத்தில் பதிந்தது...

அரக்கு நிற பட்டுப்புடவை அவளது நிறத்தினை எடுப்பாகக் காட்டியது... அதுவும் மணப்பெண் அலங்காரத்தில் அவனது தேவதை பெண் நிஜமாகவே தேவதையாக மாறியிருந்தாள்... சும்மாவே அவளைக் கண்டு மதிமயங்கி இருப்பவன் இன்று முற்றிலும் தலை கிறுகிறுத்து போய் நின்றிருந்தான்...

"எவ்வளவு நேரம் தான் பொண்ணைப் பார்த்துட்டு இருப்ப சத்தி... சட்டுபுட்டுன்னு தாலியை கட்டுப்பா..." கோவில் பூசாரி அவனிடம் கூற...

அவன் மயக்கத்தில் இருந்து விடுபட்டவனாய் மங்கலநாணை அவளது கழுத்தில் பூட்டினான்... முதன்முறை போன்று வன்மம் இல்லாது இந்த முறை அவன் தன்னவள் மீது காதல் கொண்டு தாலி கட்டினான்... அந்தக் கணம் அவனது கோபம் கூடப் பின்னுக்குப் போய்விட்டது... அவளுக்குமே அப்படித் தான் இருந்தது... முதன்முறை போன்று ஆங்காரத்தில் தையாதக்கா என்று குதிக்காமல் இப்போது அவள் காதலோடு அவன் முன் பணிவாய் தலைகுனிந்து தாலியை வாங்கிக் கொண்டாள்... அவளது மனதிலும் கோபம் போய்க் காதலே நிறைந்திருந்தது...

எல்லாம் ஒரு நொடி தான் தனது கையை விலக்கி விட்டு அவளைப் பார்த்தவனின் முகத்தில் மீண்டும் கோபம் வந்து ஒட்டி கொண்டது...

"பிடிவாதம், பிடிவாதம்..." என்று அவளுக்கு மட்டுமே கேட்கும் குரலில் அவன் வார்த்தைகளைக் கடித்துத்

துப்பினான்...

"பிடிவாதத்தால் நன்மை விளையுதுன்னா பிடிவாதமும் நல்லது தான்..." என்று அவளும் பதிலுக்குத் திருப்பிக் கொடுத்தாள்...

"பொய் சொல்லி கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்குப் பேரு நன்மையா...? யாருக்கு நன்மை...?"

"அதை நீ சொல்ல கூடாதுடா... கட்டினவளை அம்போன்னு விட்டுட்டு ஓடி போனவன் தானே நீ..." அவள் பதிலுக்கு எகிறினாள்...

அவளாக வர வேண்டும் என்று அவனும், அவனாக வர வேண்டும் என்று அவளும் எதிர்பார்த்ததால் இப்போது அவர்கள் செய்த நல்லது கண்ணில் படவில்லை... தன்னை அடையத்தான் அவள் பொய் கூறியிருக்கிறாள் என்று அவனும், தனக்காகத் தான் அவனும் அந்தப் பொய்யை மறுக்காது ஏற்றுக் கொண்டு தனது கழுத்தில் தாலி கட்டியிருக்கிறான் என்று அவளும் கடைசிவரை இதை உணரவே இல்லை...

ஆகமொத்தத்தில் தங்களது இணையைப் பிரிய முடியாது கோபம் என்கிற பொய்மூடி போட்டுக் கொண்டு இரண்டு பேரும் மகிழ்ச்சியோடு இணைந்து கொண்டனர் திருமணப் பந்தத்தில்...

எல்லோரிடமும் ஆசிர்வாதம் வாங்க சொன்ன போது சத்யமூர்த்திப் பெரியவர்கள் நால்வரிடமும் ஆசிர்வாதம் வாங்கியவன் ஜீவாவின் காலில் விழ மறுத்துவிட்டான்... ஏனெனில் அவன் பேசிய பேச்சு அப்படி... ஜீவா மனதில் கோபம் எழுந்த போதும் மகளுக்காக அதைப் பெரிதுப்படுத்தாது விட்டு விட்டான்...

"மனசுக்கு பிடிச்ச வாழ்க்கையைத் தொலைச்சிராம சந்தோசமா வாழு வர்ஷூ... இன்னமும் உன் வாழ்க்கையை நினைச்சு எனக்கு மனசுக்குள் பயம் இருந்துக்கிட்டே தான்

இருக்கு..." ஜீவா சத்யமூர்த்தியை பார்த்துக் கொண்டே இந்த வார்த்தைகளைக் கூறினான்...

அதற்குப் பத்மவர்ஷினி பதில் சொல்லும் முன் சத்யமூர்த்தி அவளைத் தோளுடன் இறுக்கி அணைத்துக் கொண்டு,

"அரை வயித்துக் கஞ்சி ஊத்தினாலும் என் பொஞ்சாதியை உங்க கிட்ட பிழைக்க அனுப்ப மாட்டேன்..." என்றான் கோபமாய்...

அதைக் கேட்டு ஜீவாவின் முகத்தில் மர்ம புன்னகை எழுந்தது... அவனுக்கு வேண்டியது இது தானே...

'நீ இப்போ தான்டா ஹீரோ... நான் முதலில் இருந்தே ஹீரோடா...' என்று தனக்குள் சிரித்துக் கொண்டவன் வெளியில் ஒன்றும் தெரியாதபடி அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டான்...

பத்மவர்ஷினி கணவனைப் போன்று அவனது குடும்பத்தைப் புறக்கணிக்கவில்லை... அவனது அன்னையின் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினாள்...

"நல்லாயிரு தாயி... சீக்கிரமே என்னோட பேர பிள்ளையைப் பெத்து கொடு..." என்று அவர் ஆசிர்வாதம் செய்தார்...

"புள்ளை தானே... இன்னும் ஏழு மாசத்தில் வெளிவந்திரும்..." என்று சத்யமூர்த்தி மனைவியைப் பார்த்து நக்கலாய் கூறியவன்,

"மாமோய், உன் பொண்ணை ஐஞ்சு மாசம் கழிச்சு வந்து கூட்டிட்டு போ..." என்று கிண்டலாய் ஜீவாவிடம் கூறினான்...

அதைக் கேட்டு பத்மவர்ஷினி மட்டுமல்லாது அனைவரும் திகைத்து போயினர்...

"என்ன எல்லோரும் திகைச்சுப் போய்ப் பார்க்கிறீங்க... இன்னும் ஐஞ்சு மாசத்தில் வளைகாப்பு நடத்தி உங்க பொண்ணைப் பிரசவத்துக்கு உங்க வீட்டுக்கு கூட்டிட்டு

போங்கன்னு சொன்னேன்... அப்படித் தானே பத்மா...?" என்று அவன் கேலி குரலில் மனைவியிடம் ராகம் பாட...

அதைக் கேட்டு பல்லை கடித்தவள், "ரொம்பப் பேசாதே சத்யா... இன்னும் ஐஞ்சு மாசத்தில் இல்லைன்னாலும் ஏழாவது மாசம் நிஜமா வளைகாப்பு பண்ண நான் ஏற்பாடு பண்ணிருவேன்... ஜாக்கிரதை..." என்று அவள் கோபத்துடன் அடிக்குரலில் முணுமுணுக்க...

அதைக் கேட்டு இப்போது திகைத்து நிற்பது அவனது முறையாயிற்று...

"எல்லாக் காலக்கொடுமை... நாட்டில் வயசு பையன்ங்களுக்குப் பாதுகாப்பே இல்லை..." எங்கோ பார்த்துக் கொண்டு தன்னிடம் முணுமுணுத்த கணவனை வெட்டவா? குத்தவா? என்பது போல் கொலைவெறியுடன் பார்த்து வைத்தாள் பத்மவர்ஷினி...

மதிய உணவுக்குப் பின் எல்லோரும் சத்யமூர்த்தி வீட்டிற்குக் கிளம்பினர்... அப்போது சத்யமூர்த்திக் கைக்கூப்பியபடி அங்கு வந்தவன்,

"எல்லோரும் நான் இப்படிச் சொல்றதுக்கு மன்னிக்கணும்... நீங்க எல்லாம் வசதியானவங்க... நீங்க வந்து தங்குற அளவுக்கு என் வீடு வசதி பத்தாது... அதனால..." என்று நிறுத்திவிட்டு அவன் ஜீவாவின் முகத்தை அழுத்தமாய்ப் பார்த்தான்...

மருமகனது வார்த்தையில் ஜீவாவின் முகம் அவமானத்தில் கறுத்துப் போனது...

"வர்ஷூ நீ சொல்லும்மா... நாங்க உன் வீட்டுக்கு வரணுமா...? வேண்டாமா...?"

"டாட்..." கணவனுக்கும், தகப்பனுக்கும் இடையில் அவள் தான் அதிகம் தவித்துப் போனாள்...

"என் பேச்சை மீறி அவள் உங்களை வர சொல்லிருவாளா என்ன...?" என்று சத்யமூர்த்தி மனைவியைத் திமிராய்

பார்த்து வைத்தான்...

எல்லோர் முன்னும் அதுவும் திருமணமான அன்றே அவனை எதிர்த்து பேச வழி தெரியாது அவள் தவித்துப் போனாள்... ஜெகன் தான் பேத்தியை காப்பாத்தினான்...

"ஜீவா... நமக்கு நம்ம பொண்ணோட சந்தோசம் தான் முக்கியம்... இனி அவளுக்கு நம்மளை விட அவள் புருசன் தான் முக்கியம்... அவனது வார்த்தைகள் தான் அவளுக்கு வேதவாக்கு... நீ கிளம்பு... நாம ஊருக்கு போகலாம்..." என்று கூற...

எல்லோரும் ஊருக்கு கிளம்பினர்... அண்ணனின் வார்த்தையால் அகல்யாவும் பிறந்த வீட்டிற்குச் செல்ல முடியாது ஊருக்கு கிளம்பினாள்...

அந்நேரம் சத்யமூர்த்தி மனைவியிடம் ஒரு கவரை நீட்டி, "இதிலிருக்கிற புடவையை உடுத்திட்டு, நான் கட்டிய தாலியை மட்டும் விட்டுட்டு மத்த நகைங்க எல்லாத்தையும் கழட்டி உங்கப்பாரு கிட்ட கொடுத்துரு..." என்று கூறினான்...

இதைக் கூறும் போது அவனது முகம் கோபத்தில் இறுகி போயிருந்தது... எப்போதும் அவளிடம் விளையாட்டாய் பேசும் சத்யமூர்த்தி இவனில்லை... அவள் பயத்தில் தண்டுவடம் சில்லிட அவன் சொன்னதற்கு ஒப்புதலாய் தலையாட்டினாள்... அங்கேயே மறைவிடத்தில் உடை மாற்றிக் கொண்டவள் தனது பட்டுப்புடவை, நகைகளைக் கொண்டு வந்து அன்னையிடம் கொடுத்தாள்...

என்ன கோபம் இருந்த போதும் மகளின் இந்த எளிய தோற்றம் கண்டு சுபிக்ஷாவிற்கு அழுகை வந்தது...

"வர்ஷூ..." என்று அவளைக் கட்டி கொண்டு அழுதாள்...

"மாம், எதுக்கு அழுறீங்க...? சத்யா என்னை என்ன அம்போன்னா விட்டு விட்டான்... உடுத்துறதுக்குப் புடவை வாங்கிக் கொடுக்கலையா...? இதோ இங்கே பாருங்க கண்ணாடி வளையல், ஜிமிக்கி, செயின் எல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறான்... இதுல நான் அழகாயிருக்கேனா...?"

என்று புன்னகையுடன் கேட்ட மகளைக் கண்டு சுபிக்ஷாவின் அழுகை நின்றது...

"அழகா இருக்கே வர்ஷூ... நீ எப்படியிருந்தாலும் அழகு தான்..." என்று சுபிக்ஷா புன்னகைத்தாள்...

"இன்னைக்குக் கண்ணாடி வளையல் வாங்கிக் கொடுத்த உங்க மருமகன் கூடிய சீக்கிரம் வைர வளையல் வாங்கிக் கொடுப்பான் பாருங்க..."

மனைவியின் வார்த்தையில் நிம்மதியுடன் அவளைப் பார்த்திருந்த சத்யமூர்த்தி, "நினைப்பு தான் பொழைப்பை கெடுக்குமாம்... என் கூட வந்து வாழ்ந்து பாரு... அப்போ தான் கஷ்ட நஷ்டம் தெரியும்..." என்று கேலி செய்தாலும் அவனது மனதில் அவளை நன்றாக வைத்திருக்க வேண்டும் என்கிற வெறி எழுந்தது என்னவோ உண்மை...

பத்மவர்ஷினி குடும்பத்தினர் கிளம்பி சென்றுவிட... சத்யமூர்த்தித் தனது குடும்பத்தினருடன் புது மனைவியோடு தனது வீட்டிற்குச் சென்றான்... அபிராமி ஆரத்தி கரைத்து வரவேற்க புதுமணத் தம்பதியினர் வீட்டிற்குள் வலதுகாலை எடுத்து வைத்து நுழைந்தனர்...

அவனது வீடு நடுவில் முற்றம் வைத்த ஓட்டு வீடு... ஒரே ஒரு அறை... அதன் மறுபுறம் சமையலறை... அவ்வளவு தான் அந்த வீடு... அந்த வீட்டை அதிசயத்துடன் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் பத்மவர்ஷினி...

"உங்க வீடு மாதிரி மாட மாளிகை எல்லாம் கிடையாது..." என்று கேலி குரலில் கூறிய கணவனைக் கண்டு அவள் புன்னகைத்தாள்...

"நான் ஒண்ணும் சொல்லலையே... எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்றவளை ஒரு பார்வை பார்த்தவன்,

"வேறுவழி..." என்றவனின் உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

அவளோ அவனது இகழ்ச்சியைப் புறம்தள்ளிவிட்டு அங்கிருந்த சிறிய விளக்கினை ஏற்றி வைத்தாள்... புதுமணத் தம்பதியினருக்கு பாலும், பழமும் கொடுத்தார்கள்... ஏற்கெனவே கீழே உட்காருவதற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவள் கணவன் செய்த அட்டூழியத்தில் பெரும்கோபம் கொண்டாள்...

"எதுக்குடா இப்படி எச்சில் பண்ணி சாப்பிடற...?" அவன் வாயில் வைத்து உதப்பிக் கொண்டிருந்த வாழைப்பழத்தை பார்த்து அவள் அப்படிக் கேட்டாள்...

"புருசன் எச்சிலை பொண்டாட்டி சாப்பிடணும்ங்கறது நம் வழக்கம்..."

அதற்கு முறைத்தவளை கண்டு கண்சிமிட்டி சிரித்தவன், "ஆமா, நீ கல்யாணம்ன்னா என்னன்னு நினைச்ச...?" என்று நமட்டு சிரிப்புடன் கேட்க...

அவனது பேச்சில் அவளது முகம் வெட்கத்தில் சிவந்துவிட்டது...

"ச்சீ, போடா..." என்றவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள... அவனோ அவளது முகத்தைப் பற்றித் தன்புறம் திருப்பியவன் அவளது வாயில் எச்சில் பழத்தை வைத்துத் திணித்தான்...

"டேய் என்ன பண்ற...?" என்று அலறியவளின் குரலில் அங்கு நிசப்தம் நிலவியது...

"கல்யாணமான அன்னைக்கே புருசனை டா போட்டு பேசுறாளே... விளங்கிரும்..." அங்கிருந்த கிழம் ஒன்று நொடித்துக் கொள்ள...

சத்யமூர்த்திக்கோ கோபம் தலைக்கேறியது...

"உன் பட்டணத்துப் பகட்டை இங்கே காட்டாதே பத்மா... இங்கே புருசனை ஒழுங்கு மரியாதையா கூப்பிட்டு பழகணும்..." என்று அவன் கோபத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்ப... அவனது கோபத்தில் அவளது வாயில்

இருந்த வாழைப்பழம் நழுவி தொண்டைக்குள் இறங்கியது...

இரவு அங்கே தங்க முடியாது ஆதலால் அபிராமி அன்றே ஊருக்கு கிளம்பிவிட்டாள்... அத்தனை திருமணச் செலவு இருந்த போதும் தங்கை கையில் பணம் கொடுத்தனுப்ப மறக்கவில்லை சத்யமூர்த்தி...

மாலை மயங்கி இரவும் கவிழ்ந்தது... கிராமத்து மக்களின் நாகரீக பூச்சு இல்லாத அப்பட்டமான கேலி பேச்சில் பத்மவர்ஷினி மனதில் இனம் புரியாத பயம் வந்து ஆக்கிரமித்துக் கொண்டது... கணவன் நன்கு பரிச்சயமானவன் தான்... ஆனால் நேரத்திற்கு நேரம் மாறும் அவனது குணம் கண்டு அவளது மனம் பயத்தில் படபடத்தது... நல்லவிதமாக நடந்து கொள்வானோ...? இல்லை வார்த்தைகளால் குதறி எடுப்பானோ என்று...

"எல்லாரும் போங்கடி... சின்னப் புள்ளைய பயமுறுத்திட்டு..." என்றபடி அங்கு வந்தார் வடிவழகி... தனது கையிலிருந்த ஜாதிப்பூவை அவளது தலையில் வைத்து விட்டவர்,

"இன்னும் செத்த நேரத்தில் சத்தி வந்திருவான்... வெந்நீ விளாவி வச்சியிருக்கேன்... குளிக்கச் சொல்லு... நானும், சரவணனும் வெளியில் தங்கிக்குவோம்..." என்றவர் நிறுத்தி விட்டு அவளைப் பார்த்தார்...

அவர் கூற வந்த விசயம் அவளுக்கு மெதுவே புரிய ஆரம்பித்தது... அவள் நாணத்தில் முகம் சிவக்க தலையைக் குனிந்து கொண்டாள்... வாஞ்சையுடன் அவளது முகத்தை நிமிர்த்தியவர்,

"சத்தி முரடனா இருந்தாலும் ரொம்ப நல்லவன்... இதுவரை அவன் எந்தச் சொகத்தையும் அனுபவிச்சது இல்லை... இனி நீ தான் அவனைச் சந்தோசமா வச்சிக்கணும்..."

அதற்கு அவள் மௌனமாகத் தலையாட்டினாள்...

"அடப்பார்றா, பட்டாசா வெடிக்கிற என் மருமவ பொண்ணுக்கு வார்த்தை பஞ்சமாகி போச்சு..." என்று அவர் மோவாயில் கை வைத்து அதிசயப்பட்டார்...

உடனே அவள் அவரது காலில் விழுந்து வணங்கினாள்... அதில் மொத்தமாய் வடிவழகி அவளிடம் வீழ்ந்து போனார்...

"நல்லாயிரும்மா... அப்படியே எம் மவனையும் சந்தோசமா வச்சிரு..." என்று ஆசிர்வதித்தபடி அவர் சென்றுவிட்டார்...

இரவு சத்யமூர்த்தி வீட்டிற்கு வரும் போது வீடு அமைதியாக இருந்தது...

"ஆத்தா, சரவணா எல்லாம் எங்கே...?"

"அவங்க வெளியில் தங்குறாங்களாம்..."

அதை அவள் சொல்லி முடிக்கும் முன் பெரிதும் திணறி போனாள்... அவனுமே இந்த இரவின் முக்கியத்துவம் புரிந்து ஒன்றும் பேசாது சென்றுவிட்டான்... அவன் குளித்து முடித்து உணவு உண்ணும் வரை எந்தப் பேச்சும் அவர்களுக்கு இடையில் இல்லை... அவன் உறங்குவதற்காக அங்கிருந்த சிறிய அறைக்குள் செல்ல... இவள் அவனைப் பார்த்தபடி முற்றத்தில் நின்றிருந்தாள்...

அறை வாயிலில் இருந்து திரும்பி பார்த்தவன், "என்ன தூங்கலையா...?" என்று கேட்க...

"எங்கே படுக்க...?" இதைக் கேட்கும் முன் அவளது தொண்டை உலர்ந்து போனது...

அவளது கேள்வியில் அவனது புருவம் கேலியாய் உயர்ந்தது...

"என் கூடத் தான்..." என்றான் நமட்டு சிரிப்புடன்...

"ஆங்..." அவள் விதிர்த்து போய் விழி விரிய அவனைப் பார்த்தாள்...

"இது கூடத் தெரியாமலா உன் வயித்தில் என் குழந்தை வந்துச்சு...?" கேலி போல் கேட்டாலும் அவனது குரலில் பெருமளவு சீற்றம் அடங்கியிருந்தது...

சதிராடும்...!!!

## உயிர் : 15

சத்யமூர்த்தி ஆத்திரத்துடன் மனைவியை நோக்கி வந்தான்... அவனது கோபம் கண்டு பத்மவர்ஷினி பயத்தில் முற்றத்தில் இருந்த துணோடு ஒன்றி கொண்டாள்... அவன் சாதாரணமாக இருக்கும் போது அவனுடன் வார்த்தையால் வாதாடுபவள் அவனது இந்தக் கோபத்தைக் கண்டால் மட்டும் அவளுக்கு மனதிற்குள் அப்படி ஒரு குளிர் எடுக்கிறது... ஐய்யனார் போன்று ஆஜாகுபானுவாய் இருந்து கொண்டு இப்படிக் கண்கள் உருட்டி பயமுறுத்தினால் அவள் பயப்படாமல் என்ன பண்ணுவாள்...?

"பொய்... எல்லாம் பொய்... வாயை திறந்தால் பொய்... அப்படித் தானேடி..." என்று கர்ஜித்தபடி அருகில் வந்தவனின் அருகாமையில் அவளது மூளை வேலை நிறுத்தம் செய்தது...

அவளது மனம் விரும்பியே அவனிடத்தில் மயக்கம் கொண்டது... அவன் அவளுக்கு என்ன செய்த போதும் அவனிடமே நாய்க்குட்டியாய் சரணடைய விரும்பியது அவளது காதல் மனம்... பயத்தினை மயக்கம் வெல்ல அவளது விழிகளில் அவன் மீதான மயக்கம் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"பொய் சில நேரங்களில் அழகானது சத்யா..." அவனை இமைக்காது பார்த்து ரசித்தபடி அவள் கூற...

மனைவியின் ஆளை கொல்லும் இந்தப் பார்வை அந்த ஆண்மகனை ஏதேதோ செய்தது... அதில் அவனது கோபம் மட்டுப்பட்டு அவனுள்ளும் காதல் உணர்வு பெருக்கெடுத்தது... அவளைத் தலை முதல் கால் வரை ரசனையுடன் வருடி சென்றது அவனது பார்வை...

அவளது வெண்ணிற பாதங்களில் அழுத்தமாய்ப் பதிந்த அவனது பார்வையில் அவள் மேனி சிலிர்க்க வெளியில் தெரிந்த பிஞ்சு பாதங்களைப் புடவை கொசுவத்திற்குள் இழுத்து கொண்டாள்... அதைக் கண்டவனின் பார்வை

மேலெழும்பி அவளது இடையில் அழுத்தமாய்ப் பதிந்தது... அவள் இடையில் இருந்த புடவையைச் சரி செய்யும் முன் அவனது கரம் அவளது கரத்தினைத் தட்டி விட்டு விட்டு அவளது இடையில் அழுத்தமாய்ப் பதிந்தது... அவள் திகைத்து விழிக்கும் போதே அவன் அவளை இடையோடு சேர்த்தணைத்து தன்பக்கமாய் இழுத்தான்...

"உண்மை தான்டி... பொய் எப்போதுமே அழகானது தான்... பொய்யின் மொத்த உருவம் நீ... நீயும் ஆளை அசரடிக்கும் அழகு தான்... அப்போ ஒத்துக்க வேண்டிய விசயம் தான்... பொய் அழகானதுன்னு..." என்றவனின் குரலில் கோபமே பெரிதாக இருந்தது...

கைக்கெட்டும் தொலைவில் மனைவியை வைத்துக் கொண்டு அவளைத் தன்னுடையவளாக்கி கொள்ள முடியாமல் கைகளைக் கட்டி கொண்டு வேடிக்கை பார்த்திருப்பது எத்தகைய கொடுமை என்பதை இன்று தான் அவன் உணர்ந்தான்... அவள் கூறிய ஒற்றைப் பொய் அவனை அவள் அருகில் செல்ல விடாது தடுத்தது... பொய்யை பொய்யாகவே மாற்றிட எண்ணி அவன் துடித்தான்... அது தான் அவளுக்குத் தான் கொடுக்கப் போகும் தண்டனை என்று அவன் நினைத்தான்...

கணவனது விழிகளில் கோபமும், மயக்கமும் போட்டி போடுவதை உணர்ந்த பத்மவர்ஷினி மனதில் எழுந்த தைரியத்துடன் தனது கரங்களை அவனது கழுத்தில் மாலையாகக் கோர்த்து அவனது முகத்தினைத் தன்னருகில் இழுத்து,

"நீயும் தான் அழகாயிருக்க மாமா..."

மனைவியின் பார்வையில் அவன் தடுமாறினான் என்றால் அவளது 'மாமா' என்கிற அழைப்பில் அவன் மொத்தமாய் வீழ்ந்து போனான்... அவனது தடுமாற்றத்தை உணர்ந்து கொண்டவளின் இதழ்களில் நமட்டுச் சிரிப்பு எழுந்தது...

"பொய் சில நேரங்களில் அழகானது மாமா... இப்போ உன்னைச் சொன்னது போல்..." என்று அவள் கண்சிமிட்டி

சிரித்தாள்...

அத்தனை நேரம் அவனை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த மாயவலை அறுந்து விழ... அவளது இடையைத் தழுவியிருந்த தனது கையைச் சட்டென்று விடுவித்தவன்,

"அப்போ எதுக்கு என்னைத் தேடி வந்து கல்யாணம் பண்ணிக்கிட்ட...? உன் அப்பன் பார்த்திருந்த வெள்ளையும் சொள்ளையுமா இருந்த மாப்பிள்ளையைக் கட்டிக்கிட வேண்டியது தானே..." என்று படபடவென ஆத்திரத்தில் பொரிந்தபடி அவன் மூச்சு வாங்க நின்றிருந்தான்...

"என் புருசன் நீ தானே... அப்போ நான் உன்னைக் கட்டிக்காம வேறு யாரை கட்டிக்க முடியும்...?"

"நான் தான் அந்தச் சொந்தமே வேண்டாம்ன்னு தாலியை கழட்டிட்டு வந்துட்டேனே..." என்றவனின் சட்டை காலரை கோபத்துடன் பிடித்து இழுத்தாள் அவள்...

அதில் அவன் நிலைத்தடுமாறி அவள் மீது சாய்ந்தான்... அவனது உடல் பாரம் தாங்காது அவள் தூணின் மீது சாய்ந்து நின்றாள்... அதைக் கூட அவள் உணர்வில்லை... அத்தனை ஆங்காரம் அவளது மனதில்... அது அவளது விழி வழியே கனலாய் வெளிப்பட்டு அவனைத் தாக்கி சுட்டெரித்தது...

"உன் இஷ்டத்துக்குத் தாலி கட்டுவ... அப்புறம் உன் இஷ்டத்துக்கு அதைக் கழட்டிட்டு போவ... எனக்குன்னு ஒரு மனசு இருக்கிறதை நீ உணரவே மாட்டியாடா... ஒரு பொண்ணை அடக்கணும்ன்னா அவள் கழுத்தில் தாலி கட்டி விட்டால் எல்லாம் முடிந்தது அப்படித் தானே... ஆனால் அந்தப் பெண்ணுக்கு...? மனதில் காதல் இல்லாம தாலி கட்டிய கடமைக்கு வாழ்வது என்பது எவ்வளவு பெரிய கொடுமை தெரியுமா...? அதெல்லாம் உனக்கு எங்கடா புரிய போகுது...? பெண்ணைப் பத்தி தான் உனக்கு எதுவும் தெரியாது... ஓகே லீவ் இட்... ஆனா நீ தொட்டு தாலி கட்டிய என் மனசில் என்ன இருக்கிறதுன்னு கூடவா உனக்குத் தெரியாது..."

"உனக்கு என் அண்ணன் பரவாயில்லை... உன்னை மாதிரி திட்டம் போட்டு உன் தங்கச்சி கழுத்தில் தாலி கட்டி அவளுக்கு அதிர்ச்சி எல்லாம் கொடுக்கலை... நேரடியா தைரியமா பொண்ணு கேட்டு வந்து அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டான்... அஃப்கோர்ஸ் உன்னை மாதிரி தான் அவனும் நிலத்துக்காகத் தான் உன் தங்கச்சியைக் கட்டிக்கிட்டான்... ஆனா உன் தங்கச்சியை உண்மையா கட்டிக்கிட்டான்... இதோ இப்போ கூடத் தன் தங்கச்சி வாழ்க்கை பாழானதுக்காக அவனுடைய பொண்டாட்டியை அடிச்சு விரட்டலை... அது வேறு, இது வேறுன்னு தெளிவா சிந்திச்சான்... அந்தத் தெளிவு ஏன் உன் கிட்ட இல்லை சத்யா...?"

மனைவியின் சாட்டையடி வார்த்தைகளில் அவன் ஸ்தம்பித்துப் போய் அவளைப் பார்த்தான்... அவனது மனதிலிருந்த அவள் மீதான கோபம் மெல்ல வடியலானது...

"உன்னைப் பொறுத்தவரைக்கும் எல்லாமே பழிவாங்க தான் இல்லையா...? அதனால் தான் ஈசியா தாலி கட்டினே... அதே மாதிரி ஈசியா அதைக் கழட்டிட்டு வந்துட்ட... நிலப்பத்திரத்துக்காகத் தாலி கட்டின, அது கையில் கிடைச்சதும் தாலியை கழட்டிட்ட... அப்போ நீ என்னைக் காதலிக்கவே இல்லை அப்படித் தானே...?"

"அப்படி இல்லை பத்மா..." என்றவனை நோக்கி கோபமாய்ப் பார்த்தவள்,

"பொய் சொல்லாதேடா... அப்படி என்னைக் காதலிக்கிறவனா இருந்தா நீ என்ன பண்ணியிருக்கணும்...? நிலப்பத்திரம் எதுவும் வேண்டாம்... எனக்கு என் பொண்டாட்டி தான் வேணும்ன்னு சொல்லியிருக்கணுமா இல்லையா...? அப்படி நீ சொல்லியிருந்தா என்னோட தாய்வீட்டு சீதனமா நானே அதைக் கொண்டு வந்திருப்பேனே... ஏன்டா அப்படிப் பண்ணின...? தாலி கட்டும் போதும் சரி, தாலியை கழட்டும் போது சரி... எப்பவும் நான் உனக்கு வேண்டாதவள் தான் இல்லையா...?"

இதற்கு அவன் என்ன பதில் சொல்வான்...? அவள் மீதிருக்கும் பிடித்தத்தை எப்படிச் சொல்வான்...? என்னவென்று சொல்வான்...? தன் மனதினை வெளியில் சொல்ல முடியாது அவன் மனம் மறுக நின்றிருந்தான்... ஆறடி ஆண்மகனை கொஞ்சம் கொஞ்சமாக உயிரிழக்க செய்து கொண்டிருந்தாள் அவள் தன் காதலால்...

"ஆனா நான் அப்படி இல்லை... உன்னைப் பார்த்த நொடியில் இருந்து இதோ இந்த நொடி வரை உன்னை உண்மையா காதலிக்கிறேன்... இனிமேலும் உன்னை மட்டும் தான் காதலிப்பேன்... என் உயிர் போனாலும் என் ஆன்மா கூட உன்னைத் தான்டா சுத்தி சுத்தி வரும்... அது ஏன்டா உனக்குப் புரியலை...?" என்று கேட்டவளை கண்டு அவன் தாங்க மாட்டாது அணைத்துக் கொண்டான்...

"நீ செத்து போனதுக்கு அப்புறம் எனக்குன்னு ஒரு வாழ்க்கை கிடையாதுடி..." என்றவனைக் கண்டு அவள் விரக்தி புன்னகை புரிந்தாள்... அணைத்திருந்த அவன் அதைப் பார்க்கவில்லை...

"நான் விரும்பிய நீ தான் நான் வாங்க நினைக்கும் நிலத்துக்குச் சொந்தக்காரன்னு முதலில் எனக்குத் தெரியாது... அது நீ தான்னு தெரிஞ்சதும் அந்த ப்ராஜெக்ட்டில் இருந்தே விலகி போகத் தான் நான் நினைச்சேன்... உனக்கு ஒரு துன்பம் கொடுக்கக் கூட நான் நினைக்கவில்லை... ஆனா அதுக்கு அப்புறம் நான் பார்த்த காட்சிகள் எல்லாத்தையும் மாத்திருச்சு... நான் எதுக்குத் தெரியுமா உன் நிலத்தை வாங்க நினைச்சேன்... நான் காதலிக்கும் நீ அந்த மதியை காதலிச்ச... அந்தக் கோபத்தில் தான் நான் இந்தக் காரியத்தைப் பண்ணியது... ஆனா எதுக்காக அந்த நிலத்தை வாங்கினேனோ அதைக் கடைசிவரை என்னால் செய்ய முடியாது போச்சு... நீ ஆசையா வளர்த்த பயிர்களை நாசம் செய்ய எனக்கு மனசு வரலை... அதை ஆள் வச்சு நல்லா பார்த்துக்கிட்டேன்... என்னைக்காவது ஒரு நாள் நீ என்னைப் புரிஞ்சிட்டு வரும் போது நமக்கு இடையில் இந்தக் கசப்பு இருக்கக்

கூடாதுன்னு நினைச்சேன்... ஆனா நீ இந்தக் கசப்பை நிரந்தரமாக்கிட்ட சத்யா..."

அவள் கூற கூற அவளது மனம் அவனுக்குப் புரிந்தது... அவனது தவறுகள் அதிகரித்துக் கொண்டே போனது...

"எல்லாத்தையும் மறந்திரு பத்மா..." என்று கூறியவனை விலக்கியவள்,

"எதை மறக்க சொல்ற சத்யா...? என்னோட வாழ்க்கை முறை வேறு... என்னோட குணம் வேறு... எல்லாத்தையும் நீ மாத்தின... எனக்குள் நீ செய்த மாயத்தின் விளைவு நான் உனக்காக எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சேன்... என்னைக்காவது ஒரு நாள் நீ வந்து என்னைக் கூட்டிட்டு போவேன்னு உனக்காக நான் காத்திருந்தேன்... ஆனா நீ வரவே இல்லை சத்யா... என்னை உன் கூடக் கூட்டிட்டு போகவும் இல்லை... ஆனா என்னை வெறுத்துட்டு போயிட்ட..."

"இல்லம்மிணி..."

"வேண்டாம் சத்யா... எந்த விளக்கமும் சொல்லாதே... என் மனசு எல்லாம் ரணமா இருக்கு... இப்பவும் நான் தான் பொய் சொல்லி உன்னை என் கிட்ட வரவழைச்சிருக்கேன்... நீயா என்னைத் தேடி வரலை... இன்னும் கொஞ்ச நாட்களில் இந்த ஊர் மக்கள், என் குடும்பத்தார் எல்லோரும் கேட்பாங்க... உன் வயித்தில் குழந்தை இருக்கா...? இல்லையான்னு...? அப்போ எல்லோருக்கும் தெரிஞ்சு போயிரும் நான் சொன்ன பொய்... எல்லோரும் என்னைக் கேவலமா பார்ப்பாங்க... கேலி செஞ்சி சிரிப்பாங்க..." என்றவளின் முகம் இறுகி போனது...

"உனக்காக, உன் மேல் வச்ச காதலுக்காக எல்லாத்தையும் தாங்கிக்க நான் தயாராகிட்டேன் சத்யா..." என்றவளை காண காண அவனுக்குப் பாவமாக இருந்தது...

அவள் அருகே நெருங்கி வந்தவன் அவளைத் தூணில் சாய்த்து அவளது முகத்தோடு முகம் வைத்து இழைந்தபடி,

"அப்படி எல்லாம் சொல்லாதடி பூனைக்குட்டி... இன்னும் ஐஞ்சு மாசத்தில் வளைகாப்பு வைக்கலைன்னா என்ன...? அடுத்த ஏழாவது மாசத்தில் வளைகாப்பு வச்சிரலாம்... யார் முன்னும் நீ அவமானப்படத் தேவையில்லைடி..."

அவள் அவனை வெற்று பார்வையுடன் இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்...

"நமக்கான வாழ்க்கையை நாம வாழ ஆரம்பிக்கலாமா பூனைக்குட்டி...?"

பூனைக்குட்டியின் காதல் கண்டு பிரமித்துப் போன புலி காதலில் கண்டபடி பிதற்றியது...

"மனசும், மனசும் சேராம வெறும் உடம்பு மட்டும் சேர்றதுக்கு என்ன பெயர் சத்யா...?"

அவளது கேள்வியில் அவன் தன்னிச்சையாக அவளை விட்டு விலகினான்...

"பத்மா..." அதிர்வுடன் வந்தது அவனது வார்த்தைகள்...

"நீ தான் என்னை அப்படிச் சொன்னதா எனக்கு நினைவு...?"

"பத்மா வார்த்தையால் என்னைக் கொல்லாதேடி..." அவன் மனம் குமைந்து போனான் அன்று தான் விட்ட வார்த்தைகளின் வீரியத்தை நினைத்து...

"பணக்கார பொண்ணுன்னா இப்படித் தான் இருப்பாள்ன்னு நீயா ஒரு வரையறை வச்சிக்கிட்ட இல்ல... ஆனா நான் அப்படி இல்லைன்னு நிரூபிச்சிட்டேன்... நீ தான் என் காதல் கணவன்னு இந்த ஊருக்கு உரக்க சொல்லிட்டேன்... நீ எப்போ என்னை அப்படிச் சொல்ல போகிற சத்யா...?"

"அதான் நானும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேனே அம்மிணி... நீ சொன்னது பொய்ன்னு தெரிஞ்சும் யார் கிட்டேயாவது இதைப் பத்தி நான் மூச்சு விட்டேனா...? இல்லையே... எல்லாம் உனக்காகத் தான்டி..."

கிராமத்தான் அவனுக்கு அவளைப் போல் வார்த்தையில் காதல் சொல்ல தெரியவில்லை...

"அப்பவும் நான் தானே உன்னைத் தேடி வந்தேன்... நீயா என்னைத் தேடி வந்த...?" அவள் தன் நிலையில் பிடிவாதமாய் நின்றாள்...

"ப்ச்சு... திரும்பத் திரும்ப இதையே பேசிக்கிட்டு இருந்தா எப்படிப் பத்மா...? இப்ப நான் என்ன தான் செய்யணும்ன்னு சொல்ற...?" அவனது வார்த்தைகள் சலிப்புடன் வந்தது...

"உன்னோட காதலை நிரூபி... நான் நம்பறேன்..." என்றவளை அவன் ஒரு மார்க்கமாய்ப் பார்த்து வைத்தான்... அவளும் சளைக்காது அவனைப் பதில் பார்வை பார்த்து வைத்தாள்...

சத்யமூர்த்தி அவள் அருகில் நெருங்கி வந்தான்... அன்று மரத்தின் மீது சாய்த்து வைத்து அவளை அழுத்தியது போல் இன்று தூணின் மீது அவளைச் சாய்த்து வைத்து அழுத்தினான்... அவனது அருகாமையில் அவள் தன்வசம் இழந்தவளாய்,

"வேண்டாம் சத்யா விலகி போயிரு..." அவளது குரல் அவளுக்கே கேட்கவில்லை...

"அன்னைக்குக் கேட்டியே நீ பொண்ணா இல்லையான்னு... அன்னைக்கு நான் சரியா பார்க்கலை... இன்னைக்குப் பார்க்கலாம்ன்னு நினைக்கிறேன்..." என்று தாடையைத் தடவியபடி கூறியவனைக் காணும் போது வில்லன் மாதிரியே இருந்தது அவளுக்கு...

"அதான் நான் பொண்ணு இல்லைன்னு சொல்லிட்டியே..." என்று அவள் மனத்தாங்கலுடன் உரைக்க...

அடுத்தக் கணம் அவளது இதழ்களைச் சிறை செய்திருந்தான் அவளது மனங்கவர் கள்வனான அவளது காதல் கணவன்... கணவனது இதழொற்றலில் அவளது விழிகள் விரும்பியே மயங்கி, கிறங்கி சொருகியது...

மனைவியின் இதழில் அமுதத்தினை உறிஞ்சி கொண்டிருந்த சத்யமூர்த்தி மனைவியின் மயங்கிய தோற்றம் கண்டு தானும் மயக்கம் கொண்டான்... அவளது முகத்தின் ஒரு பாதி மீது வீட்டில் ஒளிர்ந்த குண்டு பல்ப்பின் மஞ்சள் நிறமும், மறுபாதி மீது முற்றத்தின் வழியே தண்ணொளி வீசிய முழுமதியின் வெள்ளி நிறமும் பாய்ந்து அவளது எலுமிச்சை நிறத்தினை மேலும் அழகாக்கி காட்டியது...

அவனுக்கு எல்லாம் அவள் எட்டாக்கனி... ஏங்கும் கனி... அழகுக்கு எல்லாம் அரசி அவள்... அவனோ சாமானியன்... அழகோ, படிப்போ, அந்தஸ்தோ இப்படி எதுவும் அவனிடம் கிடையாது... அப்படிப்பட்டவனிடம் அவள் மயங்கி நிற்கிறாள் என்றால் இப்போது அவனால் அவளது காதலை உணர முடிந்தது... இவள் பெண்ணில்லாது போனால் வேறு யார் சிறந்த பெண்ணாக இருக்கக் கூடும் என்று அவனது மனம் தன்னவளை நினைத்துப் பெருமை கொண்டது... இத்தகைய சிறப்புடையவள் தன் மனைவி என்று அவன் கர்வம் கொண்டான்... அந்தக் கர்வம் அவனுள் பெண்ணவள் போதையை ஆழமாய் ஊற்றியது...

அதன் விளைவு அவளது மென்மையான இதழ்கள் அவனது முரட்டு இதழ்களுக்கு இடையில் மாட்டி கொண்டு படாதபாடு பட்டது... மூச்சுக்காற்றுக்கு ஏங்கியவளை கண்டு அவன் சிரித்தபடி விலகினான்...

"நீ பொண்ணு தான்னு இப்போ நான் ஒத்துக்கிறேன்..." என்று நமட்டுச் சிரிப்பு சிரித்தவனைக் கண்டு அவளது விழிகள் கலங்கியது...

"பத்மா..." அவளது விழி கலங்கியதை கண்டு அவன் அவளது தோளை தொட... அவளோ அவனது கரத்தினைத் தட்டிவிட்டாள்...

"இன்னும் என்னடி கோபம்...?"

அவளது கோபத்தினைச் சட்டை செய்யாதவனாய் அவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்... அடுத்த

நொடி அவள் உடைந்து போய் அழுதாள்... அவளது விழிநீர் அவனது சட்டையைத் தாண்டி அவனது நெஞ்சினை நனைத்தது...

"பத்மா அழாதேடி... நீ அழும் அளவுக்கு நான் நல்லவன் இல்லை... உன் கண்ணீருக்கும் நான் தகுதியானவன் இல்லை..." தனது தவறுகள் அவனுக்குப் புரிந்ததோ என்னமோ...?

"நீ பண்ணிய எல்லாத்தையும் நான் சகிச்சுக்குவேன்டா... ஏன்னா நான் உன்னைக் காதலிக்கிறேன்... ஆனா நீ மதி பின்னாடி சுத்தினதை மட்டும் என்னால் தாங்கிக்க முடியலை... என் கழுத்தில் தாலி கட்டிட்டு நீ அவள் கூட ரொமான்ஸ் பண்ணிக்கிட்டு இருந்திருக்க... அதை விடக் கொடுமை என்னன்னா நீ அவளைக் கல்யாணம் பண்ண தயாரான பாரு... அப்படியே உன்னைக் கொல்லணும்ன்னு வெறி வந்தது எனக்கு... எல்லாத்தையும் மனசில் போட்டு புதைச்சுக்கிட்டு வெளியில் தைரியமா காட்டிட்டு ஒவ்வொரு காயா நகர்த்தி மதியை உன் வாழ்க்கையில் இருந்து விலக்கி வச்சேன்... அப்போ ஒவ்வொரு நொடியும் எப்படிப் பயத்தோடு கழிச்சேன்னு எனக்குத் தான் தெரியும்... எனக்குள்ள நான் எப்படித் தவிச்சேன்னும் எனக்கு மட்டும் தான் தெரியும்... எத்தனை நாள் ராத்திரி தூங்காம நான் தவிச்சியிருக்கேன் தெரியுமா..." என்றவள் அவனை அண்ணாந்து பார்த்தாள்... அவனும் கண்கள் கலங்க அவளைப் பார்த்திருந்தான்...

"உன்னை இழந்திருவேனோன்னு அவ்வளவு பயமாயிருக்கும்... அப்போ எல்லாம் என் மனசு உன்னைத் தான் தேடும்... உன் கையணைப்புக்குள் எல்லாத்தையும் மறந்து இருக்கணும்ன்னு தோணும்..." என்றவளை அவன் தனது நெஞ்சுக்குள் பத்திரமாகப் பொத்தி வைத்துக் கொண்டான்... அவளும் நாய்க்குட்டியாய் அவனுள் சுருண்டு கொண்டாள்...

பெண்ணவளின் நுண்ணிய உணர்வுகள் அவனுக்கு லேசாகப் பிடிபட ஆரம்பித்தது... மனைவியாய் அவளைக்

காதலித்தவன் முதல் முறையாய் பெண்ணவளின் உணர்வுகளைக் கண்டு மயங்கி காதலிக்கத் துவங்கினான்... நிச்சயம் இந்தக் காதல் அவனை அவளுக்காக எதையும் செய்ய வைக்கும்... அவள் விரும்பிய விதத்தில் அவனைத் தன்னிலை மறந்து அவளிடம் சரணடைய வைக்கும்...

தனக்குள் மறுகியபடி இருந்தவனை நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தது அவளது எண்ணிலடங்கா முத்தங்கள்... அவனது நெஞ்சில் வேக வேகமாக இதழொற்றியவளை கண்டு அவன் திடுக்கிட்டுப் போனான்... ஆனாலும் அது அவனுக்குச் சுகமாகத் தான் இருந்தது...

"ஏய் பூனைக்குட்டி எதுக்குடி இப்படிப் பிராண்டுற...?" அவனது குரலில் மயக்கம் அப்பட்டமாய்த் தெரிந்தது...

அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவள், "என்னோட வலிக்கு மருந்து தேடுறேன்..." என்றவளது விழிகளில், வார்த்தையில் அப்பட்டமாய் அழைப்பு இருந்தது...

"இப்போ வேண்டாம்..." என்றான் அவன் முற்றத்தின் வழியே தெரிந்த வான் மதியை பார்த்துக் கொண்டு...

"ஓ..." அவன் மதியை பார்ப்பதை கண்டு அவள் ஏமாற்றத்துடன் அவனை விட்டு விலகினாள்...

அவளது ஏமாற்றம் நிறைந்த குரலில் அவளைப் பார்த்தவன் தான் கீழே அமர்ந்து கொண்டு அவளை இழுத்து தன் மடியில் வைத்துக் கொண்டு தூணில் சாய்ந்தான்... அவளும் அவனது மடியில் அமர்ந்து கொண்டு சுகமாய் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்... சிறிது நேரம் அமைதியாகச் சென்றது...

"இன்னும் உன்னால மதியை மறக்க முடியலையா...?" மெல்ல கேட்டவளின் பதிலில் அவன் புரியாமல் அவளைப் பார்த்தான்...

அவள் வானத்தில் இருந்த மதியை சுட்டிக்காட்டியவள், "அதையே பார்த்துட்டு இருந்தியா அதான் கேட்டேன்..."

அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... அவளது முகத்தைத் தனது கைகளில் தாங்கி கொண்டு,

"அந்த நிலாவில் இந்த நிலா முகத்தைத் தான் பார்த்துக்கிட்டு இருந்தேன்..." என்றான் அவன் தனது மனதினை மறைக்காது...

"ப்ராடு பொய் சொல்ற... நான் இங்கே தானே இருக்கேன்... நேரா என்னைப் பார்க்க வேண்டியது தானே..." என்று அவள் அவனது வாயில் பட்டென்று ஒரு அடி அடித்தாள்...

அடித்த அவளது கையில் அவன் முத்தமிட... அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தவள் சட்டென்று தனது கையை விலக்கி கொண்டாள்... அவளது விழிகளுக்குள் ஊடுருவி பார்த்தவன்,

"அம்மிணி, இப்போ நான் சொல்றதை நீ முழுசா நம்பணும்..."

'சொல்லு' என்பது போல் அவள் அவனைப் பார்த்திருந்தாள்...

"இப்போ இந்த நொடி உன்னோட வலிக்கு என்னால் மருந்து கொடுக்க முடியும்... ஆனா அது உன் மனசுல போய்ச் சேருமான்னு எனக்குத் தெரியலை... இன்னொரு முறை உன்னை அழ வைச்சு பார்க்கும் சக்தி எனக்கு இல்லை... பார்க்கவும் என்னால் முடியாது... உன்னைக் கண்ணுக்குள் பொத்தி வச்சு பார்த்துக்கணும் தான் நான் நினைக்கிறேன்..." என்றவனைக் கண்டு பிரமிப்பது அவளது முறையாயிற்று...

"உன்னோட மனசுக்கு மருந்து போட நான் நினைக்கிறேன்... ஆனா அது என்னோட காதலால் மட்டுமே... இவ்வளவு நாள் ஏனோ தானோன்னு வாழ்ந்துட்டேன்... இனி உனக்காக நான் வாழ போகிறேன்... முடிஞ்சளவு என்னை மாத்திக்கப் பார்க்கிறேன்... உன்னைக் காதலிக்க ஆரம்பிக்கிறேன்... என் மனைவியா இல்லாம என் காதலியா... இது தானே நீ என் கிட்ட இருந்து எதிர்பார்க்கிறது...?"

அவள் ஆச்சிரியத்துடன் அவனைப் பார்த்தவள் பின் மௌனமாக ஆமென்று தலையாட்டினாள்... அவளைக் கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது... அவன் மனதிலும் பல விசயங்கள் இருக்கிறது... அவனைப் பொறுத்தவரை அவள் வானத்தில் இருக்கும் அந்த நிலா போன்று எட்ட முடியாத உயரத்தில் இருப்பவள்... அவளைப் போன்று நினைத்ததை எல்லாம் செயல்படுத்தும் வல்லமையற்றவன் அவன்... அப்படியொரு வரம் வாங்கிக் கொண்டு அவன் பிறக்கவும் இல்லை... அப்படிப்பட்டவன் அவளைக் கண்டதும் எப்படிக் காதலிக்கத் துவங்குவான்...? அவன் பின்னால் சுற்றிய சந்திரமதியிடத்தில் இத்தகைய பெரிய வேறுபாட்டினை அவன் கண்டது இல்லை... அதனால் தான் அவனது மனமும் அவளிடம் விரும்பியே மயக்கம் கொண்டது... அது காதல் தானா என்பது இப்போது வரை அவனுக்குத் தெரியவில்லை...

ஆனால் இப்போது பத்மவர்ஷினியின் காதலில் அவன் மனம் உருகி நிற்பது அவனுக்கு மட்டுமே தெரியும்... அவளுக்காக உயிரையும் விடச் சொல்லி மனம் கட்டளையிடுவது அவனுக்கு மட்டுமே தெரியும்... அவளை விட்டு இன்னொரு திருமணம் செய்யத் துணிந்தது, தாலியை கழட்டி கொண்டு வந்தது எல்லாமே அவளுக்காகத் தான்... தாலி கட்டிய பாவத்திற்காக அவள் அவனை நெஞ்சில் சுமக்க வேண்டாமே என்றெண்ணி தான்... அவனது மனம் என்றுமே அவளுக்காகவே மறுகியது...

அவளது அந்தஸ்து இப்போதும் அவனுக்குப் பெரும் அச்சத்தைக் கொடுப்பதை அவனால் எப்படி வாய் விட்டு சொல்ல முடியும்...?

அவளது முகத்தினைத் தாங்கிய தனது கையை அவன் பார்த்தான்... பால் போன்ற மாசுமருவற்ற அவளது மதி முகத்தில் அவனது கையின் கருமை நிறம் சிறிதும் சம்பந்தமே இல்லாது இருந்தது... இது போல் எத்தனையோ வேறுபாடுகள் இருவருக்கும் இடையில் இருக்கிறது அவன்

அவளிடம் நெருங்க முடியாதபடி... இதை எல்லாம் அவன் எப்படி அவளிடம் சொல்லி புரிய வைப்பான்...?

எவ்வளவு நேரம் இப்படியே வேதனைப்பட்டுக் கொண்டு இருவரும் அமர்ந்திருக்க முடியும்...?

"போய்த் தூங்கு அம்மிணி..." என்றான் அவன் அவளைப் பார்த்து...

"இல்லை வேண்டாம்..." என்றவள் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்...

அவளது அருகாமையில் எப்போதும் எழும் இளமை உணர்வு பிரவாகங்கள் இப்போது அவனுள் எழவில்லை... மாறாக அவளது மனதினை புரிந்து கொண்ட உணர்வில் அவன் தாயின் பாசத்தோடு அவளை அணைத்துக் கொண்டான்...

இருவரின் மனதிலும் கடந்த காலம் படமாக ஓடியது...

அவளது வாழ்க்கையைக் காதல் மாற்றிப் போட்டது என்றால், அவனது வாழ்க்கையைத் திருமணம் மாற்றிப் போட்டது... இரண்டையும் இணைத்தது அவளது பிடிவாதம்... ஆம், அவன் மீதான அவளது காதல் பிடிவாதமே...

சில மாதங்களுக்கு முன்பு...

"யுகேன், இந்தத் தடவையும் நல்ல இடமா காட்டலைன்னா நான் ஊருக்கு கிளம்பி போய்க்கிட்டே இருப்பேன்..." என்று கறாராகக் கூறிய தங்கையிடம்,

"இல்லை வர்ஷூ... இந்த இடம் உனக்கு நிச்சயம் பிடிக்கும் பாரு..." என்று யுகேன் அவளைச் சமாதானப்படுத்தினான்...

கோயம்புத்தூரில் தொழிற்சாலை அமைக்க வேண்டி வந்தவளுக்குக் காலையில் இருந்து ஒவ்வொரு இடமாகக் காட்டி கொண்டிருந்தான் யுகேன்... நகரத்தில் இருந்து ஒரு மணி தொலைவில் இருந்த அந்தக் கிராமம் அவளது கண்களைப் பெரிதும் கவர்ந்தது... பச்சை பசேலென்று

இருந்த கிராமம் அவளைக் கவராமல் இருந்தால் தான் ஆச்சிரியம்...

அப்போது அங்குத் திருவிழா நடந்து கொண்டிருந்தது... அதைப் பார்த்தபடி நின்றிருந்தவளிடம் அவர்களுடன் வந்த தரகர்,

"இந்த அம்மன் மிகுந்த சக்தி வாய்ந்தது... சாமி கூம்பிட்டுட்டு போய் இடத்தைப் பார்க்கலாங்களா...?" என்று பணிவுடன் கேட்கவும்... யுகேன் சரியென்று சம்மதம் தெரிவிக்க... அவளோ 'ப்ச்' என்று தனது அதிருப்தியை தெரிவித்தாள்...

"டைம் வேஸ்ட் யுகேன்..." என்றவள் தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்...

"கடவுள் விசயத்தில் விளையாட கூடாது..." என்ற யுகேன் அவளை வற்புறுத்தி அங்கு அழைத்துச் சென்றான்...

கோவில் முன்னே இருந்த பெரிய மைதானத்தில் வைத்து சிலம்பச் சண்டை நடந்து கொண்டிருந்தது... அசுவாரஸ்யமாக அதைப் பார்த்துக் கொண்டு வந்தவள் சகோதரனின் குரலில் அந்தச் சண்டையைக் கூர்ந்து கவனித்தாள்...

"சினிமாவில் டூப் வச்சு போடுற சண்டையை இவன் எப்படி இப்படி அசால்ட்டா பண்றான்... உண்மையில் இவன் வீராதிவீரன் தான்..." என்று யுகேன் சிலாகித்துப் பாராட்ட...

யாரது? என்று அங்குத் தனது விழிகளைப் பதித்தவள் அங்கு ஆவேசமாகச் சண்டை போட்டுக் கொண்டிருந்த சத்யமூர்த்தியை கண்ட கணம் அவள் அப்படியே பிரமித்துப் போனாள்... அவனைக் கண்டதும் அவளது மனதில் தோன்றிய வரி இது தான்... 'வாவ், வாட் அ மேன்'...

வேட்டியை தார்பாய்ச்சி போல் கட்டி கொண்டு, மேலே வெள்ளை நிற வலை பனியனை அணிந்து கொண்டு சத்யமூர்த்திக் கம்பை சுழற்றிய லாவகத்தில் அவள் மெய்மறந்து போய் நின்றிருந்தாள்... முறுக்கு மீசையுடன், வியர்வை வடிய இருந்தவனிடத்தில் அவள் எதைக் கண்டு

மயங்கினாள் என்று இன்றுவரை அவளுக்குத் தெரியவில்லை... அவனது ஆண்மை நிறைந்த கம்பீரமும், வீரமும் அவளை அடியோடு வீழ்த்தி சாய்த்தது...

"பேசாம நம்ம அடுத்தப் படத்தில் இவனைப் புக் பண்ணினால் என்ன வர்ஷூ...? கருப்பா இருந்தாலும் நல்ல களையா இருக்கான்... சூப்பர் ஸ்டார் மாதிரி ஒரு ரவுண்ட் வர சான்ஸ் இருக்கு..." என்ற யுகேனை வெட்டவா? குத்தவா? என்பது போல் அவள் பார்த்து வைத்தாள்...

'நோ, ஹி இஸ் மை ஹீரோ...' என்று மனதிற்குள் உறுதியாய் சொல்லி கொண்டவள் அண்ணனிடம்,

"உன் டேஸ்ட் ஏன் இப்படி மட்டமா இருக்கு யுகேன்...? வந்த வேலையை விட்டு விட்டு மத்த எல்லா வேலையையும் பாரு..." என்று அவனிடம் சிடுசிடுத்தவள் சத்யமூர்த்தியை ஆழ்ந்து பார்த்தபடி கோவிலை நோக்கி சென்றாள்... யுகேன் அவள் பின்னே ஓடினான்...

கோவிலில் இருந்த அம்மனிடம் என்ன வேண்டுவது என்று அவளுக்குத் தெரியவில்லை... தன்னுடைய மனம் போகும் பாதை சரி தானா...? என்று மட்டும் தனக்குள் வினா எழுப்பிக் கொண்டாள்... அம்மன் அவளைப் பார்த்து அர்த்தத்துடன் புன்னகைத்ததை அவள் உணரவில்லை...

அந்த ஊரில் காண்பித்த இடம் அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று... அதைச் சுற்றியிருந்த விவசாய நிலங்களையும் அவள் விலைக்குக் கேட்டாள்...

"ஊர்க்காரங்க கிட்ட பேசி பார்க்கிறேன்..." என்று பணிவாகச் சொன்ன தரகரிடம்,

"எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை... எல்லோர் வாயையும் பணத்தால் அடைங்க..." என்றவள்,

"இங்கேயே தங்க ஒரு வசதியான வீடு இருந்தால் நல்லது... ஒரு வாரத்தில் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு நாங்க ஊர் திரும்பணும்..." என்று அவள் கூற...

"அது இருக்கும்மா... நம்ம பெரிய தனக்காரர் வீடு இருக்கு... அவுங்க இங்கே பெரிய வீட்டை கட்டி போட்டுட்டு பையனோட அமெரிக்கா போய்ச் செட்டிலாகிட்டாங்க..." என்ற தரகர் அவர்கள் தங்குவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தான்...

"ஒரு வாரம் கொஞ்சம் அதிகம் தான் வர்ஷூ..." என்று யுகேன் முணுமுணுத்துக் கொண்டான்...

"நீ ஏன் வீணே நேரத்தை வேஸ்ட் பண்ற... ஷூட்டிங்குக்குத் தேவையான லொகேசனை தேடி போய்ப் பாரு..." என்று தங்கை அதற்கும் யோசனை கூறினாள்...

"குட், நல்ல ஐடியா சொன்ன..." என்று குதூகலித்தபடி சென்ற அண்ணனை கண்டவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்...

அன்றே தரகர் அவளைக் காண வந்தான்...

"எல்லோரும் சரின்னு சொல்றாங்க... ஒருத்தனை தவிர..." என்றவனைக் கண்டு அவளது விழிகள் இடுங்கியது...

"மார்க்கெட் ரேட்டை விட அதிகமா பணம் தர்றோம்ன்னு சொன்னீங்களா...?"

"சொன்னேன்ம்மா... அதுக்கு அவன் 'நீ உன் சொத்தையே எழுதி கொடுத்தாலும் நான் என் நிலத்தைத் தர மாட்டேன்னு' சொல்லிட்டான்ம்மா..."

"ஓ..." என்றவள்,

"சரி நான் பார்த்துக்கிறேன்..." என்று கூறி அவனை அனுப்பி வைத்தாள்...

தன்னை எதிர்ப்பவனைக் காண தானே நேரில் செல்ல வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போது அவனே அவளைத் தேடி வந்தான்...

தோட்டத்தில் அமர்ந்து ரிலாக்சாக ஐபாட்டில் பாடல்கள் கேட்டு கொண்டிருந்தவளை நோக்கி சத்யமூர்த்தி வேகமாக

வந்தான்... தன் மனம் கவர்ந்தவன் தன்னை நோக்கி வருவதைக் கண்டு பத்மவர்ஷினி விழி விரிய ஆச்சிரியத்துடன் அவனைப் பார்த்தபடி எழுந்து நின்றாள்... அவன் தான் அந்த எதிரி என்று தெரியாது அவள் அவனைக் காதலுடன் பார்த்திருந்தாள்...

சிங்கம் போல் கம்பீரமாக நடந்து வரும் அவனைக் கண்டு அவளது இதயம் அவள் வசமில்லாது நழுவி சென்று அவனது காலடியில் விரும்பியே சரணடைந்தது... அந்நேரம் ஐபாட்டில் பாடல் ஒலித்தது...

"தங்கமகன் இன்று சிங்கநடை போட்டு
அருகில் அருகில் வந்தான்
ரெண்டு புறம் பற்றியெரியும் மெழுகாக
மங்கை உருகி நின்றாள்"

சதிராடும்...!!!

## உயிர் : 16

பத்மவர்ஷினி தன் வாழ்நாளில் இப்படியொரு மகிழ்ச்சியை உணர்ந்தது இல்லை... இப்படியொரு உணர்வினை அனுபவித்ததும் இல்லை... அவளது மனம் சந்தோச வானில் இறக்கை கட்டி பறக்க, அடிவயிற்றில் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் படபடவெனப் பறப்பது போன்று அவஸ்தையுடன் கூடிய இன்பமான ஒரு உணர்வு அவளை ஆட்டிப்படைத்தது... காதல் மயக்கம் கொள்ளும் பருவ பெண்களின் நிலையில் அவள் இருந்தாள்...

'வர்ஷூ, உனக்கு என்னவானது...? இப்படியா சின்னப் பொண்ணு மாதிரி ஃபீல் பண்ணுவ...?' அவள் தனது மனதினை திட்டி கொண்டாள்...

அதற்குள் சத்யமூர்த்தி அவள் அருகில் நெருங்கி வந்துவிட்டான்... அருகில் வந்ததும் தான் அவனது உயரம், ஆஜானுபாகுவான உடல் தோற்றம் எல்லாம் அவளது கண்ணில் பட்டது... அவன் முன் அவள் சிறு முயல் போன்று சின்னதாக இருந்தாள்... அந்தளவிற்கு அவன் நெடுநெடுவென்று வளர்ந்திருந்தான்... அவனது உறுதியான உடலமைப்பு கூறியது அவனது உழைப்பின் தீரத்தை பற்றி...

அவள் ரசனையுடன் அவனைப் பார்க்க, அவனோ அவளைக் கோபத்துடன் பார்த்தான்... 'ஹாய்' என்று அவள் கூறும் முன் அவன் படபடவென்று கோபத்தில் படபடத்தான்...

"பணம் இருக்குன்னா என்ன வேணும்ன்னாலும் செய்வீங்களா...? ஒருத்தன் நிலத்தைத் தர மாட்டேன்னு சொன்னா விட வேண்டியது தானே... ஆளை வச்சு மிரட்டுவீங்களா...? எம்எல்ஏ என்ன, எவன் வந்தாலும் நான் ஒரு கை பார்க்கிறேன்... என்ன பூச்சாண்டி காட்டுறீங்களா...? இருக்கிற காட்டு மேட்டை எல்லாம் அழிச்சுப் பில்டிங் கட்டுங்க... அப்புறம் சோத்துக்குப் பதிலா இரும்பை தான் நீங்க சாப்பிடணும்... அப்படி ஒரு காலம் வரும்... அப்போது தான் தெரியும் விவசாயத்தோட

அருமை... படிச்சவங்களுக்கு அது எங்கே புரிய போகுது...? படிச்ச படிப்பு மட்டும் தான் தெரியும்... படிச்சவங்க எப்போதும் தன்னுடைய வயித்தை மட்டும் தான் பார்ப்பாங்க... ஆனா படிக்காத பாமர மக்கள் அடுத்தவங்க கஷ்டத்தைப் பார்ப்பாங்க... ஏழை விவசாயி அடுத்தவன் பசியைப் பார்ப்பான்... இது எல்லாம் உங்களுக்குப் புரியாது... சொன்னாலும் புரிஞ்சிக்க முடியாது..." என்று நிறுத்தியவன் அவளைப் பார்த்து,

"இது எல்லாம் அந்தத் தரகர் பண்ணிய வேலைன்னு நினைக்கிறேன்... உங்களுக்கு இது தெரியுமோ, தெரியாதோன்னு நினைச்சு தான் உங்க கிட்ட சொல்ல வந்தேன்... நான் சொன்னதைப் புரிஞ்சிருப்பீங்கன்னு நினைக்கிறேன்... நான் வர்றேன்..." என்றவன் இருகரம் கூப்பி நன்றி தெரிவித்து விட்டு அவளது பதிலை எதிர்பாராது அவளைத் திரும்பி பார்க்காது சென்றுவிட்டான்...

கம்பீரமாக ராஜநடை போட்டு அவன் செல்லும் அழகினை பார்த்தபடி அவள் மெய்மறந்து நின்றிருந்தாள்... 'வாவ், வாட் அ மேன்' அவனை முதன்முதலில் கண்ட போது தோன்றிய எண்ணம் இப்போதும் அவளுக்குத் தோன்றியது...

அன்றே அவள் தரகரை கூப்பிட்டுச் சத்தம் போட்டு விட்டாள்...

"அவங்களுக்கு விருப்பம் இல்லைன்னா வற்புறுத்த வேண்டாம்..." என்று...

"நீங்க விரும்புனீங்கன்னு...?" அவன் இழுக்க...

"அதுக்குன்னு ஆள் வச்சு மிரட்டுவீங்களா...? அப்படி ஒண்ணும் அந்த நிலம் தேவையில்லை... இனி அவர் கிட்ட இது பத்தின பேச்சு எதுவும் பேச வேண்டாம்..." என்று முடித்துக் கொண்டவள் அன்றே சகோதரனிடம் பேசினாள்...

"யுகேன் நாம ஊருக்கு கிளம்புவோமா...?"

"ஏன் வர்ஷூ...?"

"இந்த ப்ராஜெக்ட்டை சென்னையில் பண்ணலாம்ன்னு இருக்கேன்... அடிக்கடி இங்கே வந்து அலைய முடியாது..."

"ஐயோ, இன்னைக்குத் தான் பிரெண்ட்ஸை லோகேசன் பார்க்க வர சொல்லியிருக்கேன்... இன்னும் கொஞ்ச நாள் இங்கே இருந்துட்டு போகலாமா வர்ஷூ...? இல்லைன்னா நீ மட்டும் கிளம்பி போறியா...?"

அவளுக்குமே தனது மனம் கவர்ந்தவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது... அதனால் அவள் அதற்கு உடனே சம்மதித்தாள்...

"யுகேன், நமக்கு நிலம் கொடுக்க மாட்டேன்னு சொன்னாரே அவரைப் பத்தின டீடெயில்ஸ் எனக்கு வேணும்..."

தங்கையைப் பற்றி அவனுக்கு நன்கு தெரியும்... ஆழம் தெரியாது காலை விட மாட்டாள்... ஒரு விசயத்தில் இறங்கும் முன் அதைப் பற்றி நன்கு ஆலோசித்து விட்டு இறங்குவது அவளது பாணி... அதனால் யுகேனும் எந்தவித விகல்பமும் இல்லாது அதற்குச் சரியென்று சம்மதித்தான்...

மறுநாள் யுகேன் சத்யமூர்த்தியை பற்றிய எல்லாத் தகவல்களையும் திரட்டி அவளிடம் கொடுத்தான்... அவனது எல்லாத் தகவல்களையும் பார்த்த யுகேன் அவனது தங்கை அகல்யா என்பதைக் கண்டவன் அதையும் ஒரு தகவலாக எண்ணி கொண்டு கண்டு கொள்ளாது சென்றுவிட்டான்... வருங்காலத்தில் அவள் தான் தன்னுடைய மனைவியாக வர போகிறவள் என்று தெரிந்திருந்தால் அவன் அவளை உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்து இருந்திருப்பானோ...?

தன் மனம் கவர்ந்தவனின் பெயர் சத்யமூர்த்தி என்று இருப்பதைக் கண்டு பத்மவர்ஷினியின் இதழ்களில் புன்னகை தோன்றியது... அவனது வெளிப்படையான நேர்மையான பேச்சு அவனது பெயருக்கான முழு அர்த்தத்தைக் கற்பித்தது... அவனது தகுதி, குடும்பப் பின்னணியை வாசித்துப் பார்த்தாள் அவள்... அவன் அவளைப் போன்று படிக்கவில்லை... அவளைப் போன்று நன்கு வசதியில்லை... எல்லாவற்றையும் அவள் காதலால்

புறம் தள்ளினாள்... தன்னிடம் படிப்பு, வசதி இருக்கிறது என்று... தன்னிடம் இருக்கும் நிறைகள் எல்லாம் அவனிடத்தில் இருக்கும் குறைகளைக் களையும் என்று அவள் நம்பிக்கை கொண்டாள்... மனதில் காதல் வந்தால் எல்லாமே சாதகமாகத் தான் எண்ண தோன்றும் போலும்... அது போல் தான் அவளும் எண்ணினாள்...

யுகேன் தனது இயக்குநர் நண்பர்களுடன் படப்பிடிப்பிற்குத் தேவையான இடம் தேடி சென்றான்... அழகான அருவியும் அதன் அருகே பச்சை பசேலென்று இருந்த வயல்வெளியும் அவர்களது மனதினை கவர்ந்தது... யுகேன் இயற்கை காட்சிகளை ரசித்தபடி தனது அலைப்பேசியில் படமெடுத்துக் கொண்டிருந்தான்... அவனுடன் வந்த தோழர்களோ அங்கு அருவியில் குளித்துக் கொண்டிருந்த பெண்களைப் படம் எடுத்து கொண்டிருந்தனர்...

அதை அந்தப் பெண்கள் கவனித்து விட்டு அவர்கள் அருகில் வருவதற்குள் யுகேன் அதைக் கவனித்து அவர்களது அலைப்பேசிகளை வாங்கி அந்தப் புகைப்படங்களை அழிக்கப் போனான்... அதற்குள் பெண்கள் கூட்டம் அவர்களை முற்றுகையிட்டு விட்டது... அலைப்பேசியைக் கையில் வைத்திருந்த யுகேனே கடைசியில் குற்றவாளியாக்க பட்டான்...

"இதை நான் பண்ணலைங்க..." என்று அவன் எவ்வளவோ மன்றாடியும் அவர்கள் கேட்கவில்லை... அவனை அடிப்பதற்குத் தயாராக இருந்தனர்...

"எல்லாவற்றையும் நான் அழித்து விடுகிறேன்... போதுமா...?" என்று கூறியவன் அவர்களது கண் முன்னே அனைத்தையும் அழித்தான்... அதன் பிறகே எல்லோரும் சமாதானமாகி அங்கிருந்து சென்றனர்...

"மரத்துக்குச் சேலை கட்டினாலும் விட மாட்டான்ங்க போலிருக்கு... சரியான ஜொள்ளு பார்ட்டி..." என்று முணுமுணுத்துக் கொண்டு எல்லோரும் கலைந்து சென்றனர்...

இந்த விசயம் தான் கண், மூக்கு, காது வைத்து வேறு மாதிரியாக ஊருக்குள் பரவியது... யுகேன் பெண்களின் அழகை ரசிப்பான், ஜொள்ளு விடுவான் தான்... இல்லை என்பதற்கு இல்லை... ஆனால் அதற்கு என்று இடம், பொருள், ஏவல் அறிந்து நடந்து கொள்வான்... தன்னைக் கவர நினைக்கும் பெண்களிடமே அவனது ஜொள்ளும் அதிகம் இருக்கும்...

"ஏன்டா வந்த இடத்தில் கையை, காலை வச்சிக்கிட்டுச் சும்மாயிருக்க மாட்டீங்களா...? இந்த விசயம் மட்டும் வர்ஷூக்கு தெரிஞ்சது உங்களை எல்லாம் மர்டர் பண்ணாம விட மாட்டாள்... என்னையும் சேர்த்து தான்..."

பத்மவர்ஷினியை பற்றி அனைவருக்கும் தெரியும்... படங்களில் நடிக்கச் சொல்லி அவர்கள் எத்தனையோ முறை அவளை அணுகி இருக்கின்றனர்... அவளது நறுக் தெறித்த பேச்சில் அவர்கள் பயந்து போய் ஓடி வந்துவிட்டனர்... அவர்களுக்கு யுகேனை விட அவனது தங்கையிடம் சிறிது பயம் அதிகம் தான்...

"இதை எல்லாம் அவள் கிட்ட எதுக்குடா சொல்ற...?" என்று நண்பர்கள் அவனைச் சமாதானப்படுத்தினர்...

வீட்டிலேயே அடைந்து கிடப்பது பத்மவர்ஷினிக்கு எரிச்சலாக இருந்தது... அதனால் அவள் ஊரை சுற்றி பார்க்க கிளம்பினாள்... அவள் தொழிலுக்காக எப்போதுமே புடவையைத் தான் கட்டுவாள்... புடவை தான் பெண்ணுக்குக் கம்பீரம், மரியாதை பெற்று தரும் என்பது அவளது அசைக்க முடியாத நம்பிக்கை... அதனால் இங்கும் புடவையைக் கட்டி கொண்டு சென்றாள்... அதுவே அவளுக்கு நல்மதிப்பை பெற்றுத் தந்தது அங்கிருந்த மக்களிடையே...

"வணக்கம்மா..."

எதிரில் வந்த ஒருவர் அவளுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு சென்றார்... அவள் ஆச்சிரியத்துடன் அதைப் பார்த்தபடி சென்றாள்... பட்டணத்து பெண்ணான

அவளைக் கண்டு பிரமித்துப் போய் அவர்கள் மரியாதை செய்தனர் என்பது அவளுக்குத் தெரியவில்லை...

கால் போன போக்கில் நடந்து சென்று கொண்டிருந்த பத்மவர்ஷினி தூரத்தில் தெரிந்த உருவம் சத்யமூர்த்திப் போல் இருப்பதைக் கண்டு அவள் சந்தோசத்துடன் அங்குச் சென்றாள்... அங்குக் கண்ட காட்சியில் அவள் திகைத்து போய் அப்படியே நின்றுவிட்டாள்...

"மாமா, இந்த ஊஞ்சலை ஆட்டி விடு..." என்று மரத்தில் கட்டியிருந்த கயிறு ஊஞ்சலில் அமர்ந்து கொண்டு அடம்பிடித்துக் கொண்டிருந்தாள் சந்திரமதி...

"என்ன புள்ள நீ...? நான் வயலுக்குத் தண்ணி பாய்ச்ச போகணும்..." என்று சத்யமூர்த்தியின் வாய் அப்படி சொன்னாலும் அவனது கைகள் ஊஞ்சலை ஆட்டிவிட மறக்கவில்லை...

'யாரிவள்...?' என்று யோசித்தபடி பத்மவர்ஷினி திகைத்து போய் நின்றிருந்தாள்... அவனைப் பற்றிய தகவல் அடங்கிய குறிப்பில் இந்தப் பெண்ணைப் பற்றி எந்தத் தகவலும் இருந்ததாய் அவளுக்கு ஞாபகம் இல்லை...

"இன்னும் வேகமா...?" என்று குதூகலத்துடன் கூறி சிரித்த சந்திரமதியின் மகிழ்ச்சியைக் குலைக்க விருப்பம் இல்லாதவனாய் அவனும் ஊஞ்சலை வேகமாய் ஆட்டிவிட்டான்...

"படிப்பு முடிஞ்சு போச்சே மதி... அடுத்து என்ன பண்ண போற...?"

"உன்னைக் கல்யாணம் பண்ணிட்டு புள்ளை, குட்டி பெத்துட்டு சந்தோசமா லைஃபில் செட்டிலாகப் போறேன் மாமா..." அந்தரத்தில் பறந்தபடி அவள் உற்சாகமாகக் கத்தி கொண்டு கூற...

அவள் கூறியது அப்படியே பத்மவர்ஷினியின் காதுகளில் விழுந்தது... அதைக் கேட்டு அவள் அதிர்ச்சி அடைந்தாள்... இப்படியொரு வில்லியை அவள் சத்தியமாக

எதிர்பார்க்கவில்லை... ஆனால் அவர்களது காதலுக்குத் தான் தான் வில்லியாகப் போகிறோம் என்பதை அந்நேரம் அவள் அறிந்திருக்கவில்லை...

"கல்யாணம் பண்றதுலேயே நீ குறியாயிரு... ஆனா அகல் கல்யாணம் முடிஞ்ச பின்னாடி தான் நம்ம கல்யாணம்..."

அவன் கூறியதும் பத்மவர்ஷினியின் காதுகளில் தெளிவாக விழுந்தது... இருவருமே விரும்புவதை அவள் தெரிந்து கொண்டாள்... அந்தக் கணம் அவளது மனதினை பாரமாய் ஏதோ ஒன்று அழுத்தி அவளை உயிருடன் கொன்றது...

"மாமா, அப்போ நான் இன்னும் எத்தனை நாளைக்குத் தான் காத்திருக்கிறது...?" அவள் சிணுங்கலாகக் கேட்டாள்...

"நீ உடனே கல்யாணம் பண்ணிக்கணும்ன்னா வேற மாப்பிள்ளை தான் பார்க்கணும் மதி... உன்னை விட அகல்க்கு ரெண்டு வயசு அதிகம்... அவளை வீட்டில் வச்சுக்கிட்டு நான் கல்யாணம் பண்ண முடியுமா...?" அவனது குரல் இறுக்கத்துடன் வந்தது...

பத்மவர்ஷினி அவனது குரலை கவனித்துக் கேட்டிருந்தால் அவனது மனநிலையைத் தெளிவாகப் புரிந்திருக்கலாம்... ஆனால் அவள் இருந்த மனநிலையில் அவளால் அதைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை...

"ஐயோ மாமா, அப்படி எல்லாம் சொல்லாதே... உனக்காக நான் ஆயுசுக்கும் காத்திருக்கத் தயார்..." என்று சந்திரமதி பதறியவளாய் ஆடி கொண்டிருந்த ஊஞ்சலில் இருந்து கீழே குதித்தாள்...

திடுமெனக் குதித்ததில் தடுமாறி கீழே விழுந்தவளை அவன் தனது கைகளில் தாங்கி கொண்டான்...

“பார்த்து இறங்க மாட்டியா...?” என்று அவன் அவளைக் கடிய வேறு செய்தான்...

"ச்சோ ஸ்வீட் மாமா..." என்று அவனது கன்னத்தில் முத்தமிட்டு சிரித்தவளை கண்டு அவன் மனம் மயங்கி போனான் என்றால் பத்மவர்ஷினியோ மனம் கலங்கி போனாள்...

நிறைவேறாத நேசம் தன்னுடையது என்று நினைத்தவள் தான் வந்த வழியே திரும்பப் பயணம் செய்தாள்... அவளது காதலுக்கு ஆயுள் அவ்வளவு தான் என்றெண்ணி அவள் தனது மனதினை தேற்றி கொண்டாள்... அவனது வாழ்க்கையை, காதலை குலைக்க வேண்டும் என்று அவள் எண்ணவெல்லாம் இல்லை... மாறாக விட்டு விலகிவிடவே அவள் எண்ணினாள்... அது தான் அவள்...

ஆனால் தொழிலதிபர் பத்மவர்ஷினியாய் இப்போது அவள் நிமிர்ந்து நின்றாள்... தன் நிலையில் அவள் உறுதியாய் இருந்தாள்... காதலியாகக் காதலனான அவனுக்காக எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தவள் இப்போது தொழிலதிபராய் அவனுக்கு விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை... அந்தக் கணம் அவளுக்குச் சத்யமூர்த்தி யாரோவாகி போனான்...

"யுகேன், என்ன பண்ணுவியோ, ஏது பண்ணுவியோ எனக்குத் தெரியாது... அந்த நிலத்தை நாம் வாங்குறோம்... இங்கே நம்ம ப்ராஜெக்ட்டை ஆரம்பிக்கிறோம்..." என்று அவள் உறுதியாகக் கூற...

"நீ தானே வேண்டாம்ன்னு சொன்ன வர்ஷூ..." அவன் புரியாது விழித்தான்...

"இப்போ நான் தான் வேணும்ன்னு சொல்றேன்... சொன்னதை மட்டும் செய் யுகேன்..."

பொதுவாக அவள் இப்படி அடுத்தவர்களிடம் காரியமாகச் சொல்லி கேட்கவெல்லாம் மாட்டாள்... எப்போதுமே அவள் தைரியமாக எதிராளியை நேருக்கு நேர் களத்தில் தனியே சந்திப்பாள்... ஆனால் சத்யமூர்த்தியை அப்படிச் சந்திக்க அவள் விரும்பவில்லை... அவனது முகத்தில்

விழிப்பதற்கும் அவள் விரும்பவில்லை... அதனால் தான் சகோதரனின் உதவியை அவள் நாடினாள்...

தங்கைக்காக யுகேன் பல பெரிய ஆட்களை வைத்துச் சத்யமூர்த்தியிடம் பேசி பார்த்தான்... அவனிடம் காரியம் ஆகவில்லை என்றதும் யுகேன் சத்யமூர்த்தியின் வீட்டிற்கே நேரில் சென்று பேசினான்... அப்போதும் சத்யமூர்த்திப் பிடி கொடுக்கவில்லை... யுகேன் தோல்வியுடன் தனது காரை நோக்கி நடந்தான்... அப்போது அகல்யா வேலைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து வெளியில் வந்தாள்...

"போயிட்டு வர்றேன் ஆத்தா..." வாசலில் இருந்த அன்னையிடம் கூறியவள் அண்ணனுடன் புல்லட் வண்டியில் பேருந்து நிலையத்திற்குக் கிளம்பி சென்றாள்...

யுகேன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்... அந்தக் கணம் அவனது மனதில் அந்தத் திட்டம் எழுந்தது... திரைப்படம் எடுத்து எடுத்து அவன் வாழ்க்கையையும் திரைப்படமாக எண்ணி விட்டான் போலும்...

மாலையில் அகல்யா வேலை முடித்து விட்டு வரும் வழியில் யுகேன் அவளுக்காகக் காத்திருந்தான்... அவளோ அவனை நிமிர்ந்து பார்க்காது தலையைக் குனிந்து கொண்டு சென்றுவிட்டாள்... அவன் அவளை ஆச்சிரியமாகப் பார்த்தான்... எந்தப் பெண்ணாக இருந்தாலும் அவனை ஒரு பார்வை பார்க்காது கடந்து செல்ல மாட்டார்கள்... அந்தளவிற்கு அசரடிக்கும் ஆணழகன் அவன்... இப்படிப்பட்ட ஆணழகனை தான் மனைவியான பின் அகல்யா 'வெள்ளைப்பன்னி' என்று அழைக்கிறாள்...

இங்கே கிராமத்தில் கூடப் பல பெண்களின் பார்வையில் அவன் மீதான மயக்கத்தை அவன் கண்டிருக்கிறான்... அந்த மயக்கத்தினைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவன் அவர்களிடம் கடலை போட்டு இருக்கின்றான்... அதற்கு மேல் பயணிக்க அவன் எப்போதுமே விரும்பியது இல்லை... ஏனெனில் அவன் தாத்தா, தந்தையின் காதலை பார்த்து வளர்ந்தவன்... அதனால் அவன் தன் மனதினை கண்டபடி அலைய விட்டது கிடையாது...

அப்படிப்பட்டவனைக் கண்டு கொள்ளாது செல்லும் அகல்யாவை பார்த்தபடி அவன் நின்றிருந்தான்... மாநிறத்தில், நீண்ட கூந்தலுடன், எளிய தோற்றத்தில் இருந்த பெண்ணவளை கண்டு அவனது மனதிலிருந்த அந்த எண்ணம் உறுதியாக வலுப்பெற்றது... தங்கைக்காக என்று அவன் உறுதியாய் நினைத்த விசயம் பின்னாளில் தன்னால் தவிர்க்க முடியாத ஒன்றாகி போகும் என்பதை அப்போது அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை...

யுகேனால் காரியத்தைச் சாதிக்க முடியவில்லை என்றதும் பத்மவர்ஷினி அதைத் தனது தந்தையிடம் கூறினாள்... ஜீவா உடனே சத்யமூர்த்திப் பற்றிய விவரங்களை மின்னஞ்சல் பண்ண சொன்னான்... அதைப் பார்த்த அடுத்த நொடி அவனது உதடுகளில் வெற்றி புன்னகை தவழ்ந்தது...

"கவலைப்படாதே வர்ஷூ... அப்பா எல்லாத்தையும் பார்த்துக்கிறேன்..." என்று அவன் கூற...

"தேங்க்ஸ் டாட்... உங்க டேலண்ட் எனக்கு வராது..." என்று அவள் மனம் நெகிழ்ந்து கூற...

"அப்படிச் சொல்லாதே வர்ஷூ... என் பிள்ளைகளில் என்னோட திறமை உனக்கு மட்டும் தான் இருக்கிறது..." என்றான் தகப்பன் மகளை நினைத்துப் பெருமையாக...

தந்தை செய்யப் போகும் செயலானது அவளது வாழ்க்கையைப் புரட்டி போட போகிறது என்று தெரிந்திருந்தால் அவள் அதை அவரிடம் சொல்லாது இருந்திருப்பாளோ...?

அதே நேரம் யுகேன் தனது வீட்டாரிடம் அகல்யாவை காதலிப்பதாய்க் கூறினான்... அதைக் கேட்டு வர்ஷூ, ஜீவா திகைத்து போயினர்... ஆனால் வர்ஷூ மனதினை தேற்றி கொண்டாள்... இது அண்ணனது காதல், அவனது வாழ்க்கை என்று... ஜீவாவால் தான் மனதினை மாற்றிக் கொள்ள முடியவில்லை... யுகேனோ இந்த விசயத்தில் பிடிவாதமாக இருந்தான்...

ஜெகனின் தலையீட்டில் இந்தத் திருமணத்திற்கு அனைவரும் சம்மதித்தனர்... ஜீவா வேண்டா வெறுப்பாகச் சரியென்றான்... அகல்யாவை பெண் பார்க்க கூட அவன் மகனுடன் அவளது கிராமத்திற்குச் செல்லவில்லை...

இந்தச் சம்பந்தம் கண்டு முதலில் சத்யமூர்த்தித் திகைத்து போய் வேண்டாம் என்றான்... ஏனெனில் மூத்தவள் அபிராமியை அவர்களைப் போன்று சாதாரண இடத்தில் கட்டி கொடுத்துவிட்டு இன்றுவரை அவன் சீர் செய்து கொண்டிருக்கிறான்... அவர்களே அப்படி என்னும் போது பெரும் பணக்காரர்களான இவர்கள் எப்படியோ என்று அவன் பயந்தான்... அவர்கள் அளவிற்கு அவனால் சீதனம் தர முடியாது... அதனால் அவன் உறுதியாக மறுத்தான்... அதை விட ஏற்கெனவே நில தகராறில் மனக்கசப்பு இருந்ததால் அவன் முடியாது என்றே திட்டவட்டமாக மறுத்தான்...

அவனது மறுப்பை மீறி யுகேன் வீட்டில் இருந்து மூன்று பெண்களும் வந்து அகல்யாவை பார்த்துச் சம்மதம் தெரிவித்ததோடு மட்டுமில்லாது சத்யமூர்த்தியிடம் பேசி பேசியே அவனது மனதினை கரைத்தனர்.... இதில் ருத்ரஸ்ரீயின் பங்கு மிக முக்கியமானது... ஏற்கெனவே தொழில் திறமை கொண்டவள் இப்போது வாழ்க்கையைப் படித்துப் பக்குவமானவளாய் அவள் அவனிடம் பேச அவன் இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தான்...

யுகேன் முகத்தைக் கூடப் பார்க்காது அகல்யா அவனைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்தாள்... அதைக் கேட்டு யுகேன் ஆச்சிரியப்பட்ட போதும் அவள் தன்னைக் காண விரும்பவில்லை என்பதைக் கேட்டு அவனது மனம் சற்றுச் சுணங்கத்தான் செய்தது... அதனால் அவனும் அவளைப் பார்க்க முயற்சிக்கவில்லை... அதனால் அவள் அவனைப் பற்றி ஊரார் கூறியதை வைத்து தவறாக எண்ணி கொண்டாள்... ஆனால் இதைப் பற்றி வீட்டில் யாரிடமும் பேச அவள் பயந்தாள்... அப்படியே சொன்னாலும் அவளது வார்த்தைக்கு அன்னையிடத்தில் மதிப்பு இருக்குமா? என்று அவளுக்குத் தெரியவில்லை...

"உலகத்துல பொறந்த எல்லா ஆம்பளையும் அப்படித் தான் இருப்பாங்க... நீ தான் உன் வாழ்க்கையைச் சாமர்த்தியமா பொழைச்சிக்கப் பார்க்கணும்..." என்று அவர் அவளுக்குத் தான் அறிவுரை கூறுவார்... அதனால் அவள் அமைதி காத்து விட்டாள்...

திருமணம் சம்பந்தப்பட்ட எந்த விசயத்திலும் பத்மவர்ஷினி தலையிடவில்லை... சத்யமூர்த்தியை சந்திப்பதை தவிர்க்கவே அவள் ஒதுங்கி கொண்டாள்... காதலை மறந்துவிட்டாள் என்று தான் அவள் நினைத்து கொண்டிருந்தாள்... ஆனால் அவளால் எதையும் மறக்க முடியவில்லை... முதல் காதல் என்றும் மறக்க இயலாது என்பது அவளுக்குத் தெரியவில்லை போலும்...

திருமணத்திற்குச் சில நாட்களுக்கு முன்பு ஜீவா சாமர்த்தியமாக அந்த நிலத்தை இராமசாமியிடம் இருந்து திருமணச் சீராக எழுதி வாங்கிக் கொண்டான்... ஏனெனில் பூர்விக சொத்தான அந்த நிலத்தின் உரிமை இராமசாமியின் பெயரில் இருந்தது... சத்யமூர்த்தியும் அதைத் தன் பெயரில் மாற்றியமைக்க முயற்சிக்கவில்லை... தந்தையைப் பற்றித் தெரிந்திருந்தும் முன்பே அவன் அதைச் செய்திருக்க வேண்டுமோ...?

இராமசாமி திருட்டுத்தனமாக அந்தப் பத்திரத்தை எடுத்து வந்து ஜீவாவிடம் கொடுத்து வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்து போட்டு கொடுத்து விட்டு அதற்கு ஈடாகப் பெரும் பணத்தை வாங்கிக் கொண்டு சென்றார்... அந்தப் பணத்தை எல்லாம் அவர் குடித்தே அழித்தது தனிக் கதை...

திருமணத்திற்கு முந்தைய நாள் சத்யமூர்த்தியின் குடும்பம் ஊரில் இருந்து கிளம்பி சென்னை வந்திறங்கினர்... கூடவே அவனது மூத்த தங்கை அபிராமி குடும்பமும், ராஜலிங்கம் குடும்பத்தினரும்...

சுஜீதாவின் கணவன் அந்தஸ்து பார்த்து அங்கு வர சம்மதிக்காததால் அவள் திருமணத்திற்கு வரவில்லை... பத்மவர்ஷினி குடும்பத்தினருக்கு இது பெருத்த

வருத்தத்தைக் கொடுத்தது... அதனால் பத்மவர்ஷினியை நாத்தனார் முடிச்சு போட சொன்னார்கள்...

"என்னால் முடியாது மாம்..." சத்யமூர்த்தியை காண வேண்டுமே என்கிற பயத்தில் அவள் முடியாது என்று மறுத்தாள்...

"வர்ஷூ, உன் அக்கா மாதிரி நீயும் எங்க கழுத்தறுக்காம சொன்னதைச் செய்..." என்று சுபிக்ஷா அவளை அதட்டியதும் வேறுவழியின்றி அவள் ஒத்து கொண்டாள்...

சத்யமூர்த்தியை பார்ப்பதை தவிர்க்க இயலாது என்பதினை உணர்ந்து கொண்டு அவள் தன்னைத் தேற்றி கொண்டாள்...

முதல்நாள் வரவேற்பு நிகழ்ச்சியின் போது அவள் வெகுநாட்கள் கழித்துச் சத்யமூர்த்தியை கண்டாள்... பட்டு வேட்டி, சட்டையில் கம்பீரமாக அவன் அங்குமிங்கும் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்ததை இமைக்க மறந்து அவள் பார்த்திருந்தாள்... அவனோ அவளைக் கண்டு கொள்ளவே இல்லை... அப்படி ஒருத்தி இருப்பதையே அவன் மறந்து போனான்... அது தான் உண்மையும் கூட... ஆனால் அவனது விழிகள் அடிக்கடி சந்திரமதியை வட்டமிடுவதைப் பத்மவர்ஷினி கண்டு கொண்டாள்... மனதில் ஆத்திரமும், அழுகையும் ஒருங்கே சேர்ந்து எழுந்தது...

'நான் மட்டும் இவனுடைய கண்ணுக்கு தெரியவே மாட்டேனா...?' என்று அவளது மனம் அவனது ஒற்றைப் பார்வைக்காகக் காதலாய் ஏங்கியது...

வரவேற்பு முடிந்து உறவினர்கள் அனைவரும் உண்டு விட்டு சென்ற பிறகு இரு வீட்டினரும் உணவு உண்ண வந்தனர்... பத்மவர்ஷினியும் தனது வீட்டாருடன் உணவு உண்ண வந்தாள்... அந்நேரம் அவளுக்கு அலைப்பேசியில் அழைப்பு வர அவள் அங்கிருந்து வெளியில் வந்தாள்... கை கழுவும் பக்கமாய்ப் பின்பக்கம் வந்தவள் அங்குக் கண்ட காட்சியில் அதிர்ந்து போனாள்...

அங்குச் சத்யமூர்த்திச் சந்திரமதியின் புடவை முந்தானையில் தனது கைகளைத் துடைத்துக் கொண்டு எதையோ சுவாரஸ்யமாகப் பேசி கொண்டிருந்தான்... அவனது முகத்தில் அப்படியொரு புன்னகை... சந்திரமதி முகத்தில் அப்பட்டமான மயக்கம் தெரிந்தது... அதைக் கண்டு பத்மவர்ஷினியின் விழிகளில் கண்ணீர் துளிர்த்தது...

அப்போது சந்திரமதி தனது இரு கைகளையும் சத்யமூர்த்தியிடம் நீட்டி எதையோ கேட்க... அவனோ அவளது கைகளைப் பிடித்துப் பார்த்தவன் ரசனையாய் ஏதோ கூற, அவளோ வெட்கத்தில் முகம் சிவந்தாள்...

அதைக் காண காண பத்மவர்ஷினியால் தாங்கி கொள்ள முடியவில்லை... எத்தனை முயன்றும் அழுகையைக் கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை... இதுவரை அழுகையைக் கண்டிராதவள் அவனுக்காகக் கண்ணீர் வடித்தாள்... அப்படியே திருமண மண்டபத்தை விட்டு வெளியில் வந்தவள் அழுது கொண்டே காரை கிளப்பிக் கொண்டு வீட்டிற்குச் சென்றுவிட்டாள்...

வீட்டிற்கு வந்து தனது அறைக்குள் நுழைந்த பின்னும் அவளது அழுகை நின்றபாடில்லை... புடவையைக் கூட மாற்றாது அப்படியே கட்டிலில் அமர்ந்து கொண்டு முழங்காலில் முகம் புதைத்து அவள் அழுதாள்... இந்த இடத்தில் தொழிலதிபர் பத்மவர்ஷினி காதலி பத்மவர்ஷினியிடம் தோற்று போனாள்... வெகுநேரம் அழுதவள் எப்போது தூங்கினாளோ அவளுக்கே அது தெரியாது...

அதே நேரம் யுகேன் திருமண மண்டபத்தில் புதுக் கோரிக்கை ஒன்றை விடுத்துக் கொண்டிருந்தான்... நிலத்தை எழுதி கொடுத்தால் தான் திருமணம் என்று... சத்யமூர்த்திக் குடும்பம் மட்டுமல்லாது, பத்மவர்ஷினியின் குடும்பமும் திகைத்துப் போனது... ஜீவா மட்டும் அங்கில்லை...

"அந்த நிலப்பத்திரம் கைக்கு வந்தால் தான் உங்க பொண்ணு கழுத்தில் நான் தாலி கட்டுவேன்..." என்று யுகேன் உறுதியாகக் கூற...

"ஆத்தா இந்தக் கல்யாணம் வேண்டாம்..." என்று அகல்யா கதற... வடிவழகி மகளின் கையை ஆறுதலாகப் பற்றியபடி அங்கு நடப்பதை கலவரத்துடன் பார்த்தார்...

அவளை வெறுமையுடன் பார்த்த யுகேன் தனது முடிவினை சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை...

சத்யமூர்த்தித் தான் அந்த வீட்டின் ஆண்மகனாய் முடிவு எடுத்தான்... தனது தங்கைக்குச் செய்யும் சீராக அந்த நிலத்தை யுகேனுக்குக் கொடுத்திடவே அவன் நினைத்தான்...

"சரி மாப்பிள்ளை... நீங்க கேட்டதை நாங்க கொடுத்திர்றோம்... ஆனா கல்யாணத்தை மட்டும் நிறுத்திறாதீங்க... ஊர் சனங்க முன்னாடி எங்களால் தலைகுனிய முடியாது..." என்று கூற...

அவனைக் கண்டு யுகேனுக்குப் பாவமாக இருந்தது... ஆனாலும் மனதினை தேற்றிக் கொண்டான்... தான் ஒன்றும் அகல்யா வாழ்வினை அழிக்க நினைக்கவில்லையே என்று... ஆனால் அவளது மனதினை தான் அழித்துவிட்டதை அவன் உணரவில்லை... பெண்ணவள் தன்னை வெறுப்பாய் பார்த்துக் கொண்டு சென்றதையும் அவன் அறியவில்லை...

"என்னப்பா இப்படிப் பண்ணிட்டியே...?" ராஜலிங்கம் சத்யமூர்த்தியிடம் வருத்தப்பட்டார்...

"அகல் வாழ்க்கையை விட எனக்கு எதுவும் முக்கியமில்லை..." என்று சத்யமூர்த்தி உறுதியாகக் கூறிவிட்டான்...

சத்யமூர்த்தித் தனது மருமகனானால் தனது சொத்து முழுவதும் அவனுக்குத் தானே என்று அவரும் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை...

மறுநாள் காலையில் திருமணம் நல்லபடியாக நடந்து முடிந்தது... நாத்தனார் முடிச்சு போட வந்த பத்மவர்ஷினி மறந்தும் சத்யமூர்த்தியை நிமிர்ந்து பார்க்கவில்லை... ஆனால் அவன் அவளை நன்கு கவனித்துப் பார்த்தான்... இளஞ்சிவப்பு பட்டுப்புடவையில் கழுத்தணி, காதணி மட்டுமல்லாது ஒட்டியாணம், நெற்றிச்சுட்டி, கை வங்கி அனைத்தும் வைரத்தில் அணிந்து நின்றிருந்தவளின் அழகு கண்டு அவன் பிரமித்துத் தான் போனான்... அன்று அவளை நேரில் சந்தித்துப் பேசும் போது அவளது அழகு அவனது கவனத்தில் பதியவில்லை போலும்...

இதுவரை திரைப்படக் கதாநாயகிகளிடம் மட்டுமே கண்டு வந்த பேரழகு கண் எதிரில் இருக்கும் பெண்ணவளிடத்தில் கண்டு அவன் வியந்து போய் நின்றிருந்தான்... இப்படியும் அழகான பெண்கள் உலகத்தில் இருக்கிறார்களா? என்று அவன் அவளை ஆச்சிரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது அந்தப் பார்வையைப் பத்மவர்ஷினி கண்டிருந்தால் அவளது மனம் சிறிது சமாதானம் அடைந்திருக்குமோ என்னவோ...

"மாமா..." சந்திரமதி அழைப்பில் அவனது கவனம் அவளிடத்தில் சென்றது...

அவளது அழைப்பில் பத்மவர்ஷினி தன்னிச்சையாய் திரும்பி பார்த்தாள்... அங்குச் சத்யமூர்த்திச் சந்திரமதியின் அழகினை கண்டு ரசித்தபடி பேசி கொண்டிருப்பதைக் கண்டு அவள் முகம் கறுத்து போய் வெடுக்கென்று வேறுபக்கம் திரும்பி கொண்டாள்...

திருமணம் முடிந்து எல்லோரும் அகல்யாவை அவளின் புகுந்த வீட்டில் விட்டு விட்டு அன்றிரவே கிளம்பினர்... அகல்யா எல்லோருக்கும் கண்ணீர் மல்க விடை கொடுத்தாள்... எல்லோரிடமும் விடைப்பெற்றுக் கொண்டு வந்த சத்யமூர்த்தி இறுதியாகப் பத்மவர்ஷினியின் முன்வந்து நின்றான்... அவன் என்னமோ அவளைச் சாதாரணமாகத் தான் பார்த்து வைத்தான்... ஆனால்

அவளுக்குத் தான் அவனது பார்வை கண்டு உள்ளுக்குள் படபடப்பாக இருந்தது...

மனதிலிருந்த காதல் கட்டுப்பாட்டை மீறி வெளிவந்து விடுமோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது... இன்னும் கொஞ்ச நேரம் தன் முன் அவன் நின்றிந்தால் 'என்னைக் காதலியேன்டா' என்று தான் அவனிடம் காதல் யாசகம் கேட்டு விடுமோ என்று பயந்து அவள் தனது உள்ளங்கைகளை இறுக மூடி தன்னைக் கட்டுப்படுத்தியபடி அவனைப் பார்த்திருந்தாள்... அப்படியிருந்தும் அவளது விழிகள் யாசித்த காதல் மொழியை அவனால் படிக்க முடியவில்லை...

"வர்றேன் அம்மிணி..." பளீரென்ற புன்னகையுடன் இருகரம் கூப்பியபடி அவன் அவளிடம் இருந்து விடைப்பெற்றான்...

'எப்போடா வருவ...?' என்று அவளது மனம் காதலாய் ஓலமிட்டதை அவன் அறியவில்லை...

திருமணத்திற்காக வாடகைக்கு எடுத்திருந்த பேருந்தில் ஏறிய சத்யமூர்த்தியை பார்த்தபடி பத்மவர்ஷினி அசையாது நின்றிருந்தாள்... அவனோ தனது தங்கையைப் பார்த்து தலையசைத்தபடி இவளை திரும்பியும் பாராது கிளம்பி சென்றுவிட்டான்...

கடைசிவரை பத்மவர்ஷினியின் காதல் ஊமையின் ராகமாகவே போய்விட்டது...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 17

யுகேன் தனது அறையில் மனைவிக்காகப் படபடப்புடன் காத்துக் கொண்டிருந்தான்... நிச்சயம் அகல்யாவுக்குத் தன் மீது கோபம் இருக்கும் என்று அவனுக்குத் தெரியும்... அவளை எப்படிச் சமாளிப்பது? என்று யோசித்தபடி அவளை எதிர்பார்த்து வழி மேல் விழி வைத்துப் பார்த்திருந்தான்...

அகல்யா அவன் எதிர்பார்த்தபடி கையில் பால் சொம்புடன் உள்ளே வந்தாள்...

'எத்தனை படத்தில் பார்த்திருந்தாலும் நேரில் பார்க்கும் போது கிக்கா தான் இருக்கு... அதுவும் கில்மாவை இப்படிப் பார்க்கும் போதே கிக்கோ கிக்கா இருக்கு...' என்று அவன் மனதில் ஜொள்ளு விட்டபடி மனைவியைப் பார்த்திருந்தான்...

அவளோ அவனை முறைத்தபடி பால் சொம்பை நங்கென்று சத்தத்துடன் அங்கிருந்த மேசை மீது வைத்தாள்... அதைக் கண்டு அவன் கடுப்பாகி போனான்...

"இன்னைக்கு நமக்கு முதலிரவு... பொண்ணுன்னா அடக்க ஒடக்கமா இருக்கணும்... இது மாதிரி திமிரா இல்லை..." என்று அவன் எரிச்சலுடன் கூறினான்... பின்னே இனிய கனவு கலைந்த எரிச்சல் அவனுக்கு...

"நீ பண்ணிய வேலைக்கு இதுவே போதும்..." என்று ஏகவசனத்தில் பேசிய மனைவியைக் கண்டு அவனது கோபம் பொங்கியது...

"என்னடி விட்டா ஒரேடியா பேசுற...?" என்று அவன் அவளைத் தொட வந்த போது அவள் மேசை மீதிருந்த பழம் நறுக்கும் கத்தியை எடுத்து அவனது கையைக் கீறி விட்டாள்...

கையில் இரத்தம் சொட்ட நின்ற கணவனைக் கண்டு அவள் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை... மாறாக அவள் ரௌத்திரத்துடன் அவனை முறைத்துக் கொண்டு நின்றிருந்தாள்...

"என்ன கிராமத்து பொண்ணுன்னா நீ சொன்ன பேச்சுக்கு எல்லாம் தலையாட்டிட்டு உன் காலடியில் விழுந்து கிடப்பாள்ன்னு நினைச்சியா... கிராமத்து பொண்ணுக்கு காலை பிடிக்கவும் தெரியும்... காலை வாரி விடவும் தெரியும்... அதே மாதிரி தான் உன் கையை அறுத்த எனக்கு உன் சங்கை அறுக்கவும் தெரியும்... தாலி கட்டிட்டோம்ன்னு என் கிட்ட உரிமை எடுத்துக்க நினைச்ச உன்னைக் கொன்னுருவேன் கொன்னு..." என்று பத்ரகாளியாய் மாறி கத்தியவளை கண்டு அவனும் ஆத்திரத்துடன்,

"இனியும் உன்னைத் தொடுவேன்னு உனக்கு ஆசையிருக்கா...? போடி பட்டிக்காடு..." என்று கோபத்துடன் உரைத்தவன் தனது கையைக் கழுவி கொண்டு வந்து காயத்திற்குத் தானே மருந்திட்டுக் கொண்டான்...

அவன் சிரமப்படுவதைக் கண்டு பெண்ணவள் மனம் இரக்கம் கொண்டது தான்... ஆனால் அவன் செய்த துரோகம் அவளை அவன் அருகில் செல்லவிடவில்லை... அவள் முறைத்துக் கொண்டு அவனைப் பார்த்திருந்தாள்... அவனும் பதிலுக்குக் கோபமாய் அவளை முறைத்தபடி பால்கனியில் போய் அமர்ந்து கொண்டான்... அங்கிருந்த சிகரெட்டை எடுத்து பிடிக்கவும் தான் அவனது கோபம் மெல்ல அடங்கலானது...

பதிலுக்குச் சண்டை போடுவான், கையை ஓங்கி கொண்டு அடிக்க வருவான், தனது விருப்பம் மீறி தன்னைத் தொடுவான் என்று எதிர்பார்த்திருந்தவளுக்கு அவனது இந்த அமைதி பெருத்த நிம்மதியை கொடுத்தது... அந்த நிம்மதியுடன் அவள் படுக்கையில் படுத்து கொண்டாள்...

வெகுநேரம் பால்கனியில் இருந்தவன் எழுந்து உள்ளே வந்து பார்த்த போது அவள் கட்டிலில் படுத்திருப்பது தெரிந்தது... 'இவள் கட்டிலில் படுத்தால் நான் எங்கே போய்ப் படுப்பது?' என்று கோபமாய் எண்ணியபடி அவள் புறம் வந்தவன் அவள் அயர்ந்து உறங்குவதைக் கண்டு அவன் தனது கோபத்தை மறந்தவனாய் பெண்ணவளின் அழகினை ஒரு நொடி ரசிக்கத்தான் செய்தான்...

'ஃபர்ஸ்ட் நைட்டில் தூங்குற மூஞ்சியைப் பாரு... உன்னை எல்லாம் வச்சிக்கிட்டு... இல்லை இல்லை, கட்டிக்கிட்டு நான் என்ன பண்ண போறேனோ...?' என்று புலம்பியபடி அவன் மறுபக்கம் வந்து படுத்தான்...

அவன் செய்தது தவறு தான்... தங்கையின் ஆசைக்காக அகல்யாவின் வாழ்க்கையைப் பணயம் வைத்தது பெரும் தவறு தான்... அதற்காகக் கோபம் கொண்டு தாய்வீடு செல்லாது அவள் தன்னுடன் இருப்பதே அவனுக்குப் பெருத்த நிம்மதியாக இருந்தது...

மறுவீட்டிற்கு அகல்யா வீட்டிற்கு அனைவரும் கிராமத்திற்குச் சென்றிருந்தனர்... சத்யமூர்த்தியின் வீடு சின்னதாக இருந்தாலும் எல்லா வசதிகளுடன் கூடிய கான்க்ரீட் வீடாக இருந்தது... ஜீவா சுபிக்ஷா தொல்லை தாங்காது அங்கு வந்திருந்தான்...

பத்மவர்ஷினி அங்கு வரவில்லை... ஆனால் அவள் அந்த ஊரில் தான் இருந்தாள்... தனது நிறுவனத்தை அமைக்கும் பணியில் அவள் மும்முரமாக ஈடுபட்டு இருந்தாள்... அவளது மனதில் சத்யமூர்த்தியின் நினைவுகள் பின்னுக்குச் சென்றுவிட்டது... இப்போது அவளது மனதினை தொழில் முற்றிலும் ஆக்கிரமித்துக் கொண்டது...

வந்த இடத்தில் சத்யமூர்த்தித் தான் சொன்னது போல் நிலப்பத்திரத்தை தங்கள் வீட்டு மருமகனிடம் கொடுக்க முன்வந்தான்... அதை அவன் இரும்பு அலமாரியில் இருந்து எடுக்கச் சென்ற போது அதில் பத்திரத்தை காணாது திகைத்துப் போனான்... அப்போது தான் இராமசாமி பத்திரத்தை தான் எடுத்து ஜீவாவிடம் கொடுத்துப் பணம் வாங்கியதை பற்றி அவனிடம் கூறினார்... அவ்வளவு தான் சத்யமூர்த்தி ருத்ரமூர்த்தியாக மாறிப் போனான்...

"ச்சீ, நீயெல்லாம் என்ன பெரிய மனுசனய்யா...? இப்படி ஒரு காரியத்தைப் பண்ணியிருக்கிறீரு..." என்று ஜீவாவிடம் அவன் எகிறினான்...

"சத்யா வார்த்தையை அளந்து பேசுங்க..." உடனே யுகேன் தந்தைக்குப் பரிந்து பேசினான்...

"மாப்ளே, நீங்க இதில் தலையிடாதீங்க... நீங்க நேரிடையா கேட்ட நிலத்தை உங்கப்பா பின்னாடி வழியா எழுதி வாங்கியிருக்கிறாரு..."

யுகேன் திகைத்துப் போய்த் தந்தையைப் பார்த்தான்... ஜீவா தனது முழு உயரத்திற்கு எழுந்து நின்றவன் அலட்சியமாகச் சத்யமூரத்தியை பார்த்தான்...

"நான் ஒண்ணும் அதைத் திருட்டுத்தனமா எழுதி வாங்கலை... பணம் கொடுத்து சட்டப்படி எழுதி வாங்கியிருக்கேன்..." என்றான் திமிர் சிறிதும் குறையாது...

"ஒரு குடிகாரனை ஏமாத்தி எழுதி வாங்கிட்டு இதில் பெருமை வேறா...?" என்ற சத்யமூர்த்திக்கு இன்னமும் கோபம் அடங்கவில்லை...

"அந்தக் குடிகாரன் தான் உன்னோட அப்பா, அந்த நிலத்துக்குச் சொந்தக்காரர்..." என்ற ஜீவாவின் வார்த்தையில் அத்தனை நக்கல் இருந்தது...

"யுகேன், இதுக்காகத் தான் இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டியா...? இதை முன்னமே சொல்றதுக்கு என்ன...? தேவையில்லாம உனக்குக் கொஞ்சமும் சம்பந்தம் இல்லாத ஒரு பட்டிக்காட்டைக் கட்டிக்கிட்டு...? உன்னை எல்லாம் என்ன பண்றது...? தொழிலில் தான் பொறுப்பில்லை என்றால் வாழ்க்கையிலுமா...?" ஜீவா மகனை கடிந்து கொண்டான்...

மாமனாரின் வார்த்தையில் அகல்யா மனமுடைந்து போனாள்... யுகேனோ அதிர்ச்சியானான்... அகல்யாவை தவிர வேறு ஒருத்தியை அவனால் திருமணம் செய்ய முடியுமா...? முடியாது என்றே அவனுக்குத் தோன்றியது... இது காதல் தானா? என்று அவனுக்குத் தெரியவில்லை... எந்தச் சூழ்நிலையிலும் அவளைக் கைவிட முடியாது என்று

மட்டும் அவனுக்குப் புரிந்தது... அவன் தந்தையை எதிர்த்து பேசும் முன் அவனது தாய் முந்தி கொண்டாள்...

"எல்லோரும் எங்களை மன்னிச்சிருங்க... அப்பாவும், மகனும் உங்களுக்கு எதிரா ஏதோ பண்ணியிருக்காங்க... அது என்னன்னு எனக்குத் தெரியலை... ஆனா என்னால் ஒண்ணே ஒண்ணு மட்டும் சொல்ல முடியும்... என்னை நம்பி உங்க வீட்டுப் பொண்ணை அனுப்புங்க... என் மருமகளை என் இரண்டு பொண்ணுங்களோட சேர்த்து மூணாவது பொண்ணா அவளை நான் பத்திரமா பார்த்துக்கிறேன்... அகலோட வாழ்க்கைக்கு நான் பொறுப்பு..." என்று கூறிய சுபிக்ஷா தனது மருமகளைத் தன்னுடன் அழைத்து வந்துவிட்டாள்...

அன்றிலிருந்து அவள் கணவனுடன் பேசுவதில்லை... அநியாயம் செய்வதற்கும் ஒரு அளவு வேண்டும் என்பதே அவளது வாதம்... அப்பா, மகளிடம் பேச முடியாது என்பதால் அவள் தனது பேச்சினை குறைத்து கொண்டாள்...

கிளம்பி போகும் போது சத்யமூர்த்தி ஜீவாவிடம், "உங்களுக்கும் ஒரு பொண்ணு இருக்கு இல்லையா...?" என்று தீவிரத்துடன் அவன் கூற... அதைக் கேட்டு இகழ்ச்சியாய் வளைந்தது ஜீவாவின் உதடுகள்...

"அவள் என்ன உன் தங்கையை மாதிரி சாமானிய பொண்ணுன்னு நினைச்சியா...? அவளது கால் நகத்தைக் கூட உன்னால் ஒண்ணும் பண்ண முடியாது... அவளை யாருன்னு நினைச்ச இந்த ஜீவாவோட மகள்... அவளுக்கு மட்டும் ஏதாவது ஒண்ணாச்சுன்னா உன்னைக் கொன்னு குழி தோண்டி புதைச்சிருவேன்... ஜாக்கிரதை..." என்று ஜீவா அவனை மிரட்டிவிட்டுச் சென்றான்...

சத்யமூர்த்தியால் தான் ஏமாற்றப்பட்டதைத் தாங்கி கொள்ள முடியவில்லை... தங்கைக்காக அவன் எதையும் செய்யத் தயாராக இருந்தான்... ஆனால் அப்பனும், மகளும் இப்படி முதுகில் குத்தி துரோகம் புரிவார்கள் என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை... நிலத்தை அவர்கள்

அபகரித்ததை நினைத்து நினைத்து அவனுள் ஆத்திரம் பெருகியது...

அவர்களது பாணியிலேயே சென்று நிலத்தை அபகரிக்க அவன் திட்டம் போட்டான்... அவனது எந்தத் திட்டமும் பத்மவர்ஷினியிடம் செல்லுபடியாகாது என்பதினை ஏனோ அவன் சிந்திக்க மறந்து போனான்...

இது எதுவும் அறியாதவளாய் பத்மவர்ஷினி தனது வேலையில் மூழ்கி போனாள்... ஜீவாவும், யுகேனும் அவளிடம் இது பற்றி மூச்சு விடவில்லை... அவளது வேலையைப் பார்க்க சொன்னதோடு மேற்கொண்டு வேறு எதுவும் அவர்கள் பேசவில்லை...

அன்று ஞாயிற்றுக் கிழமை ஆதலால் பத்மவர்ஷினி ஓய்வாக வீட்டில் இருந்தாள்... வீட்டிலேயே இருக்கப் பிடிக்காது அவள் வெளியில் வந்தாள்... சந்தன நிற புடவை அவளது மேனியை பாந்தமாய்த் தழுவி இருந்தது... சத்யமூர்த்தி நிலம் இருந்த பகுதிக்கு செல்லாது அவள் வேறுபக்கம் நடக்கத் துவங்கினாள்... அன்று அவன் அவளிடம் விடைப்பெற்றுச் சென்ற போது பார்த்தது... அதன் பின் அவள் அவனைப் பார்க்கவில்லை... பார்க்காததும் நன்றே என்று அவள் நினைத்தாள்... பார்க்காது போனாலும் அவளது மனதில் நீக்கமற நிறைந்திருக்கும் அவனது நினைவை அவள் எங்ஙனம் அழிக்கப் போகிறாளோ...?

அப்போது தான் கருப்பண்ணசாமி கோவில் சிலைகள் வித்தியாசமாகத் தெரிய அவள் கோவிலுக்குள் சென்றாள்... முறுக்கிய மீசையுடன், அகன்ற விழிகளோடு இருந்த கருப்பண்ணசாமியை கண்டு அவள் பயம் கொள்ளவில்லை... மாறாக அந்த உருவத்தில் தன்னவனை அவள் கற்பனையில் கண்டு கொண்டிருந்தாள்... அவனது நினைவில் அவளது விழிகள் கலங்கி சிவந்தது...

அந்தக் கணம் தன் முன் வந்து நின்ற சத்யமூர்த்தியை கண்டு அவள் கனவோ, நனவோ என்று பிரமித்துப் போய்ப் பார்த்தாள்... எதிர்பாராது அவனைக் கண்டதும் அவளது முகம் சந்தோசத்தில் மலர்ந்தது... அவனோ அவளது

மலர்ச்சியை உணராது அவளது வாழ்வினை அழிக்கத் துணிந்தான்... தனது கையிலிருந்த மஞ்சள் நாணில் கோர்த்திருந்த பொன்தாலியை அவளது கழுத்தில் நொடிப்பொழுதில் கட்டிவிட்டான்...

தன்னவனின் உருவத்தை மனதில் பதிய வைத்து கொண்டிருந்தவள் அவன் செய்த காரியத்தின் வீரியத்தைச் சில நொடிகள் கழித்தே புரிந்து கொண்டாள்... தனது கழுத்தில் தொங்கிய தாலியை எடுத்து பார்த்தவளுக்கு அதைக் கண்டு சந்தோசப்படுவதா? இல்லை துக்கப்படுவதா? என்று தெரியவில்லை... இதை எல்லாம் மீறி ஒரு சிறு நிம்மதி அவளுள் ஏற்படுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை... இந்தக் கணம் அவன் அந்த மதிக்கு சொந்தமில்லை... தனக்கு மட்டுமே சொந்தம் என்கிற நிம்மதியினால் வந்த சந்தோசம் அவளது மனதில் ஆரவாரமாய்...

அந்த நொடி அவளுக்குத் தன்னுடைய மனம் புரிந்து போனது அவனுக்காகத் தான் எந்தளவிற்கு ஏங்கி போயிருக்கிறோம் என்று... அவனுக்காகத் தனது நிலையைத் தானே தாழ்த்தி கொள்கிறோம் என்று அவளுக்குப் புரிந்த போதும் காதல் மனது அதை ஏற்கவில்லை... அவனது காலடியில் சரணடையவே அது விரும்பியது... விழிகளில் விழிநீர் பளபளக்க அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்... கோபத்தின் பிடியில் இருந்தவன் அவளின் உணர்வுகளைப் படிக்கத் தவறிப் போனான்... அதே போல் தனக்காகப் பல வருடங்களாகக் காத்திருக்கும் சந்திரமதியையும் அவன் மறந்து போனான்... மொத்தத்தில் அவன் ஆத்திரத்தில் நிதானம் தவறிப் போயிருந்தான்...

"இப்போ உன் அப்பன் கிட்ட போய்ச் சொல்லு... எந்தக் கல்யாணத்தைக் காரணம் காட்டி என் நிலத்தைத் தட்டி பறிச்சானோ... அதே காரணத்துக்காகத் தான் நான் உன் கழுத்தில் தாலி கட்டியிருக்கேன்னு..."

அவள் அடிப்பட்ட குழந்தை போல் அவன் பேசுவது புரியாது மலங்க மலங்க விழித்தாள்...

"என்ன நான் சொல்றது உனக்குப் புரியலையா...?" என்றவன் ஜீவா செய்ததை அவளிடம் அப்படியே உரைக்க...

அவன் கூறியது அவளது மூளையில் உறைத்ததில் அவளது விழிகள் அவளது மனதின் வலியை அப்படியே பிரதிபலித்தது... எல்லாம் கொஞ்ச கணம் தான் முயன்று தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"இந்த மாதிரி சீஃப் டெக்னிக் எல்லாம் உனக்கு யார் சொல்லி கொடுத்தது...?" என்றாளே பார்க்கலாம்...

அவளது நிமிர்வில் இப்போது அரண்டு போவது அவனது முறையாயிற்று... அவன் கட்டிய தாலியை அவன் கண்முன் நீட்டி,

"இதைக் கட்டினா நான் உனக்கு அடங்கிப் போவேன்னு நீ நினைச்சியா...? இல்லை எங்கப்பா உனக்குப் பயந்துக்கிட்டு நிலத்தை உன் பெயருக்கு எழுதி கொடுத்திருவாரு நினைச்சியா...? இந்த விசயம் மட்டும் அவருக்குத் தெரிஞ்சது உன்னை ஆள் அடையாளம் தெரியாம அழிச்சிருவாரு... யார் கிட்ட என்ன பேசுறோம்ன்னு தெரிஞ்சு தான் பேசுறியா...?"

சத்யமூர்த்திச் சத்தியமாக இப்படியொரு பதிலடியை எதிர்பார்க்கவில்லை... அவன் அவளது பேச்சில் அயர்ந்து போய் நின்றிருந்தான்...

"என்னை மாதிரியான பணக்கார பொண்ணுங்களுக்கு எல்லாம் இந்தத் தாலி சென்ட்டிமென்ட் ஒரு பொருட்டே கிடையாது... பிடிக்காத தாலியை தூக்கி எறிஞ்சிட்டு பிடிச்ச வாழ்க்கையைத் தேடி போயிக்கிட்டே இருப்போம்... நானும் அப்படித்தான்..." என்றவள் தான் கட்டிய தாலியை ஏன் கழற்றி எறியவில்லை? என்பதைப் பற்றி அவன் யோசிக்க

மறந்து போனான்... அப்படி யோசித்திருந்தால் அவளது காதல் மனம் அவனுக்குப் புரிந்திருக்குமோ...!

"சோ, நிலத்துக்காகத் தான் இந்தத் தாலியை கட்டின... அப்படித் தானே...?"

'அப்படித் தான்' என்பது போல் அவன் அவளைப் பார்த்திருந்தான்...

"அதைத் திருப்பிக் கொடுத்துட்டா நீ இதைத் திருப்பி எடுத்துக்குவ... அப்படித் தானே...?"

அவள் இப்படிக் கேட்டதும் அவன் சிறிது திகைத்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "உனக்கும், எனக்கும் அதுக்கு மேல வேற என்ன உறவு இருக்கு அம்மிணி...?" என்றான் அவளது முகம் பார்க்காது...

அந்த நொடி அவள் மனதிற்குள் மிகவும் நொறுங்கி போனாள்... தாலி கட்டிய பின்பு கூடவா இவனால் தன்னை மனைவியாகப் பார்க்க முடியவில்லை என்று... இல்லை தன்னை ஒரு பெண்ணாகக் கூட அவன் கருதவில்லையோ...? மனதில் கழிவிரக்கம் தோன்ற அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது... தன்னைப் பிடிக்காதவன் முன் அழுவது கூட அவளுக்குப் பிடிக்கவில்லை... அழுகையை அடக்கி கொண்டு முகம் சிவக்க அவனைப் பார்த்தவள்,

"உன் தங்கை வாழ்க்கையைப் பத்தி கொஞ்சமும் யோசிக்காது நீ இதைப் பண்ணிட்ட... இப்போ இந்த நொடி உன் தங்கையோட வாழ்க்கை என் கையில்... பார்க்கிறேன்டா, நீயா? நானான்னு?" அத்தனை கோபம் வந்தது அவன் மீது அவளுக்கு...

அந்தக் கணம் தான் செய்த காரியத்தின் வீரியம் அவனது மூளையில் உறைத்தது...

"அம்மிணி..." என்று அவன் அவளிடம் பேசும் முன் அவள் அங்கிருந்து விறுவிறுவெனச் சென்றுவிட்டாள்...

அவன் தலையில் கையை வைத்துக் கொண்டு அங்கேயே அமர்ந்துவிட்டான்... அவனது நிலையில் அவன் செய்தது சரி... அவனது வருமானம் அனைத்தும் அந்த நிலத்தை நம்பி தான் இருந்தது... அதை அபகரித்துக் கொண்டதும் அவன் கோபம் கொண்டான்... இதோ இப்போது திருமணத்திற்கு வாங்கிய கடனுக்காகத் தாங்கள் குடியிருக்கும் வீட்டை விற்பனைக்குச் சொல்லி வைத்திருப்பது இவளுக்குத் தெரியுமா...? அடுத்த வேளை கஞ்சிக்கு வழியில்லாது அமர்ந்திருக்கும் தனது வறிய நிலை பணக்காரியான இவளுக்குத் தெரியுமா...? இப்படி எதுவுமே தெரியாது ஏழையைக் காயப்படுத்த மட்டும் அப்பனுக்கும், மகளுக்கும் தெரியும் என்று அவன் மனதிற்குள் குமைந்தபடி அமர்ந்திருந்தான்...

இது எல்லாவற்றையும் விட அவனது தங்கை கவலை அவனுக்குப் பெரும் கவலையாகி போனது... அன்று எல்லாம் மனதில் பயத்துடன் சரவணனின் அலைப்பேசியை அவன் பார்த்துக் கொண்டிருந்தான்... அப்படி இருந்தும் மனம் தாங்காது அவன் தங்கையை அழைத்தும் பேசிவிட்டான்... அவள் நன்றாக இருப்பதை அறிந்து கொண்ட பின்பே அவனுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது... ஆனால் எல்லாம் கொஞ்ச நேரம் தான்... பத்மவர்ஷினி எப்போது வேண்டுமானாலும் அவளது வீட்டில் சொல்ல வாய்ப்பு இருப்பதால் அவன் பயத்துடனே பொழுதை நெட்டி தள்ளினான்...

கடைசிவரை அவள் இந்த விசயத்தை வீட்டினர் யாரிடமும் சொல்லவில்லை... அது எதனால் என்பதைப் பற்றிக் கூட அவன் சிந்திக்க மறந்தான்...

மறுநாள் சத்யமூர்த்தி ராஜலிங்கம் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது சந்திரமதி அங்கு வந்தாள்...

"மாமா, ரோஜாப்பூ பறிச்சு கொடு..." என்று அவனிடம் கேட்டாள்...

அவளுக்கு ரோஜாப்பூ மிகவும் பிடிக்கும்... ஆனால் அதிலிருக்கும் முரட்டு முட்கள் கையில் குத்திவிடும்

என்பதால் அவள் ரோஜா தோட்டத்திற்குள் இறங்க மாட்டாள்... அவள் கேட்டதும் சத்யமூர்த்திச் சிரித்தபடி அவளுக்குத் தேவையான பூக்களைப் பறித்துப் பூங்கொத்து போல் ஒன்று சேர்த்து அவளிடம் கொடுத்தான்...

"மாமா, அப்படியே ஐ லவ் யூன்னு மூணு வார்த்தையும் சேர்த்து சொல்லிர்றேன்..." என்று அவள் அவனது கன்னம் பற்றிக் கொஞ்ச...

"அதுக்கென்ன புள்ள சொல்லிட்டா போச்சு..." என்று சிரித்தபடி கூறியவன் எதேச்சையாகத் திரும்பி பார்த்த போது அங்கு நின்றிருந்த பத்மவர்ஷினியை கண்டு திடுக்கிட்டுப் போனான்...

அவளது விழிகளில் கனன்ற கோபம் எதனால்? என்று தெரியாது அவன் விழித்தான்... இருகைகளைக் கட்டி கொண்டு தன்னை உறுத்து விழித்துக் கொண்டிருந்தவளை கண்டு அவனுக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தது...

"மாமா..." என்ற சந்திரமதியிடம் அவன்,

"நீ வீட்டுக்கு போ புள்ள... நான் அம்மிணி கிட்ட பேசிட்டு வர்றேன்..." என்றவன் சந்திரமதியை திரும்பி பார்க்காது பத்மவர்ஷினியை நோக்கி சென்றான்...

அதில் கோபமுற்ற சந்திரமதி நேரே வடிவழகியிடம் வந்து பத்மவர்ஷினியை பற்றிப் போட்டு கொடுத்தாள்...

"அவள் ரொம்பத் திமிர் பிடிச்சவள் அத்தை... பெரிய ராங்கிக்காரி..." என்று அவள் கூற அதை அப்படியே நம்பினார் வடிவழகி...

தன் முன் வந்து நின்ற சத்யமூர்த்தியை முறைத்து பார்த்து கொண்டிருந்தாள் பத்மவர்ஷினி... நேற்று தன் கழுத்தில் தாலி கட்டிவிட்டு இன்று எப்படி இவனால் காதலியிடம் கொஞ்ச முடிகிறது? என்று... இவனை இப்படியே விட்டு வைத்தால் சரிவராது என்று நினைத்தவள் அவனுக்குத் தன்னுடைய முக்கியத்துவத்தை உணர்த்திட நினைத்தாள்...

"உனக்கு வேண்டியது நிலப்பத்திரம் தானே..." 'நான் வேணும்ன்னு சொல்லேன்டா' மனதிற்குள் அரற்றியபடி அவள் அவனைக் கூர்ந்து பார்த்தாள்...

ஆமென்பது போல் அவன் மெல்ல தலையசைத்தான்... அந்த நொடி அவள் உயிருடன் மரித்துப் போனாள்... அவன் அவளது காதலன்... இப்போது தாலி கட்டிய கணவனும் கூட... அப்படிப்பட்டவன் இப்படிக் கூறுவது கண்டு அவள் மனதிற்குள் ஊமையாக அழுதாள்... ஆனால் அவள் வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை... ஆழ்ந்த மூச்செடுத்துத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவள் அவனை நேருக்கு நேர் பார்த்து,

"அப்படின்னா என் கிட்ட வந்து ஒரு வருசம் வேலை பார்... ஒரு வருசம் முடிஞ்ச பின்னாடி உன் நிலப்பத்திரம் உன் கையில்..." என்று ஒப்பந்தம் போட்டவளை கண்டு அவன் பொங்கிவிட்டான்...

"உன் கிட்ட அடிமையா வேலை பார்க்கணும்ன்னு எனக்கு ஒண்ணும் தலையெழுத்து இல்லை... போடி..." என்று அவன் கோபமாய்ச் சீறினான்...

அவள் நிதானத்துடன் அவனைப் பார்த்து புன்னகைத்தபடி, "சாய்ஸ் யுவர்ஸ் சத்யா... அதுவரைக்கும் நீ பண்ணிய இந்தக் காரியத்தை நான் யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன்..." என்றாள்...

தன்னை அடிமைப்படுத்துவதற்காகவே அவள் தன்னை மிரட்டுகிறாள் என்று அவன் பெரும்கோபம் கொண்டான்... அதனால் அவளது வார்த்தைகளை அவன் புறம் தள்ளினான்...

அதற்கு மேல் அங்கிருக்க விரும்பாது பத்மவர்ஷினியும் சென்னை கிளம்பி வந்துவிட்டாள்... அங்கேயே இருந்து சத்யமூர்த்தி, சந்திரமதி காதலை பார்க்கும் சக்தி அவளுக்கு இல்லை... சென்னை போனதில் இருந்து அவள் அவனது அழைப்பிற்காகத் தினமும் ஏங்கி கொண்டிருந்தாள்... ஆனால் சத்யமூர்த்தியோ அவளை அழைக்கவே இல்லை...

விட்டது தொல்லை என்றெண்ணி கொண்டு அவன் தன்னை மறந்து போய்விட்டானோ என்று அவள் கலங்கி போய்த் தவித்தாள்... ஆனால் மறந்தும் அவனைத் தனது வீட்டினரிடத்தில் காட்டி கொடுக்க அவள் தயாராக இல்லை... அந்தளவிற்கு அவளது காதல் மீது அவளுக்கு நம்பிக்கை இருந்தது... அதை விடக் காதலன் கட்டிய தாலி மீது நம்பிக்கை இருந்தது...

அவள் நினைத்தது போல் சத்யமூர்த்திக் கொஞ்ச நாள் அவளை மறந்து தான் போயிருந்தான்... ஆனால் அதன் பிறகு அவனது மனசாட்சி அவனைத் தினமும் குத்தி கிழித்துக் கொன்றது... அவன் இயல்பில் நல்லவனே... அதனால் அவன் மெல்ல மெல்ல தன் தவறை உணர்ந்து உள்ளம் மறுகினான்... அவளிடம் மன்னிப்பு யாசிக்க அவன் விரும்பினான்... அவனால் அவளுடன் திருமண வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாது... ஆனால் அவள் அவளுக்கான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று அவன் விரும்பினான்... அதனால் தான் பணக் கஷ்டத்திற்காக அவளிடம் வேலைக்கு வருவது போல் அவன் வந்தான்...

என்றோ அவளது முகவரி அட்டையில் பார்த்த அவளது அலைப்பேசி எண்ணை சரியாக அழுத்திய போதாவது அவன் தனது மனதினை உணர்ந்திருக்க வேண்டும்... அப்போதும் அவன் அதை உணரவில்லை... அவளை நேரில் சந்திக்கச் சென்ற போது கூட அவன் மனதில் சிறிது ஆசையிருக்கத் தான் செய்தது... ஆனால் அவள் காட்டிய உதாசீனத்தில், புறக்கணிப்பில் அவன் தன்மானத்தோடு நிமிர்ந்து நின்றான்... அவளிடம் வளையாது தைரியமாக நேருக்கு நேர் அவளுடன் மோதினான்... ஆனால் அவனது அடிமனசில் இருக்கும் மனைவி என்கிற சொந்தம் அவளைச் சொந்தத்துடன் பார்க்கவிழையும்... அதையும் அவள் தனது திமிர் பேச்சினால் விரட்டி விடுவாள்...

சந்திரமதியுடன் அவன் பேசி கொண்டிருந்த போது பத்மவர்ஷினி பொறாமை கொண்டு பொங்கி எழுந்த போது தான் அவன் அவளது மனதினை நன்கு படித்தான்

நல்ல கணவனாக... அந்தக் கணம் அவனுக்கு அப்படியொரு சந்தோசமாக இருந்தது... அவளுக்குத் தன்னைப் பிடித்திருப்பது குறித்து அவன் மனம் மகிழ்ந்து போனான்... அதனால் தான் சந்திரமதியிடம் தங்களுக்கு இடையில் இருக்கும் உறவினை சொல்லி புரிய வைத்து அவளை ஒதுக்கினான்... இத்தனையும் அவளுக்காகச் செய்தவனால் அவளிடம் நேரிடையாக எதையும் சொல்ல முடியாது போயிற்று... அவளது அந்தஸ்து கண்டு அவனுக்கு அத்தனை தயக்கமாக இருந்தது... அதற்கு ஏற்றார் போன்று அவளும் அவனை வார்த்தைகளால் வதைத்து கொண்டிருந்தாள்... அதனால் தான் அவளே தன்னைத் தேடி வர வேண்டும் என்று அவன் பிடிவாதமாய் இருந்தான்...

அவளோ தாலி கட்டியவன் அவன் தானே... அதனால் அவன் தான் வர வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தாள்... இறுதியில் அவனது பிடிவாதமே ஜெயித்தது... அவள் தான் அவனைத் தேடி வந்தாள்... அவனில்லை...

*******************

கடந்த காலத்தை எண்ணி பார்த்த சத்யமூர்த்திக்கு அப்போது எல்லாம் தன்னை இமைக்காது பார்த்த மனைவியின் பார்வைக்கான அர்த்தத்தை இப்போது அவன் புரிந்து கொண்டான்... அதுவும் தாலி கட்டிய போது அவள் பார்த்த பார்வையை இப்போதும் நினைத்து பார்த்தவனின் நெஞ்சம் காதலில் சிலிர்த்துக் கொண்டது... அன்று கோபமாகத் தெரிந்த அவளது பார்வைகள் எல்லாம் இப்போது அவனுக்குக் காதலாகத் தெரிந்தது...

தன் மீது காதல் கொண்டு உயிரை வைத்திருக்கும் பெண்ணவளுக்கு அவன் செய்தது எல்லாம் துரோகம், துரோகம், துரோகம் மட்டுமே...

"பூனைக்குட்டி நீ இந்தளவுக்கு என்னைய காதலிப்பேன்னு நான் கனவுல கூட நினைச்சுப் பார்த்தது இல்லைடி..." தன் மடியில் இருந்தவளிடம் அவன் மகிழ்வாய் கூற...

அவளிடம் இருந்து எந்தவித சத்தமும் வராது போகவும் அவன் குனிந்து அவளைப் பார்த்தான்... அவள் அவனது நெஞ்சில் சாய்ந்து நிம்மதியாக உறங்கி கொண்டிருந்தாள்... இத்தனை நாளாய் அவளிடத்தில் இருந்து மறைந்திருந்த புன்னகை, நிம்மதியை இன்று தான் அவளிடத்தில் மீண்டும் காண்கிறான்... அதைக் கண்டு அவனது மனதிற்கு அத்தனை நிறைவாக இருந்தது...

"உசிரோட கொல்லுறடி..." என்று கூறியபடி அவன் அவளது கன்னத்தில் முத்தமிட...

"சத்யா..." என்று சிணுங்கி கொண்டே அவள் அவனது நெஞ்சில் ஆழமாய் முகத்தைப் புதைத்து கொண்டாள்...

ஆழ்ந்த உறக்கத்திலும் தன்னை உணரும் மனைவியவளை கண்டு அவனது கண்கள் கலங்கியது... தூக்கத்தில் அவள் தன்னை உணர்கிறாள் என்றால் நனவில் வாழாத வாழ்க்கையை அவள் கனவில் அவனுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்று தானே அர்த்தம்... அதை நினைத்து மனதில் பாரமேறியவனின் விழிகள் அந்தப் பாரம் தாங்காது கண்ணீர் வடித்தது...

அவளைப் பொக்கிசம் போல் அவன் தன்னுடன் பத்திரமாய் இறுக்கி அணைத்துக் கொள்ள... அதில் அவள் சிறிது அசைந்தாள்... அதைக் கண்டு பயந்து போனவனாய் அவன் தனது இறுக்கத்தைத் தளர்த்திக் கொண்டு அவளைப் பூக்குவியல் போல் தனது கைகளில் ஏந்தி கொண்டு அங்கிருந்த அறையை நோக்கி சென்றான்... அறுவடை செய்து வந்த பணத்தில் அவளுக்காவே கட்டிலும், மெத்தையும் வாங்கிப் போட்டிருந்தான்... அதில் அலுங்காது அவளைப் படுக்க வைத்தவன் தானும் அவள் அருகில் படுத்துக் கொண்டான்...

விடிய விடிய அவன் தூங்காது அவளைப் பார்த்தபடி படுத்திருந்தான்... அவளைக் காண காண அவனுக்கு அத்தனை சந்தோசமாக, உற்சாகமாக இருந்தது... அவனது வாழ்க்கையில் வரமாய் வந்த தேவதை அல்லவா அவள்...

எப்போதும் போல் விடியற்காலையில் எழுந்த பத்மவர்ஷினிக்கு முதலில் தான் எங்கிருக்கிறோம் என்பதே புரியவில்லை... அருகில் தன்னைப் பார்த்தபடி படுத்திருந்த கணவனைக் கண்டதும் அவளுக்கு எல்லாம் புரிந்து போனது... நேற்று அவனிடத்தில் தான் பேசியது எல்லாம் அவளது ஞாபகத்திற்கு வந்தது... தன் மனதிலிருந்ததை எல்லாம் அவனிடம் கொட்டி தான் அழுததை நினைத்து பார்த்தவளுக்கு இப்போது அத்தனை வெட்கமாய்ப் போய்விட்டது... கணவனது முகத்தைப் பார்க்க இயலாது எழ போனவளை அவனது கைகள் பிடித்துத் தடுத்தது...

"எனக்கு இன்னும் உன் மேலுள்ள கோபம் போகலை சத்யா..." என்றாள் வீம்பாக...

"அப்படியா...? என்று கேட்டபடி அவளை வலுக்கட்டாயமாகத் தன் புறம் திருப்பித் தன் மீது இழுத்து போட்டு கொண்டவன்,

"என் கண்ணைப் பார்த்து சொல்லுடி பார்க்கலாம்..." என்று சவால் விட...

"ஏன் சொல்ல மாட்டேன்னு நினைப்பாக்கும்...? அப்படி எல்லாம் தப்பு கணக்கு போடாதே கருவாயா..." என்றபடி அவள் அவனது விழிகளை நேருக்கு நேர் சந்தித்தாள்... அவனது விழிகளில் வழிந்த காதலில் அவள் பேச்சற்று போனாள்...

"சொல்லுடி..." அவன் திரும்பவும் அவளிடம் சவால் விட...

எங்கே வாயை திறந்தால் காற்று தானே வந்தது அவளுக்கு...

அவளது பரிதாப நிலையைக் கண்டு அவன் வாய்விட்டு சிரித்தபடி அவளைத் தன்னுடன் இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்...

"பூனைக்குட்டி இன்னும் என் மேலுள்ள கோபம் போகலையாடி...?" அவளது காதோரம் கிசுகிசுத்தவனைக் கண்டு,

"கோபம் எல்லாம் இல்லை சத்யா... வருத்தம் தான்..." என்றாள் உண்மையை மறைக்காது... அவளது கை அவனது சட்டை பொத்தானை திருகி கொண்டிருந்தது...

"அதான் இப்போ நான் உன் கிட்ட வந்துட்டேன்ல..."

"வந்துட்ட தான்..." என்று ராகம் இழுத்தவளின் இதழ் மீது இதழொற்றி பேச விடாது தடுத்தவன்,

"வந்தாச்சு... சேர்ந்தாச்சு... இனி இது பத்தி நீ பேச கூடாது..." என்று அவன் கட்டளை போல் கூற...

"சரிங்க எஜமான்..." என்று நமட்டு சிரிப்புடன் கூறியவளின் இதழை லேசாகக் கடித்து விலகியவன்,

"யாருக்கு யாருடி எஜமான்...?" என்றான் போலி கோபத்துடன்...

"நீ தான்டா எனக்கு எஜமான்... நீ தான் என்னோட டிரைவரும் கூட..." என்று கிறக்க குரலில் கூறியவளின் வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தவன் அவளைத் திகைப்பாய் பார்த்து,

"அன்னைக்கு நீ டிரைவர்ன்னு சொன்னது இதை வச்சு தானா...?"

ஆமென்று தலையசைத்தவளின் தலை மீது செல்லமாய் முட்டியவன், "கோயம்பத்தூர் குசும்பு விடச் சென்னை லொள்ளு ஜாஸ்தியாயிருக்கே..." என்று அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

அவளும் அவனுடன் இணைந்து சிரித்தாள்...

"நீ என் கையணைப்பில் இருக்கிறது கனா மாதிரி இருக்குதுடி பத்மா..." என்று இன்னமும் பிரமிப்பு நீங்காதவனாய் கூறியவன்,

"நான் உன்னை ஏதாவது திட்டினாலோ, இல்லை கோபப்பட்டாலோ நீ என்னை விட்டு போயிர மாட்டேல்ல பத்மா..."

"த்ச்சு, ஏன் இப்படி எல்லாம் பேசுற சத்யா...? அப்படி எல்லாம் நான் உன்னை விட்டு போக மாட்டேன்..." என்று அவள் அவனை அணைத்துக் கொள்ள...

"நான் அப்படி ஏதாவது கிறுக்குத்தனம் பண்ணினேன்னா என்னை ரெண்டு அடி அடிச்சு திருத்து... இல்லைன்னா இந்தக் கிராமத்தானை காட்டானா நினைச்சு மன்னிச்சிருடி..." இதைக் கூறும் போதே அவனது விழிகள் கலங்கியது...

"உன்னை எல்லாம் திருத்த முடியாது சத்யா..." என்று உரைத்தவள் பேசும் அவனது உதடுகளைப் பேச முடியாதபடி செய்தாள்...

அவளது இதழொற்றலில் அவனது மனம் குளிர்ந்தாலும் அவனது அடிமனதினை ஏனோ ஒருவித பயம் பிடித்து ஆட்டுவித்தது... ஏனெனில் பத்மவர்ஷினியின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றார் போன்று அவனால் காதலை கொடுக்க முடியுமா...? என்று அவனுக்கு மிகுந்த கலக்கமாக இருந்தது...

பெண்ணவளை நன்கு புரிந்து கொண்டதால் வந்த கலக்கம் இது... அது போல் தன்னுடைய முரட்டு குண இயல்பை நன்கு தெரிந்து கொண்டதால் வந்த குழப்பம் இது...

மென்மையான தன்னவளை தனது வன்மை காயப்படுத்தி விடுமோ என்று அவன் பெரிதும் அச்சம் கொண்டான்...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 18

"ஏய் தூங்கு மூஞ்சி சத்யா...? இன்னுமா தூங்கிட்டு இருக்க...? எழுந்திருடா..."

பத்மவர்ஷினியின் வலதுகை கணவனது சிகையில் மென்மையாய் அலைபாய்ந்தது... அவளது விழிகளோ அவனை ஆதுரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது...

"ராத்திரி எல்லாம் நீ என்னைய தூங்கவிடலைடி பூனைக்குட்டி..." என்று கூறியபடி மனைவியின் மடியில் உருண்டு வந்து படுத்தான் சத்யமூர்த்தி...

"ஐயோ சத்யா, சத்தமா பேசாதே... அத்தை வெளியில் இருக்காங்க... அவங்க என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க...?" என்று அவள் வெட்கத்துடன் அறை கதவை பார்த்தபடி அவனது வாயில் கை வைத்தாள்... அவளது கையில் முத்தம் கொடுத்தவன்,

"என்ன நினைப்பாங்க...? நம்ம பையனை மருமக சந்தோசமா வச்சியிருந்தான்னு நினைப்பாங்க..." என்று அவன் கூற... அதைக் கேட்டு அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது...

நேற்று அவன் தன்னை நெருங்கி வந்ததும், தான் விலகி சென்றதும் அவளுக்கு நினைவு வந்ததில் அவளது விழிகள் கலங்கி போனது...

"சாரி சத்யா..." என்று அவள் கணவனிடம் மன்னிப்பு கேட்டாள்...

"எதுக்கு...?" என்று கேட்டபடி அவளது இடையை அணைத்துக் கொண்டு அவளது வயிற்றில் முகம் புதைத்துக் கொண்டான் சத்யமூர்த்தி...

அவனது செயல் அவளது இதயத்தில் சில்லென்று ஊடுருவி சென்றது... மெய்சிலிர்க்க அவனது தலையை வருடி கொடுத்தவள்,

"நான்... நேத்து..." என்று தடுமாறியவளை நிமிர்ந்து பார்த்தவன்,

"நானும் தானே வேண்டாம்ன்னு சொன்னேன்... இதுநாள் வரை உன்னைச் சரியா புரிஞ்சிக்காம இருந்துட்டேன்... இனியாவது உன்னைப் புரிஞ்சிக்க முயற்சி பண்றேன்... இது எனக்காக மட்டுமே நான் கேட்குற அவகாசம்... இதுக்கு எதுக்கு நீ மன்னிப்பு கேட்கிற...?" என்று தெளிவாக உரைத்த கணவனைக் கண்டு அவளது மனம் நெகிழ்ந்து போனது...

"அடப்பார்றா, என் மாமாவுக்கு இப்படி எல்லாம் கூடப் பேச தெரியுமா...?" என்று அவள் போலியாக வியந்தாள்..

"இதுக்கு மேலேயும் பேச தெரியும்..." என்று கூறியவன் சற்று எக்கி அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்து அவளின் மேனியின் வாசனையை விரும்பியே நுகர்ந்தபடி,

"என்னோட பூனைக்குட்டி மட்டும் எப்படி எப்போதும் இப்படி வாசனையா இருக்குது...?" என்று கேட்டபடி தன்னுள் புதைந்தவனைக் கண்டு அவள் மனம் நெகிழ்ந்தாலும்,

"சத்யா இப்போ டைம் என்னன்னு தெரியுமா...?"

"எத்தனை...?"

"பதினொரு மணி..."

"என்னது பதினொண்ணா...?" என்று அலறியபடி அவன் அவளை விட்டு விலகி அமர்ந்தான்...

"வயல்ல வேலை நிறைய இருக்கே..." என்றபடி எழுந்தவன் அறை கதவை நோக்கி சென்றான்...

அவன் பின்னோடு சென்று அவனை அணைத்து அவனது பரந்து விரிந்த முதுகில் அழுத்தமாய் முகம் பதித்து முத்தமிட்டவள், "போய்த் தான் ஆகணுமா...?" என்று கேட்க...

"போகாம இருக்கத்தான் ஆசை... ஆனா..." அவன் முடிக்கும் முன் குறுக்கிட்டவள்,

"வேலையிருக்கு அப்படித் தானே..." என்று கூறியவளை பின்னால் கை செலுத்தி தன்முன் கொண்டு வந்து நிறுத்தியவன்,

"உன் அப்பாரு அளவுக்கு இல்லைன்னாலும் என்னால் முடிஞ்சளவு உன்னை நல்லா வச்சுக்கணும்... அதுக்கு நான் இன்னும் கூடுதலா உழைக்கணும்... நேத்து நீயும் நானும் சந்தோசமா இருக்கணும்ங்கிறதுக்காக ஆத்தாவும், சரவணாவும் வெளியில் தங்கியிருக்காங்க... இப்படித் தினமும் வெளியில் தங்க முடியுமா...? முதல்ல இதுக்கு ஒரு முடிவு கட்டணும் பத்மா..." என்றான் அவன் தீவிரமான குரலில்...

அவன் சொல்ல வருவது அவளுக்கும் புரிந்தது... வீட்டின் பின்பக்கம் தனித்திருந்த குளியலறையில் குளித்து உடை மாற்றுவதற்குள் அவள் மிகவும் திணறி போனாள்...

"எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை சத்யா... நீ எதுக்காகவும் கவலைப்படாதே..." அவள் அவனுக்கு ஆறுதல் கூற...

"நீ என் கூட இருக்கும் வரைக்கும் எனக்குக் கவலையே இல்லைடி..."

"அப்போ ஓகே..." என்றவள் அவனது முதுகில் கை வைத்து வெளியில் தள்ள முயன்றபடி,

"போய் முதலில் குளி..." என்று அவனை விரட்டினாள்...

"இதெல்லாம் அநியாயம் பூனைக்குட்டி... குளிக்கப் போனவனைக் கூப்பிட்டு வச்சு வம்பிழுத்துட்டு... இப்போ போன்னு சொன்னா போயிருவோமா...?" என்று இழைந்தவனின் பிடியில் இருந்து நழுவியவள் அறையை விட்டு வெளியில் ஓடினாள்... அவன் அவளைக் கண்டு சிரித்தபடி குளிக்கச் சென்றான்...

"சத்யா, இங்கே வா..."

காலை உணவு முடித்துவிட்டு வயலுக்குக் கிளம்பிய கணவனை முறைப்புடன் தன்னருகே அழைத்தாள் பத்மவர்ஷினி...

"என்னம்மிணி...?" அவன் புரியாது அவளைப் பார்த்தபடி அவள் அருகில் வந்தான்...

"உனக்கு எத்தனை தடவை சொல்றது...?" என்று அவனைக் கடிந்தபடி அவனது சட்டையின் மேல் பொத்தானை அவள் போட்டு விட்டாள்... அதைக் கண்டு சிரித்தவன்,

"அங்கே வயலில் வேலை செய்யறப்போ சட்டையைக் கழட்டி வச்சிட்டு தான் வேலை செய்வேன்... அப்போ என்ன பண்ணுவ அம்மிணி...?" விசமமாய்க் கேட்டவனைக் கண்டு அவள் இன்னமும் அதிகமாய் முறைத்து பார்த்தாள்...

"இதுவரை நீ எப்படியோ எனக்குத் தெரியாது சத்யா... ஆனா இனிமேல் நீ இப்படி ஃப்ரீ ஷோ காட்டினா எனக்குப் பயங்கரமா கோபம் வரும்..." என்று அவள் கோபமாய்க் கூற...

"உனக்குக் கோபம் வரும்ன்னு தான் இந்த உலகத்துக்கே தெரியுமே அம்மிணி... ஆனா இந்தப் பயங்கரமான கோபம்ன்னா என்ன...? எப்படியிருக்கும்...?" என்று கேலி குரலில் கேட்டவனின் உயரத்திற்கு எம்பியவள்,

"இப்படி ரத்தத்தைக் குடிக்கும்..." என்று அவனது கழுத்தை நோக்கி அவள் தனது வாயை கொண்டு செல்ல... அவனோ அதைத் தடுத்து அவளது இதழ் மீது அழுத்தமாய் முத்தமிட்டு விலகியபடி,

"இப்படி உயிரை குடிக்கணும் பூனைக்குட்டி..." என்றான் கிறக்கமாய்...

"அது நீ நடந்துக்கிறது பொறுத்து இருக்கு... மதி கிட்ட பல்லை காமிச்ச மாதிரி வேறு யார் கிட்டேயாவது பல்லை காமிச்ச... உன்னைக் கொன்னுருவேன் கொன்னு..."

"உன்னைப் போல அழகு பொஞ்சாதி இருக்கும் போது வேற பொண்ணு தேடி போக நான் என்ன கூமுட்டையா...?" அவன் அவளது நெற்றியோடு முட்டி விளையாட...

"நான் அழகாயிருக்கேனா மாமா..." என்று கேட்டவளின் விழிகளில் அத்தனை எதிர்பார்ப்பு...

உலகமே அவளை அழகி என்று சொன்னாலும் தன்னவன் சொல்வதில் தானே அவளது மலர்ச்சி இருக்கிறது...

"நீ இப்படிக் கேட்கிறதே தப்பு பத்மா..." என்று கண்டிப்புடன் கூறியவனைக் கண்டு அவளது முகம் சூம்பி போனது...

"அவ்வளவு அழகிடி நீயி..." என்று கூறியபடி தனது முகம் முழுவதும் முத்தமிட்ட கணவனைக் கண்டு அவளது மனம் பாகாய் உருகி போனது...

"உண்மையாவா...?" மீண்டும் மீண்டும் கேட்டவளை அவன் முத்தத்தால் குளிப்பாட்டி அது உண்மை என்று அவளுக்கு நிரூபித்தான்...

"போதும் போதும், நீ கிளம்பு சத்யா..." என்று அவள் அவனைத் துரத்த...

"கிளம்பியவனைக் கூப்பிட்டு வச்சு வம்பிழுத்துட்டு... நீ செய்றது ஒண்ணும் சரியில்லை அம்மிணி..." என்று அலுத்துக் கொண்டே அவன் வயலுக்குக் கிளம்பி சென்றான்...

அவனை வழியனுப்பி விட்டு அவள் சிரித்தபடி வீட்டினுள் நுழைந்தாள்... சமையலறையில் வடிவழகி சமைத்து கொண்டிருப்பதைப் பார்த்து அவள் நேரே அங்கே போய் நின்றாள்...

"நான் ஏதாவது ஹெல்ப்... இல்லை, உதவி செய்யட்டுமா...?"

அவள் கேட்டதும் அவர் உடனே, "இந்தா..." என்று அருவாள்மனையைத் தூக்கி கொடுத்தவர்,

"காயை வெட்டு..." என்று கத்திரிக்காய், வாழைக்காயை அவள் பக்கம் நகர்த்தினார்...

அவளுக்குக் கத்தியில் காய் வெட்டி தான் பழக்கம் இருக்கிறது... அதனால் அவள் அருவாள்மனையை வேற்று கிரகவாசியைப் போல் புதினமாய்ப் பார்த்து வைத்தாள்...

"எப்படி வெட்டுறது...?" என்று கேட்டவளை ஒரு தினுசாய் பார்த்தார் வடிவழகி...

"இல்லை சொல்லி கொடுத்தா கத்துக்குவேன்..." என்று தன்மையாகக் கேட்டவளிடம் மேலே ஒன்றும் பேசாது அவர் அதன் செய்முறையை விளக்கி கூற... அவள் அப்படியே அதைச் செய்தாள்...

"நான் கிணத்துல போய்த் தண்ணி இறைச்சிட்டு வர்றேன்... நீ அடுப்பை கொஞ்சம் பார்த்துக்கோ..." என்றபடி வடிவழகி குடத்தை எடுத்துக் கொண்டு செல்ல...

"நான் வேணா உங்க கூட வரவா...?"

"வேண்டாம் தாயி... மாசமா இருக்கிற பொண்ணு பத்திரமா இருக்கணும்..." என்று அவளைத் தடுத்தவர் தான் மட்டும் சென்றார்...

அவரது வார்த்தையில் அவள் அப்படியே ஸ்தம்பித்துப் போனாள்... இந்தப் பொய் எத்தனை நாளைக்குத் தாக்கு பிடிக்க முடியும்... அவளுக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தது...

வடிவழகி அவளைச் சத்யமூர்த்திக்கு மதிய உணவு எடுத்துக் கொண்டு போகச் சொன்ன போது அவள் நிம்மதியுடன் சரியென்று சம்மதித்து விட்டாள்... வீட்டில் இருந்தால் இதைப் பற்றி நினைத்து நினைத்து அவள் மூர்ச்சையாகி போவாள்... அதனால் அவள் வெளியில் சென்று வர விருப்பப்பட்டாள்...

அவள் உணவு கொண்டு சென்ற போது சத்யமூர்த்தி அறுவடை முடிந்திருந்த நிலங்களை உழுது செப்பனிட்டுக்

கொண்டிருந்தான்... இடையில் தார்பாய்ச்சி போல் கட்டியிருந்த வேட்டியும், தலையில் துண்டுமாய் அவன் வேலை செய்து கொண்டிருந்த அழகினை கண்டு ரசித்தபடி அவள் அப்படியே நின்றுவிட்டாள்... வியர்வை வடிய அவன் இருந்த தோற்றம் கூட அவளை மயக்கத்தான் செய்தது... அவனிடத்தில் அப்படி என்ன இருக்கிறது என்று தான் இப்படி மயங்கி கிடக்கிறோம்? என்று அவளுக்குச் சத்தியமாய்த் தெரியவில்லை... அதே சமயம் அந்த மயக்கத்தினைத் தெளிய வைக்கவும் அவள் விரும்பவில்லை...

அதற்குள் சத்யமூர்த்தி அவளைப் பார்த்துவிட்டான்... எதிர்பாராது மனைவியை அங்குக் கண்டதும் அவனது விழிகள் வியப்பில் விரிய, முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது... தனது வேலையை நிறுத்திவிட்டுத் தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்தவன் அதைக் கொண்டு உடலின் வியர்வையைத் துடைத்தபடி அவளை நோக்கி வேக எட்டுக்கள் வைத்து முன்னேறினான்...

"நீ எதுக்கம்மிணி இந்த வேகாத வெயிலில் வந்திருக்க...? நானே வீட்டுக்கு வந்திருப்பேனே..." மூச்சு வாங்க பேசியவனின் விழிகள் அவளை நேசத்தோடு பார்த்தது...

"வீட்டில் இருந்தா போரடிக்குது... அதான் வந்தேன் சத்யா..." என்றவள் மாமியார் கொடுத்துவிட்ட உணவு அடங்கிய பாத்திரத்தை அவனிடம் நீட்டியபடி,

"நீ சாப்பிடு..." என்றாள்...

அதை வாங்கிக் கொண்டு அவன் மாமர நிழலை நோக்கி நடக்க... அவளும் அவனைப் பின்தொடர்ந்தாள்... அப்போது தான் அங்கு இருக்கும் ஊஞ்சலை அவள் கண்டாள்... அன்றொரு நாள் அவன் சந்திரமதியை வைத்து ஊஞ்சலாட்டியதை நினைத்து பேதை மனம் துவண்டு தான் போனது... அதை அவனுக்குக் காட்டாது அவள் சாமர்த்தியமாக மறைத்து கொண்டாள்...

"நீ உட்காரு... நான் கை கழுவிட்டு வர்றேன்..." என்றவன் கை கழுவ சென்றான்...

பம்பு செட் தண்ணீரில் கையைக் கழுவியதோடு உடலையும் கழுவி கொண்டிருந்த கணவனது தேக்கு மர தேக அழகினை மெய்மறந்து அவள் பார்த்திருந்தாள்... அவன் செய்யும் ஒவ்வொரு செயலும் அவளுக்குப் புதுமையாக இருந்தது... அதே சமயம் சுவாரசியமாகவும் இருந்தது...

திரும்பி வந்தவன் தரையில் அமர்ந்து கொண்டு, "சோத்தை கொண்டு வந்தா மட்டும் பத்தாது அம்மிணி... ஊட்டியும் விடணும்..." என்று அவன் அவளைப் பார்த்து கூறியபடி குறும்பாய் கண்சிமிட்டி சிரித்தான்...

அதில் நாணத்தில் முகம் சிவந்தவளை அவன் பார்வையால் கபளீகரம் செய்தபடி அவளது கையைப் பிடித்திழுத்து,

"உட்காரு அம்மிணி..." என்க...

"எனக்குக் கீழே உட்கார்றது ரொம்பக் கஷ்டம் சத்யா..." என்று தயங்கி கொண்டே கூறியவளை கண்டு அவன் சிரித்தபடி இழுத்து தன் மடி மீது அமர வைத்துக் கொண்டான்...

"ஐயோ, யாராவது பார்க்க போறாங்க..." என்று எழ போனவளை தடுத்து தன்னுடன் இறுக்கி கொண்டவன்,

"அவனவன் மாந்தோப்புக்குள்ள குடித்தனமே நடத்தறான்... நாம என்ன அப்படியா செய்யறோம்...?" என்று கேட்டு அவளை மேலும் வெட்கப்பட வைத்தவனை அவளும் இறுக அணைத்து கொண்டாள்...

அவன் ஏதேதோ பேசியபடி அவளுக்கும் ஊட்டிவிட்டு தானும் உண்டான்... என்ன பேசினார்கள் என்று இருவருக்கும் தெரியாது... என்ன உண்டார்கள் என்றும் இருவருக்கும் தெரியாது... சாப்பிட்டு முடித்துவிட்டு அவன் கை கழுவ சென்றுவிட... அவள் அந்த ஊஞ்சல் கயிறை பிடித்துக் கொண்டு அண்ணாந்து பார்த்து கொண்டிருந்தாள்...

மனதில் மீண்டும் மீண்டும் அந்தக் காட்சியின் ஊர்வலமே வலம் வந்து பாவையவளை உயிரோடு வதைத்தது...

"ஊஞ்சலாடுறியா பத்மா...?" திடுமெனக் காதருகில் ஒலித்த கணவனது குரலில் அவள் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தாள்...

பின்பு விழிகள் கலங்க அவனை ஏறிட்டு பார்த்தவள் 'வேண்டாம்' என்பது போல் தலையசைத்தாள்... அவளது கலங்கிய விழிகளைக் கண்டு அவனது கண்கள் யோசனையாய் இடுங்கியது...

அவளை மென்மையாய் அணைத்துக் கொண்டு நெற்றியோடு நெற்றி முட்டியபடி, "என்ன பத்மா...? உங்க வீட்டு ஞாபகம் வந்திருச்சா...?" நேற்று திருமணமான பெண் கண் கலங்கினால் அப்படித் தானே நினைக்கத் தோன்றும்...

'இல்லை' என்று அதற்கும் அவள் மறுப்பாய் தலையசைத்தாள்...

"இங்கே பாரு பத்மா... உன் அளவுக்கு நாசுக்கு எல்லாம் எனக்குத் தெரியாது... எதுவாக இருந்தாலும் மூஞ்சிக்கு நேரா சொல்லு அம்மிணி..."

"அது வந்து... ப்ச், வேண்டாம் விடு சத்யா..." என்றவள் கிளம்ப ஆயத்தமானாள்...

"சொல்லு பத்மா..." அவளை நகர விடாது அவளது கையை இறுக்கி பிடித்திருந்தான் அவன்...

"அன்னைக்கு மதியை நீ ஊஞ்சல் ஆட்டிவிட்ட இல்லையா...?" அதைச் சொல்லும் போதே அவளது விழிகளில் முணுக்கென்று கண்ணீர் எட்டிப்பார்த்தது...

"ஆமா, அதுக்கென்ன...? ஒரு தடவை, ரெண்டு தடவை இல்லை... பலமுறை..." என்றவன் அவளைப் புரியாது பார்த்தான்...

"உனக்கு என்னை விட அவளைத் தானே ரொம்பப் பிடிக்கும்..."

இப்போது அவளது கண்ணீருக்கான விடை அவனுக்குப் புரிந்து போனது... அடுத்த நொடி அவன் அந்த ஊஞ்சலில் ஏறியமர்ந்து கொண்டு தனது பூனைக்குட்டியை அலேக்காக இரு கைகள் கொண்டு தூக்கி தனது மடியில் அமர வைத்துக் கொண்டான்...

"ஹேய் சத்யா, என்ன பண்ற...?" என்று அவள் அலறும் முன் ஊஞ்சல் அந்தரத்தில் பறந்தது... அவள் பயத்துடன் அவனது கழுத்தினைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்...

"இப்போ உன் கேள்விக்கு நான் பதில் சொல்றேன்... மதியோட அப்பா இந்த ஊரு பண்ணையார்... அவர் மேல நான் ரொம்ப மதிப்பு வச்சியிருக்கேன்..."

"ஓஹோ, அது அப்படியே பொண்ணு மேலேயும் திரும்பிருச்சாக்கும்..." என்று அவள் நொடித்துக் கொள்ள...

"அது அப்படியில்லை பத்மா... ஒரு பொண்ணு சுத்தி சுத்தி வரும் போது மனசு அலைபாய்றது இயற்கை தானே..."

"ஆனா நான் அப்படியில்லையே சத்யா..." இதைச் சொல்லும் போதே அவளது குரல் கமறியது...

"நான் தான் என்னைக் காட்டான் சொல்லிட்டேனே... உன்னை மாதிரி எல்லாம் எனக்கு யோசிக்கத் தெரியாது... முறைப்பொண்ணு ஒருத்தி என்னைச் சுத்தி சுத்தி வந்தாள்... ரெண்டு வீட்டிலும் பெருசா எதிர்ப்பு இல்லை... அதனால் வந்த தைரியமா கூட இருக்கலாம்... ஆனா நீ வந்து எல்லாத்தையும் மாத்துவேன்னு நான் கனாவுல கூட நினைச்சது இல்லை..."

"ரொம்பக் கஷ்டமாயிருக்கா சத்யா...?" என்று கேட்டவள்,

"ஆனா நீ எனக்கு வேணும் சத்யா... அட் எனி காஸ்ட்..." என்றாள் முடிவாக, தீர்மானமாக...

"எப்போ உன் கழுத்துல தாலி கட்டினேனோ அப்பயிருந்து எனக்கு நீ மட்டும் தான்டி..."

"உண்மையாவா...?"

"உண்மையா தான்டி..." என்று காதலில் கசிந்துருகியவன் கன்னத்தில் அவள் சந்தோசத்துடன் முத்தமிட... அவனது முகத்தில் வழிந்த வியர்வை துளி அவளது இதழ் வழியே அவளது வாயினுள் சென்றது...

கணவனது வியர்வை துளி அவளுக்கு உப்பு கரிக்கவில்லை... மாறாகக் காதலில் தேனாய்த் தித்தித்தது...

"டேய் கருப்பட்டி, ச்சோ ஸ்வீட் டா நீ..." என்று கிறக்கமாய்க் கூறியவள் அவனது நெஞ்சில் சுகமாய் முகம் புதைத்துக் கொள்ள... மனைவியின் அருகாமையில் அவனது மனம் இறக்கை கட்டி கொண்டு பறந்ததில் ஊஞ்சல் இன்னமும் வேகமெடுத்தது...

அந்தக் கணம் அவனைத் தனக்கு எதற்காகப் பிடித்திருக்கிறது? என்பதினை அவள் அறிந்து கொண்டாள்... அவனுடன் இருந்தால் மட்டுமே தான் உயிர்ப்புடன் இருப்பதை அவள் இந்தக் கணம் நன்கு உணர்ந்தாள்... இயந்திரத்தனமான வாழ்க்கை முறையைக் கொண்டவளுக்கு உயிர்ப்பு அளித்தது அவன் தானே... தந்தை அவளது பிறப்பிற்கு வழி செய்தால் தன்னவன் அவளது பிறப்பிற்கான அர்த்தத்திற்கு அல்லவா வழி செய்து விட்டான்...

அவனது போலித்தனம் இல்லாத இயற்கையான வாழ்வு முறை அவளது போலி வாழ்க்கையின் செயற்கை பூச்சுக்களைத் தகர்த்தெறிந்து விட்டது... அதை உணர்ந்தவளாய் அவள் இன்னமும் அவனுள் புதைந்தாள்...

அவளது உச்சந்தலை மீது நாடி பதித்தவன், "இப்படியே இருக்கலாம்ன்னு தான் இருக்கு... ஆனா வேலையிருக்கே பூனைக்குட்டி..." என்று அவன் கரகரத்த குரலில் கேட்க...

"ம், போதும்..." என்று கூறியவள் நெற்றி மீது அழுந்த இதழ் பதித்து ஊஞ்சலை நிறுத்தியவன் முதலில் அவளை இறக்கிவிட்டு தானும் இறங்கி கொண்டான்...

"சரி நீ வீட்டுக்கு போ அம்மிணி..." என்க...

"இல்லை... நான் உன் கூடவே இருக்கேன்..."

"வெயில்ல கறுத்து போயிருவ பத்மா..."

"உன்னை மாதிரியாகிட்டு போறேன்... எனக்கு இந்தக் கருப்பட்டியை தான் ரொம்பப் பிடிச்சிருக்கு..." என்று அவனை உரசி கொண்டு கூறியவளை கண்டு,

"எனக்கு இந்த வெள்ளை பூனைக்குட்டிய தான் ரொம்பப் பிடிச்சிருக்கு... உன்னை மாதிரியே நம்ம குழந்தைகளும் வெள்ளையா பிறக்கணும்..." என்றவனது விழிகள் குழந்தை ஆசையில் மின்னியது...

"ம், ம்... சரி... நீ சொல்றதால் கேட்கிறேன்..." என்றவள் பாத்திரங்களைக் கையில் எடுத்துக் கொண்டு நடந்தாள்... அப்போது உழுது கொண்டிருந்த நிலத்தைப் பார்த்தவள்,

"அடுத்து என்ன பயிர் செய்யப் போகிற சத்யா...?" என்று ஆர்வத்துடன் கேட்க...

"ஏதாவது ஊடு பயிர் போடணும்..."

"ம்... நல்ல ஐடியா தான்... ஆனா நான் ஒண்ணு சொன்னா கேட்பியா...?"

"சொல்லு அம்மிணி..." என்றபடி அவன் அவளைப் பின்தொடர்ந்து நடந்து வந்தான் வரப்பின் மீது...

"நம்ம கிட்ட இருக்கிறது கொஞ்ச நிலம் தான்... அதில் அதிக விளைச்சலை கொடுக்கிற விவசாய முறையை நாம பயன்படுத்தினா என்ன...?"

"நிலம் பாதிக்காதா...?"

"ம்ஹூம் பாதிக்காது... இதுக்குன்னு சில டெக்னாலஜி இருக்கு... அத்தோடு இயற்கை உரத்தை பயன்படுத்தி நாம விளைச்சல் பண்ணினோம்ன்னா நம்ம பொருளுக்குத் தான் சந்தையில் கிராக்கி அதிகம் இருக்கும்..." தான் ஒரு

தொழிலதிபர் என்று அவள் விவசாயத்திலும் நிரூபித்தாள்...

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும் அம்மிணி...?" அவனுக்கு மனைவியைக் குறித்துப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

அவள் நின்று பின்னால் சாய்ந்து அவனது கழுத்தில் இருந்த துண்டை இழுத்து அவனைத் தன்னருகில் வர செய்தவள் அவன் மீது சாய்ந்து கொண்டு,

"எப்போ நீ தான் என் வாழ்க்கைன்னு நான் தீர்மானிச்சிட்டேனோ அப்பவே நானும் ஒரு விவசாயியா மாறிட்டேன்..." என்றாள் அவள் காதல் பொங்க...

தன்னைப் போல் மண்ணை நேசிக்கும் மனைவியைக் கண்டு அவனது காதல் பெருக்கெடுக்காது இருந்தால் தான் அதிசயம்... தனது கைகளை முன்னால் செலுத்தி அவளது இடையோடு சேர்த்து அணைத்தவன்,

"நீ என் வாழ்க்கையில் வந்த தேவதைடி..." என்றான் அவன் அவளது காதோரமாய்க் கிசுகிசுப்பாய், காதலாய்...

"என்ன மருமகனே, நட்ட நடு வயக்காட்டுல பொஞ்சாதி கூடக் கொஞ்சி குலாவிக்கிட்டு இருக்க..." அங்கே வந்த பெருசு ஒன்று அவனிடம் கிண்டலாய் கேள்வி கேட்க... அவனோ என்ன பதில் சொல்வது என்று தெரியாது விழித்தான்...

"உங்க மருமகன் கருப்பட்டி மாதிரி இனிக்கிறாரு... அதான் சாப்பிட்டு பார்க்கலாம்ன்னு பார்த்தேன்..." என்று அவரிடம் உரக்க கூறியவள் கணவனைக் கண்டு கண்சிமிட்டியபடி அவனது கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டுவிட்டு அங்கிருந்து ஓடினாள்...

"மகளே, மருமகன் இனிக்கிறானா...? இல்லை கசக்கிறானா...?" என்று அவர் அவளைக் கிண்டலடிக்க... அதைக் கேட்டு சத்யமூர்த்தி வெட்கத்துடன் அசடு வழிந்தான்...

"உங்க மருமகன் இனிச்சதால தானே கல்யாணம் கட்டிக்கிட்டு இருக்கேன்..." பதிலுக்கு அவளும் கிண்டலடித்தபடி சென்றுவிட்டாள்...

'இந்தப் பூனைக்குட்டிக்கு இருக்கிற குசும்பு இருக்கே...' என்று அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

*********************

அகல்யா கணவனுக்காகக் காத்திருந்தாள்... தங்கை திருமணம் முடிந்ததில் இருந்து யுகேன் அவளிடம் சரியாகப் பேசுவது இல்லை... அவனுக்குத் தன் மீது கோபமோ என்று அவள் மனதிற்குள் பயத்துடன் அவனை எதிர்பார்த்திருந்தாள்... இப்போது இந்தக் கணம் அவளது மனதில் அவன் மீது எந்தவித கோபமும் இல்லை... எந்தவொரு காரணத்திற்காகவும் அவளை விட்டு கொடுக்க முடியாது என்று அவன் அவளுக்காகத் தன் தந்தையை எதிர்த்து நின்றானோ அப்போதே அவளது மனம் கணவனிடத்தில் மொத்தமாய்ச் சரணடைந்து விட்டது...

யுகேன் எப்போதும் வரும் நேரத்திற்கு அறைக்குள் நுழைந்தான்... அவன் குளித்து முடித்து, சாப்பிட்டு முடிக்கும் வரை அவள் அமைதி காத்தாள்... அறைக்குள் வந்தவன் அவளது முகத்தினை நிமிர்ந்து பார்க்காது பால்கனியில் போய்த் தஞ்சம் புகுந்து கொண்டான்... அதைக் கண்டு அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது... அவளும் அவனைப் பின்தொடர்ந்து பால்கனிக்கு சென்றாள்...

அங்கு நாற்காலியில் அமர்ந்து கொண்டு வானத்தை வெறித்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டு அவளுக்குத் துக்கம் பொங்கியது... அடுத்த நொடி அவள் அவன் முன் மண்டியிட்டு அமர்ந்து அவனது மடியில் முகம் புதைத்து கொண்டாள்... அவளது இந்தச் செயலை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை...

"ஏய், என்ன பண்ற...?" அவன் பதறி போய் அவளைத் தூக்கினான்...

"நீங்க என்னை மன்னிச்சிட்டேன்னு சொல்லுங்க..."

"மன்னிக்கும்படி நீ எந்தத் தவறும் செய்யலையே அகல்ம்மா..." என்றவனது குரல் தழுதழுத்து ஒலித்தது...

அவனது குரலில் தெரிந்த பேதத்தில் அவள் சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவளுக்குத் தான் வருத்தம் அதிகம் இருக்கிறது... அவனுக்கு ஏன்...?

"நீங்க ஏன் வருத்தப்படுறீங்க...?" என்று அவள் அப்பாவியாய் அவனிடத்தில் வாய்விட்டு கேட்டு விட்டாள்...

"உன் அண்ணன் செஞ்சதுக்கும், நான் செஞ்சதுக்கும் அதிக வித்தியாசம் இல்லை அகல்ம்மா..." என்று கூறிய யுகேன் மனைவி முகம் பார்க்க முடியாது வானில் தெரிந்த நிலவினை வெறித்தான்...

"அப்படியெல்லாம் இல்லை மாமா..." அவளது 'மாமா' என்ற விளிப்பில் கண்கள் பளபளக்க அவளைத் திரும்பி பார்த்தவன்,

"அப்படிச் சொல்வது உன்னோட பெருந்தன்மையா இருக்கலாம்... ஆனால் நான் பண்ணியதும் தவறு தானே... வர்ஷூ உன் அண்ணனை விரும்பியதால் எல்லாம் சரியா போச்சு... இல்லையென்றால் வர்ஷூ நிலை...?" என்றவன் அவளது விழிகளுக்குள் உற்று பார்த்தபடி,

"உன்னைப் போன்று தானே இருந்திருக்கும்..." என்றான் அழுத்தம் திருத்தமாய்...

அவனது வார்த்தைகளில் அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்...

"பிடிக்காதவன் கட்டிய தாலி, பிடிக்காதவனுடனான வாழ்க்கை... நீ தைரியசாலி என்பதால் என்னை எதிர்த்து நிற்கிறாய்...? இல்லையென்றால்...?" என்றவன் மிகுந்த வருத்தத்துடன்,

"இப்போது உன் உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது... அன்று நீ எனக்குக் கொடுத்த தண்டனை மிகச்

சரியே..." என்றவனது இடதுகை தனது வலது உள்ளங்கையை வருடி விட்டது...

"அது உங்களைப் பத்தி தெரியாம செஞ்சது... என்னை மன்னிச்சிருங்க மாமா..." என்று அவள் மன்னிப்பு கேட்டபடி அவனது வலது உள்ளங்கையில் வேக வேகமாய் முத்தமிட்டு அன்று தான் ஏற்படுத்திய காயத்திற்கு இன்று அவளே மருந்திட்டாள்...

அவளது செயலில் அவனது மனம் குளிர்ந்ததோ...! அவனது முகத்தில் புன்னகை எட்டிப்பார்த்தது...

"இப்போ மட்டும் என்னைப் பத்தி உனக்கு என்ன தெரியும்...?" குறும்பு கூத்தாடியது அவனது குரலில்... அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் முகத்தில் காதல் வழிந்தது...

"நீங்க ரொம்ப நல்லவங்கன்னு தெரியும்..."

"அப்படியா...? கொஞ்ச நாளைக்கு முன்னாடி யாரோ சொன்னாங்க நான் ஜொள்ளன், பொம்பளை பொறுக்கின்னு..."

அதைக் கேட்டு அவளது முகம் கறுத்துப் போனது... ஆனாலும் உடனே சமாளித்துக் கொண்டு,

"அது போன மாசம்... இது இந்த மாசம்..." என்றாள் மழுப்பலாக...

"ஆனால் இன்னும் உன்னோட அந்த ஸ்டேட்மெண்ட் அப்படியே தான் இருக்கு..." என்றான் யுகேன் சன்ன சிரிப்புடன்...

"இருந்துட்டு போகட்டுமே... முதலில் நீங்க எப்படியோ... ஆனா இனி அது மாதிரி நடந்தீங்கன்னா..." என்றவள் நிறுத்திவிட்டு அவனை ஆழ்ந்து பார்த்தாள்...

"நடந்தா என்னடி பண்ணுவ...?" என்று அவன் ஒற்றைப் புருவத்தைக் கேலியாய் உயர்த்த... அவளோ கோபத்துடன் அவனது டீசர்ட்டின் காலரை பற்றியபடி,

"அப்படிப் போய்த் தான் பாரேன்டா... அடுத்த நிமிசம் நான் உன்னை வெட்டி பொலி போட்டுருவேன்..." என்று அவள் தைரியமாகக் கணவனை மிரட்டினாள்...

"ஐயோ கொலையும் செய்வாள் என் பத்தினி... யாராவது என்னைக் காப்பாத்துங்க..." என்று அவன் போலியாக அலறினான்... சட்டென்று அவன் வாய் மீது கை வைத்து பொத்தியவள் கண்களை உருட்டியபடி,

"வெள்ளப்பன்னி சத்தம் போட்ட கொன்னுருவேன் கொன்னு..." என்றவளது உள்ளங்கை மீது அவன் நச்சென்று இதழ் பதிக்க... அவள் திகைத்து போய் அவசரமாய்த் தனது கையை எடுத்து கொண்டாள்...

"இந்த வார்த்தையை உன் வாயிலிருந்து வரவழைக்க நான் எப்படி எல்லாம் போராட வேண்டியிருக்கு...?" என்று கேலியாய் சிரித்தவன் அவளை எழுப்பித் தனது அருகில் அமர்த்திக் கொண்டான்...

"மாமா, என்னை உங்களுக்குப் பிடிக்குமா...?" அவளது கேள்வியில் அவன் குபீரென்று சிரித்துவிட்டான்...

"இப்படித் திடீர்ன்னு மாமான்னு எல்லாம் கூப்பிட்டு மாமனுக்கு ஹார்ட் அட்டாக் வரவழைக்காதே கில்மா..." என்று அவன் கூற...

"போங்க மாமா..." என்று சிணுங்கியவளை தன்னுடன் அணைத்து கொண்டவன்,

"உன்னோட வெள்ளப்பன்னி தான்டி அவ்வளவு கிக்கா இருக்கு..." என்று கிறக்கத்துடன் கூறியவனின் கிறக்கம் அவளுள் சொட்டு சொட்டாக இறங்கியது... தானாக அவளது தலை அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டது...

"உன்னைப் பிடிக்காமல் தான் உன் கூடச் சண்டை போட்டாலும் ஒரே ரூமில் இருக்கிறேனா...?" என்றவனை வியப்பாய் அவள் ஏறிட...

"பிடிக்கும்டி... உன்னை மட்டும் தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்..." என்றவனது நேசத்தினை அவளும் உணர்ந்தாள்...

"அதே போல் உனக்கு என்னைப் பிடிக்குமா...?" அதைக் கேட்டு அவள் களுக்கென்று சிரித்தாள்...

"என்னடி...?" பரிதாபமாகக் கேட்டவனைக் கண்டு,

"நான் இப்படி இருக்கும் போதே தெரியலையா...?"

"ஹி, ஹி, அதானே..." என்று அவன் அசடு வழிய...

"போதும் போதும்... துடைச்சுக்கோங்க..." என்றவளை கண்டு புன்னகைத்தவன் அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான்...

சிறிது நேரம் மௌனத்தில் கழிந்தது... அவள் தான் மெல்ல அவனிடத்தில் கேட்டாள்...

"தூங்க போகலாமா...?"

"ம், போ..." என்றவன் தனது கைகளை விலக்கினான்...

"நீங்க...?" தன்னைக் கேள்வியாய் ஏறிட்டவளின் பார்வையின் அர்த்தம் புரிந்தவனாய் அவளது இமை மீது முத்தமிட்டவன்,

"இன்று தான் நான் நிம்மதியா தூங்க போகிறேன்... இப்போ நீ போய்த் தூங்கு..." என்க...

"எப்படி முதலில் மாதிரி காலையில் பத்து மணி வரை தூங்க போறீங்களா...?" எழுந்து நின்று கொண்டு அவள் துடுக்குத்தனமாகக் கேள்வி கேட்க...

"கிண்டலாடி உனக்கு...?" என்று அவன் அவளை எட்டிப்பிடிக்க வர... அவள் சிட்டாக அறைக்குள் பறந்து சென்று மறைந்தாள்...

அவளைப் பின்தொடர்ந்து உள்ளே ஓடி வந்தவன் அவளைத் தனது கைகளால் சிறைப்பிடித்துக் கொண்டு அப்படியே

கட்டிலில் விழுந்தான்... அவனது முகமும், அவளது முகமும் வெகுஅருகில்... அவள் அவனை இமைக்காது பார்த்திருந்தாள்... அவன் சட்டென்று அவளது நெற்றியில் இதழ் பதித்து,

"நமக்கான காலம் நீண்டு இருக்கு... இப்போ நீ தூங்கு..." என்க...

"மாமா, நீங்க அவ்வளவு நல்லவனா...?" என்று குறும்பு குரலில் கேட்டு அவள் சிரிக்க...

"இந்த மாமன் எவ்வளவு கெட்டவன்னு போகப் போக நீ பார்ப்ப... இப்ப பேசாம தூங்குடி..." என்று அவன் அவளை அதட்ட...

அவள் முகம் சுணங்கியபடி அவனை விட்டு விலகி கண்மூடி திரும்பி படுத்து கொண்டாள்... அடுத்த நொடி அவன் அவள் அருகில் வந்து அவளை அணைத்துக் கொண்டு,

"எனக்கு உன்னைக் காதலிக்கணும் போலிருக்கு கண்ணம்மா... அதுக்காகத் தான் கொஞ்ச நாள் அவகாசம் கேட்கிறேன்..." என்று அவளது காதோரம் ரகசியம் போல் அவன் கிசுகிசுக்க...

அவள் வியப்புடன் கணவனைப் பார்த்தாள்...

"ஆமாம்டி, நான் உன்னைத் திகட்ட திகட்ட காதலிக்கணும்... அதுக்குப் பிறகே நமக்கான வாழ்க்கையை நாம் வாழ ஆரம்பிக்கணும்... நீ எனக்காகக் காத்திருப்பியா கண்ணம்மா...?"

"நிச்சயமாய்..." என்று கூறியவளை அணைத்துக் கொண்டு அவன் படுக்க... அவளும் அவனது அணைப்பில் நிம்மதியாய் உறங்கி போனாள்...

******************

அன்றிரவு சத்யமூர்த்தி வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்... வீட்டினுள் மனைவியைக் காணாது அறைக்கு வந்தவன் அங்கு மின்விளக்குப் போடாமல்

இருப்பதைக் கண்டு அவன் யோசனையுடன் விளக்கை உயிர்ப்பித்தான்... அங்குக் கட்டிலில் முழங்காலில் முகம் புதைத்திருந்த மனைவியைக் கண்டு அவன் பதறி போனவனாய் அவள் அருகே சென்றான்...

" பத்மா..."

அவனது அழைப்பில் அவள் மெல்ல தலை நிமிர்ந்தாள்... அவளது முகத்தைப் பார்த்து அவன் பெரிதும் அதிர்ந்து போனான்... ஏனெனில் அழுதழுது அவளது முகமும், விழிகளும் சிவந்து போயிருந்தது...

"என்னடி ஆச்சு...?" அவள் அழுதது கண்டு அவனுக்கு அத்தனை ஆற்றாமையாக, துக்கமாக இருந்தது...

"அதை நான் சொல்றேன் சத்தி..." என்றபடி வடிவழகி அங்கே வந்தார்...

மாமியாரை கண்டதும் பத்மவர்ஷினி எழுந்து நின்றாள்... அவளது தேகம் பயத்தில் நடுங்கியது... சத்யமூர்த்தி அன்னையைக் கூர்மையுடன் நோக்கினான்...

அப்போது வடிவழகி பத்மவர்ஷினி அழுவதற்கான காரணத்தைக் கூறினார்... அவ்வளவு தான் அதைக் கேட்ட அடுத்த நொடி சத்யமூர்த்தி ருத்ரமூர்த்தியாய் மாறி போனான்...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 19

"ஆத்தா..." என்று சத்யமூர்த்தி அலறியதில் வடிவழகி சற்று பயந்து தான் போனார்...

விசயம் இது தான்... மருமகள் குழந்தை உண்டாகவில்லை... வீட்டிற்குத் தூரமாகி இருக்கிறாள் என்று கேள்விப்பட்டதும் அவர் கோபத்தில் பத்மவர்ஷினியிடம் ஆடி தீர்த்துவிட்டார்...

"எதுக்கு இப்படி ஒரு பொய் சொல்லி எம் மவனை ஏமாத்துனவ...? உன்னால அவன் பேரு ஊருல நாறி போச்சு... எனக்கு அப்பவே தெரியும் எம் மவன் சத்தி சொக்கத்தங்கம்ன்னு... ஆனா படுபாவி உன் பேச்சை நான் கூட நம்பிட்டேனே... நீ எல்லாம் ஒரு பொம்பளை தானா...? அதுவும் குழந்தை விசயத்தில் யாராவது பொய் சொல்வாங்களா...? இதுக்கே இப்படி ஒரு பொய் சொன்னேனா... இனி எப்படி எல்லாம் பொய் சொல்லி மாய்மாலம் பண்ணுவ... இனிமே நீ ஒரு நிமிசம் கூட இங்கே இருக்கக் கூடாது... உன் வூட்டுக்கு பொட்டிய கட்டு... எம் மவனை ஏமாத்துனவ இந்த வீட்டு மருமகளா இருக்க வேணாம்... சத்திக்கு வேற நல்ல பொண்ணா பார்த்து நான் கட்டி வைக்கிறேன்... முதல்ல நீ கிளம்பு..."

ஒரு தாய்க்கு வரும் நியாயமான கோபம் அவருடையது... அதனால் அவர் மகனது பார்வையில் இருந்து இந்த முடிவை எடுத்துவிட்டார்...

"சத்யா வரட்டும்... அவன் என்னைப் போகச் சொன்னா நான் போகிறேன்..." என்ற பத்மவர்ஷினி அதற்கு மேல் அவரிடம் எதுவும் வாதாடவும் இல்லை... சாப்பிடவும் இல்லை... ஆனால் அழுது கொண்டே இருந்தாள்...

சத்யமூர்த்தி வந்ததும் வடிவழகி விசயத்தைக் கூற... அவனோ அவரிடம் கோபம் கொண்டான்...

"இப்போ எதுக்குத் தேவையில்லாம பத்மாவை இப்படிப் பேசியிருக்கீங்க...?"

"அந்தப் புள்ள பண்ணுனது தப்பு தானே சத்தி... இதுக்கே இப்படி ஒரு பொய் சொல்லுரவ நாளைக்கு என்னென்ன பொய் எல்லாம் சொல்லுவாள்..." என்று மோவாயில் அவர் கை வைக்க...

"ஆமாம், இங்கே தங்கமும், வைரமும் கொட்டி கெடக்குது... அவ பொய் சொல்லி அதை எல்லாம் அள்ளிட்டு போக வந்திருக்கா... ஆத்தா, என் வாயில் நல்ல வார்த்தை வந்திர போகுது..." என்று கோபமாய்ப் படபடத்தவன் பின் சற்று நிதானித்து,

"எனக்கு இந்த விசயம் முதலிலேயே தெரியுமாத்தா..." என்றான் அமைதியாக...

"சத்தி..."

"தெரிஞ்சு தான் நான் பத்மா கழுத்தில் தாலி கட்டினேன்..."

"அன்னைக்கே சொல்லியிருந்தா நான் இந்தக் கல்யாணத்தை நிறுத்தி இருப்பேனே..." என்று அவர் புலம்ப...

"நான் தான் சொன்னேனே... நீங்க தான் என்னைய நம்பலை..."

"இந்த விசயத்தில் பொட்டப்புள்ள பொய் சொல்லாதுன்னு நினைச்சேன் சத்தி... ஆனா உம் பொஞ்சாதி பலே கைக்காரி தான்..." என்றவர் பத்மவர்ஷினியை முறைத்து பார்த்தார்...

"இங்கே பாருங்க ஆத்தா, முடிஞ்சது முடிஞ்சதா இருக்கட்டும்... பத்மா எம் மேல ஆசைப்பட்டுத் தான் கல்யாணம் பண்ணியிருக்கா... வேற எந்த உள்நோக்கமும் இல்லை... அவளுக்கு என்னைய அந்தளவுக்குப் பிடிக்கும்... அதுக்காகத் தான் இந்தப் பொய்யை சொல்லியிருக்கா... இப்படிப்பட்ட ஒரு பொண்ணுக்காக எதை வேணும்னாலும் தாங்கிக்கலாம்... இதை நான் தாங்கிக்கக் கூடாதா...?"

மகன் இப்படிக் கேட்டதும் வடிவழகி ஒன்றும் பேசாது அமைதியாகி போனார்...

"எங்க வாழ்க்கையை நாங்க பார்த்துக்கிறோம்... தயவுசெஞ்சு நீங்க இதுல தலையிடாதீங்க ஆத்தா..." என்று கூறியவனைக் கண்டு,

"சரி சத்தி... நீ பார்த்துக்குவன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றவர் அங்கிருந்து சென்றுவிட்டார்...

அன்னை சென்றதும் அறை கதவை சாத்திவிட்டு வந்த சத்யமூர்த்தி மனைவியைப் பார்த்து இருகரம் விரித்து விழியால் வாவென அழைத்தான்... அடுத்த நொடி அவள்,

"சத்யா..." என்று சிறுகூவலுடன் அவனிடத்தில் சரண் புகுந்தாள்...

அவன் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்... அவனது ஆறுதலில் அவள் உடைந்து போய் அழுதாள்...

"பத்மா, எதுக்கு இந்த அழுகை...? நான் தான் உன்னை ஒண்ணும் சொல்லலையே... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா...?" என்று அவளது முதுகை நீவி விட்டு, அவளது தலையை வருடி கொடுத்து அவன் ஆறுதல்படுத்தினான்... ஆனாலும் அவளது அழுகை நின்றபாடில்லை...

வலுக்கட்டாயமாகத் தனது நெஞ்சில் இருந்து அவளது முகத்தைப் பிரித்தெடுத்தவன் கலைந்திருந்த அவளது தலைமுடியை கோதி கொடுத்து சரி செய்து, அழுத விழிகளைத் துடைத்து விட்டு அவளது முகத்தைத் தனது இரு கைகளில் தாங்கியவன் அவளது விழிகளுக்குள் பார்த்தபடி,

"இங்கே பாரு பூனைக்குட்டி, நீ அழுதா எனக்கும் அழுகை வருது... அப்புறம் ஒரு ஆம்பிளைய அழ வச்ச பாவம் உன் கணக்கில் தான் சேரும்..." என்றவனது விழிகளும் கலங்க ஆரம்பித்தது...

கணவனது கண்கள் கலங்கியது கண்டு அவளது அழுகை ஸ்விட்ச் போட்டார் போன்று அப்படியே நின்று போனது...

"இல்லை, நான் அழலை... நீயும் அழாதே..." என்று தேம்பியவளை அவன் மீண்டும் தன்னுடன் அணைத்துக் கொண்டான்...

"நீ எதுக்கும் அழுது நான் பார்த்தது இல்லைடி பூனைக்குட்டி... ஆனா எனக்காக நீ ஒவ்வொரு தடவையும் கண்ணீர் வடிக்கிறதை பார்க்கும் போது எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு... என்னால் உன்னை நல்லா வாழ வைக்கத்தான் முடியலை... ஆனா உன்னை அழாம சந்தோசமா வச்சுக்கணும்ன்னு பார்க்கிறேன்... அதுவும் முடிய மாட்டேங்குது... நீ என்னைக் காதலிச்சும் இருக்க வேண்டாம், கல்யாணமும் பண்ணியிருக்க வேண்டாம்... நீ இப்படிக் கஷ்டப்படுறதை என்னால் கண்கொண்டு பார்க்க முடியலைடி..." என்றவனது விழிகள் தனது கலக்கத்தை நிறுத்தவில்லை...

அவன் கூறியதை கேட்டு அவள் கோபத்தில் எம்பி அவனது கன்னத்தை நறுக்கென்று கடித்து வைத்தாள்...

"ஆஆஆஆஆ... பூனைக்குட்டி எதுக்குடி இப்படிக் கடிச்சு வச்ச...? வலிக்குதுடி..."

"வலிக்குதா...? நல்லா வலிக்கட்டும்... நீ பேசிய பேச்சும் எனக்கு இப்படித்தான் வலிக்குது..." என்று விழி கலங்கியவள் அதை அவனுக்குக் காட்டாது மறைத்துக் கொண்டு,

"நான் யாரை காதலிக்கணும், கல்யாணம் பண்ணணும்ன்னு நீ சொல்ல கூடாது... அதை நான் தான் முடிவு பண்ணணும்... என்ன புரிஞ்சதா...?" பழைய பத்மவர்ஷினியாய் மாறி அவனை அதிகாரம் பண்ணியவளை கண்டு அவனது தலை தானாகச் சரியென்பது போல் அசைந்தது...

"தட்ஸகுட்..." என்றவள் தனது இரு கரங்களை அவனது கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டு அவனது முகத்தைத் தன்னருகே இழுத்தவள்,

"எனக்கு இந்தக் கருவா பயலை தான் ரொம்பப் பிடிச்சியிருக்கு... காதலிச்சா இந்தக் கருவா பயலை தான் காதலிக்கணும்... கல்யாணம் பண்ணினா இவனைத் தான் பண்ணணும்ன்னு பெரிய சபதமே எடுத்திருந்தேன்... அது தெரியாம நீ என்ன வேணா பேசுவியா...? சரி, இனிமேல் நான் அழ மாட்டேன்... அதுவும் உனக்காக... ஓகேவா...?" என்று விழிகளில் நேசம் கசிய பேசியவளின் வார்த்தைக்கு மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் அவன் மயங்கி போய் நின்றிருந்தான்...

"நீ இவ்வளவு காதல் வைக்கிற அளவுக்கு என் கிட்ட என்னடி இருக்கு...? உன் அளவுக்கு ஒண்ணுமே இல்லையே..."

"அது நிறைய இருக்கு... அது என்னலாம்ன்னு கட்டாயம் உனக்குச் சொல்றேன்... ஆனா இப்போ இல்லை..."

"என்னமோ போ... எல்லாமே கனா மாதிரியிருக்கு பூனைக்குட்டி..."

"எல்லாம் கனவா...? இது ரொம்பத் தப்பாச்சே..." என்றவள் அவனது முகத்தருகே தனது முகத்தினைக் கொண்டு செல்ல... அவனோ ஆர்வத்துடன் அவளைப் பார்த்திருந்தான்...

"அண்ணி..." சரவணன் அறை கதவை தட்டினான்... அதில் அவள் விலக... அவனோ அவளை இடையோடு சேர்த்து அணைத்துக் கொண்டு விட மறுத்தான்...

"நீ கொடுத்த மாதிரி ஃப்ரெஞ்சு கிஸ் கொடுக்கிறேன்... இப்போ விடு சத்யா..." என்று இறைஞ்சும் குரலில் அவள் கேட்க...

"அண்ணி, உங்கப்பா ஃபோன்ல வெய்ட் பண்றாங்க..." சரவணன் கத்தியதும் சத்யமூர்த்திச் சட்டென்று தனது கைகளை விலக்கி கொண்டான்...

"போ பத்மா..."

அடுத்த நொடி பத்மவர்ஷினி விரைந்து சென்று அறை கதவை திறந்தாள்... சரவணன் தனது அலைப்பேசியை அண்ணியிடம் கொடுத்து விட்டு சென்றுவிட்டான்...

"ஹாய் டாட், ஹவ் ஆர் யூ...?" என்று சிரித்தபடி தந்தையிடம் பேசி கொண்டிருந்த மனைவியைப் பார்த்தபடி அவன் கட்டிலில் அமர்ந்தான்...

ஆங்கிலத்தில் உரையாடும் மனைவியின் தோற்றம் இப்போது அதற்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாது இருப்பதைக் கண்டு அவனது மனம் வேதனையுற்றது... சாதாரணப் பருத்தி புடவை, கைகளில் கண்ணாடி வளையல்கள், காது, கழுத்தில் பேருக்குத் தங்கம் கிடந்தது... அவன் கட்டிய மஞ்சள் கயிறு தான் பெரிதாகத் தெரிந்தது... அவளது எளிய தோற்றம் கண்டு அவனுக்குப் பெருத்த வருத்தமாக இருந்தது...

தந்தையிடம் பேசி முடித்துவிட்டு வந்த பத்மவர்ஷினி கணவன் அருகில் அமர்ந்து அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்...

"சத்யா..."

"ம், சொல்லு..."

"டாட்க்கு தனியா கம்பெனி நடத்த கஷ்டமா இருக்காம்... யுகேன் அந்தளவுக்குப் பொறுப்பா பார்த்துக்க மாட்டேங்கிறானாம்... அதனால் என்னைக் கொஞ்சம் வொர்க் பார்த்துக்கச் சொல்றாரு..."

"ஓ... எப்போ சென்னை கிளம்பப் போற...?" என்றவனது குரல் உணர்வு இல்லாது ஒலித்தது...

"சென்னைக்கு எதுக்கு...?" அவள் புரியாமல் கேட்டாள்...

"கம்பெனிய பார்த்துக்கத் தான்..."

"டேய் கருவாயா, எவ்வளவு தைரியம் உனக்கு...? கம்பெனிய பார்க்கிறதுக்காக என்னை அனுப்பிட்டு நீ ஜாலியா இங்கே உள்ள பொண்ணுங்களை எல்லாம் சைட் அடிக்கலாம் பார்க்கிறியா...?" இடுப்பில் கை வைத்துக் கொண்டு தன்னை முறைத்த மனைவியைக் கண்டு அவனது மன வருத்தம் மறைந்து அதில் உல்லாசம் பிறந்தது...

"ஹா ஹா, கொஞ்சம் நிம்மதியா இருக்கலாம்ன்னு பார்த்தேன் அம்மிணி..." என்று அவன் நமட்டுச் சிரிப்பு சிரிக்க...

"நிம்மதியா...? உன்னைக் கொன்னுருவேன் கொன்னு..." என்று தன் மீது பாய்ந்தவளை அவன் தன்னுடன் இறுக்கி கொண்டான்...

"பொறவு எப்படி நீ வேலையைப் பார்ப்ப...?" அவன் கேட்டதும் தான் அவளுக்கு அவனது கேள்வியின் அர்த்தம் புரிந்தது...

"அதுக்குத் தான் ஐயாவுக்குக் கோபம் வந்ததா...? உன்னை விட்டுட்டு நான் எப்படிடா போவேன் கருப்பட்டி...? நான் உன்னை இன்னும் டேஸ்ட் பார்க்கவே இல்லை... காலம் முழுசும் உன்னை டேஸ்ட் பார்த்துட்டு உன் கூடவே இருக்கணும்ன்னு தான் எனக்கு ஆசை... இந்த ஜென்மத்தில் உன்னைப் பிரிஞ்சி போகணும்ங்கிற எண்ணம் எல்லாம் எனக்கு இல்லை..."

அவளது காதலில் அவளது கருப்பட்டி கரைந்து காணாமல் போனது...

"பூனைக்குட்டி, பூனைக்குட்டி..." என்று அவன் அவளைக் கொஞ்சி கொஞ்சி கொண்டாடினான்...

"என்னுடைய லேப்டாப்பை அனுப்ப சொல்லியிருக்கேன் சத்யா... அதில் வேலை பார்க்கலாம்ன்னு இருக்கேன்..."

"அங்கே இருந்து ஒண்ணும் வர வேண்டாம்..." அவன் எரிச்சலுடன் கூற...

"யோவ், உன் மாமனாருக்கு நாலு வருசமா சம்பாதிச்சுக் கொடுத்திருக்கேன்... அதுக்கு ஈடா ஒரு லேப்டாப் கொடுக்க மாட்டாராக்கும்... அது என்னுடைய உழைப்புக்கான கூலின்னு நினைச்சுக்கோ..."

அவள் கூறியதும் அவனது மனம் சிறிது சமாதானமாகியது...

மறுநாளே ஜீவா மகளுக்கு இணைய வசதியோடு கூடிய கணினியை அனுப்பி வைத்துவிட்டான்...

"தேங்க்ஸ் டாட்..." என்று அவள் தந்தையிடம் நன்றி கூற...

"நன்றி கூறி அப்பாவை தள்ளி நிறுத்தும் அளவுக்கு நீ பெரியவளாகிட்ட... இல்லையாடா வர்ஷூ...?"

"சாரி டாட்..." என்று அவள் தவறு செய்துவிட்டது போல் நாக்கை கடித்தாள்...

"இட்ஸ் ஓகே வர்ஷூ... நம் கம்பெனியை எப்போதும் போல் நீ தான் ரன் பண்ணணும்..." என்று அவன் கூற...

"இல்லை டாட்... அது சரி வராது... இங்கே இருந்து செய்ய முடியற வேலைகளை நான் செஞ்சு தர்றேன்... கம்பெனியில் வேலை செய்யும் ஒரு தொழிலாளியா... இனி நான் முதலாளியாக விரும்பலை டாட்..."

"வர்ஷூ..." ஜீவா அதிர்ந்து விட்டான்...

"ப்ளீஸ் டாட்... ட்ரை டூ அன்டர்ஸ்டாண்ட் மீ... இந்த அந்தஸ்து பேதம் திரும்பவும் என் வாழ்க்கையைப் பாதிச்சிர கூடாது... எனக்கான வாழ்க்கையை என்னை வாழ விடுங்க டாட்... ப்ளீஸ்..."

"எது வர்ஷூ உனக்கான வாழ்க்கை...? இப்படிப் பட்டிக்காட்டில் போய்க் கஷ்டப்படுறதா...?" ஜீவா கோபமாய் இரைந்தான்...

"இது தான் எனக்குப் பிடிச்சியிருக்கு டாட்..." என்று தீர்மானமாய்க் கூறியவள்,

"அப்புறம் சத்யாவுக்காகச் சில விசயங்கள் இன்டர்நெட்டில் தேடி பார்க்க வேண்டியிருக்கு... அதனால் ஒரு பத்து நாள் கழிச்சு தான் நான் கம்பெனி வேலைகளைப் பார்ப்பேன்..." என்று அவள் முடிவாகக் கூற...

"இன்டர்நெட் விவசாயமா...? வெரி குட்..." என்று கேலி போல் கூறிய தந்தையிடம்,

"இன்னைக்கு விவசாயம் கேலிக்கூத்தா தான் தெரியும் டாட்... ஆனா மனுசனா பிறந்த ஒவ்வொருத்தருக்கும் அது தேவையான ஒண்ணு..."

"ஹா ஹா, ஓகே ஓகே... நோ ஆர்க்யூமென்ட்... நீ முடிவெடுத்தால் சரியா தான் இருக்கும்..."

"அது சத்யாவுக்கும் பொருந்தும்..."

"நோ வர்ஷூ... அது ராங் சாய்ஸ்..." என்ற ஜீவா அழைப்பை துண்டித்து விட்டான்... பத்மவர்ஷினி விழி கலங்க அலைப்பேசியைப் பார்த்தாள்...

"ஃபோனை சரவணா கிட்ட கொடு பத்மா... அவன் காலேசு போகணும்..." கணவனது குரலில் அவள் அலைப்பேசியைக் கொழுந்தனிடம் கொடுத்தாள்...

தம்பி கல்லூரி சென்றதும் சத்யமூர்த்தி மனைவி அருகில் வந்து அணைத்து கொண்டவன், "என்னைய அவ்வளவு பிடிக்குமாடி... எனக்காக உங்கப்பாரையே தூக்கி எறியறியே..." என்றவனது குரலில் அத்தனை மகிழ்ச்சி, நெகிழ்ச்சி இருந்தது...

"இதுக்குப் பதில் சொல்றதை விட... உன் கூட வாழ்ந்து காண்பிக்கிறேன்... அப்போ புரியும் உனக்கு..."

"வாழணும்னு ஆசையா தான் இருக்கு..." என்றவனது நினைவில் தனது எளிய நிலை உறுத்தலாய் இருந்தது...

"நிச்சயம் நல்லா வாழுவோம்..." என்று நம்பிக்கை அளித்தவள் அவனை வயலுக்கு அனுப்பிவிட்டு

மடிகணினியில் விவசாயத்தைப் பற்றி ஆராயத் துவங்கினாள்…

தேட தேட லட்டு மாதிரி பல தகவல்கள் வந்து குவிந்தது… அதில் பலவற்றை அலசி ஆராய்ந்து தங்களுக்குச் சாதாகமானதை தனியே எடுத்து வைத்து கொண்டாள்… மாலையில் கணவன் வந்ததும் அதை எல்லாம் கூற… கவனமாய்க் கேட்டுக் கொண்ட சத்யமூர்த்தி,

"எதுக்கும் வேளாண் கல்லூரியில் போய்க் கேட்டுட்டு செய்வோம்…" என்றான்…

"அப்போ நாளைக்கே நாம போகலாமா…?" அதற்கு அவன் சரியென்று சம்மதித்தான்…

மறுநாள் இருவரும் சென்று வேளாண் கல்லூரியில் ஆலோசனை கேட்டு வந்தனர்… அந்தத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்தவும் பணம் தேவைப்பட்டது… அதைக் கேட்டு சத்யமூர்த்தி மிகவும் சோர்ந்து போனான்…

"அதெல்லாம் பார்த்துக்கலாம் சத்யா… நீ கவலைப்படாதே…" என்று அவள் அவனுக்குத் தைரியமூட்டினாள்…

"உன் அப்பாரு கிட்ட பணம் கேட்க போறியா அம்மணி…" அவமானத்தில் அவனது முகம் சிறுத்துப் போனது…

மதிய பொழுதில் ஆள் அரவமில்லாத பேருந்து நிலையத்தில் அவர்கள் இருவர் மட்டுமே நின்றிருந்தனர்…

"இங்கே என்னைப் பார் சத்யா…" அவனது தாடையைப் பிடித்து அவனது முகத்தைத் தன்புறம் திருப்பியவள்,

"உனக்கு ஒண்ணுன்னா நான் உன் கூட இருப்பேன்… அது போல் தான் நீயும்… இப்போ உனக்கு ஏதாவது செய்யணும்ன்னா அது நான் தான் செய்வேன்… என் அப்பா இல்லை… புரிந்ததா…? ஏன் நான் உனக்கு உதவி செய்யக் கூடாதா…? அப்போ நான் வேறு யாரோவா…?"

"அந்த அர்த்தத்தில் சொல்லலை பத்மா…"

"நம்ம வாழ்க்கையை நாம் தான் வாழணும் சத்யா... நாம் வாழ்ந்து காட்டுவோம்..." என்று உறுதியாகக் கூறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது...

"அம்மணிக்கு நல்லா பேச மட்டும் தெரிஞ்சிருக்கு..."

"இந்தப் பேச்சு கூட இல்லைன்னா தொழில் பண்ண முடியாதே... தொழிலாளர்கள் சோர்வடையும் போது எல்லாம் இப்படிப் பேசி தான் அவங்களை ஊக்கப்படுத்தணும்... நாமளும் அவங்க கூடச் சேர்ந்து சோர்ந்து போகக் கூடாது..." என்றவளை கண்டு அவனால் மெச்சாதிருக்க முடியவில்லை...

"என் அறிவாளி பூனைக்குட்டிடி நீ..." என்று கிறக்கத்துடன் கூறியவன் சட்டென்று அவளது கன்னத்தில் இதழ் பதித்து விலகினான்...

"சத்யா..." கண்டிப்புடன் அவளது குரல் ஒலித்தாலும் அவளது முகம் வெட்கத்தில் சிவந்து போனது...

**********************

அடுத்து வந்த நாட்களில் பத்மவர்ஷினி கணினியில் வேலை செய்ய ஆரம்பித்தாள்... தனது நிறுவனத்திற்கு மட்டுமல்லாது மற்ற நிறுவனங்களுக்கும்... அதில் அவளுக்குக் கணிசமாக வருமானம் வர துவங்கியது...

"அண்ணி, எனக்குப் பாடத்தில் சந்தேகம் சொல்லி தாங்களேன்..." என்று கேட்டபடி சரவணன் அவளிடம் வந்தான்... அவன் படிப்பது பொறியியலில் கணினி பிரிவு...

அவள் கற்றுத் தேர்ந்த பிரிவு என்பதால் அதைப் பற்றிச் சொல்லி கொடுப்பது அவளுக்கு மிகவும் எளிதாக இருந்தது... அவனுக்குப் புரியும் விதத்தில் எளிமையாய் அவள் விளக்கி சொல்லி கொடுத்தாள்...

"இவ்வளவு தானா அண்ணி...?" என்று அவன் நிம்மதியுடன் சிரித்தான்...

"இவ்வளவே தான்..." என்று கூறி அவளும் பதிலுக்குச் சிரித்தாள்...

இருவரும் சிரிப்பதை பார்த்துக் கொண்டே அங்கு வந்து சேர்ந்தான் சத்யமூர்த்தி... அவனைக் கண்டதும் மடிகணினியை அணைத்து விட்டு எழுந்தாள் அவள்... அடுத்து எல்லோரும் உண்டு விட்டு உறங்க செல்ல... பத்மவர்ஷினி மட்டும் மீண்டும் கணினியில் ஆழ்ந்து போனாள்...

அருகில் படுத்திருந்த சத்யமூர்த்தி அவளையும், கணினியையும் மாறி மாறிப் பார்த்திருந்தான்... தன்னையும், தன்னவளையும் பிரிக்கும் கணினியை கண்டு அவனுக்கு எப்போதுமே கோபம் உண்டு... அதனால் அவன் முறைத்துக் கொண்டு படுத்திருந்தான்...

"எதுக்கு இப்படி உடம்பை கெடுத்துட்டு வேலை பார்க்கிற...? ராத்திரி கண் முழிச்சு வேலை பார்க்கணும்ன்னு எந்த அவசியமும் இல்லை..." என்று அவன் சுணக்கத்துடன் கூற...

அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் அவனது தலையை எடுத்து தனது மடியில் வைத்துக் கொண்டு வருடி கொடுத்தவாறு,

"இது எனக்குப் பிடித்தமான வேலை தான் சத்யா... அதனால் நோ ப்ராப்ளம்..."

"எனக்குப் பிடிக்கலை..." என்றான் அவன் பட்டென்று...

"ஏனாம்...?" அவனது நெற்றியில் முத்தமிட்டு அவள் கேட்க... அதில் அவனது மனம் சிறிது சமாதானம் அடைந்தது...

"இதுல இருக்கிறது ஒண்ணாவது புரியுதா பாரு... எனக்கு ஒண்ணுமே புரியலை..." என்று அவன் சிணுங்க...

"அதுக்கு ஒண்ணாப்பு படிச்சிருக்கணும் மிஸ்டர். சத்யமூர்த்தி..." என்று அவள் அவனைக் கிண்டலடிக்க...

"போடி போ... நான் படிக்காத தற்குறி தான்... நீ படிச்ச மேதை தான்..." என்று அவன் கோபித்துக் கொண்டு அவளது மடியில் இருந்து எழ போனான்...

"ஷப்பா, என்னவொரு கோபம் வருது..." மீண்டும் அவனை இழுத்து மடியில் போட்டு கொண்டவள்,

"இப்போ இதில் இருப்பது எல்லாம் உனக்குப் புரியும் பார்..." என்றவள் யூ ட்யூபில் இயற்கை விவாசயம் பற்றித் தமிழில் இருந்த காணொளியை போட்டு காண்பித்தாள்...

அவன் சம்பந்தப்பட்ட விவசாயம் என்றதும் அவன் ஆர்வத்துடன் அதைப் பார்த்தான்... சிறிது நேரம் இருவரும் அதைப் பார்த்து கொண்டிருந்தனர்...

"இப்போ நீ ஓகேவா சத்யா...?"

"ம், ம்..." என்று முனங்கி கொண்டே அவன் அவளின் மடியில் முகம் புதைத்தான்...

"சத்யா, நான் சொல்றதை நல்லா கேட்டுக்கோ... இந்த வேறுபாடு எப்பவும் உன் மனசில் வர கூடாது..." என்றவளை அவன் நிமிர்ந்து பார்த்தான்...

"உனக்குத் தெரிஞ்சது விவசாயம்... அது மாதிரி எனக்குத் தெரிஞ்சது கம்ப்யூட்டர்... உன் வேலையை நான் செய்ய முடியாது... அதே போல் என் வேலையை நீ செய்ய முடியாது... இதில் ஏற்றத்தாழ்வு எங்கே இருந்து வருது சத்யா...?"

"இருந்தாலும் நீ பெரிய படிப்புப் படிச்சிருக்க... இங்கிலீசு எல்லாம் பேசுற... எனக்கு ஒண்ணும் தெரியாதே..."

"இது தான் உனக்குப் பிரச்சினையா...? நாளையில் இருந்து ஒரு மணி நேரம் உனக்கு இங்கிலீஷ் ட்யூசன் இருக்கு... ஒழுங்கா படிக்கலை மண்டையில் கொட்டுவேன்..." என்ற டீச்சரம்மா கொட்டுவது போல் பாவனைச் செய்தாள்...

"ஐயோ... படிக்கணுமா...?" என்று அலறியவனைக் கண்டு அவள் சிறிதும் இரங்கவில்லை...

"சரி உனக்காக இதைப் பண்றேன்... அதுக்காக எல்லாம் நீ என்னைய கொட்ட கூடாது..." என்று அவன் பாவம் போல் கூற... அடுத்த நொடி அவள் சிரித்துவிட்டாள்...

"மை ஸ்வீட் கருப்பட்டி..." என்று அவனைக் கொஞ்சியவள்,

"ரொம்பக் கஷ்டப்பட்டு உன் கிட்ட நான் வந்திருக்கேன் சத்யா... அந்தக் கஷ்டத்தை எல்லாம் நீ கோபப்பட்டு ஒண்ணுமில்லாததா ஆக்கிறாதே... எனக்கு எல்லாத்தையும் விட நீ தான் முக்கியம்... உனக்குப் பிடிக்கலைன்னா நான் இதைச் செய்யலை... இதுக்காக நீ என்னை விட்டு விலகிடாதே சத்யா..."

மனைவியின் மனம் புரிந்த பின்பும் அவனால் அப்படியே இருக்க முடியுமா என்ன...?

"ச்சேச்சே, அப்படி எல்லாம் இல்லை பூனைக்குட்டி... இதுக்காக எல்லாம் நான் உன்னை விட்டிருவேனாடி..."

"உண்மையா...?"

"சத்தியமா..." என்றவனைக் கண்டு அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்...

"எப்படி...? உன் வாயாலயே இதை ஒத்துக்க வச்சேன் பார்த்தியா... இதுவும் ஒரு மார்க்கெட்டிங் டெக்னிக் தான்... கஸ்டர்ம்ஸ்க்கு ஏத்த மாதிரி பேசி அந்தப் பொருளை அவங்க தலையில் கட்டிருவோம்... அதே மாதிரி இப்போ பத்மவர்ஷினியை உன் தலையில் கட்டியாச்சு..." என்று கூறி அவள் சிரிக்க...

"உன்னைத் தலை மேல் தூக்கி வச்சு கொண்டாட நான் தயார்..." என்றான் அவன் காதலாக...

"ம்க்கும், இந்த ரொமான்டிக் டயலாக்குக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை..." என்று முறுக்கி கொண்டவள் அவனது மீசையைப் பிடித்து இழுத்தபடி,

"இனி இப்படிப் பேசுவியா கருவாயா...?" என்று அதட்டலாய் கேட்க...

'ம்ஹூம்' என்று அவன் வாய் திறக்காது மறுப்பாய் தலையசைக்க...

"பேசித்தான் பாரேன்... அப்புறம் இருக்கு..." என்றவளிடம்,

"எல்லாம் சரி... இப்போ தூங்கலாமா...?" என்று அவன் கேட்க...

அவன் சொல்பேச்சு கேட்டு அவள் மடிகணினியை அணைத்து விட்டு படுத்தாள்... அவன் அவளை அணைத்துக் கொண்டு தூங்கி விட்டான்... அவளோ தூங்காது அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்... மனம் நிறைய நேசம் இருந்தும் இருவரும் அவர்களுக்கான வாழ்க்கையை ஆரம்பிக்கவில்லை... அதற்கு இந்த வீட்டின் அமைப்பு பெரிய தடையாக இருக்கிறது... வீடு மாற்ற வேண்டுமானால் பணம் வேண்டும்...

பொருளாதாரம் அவர்களது வாழ்க்கைக்கு முக்கியத் தடையாக இருந்தது... அடுத்து என்னென்ன செய்ய வேண்டும் என்று அவள் பட்டியல் போட்டு முடிவு எடுத்த பின்னர்த் தான் நிம்மதியாக உறங்கினாள்...

அவள் கணினியில் 'ப்ரோக்ராம்' செய்து வந்த கணிசமான பணம் மற்றும் வங்கி கடன் கொண்டு விவசாயத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தனர்... அதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்த முறை 'ஹைட்ரோஃபோனிக்ஸ்' முறையாகும்...

ஹைட்ரோஃபோனிக்ஸ் என்பது, மண் பயன்பாடு இல்லாமல் நீர் சார்ந்த, ஊட்டச்சத்துக் கொண்ட விவசாயப் பயிர்களை வளர்க்கும் முறையாகும்... மண்ணில் வளர்க்கப்படும் முறையை விட ஹைட்ரோஃபோனிக்ஸ் முறையில் உபயோகிக்கும் தண்ணீரின் அளவு மிகவும் குறைவு... சில நேரங்களில் தொண்ணூறு மடங்கு குறைவான தண்ணீரை ஹைட்ரோஃபோனிக்ஸ் முறையில் வளரும் பயிர்கள் எடுத்துக் கொள்ளும்... இதில் பயன்படும் நீரை மறுசுழற்சி மூலம் மீண்டும் பயன்படுத்த முடியும்...

இந்த முறையைப் பயன்படுத்தி அவர்கள் முதலில் பயிர்வித்தது ஸ்ட்ராபெர்ரி செடிகள்...

அடுத்து ஆங்கில வெள்ளரியை பயிரிட்டது... இதற்கு இஸ்ரேல் நாட்டின் தொழில்நுட்பம் தேவைப்பட்டது... இதற்காகப் பத்மவர்ஷினி தான் எல்லா இடத்திற்கும் அலைந்து இதற்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொடுத்தாள்...

இஸ்ரேல் நாட்டிலிருந்து பிளாஸ்டிக் பேப்பர் மற்றும் கருவிகளை (பேல் ஹவுஸ்) இறக்குமதி செய்து பேல் ஹவுஸ் (தனிக் கூடாரம்) அமைத்தனர்... செடிகளுக்கு மழை சாரல் போல் தண்ணீர் விழும் வகையில் அமைத்து ஆங்கில வெள்ளரிக்கு தேவையான தட்பவெப்ப நிலையை உருவாக்கினர்...

இதற்கு இயற்கை உரங்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்... ஏற்கெனவே சத்யமூர்த்தி இயற்கை உரங்களைத் தான் பயன்படுத்திக் கொண்டிருந்தான்... மண்புழு உரம் (விவசாய, சமையல் கழிவுகளை மக்க செய்து அதில் மண்புழுக்களை வளர்க்க வேண்டும்), எரு சாண உரம் (மூட்டத்தின் அடிப்பகுதியில் சிறு கம்பு, குச்சிகள் போட்டு இதன் மீது புல், இலை, தழைகள், சருகுகள், பழக்காய்கறி கழிவுகள், முட்டை பயன்படுத்தவும்... இதன் மீது புதிய சாணத்தைக் கரைத்து தெளிக்க வேண்டும்... மூட்டத்தின் ஈரத்தன்மையைத் தக்க வைக்கப் பிளாஸ்டிக்கால் மூடவும்.. ஐந்து நாட்களுக்கு ஒரு முறை இதைக் கிளறி விடவும்... நாற்பத்தைந்தாவது முதல் அறுபது நாளில் எரு உரம் தயார்), பசுந்தாள் உரம் (பசுந்தாள் உரம் எனப்படுவது தக்கை பூண்டு, சணப்பை, மணிலா, அகத்தி, கொளுஞ்சி, நரிப்பயிறு ஆகியவற்றை உரமாக இடுவது...), பசுந்தழை உரம் (எல்லா மரத்து இலைகளையும் (புளி, வேலி இலை நீங்கலாக) உரமாக இடுவது)... இத்தனை உரங்களையும் அவன் தனித்தனியே தயாரித்து வைத்திருந்தான்... அதனால் மிகவும் எளிதாக இருந்தது...

அது போல் ஏரோஃபோனிக்ஸ் முறையில் கோபுர விவசாயம் (மண்ணில்லாத விவசாயம்) என்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தக்காளி செடிகளை நட்டனர்... அதாவது செங்குத்தாக நடப்பட்ட துளையிடப்பட்ட குழாய்களில் செடி வளர்ப்பது... இதற்கும் கொஞ்ச இடம் மற்றும் தண்ணீர் தேவை... ஆனால் விளைச்சல் அமோகமாக இருக்கும்... கால் ஏக்கர் நிலத்தில் பத்தாயிரம் தக்காளி செடிகளை நடலாம்... சாதாரணமாக நூறு நாட்களில் தான் தக்காளி பயன் கொடுக்கும்... இந்த முறையில் நாற்பத்தைந்து நாட்களில் பலன் கொடுக்கும்...

எல்லாம் சரியாகப் போய்க் கொண்டிருக்கும் போது பத்மவர்ஷினி செய்த ஒரு காரியம் சத்யமூர்த்திக்கு நஷ்டத்தைக் கொடுத்தது...

வாழை மரங்களுக்கு ஊடாக ஊடு பயிராக அவரைச் செடியும், முருங்கை செடியும் நட்டனர்... அடுத்து வந்த நாட்களில் அதிக மழை பெய்ததில் செடி முருங்கையின் வேரை அழுகல் நோய் தாக்கிவிட்டது...

அதைக் கண்டு சத்யமூர்த்தி மனம் வாடி போனான்... அவனது தன்னம்பிக்கை மிகவும் குறைந்து போனது...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 20

"ஐயா, அம்மா வாங்க, வாங்க..."

வயலுக்குக் கிளம்பி கொண்டிருந்த சத்யமூர்த்தித் தனது வீட்டிற்கு வருகை தந்த ராஜலிங்கம், விசாலம் இருவரையும் சந்தோசமாய் வரவேற்றான்... அவனுடன் இருந்த பத்மவர்ஷினியும் அவர்களைக் கண்டு,

"வாங்க..." என்று இருவரையும் பொதுவாக வரவேற்றாள்...

ராஜலிங்கம் அவளைப் பார்த்துச் சாதாரணமாகப் புன்னகைத்தார்... ஆனால் விசாலமோ அவளை ஆராய்ச்சியாய் பார்த்தார்... தனது மகளை விடச் சாதாரண இடத்தில் சத்யமூர்த்திக்குத் திருமணம் முடியும் என்று அவர் கணித்திருந்ததைப் பத்மவர்ஷினி வந்து தவிடுபொடியாக்கி விட்டாள்... அதுவும் தங்களை விட அந்தஸ்திலும், தங்கள் பெண்ணை விட அழகு, படிப்பு என்று எல்லாவற்றையும் அதிகம் பெற்றிருந்தவளை கண்டு அவருக்கு எரிச்சலாக வந்தது...

"வாங்கய்யா, வாங்கம்மா..." என்று வரவேற்றபடி வடிவழகி அங்கு வந்து சேர்ந்தார்...

"எப்படியிருக்க வடிவு...? புது மருமக எப்படியிருக்கா...?"

"எனக்கென்ன நல்லாயிருக்கேன்... அது மாதிரி மருமவ பொண்ணும் நல்லாயிருக்கா... நீங்களே நேருல பார்க்கத்தே செய்றீங்களே..." என்றவர்,

"இருங்க... காபி தண்ணி கொண்டு வாரேன்..." அவர் செல்ல முனைந்த போது பத்மவர்ஷினி அவரைத் தடுத்து,

"நான் எடுத்துட்டு வர்றேன் அத்தை..." என்றுவிட்டு அங்கிருந்து சென்றாள்...

"அப்புறம் வடிவு, மருமக வந்ததும் வேலையில் இருந்து ஓய்வு எடுக்கிற போலிருக்கு..." விசாலத்தின் வார்த்தையில் அப்பட்டமாய்ப் பொறாமை தெரிந்தது...

சமையலறைக்குச் செல்லும் மருமகளைப் பெருமையுடன் பார்த்த வடிவழகி அவரிடம், "பெரிய இடத்து பொண்ணுங்கிற எந்தப் பந்தாவும் கிடையாது... எல்லா வேலையும் இழுத்து போட்டு செய்யுது... என்னைய ஒரு வேலை செய்ய விடறது இல்லைன்னா பார்த்துக்கோங்க..." என்று மருமகளைத் தாங்கி பேசினார்...

'அடேங்கப்பா' என்கிற பாவனையில் சத்யமூர்த்தி அன்னையைப் பார்த்தான்...

அதற்குள் பத்மவர்ஷினி காபி போட்டு எடுத்துக் கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்தாள்... அதை வாங்கிக் குடித்துக் கொண்டே ராஜலிங்கம்,

"மதி கல்யாண பத்திரிக்கை கொடுக்க வந்தோம்... முதல் பத்திரிக்கை உங்களுக்குத் தான்..."

"ரொம்பச் சந்தோசம்..." என்றார் வடிவழகி...

பத்மவர்ஷினியோ கணவனின் முகத்தைத் திரும்பி திரும்பி பார்த்து கொண்டிருந்தாள்... அவளது செயலில் அவன் யோசனையாய் பார்த்தான்...

ராஜலிங்கம், விசாலம் திருமண அழைப்பிதழை கொடுக்கச் சத்யமூர்த்தி, பத்மவர்ஷினி இருவரும் சேர்ந்து நின்று அதைப் பெற்று கொண்டனர்...

"கட்டாயம் குடும்பத்தோடு வந்துரு மாப்ள..." என்று ராஜலிங்கம் அவனிடம் கூற...

"கட்டாயம் வர்றோம்..." என்று சிரித்தபடி கூறினான் சத்யமூர்த்தி...

அவர்கள் விடைப்பெற்றுச் சென்றதும் சத்யமூர்த்தி அன்னையிடம்,

"ஆத்தா, நீங்க தானா பேசியது...? அதுவும் எம் பொஞ்சாதிய உயர்த்திப் பேசியது...?" என்று அவன் வேண்டுமென்றே கிண்டலாய் ராகம் இழுத்தான்...

"அது என்ன உம் பொஞ்சாதி... அவ எம் மருமவ... அதை ஞாபகம் வச்சிக்கோ..." என்று அவர் கோபத்துடன் சிலிர்க்க...

"அடப்பார்றா, இந்த மருமவ பத்தி தானே அன்னைக்குப் பஞ்சாயத்து வச்சீங்க..."

"உன் கிட்ட தானே வச்சேன்... இப்பவும் அந்தப் பஞ்சாயத்து அப்படியே தான் இருக்கு... அதுக்கான தீர்ப்பு உங்க ரெண்டு பேரு கையில் தான் இருக்கு... ரெண்டு பேரும் சீக்கிரம் எனக்கு ஒரு பேர குழந்தைய பெத்து கொடுத்துட்டா அதுவே போதும்..."

அவர் கூறியதும் அதுவரை வார்த்தையாடி கொண்டிருந்த சத்யமூர்த்தி முகத்தில் லேசாக வெட்கம் வந்து எட்டிப்பார்த்தது... பத்மவர்ஷினியும் வெட்கத்தோடு அங்கிருந்து நகர்ந்து அறைக்குச் சென்றுவிட்டாள்...

"சரி, நான் நம்ம அழகு மதினி வீட்டுக்கு போயிட்டு வர்றேன்... பலகாரம் செய்யக் கூப்பிட்டிருந்தாக..." மருமகள் காதில் விழும்படி உரக்க கூறிய வடிவழகி கிளம்பி சென்றுவிட்டார்...

வாயிற்கதவை அடைத்துவிட்டு அறைக்கு வந்த சத்யமூர்த்தி அங்கு ஜன்னலோரமாய் நின்றிருந்த மனைவியைக் கண்டு அவள் அருகில் வந்தான்...

"பூனைக்குட்டி..."

அவள் பின்னால் இருந்து இடையோடு அணைத்தபடி அவளது கழுத்து வளைவில் அவன் முகம் புதைத்தான்... அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைப்பூ வாசமும், அவளது மேனியின் வாசமும் சேர்ந்து அவனைக் கிறக்கியது...

கணவனைப் போன்று ஒரு வாரிசை கனவில் கண்டு கொண்டிருந்த பத்மவர்ஷினியின் மேனி கணவனது தொடுகையில் நெகிழ்ந்தது...

"சத்யா..." என்றபடி அவள் கண்மூடி அவன் மீது சாய்ந்தாள்...

"ஆத்தா கேட்கிறதை கொடுத்துருவோமா பூனைக்குட்டி...?" சரசமாய் அவன் கேட்க...

"ம், ம்..." என்றவள் திரும்பி நின்று அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

தாபத்தில் தவித்தவன் அவளது கூந்தலை கொத்தாக பற்றி இழுத்து அவளது முகத்தை நிமிர்த்தி உணர்ச்சிவசப்பட்டுத் துடிக்கும் அவளது இதழ் மீது தனது இதழை அழுத்தமாய்ப் பொருத்தினான்... மணித்துளி பஞ்சாகப் பறந்து செல்ல அவனும் விலக்கினான் அல்ல... அவளும் விலகினாள் அல்ல... கணவனது கரங்கள் எல்லை மீறும் போது அவள் சுதாரித்துக் கொண்டு விலகினாள்...

"சத்யா, இப்போ இது வேண்டாம்..."

"ஏன்டி...?" சிறிதும் தாபம் குறையாத குரலில் கூறியவன் மீண்டும் அவளை அணைத்துக் கொண்டான்..

"இன்னும் மூன்று மாதம் கழித்து... அறுவடை முடிந்து வரும் பணத்தில் வேறு வீடு பார்த்த பிறகு... ப்ளீஸ் சத்யா என்னைப் புரிஞ்சுக்கோ..."

அவளது வார்த்தைகளின் அர்த்தம் புரிந்தவனாய் அவன் விலகி சென்று கட்டிலில் அமர்ந்தான்... அவளும் அவன் அருகில் சென்று அமர்ந்து அவனது கரத்தை பிடித்துக் கொண்டு,

"இப்போ நீ என்னை எடுத்துக்கிறதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை... ஆனா அதுக்கு அப்புறம் தினமும் நீ எனக்கு வேணும்டா... நம்ம உறவு இன்னையோடு முடிஞ்சு போறதில்லை... ஆயுளுக்கும் தொடரும் பந்தம்... நான் சாகும் வரைக்கும் நீ எனக்கு வேணும்..." என்று கூறியபடி அவள் அவனது தோள் சாய்ந்து கொண்டாள்...

மனைவி கூறுவது போல் அவன் இந்தக் கணத்தை மட்டும் யோசித்தவனாய் இனிவரும் காலங்களைப் பற்றி

யோசிக்காது போனான்...

"நிச்சயமா நம் பந்தம் தொடரும் பூனைக்குட்டி... ஏன்னா நான் கிழவனாகிட்டா என்னை யாரும் சீந்த கூட மாட்டாங்க... அப்போ எனக்கு இந்தக் கிழவியை விட்டா வேறுவழியில்லை... உங்கிட்ட தான் நான் வந்தாகணும்..." போலி சலிப்புடன் கூறிக் கொண்டே அவன் அவளை அணைத்துக் கொண்டான்... அந்நேரம் அவனது உதடுகளில் விசமம புன்னகை தவழ்ந்தது...

"டேய் சத்யா, உன்னைக் கொன்னுருவேன்டா..." என்று தன் மீது பாய்ந்தவளை தனது நெஞ்சின் மீது இழுத்து போட்டு கொண்டபடி அவன் படுக்கையில் சாய்ந்தான்...

"உனக்கு இன்னும் இந்தப் பொறாமை போகலையா...? அழகு போல நீயிருக்கும் போது நான் ஏன்டி வேறொருத்தியை பார்க்க போறேன்..."

"பொறாமை தான்... நீ மதி கிட்ட கொஞ்சி குலாவியதை பார்த்ததால் வந்த பொறாமை இது... இது மாறணும்ன்னா அது நீ நடந்துக்கிறதை பொறுத்து இருக்கு..." என்று அவள் கூற...

"தெரியாம மதி புள்ள கூடப் பழகிட்டேன்... அதுக்குன்னு நீயி இப்படியா படுத்துவ... ஆளை விடு தாயி..." என்று அவன் தலை மீது கரம் குவித்துப் பெரிதாய் கும்பிடு போட...

"ஆமாம், ஆமாம், நீ தெரியாம தான் பழகின... அதுவும் அவளோட புடவை முந்தானையில் கையைத் துடைக்கும் அளவுக்கு..."

"யாரு...? நானா...?"

அவன் புரியாது மனைவியைப் பார்த்தான்... அன்று அண்ணனின் திருமண வீட்டில் நிகழ்ந்த நிகழ்வை கூறி அவள் வருத்தப்பட்டாள்...

"அன்னைக்கு நான் எப்படி ஃபீல் பண்ணினேன்னு தெரியுமா...? உலகமே வெறுத்த மாதிரி... உயிரை விடணும்

போலிருந்தது..." என்று வேதனை குரலில் கூறியவள் அவனது நெஞ்சில் தலை வைத்து படுத்து கொண்டாள்...

அவளது காதலில் அவன் வார்த்தைகளற்றுப் போனான்... மௌனமாய் அவளது தலையை வருடி கொடுத்தான்... சில உணர்வுகள் மனதிற்குப் பிடித்தவர்களிடம் மட்டுமே தோன்ற வேண்டும்... அந்த விசயத்தில் தான் பெரிய தவறு செய்து விட்டதாய் அவனுக்குத் தோன்றியது... அறிவு கூறுவதைக் கேட்காது உணர்வுக்கு அடிமையாகி போன தன்னை நினைத்து அவன் மனம் வெறுத்துப் போனான்...

அவனது அமைதி கண்டு அவனை ஏறிட்டு பார்த்தவள் அவனது முகம் தெளிவில்லாது இருப்பதைக் கண்டு,

"சாரி சத்யா, உன்னை வருத்தணும்ன்னு நான் சொல்லலை... காயம் பட்ட மனசு அப்பப்போ இப்படி லூசு மாதிரி பேசிருது... தப்பா எடுத்துக்காதே..." என்று அவளும் வருந்தினாள்...

"என் கிட்ட உனக்கு இல்லாத உரிமையா...? என்ன வேணும்ன்னாலும் பேசிக்கோ..." என்று புன்னகைத்தவனைக் கண்டு அவளது முகம் மலர்ந்து போனது...

"தேங்க்ஸ் சத்யா..." என்று அவனது கன்னத்தில் முத்தமிட்டாள் அவள்...

"மதி கல்யாணத்துக்கு நான் போய்த்தான் ஆகணும்... உனக்குப் பிடிக்கலைன்னா இப்பவே சொல்லிரு... நான் ஐயா கிட்ட ஏதாவது சொல்லி சமாளிச்சிக்கிறேன்..."

"நானும் உன் கூட வர்றேன்..." என்ற மனைவியைக் கண்டு அவனுக்கு மயக்கம் வராத குறை தான்...

"உண்மையாவா அம்மிணி...?"

"எவ்வளவு கஷ்டப்பட்டு அவளை உன் பாதையில் இருந்து விலக்கி இருக்கேன்... இந்தக் கல்யாணத்தைப் பார்க்க

நான் வர வேண்டாமா...?" என்றவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது...

"எனக்காக எதுக்குடி இத்தனை கஷ்டப்படுற...?"

"ப்ச்... தெரியலையே..." என்று அவள் கண்சிமிட்டி சிரித்தாள்...

"வயலுக்குப் போகவா...? வேண்டாமா...?" அவளது வாசம் பிடித்துக் கொண்டே அவன் கேட்டான்...

அவன் மேலிருந்து எழுந்தவள், "போயிட்டு வா சத்யா..."

"புருசன் இப்படிக் கேட்டா பொஞ்சாதி வேண்டாம்ன்னு சொல்லணும்... இங்கே எல்லாம் தலைகீழ்..." என்று சிணுங்கி கொண்டே அவன் எழுந்தான்...

"இந்தப் பொண்டாட்டி இப்படித் தான் சொல்வாள்... கிளம்பு, கிளம்பு..." என்று அவனை அனுப்பி வைத்தவள் தனது வேலைகளைப் பார்க்க துவங்கினாள்...

மாலை நேரம் பொழுது போகாது பத்மவர்ஷினி கணவனைத் தேடி வயலுக்குச் சென்றாள்... சத்யமூர்த்தி அப்போது தான் வேலையை முடித்துவிட்டுப் பம்புசெட்டில் அருவி போல் பாய்ந்து வந்த நீரில் ஆனந்தமாய்க் குளித்துக் கொண்டிருந்தான்... அதைக் கண்டதும் அவளிடம் குறும்புத்தனம் தலை தூக்கியது... வேகமாய் அங்கு வந்தவள் அந்தத் தொட்டியின் மீது ஏறி நின்று கொண்டு,

"சத்யா..." என்று கூவியபடி தொபக்கடீரென்று அதனுள் குதித்தாள்...

அவளது சத்தத்தில் அரண்டு போனவனாய் திரும்பிய சத்யமூர்த்தியின் முகத்தில் தொட்டியில் இருந்து தெறித்த நீர் வேகமாய் மோதியது... அதை வழித்தெடுத்தபடி அவளைப் பார்த்தவன்,

"இங்கே என்ன பண்ற அம்மிணி...?" என்று கேட்க...

"வீட்டில் போரடிச்சது... அதான் உன்னைப் பார்க்க வந்துட்டேன்..." என்றவள் அவனது தோள்களைப் பிடித்துக் கொண்டு நீரில் கால் பாவாது உற்சாகப் பந்தாய் துள்ளி குதித்துக் கொண்டிருந்தாள்...

தண்ணீரின் குளுமை தாண்டி மனைவியின் அருகாமை மூட்டிய தீ அவனுள் சுகமான இன்பமாய்ப் பரவியது... அவளது இடையில் கை கொடுத்து அவளைத் தன்னோடு இறுக்கமாய் அணைத்து கொண்டவன்,

"இப்படி உசுப்பேத்தி, உசுப்பேத்தி மனுசனை கொல்லுறடி பூனைக்குட்டி..."

தலைமுடியில் இருந்து வழிந்த நீர் முகத்தில் கோலம் போட்டபடி கவர்ச்சியாய் இருந்த கணவனின் விழிகளில் வழிந்த தாபம் அவளுக்குப் பல கதைகள் பேசியது...

'சும்மா இருந்தவனை உசுப்பேத்தி விட்டுட்டோமோ...' அவள் மனதிற்குள் கலவரமாய் நினைத்தாள்...

அவன் அவளது முகம் நோக்கி குனிய அவளோ பலகீனமாய், "வேண்டாம் சத்யா..." என்று முனங்கினாள்...

அந்தக் கணம் அவளும் மனதளவில், உடலளவில் பெரிதும் பலகீனமாகி போயிருந்தாள்... அந்த நொடி அவன் அவளை எடுத்துக் கொண்டால் கூட அவள் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை... அவள் முழுமனதுடன் கண்கள் மூடி அவனை ஏற்க தயாராக இருந்தாள்... அவளது உணர்வினை கண்டு அவன் சற்று நிதானித்தான்... பின்பு அவன் சிரித்தபடி அவளைப் பாய்ந்து விழும் தண்ணீரினுள் இழுத்து சென்று தானும் அவளோடு சேர்ந்து நின்று கொண்டான்...

"ஏய் சத்யா என்ன பண்ற...?"

பாய்ந்து சீறிய நீரின் வேகத்தில் உணர்வலைகள் அறுந்து விழ அவள் மூச்சு விடச் சிரமப்பட்டுப் போனாள்... அவளது நிலை கண்டு அவன் அவளைத் தூக்கி தொட்டியின் விளிம்பில் அமர வைத்து பின்பு அவளது மடியில் தனது

இருகரங்களைக் கோர்த்து வைத்து அதில் தனது தாடையை ஊன்றியபடி அவளைப் பார்த்து மந்தகாசமாகப் புன்னகைத்தான்...

அவள் நேசத்தோடு அவனது தலையைக் கோதி கொடுத்துத் தலைமுடியில் இருந்து வழிந்த நீரை வழித்தெடுத்தாள்... பின்பு சுற்றிலும் பார்த்தபடி,

"செம ரொமான்டிக் ப்ளேஸ்... இல்லையா சத்யா...?" என்று கண்சிமிட்டி கணவனிடம் கேட்டாள்...

அதைக் கவனியாது அவன், "இந்நேரம் நீ இங்கிருக்க மாட்டியே... எங்கே உன் கூட்டாளிங்க...?" என்று கிண்டலாய் கேட்டான்...

அவள் இந்த அந்திமாலை பொழுதில் கிராமத்தில் இருந்த பெண்கள் சிலருக்கு எழுத, படிக்கச் சொல்லி கொடுத்தாள்... அதைத் தான் அவன் கேட்கிறான்...

"இன்னைக்கு எல்லோரும் சேர்ந்து கோவிலுக்குப் போறாங்களாம்... அதனால் லீவ்..."

"ஏன்டி, என்னைத் தான் படி படின்னு உயிரை வாங்குறன்னா ஊரில் இருக்கிற பொம்பளைங்க உயிரையும் ஏன்டி சேர்த்து வாங்கிற..."

"எழுத படிக்கத் தெரிஞ்சிக்கிறது நல்லது சத்யா..."

"உனக்கு நல்லது தான்... ஆனா அவங்க புருசன்களுக்கு நல்லது இல்லையே..." என்றவனைப் புரியாது பார்த்தாள் அவள்...

"நீ தினமும் வீட்டுப்பாடம் கொடுக்கிறியாம்... அதனால் அவங்க யாரும் அவங்க புருசன் சொல்லி கொடுக்கிற வீட்டுப்பாடத்தைச் செய்ய மாட்டேங்கிறாங்களாம்..."

முதலில் அவன் கூறியது கேட்டு புரியாது விழித்தவள் பின்பு புரிந்தவளாய், "யூ நாட்டி..." என்றபடி அவனது நெஞ்சில் கை வைத்து தள்ளிவிட்டாள்...

"ஹா ஹா...." என்று தண்ணீரில் மல்லாக்க விழுந்தபடி அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"அடுத்தவன் பாவம் வேணாம்டி என் பூனைக்குட்டி... ஆண்பாவம் பொல்லாதது..." என்று அவன் சிரிக்க...

"பெண்பாவம் அதை விடப் பொல்லாதது... அவங்களுக்குப் படிப்பறிவு இல்லாம வச்சிக்கிறது ரொம்பத் தப்பு..." என்று அவள் மிரட்டலாய் கூற...

"இதை அவங்க கிட்ட நான் சொல்லிட்டேன்... நீ கவலைப்படாதே பூனைக்குட்டி... நீ உன் சேவையைத் தொடர்ந்து செய்..." என்று கணவனாக அவன் அவளை ஊக்குவித்தான்...

"தேங்க்ஸ்டா கருப்பட்டி..." என்று கூறியபடி அவன் மீது பாய முயன்றவளை தடுத்து நிறுத்தியவன் தானும் மேலேறி வந்தான்...

"பொழுது கருத்திருச்சு... வீட்டுக்கு போகலாம்..."

"அச்சோ, டிரெஸ் எல்லாம் நனைஞ்சிருக்கே... அத்தை, சரவணா பார்த்தா என்ன நினைப்பாங்க...?"

"நாம ரெண்டு பேரும் சேர்ந்து குளிச்சிட்டு வர்றோம் நினைப்பாங்க..." என்றான் அவன் நமட்டு சிரிப்புடன்...

"சத்யா..." என்று சிணுங்கி கொண்டே தன்னிடம் ஒன்றியவளை அணைத்து கொண்டவன்,

"நான் பார்த்துக்கிறேன்... நீ வா..." என்று அழைத்துக் கொண்டு சென்றான்...

அவள் நினைத்தது போல் வடிவழகி, சரவணன் திண்ணையில் அமர்ந்திருந்தார்கள்...

"நீ இங்கேயே இரு அம்மிணி..." வீட்டின் முன் நின்ற மரத்தடியில் அவளை நிற்க வைத்துவிட்டு தான் மட்டும் வீட்டை நோக்கி சென்றான்...

"ஆத்தா, சூடா காபி கொடுங்க..." என்று அன்னையை வீட்டினுள் போகச் செய்தவன் தம்பியிடம்,

"ராசு மாமா கிட்ட மோட்டார் ஒண்ணு கேட்டிருந்தேன்... நாளைக்கு அதைப் பார்க்க வரலாமான்னு கேட்டுட்டு வா சரவணா..."

அண்ணன் சொல் தட்டாது அவன் எழுந்து சென்றான்... இருவரும் சென்றதும் பத்மவர்ஷினி அங்கு விரைந்து வந்தாள்...

"தேங்க்ஸ் சத்யா..." என்று கூறியபடி அவனை லேசாக அணைத்து விடுவித்தவள் வேகமாய் வீட்டினுள் சென்று மறைந்தாள்... அவன் சிரித்தபடி அங்கேயே நின்றிருந்தான்...

இந்த மாதிரியான சின்னச் சின்னச் சந்தோசங்கள் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது... மனதிற்கு நிறைவாக இருந்தது... அந்நேரம் வடிவழகி காபி கொண்டு வந்து கொடுக்க... அவன் அதை எடுத்துக் கொண்டு அறைக்குச் சென்றான்... அதற்குள் அவள் உடை மாற்றி இருந்தாள்...

"இதைக் குடி... குளிருக்கு இதமா இருக்கும்..." என்று அவன் காபி தம்பளரை அவளிடம் நீட்டினாள்...

அவள் நன்றி பெருக்குடன் அதை வாங்கிக் கொண்டு ஒவ்வொரு மிடறாக ரசித்துப் பருகினாள்... உடை மாற்றிக் கொண்டு அவள் அருகே வந்தவன்,

"எனக்கு..." என்றபடி அவளது இதழ் மீது தனது இதழை பதித்தான்...

அவளது வாயில் இருந்த சூடான காபி அவனது வாயினுள் குளிர்ச்சியாய் இறங்கியது... காபியோடு சேர்த்து அவளது இதழின் சுவையையும் சேர்த்து சுவைத்தவன் பின் மெதுவே விடுவித்தான்...

"ரொம்ப டேஸ்ட்டா இருக்குடி பூனைக்குட்டி..." என்றவனைக் கண்டு அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்...

"நான் காபியை சொன்னேன்..." என்று குறும்பாய் கூறியவன் கண்சிமிட்டியபடி அறையை விட்டு வெளியில் சென்றுவிட்டான்...

கணவன் கூறியதை நினைத்து நினைத்து தனக்குள் சிரித்தபடி அவள் வெட்கத்தில் முகத்தை மூடி கொண்டாள்...

அன்றிரவு பெய்த அடை மழையில் வாழை மரங்களுக்கு இடையில் ஊடு பயிராக நட்டிருந்த செடி முருங்கையின் வேரை அழுகல் நோய் தாக்கிவிட்டது...

"பத்மா என்னடி இது...? சாண் ஏறினா முழம் சறுக்குது..." என்று சத்யமூர்த்தித் தலையில் கை வைத்து கவலையுடன் அமர்ந்து விட்டான்...

"இதற்கும் ஏதாவது தீர்வு இருக்கும் சத்யா..." என்று அவள் அவனைத் தேற்றினாள்...

அவள் உடனே வேளாண் கல்லூரி பேராசிரியரை தொடர்பு கொண்டு இதற்கான தீர்வு கேட்டாள்... அவர் வேப்பம் புண்ணாக்குடன் கடுக்காயை உடைத்து ஊற வைத்த தண்ணீரை கொஞ்சம் கொஞ்சமாகச் செடியின் வேரில் விட்டு வந்தால் இந்த நோய் முழுதாக நீங்கிவிடும் என்று கூறினார்...

அதை அவள் சத்யமூர்த்தியிடம் கூறிச் செயல்படுத்த சொன்னாள்... அடுத்து வந்த நாட்களில் நோய் சரியாகி செடி நன்கு வளர ஆரம்பித்து... அதைக் கண்டு அவன் மகிழ்ந்து மனைவியைத் தலையில் தூக்கி வைக்காத குறையாக ஆனந்த கூத்தாடினான்...

"நீ என் கூட இருக்கிற வரைக்கும் எனக்குத் தோல்வியே கிடையாது..." என்று அவன் மனம் நெகிழ்ந்து கூறினான்...

"நிச்சயம்... வெற்றி எப்போதும் உன் பக்கம் தான்..." என்றவளை காண காண அவனது நேசம் பெருகியது...

அடுத்து வந்த நாட்களில் ஸ்ட்ராபெர்ரி, ஆங்கில வெள்ளரி, தக்காளி எல்லாம் நல்ல சாகுபடி கொடுத்தது... இயற்கை

உரங்கள் கொண்டு பயிரிடப்பட்ட அவற்றிற்குச் சந்தையில் நல்ல கிராக்கி இருந்தது... ஆனால் பத்மவர்ஷினி இந்த இடத்தில் தான் சாமர்த்தியமாகச் செயல்பட்டாள்...

தனது அண்ணன் மூலம் இவற்றை எல்லாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்துவிட்டாள்... யுகேனும் தங்கைக்காகத் தானே இதைச் செய்ய முன் வந்தான்... ஜீவா மகனது பொறுப்பான இந்தக் காரியத்தைக் கண்டு வியந்து ஒன்றும் கூறாது விலகி கொண்டான்...

"உன் அண்ணன் கிட்ட போய் எதுக்கு உதவி கேட்ட பத்மா...?" சத்யமூர்த்திக்கு இது பிடிக்கவில்லை...

"என் அண்ணன் கிட்ட கேட்கலை... என் நாத்தனார் புருசன், இந்த வீட்டு மாப்பிள்ளை கிட்ட உதவி கேட்டேன்..." என்று கூறி அவனது வாயை அடைத்தவள்,

"இந்த மாதிரி இயற்கை உரம் போட்டு விளைவிக்கும் காய்கறிக்கு மார்க்கெட்டில் அதுவும் வெளிநாட்டு மார்க்கெட்டில் நல்ல டிமாண்ட் இருக்கு சத்யா... காற்றுள்ள போதே தூற்றிக்கணும்..."

மனைவி கூறியது நூற்றுக்கு நூறு உண்மை... ஏற்றமதி செய்யப்பட்ட காய்கறிகளில் இருந்து கணிசமான வருமானம் கிடைத்தது... அதனால் அவன் இதை மனதார ஏற்றுக் கொண்டான்...

இப்போது பத்மவர்ஷினி சரவணனின் நண்பர்கள் பலருக்கு ட்யூசன் எடுக்கிறாள்... அதே போல் வங்கி கடன் மூலம் புதிதாய் மாடு வாங்கிக் கொடுத்திருக்கிறாள்... அந்தப் பால் வியாபாரத்தைச் சரவணன் தான் பார்த்துக் கொள்கிறான்...

"படிக்கிற பையனை எதுக்கு வேலை வாங்கிற பத்மா...?" சத்யமூர்த்திச் சத்தம் போட்டான்...

"அடுத்தவன் கிட்ட கை நீட்டி வேலைக்குப் போகிறதுக்கு நமக்கு நாமே முதலாளியா இருப்பது நல்லது தானே..."

என்று கூறியவளிடம் அவனால் மறுவார்த்தை எதிர்த்து பேச முடியுமோ...?

"வர வர நீ என்னைப் பேச விடுறதே இல்லை..." என்றவனை மையலாக நோக்கியவள்,

"என்னையும் நீ பேச விடாமல் செய்யலாம்... அதுக்கு நீ முதலில் வேறு வீடு பார்க்கணும்..." என்று சரசமாகக் கூற...

அவள் கூறியதன் அர்த்தம் புரிந்தவனின் முகத்தில் அப்படியொரு மலர்ச்சி வந்தது...

"பார்த்துட்டு வந்து வச்சிக்கிறேன் என் கச்சேரியை..." என்று உற்சாகத்துடன் கூறியபடி சென்ற கணவனை அவள் ஆதுரத்துடன் பார்த்து கொண்டிருந்தாள்...

சத்யமூர்த்திச் சொன்னது போல் அடுத்து வந்த சில நாட்களில் நல்லதாக ஒரு வீடு பார்த்துவிட்டான்... மாடியில் ஒரு அறை, கீழே ஒரு அறை என்றிருந்த அந்தச் சின்ன வீடு அவர்கள் நால்வருக்கும் போதுமானது... மறுநாளே அவர்கள் அங்குக் குடி வந்துவிட்டனர்... இருவருக்கும் வேண்டிய தனிமை கிடைத்தும் அவர்கள் தங்களது வாழ்க்கையை இன்னமும் ஆரம்பிக்கவில்லை...

ஏனெனில் சத்யமூர்த்தித் தயாரித்த இயற்கை உரம் நன்கு விளைச்சலை கொடுத்ததால் அதற்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டி இருவரும் வேளாண் கல்லூரிக்கு நடையாய் நடந்தனர்... அதில் அவள் சற்று இளைத்து கறுத்து தான் போனாள்...

இந்த நிலையில் தான் சந்திரமதியின் திருமணநாள் வந்தது... அதற்கு இருவரும் இணைந்து சென்றனர்... ராஜலிங்கம் போக்குவரத்து மற்றும் தங்குவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்தார்...

திருமணத்தன்று பத்மவர்ஷினி சந்திரமதியை தனியே காண சென்றாள்... சந்திரமதியை நினைத்து அவளுக்குமே பாவமாக இருந்தது...

"சந்தோசமா இருக்கியா மதி...?"

"சந்தோசமா இருக்கேன்க்கா..." என்றாள் அவள் முகம் மலர...

"நரேன் எப்படி...? உனக்குப் பிடிச்சியிருக்கா...?"

"ம், ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்றவளின் விழிகளைக் கூர்ந்து பார்த்த பத்மவர்ஷினி,

"இது உதட்டளவில் இல்லாது மனதளவில் இருந்தால் ரொம்பச் சந்தோசமே..."

அதில் சந்திரமதி திடுக்கிட்டு போய் நிமிர்ந்து பார்த்தாள்...

"உன் மனசு எனக்குப் புரியுது மதி... காதலனை விட்டுக் கொடுக்கலாம்... அப்படித் தான் உங்க காதலை பார்த்து நான் விலகி போனேன்... ஆனா கணவனை அப்படி விட்டு கொடுக்க முடியாது மதி..." என்றவளின் மனம் சந்திரமதிக்குப் புரிந்தது...

"நான் இந்தக் கல்யாணத்துக்கு மனசாரச் சம்மதிக்கப் போய்த் தான் இப்போ மணமேடை வரை வந்திருக்கேன்... நீங்க கவலைப்படாதீங்க... சத்யா மாமா உங்களுக்கு மட்டும் தான்..."

சந்திரமதி கூறியது கேட்டு அவளது முகம் பூவாய் மலர்ந்து போனது...

"உன் வாழ்க்கையும் சந்தோசமாக அமையும்..." என்று அவளை வாழ்த்திவிட்டு பத்மவர்ஷினி அந்த அறையை விட்டு வெளியில் வந்தாள்...

மெல்லிய சரிகையிட்ட ஆகாய வண்ண பட்டுப்புடவையில், அதே வண்ண பட்டு நூல் கொண்டு செய்யப்பட்ட செயற்கை அணிகலன்களை அணிந்து வானத்து தேவதை போல் நடந்து வந்து கொண்டிருந்த மனைவியைக் கண்டு இமைக்க மறந்து நின்றிருந்தான் சத்யமூர்த்தி...

"எப்படியிருந்த என் மகளை இப்படி ஆக்கிட்டியேடா பாவி..." ஜீவாவின் ஆத்திரமான குரல் அவனது காதருகில் சீறலாய் ஒலித்தது...

சத்யமூர்த்தித் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தான்... அங்கே ஜீவா கடும்கோபத்துடன் நின்றிருந்தான்...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 21

மகளின் இளைத்து, கறுத்த தோற்றம் கண்டு ஜீவாவின் இதயத்தில் இரத்தம் வடிந்தது... இதற்காகவா இப்படி அருமை பெருமையாக மகளை வளர்த்து ஆளாக்கியது... மருமகன் மீது கோபம் வந்த அதே சமயம் மகள் மீது இன்னும் அதிகக் கோபம் வந்தது அவனுக்கு... 'இந்தப் பட்டிக்காட்டானிடம் அப்படி என்ன இருக்கிறது என்று அனைத்தையும் விட்டு விட்டு அவன் பின்னால் சென்றிருக்கிறாள் இந்த வர்ஷூ' என்று அவனது மனம் ஆத்திரத்தில் உழன்றது...

ஜீவாவின் கோபம் சத்யமூர்த்தியை சிறிதும் பாதிக்கவில்லை... அவன் கூலாக மாமனாரை பார்த்தான்...

"இப்போ அவள் செல்வி. பத்மவர்ஷினி ஜீவா இல்லை... திருமதி. பத்மவர்ஷினி சத்யமூர்த்தி... உங்க வசதிக்கு நீங்க உங்க மகளை இளவரசி மாதிரி வளர்த்தது பெருசு இல்லை... ஆனா நான் என் வசதிக்கு என் மனைவியை மகாராணி மாதிரி வச்சியிருக்கேன்... நிச்சயம் இது பெரிய விசயம் தான்... இன்னும் அவளை நல்லா வச்சிக்குவேன்... எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றவனது குரலில் நூறில்லை இருநூறு சதவீதம் நம்பிக்கை இருந்தது...

அவனது நம்பிக்கையான பேச்சு ஜீவாவின் புருவத்தை ஆச்சிரியத்தில் உயர செய்தது... அதற்குள் பத்மவர்ஷினி அவர்களைத் தேடி வந்து விட்டாள்...

"ஹாய் டாட், எப்படியிருக்கீங்க...? மாம் எங்கே...?" என்று அவள் சுற்றும் முற்றும் பார்த்தபடி கேட்டாள்...

"ஐயம் ஃபைன் வர்ஷூ... உன் அம்மா அங்கே முதல் வரிசையில் உட்கார்ந்து இருக்கிறாள் பார்..." என்றவன்,

"நீ எப்படி இருக்கேடா...?" மகளது தலையை வாஞ்சையுடன் தடவியபடி கேட்டான்...

கடந்த நான்கு மாதங்களாக அதாவது அவளது திருமணம் முடிந்ததில் இருந்து ஜீவா மகளைக் கண்ணில்

காணவில்லை... அலைப்பேசியில் பேசிய போதும் அவளைக் காணாத ஏக்கம் அவனுக்கு அதிகம் இருந்தது...

"பார்த்தா எப்படித் தெரியுது டாட்...?" என்று கேட்டாள் மகள்...

"கொஞ்சம் இளைத்த மாதிரி இருக்கியே வர்ஷூ..." தந்தையின் குரல் சற்று கவலையுடன் ஒலித்தது...

"நல்லது தானே டாட்... இப்போ தான் நான் ஹெல்த்தியா இருக்கேன்... இங்கேயாவது நான் வேலை வேலைன்னு சாப்பாடை கவனிக்காம ஓடிட்டே இருப்பேன்... ஆனா அங்கே சத்யாவுக்கு என்னைக் கவனிக்கிறது மட்டும் தான் வேலை... நான் சாப்பிடாம அவன் சாப்பிட மாட்டான்... அந்தளவுக்கு அவனுக்கு என் மேல் அக்கறை, காதல்..." என்றவள் கணவனது கையைப் பிடித்துக் கொண்டு அவன் மேல் சாய்ந்து கொண்டாள்...

கணவனாய் சத்யமூர்த்தியின் மனம் பெருமை கொண்டது... அதே பெருமையுடன் அவன் மாமனாரை நிமிர்ந்து பார்த்தான்... என்னே ஆச்சிரியம்! ஜீவா பூரிப்புடன் மகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... இப்போது அவனது முகத்தில் வருத்தம் இல்லை... மாறாக மகிழ்ச்சியே நிறைந்திருந்தது... தன்னைப் போல் தன் மகளும் உணர்வது கண்டு அவனுக்குப் பெருத்தச் சந்தோசமாக இருந்தது...

எத்தனையோ உறவுகள் அவனைச் சுற்றியிருந்த போதும் அவன் தன்னை அநாதை போல் தான் உணர்ந்தான்... அவனது காதல் மனைவி சுபிக்ஷா அவனது வாழ்வில் வந்த பின்னரே அவன் நிறைவாக உணர்ந்தான்... அதே போல் மகளும் உணர்ந்து பேசுவது கண்டு அவனுக்குச் சந்தோசமே...

மகளை விட்டு கொடுக்காத மருமகன், மருமகனை விட்டு கொடுக்காத மகள்... இதை விட வேறு என்ன வேண்டும் அவனுக்கு... ஜீவா நிமிர்ந்து சத்யமூர்த்தியை பார்த்து,

"யாராலையும் ஜெயிக்க முடியாத என் பொண்ணு மனசை நீ ஜெயிச்சிட்ட... இந்தக் காதல் கடைசிவரை இருக்கணும்...

இது தான் எனது ஒரே வேண்டுகோள்..." என்று அவன் மருமகனது தோளை தட்டி கொடுத்தான்...

வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெற்ற விஸ்வாமித்ரர் மனநிலையுடன் சத்யமூர்த்தி ஜீவாவை ஆச்சிரியத்துடன் பார்த்தான்...

"இருக்கும் டாட்... இல்லாது போக நான் விட மாட்டேன்..." என்று மகள் தகப்பனுக்கு நம்பிக்கை அளித்தாள்...

"மாப்ளை ஒண்ணும் சொல்லையே..." ஜீவா சத்யமூர்த்தியை கேள்வியாய் ஏறிட்டான்...

"ஆங்..." தூக்கத்தில் இருந்து விழிப்பவன் போல் விழித்த சத்யமூர்த்தி,

"எம் பொஞ்சாதி சொல்பேச்சுக்கு மறுபேச்சு என்னிடம் கிடையாது..." என்றவனின் விழிகளில் அத்தனை காதல் வழிந்தது... அவனது வார்த்தையிலேயே அவனது நேசம் தெரிந்தது...

"சக்தியில்லையேல் சிவம் இல்லை... இங்கேயும் அப்படித்தானா...?" என்று ஜீவா வெடிச்சிரிப்புச் சிரித்தான்...

"அப்போ அங்கேயும் மதுரை ஆட்சி தானா...?" என்று சத்யமூர்த்திப் பதிலுக்குக் கேலி செய்து சிரித்தான்...

"நிச்சயமாய்... சுபி பேச்சுக்கு மறுபேச்சு என்னிடம் கிடையாது..." ஜீவா கூறும் போதே சுபிக்ஷா அங்கு வந்துவிட்டாள்...

"மாப்ளே நல்லாயிருக்கீங்களா...?" என்று அவள் மருமகனை பார்த்து நலம் விசாரிக்க...

"நல்லாயிருக்கேன்..." என்று சத்யமூர்த்திக் கூறும் போதே பத்மவர்ஷினி சிணுங்கினாள்...

"மாம் நானும் இங்கே தான் இருக்கேன்..."

"நீ நல்லாயிருப்பன்னு எனக்கு நல்லாவே தெரியும்... உன்னைக் கட்டிக்கிட்டு மாப்ளை தான் என்ன பாடு படுறாரோன்னு எனக்குத் தினமும் கவலையா இருக்கும்..." என்ற அன்னையைக் கண்டு அவள்,

"மாம் திஸ் இஸ் டூமச்..." என்று ஆள்காட்டி விரல் நீட்டி மிரட்ட...

"இப்படித் தான் உங்க பொண்ணு என்னையும் மிரட்டுறாள் அத்தை..." என்று சத்யமூர்த்தி மாமியாரிடம் போலி புகார் வாசித்தான்...

"ஊருக்கு வந்து தானே ஆகணும்... அங்கே வந்து வச்சுக்கிறேன்..." என்று அவள் கணவனை மிரட்ட...

"நீங்களே இப்போ பார்க்கறீங்கல்ல அத்தை..." என்று அவன் மனைவியை மாமியாரிடம் போட்டுக் கொடுத்தான்...

"டேய் சத்யா..." சற்று குரலை உயர்த்திய மனைவியிடம்,

"சமாதானம் அம்மிணி..." என்று இரு கைகளையும் உயர்த்திச் சிரித்தான் சத்யமூர்த்தி...

அதைக் கண்டு மற்ற மூவரும் சிரித்தனர்... வெகுநாட்களுக்குப் பின் அவர்களுக்குள் நல்ல இணக்கமான சூழ்நிலை உருவாகியது... அப்போது தான் சுபிக்ஷா மகளை நன்கு உற்று கவனித்தாள்...

"வயிறு மேடிடவே இல்லையே வர்ஷூ... உன் வயிறு குழந்தை உண்டான வயிறு மாதிரியே தெரியலையே... டாக்டர் கிட்ட செக்கப் போறியா இல்லையா...?" என்று சந்தேகத்துடன் கேட்க...

"மாம்... அது வந்து..." என்று மேலே கூற போன மனைவியின் கையைப் பிடித்துத் தடுத்த சத்யமூர்த்தி,

"கரு கலைஞ்சிருச்சு அத்தை..." ஊராரிடம் கூறிய அதே பொய்யை மாமியாரிடமும் அவன் கூறினான்...

"வர்ஷூ...." பெற்றோர் இருவரும் அதிர்ந்து போயினர்...

சுபிக்ஷா கண்கள் கலங்க மகளை அணைத்து கொண்டாள்...

"ரொம்பக் கஷ்டப்பட்டியா வர்ஷூ... எனக்கு ஃபோன் பண்ணியிருந்தால் நான் வந்து பார்த்திருப்பேனே..." என்று அவள் கண்ணீர் வடிக்க...

"கல்யாணமானதுக்கு அப்புறம் அப்பா, அம்மா உனக்கு அந்நியமா போயிட்டாங்க இல்லையா வர்ஷூ..." ஜீவா மனத்தாங்கலுடன் கூறினான்...

பத்மவர்ஷினி இயலாமையுடன் தனது கணவனைப் பார்த்தாள்... தன்னால் எத்தனை பேருக்குத் துன்பம் என்று அவளுக்கு வேதனையாக இருந்தது...

"பத்மா இப்போ தான் எல்லாத்தையும் மறந்துட்டு சந்தோசமா இருக்கா... இப்போ போய் நீங்க இப்படிப் பேசினா மறுபடியும் வருத்தப்படுவாள்..." என்று சத்யமூர்த்திக் கூறியதற்கு நல்ல பலன் இருந்தது...

சுபிக்ஷா, ஜீவா இருவரும் மனதை தேற்றிக் கொண்டு புன்னகைத்தனர்...

"காலமும், வயதும் உங்கள் இருவருக்கும் இருக்கிறது... கவலைப்படாதே வர்ஷூ..." என்று அவர்கள் மகளைச் சமாதானம் செய்தனர்...

பத்மவர்ஷினி தவிப்புடன் கணவனைப் பார்த்தாள்... அவனோ சமாதானப்படுத்தும் விதமாக விழி மூடி திறந்தான்... இதை ஜீவா கவனித்து விட்டான்... எல்லாத் தகப்பனுக்கும் வரும் பொறாமை உணர்வு அவனது மனதில் எழுந்தது...

அதற்கு மேல் அதைப் பற்றிப் பேசாது சுபிக்ஷா மகளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றுவிட... ஜீவா மற்றும் சத்யமூர்த்தி மட்டும் தனித்திருந்தனர்...

"என் பொண்ணை நல்லாவே மயக்கி வச்சிருக்க..." என்றான் ஜீவா நக்கலாக...

"பொண்ணு மட்டுமல்ல பொண்ணோட அப்பாவும் மயங்கும் காலம் வரும்..." என்றான் சத்யமூர்த்தி அதே நக்கலோடு...

"நீ என் பொண்ணுக்கு வைரமாக இழைத்தாலும் என் மனசு மாறாது... என் பொண்ணுக்கு நீ கொஞ்சமும் பொருத்தம் இல்லாதவன் தான்... அவளுக்கு உன்னைப் பிடித்திருக்கிறது... அந்த ஒரு காரணம் தான் என்னை அடங்கிப் போகச் செய்கிறது... இல்லை என்றால்...?" என்று கை முஷ்டியை இறுக்கி கோபத்தைக் கட்டுப்படுத்தியவன்,

"என் உணர்வுகளைப் புரிந்து கொள்ள உனக்கு ஒரு மகள் வர வேண்டும்... அதுவும் அவள் உன்னைப் போன்று ஒருவனைக் காதலித்துக் கல்யாணம் பண்ண வேண்டும்... அப்போது உனக்குப் புரியும் என்னோட மனவலி என்னன்னு..." என்று சீறியவன் அங்கிருந்து சென்றுவிட்டான்...

இதுவரை ஒரு ஆண்மகனாய் தன்மானம் மிகுந்து மாமனாரிடம் பேசி கொண்டிருந்த சத்யமூர்த்தி அவரின் வார்த்தைகளில் சிறிது யோசிக்க ஆரம்பித்தான்... தனது பெண் மகவு என்று வரும் போது ஜீவா பக்கமே அதிக நியாயம் இருப்பதாய் அவனுக்குத் தோன்றியது... அந்தக் கணம் தனது தவறு பெரிதாகத் தோன்ற அவனது மனம் வாடி போனது...

நரேந்திரன், சந்திரமதி திருமணம் இனிதாக நடந்து முடிந்தது... சத்யமூர்த்தி, பத்மவர்ஷினி எல்லோரிடமும் விடைப்பெற்று கிளம்பினர்... அப்போது சுபிக்ஷாவின் அலைப்பேசி அழைத்தது... எடுத்து பேசியவளின் முகம் சந்தோசத்தில் மலர்ந்து போனது...

"இதோ இப்பவே கிளம்பி வர்றேன்..." என்று அலைப்பேசியை அணைத்தவள் மகளிடம்,

"அஜீ குட்டி பெரியவளாகிட்டாளாம்... சுஜீ ஃபோன் பண்ணினாள்..." என்று சந்தோசத்துடன் கூற...

அதைக் கேட்டு மகிழ்ந்த பத்மவர்ஷினி, "ரொம்பச் சந்தோசமாயிருக்கு மாம்..." என்க... என்னயிருந்தாலும் அக்கா மகள் அல்லவா...

"அஜீ லீவுக்காக நம்ம வீட்டில் தான் இருக்கிறாள்... வந்து பார்த்துட்டு போயேன் வர்ஷூ..."

"இல்லை மாம்... நாங்க கிளம்பறோம்..." என்றவள் கணவனைப் பார்த்தாள்...

"அக்கா மகள் விசேசத்துக்குத் தங்கை நீ இல்லைன்னா எப்படி வர்ஷூ...? முறைன்னு ஒண்ணு இருக்கில்ல... நம் பிரச்சினையை விழாவில் வெளிச்சம் போட்டு காட்ட ஆசைப்படுறியா...?" ஜீவா கேட்கவும் பத்மவர்ஷினி 'என்ன செய்வது...?' என்பது போல் கணவனைப் பார்த்தாள்...

"நீ வேணா உன் வீட்டுக்கு போ பத்மா... ஒரேடியா விசேசம் முடிஞ்சு நீ ஊருக்கு வந்தா போதும்..."

"வர்ஷூ மட்டுமில்லை... நீங்களும் வரணும் மாப்ளை..." ஜீவா சத்யமூர்த்தியை முதன்முறையாக மரியாதையோடு வீட்டிற்கு அழைத்தான்...

"நான் எதுக்கு...? அதான் பத்மா இருக்காளே..." என்று அவன் மறுக்க...

"வர்ஷூ, உன் புருசனை நீயே கூப்பிடு..." என்று ஜீவா கூற...

கணவனது தன்மானம் பற்றித் தெரிந்தவள் ஆதலால் பத்மவர்ஷினி அவனைப் பரிதவிப்புடன் பார்த்தாள்...

"இப்போ நீ இவங்க கூடப் போ பத்மா... நான் விசேசத்துக்கு வர்றேன்..." என்று அவன் சமாதானமாய்க் கூற...

அவளது விழிகளில் கண்ணீர் நிறைந்தது... அந்தச் சிறு பிரிவை கூட அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை... அவளது கண்ணீர் கண்டு சற்று நிதானித்தவன்,

"நான் பத்மா கூடத் தனியா பேசணும்..." என்று அவளைத் தனியே அழைத்துச் சென்றான்...

"என்ன பத்மா இது... சின்னப் புள்ள மாதிரி கண்ணு கலங்கிட்டு..."

"நீ என்னை விட்டுட்டு இருந்திருவியா சத்யா...?"

"ஹா ஹா... இதுக்குத் தானா...? பதினாறு நாள் நிம்மதியா இருப்பேன் அம்மிணி... அதுவும் பூனைக்குட்டி பிராண்டல் இல்லாம..." என்று கேலி செய்து சிரித்தவன் கையில் நறுக்கென்று கிள்ளி வைத்தாள் அவனது மனையாள்...

"ஆ..." என்று அலறியவனைக் கண்டு முறைத்தவள்,

"என்னால் உன்னை விட்டுட்டு இருக்க முடியாது..." என்றாள் கலக்கத்துடன்...

"ச்சு, திரும்பத் திரும்ப இதையே சொல்லிக்கிட்டு..." அவளது விழிகளில் துருத்தி கொண்டிருந்த விழிநீரை அவன் துடைத்து விட்டான்...

"உன்னை விட்டு பிரிஞ்சிருந்தாலே எனக்குப் பயமாயிருக்கு சத்யா... நீ என்னை விட்டு போயிருவியோன்னு..."

தனது முட்டாள்த்தனமான புரிதலால் ஏற்பட்ட விளைவு தான் அவளது பயம் என்பதைப் புரிந்தவனாய் அவன்,

"ஊரு, உலகத்துக்கு எல்லாம் சத்தம் போட்டு சொல்லியிருக்கேன்டி இந்தப் பூனைக்குட்டி தான் என் பொஞ்சாதின்னு... பொறவு நான் எப்படி மறப்பேனாம்... உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன்... என் நெஞ்சுக்குள் நீ இருக்க..." என்று தனது நெஞ்சை தொட்டு காண்பித்தவன்,

"உன் நெஞ்சுக்குள்ள நான் இருக்கேன்..." என்றபடி மனைவியின் இதயம் நோக்கி அவனது கைகள் மெல்ல நகர்ந்தது... அதைப் பாதியில் தடுத்துப் பிடித்துக் கொண்ட பத்மவர்ஷினியின் முகம் வெட்கத்தில் சிவந்து போனது...

"போதும், போதும் உன் லொள்ளு..."

மனைவியின் வெட்கச்சிவப்பை ரசித்தபடி அவன், "இப்போ உன் வீட்டுக்கு போகலாமா...?" என்று கேட்க...

"நீயும் வா சத்யா..."

"இல்லைம்மிணி..."

"பார்த்தியா நீ வர மாட்டேங்கிற...?"

"நாளைக்கு வேளாண் கல்லூரியில் கூப்பிட்டு விட்டிருக்காங்க... உனக்கு ஞாபகம் இல்லையா...?" என்று அவன் கேட்கவும் தான் அவளுக்கு நினைவு வந்தது...

"சரி, சரி நீ கிளம்பு சத்யா..."

மனைவியை ஏக்கத்துடன் பார்த்த சத்யமூர்த்திச் சுற்றும் முற்றும் பார்த்தபடி யாரும் இல்லாததை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு அவள் அருகில் வந்தவன் அவளை அணைத்து உச்சிமுகர்ந்து அவளது உச்சந்தலையில் இதழ் பதித்து,

"பார்த்து பத்திரமா இரு பத்மா..." நா தழுதழுக்கக் கூறினான்...

"நீ இப்படி எல்லாம் ஃபீல் பண்ணினால் நான் உன் கூடவே வந்திர்றேன் சத்யா..." என்று அவள் சிணுங்க...

"பெத்தவங்க மனசையும் நாம பார்க்கணுமே அம்மிணி... ஏற்கெனவே அவங்க நாலு மாசம் உன்னைப் பிரிஞ்சு இருந்திருக்காங்க... ஒரு பத்து நாள் நீ அங்கே போய் இருப்பதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை..."

"பத்து நாள் இல்லை... பதினாறு நாள்..." என்று இரு கைவிரல்களையும் அவள் விரித்துக் காண்பிக்க...

"பதினாறு நாளுல இன்னைக்கும், பதினாறாவது நாளையும் கழிச்சா பதினாலு நாள் தான் பத்மா... நீ கணக்குத் தப்பா போடுற..." என்று கேலி செய்து சிரித்தவனைக் கண்டு முறைத்தவள்,

"ஆமாம், ஆமாம், நீ கணக்குல புலி தான்..."

"கணக்கு பார்க்கிறதுல மட்டுமல்ல அம்மிணி இந்தச் சத்யா கணக்கு பண்றதுலேயும் புலி தான்..." என்று மீசையை முறுக்கி கொண்டவனைக் கண்டு கோபம் போய்க் காதல் வந்தது அவளுக்கு...

"உங்கம்மா, அப்பாரு காத்துக்கிட்டு இருப்பாங்க... நான் கிளம்பறேன்..."

"ம்... டேக் கேர் சத்யா..." என்று நெகிழ்வுடன் கூறியவள் பின் ஞாபகம் வந்தவளாய்,

"தினமும் சட்டையின் மேல் பட்டனை போட்டுட்டு போகலை பிச்சிருவேன் பிச்சி..." என்று மிரட்டலோடு முடிக்க...

"ஹா ஹா..." என்று வாய்விட்டு சிரித்தவன்,

"நான் சட்டையே போடலை போதுமா...?" என்று கூறியவனைக் கண்டு இன்னமும் அதிகமாய் முறைத்தாள் அவள்...

"சரிங்க அம்மிணி... அம்மிணி சொன்னா சரியா தான் இருக்கும்..." பணிவுடன் கூறிய கணவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு பீறிட்டது...

பின்பு தனது சட்டைப்பையில் இருந்து பணத்தை எடுத்து அவளிடம் கொடுத்தவன், "செலவுக்கு வச்சுக்கோ பத்மா..." என்றவனின் குரல் கமறியது...

"எனக்கு எதுக்குச் சத்யா...? எங்கப்பா, அம்மா கூடத் தானே போறேன்... உனக்குத் தான் நிறையச் செலவு இருக்கு..."

"அதெல்லாம் நான் சமாளிச்சுக்குவேன்... இனி நீ எதுக்கும் உங்கப்பாரு கிட்ட பணம் கேட்க கூடாது..." என்றான் அவன் முடிவாக... அவன் அப்படிக் கூறியதும் பணத்தைச் சிரித்தபடி வாங்கியவள்,

"ஊருக்கு போறதுக்குப் பணம் வச்சியிருக்கியா...?" என்று கவலையுடன் கேட்க... அவளது கவலை அவனது முகத்தில் புன்னகையை அரும்ப வைத்தது... அதே சமயம் கவலையே

அறியாதவளை கவலைப்பட வைத்த தனது ஏழ்மையை நிலையை எண்ணி அவனது மனம் வருந்தியது...

"இருக்கு... சரி நீ கிளம்பு..." என்றபடி அவளை அழைத்துக் கொண்டு அவளது பெற்றோர் நோக்கி வந்தான்...

பத்மவர்ஷினி அவளது பெற்றோருடன் காரிலேறி செல்ல... வெளியில் இருந்து சத்யமூர்த்திக் கையை ஆட்டி அவளுக்குப் பிரியாவிடை கொடுத்து அனுப்பினான்... திருமணமான பின் நிகழும் முதல் பிரிவு இது... அவனுக்குமே துக்கம் தொண்டையை அடைத்தது... இரண்டு வாரம் தானே என்று மனதை தேற்றிக் கொண்டு அவன் ஊருக்கு கிளம்ப ஆயத்தமனான்...

வெளியில் வேடிக்கை பார்த்தபடி அமைதியாக வந்த மகளைப் பார்த்த சுபிக்ஷா, "வர்ஷூ..." என்றழைக்க...

"சொல்லு சத்யா..." என்ற மகளைக் கண்டு சுபிக்ஷா பட்டென்று சிரித்துவிட்டாள்...

அப்போது தான் பத்மவர்ஷினிக்குச் சுற்றுப்புறம் உறைத்தது...

"மாம்..." என்று அவள் சிணுங்கி கொண்டே அன்னையின் தோளில் முகம் புதைத்து கொண்டாள்...

"என் மகளைப் பாரு சுபி... எப்படிப் புருசன் மேல் பாசம் வைத்திருக்கிறாள்ன்னு... அவளைப் பார்த்து நீ கத்துக்கோ..." காரை ஓட்டி கொண்டு வந்த ஜீவா மனைவியை வாரினான்...

"ம்க்கும்... இந்தப் பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை..." என்று கணவனைக் கண்டு சுபிக்ஷா நொடித்தாள்...

'வேறு எதற்குக் குறைச்சலாம்...' என்று ஜீவா முன்புறம் இருந்த கண்ணாடி வழியே மனைவியைப் பார்த்துச் சத்தம் வராது வாயசைத்தான்... அதற்கு முறைத்த சுபிக்ஷா மகள் புறம் திரும்பி,

"நான் இது மாதிரி உங்கப்பாவை பிரிஞ்சிருக்க முடியாம அவரைத் தேடி மும்பைக்குப் போனா, அவர் என்னைப் பார்த்து ஏன் வந்தன்னு கேட்கிறார்... எனக்கு எப்படியிருக்கும் நீயே சொல்லு வர்ஷூ..."

"தப்பு தானே டாட்..."

"தப்பு தான்... ரொம்ப ரொம்பத் தப்பு தான்..." அன்றைய நினைவில் ஆழ்ந்து போனான் ஜீவா...

"அப்படிக் கேட்டா விட்டுட்டு வந்திருவோம்ன்னு அவருக்கு நினைப்பு... ஆனா நான் அவரையும் சேர்த்து சென்னைக்குப் பொட்டி கட்ட வச்சிட்டேன்ல..." என்று கூறி சிரித்த சுபிக்ஷாவை கண்டு தந்தை, மகள் இருவருக்கும் சிரிப்பு வந்தது...

"ஆனாலும் மாம் டாட்டை ரொம்பத்தான் மிரட்டுறீங்க... பாவம் அவர்..." மகள் தந்தைக்கு வக்காலத்து வாங்கினாள்...

"அப்போ என் கூட நீயில்லாம போயிட்டியே வர்ஷூ..." என்று போலியாய் வருந்தினான் அந்தத் தகப்பன்...

மூவரும் சிரிப்பும் குதூகலமாய் வீடு வந்து சேர்ந்தனர்... தங்கையைக் கண்டு சுஜீதா எதுவும் பேசாது உள்ளே சென்றுவிட்டாள்... அவளது கொழுந்தனை நிராகரித்த கோபம் அவளுக்கு...

"அண்ணி வாங்க, வாங்க..." அகல்யா அவளை அன்போடு வரவேற்றாள்...

"எப்படியிருக்கீங்க அண்ணி...?" என்று புன்னகையுடன் கேட்ட பத்மவர்ஷினியை கண்டு அகல்யாவுக்கு மயக்கம் வராத குறை தான்...

பத்மவர்ஷினி அக்கா மகளைப் பார்த்துவிட்டு வரவும் அங்குப் பெரியவர்களும் வந்து சேர்ந்தனர்... அரட்டையில் நேரம் ஓடி சென்றது... சிறிது நேரத்தில் யுகேனும் அங்கு வந்துவிட்டான்...

"வர்ஷூ எப்படியிருக்கம்மா...?" என்று அவன் பாசப்பயிர் வளர்த்தான்... பத்மவர்ஷினி அவனிடம் கொஞ்ச நேரம் தங்களது காய்கறி ஏற்றுமதி பற்றிப் பேசி கொண்டிருந்தாள்...

"பழங்களுக்கும் நல்ல டிமாண்ட் இருக்கு வர்ஷூ... சீசனுக்குத் தகுந்த மாதிரி பழங்களை எக்ஸ்போர்ட் பண்ணலாம்..." என்று அவன் கூற...

"கட்டாயம் சத்யா கிட்ட சொல்றேன்... இப்போ இருக்கிற நிலம் போதாதுன்னு தோணுது... வேறு நிலங்கள் வாங்கித் தான் பயிர் செய்யணும்..." என்று யோசித்த தங்கையிடம்,

"ஏற்கெனவே நம் தொழிலுக்காக வாங்கிய நிலங்கள் உங்க நிலத்தைச் சுற்றியிலும் இருக்கு... நாம் அங்கே தொழில் ஆரம்பிக்கப் போறதில்லை..."

"அப்படி நீ ஆரம்பிச்சா அதை எதிர்க்கும் முதல் ஆள் நான் தான்..." என்று கூறி சிரித்தாள் பத்மவர்ஷினி...

"இப்போ நீ விவசாயி மனைவி இல்லையா...? அதான் இப்படிப் பேசுற..."

"எக்ஸாக்ட்லி..." என்றாள் அவள் கர்வமாக...

"அந்த நிலங்களை எல்லாம் நீங்களே எடுத்துக்கோங்க..."

"அதுக்குப் பணம்...?"

"உனக்காக இதைக் கூடச் செய்ய மாட்டோமா வர்ஷூ..."

"சத்யாவுக்கு இது பிடிக்காதே... அவனுக்குப் பிடிக்காததை நானும் செய்ய விரும்பலை..." என்ற தங்கையைப் பெருமையுடன் பார்த்த யுகேன்,

"சும்மா எடுத்துக்க வேண்டாம்... மார்க்கெட் ரேட்டை விடக் குறைவா வாங்கிக்கோங்க... பணத்துக்குப் பேங்கில் லோனுக்கு நான் ஏற்பாடு பண்றேன்... இது உங்க பணம், உங்க நிலம், உங்க உழைப்பு..."

யுகேன் கூறியது கேட்டு அவளுக்கும் சரியென்றே தோன்றியது...

"எதுக்கும் சத்யா கிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு சொல்றேன்..." என்ற தங்கையை வாஞ்சையுடன் பார்த்தவன்,

"நீ இவ்வளவு யோசிக்கத் தேவையில்லை வர்ஷூ... இந்த வீட்டில் உன்னோட பங்கும் சேர்ந்து தான் இருக்கு..."

"என்னோட பங்கை நான் என் மருமகளுக்கோ, மருமகனுக்கோ கொடுக்கப் போகிறேன்... நீ அதுக்குச் சீக்கிரம் ஏற்பாடு பண்ணு..."

"நிச்சயம் வெகுவிரைவில்..." என்று வெட்கப்பட்ட அண்ணனை அதிசயமாகப் பார்த்தாள் பத்மவர்ஷினி...

"அதே போல் நீயும்... எனக்குச் சீக்கிரம் மருமகன் அல்லது மருமகளைப் பெத்து கொடு..." இப்போதைய தங்கை நிலையை அகல்யா மூலம் அறிந்ததால் அதைப் பற்றிய பேச்சை அவன் அழகாய் தவிர்த்து விட்டான்...

"நிச்சயமா யுகேன்... நான் ஒரு பையனை பெத்து என் மகனுக்கு உன் மகளைச் சொத்துக்களோடு கூட்டி கொண்டு போகிறேன்..." என்று கூறி அவள் சிரிக்க...

"இந்த அண்ணன் அதற்காகக் காத்திருக்கிறேன்..." என்றான் அவன் புன்னகையுடன்...

மாலையில் சுஜீதா புகுந்த வீட்டினர் வந்தனர்... பத்மவர்ஷினியை அவர்கள் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை... சுஜீதாவும் ஏனென்று ஒரு வார்த்தை கேட்கவில்லை... பத்மவர்ஷினி மெல்ல ஒதுங்கி கொண்டாள்...

"சுஜீ, என்னயிருந்தாலும் வர்ஷூ உன் தங்கை..."

"சாரி டாட், எனக்கு என் கணவர், அவங்க வீட்டார் தான் முக்கியம்..." என்று அவள் நிர்தாட்சண்யமாய் முகத்தில் அடித்தார் போன்று கூறிவிட்டாள்...

அதைக் கேட்டு வருத்திய பத்மவர்ஷினி ஊருக்கு கிளம்ப முயல... சுபிக்ஷா தான் அவளைத் தடுத்துவிட்டாள்... தன்னுயிரை இழந்த மகளைத் தேற்றுவதற்காக அவளைத் தன்னுடன் வைத்துக் கொள்ள அவள் மிகவும் விரும்பினாள்... ஜீவாவும் அதை ஆமோதித்தான்... பத்மவர்ஷினி மிகவும் சங்கடமான மனநிலையில் அதற்குச் சம்மதித்தாள்...

இரவு கணவனிடம் அலைப்பேசியில் பேசிய போது அவனிடம் இதைக் காட்டி கொள்ளாது அவள் பேசினாள்...

"சாப்பிட்டியாடா கருப்பட்டி...? என்ன பண்ணிக்கிட்டு இருக்க...? எனக்குத் தான் எதுவுமே பிடிக்கலை... நான் பிறந்தது முதல் வளர்ந்த வீடு இப்போ எனக்கு அந்நியமா போனது போல் ஒரு ஃபீல் சத்யா... உன் ஞாபகமாகவே இருக்கு..." என்று வருத்தமாய்க் கூறிய மனைவியைக் கண்டு அவனும் வருத்தம் அடைந்தான்...

"எனக்கும் அப்படித்தான் இருக்கு பத்மா..." என்ற கணவனது வருத்தத்தில் அவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டாள்...

"இது என்ன புதுக் கதை...? நீ தான் நான் இல்லைன்னா ஜாலியா இருப்பியே... உன் முறைப்பொண்ணுங்க சூழ கிராமத்து கண்ணனா லீலைகள் செஞ்சிக்கிட்டு இருப்பியே..." என்று அவள் அவனைக் கேலி செய்ய... அது நன்றாகவே வேலை செய்தது...

"ஹா ஹா... நீ வேற ஏனம்மிணி...? அப்படி எல்லாம் இல்லை... எனக்கு என் பொண்டாட்டி மட்டும் தான்..."

"நல்லா தெளிவா தான் இருக்கக் கருவாயா..." என்று சிரித்தவள் மெல்ல யுகேன் கூறிய நில விசயத்தை அவனது காதில் போட்டாள்...

"இப்போ இருக்கிற நிலைமையில் இது எல்லாம் சரி வராது பத்மா..." என்றவனது குரல் இறங்கி போய் ஒலித்தது...

"ஏன் சரி வராது...? கடனுக்குத் தானே வாங்கிறோம்..."

"கடன் தான்... எப்படிக் கட்டுறது பத்மா...? நம்மால் முடியுமா...?"

"நிச்சயம் முடியும் சத்யா... எனக்கு உன் மேல் நம்பிக்கை இருக்கு..." என்று அவள் நம்பிக்கை அளிக்க...

"எனக்கு என்னை விட உன் மேல் அதிக நம்பிக்கை இருக்கு பத்மா..." அவனது நம்பிக்கையில் அவளது நெஞ்சம் காதலில் விம்மியது...

"ஐ லவ் யூடா கருப்பட்டி..." என்று காதலை தித்திப்பாய் கூறினாள்...

"நானும் தான் பூனைக்குட்டி..." என்றான் அவனும் கிறக்கமாய்...

"எப்படி...?" என்று அவள் விசமமாய்க் கேட்க...

அடுத்த நொடி அவன் அலைப்பேசி வழியே இச்இச்சென்று பல முத்தங்களைப் பரிசாக அவளுக்கு அனுப்பி வைத்தான்... அதில் பாவையவள் செங்கொழுந்தாய் சிவந்து போனாள்... அடுத்து கடந்த மணித்துளிகளில் அவர்களுக்கு இடையில் நிகழ்ந்த அர்த்தமற்ற உரையாடல்கள் அவர்களது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாய், வண்ணமயமாய் மாற்றியது...

"மாமா..." என்றழைத்தபடி அகல்யா கணவன் முன் வந்து நின்றாள்...

"மாமனுக்கு என்னடி வச்சியிருக்க...?" யுகேன் சரசமாய்க் கூறியபடி அவளைத் தனது மடியில் அமர வைத்து அணைத்துக் கொண்டான்...

இப்போது எல்லாம் அவர்களுக்கு இடையில் காதல் மொட்டு விட்டு அரும்பி மெல்ல மலர்ந்து மணம் வீசி கொண்டிருந்தது...

"மாமாவுக்கு என்ன வேணுமாம்...?"

"ஒண்ணா, இரண்டா அது நிறைய இருக்கு..." என்றவனது விழிகளில் அப்பட்டமாய்த் தாபம் தெரிந்தது...

"அது எல்லாம் பத்திரமா உங்க கிட்டேயே இருக்கட்டும்... இப்போ நான் அண்ணி கூடப் போய்ப் படுக்கப் போறேன்..." என்ற மனைவியை அவன் மனநிறைவோடு பார்த்தான்... அவனது தங்கையிடம் அன்பு பாராட்டும் மனைவி மீது அவனுக்கு எல்லையில்லா காதல் பொங்கியது...

"அவளைத் தூங்க விடாம உங்க ஊர் கதையைக் கேட்க போறியாக்கும்..." என்று அவன் கிண்டல் செய்தான்...

"ஆமாம், உங்க ஊரு மாதிரியா அடுத்தவனைப் பத்தி நினைக்கக் கூட முடியாம ஓடிக்கிட்டு இருக்கிறதுக்கு... எங்க ஊரில் மாடு கன்னு போட்டதில் இருந்து கோழி குஞ்சு பொரிச்சது வரைக்கும் எங்களுக்குப் பேச ஆயிரம் விசயம் இருக்கும்..." என்று அவள் சண்டை கோழியாய் சிலிர்த்துக் கொள்ள...

"ஆயிரத்து ஒண்ணாவதா இந்த மாமனை நினைக்க மறந்திராதே என் செல்ல கில்மா..."

"யோவ் மாமா, கில்மான்னு கூப்பிடாதேய்யா... எனக்கு என்னமோ மாதிரியிருக்கு..." என்று அவள் சிணுங்க...

"என்ன மாதிரியிருக்குடி..." என்று ஆர்வமாய்க் கேட்டவன் மடியில் இருந்து முறைத்துக் கொண்டே எழுந்தவள்,

"தனியா ஒரு நாள் சொல்றேன்..." என்று சிரித்தபடி கூறியவள் கண்சிமிட்டியபடி அங்கிருந்து சிட்டாகப் பறந்து சென்றாள்...

மனைவி செல்வதைப் பார்த்தபடி தலை கோதி கொண்டவனின் முகத்தில் அப்படியொரு சிரிப்பு நிறைந்திருந்தது...

********************

சடங்கிற்கு முதல் நாள் சத்யமூர்த்திச் சென்னைக்கு வந்துவிட்டான்... ஆனால் பத்மவர்ஷினி வீட்டிற்குச்

செல்லாது அவன் நடராஜனின் அறைக்குச் சென்றுவிட்டான்... அவனை எதிர்பாராது கண்டதும் நடராஜன் ஆச்சிரியத்தில் விழிகளை விரித்தான்...

"மாப்ளே என்னடா அதிசயமா இருக்கு...? இந்த ஏழையோட குடிசைக்கு நீ வந்திருக்க..." என்று நடராஜன் ஆர்ப்பாட்டமாய் அவனை வரவேற்றான்...

"டேய் நானும் உன்னை மாதிரி தான்டா..." என்று நண்பனின் தலையில் தட்டினான் சத்யமூர்த்தி...

"அது எப்படிடா நீயும் நானும் ஒண்ணாக முடியும்...? உன் கல்யாணத்துக்கு வந்த என்னால் உன்னை நெருங்க கூட முடியலை... அந்தளவுக்கு நீ உயர்ந்துட்டடா..."

"ப்ச், வேற பேசுடா..." என்றான் அவன்...

"என்னடா இப்படிச் சொல்ற...? உன்னைக் காதலிக்கிற பொண்ணு இப்போ உன் மனைவியா இருக்கு... அதுவும் தங்கச்சி உனக்காக என்னவெல்லாம் செஞ்சிருக்காங்க தெரியுமா...?" என்ற நண்பனை புரியாது பார்த்தான் சத்யமூர்த்தி...

"ஆமான்டா... அம்மா மாடு வாங்குறதுக்குப் பேங்க் லோன், அப்புறம் தம்பி படிக்கிறதுக்கான உதவி எல்லாம் தங்கச்சி ஏற்பாடு பண்ணியது தான்டா..."

அதைக் கேட்டு அவன் திகைத்து போய்விட்டான்...

"நீ கூட இதை என் கிட்ட இருந்து மறைச்சிட்டியேடா...?"

"உன் கிட்ட சொல்ல கூடாதுன்னு கொலை மிரட்டல்டா மாப்ளே... என் உயிருக்கு பயந்து அமைதியாகிட்டேன்... சிஸ்டர் ரொம்ப டெரர்டா..." என்று பயத்துடன் கூறிய நடராஜனை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"ஆனா என் கிட்ட மட்டும் பூனைக்குட்டி அப்படிப் பம்முதேடா..." என்றபடி மந்தகாசமாய்ப் புன்னகைத்தான் அவன்...

"எல்லாம் காதல் படுத்தும் பாடு..." என்ற நண்பனை கண்டு புன்னகைத்தவன் மேலே ஒன்றும் பேசவில்லை...

மொட்டை மாடியில் வந்து படுத்தவன் வானத்து நிலவை வெறித்தான்... இன்று அந்த வானத்து நிலவு அவன் வசம்... அவனுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது... அந்தக் கணம் மனைவி செய்த உதவிகள் கண்டு அவனுக்குக் கோபம் வரவில்லை... மாறாகக் காதல் வந்தது...

"பூனைக்குட்டி, என் சம்பளத்தைப் பிடிக்கிற மாதிரி பிடிச்சிட்டு அந்தப் பக்கமா என் குடும்பத்துக்கு உதவி பண்ணியிருக்கியா...? ஆனாலும் உன் குசும்புக்கு ஒரு அளவு இல்லாம போச்சு அம்மிணி..." என்றவனின் முகத்தில் புன்னகை மலர்ந்திருந்தது...

மறுநாள் விடியற்காலையில் சத்யமூர்த்தி மனைவியைக் காண அவளது வீட்டிற்குச் சென்றான்... அவன் இங்கு வந்திருக்க மாட்டான் தான்... ஆனால் ஜீவா அலைப்பேசியில் அவனை வற்புறுத்தி அழைத்ததால் அவன் வந்துவிட்டான்... வீட்டிற்குள் நுழைந்தவனை ஜீவா தான் முதலில் வரவேற்றான்...

"வாங்க மாப்ளே..." என்று... அவனது வரவேற்பில் சத்யமூர்த்தி ஆச்சிரியமாய்ப் பார்த்தான்...

"வர்ஷூ வச்சு நமக்கு இடையில் மனஸ்தாபம் இருக்கலாம்... ஆனால் நீங்க இந்த வீட்டு மாப்பிள்ளை என்பதை நான் மறக்கலை... நிச்சயம் அதற்கு உண்டான மரியாதை உங்களுக்குக் கொடுக்கப்படும்..." என்றான் ஜீவா சிறிதும் மிடுக்கு குறையாது... மாமனாரின் மரியாதை பன்மையான விளிப்பில் இன்னமும் ஆச்சிரியம் அடைந்த சத்யமூர்த்தி,

"ரொம்ப நன்றிங்க மாமா..." என்று கூறி மாமனாரை ஆச்சிரியப்படுத்தினான்...

அதில் இரு புருவங்களையும் உயர்த்திய ஜீவா பின்பு சிரிப்புடன்,

"வர்ஷூ அவளோட ரூமில் இருக்கிறாள்..." என்று கூறிவிட்டு அவனைக் கடந்து சென்றான்...

விழாவிற்கான ஆயத்தங்களைப் பார்த்தபடி சத்யமூர்த்தி நேரே மனைவியின் அறைக்குச் சென்றான்... அறைக்குள் சென்று கதவை சாத்திய சத்யமூர்த்தி அயர்ந்து உறங்கி கொண்டிருந்த மனைவியை நோக்கி பூனை போல் மெல்ல நடந்து சென்றான்... அகல்யா விழாவிற்காக நேரத்துடன் எழுந்து சென்றிருந்தாள்...

மனைவி அருகில் சென்று அவளது முகத்தோடு முகம் பதித்து நாசியோடு நாசி உரசியவன், "பூனைக்குட்டி இன்னுமா தூங்குற... எழுந்திருடி..." என்க...

"என்னைத் தூங்கவே விடவே மாட்டேங்கிற சத்யா... இன்னும் கொஞ்ச நேரம் தூங்க விடு..." என்று தூக்கத்தில் சிணுங்கியபடி அவள் அவனை அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

தூக்கத்தில் கூடத் தன்னை உணரும் மனைவியைக் கண்டு அவனது கரங்கள் காதலோடு அவளை இறுக அணைத்துக் கொண்டது... அவனது இறுகிய அணைப்பில் அவள் மெல்ல உறக்கம் கலைந்தாள்... கண்முன் இருந்த கணவனைக் கண்டு திகைத்து போனவளாய் விழிகளை விரித்தவள் அடுத்த நொடி,

"சத்யா..." என்று கூவி கொண்டே அவன் மீது பாய்ந்து முத்தத்தால் அவனைக் குளிப்பாட்டினாள்...

"ஐ மிஸ் யூடா கருப்பட்டி..." என்று ஒவ்வொரு முத்தத்திற்கும் இதைச் சொல்லியபடி முத்தமிட்டவளின் காதலில் அவன் சுகமாய் நனைந்தான்...

"பூனைக்குட்டி, கொஞ்சி கொஞ்சி கொல்றடி..." என்று பெருகிய காதல் உணர்வில் அவன் பலகீனமாய் முனங்கினான்...

"எப்போடா வந்த...?"

"நேத்தே வந்துட்டேன்..." என்றவனைக் கண்டு விலகி அவனது முகம் பார்த்தவள்,

"ஏன் இங்கே வரலை...?" என்றாள் அதட்டலாய்...

"அது வந்து..."

"டாட் பேசியதை நீ இன்னும் மறக்கலையா சத்யா...?"

"அதுக்காகன்னு இல்லை பத்மா... உங்க வீட்டு ஆடம்பரம் பார்க்கும் போது ஏதோ ஒரு ஒட்டாத தன்மை... அது என்னன்னு எனக்குத் தெரியலை..." என்று கூறியவனைப் புரிதலுடன் பார்த்தவள்,

"அவ்வளவு தானா... இல்லை என்னைப் பார்த்தாலும் அப்படித் தான் தோணுதா...?" என்றவளை அள்ளி எடுத்து தன் மீது போட்டு கொண்டவன்,

"உன்னை அப்படி நினைக்க முடியுமா பூனைக்குட்டி... நீ என்னோட உயிராச்சே..." என்றபடி தன்னவளுக்குப் பல பரிசுகளை வாரியிறைத்து தனது காதலை அவளுக்குப் புரிய வைத்தான்...

அந்நேரம் அவளது அறை கதவு தட்டப்பட்டது... அவள் எழுந்து செல்ல... சத்யமூர்த்தி எழுந்து அமர்ந்தான்... சுபிக்ஷா தான் கதவை தட்டியது...

"இந்தா வர்ஷூ... இந்தப் பட்டுப்புடவை, நகை எல்லாம் போட்டுக்கோம்மா..." என்க...

பத்மவர்ஷினி கணவனைப் பார்த்தபடி, "வேண்டாம் மாம்..." என்றாள்... சுபிக்ஷா சத்யமூர்த்தியை கண்டு,

"நீங்களாவது சொல்ல கூடாதா...? ஃபங்கசனுக்கு மட்டும் தான்... ஊருக்கு போகும் போது திரும்ப வாங்கிக்கிறேன்..." என்று நேரிடையாகக் கேட்கவும் அவனால் மறுத்து பேச முடியவில்லை...

"போட்டுக்கோ பத்மா..." என்றான்...

கணவன் கூறியதற்காக அவள் அதை வாங்கிக் கொண்டாள்...

"சத்யா, நீ ஃபீல் பண்ணினேன்னா வேண்டாம்..." என்று கலக்கத்துடன் கேட்டவளை கண்டு,

"நான் ஒண்ணும் நினைக்கலை பத்மா... நேரமாச்சு பாரு... சீக்கிரம் கிளம்பு... விழா முடிஞ்சதும் நாம ஊருக்கு கிளம்பணும்... இதுக்கு மேல ஒரு நொடி கூட உன்னைய விட்டுப் பிரிஞ்சிருக்க என்னால் முடியாது..."

"எனக்கும் தான் சத்யா..." என்று கூறியவள் அவனது நெற்றியில் முத்தமிட்டு விட்டு விலகி குளியலறை நோக்கி சென்றாள்...

அவள் குளித்து முடித்து உடை மாற்றும் வரை சத்யமூர்த்திப் பால்கனியை விட்டு அசையவில்லை... அங்கேயே நின்று கொண்டு வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்...

"கருப்பட்டி..." என்றபடி அவள் அவன் பின்னால் இருந்து அணைத்தாள்...

அவள் பூசியிருந்த வாசனை திரவியத்தின் நறுமணம், மல்லிகை பூவின் வாசம் எல்லாம் சேர்ந்து அவனை மொத்தமாய்க் கிறக்கியது... அவன் தனது கையைப் பின்னுக்குச் செலுத்தி அவளை முன்னுக்கு இழுத்தான்... அவளது அலங்காரத்தில் அவன் கண்ணிமைக்க மறந்தான்... வானத்து தேவதை ஒன்று பூலோகம் வந்தது போல் அவள் அத்தனை அழகாக இருந்தாள்...

"பூனைக்குட்டி கொல்றடி..." என்றபடி அவன் அவளை லேசாக அணைத்து அவளது முன்நெற்றியில் முத்தமிட்டு விலகினான்...

"இவ்வளவு தானா சத்யா...?" என்று ஏக்கத்துடன் கேட்டவளை கண்டு புன்னகைத்தவன்,

"இதுக்கு மேலயும் போக ஆசையா தான் இருக்கு... ஆனா உன் புடவை கசங்கியிருமே..." என்று விசமமாய்க் கூறியவனைக் கண்டு,

"ச்சீ, போடா கெட்ட பையா..." என்று அவள் முகத்தை மூடி கொண்டாள் நாணத்தில்...

"விழாவுக்கு நேரமாச்சு... வா போகலாம்..." என்று அவன் சிரித்தபடி அவளை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தான்...

மாடிப்படியில் இருந்து இருவரும் சிரித்தபடி இணைந்து கீழிறங்கி வருவதைக் கண்டு விஷ்ணு மற்றும் வினய் இருவரும் குரோதத்துடன் பார்த்தனர்...!!!

சதிராடும்...!!!

## உயிர் : 22

"பத்மா, இதைப் புள்ளைக்குச் சீர் செஞ்சிரு..." என்றபடி சத்யமூர்த்தித் தனது சட்டைப்பையில் இருந்து சிறிய நகைப்பெட்டியை எடுத்து மனைவியிடம் நீட்டினான்...

'அஜீதாவிற்கு ஏதாவது வாங்க வேண்டுமென்றால் வாங்கிக் கொள்' என்று அவளது பெற்றோரும், அண்ணனும் அவளுக்குப் பணம் கொடுத்த போது வேண்டாம் என்று மறுத்தவள் கணவன் கொடுத்த பணத்தில் அக்கா மகளுக்கு ஒரு சுடிதார் வாங்கியிருந்தாள்...

இப்போது கணவன் நகையைக் கொடுக்கவும் அவள் ஆச்சிரியத்துடன் அதைத் திறந்து பார்த்தாள்... தங்கத்திலான சிறிய ஜிமிக்கி ஒன்று அதில் இருந்தது... அதைப் பார்த்து அவளது விழிகள் கலங்கி போனது...

"ரொம்பச் செலவாகி இருக்குமே சத்யா..."

"செலவு பார்த்தா முறை செய்ய முடியாது... செய்ய வேண்டியது செஞ்சு தானே ஆகணும்..." அவன் கூறியதும்,

"சரி வா... நாம ரெண்டு பேரும் சேர்ந்து கொடுப்போம்..." என்றபடி அவள் கணவனை அழைத்துக் கொண்டு சபையின் நடுவில் அமர வைக்கப்பட்டு இருந்த அக்கா மகளை நோக்கி சென்றாள்...

பத்மவர்ஷினி அஜீதாவை பார்த்து புன்னகைத்தபடி அவளது கையில் தாங்கள் வாங்கியிருந்த ஜிமிக்கியை கொடுத்தாள்... அந்நேரம் அங்கு வந்த விஷ்ணு ஆத்திரத்துடன் அதைக் கீழே தட்டிவிட்டான்...

"என் மகளுக்குச் சீர் செய்யும் யோக்கியதை உனக்கோ, உன் புருசனுக்கோ கிடையாது... என் கால் தூசி மதிப்பு பெறாதவன் எல்லாம் என் பொண்ணுக்கு சீர் செய்றதை நான் அனுமதிக்க முடியாது..." என்று கடுமையாய் அவன் கூற...

அப்போது அங்கு வந்த வினய் சத்யமூர்த்தியை மேலும் கீழும் பார்த்தபடி, "இந்த அம்பானியை கல்யாணம் பண்ண தான் என்னைத் தூக்கி எறிஞ்சியா...? ஒரு பட்டிக்காட்டானை, அதுவும் உனக்குக் கொஞ்சமும் சம்பந்தம் இல்லாதவனை நீ கல்யாணம் பண்ணிருக்கேன்னா...?" என்று கேள்வியுடன் நிறுத்தியவன்,

"கல்யாணத்துக்கு முன்னாடியே மேட்டர் முடிஞ்சு போச்சோ...?" என்றான் நக்கலான குரலில்...

"டேய்..." என்று சீறிப்பாய்ந்த பத்மவர்ஷினியின் கையை அழுத்தி பிடித்துத் தடுத்த சத்யமூர்த்தி,

"விசேச வீட்டில் பிரச்சினை வேண்டாம் பத்மா..." என்க... கணவனை ஏறிட்டு பார்த்தவள்,

"ஐஞ்சு நிமிசம் வெய்ட் பண்ணு சத்யா..." என்றவள் தனது அறையை நோக்கி செல்ல...

"வர்ஷூ நில்லு..." என்ற தந்தையின் கர்ஜனை குரலில் அவள் அப்படியே நின்றாள்...

ஜீவா தனது மூத்த மருமகன் முன் வந்து நின்றான்... விஷ்ணுவை தீர்க்கமாகப் பார்த்தபடி,

"நீங்க எப்படி என் மருமகனோ அது மாதிரி தான் அவரும்... ரெண்டு பேருமே என் மகள்களைக் கட்டியவர்கள்... இதில் ஏற்றத்தாழ்வுகள் எங்கே இருந்து வந்தது...?" என்று கூர்மையாய் வந்து விழுந்தது அவனது வார்த்தைகள்...

"நானும் அந்தப் பட்டிக்காட்டானும் ஒண்ணா...? என்னோட பணம், புகழ், அந்தஸ்து இதில் ஏதாவது ஒண்ணு அவன் கிட்ட இருக்கா...? என்னோட திறமையில் அவன் கால் தூசி பெறுவானா...?" என்று விஷ்ணுவும் பதிலுக்கு எகிறினான்...

"எனக்கு இது எதுவும் தேவையில்லை மாப்ளை... என் மூத்த பொண்ணை நீங்க எப்படிப் பார்த்துக்கிறீங்களோ அதே மாதிரி அவரும் என் ரெண்டாவது பொண்ணைச்

சந்தோசமா பார்த்துக்கிறார்... ஒரு தகப்பனா நான் அதை மட்டும் தான் பார்ப்பேன்... உங்க பணம், வசதி இது எதுவும் எனக்குத் தேவையில்லை..."

ஜீவாவிடம் யாரும் எதிர்த்து பேச முடியாது... அப்படிப் பேசினால் இப்படித் தான் வெட்டு ஒன்று துண்டு இரண்டு தான்... விஷ்ணு பதில் பேச முடியாதபடி தனது மனைவியைப் பார்த்து முறைத்தான்...

ஜெகன், ருத்ரஸ்ரீ இருவரும் மகனை ஆச்சிரியத்துடன் பார்த்தனர்... ஏனெனில் அவர்களுக்குத் தானே ஜீவாவை பற்றி நன்கு தெரியும்... அதே சமயம் மகனது மாற்றம் குறித்து அவர்களுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது...

"வர்ஷூ இங்கே வா..." என்று ஜீவா மகளை அழைத்தான்... அருகில் வந்த மகளின் தலையை வருடி கொடுத்து,

"ஃபங்கசன் முடியும் வரை நீ இங்கே இருக்கணும்..." என்றவன் சத்யமூர்த்திப் பக்கம் திரும்பி,

"நீங்களும் தான் மாப்ளை..." என்க...

மாமனாரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுச் சத்யமூர்த்தி அமைதி காத்தான்... ஆனால் அவனது மனம் முழுவதும் ரணமாய் வலித்தது... அந்தக் கணம் தனது தவறின் அளவு எத்தகையது என்பதை உணர்ந்து அவன் மனதிற்குள் தலைகுனிந்தான்... தான் மனைவியின் வாழ்க்கையில் வாராது போயிருக்கலாம் என்று அவன் மனம் நொந்து போனான்...

விழா முடிந்த அடுத்த நொடி பத்மவர்ஷினி அங்கிருந்து கிளம்பிவிட்டாள்... எல்லோரும் அவளைத் தடுத்து நிறுத்திய போதும் அவள் யாரின் பேச்சையும் கேட்கவில்லை... அதனால் அவள் மனம் போல் எல்லோரும் அவளை விட்டு விட்டனர்...

கோயம்புத்தூர் செல்லும் பேருந்தில் ஏறியமர்ந்த பின்னரே பத்மவர்ஷினி நிம்மதியாக உணர்ந்தாள்... கணவனது

கையோடு தனது கையைக் கோர்த்துக் கொண்டு அவனது தோளில் சாய்ந்தவள்,

"இப்போ தான் நிம்மதியா இருக்கு சத்யா... இனி நீ, நான் மட்டுமே... நமக்கான உலகத்தில்... வேறு யாரும் வேண்டாம் சத்யா..." காதல் பொங்க கூறியவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

அவனை ஒன்றும் பேசாது இருக்கையில் சாய்ந்து விழிகளை மூடி கொண்டான்... அதைக் கண்டு அவளது மனம் துணுக்குற்றது...

"சத்யா..."

"களைப்பாயிருக்கு அம்மிணி..." என்று விழிகளைத் திறவாது பதில் கூறியவனை அவள் வெகுநேரம் பார்த்து கொண்டிருந்தாள்...

மாலையில் வீட்டிற்கு வந்ததும் சத்யமூர்த்தி மனைவியை விட்டு விட்டு தான் மட்டும் வெளியில் கிளம்பி சென்றுவிட்டான்... அவள் எத்தனையோ தடவை பேச முயற்சித்த போதும் அவன் முகம் கொடுத்து பேசவில்லை... அவள் திகைத்து போய்விட்டாள்... அவளது விழிகள் கலங்க ஆரம்பித்தது அவளது மனதினை போன்று...

மருமகள் முகம் தெளிவில்லாது இருப்பதைக் கண்டு வடிவழகி இருவருக்கும் இடையில் ஏதோ ஒரு பிணக்கு என்பதைத் தானாக ஊகித்துக் கொண்டார்... மருமகளின் மனதினை மாற்ற வேண்டி அவர் மருதாணி இலைகளைப் பறித்து அரைத்து எடுத்துக் கொண்டு அவள் முன் வந்து நின்றார்...

"கையைக் காட்டு பத்மா... மருதாணி வச்சு விடுறேன்..." என்றவர் மருமகளைத் திண்ணையில் அமர செய்து தானும் உடன் அமர்ந்து கொண்டார்...

"எதுக்கு அத்தை...? வேண்டாம்..." என்று மறுத்தவளின் பேச்சை கேட்காது அவளது கையைப் பிடித்து மருதாணி வைத்து விட்டவர்,

"இந்த மருதாணி எந்தளவுக்குச் சிவந்திருக்கோ அந்தளவுக்கு உன் புருசன் மேல உனக்குப் பாசம் இருக்குன்னு அர்த்தம்..." என்றவரின் வார்த்தைகள் கையில் இறங்கிய மருதாணியின் குளிர்ச்சியைப் போன்று அவளது நெஞ்சில் குளுமையாய் இறங்கியது...

"இஸிட்...?" என்று அவள் ஆச்சிரியத்துடன் கேட்க... அவர் புரியாது அவளைப் பார்த்தார்...

"அப்படியா...?"

"ஆமாம் பின்னே..." என்றவர் அவளது கைவிரல்களின் நுனியில் அழகாய் தொப்பிப் போன்று மருதாணியை வைத்து விட்டார்...

வட இந்திய பாணியில் 'மெஹந்தி' வரைவுகளைப் பார்த்தவளுக்கு இது புதுவிதமாக இருந்தது... அத்தோடு மருதாணியின் மணம் அவளை மயக்கியது...

"நைஸ் அரோமா..." என்று அவள் அந்த வாசத்தை அனுபவித்து நுகர்ந்தாள்...

மாலையில் சென்ற கணவன் இரவாகியும் வீடு வந்து சேரவில்லை... அவனுக்காகக் காத்திருந்து காத்திருந்து சோர்ந்து போனவளுக்குப் பயணம் செய்து வந்த களைப்பு வேறு சேர்ந்து கொள்ள அப்படியே உறங்கி போனாள்... சத்யமூர்த்தி வீடு திரும்பிய போது பத்மவர்ஷினி அங்கிருந்த சிறிய வரவேற்பறையில் சுவரோரமாய் முடங்கிப் போயிருந்தாள்...

மனைவியைக் கண்டவன் அவள் அருகே வேகமாய் வந்தான்... கால்களைச் சுருக்கி கொண்டு படுத்திருந்த அவளைக் கண்டு அவனது மனம் இரங்கியது... எப்படி எல்லாம் வாழ வேண்டியவள் தனக்காக இப்படி இங்கே வந்து கஷ்டப்படுகிறாளே என்று அவனுக்கு வருத்தமாக இருந்தது...

அலுங்காது அவளைத் தனது கைகளில் ஏந்தி கொண்டவன் மாடியில் இருந்த தங்களது அறைக்கு அவளைத் தூக்கி

சென்றான்... அறைக்குள் வந்து படுக்கையில் அவளைக் கிடத்தும் போது அவள் கண்விழித்துக் கொண்டாள்...

"சத்யா..." என்றபடி அவள் விழிகள் கலங்க அவனை அணைத்து கொண்டாள்... அவளது அணைப்பில் அவன் அப்படியே கட்டுண்டு அமைதியாக இருந்தான்...

"என்னை விட்டுட்டு எங்கேடா போன...? சென்னையில் இருந்து கிளம்பியதில் இருந்து நீ இன்னமும் என் கூடப் பேசலை...?" என்றவளின் அணைப்பு மேலும் மேலும் இறுகியது...

"கொஞ்சம் இரு பத்மா குளிச்சிட்டு வர்றேன்... மேலெல்லாம் கசகசன்னு இருக்கு..." என்றபடி அவன் விலகப் போனான்...

"எனக்கு இந்த அழுக்கு சத்யாவை தான் ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்று அவனது காதோரம் கிசுகிசுத்தவள் அவனை இழுத்து அவனது வாசனையை மோப்பம் பிடிக்க... அதில் திகைத்து போனவன்,

"விடு பத்மா..." என்க...

"விட மாட்டேன்டா... விட்டா உன்னைப் பிடிக்க முடியாது... எனக்கு நீ வேணும் சத்யா..." என்றவள் அவனது முகம் பார்த்து விழிகளுக்குள் விழி ஊடுருவியபடி,

"நீ என்னை விட்டு போயிருவியோன்னு எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு சத்யா..." என்று கண்கள் கலங்கியவளை கண்டு அவன் தாங்க மாட்டாது தன்னுடன் அணைத்துக் கொண்டான்...

"நீ இந்தளவுக்குக் காதல் வைக்கிற அளவுக்கு என் கிட்ட அப்படி என்னடி இருக்கு... ? உன் மச்சான் சொன்ன மாதிரி இந்தப் பட்டிக்காட்டான் கிட்ட அப்படி என்னடி இருக்கு...? நான் உன் வாழ்க்கையில் வராம போயிருக்கணும்... அப்படி நடந்திருந்தா நீ நிம்மதியா இருந்திருப்ப..." என்று வேதனைப்பட்டவனின் முகத்தை நிமிர்த்திப் பார்த்தவள்,

"டேய் கருப்பட்டி அப்படியொரு ஆசை உனக்கு இருக்கா...? நீ எங்கே போனாலும் நான் உன்னை விட மாட்டேன்டா... நீ என்னைக் கல்யாணம் பண்ணலைன்னா என்ன, நான் உன்னைக் கல்யாணம் பண்ணியிருப்பேன்..." என்று கண்சிமிட்டி கூறியவளை கண்டு அவனையும் அறியாது அவனது உதடுகளில் புன்னகை தோன்றியது... அதைக் கண்டு நிம்மதி அடைந்தவளாய்,

"இந்த ஜென்மத்தில் இந்தப் பத்மவர்ஷினி தான் உனக்குன்னு அந்த ஆண்டவன் முடிவு பண்ணிட்டான்... சோ ஃபெட்டர் லக் நெக்ஸ்ட் டைம் கருவாயா..." என்றவள் அடுத்த நொடி அவனது இதழ்களைச் சிறை செய்தாள்...

மனைவியின் காதலில் அவன் திக்குமுக்காடி போய்விட்டான்... நீண்ட இதழ் யுத்தத்திற்குப் பின் மூச்சு வாங்க தன்னிடம் இருந்து பிரிந்தவளை இழுத்து எலும்புகள் நொறுங்க அணைத்தவன்,

"கொல்றடி பூனைக்குட்டி..." என்றபடி அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்தான்... கணவனது செயலில் பத்மவர்ஷினியின் இமைகள் தாமாகக் கிறக்கத்துடன் மூடி கொண்டது...

வன்மையாய் அவளது முகம் முழுவதும் இதழொற்றியவன் அவளுள் மூழ்கும் முன் அவளது முகத்தைப் பார்த்தான்... இதழ் துடிக்க, விழி மூடி படுத்திருந்தவளின் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவன்,

"பூனைக்குட்டி, எனக்குப் பயமாயிருக்குடி..." என்க... அவனது வார்த்தையில் விழி திறந்தவள் அவனைப் புரியாது பார்த்தாள்...

"என் மனசுல காயமும் இருக்கு... காதலும் இருக்கு... ரெண்டுத்துக்கும் நீ வேணும்... அதை எப்படிச் சொல்றதுன்னு எனக்குத் தெரியலை... ஆனா என்னையும் அறியாம நான் உன்னைக் காயப்படுத்திருவேனோன்னு பயமாயிருக்கு... காட்டான் மாதிரி இந்தப் பட்டிக்காட்டான் பாய்ஞ்சிருவேனோன்னு எனக்குப் பயமாயிருக்குடி..."

என்று வேதனையும், காதலும் கலந்து கூறியவனைக் கண்டு,

"நானும் இந்தக் காட்டானை பிடிக்கலைன்னு சொல்லலையே..." என்று மையலோடு பார்த்தவளின் முகம் நோக்கி அவன் ஆசையுடன் குனிந்தான்...

"ஒரு தடவைக்கு நிறையத் தடவை யோசிச்சுக்கோ பூனைக்குட்டி... அப்புறம் சேதாரத்துக்கு நான் பொறுப்பில்லை..." என்று கூறியவனைக் கண்டு அவள் போலியாக முறைக்க... அதைக் கண்டு வாய்விட்டு சிரித்தவன் மறுகணம் அவளது இதழில் தனது இதழை அழுத்தமாய்ப் பொருத்தினான்...

அவன் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை என்பது போல் இருந்தது அவனது முரட்டுத்தனமான செயல்... பெண்ணவளின் பூ மேனி அவனது மனதினை கடிவாளம் போட்டாலும் அவனது மனதில் இருந்த காதல் காட்டாறு போன்று கட்டுப்பாடின்றிப் பொங்கி வழிந்தது... அவன் கனவிலும் காணாத பேரழகு அவன் கண்முன்னே... அதைக் கொண்டாடி மகிழ வேண்டும் என்று நினைத்தவனுக்கு அதை எப்படிக் கொண்டாடி மகிழ்வது என்று தான் தெரியவில்லை... அதனால் பொங்கி பிரவாகம் எடுத்த அவனது உணர்வுகள் கட்டுப்பாடின்றி அவளது தேகத்தைப் பதம் பார்த்தது... அதில் அதிகச் சேதாரம் அடைந்தது பாவையவள் மட்டுமே...

கணவனது உணர்வுகளைப் புரிந்தவளாய் பத்மவர்ஷினி அவனது செயல்களுக்கு உடன்பட்டாள்... சில சமயம் அத்துமீறிய அவனது கைகளை அவள் பயந்து போய் மறுத்து தடுத்து நிறுத்த முயன்றாள்... அதை எல்லாம் கண்டு கொள்ளாது தனது நோக்கம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு அவளைத் தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்த சத்யமூர்த்தியை அவளால் ஒன்றும் செய்ய முடியாது போனது... வேறுவழியின்றி அவள் அவனுக்கு இணங்கினாள் கடமையாக அல்லாது காதலாக...

மென்மையான பெண்ணவளை வன்மை கொண்டு அடக்கிய ஆணவன் பெரும் திருப்தியுடன் அவளை விட்டு விலகிய போது அவள் மிகவும் களைப்புற்று போனாள்...

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு பூனைக்குட்டி..." என்று கூறியவன் அவளைத் தன் மீது படுக்க வைத்து அவளது தலையை மென்மையாய் கோதி கொடுத்தான்...

அவனுக்கு அந்த வானத்தை வசப்படுத்தியது போன்று மனதில் எல்லையில்லா சந்தோசம் மற்றும் நிறைவு... தான் பிறப்பெடுத்ததற்கான பலனை இன்று பெற்றுவிட்டது போல் அவனது மனம் மகிழ்ச்சியில் பூரித்துப் போனது... மெல்ல குனிந்து மனைவியைப் பார்த்தான்... அவளிடம் இருந்து எந்தவித சத்தமும் வரவில்லை... நன்றாகத் தூங்கி விட்டாள் போலும்... அவனும் புன்னகையுடன் நிம்மதியாய் உறங்கி போனான்...

அதிகாலையில் எழுந்தவனின் விழிகள் அறையில் எரிந்து கொண்டிருந்த மின்விளக்கு ஒளியில் கூசியது... ஒரு நொடி கண்களை மூடி திறந்தவன் மனதில் நேற்றைய நிகழ்வு படம் போல் ஓட அவன் புன்னகையுடன் அருகில் இருந்த மனைவியைக் கைகளால் துளாவினான்... கையில் அகப்பட்ட மனைவியை இழுத்து அணைத்து கொண்டவன்,

"பூனைக்குட்டி இன்னுமாடி தூங்கிற..." என்றவன் தாபமாய் அவளுள் மூழ்க ஆரம்பித்தான்...

"ம், ம்..." என்று அவள் முனங்கினாலும் சந்தோசமாய் அவனுக்கு உடன்பட்டாள்...

மீண்டும் ஒருமுறை வன்மையாய் தன்னை அவளிடம் நிலைநாட்டியவன் அவளிடம் இருந்து சந்தோசத்துடன் விலகினான்... அவளோ விலகாது கட்டிலில் சாய்ந்தமர்ந்த அவன் மீது சாய்ந்து கொண்டாள்...

"ரொம்பப் படுத்துறேனா பூனைக்குட்டி..." என்றவனின் தாடையோடு உரசியது அவனது செல்ல பூனைக்குட்டி...

"எனக்குப் பிடிச்சு தான் இருக்கு கருப்பட்டி... கருப்பட்டி டேஸ்ட் ரொம்ப நல்லாயிருக்கு... இன்னமும் வேணும்ன்னு தோணுதுடா..." என்று கண்சிமிட்டி சிரித்தவளை கண்டு அவன் 'ஙே' என்று விழித்தான்...

"பூனைக்குட்டி நிசமாவா சொல்ற...?"

"எஸ்..." என்று தலை சரித்துப் புன்னகைத்தவளை தன்னுடன் இழுத்து அணைத்து கொண்டவன் மீண்டும் தனது தேடலை தொடங்கிய போது அவள் பஞ்சு மிட்டாயாய் அவனது காதலில் கரைந்து தான் போனாள்...

"சத்யா என்னோட கையைப் பாரேன்..." என்று அவள் தனது இரு கைகளின் உள்ளங்கையை விரித்து அவன் முன் காட்ட... அவனோ உள்ளங்கையைப் பார்க்காது வேறு எங்கோ பார்த்தான்...

அவனது பார்வை சென்ற இடத்தைக் கண்டு கொண்டவள் அவனைத் தலையணையால் அடித்தபடி, "எங்கே பார்க்கிற கருவாயா...? உன்னை எல்லாம்..." என்று கூறியபடி மீண்டும் மீண்டும் அடிக்கத் துவங்க...

"எனக்குச் சொந்தமானதை பார்க்க எனக்கு அனுமதி இல்லையா...? இது போங்காட்டம் அம்மிணி..." என்று அவன் முறுக்கி கொள்ள...

"ப்ச்சு, பேசாம கையைப் பாருடா கருவாயா..." என்று அவள் மீண்டும் தனது கைகளை அவன் முன் நீட்டினாள்...

செக்கச்செவேல் என்று அவளது கைகளில் பிடித்திருந்த மருதாணி சிவப்பு கண்டு அவனது விழிகள் வியப்பில் விரிந்தது...

"உன்னோட சிவந்த கைக்கு மருதாணி ரொம்ப அழகாயிருக்குடி பூனைக்குட்டி... எப்படிச் சிவப்பா பிடிச்சியிருக்கு பாரு... மாமன் மேல அம்புட்டு பாசமாடி உனக்கு...?" என்று அவன் சிரித்தபடி கேட்க...

"ஆமாம், எக்கச்சக்க பாசம்... கண்டபடி காதல்... எல்லாம் கன்னாபின்னான்னு எகிறி போயிருக்கு..." என்றவளை கண்டு அவனது மனம் மயங்காது இருந்தால் தான் அதிசயம்...

"என் கிட்ட அப்படி என்னடி பிடிச்சது உனக்கு...? உன் அளவுக்கு என் கிட்ட எதுவுமே கிடையாதுடி..." வருத்தமும், வேதனையும் கலந்து வந்தது அவனது வார்த்தைகள்...

அவனது வேதனை உணர்ந்து அவனைத் தன் மடி தாங்கியவள், "ஏன்னு தெரியலை... ஆனா உன்னை அவ்வளவு பிடிக்கும்... எனக்கான நிம்மதி உன் கிட்ட தான் இருக்குன்னு எனக்குத் தோணுச்சு... இதோ இப்போ வரைக்கும் அது தோணுது... உன் கூட இருந்தால் பாதுகாப்பா, நிம்மதியா, சந்தோசமா உணர்றேன்... இது எங்கப்பா வீட்டில் இருந்தப்போ கூட நான் உணரலை... என்னைக் குழந்தை மாதிரி பார்த்துக்கிற உன்னை எப்படிடா எனக்குப் பிடிக்காம போகும்...?" என்று எதிர்கேள்வி கேட்டவளை கண்டு அவன் மனம் நெகிழ்ந்து போனான்...

"நான் உன்னை இந்தளவுக்குப் பார்த்துக்கிறேனா...?" அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை...

"இதுக்கும் மேல பார்த்துக்கிற சத்யா... அவ்வளவு கேரிங் நீ..." என்று காதலோடு கூறியவளை நேராய் கண் கொண்டு பார்த்தவன்,

"நான் பண்ணியது தப்புன்னு நினைக்கிறியா...?"

"சரியோ, தப்போ அது இப்போ தேவையில்லை... என் கழுத்தில் நீ தாலி கட்டினப்போ எனக்குக் கோபம் வரலை... அதுக்குப் பதிலா நிம்மதி தான் வந்தது... அந்தக் கணம் நீ எனக்கு மட்டுமே சொந்தம் என்கிற நிம்மதி மட்டுமே தோன்றியது..." என்றவளை வியப்பாய் பார்த்தவன்,

"பின்னே ஏன் அப்படிப் பேசின பத்மா...? எனக்கு எவ்வளவு மனசு கஷ்டமா இருந்துச்சு தெரியுமா...? திருட்டுத்தனமா

தாலி கட்டினாலும் அதை உண்மை கல்யாணமா நினைச்சு தான் தங்கத்தில் தாலி வாங்கினேன்..." என்றவன் அவளது கழுத்தில் கிடந்த தாலியை எடுத்துக் காட்டினான்...

"எனக்குத் தெரியும்டா... அந்தக் கஷ்டத்திலும் நீ தங்கத்தில் தாலி வாங்கியது எனக்குச் சந்தோசம் தான்... அதனால் தான் இந்தத் தாலியை மாத்த கூடாதுன்னு சொன்னேன்..." அவளது செயலுக்குப் பின் இப்படி ஒரு அர்த்தம் இருப்பதை உணர்ந்தவன் மனம் மீண்டும் மீண்டும் அவளிடம் காதலாய்ச் சரணடைந்தது...

"நீ ரொம்பச் சாதாரணமா சொல்லிட்ட... உங்கண்ணன் மாதிரி நான் உன்னைத் தைரியமா வந்து கூட்டிட்டு போகலைன்னு... ஆனா உன் அண்ணனுக்கு உள்ள தகுதியில் ஒண்ணு கூட எனக்குக் கிடையாது... என்னை நம்பி உன் வீட்டில் உன்னை எப்படி அனுப்பி வைப்பாங்க...? அதனால் தான் நான் அமைதியா இருந்தது... அதுக்காக நீ என் பொஞ்சாதிங்கிற உறவு என் மனசில் இல்லாமல் இல்லை... அதே சமயம் உன் வாழ்க்கையைப் பாழாக்க கூடாதுன்னும் நினைச்சேன்... மத்தபடி உன்னை விட்டு கொடுக்கணும்ன்னு நான் நினைக்கவே இல்லைடி... முடவன் கொம்பு தேனுக்கு ஆசைப்பட்ட மாதிரி இருந்தது என் நிலைமை... இதில் உன் மனசுல என்ன இருக்குன்னு எனக்குத் தெரியாது... நீ மட்டும் உன் மனசுல இருந்த ஆசையை என் கிட்ட சொல்லியிருந்தேன்னா அப்பவே நான் உன்னைத் தூக்கிட்டு வந்திருப்பேன்..."

"ஆமா, ஆமா தூக்கிட்டு போற மூஞ்சிய பார்த்துட்டாலும்... என்னை விட்டு ஓடுறதில் தான் நீ குறியா இருந்த..."

"இப்ப நீ அடிச்சு துரத்தினாலும் நான் உன்னை விட்டு போக மாட்டேன்டி பூனைக்குட்டி..." என்று மனைவியவளை கைகளில் அள்ளி கொஞ்சியவனிடத்தில் கோபம் கொள்ள அவளால் முடியுமா...? அவள் விருப்பமாய் அவனுக்கு இசைந்து கொடுத்தாள்... திடுமென வாய்விட்டு சிரித்தவனை அவள் புரியாது பார்த்தாள்...

"ஆனாலும் நீ நடராசனை இந்தப் பாடுப்படுத்த கூடாது..." என்றவனைக் கண்டு விழி இடுங்கியவள்,

"அவன் உன் கிட்ட எல்லா உண்மையும் சொல்லிட்டானா...?"

"ம், ம்... எல்லாம் சொல்லிட்டான்..." என்றவன் மனைவியின் நாசியில் முத்தம் வைக்க...

"அவனுக்கு எவ்வளவு கொழுப்பு இருக்கணும்... சொல்ல கூடாதுன்னு சொல்லியிருந்தேனே... என் கையில் மாட்டினான் அவன் செத்தான்..." என்று கோபப்பட்டவளை தனது முத்தத்தால் குளிர வைத்தவன்,

"எனக்காக எத்தனை உதவி பண்ணியிருக்கேடி... நான் தான் உன்னைச் சரியா புரிஞ்சிக்காம திட்டிட்டேன்..."

"உனக்குப் பண்ணாம வேறு யாருக்கு நான் உதவி பண்ண போறேன்..." என்றவளை அவன் காதலோடு அள்ளி கொண்டான்...

சிறிது நேரத்தில் சத்யமூர்த்திக் குளித்து முடித்து வெளியில் கிளம்பினான்... அவள் படுத்துக் கொண்டே அவனது செயல்களை ரசித்துப் பார்த்து கொண்டிருந்தாள்...

"அம்மிணி, நான் வேளாண் கண்காட்சி விசயமா கோயம்புத்தூர் வரை போயிட்டு வர்றேன்..."

"நானும் வரவா சத்யா...?" என்றவள் நெற்றி மீது அழுத்தமாய் முத்தமிட்டவன்,

"நீ தூங்கி ரெஸ்ட் எடு... சாப்பாடு கூட எடுத்து வச்சிட்டேன்... ஆத்தா கிட்டேயும் உன்னைத் தொந்திரவு பண்ண வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்... நான் வர்ற வரைக்கும் நல்லா தூங்கு... நான் வந்ததுக்கு அப்புறம் உன்னால் தூங்க முடியாது..." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவளுக்கு வெட்கம் வந்து தொலைத்தது...

"போ சத்யா..." என்று அவள் நாணம் தாங்காது போர்வையால் முகத்தை மூடி கொண்டாள்...

அவளைக் கண்டு அவன் சிரித்தபடி அணைத்து விலகியவன், "உன்னை விட்டு இந்த ஜென்மம் மட்டும் இல்லை அடுத்த ஜென்மம் கூட விட்டு போக முடியாது..." என்றவனின் வார்த்தைகளில் மெல்ல போர்வையை விலக்கி பார்த்தவளின் விழி மீது இதழ் பதித்து விலகியவன்,

"நல்லா தூங்கணும் அம்மிணி..." என்று குறும்பாய் கண்சிமிட்டியபடி அவன் அறையை விட்டு வெளியேறினான்...

கணவனது வார்த்தையில் மேலும் மேலும் நாணமுற்றவளாய் அவள் போர்வைக்குள் ஒளிந்து கொண்டாள்...

*****************

"மாமா, இன்னைக்கு ஸ்கூல் டே இருக்கு... நான் வர கொஞ்சம் லேட்டாகும்..."

கண்ணாடி முன் நின்று கொண்டு முழுக்கை சட்டையின் கை பொத்தானை போட்டுக் கொண்டிருந்த யுகேன் மனைவியின் வார்த்தையில் அவளைத் திரும்பி பார்த்தான்... பின்பு இரு கைகள் நீட்டி அவளைத் தன்னருகே வருமாறு அழைத்தான்...

"என்ன மாமா...?" அவள் புரியாது யோசித்தபடி நிதானமாய் நடந்து வந்தாள்... அதற்குள் அவனே அவள் அருகில் வந்து அவளை அணைத்துக் கொண்டான்...

"போடி மக்கு... மாமன் ஆசையா கூப்பிட்டா பட்டுன்னு ஓடி வந்து பச்சக்குன்னு கட்டிப்பிடிச்சிக்க வேண்டாமா...?"

"ஸ்கூலுக்கு நேரமாச்சு மாமா..."

"ஏன் நான் கொண்டு போய் விட மாட்டேனா...?"

"வேண்டாம், வேண்டாம்..." என்று அவசரமாய் மறுத்தவளை கூர்ந்து பார்த்தவன்,

"ஏன்...?"

"நான் உங்க மனைவின்னு யாருக்கும் தெரியாது... தெரிஞ்சா இப்ப மாதிரி சாதாரணமா பழக மாட்டாங்க..."

"ஓ... இதுக்குத் தானா..." என்றான் அவன் சமாதானமாக...

"பின்ன வேறு எதுக்கு...?"

"இல்லை, மாமன் அழகில் வேறு யாரும் மயங்கிருவாங்களோன்னு நீ பயந்துட்டியோன்னு நினைச்சேன்..."

"ம்க்கும், சொந்த பொண்டாட்டி நானே மயங்கலை... நினைப்பு தான் பொழைப்பு கெடுக்குதாம்..." என்று நொடித்துக் கொண்டவளை கண்டு இன்னமும் காதல் அதிகரிக்க இறுக்கி அணைத்து கொண்டவன்,

"யார் மயங்கி என்ன பிரயோஜனம்...? இந்தப் பட்டிக்காடு அன்னையில் இருந்து இன்னைக்கு வரைக்கும் என் கிட்ட மயங்க மாட்டேங்குதே... உன்னோட கண்ணுக்கு மட்டும் நான் ஒரு ஆளா கூடத் தெரிய மாட்டேங்கிறேனே... அன்னைக்குத் தான் நான் யாரோ ஒருத்தன்... இன்னைக்கு நான் உன் புருசன்டி..." மனத்தாங்கலுடன் கூறியவனைக் கண்டு அவள் வியப்பாய் ஏறிட்டாள்...

"மாமா, என்னை எப்போ முதன்முதலா பார்த்தீங்க...?"

"உங்கண்ணனை சந்திக்க உங்க வீட்டுக்கு வந்தப்போ... நீ ஸ்கூலுக்குக் கிளம்பிட்டு இருந்த... அதுக்கு அப்புறம் நீ ஸ்கூல் விட்டு போறப்போ ஒரு தடவை உன்னைப் பார்த்தேன்... நீயோ குனிஞ்ச தலை நிமிராம என்னைத் தாண்டி போயிட்ட... அப்போ முடிவு செஞ்சேன்டி கில்மா... உன்னைக் கட்டம் கட்டி தூக்கணும்ன்னு..."

"அப்போ இருந்தேவா....?" ஆச்சிரியத்தில் விரிந்த அவளது விழிகளில் காதல் எக்கச்சக்கமாய்ப் பெருகி வழிந்தது...

"அப்போ இருந்தேன்னா...? எனக்குப் புரியலை..."

"அப்போ இருந்தே உங்களுக்கு என்னைப் பிடிக்குமா...?"

அப்போது தான் அவனுக்கும் அது புரிந்தது... அவனது குணத்திற்குத் தன்னைக் கண்டு கொள்ளாத பெண்ணவளை அவனும் புறக்கணித்துவிட்டுப் போயிருக்க வேண்டும்... அதைச் செய்யாது அவன் விடாது அவளைத் திருமணம் முடித்ததற்கான காரணம் இப்போது அவனுக்கு நன்கு புரிந்தது...

"தெரியலைடி... ஆனா எனக்கு உன்னை மட்டும் தான் ரொம்பப் பிடிக்கும்... நீ என்ன செஞ்சாலும் உன் கூட மட்டும் தான் வாழணும்ன்னு பெரிய சபதமே போட்டிருக்கேன்னா பார்த்துக்கோ..."

"சபதத்தை எப்போ நிறைவேத்த போறீங்களாம்...?" என்று சரமாகக் கேட்ட மனைவியைத் தாபத்துடன் அணைத்து கொண்டவன்,

"எப்போன்னாலும்... ஆனா அது தானாக அமையணும்..." என்று கூறியவன் அடுத்த நொடி அவளை விடுவித்து,

"சரி நீ கிளம்பு... நைட் தனியா வர வேண்டாம்... காரை அனுப்பறேன்... அதில் வந்திரு..." என்க...

"காரோடு மாமாவும் வந்தால் நல்லாயிருக்கும்..." என்றவளை ஆச்சிரியத்துடன் அவன் பார்த்தான்...

"என் மேல் நம்பிக்கை வந்திருச்சா...?"

"எப்பவோ வந்திருச்சு..." என்றவளை நிறைவாகப் பார்த்தான் அவன்...

"இப்போ உன்னைக் கொண்டு விட நான் வரவா...?" என்றவனின் கையை அவள் நம்பிக்கையுடனும், காதலுடனும் நிறைவாய் பிடித்துக் கொண்டாள்...

யுகேனும் மனைவியின் கையை இறுக பற்றிக் கொண்டான்... ‘இனிவரும் காலங்களிலும் உன்னைக் கைவிட மாட்டேன்’ என்பது போலிருந்தது அந்தப் பிணைப்பு...

**********************

பத்மவர்ஷினி மதியம் வரை நன்கு தூங்கி எழுந்து வந்த போது வடிவழகி சமையலை முடித்து விட்டுத் திண்ணையில் அமர்ந்து அரிசியை முறத்தில் போட்டு புடைத்துக் கொண்டிருந்தார்...

"அத்தை..." என்று தயங்கியபடி அவள் அங்கு வந்து நின்றாள்... தாமதமாக எழுந்ததற்கு அவர் என்ன கூறுவாரோ என்று அவள் பயந்து பயந்து நின்றாள்...

"எழுந்திருச்சிட்டியா பத்மா...? குளிச்சிட்டு வந்து சாப்பிடு..."

"நீங்க...?"

"எனக்குக் கொஞ்ச நேரமாகட்டும்..." அவள் சரியென்று உரைத்துவிட்டு உள்ளே சென்றாள்...

அவள் குளித்து உணவு உட்கொள்ளும் போது சத்யமூர்த்திச் சிறு பையனை அனுப்பித் தனக்கான உணவை வயலுக்கு அனுப்பி வைக்குமாறு சொல்லியிருந்தான்...

'நேரே வீட்டுக்கு வர வேண்டியது தானே... அதுக்குள்ள வேலையைப் பார்க்க போகணுமா...?' என்று செல்லமாய் அவனைக் கடிந்தபடி அவள் உணவை எடுத்துக் கொண்டு சென்றாள்...

"நீ எதுக்கு அலையற பத்மா...?" என்று அவளைக் கடிந்தவன் மரத்தடியில் அமர்ந்து உணவை உண்ண துவங்கினான்...

"வீட்டுக்கு வர வேண்டியது தானே..."

"வந்தா பூனைக்குட்டி என்னைய விடாதே... பொழுதன்னைக்கும் அதைக் கொஞ்சிட்டே இருக்கணும்ன்னு எனக்குத் தோணும்... பொறவு வேலையை யார் பார்க்கிறது..." என்று நமட்டு சிரிப்புடன் குறும்பு குரலில் அவன் கூறினான்...

"ரொம்பவும் சின்சியர் தான்..." என்று அவள் முணுமுணுத்துக் கொண்டே நொடித்துக் கொண்டாள்...

"ஏன் பத்மா, நிதம் ஒரு பஞ்சாயத்து இழுத்துட்டு வரலைன்னா உனக்குத் தூக்கம் வராதா...?"

"நானா...? நான் நல்ல புள்ளையாக்கும்..." என்றவளின் பாவனையில் வாய்விட்டு சிரித்தவன்,

"வரும் போது நம்ம கதிரை பார்த்தேன்... அவன் என் கிட்ட ஒரே புலம்பல்... நேத்து ராவு அவன் பொஞ்சாதி அவனை அடிச்சு விரட்டிட்டாளாம்..."

"அது ஏன்னு அவன் பொண்டாட்டி கிட்ட போய்க் கேளு... அதை விட்டுட்டு என் கிட்ட ஏன் கேட்கிற கருவாயா...?"

"அதைத் தான் நான் அவன் கிட்ட கேட்டேன்... அதுக்கு அவன் சொன்னான்..." என்று நிறுத்திவிட்டு அவன் குறுகுறுவென மனைவியைப் பார்த்தான்...

"அவன் என்ன சொன்னான்...?" என்று தெனாவெட்டாய் கேட்டவளை கண்டு குபீரென்று சிரித்தவன்,

"நீ தான் சொல்லியிருக்கியாம்... இனிமே ஆம்பிளைங்க குடிச்சிட்டு வந்தா வாசப்படி ஏத்தாதீங்கன்னு... அப்படி மீறி ஏறினா விளக்கமாத்தால அடி போட சொன்னியாம்... அடிவாங்கிட்டு வந்து பக்கம் பக்கமா பொழம்பிட்டு போறான்டி... பாவம் அவன்..." என்றவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை...

"அவன் பாவமா...? நீ குடிச்சிட்டு வந்தாலும் இது தான்டா கதி... உன்னையும் வீட்டுக்குள் விட மாட்டேனாக்கும்..." என்று மிரட்டியவளை கண்டு அவனது சிரிப்பு அடங்கியது...

"அடியேய் நான் உன் புருசன்டி..." என்று அலறினான் அவன்...

"குடிச்சா அது எல்லாம் கிடையாது..." என்று அவள் திட்டவட்டமாகக் கூற... இறுதியில் அவன் தான் அவளிடம் சரணடைந்தான்...

"உம் மேல சத்தியமா நான் குடிக்க மாட்டேன்டி..."

"அது..." என்று மிதப்பாய் பார்த்தவள்,

"மாமாவை மறுவாழ்வு மையத்தில் சேர்க்கிறதுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேன்..." என்றவளை கண்டு அவனது முகம் இறுகி போனது...

"அந்தாளை பத்தி பேசாதே பத்மா..."

"அவர் உன்னோட அப்பா..."

"அதுக்கு அர்த்தம் இல்லாதவன்..." என்றான் அவன் வெறுப்பாய்...

"சரி உனக்கு அப்பா வேண்டாம்... ஆனா அத்தைக்கு அவங்க புருசன் வேண்டாமா...?"

"ஆத்தா தான் வேண்டாம்ன்னு வெறுத்திருச்சே..."

"குடிகாரனை தான் வெறுத்து இருப்பாங்க... அவங்க புருசனை இல்லை..." என்றவளை அவன் திகைப்பாய் பார்த்தான்...

"நான் என்ன தப்பு பண்ணினாலும் உன்னால் என்னை வெறுக்க முடியுமா சத்யா...?" என்றவளை கண்டு அவன் மறுப்பாய் தலையசைக்க...

"அது மாதிரி தான் இதுவும்..." என்றவளிடம் ஒன்றும் பேசாது அவன் கை கழுவ சென்றான்...

"சத்யா நான் பண்ணியது தப்புன்னா தப்புன்னு சொல்லு... எதுக்கு இப்படிப் பேசாம இருக்க...?" என்று கேட்டபடி அவள் அவன் பின்னாடியே வந்தாள்...

அதற்குப் பதில் பேசாது தொட்டி தண்ணீரை எடுத்து அவன் கை கழுவி கொண்டிருந்தான்...

"பேச மாட்டியாடா... உன்னை எப்படிப் பேச வைக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்றபடி அவள் அவனைத் தொட்டிக்குள் தள்ளிவிட்டு தானும் பின்னோடு அதனுள் விழுந்தாள்...

"பத்மா என்ன பண்ற...?" என்று திகைப்புடன் கேட்டவனை அங்கு அருவி போல் பாய்ந்து கொண்டிருந்த நீருக்குள் இழுத்து சென்று வம்படியாய் அவனது இதழ் மீது தனது இதழை பொருத்தினாள் அவள்...

நீரின் வேகத்தில் அவர்களுக்கு மூச்சு திணறியதை விட முத்த யுத்தத்தில் தான் அதிகம் மூச்சு திணறியது...

"பூனைக்குட்டி சும்மா சும்மா சீண்டி விட்டுட்டே இருக்க... அப்புறம் சேதாரத்துக்கு நான் பொறுப்பில்லை..." என்றவன் அவளைத் தூக்கி தொட்டியின் விளிம்பில் அமர வைத்து விட்டு தானும் மேலேறி அமர்ந்தான்...

"உன்னை எவ்வளவு தேடுச்சு தெரியுமா...? நீ என்னடான்னா இங்கே இருக்க... சரி ஆசையா பார்க்க வந்தா பேசாம மூஞ்சை தூக்கிட்டு போற... எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு கருவாயா..." என்றவள் அவனது மீசையைப் பிடித்து இழுத்தாள்...

"எனக்கும் தான் தேடுது... பாவம் சின்னப் பொண்ணுன்னு விட்டு வச்சேன்..." என்றவன் அவளை அப்படியே தனது கைகளில் அள்ளி கொண்டு அருகிலிருந்த மோட்டார் அறைக்குள் சென்றான்...

"இங்கேயா...?" என்று வெட்கத்தில் அவனது நெஞ்சில் முகம் புதைத்தவளின் காதில்,

"இது தான் அதுக்குச் சிறந்த இடம்..." என்றான் பெரும் சிரிப்போடு...

"யாராவது வந்திர போறாங்க..."

"யாருக்கு வர தைரியமிருக்கு..." என்றபடி அறைக்குள் நுழைந்து அவளைக் கீழே இறக்கிவிட்டு விட்டு கதவை சாத்தியவனை அடுத்த நொடி அவள் அணைத்து கொண்டாள்...

அவளிடம் எத்தனை தடவை மூழ்கி முத்தெடுத்த போதும் அவனது வேட்கை சிறிதும் குறையவில்லை... மாறாக

அவள் இன்னமும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்றே அவனது மனம் கூக்குரலிட்டது… அதற்கு வன்மை மட்டுமே அவனது ஆயுதமாகப் பயன்பட்டது…

வெறும் கட்டாந்தரை கூடப் பூ மெத்தை போல் மென்மையாக இருக்கும் என்று அன்று தான் அவள் உணர்ந்து கொண்டாள்… அவன் அருகில் அவளது வாழ்க்கை வண்ணமயமாகி போனது… அவனது கரம் கோர்த்துக் கொண்டு அவனது துணையுடன் அவள் மகிழ்ச்சியின் எல்லை எதுவோ அதையும் தாண்டி வேறொரு புதிய உலகத்திற்குச் சென்றாள்…

"வீட்டுக்குப் போகலாமா பத்மா…" என்று காதோரம் மீசை ரோமம் உராயக் கேட்டவனைக் கண்டு அவள் மையலுடன் விழி மூடி,

"போகணுமாடா…" என்று மனமில்லாது கேட்டாள்…

"கட்டாயம் போகணும் பூனைக்குட்டி…" என்றவனைக் கண்டு அவள் சிணுங்கலோடு எழுந்தாள்…

அவன் சிரித்தபடி அவளுடன் வீடு நோக்கி கிளம்பினான்…

"அதுக்குள்ள சாயங்காலம் ஆகிருச்சா…?"

"இன்னும் கொஞ்ச நேரம் போனா இருட்டிரும்…" என்று கேலியாய் கூறியவனின் வார்த்தையில் வெட்கம் மேலோங்க அவள் அவனது தோளின் பின்சென்று மறைந்து கொண்டாள்…

வீட்டிற்கு வந்து கணவன் புறம் திரும்பாது அவள் மாமியார் பின்னே சுற்றி கொண்டிருந்தாள்… அவனும் அதைக் கண்டு கொள்ளாது இருந்தான்…

இரவு அறைக்கு வந்தவளை அவன் தனது கைகளில் அள்ளியெடுத்துக் கொண்டான்… அவளும் பாந்தமாக அவனது கைகளில் அடங்கினாள்… அப்போது அவன் அவள் முன் ஒரு கவரை எடுத்து நீட்டினான்…

"என்னது…?"

"பிரிச்சு பாரு பத்மா..."

அவள் ஆர்வத்துடன் அதைப் பிரித்துப் பார்த்தாள்... உள்ளே இளஞ்சிவப்பு நிறத்தில் முக்கால் பேண்ட், கையில்லாத சட்டையோடு இரவு உடை இருந்தது...

"ஹேய், இது என்ன...?" என்று கேட்டவளுக்குச் சிரிப்பு பீறிட்டது...

"அன்னைக்கு உன் வீட்டுக்கு நான் வந்தப்போ நீ சோபாவில் உட்கார்ந்துட்டு இருந்தியே அப்போ இந்த மாதிரி ஒரு ட்ரெஸ் தான் போட்டிருந்த... அந்த ட்ரெசில் அப்படியே சிக்குன்னு சின்னப் பொண்ணு மாதிரி இருந்த பூனைக்குட்டி..." அவன் அவளது காதுகளில் ரகசியம் பேசினான்...

"அப்போ உன்னைப் பார்க்கும் போது பூனைக்குட்டி மாதிரி குட்டியா நீ இருந்தேடி... அன்னைக்குத் தான் உன்னை நான் ஒரு பொண்ணா, என் பொஞ்சாதியா பார்த்து ரசித்தது..." அன்றைய நாளின் நினைவில் இன்று அவன் அவளிடம் இழைந்தான்...

அன்று அவன் உரிமையோடு தனது நெற்றியில் வைத்துவிட்ட குங்குமம் எதனால்? என்று இப்போது அவளுக்குப் புரிந்தது...

"இப்போ உன் சந்தேகம் தீர்ந்திருச்சா சத்யா...?" என்று தன்னிடம் கிசுகிசுப்பாய் கேட்டவளை அவன் புரியாது பார்த்தான்...

"நான் பெண் தானா என்று..." இதைக் கேட்கும் போதே அவளது முகம் செங்கொழுந்தாய் சிவந்து போனது...

"அதில் இன்னும் நிறையச் சந்தேகம் இருக்கு அம்மிணி..." என்று கிறக்கத்துடன் கூறியவன்,

"இந்த ட்ரெசை போட்டுட்டு வா..." என்று கோரிக்கை விடுக்க...

அவள் அவன் சொன்னதைத் தட்டாது செய்தாள்... தன்னுடைய பூனைக்குட்டியாய் தன் முன்வந்து நின்றவளை,

"பூனைக்குட்டி, பூனைக்குட்டி..." என்று காதல் மயக்கத்தில் கண்டபடி பிதற்றியபடி அவன் அவளுள் மூழ்கி போனான்...

கணவனது மயக்கம் கண்டு அவளும் மயங்கி போனவளாய் அவனுடன் இழைந்து தன்னை மறந்து, உலகம் மறந்து போனாள்...

****************

அன்று நடைப்பெற்ற வேளாண் கண்காட்சியில் சத்யமூர்த்தித் தயாரித்த இயற்கை உரத்திற்கு முறையான அங்கீகாரம் கிடைத்தது... அந்தச் சந்தோசத்தை மனைவியிடம் கூற ஓடி வந்தவனை அவளது ஓய்ந்த தோற்றமே வரவேற்றது...

சதிராடும்...!!!

## உயிர் : 23

சத்யமூர்த்திச் சந்தோசமான மனநிலையில் வீட்டிற்கு வந்தான்... வந்ததும் அவனது அன்னை தேன் மிட்டாயை எடுத்து அவனது வாயில் வைத்து விட்டார்... அதை வாயில் போட்டு சுவைத்துக் கொண்டே,

"உங்களுக்கும் இந்தச் சந்தோசமான விசயம் தெரிஞ்சிருச்சா ஆத்தா...?" என்று அவன் மகிழ்வோடு கேட்க...

"எனக்குத் தெரியாம இருக்குமா சத்தி... என் கண்ணுல இருந்து ஒரு விசயம் தப்ப முடியாது..." என்று பெருமிதப்பட்டவரை கண்டு ஒரு நொடி 'ஙே' என்று விழித்தவன் பின்பு தலையைக் குலுக்கி தன்னை நிலைப்படுத்திக் கொண்டு மனைவியைத் தேடி சென்றான்...

அந்நேரம் அறையினுள் படுத்திருந்த மனைவியைக் கண்டு மனம் பதறியவனாய் அவள் அருகே வந்தவன்,

"பத்மா உடம்பு சரியில்லையா...?" என்று பரிவுடன் கேட்க...

கணவனது குரலில் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தவள் அவனுக்குப் பதில் கூறாது அவனை இறுக அணைத்து கொண்டாள்...

"என்னடி பூனைக்குட்டி...?" என்றவனது குரல் கிறங்கியது... மனைவியின் செயலில் அவனும் மனம் நெகிழ்ந்து போனான்...

அவளைக் கொஞ்சம் கொஞ்சமாய் அவன் ஆட்கொள்ளும் போது அவளது கண்ணீரை அவன் தனது தோள்பட்டையில் உணர்ந்தான்... அவனது சட்டையைத் தாண்டி அவனது உடலை சூடாய்த் தாக்கியது அவளது கண்ணீர்...

"ஏய் என்னடி ஆச்சு...?" என்று அவளது முகத்தை நிமிர்த்தியவன்,

"யாராவது ஏதாச்சும் சொன்னாங்களா...?"

'இல்லை' என்று அவள் தலையசைக்க... அதில் நிம்மதி பெருமூச்சு விட்டவன்,

"வீட்டுக்கு தூரமாகி போச்சா...?"

அதற்கும் 'இல்லை' என்று தலையசைத்தவளை கண்டு அவன் நிம்மதி அடைந்தவனாய்,

"அதுவும் இல்லையா ரொம்பச் சந்தோசம்..." என்று சொல்லி கொண்டே போனவன் தனது பேச்சினை நிறுத்திவிட்டு அவளது முகத்தினை மகிழ்வுடன் பார்த்தான்...

"பூனைக்குட்டி நிசமாவா...?" தந்தையான சந்தோசம் அவனது வார்த்தைகளில் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"ம்... ம்..." என்று தலையை ஆட்டியவளின் விழிகளில் இருந்து வழிந்த கண்ணீர் அவன் மீது பட்டுத் தெறித்தது...

"இது எவ்வளவு சந்தோசமான விசயம்... இதுக்குப் போய் யாராவது அழுவாங்களா...?" என்று அவன் செல்லமாய் அவளைக் கடிந்தபடி அவளது கண்ணீரை துடைத்து விட்டான்...

"ம், ரொம்பச் சந்தோசமான விசயம்..." என்றவள் அவனது மடியில் தலை வைத்து படுத்து கொண்டாள்...

"உன்னைக் கல்யாணம் பண்ணுனதே கனவு மாதிரியிருக்கு... இப்போ குழந்தை வந்ததை என்னால் நம்பவே முடியலைடா கருப்பட்டி... இப்போ இந்த உலகத்தில் ரொம்பச் சந்தோசமானவள் நான் ஒருத்தி மட்டும் தான்... என்னோட உணர்வுகளை எப்படிச் சொல்றதுன்னு எனக்குத் தெரியலை..." என்று கூறியவள் அவனது மடியில் முகம் புதைத்து கொண்டாள்...

வரம் தந்த தேவதை காதலில் கண்டபடி பிதற்றியது... ஆனால் அவனுக்குத் தானே தெரியும்... அவள் அவனது கனவு தேவதை என்று... தனது வாழ்க்கையை வண்ணமயமாக்க வந்த வானத்து தேவதை அவள் என்று... அவன் கைவிரல்கள் நடுங்க அவளது தலையை மெல்ல வருடி கொடுத்தான்...

"நானும் தான்டி..." என்றவனால் உணர்ச்சிவசப்பட்டதில் மேலே பேச முடியவில்லை...

அவனை நிமிர்ந்து பார்த்தவள், "ரெண்டு பேரும் தான்..." என்று சந்தோசமாய்க் கூறினாள்...

"நானும் உன் கிட்ட ஒரு சந்தோசமான விசயம் சொல்லணும்..." என்று அவன் கூற...

"என்னது...? சொல்லு, சொல்லு..." என்று ஆர்வமாய்க் கேட்டபடி அவள் எழுந்தமர்ந்தாள்...

"இன்னைக்கு நடந்த வேளாண் கண்காட்சியில் நாம தயாரிச்ச இயற்கை உரத்துக்கு முறையான அங்கீகாரம் கிடைச்சிருக்கு... எல்லாம் நம்ம குழந்தை வந்த நேரம் தான்..." என்றவன் கன்னத்தில் சந்தோச மிகுதியில் முத்தமிட்டவள்,

"சூப்பர், சூப்பர் மாமா..." என்று சிறுபிள்ளை போல் குதூகலிக்க...

"ஆனா இதை வியாபாரமா செய்ய எனக்கு விருப்பம் இல்லை... இதை இலவசமா எல்லோருக்கும் கொடுக்கணும்... இதோட செய்முறை இலவசமா எல்லோருக்கும் போய்ச் சேரணும்..." என்றவனை நேசம் பொங்க பார்த்தவள்,

"நிச்சயமா சத்யா, பணம் பார்க்க வேண்டிய விசயங்களில் மட்டும் தான் பணம் பார்க்கணும்... இதை நீ தாராளமா இலவசமா செய்யலாம்..." என்று கூறியவளை அவன் நன்றியோடு பார்த்தான்...

"உங்க வீட்டுல குழந்தை விசயத்தைச் சொல்லிட்டியா பத்மா..."

"இன்னும் இல்லை..."

"முதல்ல சொல்லு..." என்றவன் அவளது அலைப்பேசியை எடுத்துக் கொடுத்தான்... அவளுக்காக மட்டும் தனியே அலைப்பேசியை வாங்கிக் கொடுத்திருக்கிறான்... அவனை வாங்க சொன்ன போது அவன் வேண்டாமென்று மறுத்துவிட்டான்...

பத்மவர்ஷினி அவளது வீட்டினரிடம் இந்தச் சந்தோசமான விசயத்தைக் கூறி மகிழ்ந்தவள் பின் கணவனிடம் அலைப்பேசியை நீட்டி,

"உன் கிட்ட டாட் பேசணுமாம்..." என்க... அவன் மறுக்காது அதை வாங்கிக் காதில் வைத்தான்...

"வாழ்த்துக்கள்..." என்று ஜீவா வாழ்த்து தெரிவிக்க...

"நன்றி..." என்றவனுக்கு மேலே என்ன பேசுவது என்று தெரியாது அலைப்பேசியை மனைவியிடம் கொடுத்துவிட்டான்...

அவள் தனது வீட்டினரிடம் பேசி கொண்டிருக்க... அவன் ஜன்னல் அருகே வந்தான்... வாழ்க்கையே வசமானது போல் அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... பெற்றோரிடம் பேசிவிட்டு வந்த பத்மவர்ஷினி கணவனது தோள் சாய்ந்து நின்று கொண்டாள்... அவனும் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டு வானத்தில் பவனி வந்த நிலவை பார்த்தான்...

"அந்த நிலா தான்டி நீ... சாமானியனான என் கைக்குள் நீ இருக்கிறதை இன்னமும் என்னால் நம்ப முடியலை..."

"ம்ஹூம், நான் சாதாரணப் பெண் தான்... அதுவும் என் புருசன் எனக்கு மட்டும் தான்னு நினைக்கிற ரொம்ப ரொம்பச் சாதாரணப் பொண்ணு..." என்றவளை கண்டு அவனது புன்னகை விரிந்தது...

"இன்னமும் நீ இதை விடலையா...?"

"சாகும் போது தான் நான் இதை விடுவேன்..."

"சந்தோசமான நேரத்தில் இது என்ன அபசகுனமான பேச்சு..." என்று அவன் கடிந்தபடி அவளது இதழ் மீது தனது இதழை பொருத்தினான்... வெகுநேரம் கழித்து விடுவித்தவன்,

"இனி இது மாதிரி பேசின... இது தான் தண்டனை..."

"தித்திக்கும் தண்டனை..." என்று கண்சிமிட்டி சிரித்தவளை அவன் சிரித்தபடி அணைத்துக் கொண்டான்...

இருவரின் மனதிலும் காதல் கனமழையாய் பொழிந்து அவர்களை மகிழ்வித்தது...

********************

"அத்தையாகிட்டீங்க மிஸஸ். யுகேன்... வாழ்த்துக்கள்..."

யுகேன் மனைவியின் கையைப் பிடித்துக் குலுக்கி வாழ்த்துத் தெரிவித்தான்... அவளோ அவனை இமைக்காது பார்த்தபடி அமர்ந்திருந்தாள்...

"என்ன கில்மா...? பார்வை எல்லாம் பலமாயிருக்கு...?" என்று உரசியபடி அவள் அருகில் அமர்ந்தான் அவன்...

"நான்... நான்..." என்று திணறியவளை பார்த்தவனுக்குச் சுவாரசியமாக இருந்தது போலும்,

"நீ என்னருமை பொண்டாட்டி... அதை நான் மறப்பேனா..." என்று அணைத்து கொண்டவனை ஏறிட்டு பார்த்தவள்,

"நான் அம்மாவாகிறது எப்போ...?" தட்டு தடுமாறி தனது மனதினை அவனிடம் தெரிவித்துவிட்டு அவனது முகம் பார்க்க முடியாது அவள் தலைகுனிந்தாள்...

"அகல்ம்மா..." என்றவனது குரல் குழைந்து போய் ஒலித்தது...

"உனக்குச் சம்மதமா...?" என்று அனுமதி கேட்டவனைக் கண்டு மனம் வெறுத்தவளாய்,

"போடா வெள்ளப்பன்னி..." என்றபடி அவள் படுக்க ஆயத்தமாக...

"ஹா ஹா..." என்றபடி அவளை அணைத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்தவன்,

"அன்னைக்கு மாதிரி நீ என் கையில் கீறி விட்டுட்டேன்னா...? அதுக்குத் தான் முன்ஜாக்கிரதையா கேட்டுக்கிட்டேன்..."

"போடா... இந்த ஜென்மத்தில் நீ அப்பாவாக மாட்ட..." என்று அவள் கோபித்துக் கொண்டு மறுபக்கம் திரும்பி படுக்க...

அந்தப் பக்கம் வந்து படுத்தவன் அவள் திரும்பிவிடாதிருக்கக் கால்களால் கிடுக்கிப்பிடி போட்டபடி, "பார்க்கலாமா...?" என்று சவால் விட...

"பார்க்கலாம்... பார்க்கலாம்..." என்று அவள் பதிலுக்குச் சவால் விட்டாள்...

"இப்போ பார்க்கத்தான்டி போற இந்த மாமனோட வீரத்தை..." என்றவன் தடாலடியாய் அவளது இதழை சிறை செய்தான்...

மேலே அவள் யோசிக்கும் முன் அவளை முழுதாய் ஆக்கிரமித்தவன் அதன் பின் அவளை அவனைத் தவிர வேறு எதைப் பற்றியும் யோசிக்க விடவில்லை... அவளது ஒவ்வொரு அணுவிலும் 'யுகேன்' என்று அவனது பெயரை அழுத்தமாய்ப் பதித்துவிட்டே அவன் விலகினான்... அதே போல் அவளது காதலை ஒட்டுமொத்தமாய்க் களவாடிய பின்னரே அவளை விடுவித்தான்...

"இப்போ சொல்லுடி மாமனோட ஃபெர்பாமென்ஸ் எப்படின்னு...?" என்று நமட்டு சிரிப்புடன் குறும்பாய் கேட்டவன் முகத்தைப் பார்க்க முடியாது அவள் நாணத்துடன் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்... அவன் சந்தோசத்துடன் அவளை அணைத்துக் கொண்டான்...

"நாளைக்கே நாம ஹனிமூன் போகலாமா கில்மா...?"

"நாளைக்கு ஊருக்கு போகணுமே..."

"அப்பா, அம்மா போகட்டும்... நீயும், நானும் ஹனிமூன் போகலாம்... ப்ளீஸ்டி, மாட்டேன்னு மட்டும் சொல்லிடாதே..." என்று கெஞ்சியவனைக் கண்டு அவள் நாணத்துடன் சம்மதமாய்த் தலையசைக்க...

"தேங்க்ஸ் கில்மா..." என்றவன் மீண்டும் அவளுள் தனது தேடலை தொடங்கினான்...

**********************

மறுநாள் காலையில் விடியும் வேளையில் ஜீவா, சுபிக்ஷா இருவரும் மகளது வீட்டில் இருந்தனர்... எதிர்பாராது வந்த

இருவரையும் கண்டு திகைத்து நின்ற சத்யமூர்த்திச் சுதாரித்துக் கொண்டு அவர்களை வரவேற்றான்...

"வாங்க, வாங்க..." என்று அவர்களை வரவேற்று நாற்காலியில் அமர செய்தவன் உள்ளே திரும்பி மனைவியை அழைத்தான்...

"டாட், மாம்..." என்று கூறியபடி பத்மவர்ஷினி அங்கு விரைந்து வந்தாள்...

"குழந்தை உண்டாகி இருக்கும் போது மெதுவா நடக்கணும் வர்ஷூ..." என்று செல்லமாய் மகளைக் கடிந்தாள் சுபிக்ஷா...

"நல்லா சொல்லுங்க அத்தை... காலையில் இருந்து சொல்பேச்சு கேட்காம எல்லா வேலையும் இழுத்து போட்டு செஞ்சிட்டு இருக்கா..." என்று அவன் அன்பாய் அலுத்துக் கொண்டான்...

"பத்மா, இந்த மாதிரி சமயத்தில் அம்மா, அப்பா காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கணும் கண்ணு..." என்று வடிவழகி கூறவும்...

பத்மவர்ஷினி பெற்றோர் காலில் விழ... மனைவியுடன் சேர்ந்து சத்யமூர்த்தியும் அவர்களது காலில் விழுந்தான்... திருமண நாளன்று நடந்த நிகழ்வு எல்லோர் மனதிலும் வலம் வந்தது...

"நல்லாயிருங்க..." என்று இருவரும் சின்னவர்களை ஆசிர்வாதம் செய்தனர்...

பத்மவர்ஷினியின் பெற்றோர் மாலை வரை அங்கு இருந்து விட்டு கிளம்பி சென்றனர்... அதன் பின்னர்ச் சத்யமூர்த்தித் தனது இன்னொரு தங்கையான அபிராமிக்கு அழைத்து விசயத்தைக் கூறினான்... அவளும் அண்ணியிடம் வாழ்த்து கூறிவிட்டு சிறிது நேரம் பேசியிருந்து விட்டு அழைப்பை துண்டித்தாள்...

"பூனைக்குட்டி, இந்தச் சந்தோசமான நேரத்தில் உனக்கு ஏதாவது கொடுக்கணும்ன்னு தோணுது... உனக்கு என்ன வேணுமோ கேளு...?" என்ற கணவனை இமைக்காது பார்த்தவள்,

"எனக்கு மல்லிகை பூ வேணும் சத்யா..." அன்றொரு நாள் அவன் வாங்கி வந்த பூவை தூக்கி எறிந்ததற்குப் பிராயச்சித்தமாய் அவள் கேட்டாள்...

"நிசமாவா அம்மிணி...?"

"ம், ம்..." என்று தலையாட்டிவளை கண்டு,

"சரி கிளம்பு..." என்றபடி அவன் தனது புல்லட்டை கிளப்பினான்... இப்போது தான் அதைப் புதிதாக வாங்கியிருந்தான்...

"எங்கே சத்யா...? பூ வாங்கவா...?"

"ஷ், எதிர்பேச்சு பேசாம வரணும்..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு சென்றான்...

அந்திநேர தென்றல் காற்று மேனியை சில்லென்று உரசியதில் அவள் கணவனோடு ஒன்றி அமர்ந்து கொண்டாள்... அவனது பூனைக்குட்டி அவனை உரசி உரசி இன்பமாய்க் கொன்றது... அதில் அவனது கைகளில் வாகனம் சந்தோசமாய்ப் பறந்தது... நேரே அவர்களது தோட்டத்திற்குச் சென்று நின்றது புல்லட் வண்டி...

"இறங்கு..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு சென்ற இடம் மல்லிகை தோட்டத்திற்கு...

பூத்து குலுங்கிய மல்லிகைப்பூக்களைக் கண்டு அவள் மனம் மகிழ்ந்து போனாள்...

"எனக்கே எனக்கா சத்யா...?"

"உனக்கு மட்டும் தான் பூனைக்குட்டி..."

"இவ்வளவு நாளா நான் இதைப் பார்க்கலையே..."

"நீ பார்க்க கூடாதுன்னு தானே தோட்டத்து ஓரமா செடி நட்டிருந்தேன்... என்னைக்காவது ஒரு நாள் நீ கேட்பேன்னு எனக்குத் தெரியும்... அப்போ கூட்டிட்டு வரணும்ன்னு நினைச்சேன்..."

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு கருப்பட்டி..." என்று அவள் அவனது கன்னத்தில் முத்தமிட...

"கொஞ்சம் இரு..." என்றவன் விறுவிறுவெனப் பூந்தோட்டத்திற்குள் இறங்கி சென்றான்...

மயங்கி கொண்டிருக்கும் மாலை வேளையில் மல்லிகைப்பூவின் வாசம் அவளது மனதினை மேலும் கிறக்கியது... அந்த வாசத்தில் கணவனது காதலை உணர்ந்தவளாய் அவள் அந்த நறுமணத்தைத் தன்னுள் இட்டு நிரப்பிக் கொண்டாள்... ஏனோ அவனையே தன்னுள் இட்டு நிரப்பிக் கொண்டது போல் அவ்வளவு சந்தோசமாக இருந்தது அவளுக்கு...

"பூனைக்குட்டி..." அவளுக்குப் பின்னால் இருந்து திடுமென அழைத்தவனின் குரலில் புன்னகையுடன் திரும்பி பார்த்தவள் இன்பமாய் அதிர்ந்தாள்...

அங்குச் சத்யமூர்த்தித் தனது கைகளில் சிவப்பு ரோஜா பூக்களைப் பூங்கொத்து போல் அழகாய் ஒன்று திரட்டி வைத்திருந்தான்...

"இதுவும் உனக்கே உனக்குத் தான் அம்மிணி..." என்றவனை வியப்பாய் பார்த்தாள் அவள்...

"அன்னைக்கு அந்தப் பூக்கடையில் உன்னோட பார்வைக்கான அர்த்தம் எனக்குப் புரியலை... அதுக்கு அப்புறம் இப்போ தான் உன்னோட ஒவ்வொரு செயலுக்கும் எனக்கு அர்த்தம் புரிஞ்சது... அன்னைக்கு மதிக்கு ரோஜா பூ கொடுத்ததுக்குத் தானே நீ என்னைய முறைச்சிட்டு இருந்த..."

"ம்... ம்..." என்று தலையசைத்தவளின் விழிகள் கலங்கி போனது அன்றைய நாளின் நினைவில்...

இருளில் வைரமாய் ஜொலித்த அவளது கண்ணீரை கண்டு பதறியவனாய் உடனே அதைத் துடைத்து விட்டவன், "நான் உனக்கு மட்டும் தான்டி... நீயே என்னை அடிச்சு விரட்டினா கூட நான் உன்னை விட்டு போக மாட்டேன்... இந்த நாய் உன்னை மட்டும் தான் சுத்தி சுத்தி வந்து காவல் காக்கும்..." என்றவனின் சட்டை காலரை பிடித்திழுத்தவள் அவனைப் பேசவிடாது அவனது இதழ் மீது இதழ் பதித்தாள்...

"இன்னொரு தடவை உன்னை நீ நாய்ன்னு சொன்ன பிச்சிருவேன் பிச்சி..." என்றவளை அவன் ஆசையுடன் கட்டி கொண்டான்...

அவளும் அவனுள் பாந்தமாய் அடங்கியபடி அவனது கைகளில் இருந்த ரோஜா பூக்களில் முகத்தைப் புதைத்து கொண்டாள்...

************************

"போ பூனைக்குட்டி, உன்னை மாதிரி ஒரு செவத்த குட்டிய புள்ளையா கேட்டா... நீ என்னைய மாதிரி ஒரு கறுத்த குட்டிய பெத்து கொடுத்திருக்கியே..."

மனைவி அருகில் படுத்திருந்த மகனை கண்டு மனத்தாங்கலுடன் கூறினான் சத்யமூர்த்தி... ஆம், அவனது மகன் அவனையே உரித்து வைத்துப் பிறந்திருந்தான்... தோற்றத்திலும் சரி, நிறத்திலும் சரி...

"போ சத்யா, என் மகன் உன்னை விட அழகாயிருக்கான்னு உனக்குப் பொறாமை..." என்று அவள் தனது மகனை கொஞ்சி கொண்டாள்...

"என்னமோ போ... நீ தான் அவனையும், அவன் அப்பனையும் மெச்சிக்கணும்..." என்று அவன் போலியாக அலுத்துக் கொள்ள...

"என் புருசனையும், என் மகனையும் நான் மெச்சாம வேறு யார் மெச்சுவாங்க...?" என்று புருவம் உயர்த்தியவளை கண்டு,

"அது சரி தான்..." என்றவன் குழந்தையின் பெயர் வைப்பதற்காகச் சின்னவனுக்கு உடை வாங்கிக் கொண்டு வந்திருந்தான்...

"எல்லாமே நல்லாயிருக்கு..." என்று பாராட்டியவளை ஆதுரத்துடன் பார்த்தவன் கடைசியாகச் சிறிய நகைப்பெட்டியை அவளது கையில் கொடுத்தான்... அதை ஆர்வமாக வாங்கிப் பிரித்துப் பார்த்தவள் அதில் சிறிய ஒற்றை வைரக்கல்லுடன் பளபளத்த மூக்குத்தியை கண்டு பிரமித்துப் போனாள்...

"சத்யா..."

"உன்னை வைரத்தாலே இழைக்கணும்ன்னு எனக்கு ஆசை தான்... ஆனா இப்போதைக்கு அது சாத்தியம் இல்லை... அதான் வைர மூக்குத்தி வாங்கியாந்தேன்... பிடிச்சியிருக்கா...?"

"ரொம்ப ரொம்ப... உன்னைப் போல்..." என்றவள் அவனை அணைத்துக் கொள்ள... அவனும் தனது அணைப்பை இறுக்கினான்...

அதற்காகக் காத்திருந்தார் போன்று அவர்களது செல்ல மகன் பசியில் சிணுங்க துவங்கினான்...

"அது எப்படித் தான் தெரியலை... நான் உன் பக்கத்துல வந்தாலே இவனுக்கு மூக்கு வியர்த்திடும்..." என்று கூறி சிரித்தான் அந்தத் தகப்பன்... மகனுக்குப் பசியாற்றி விட்டு அவனைத் தூங்க வைத்துவிட்டு மீண்டும் கணவனிடம் வந்தவள்,

"பெயர் வைக்கிறதுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடும் பண்ணிட்டியா சத்யா...?"

"எல்லா வேலையும் முடிஞ்சது..."

"டாட்க்கு கொஞ்சம் வருத்தம் தான்... என்னை டெலிவரிக்கு அங்கே அனுப்பாதது குறித்து..."

"மூணு, நாலு மாசம் உன்னைய பிரிஞ்சியிருக்க என்னால் முடியாதுடி..."

"மாம் உன் மனசை புரிஞ்சிக்கிட்டு டாட்க்கு எடுத்துட்டு சொல்லிட்டாங்க... இப்ப அவர் ஓகே..."

"பெயர் வைக்கிற விழாவுக்கு அபிராமியும் வருவாள்... அவளுக்கு ஏதாவது சீர் கொடுத்து விடணும்... உங்க வீடு மாதிரியில்ல அவங்க வீடு..." என்றவனிடத்தில் தான் சேமித்து வைத்திருந்த பணத்தை எடுத்து வந்து நீட்டினாள்...

"எதுக்குப் பத்மா...?"

"என்னோட பணம், உன்னோட பணம்ன்னு எதுவும் தனித்தனியா இருக்கா...?"

'இல்லை' என்பது போல் தலையசைத்தவனிடம், "அபி, அகல் ரெண்டு பேருக்கும் வேண்டிய சீரை வாங்கிட்டு வந்திரு... யாரும் என் மாமனை குறை சொல்ல கூடாது..." என்றவளை அணைத்து கொண்டவன்,

"நீ என் கூட இருக்கும் வரைக்கும் எனக்கு எந்தக் குறையும் கிடையாதுடி..." என்று நிறைவாய்க் கூறினான் அவன்...

பதினாறாம் நாள் சொந்தபந்தங்கள், உறவினர்கள் கூடியிருக்க இருவரும் தங்களது மகனுக்கு மனுபரத் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்...

நாசியில் வைர மூக்குத்தி ஜொலிக்க மகனை கையில் வைத்துக் கொண்டு தாய்மை பூரிப்புடன் அழகுற அமர்ந்திருந்தவளை சத்யமூர்த்திக் காதலாய் பார்த்தான்... அந்நேரம் அவனைத் திரும்பி பார்த்த பத்மவர்ஷினியின் விழிகளிலும் அவனுக்குக் குறையாத காதல் வழிந்தது...

ஐந்து வருடங்களுக்குப் பின்...

"எங்கேடி எம் மவன்...? ஆளு சத்தத்தைக் காணோம்..." களைப்புடன் வீட்டிற்குள் நுழைந்த சத்யமூர்த்தி மகனை காணாது மனைவியிடம் கேள்வி கேட்க...

"இப்போ மணி எத்தனை...? பதினோரு மணி... ஆடி ஓடி விளையாண்டு டயர்டாகி அத்தை கிட்ட தூங்கிட்டான்..."

அவன் பேசியபடி தங்களது அறைக்குள் வந்தான்... அவன் பின்னேயே வந்த அவனது மனைவி அறை கதவை மூடிவிட்டு அவனைப் பின்னால் இருந்து அணைத்து கொண்டாள்...

"குளிச்சிட்டு வர்றேன்டி பூனைக்குட்டி..." மனைவியின் அருகாமையில் அவனது மனம் மயங்கியது...

"எனக்கு இந்த அழுக்கு சத்யாவை தான் ரொம்பப் பிடிச்சியிருக்கு..." அவனது முதுகில் முகம் புதைத்து கூறியவளை இழுத்து தன் முன்னால் நிற்க வைத்தவன்,

"மகன் பிறந்ததுக்கு அப்புறமும் உன்னோட அழகு கொஞ்சமும் குறையலடி..." என்று அவன் கிறக்கத்துடன் அவளை அணைத்துக் கொண்டான்...

நீண்ட நேரம் அவளைக் கொஞ்சி மகிழ்ந்து அவளை விட்டு திருப்தியுடன் விலகியவனின் காதில் அவள் அந்த விசயத்தைக் கூறினாள்...

"உண்மையாவா...?"

"இந்த விசயத்தில் யாராவது பொய் சொல்வாங்களா...?" என்றவளின் வயிற்றில் முத்தமிட்டவன்,

"ரொம்பச் சந்தோசமாயிருக்கு... இந்தத் தடவையாவது உன்னை மாதிரி செவத்த குட்டி தான் எனக்கு வேணும்..." என்றவனைக் கண்டு அவள் நாணத்துடன் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

மறுநாள் அவனுக்கு விவசாயத்தில் பசுமை புரட்சி செய்ததற்காக ஜனாதிபதி விருது கிடைக்க இருப்பதாகச் சந்தோசமான செய்தி கிடைத்தது...

"எல்லாம் என் மகள் வந்த நேரம்டி..." என்று அவன் மனைவியைத் தலை மேல் வைத்துக் கூத்தாடினான்...

மகன் மனைவியைக் கொஞ்சுவதைப் பார்த்தபடி இராமசாமி சிரித்துக் கொண்டே அங்கிருந்து சென்றுவிட்டார்... இப்போது அவர் குடிப்பதை அறவே நிறுத்தியிருந்தார்... அதே போல் மனைவியிடம் அதிக அன்போடு இருந்தார்... ஆனால் மூத்த மகனிடம் மட்டும் எதுவும் பேச மாட்டார்... அந்தளவிற்கு அவன் மீது அவருக்குப் பயம்...

"ஷ், மாமா..." என்று அவள் கணவனை எச்சரிக்க...

"இப்போ புரியுதுடி பத்மா... ஆத்தாவுக்கு அப்பாரு எந்தளவுக்கு முக்கியம்ன்னு... இப்போ தான் ஆத்தா முகத்தைப் பார்க்கவே சந்தோசமா இருக்கு..." என்று நிறைவாய் கூறியவனைக் கண்டு அவளுக்கு மனம் நிறைந்து போனது...

பத்மவர்ஷினி இந்த மகிழ்ச்சியான விசயத்தைப் பெற்றோரிடம் கூறுவதற்காக அழைப்பு எடுத்த போது மறுமுனையில் யுகேன், அகல்யாவின் இரண்டு வயது மகள் தட்ஷிகா எடுத்து பேசினாள்...

"த்தை, நீ எப்போ வர்ற...? மனு மாமா கூட்டி வா..." என்று அவள் மழலையில் மிளற்றினாள்...

"ச்சோ ஸ்வீட்டா பட்டுக்குட்டி..." என்று அலைப்பேசி வழியே மருமகளைக் கொஞ்சியவள் சிறிது நேரம் அவளிடம் பேசிவிட்டுப் பெற்றோரிடம் விசயத்தைக் கூறிவிட்டு சந்தோசமாய் அழைப்பை துண்டித்தாள்...

******************

திரைத்துறைக்காக ஜனாதிபதி விருது வாங்க விஷ்ணு வந்திருந்தான்... அதே போல் விவசாயத் துறையில் விருது வாங்க சத்யமூர்த்தி வந்திருந்தான்... இருவரும் அருகருகே அமர்ந்திருந்தனர்... யாரை கால் தூசிக்குச் சமம் இல்லை என்று விஷ்ணு இகழ்ச்சியாய் கூறினானோ அவன் தனக்குச் சமமான மரியாதையுடன் தன் அருகில் அமர்ந்திருப்பதைக் கண்டு விஷ்ணுவுக்கு மனம் எரிந்தது...

"சகலை எப்படி இருக்கீங்க...? மதினி நல்லா இருக்காங்களா...?" என்று வெள்ளந்தியாய் கேட்ட சத்யமூர்த்தியிடம் முகத்தை முறைத்துக் கொள்ள முடியாது,

"ம், ம்..." என்று விஷ்ணு தலையாட்ட... அதைக் கண்டு சத்யமூர்த்தி விசமமாய்ச் சிரித்துக் கொண்டான்...

ஜனாதிபதி கையால் சத்யமூர்த்தி விருது வாங்கிய போது அவனது மனக்கண்ணில் தோன்றியது அவனது மனைவியின் மதிமுகமே... அவள் இல்லை என்றால் அவனால் இந்தளவிற்குச் சாதித்திருக்க முடியாதே...!!!

சத்யமூர்த்தி வெளியில் வந்த போது அனைத்து மொழி ஊடகங்களும் அவனைச் சூழ்ந்து கொண்டது... அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் தெளிவான ஆங்கிலத்தில் விடையளித்தவன் கடைசியாய்,

"இந்த விருதை எனது மனைவிக்குச் சமர்ப்பிக்கிறேன்..." என்று அழகான தமிழில் கூறினான்...

அதைத் தொலைக்காட்சி திரையில் பார்த்துக் கொண்டிருந்த பத்மவர்ஷினியின் விழிகளில் இருந்து ஆனந்த கண்ணீர் வழிந்தது...

"நீ ஜெயிச்சு காட்டிட்ட வர்ஷூ..." என்று ஜீவா மகளின் தலையை அன்பாய் வருடி கொடுத்தான்...

"டாட்..." என்றபடி அவள் தந்தையின் தோளில் சாய்ந்து கொண்டாள்...

கணவன் டெல்லி சென்றிருப்பதால் அவள் சென்னைக்குத் தனது மகனுடன் வந்திருந்தாள்... சத்யமூர்த்தித் தான் டெல்லி போகும் முன் அவளை இங்கு விட்டு விட்டுச் சென்றது...

"அப்பா, அப்பா..." திரையில் தெரிந்த தந்தையைக் கண்டு மகன் சந்தோசத்தில் ஆர்ப்பரிக்க...

"மாமா, மாமா..." தட்ஷிகாவும் அத்தை மகனுடன் சேர்த்துக் கொண்டு ஆர்ப்பரித்துக் குதித்தாள்...

இருவரையும் மனம் நிறைந்த சந்தோசத்துடன் பார்த்து கொண்டிருந்தனர் அனைவரும்...

******************

"அண்ணா, அண்ணி கோபமா இருக்காங்க..."

சத்யமூர்த்தி வீட்டிற்குள் நுழைந்ததும் சரவணன் அவனை எச்சரிக்கை செய்தான்... சரவணன் இப்போது பால்பண்ணையோடு, பாலில் இருந்து எடுக்கப்படும் தயிர், நெய், பன்னீர் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையையும் நிறுவி அதை நிர்வகித்து வருகிறான்...

சத்யமூர்த்தி எப்போதும் போல் விவசாயம் தான்... அதன் பொருட்களை ஏற்றுமதி செய்யும் தொழிலை அவனது மனைவி பார்த்து கொள்கிறாள்... கை நிறைய வருமானம், நிறைவான, நிம்மதியான வாழ்க்கை என்று அவனது வாழ்க்கை மிகவும் சந்தோசமாகச் செல்கின்றது...

"இன்னைக்கு என்னடா பூகம்பம்...?"

அதற்குச் சரவணன் தொலைக்காட்சி பெட்டியை சுட்டிக்காட்டி, "இது தான் அந்தப் பூகம்பம்..." என்று கூறி சிரிக்க...

"என் பொழைப்பு உனக்குச் சிரிப்பா இருக்காடா...? முதலில் உனக்கு ஒரு கால்கட்டு போடணும்டா..."

"ஐயோ இந்த விளையாட்டுக்கு நான் வரலை..." என்றபடி அவன் அங்கிருந்து ஓடிவிட்டான்...

சத்யமூர்த்தித் தனது குலதெய்வத்தை வேண்டியபடி அறைக்குச் சென்றான்... நிறைமாசமாய் மேடிட்ட வயிறுடன் கோபமாய் அமர்ந்திருந்த மனைவியின் அருகில் சென்று அமர்ந்தவன்,

"பூனைக்குட்டி எதுக்குடி கோபம்...? எனக்குத் தெரிஞ்சு நான் எந்தத் தப்பும் பண்ணலையே..."

"நீ எதுக்கு வேட்டி விளம்பரத்தில் நடிச்ச...?" என்று கோபமாய் வெடுக்கென்று கேட்ட மனைவியவளை கண்டு,

"இது தான் விசயமா...?" என்று கூறி சிரித்தவன்,

"மாப்பிள்ள தான்டி நடிக்கச் சொன்னாரு... அவங்க மில் வேட்டிக்கு நான் நடிச்சா பொருத்தமா இருக்கும்ன்னு அவர் பிரியப்பட்டாரு..."

விவசாயியான சத்யமூர்த்தி வேட்டி விளம்பரத்தில் நடிக்க வேண்டும் என்று யுகேன் விரும்பினான்...

"நீ எனக்கு மட்டுமே சொந்தம்ன்னு நான் உனக்குச் சொல்லியிருக்கேனா இல்லையா...?" என்று கோபத்துடன் கேட்டவளை அணைத்து சமாதானப்படுத்தியவன்,

"இப்பவும் நான் உனக்கு மட்டும் தான் சொந்தம்... விளம்பரத்தில் நடிச்சா மட்டும் நான் வேறு யாருக்கும் சொந்தமாகிருவேனா மக்கு...?" என்று கேட்டபடி அவளது நெற்றியில் விளையாட்டாய் அவன் முட்டினான்...

"விளம்பரம் சரி தான்... ஆனா வேட்டி விளம்பரத்துக்கு எதுக்குடா அத்தனை பொண்ணுங்க... நீயும் கோபியரின் கோகுல கண்ணன் மாதிரி ஈயின்னு பல்லை காட்டிட்டு நிற்கிற... உன்னை எல்லாம் என்ன பண்றது...?" என்றவளின் கோபத்தில் ஒளிந்திருந்த நேசம் அவனுள் சொட்டு சொட்டாய் இறங்கியது...

அன்றிலிருந்து இன்று வரை அவளது நேசம் துளியும் மாறவில்லை...

"இந்தக் காட்டானுக்கு இந்தத் தேவதை மட்டும் தான்டி... இந்தக் காட்டானுக்கு உயிர் கொடுக்க இந்தத் தேவதையால் மட்டும் தான் முடியும்... இந்தத் தேவதை இல்லாட்டி இந்தக் காட்டான் உயிரை விட்டிருவான்டி..." என்று விழிகளில் விழிநீர் கசிய தனது நேசத்தினைக் கூறிய கணவனைக் கண்டு மனம் பதறியவளாய்,

"ம்ஹூம், நீ எதுக்காகவும் வருத்தப்படக் கூடாதுடா..." என்று அவனைத் தேற்றியவள்,

"ஐ லவ் யூடா கருப்பட்டி..." என்றபடி கணவனை முத்த மழையால் குளிப்பாட்ட... அதில் அவன் சுகமாய் நனைந்தான்...

அன்று அவனது உயிருடன் சதிராடிய அவனது உயிர் இன்று அவனுடன் இரண்டற கலந்து ஆனந்த ஆலிங்கனம் படைக்கின்றது... இது என்றென்றும் தொடர வேண்டும் என்று அவர்களை வாழ்த்தி விடைப்பெறுவோமாக...!!!

முற்றும்...!!!